நெஞ்சுக்கு நீதி

(ஆறாம் பாகம்)

சுரைபதர்

மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சராக பதவியேற்ற பின்னர் விடுத்த வேண்டுகோளை ஏற்று, அவருக்கு அளித்து வரும் புத்தகங்களில் சில புத்தகங்கள் தங்கள் நூலகத்திற்கு வழங்கப்படுகிறது.

தி.மு.க. தலைமைக் கழகம்,

அண்ணா அறிவாலயம்,

சென்னை–18.

நெஞ்சுக்கு நீதி

(ஆறாம் பாகம்)

தலைவர் கலைஞர்



திருமகள் நிலையம்
புதிய எண்: 13, பழைய எண்: 28
சுகான்ஸ் அப்பார்ட்மெண்ட்ஸ்,
சிவப்பிரகாசம் சாலை,
தி.நகர், சென்னை - 600 017.
☎: 24342899, 24327696
Fax: 91 - 44 - 24341559
email: enquiry@thirumagalnilayam.com

முதற்பதிப்பு: அக்டோபர், 2013

உரிமை: தமிழ்க்கனி பதிப்பகம் ©

NENCHUKKU NEETHI - PART 6

By: **KALAIGNAR M. KARUNANITHI**

First Edition: October, 2013

No. of Pages: 552

Paper used: 21kg White Maplitho

விலை ரூ. 325/-

THIRUMAGAL NILAYAM
New No: 13, Old No: 28,
Sugans Apartments,
Sivaprakasam Salai,
T.Nagar, Chennai-600 017.
Phone: 044-24342899, 24327696
email: enquiry@thirumagalnilayam.com
website: www.thirumagalnilayam.com

Laser Typeset By: **S**ivaa **G**raphics, Chennai-94. Ph: 8939475707

Printed at : **NOVENA OFFSET PRINTING CO.,** Chennai - 5 ✆ 28446166, 28446891

முன்னுரை

"நெஞ்சுக்கு நீதி" ஆறாம் பாகம் பலரின் வேண்டுகோளுக் கிணங்க விரைவாகவே வெளிவரவுள்ளது. இதன் முதற்பாகம், நான் பிறந்த 1924ஆம் ஆண்டு முதல், 1969இல் முதலமைச்சராகப் பொறுப்பேற்றது வரையிலான 45 ஆண்டு கால அரசியல் வாழ்க்கை நிகழ்வுகளின் சுருக்கமாகும். 1969ஆம் ஆண்டு முதல் 1976இல் நெருக்கடி நிலையைச் சந்திக்க முற்பட்ட காலம் வரையிலான 7 ஆண்டு காலச் சம்பவங்களின் தொகுப்பே இரண்டாம் பாகமாகும். 1976 முதல் 1989 வரையிலான 13 ஆண்டுக் காலத்தில் நான் தொடர்ந்து மேற்கொண்டு வரும் அரசியல் பயணங்களின் சுருக்கமே மூன்றாவது பாகமாகும். 1989 முதல் 1996 வரையில் நாட்டில் நடைபெற்ற நிகழ்வுகளை நான்காம் பாகத்தில் விளக்கியிருந்தேன். நான்காம் பாகத்தின் இறுதி அத்தியாயத்தில் அதற்குப் பிறகு நடைபெற்ற முக்கிய சம்பவங்களையும் சுருக்கமாகக் குறிப்பிட்டிருந்தேன்.

நான்காம் பாகத்திற்கான முன்னுரையை 15-6-2003 அன்று எழுதியிருந்தேன். அதற்குப் பிறகு ஒன்பதாண்டுகள் கழித்துத் தான் 28-8-2012இல் ஐந்தாம் பாகத்திற்கான முன்னுரையை எழுதினேன். அந்த ஐந்தாம் பாகத்தில் 1996 முதல் 1999ஆம் ஆண்டு வரையிலான என் வாழ்க்கைச் சரித்திரத்தையும், கழகத்தின் வரலாற்றையும் இணைத்து தொகுத்தேன். இதோ! ஆறாம் பாகம் ஓராண்டு காலத்திற்குள்ளாகவே வெளி வரவிருக்கின்றது.

"நெஞ்சுக்கு நீதி" என்னுடைய சுயசரிதையாக தொடங்கப் பட்ட போதிலும், பின்னர் இது நமது இயக்கத்தின் வரலாறாகவே விரிவடைந்து, இன்னும் சொல்லப் போனால்,

நமது தமிழக அரசியல் வரலாற்றின் அடிப்படையான ஒரு பகுதியாகவே அமைந்து விட்டது; மேலும், திராவிட இயக்கப் பரிணாம வளர்ச்சியின் ஒரு கட்டமாகவும், திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தின் சமூக - பொருளாதார மாற்றங்களுக்கு வழங்கியிருக்கும் பங்களிப்பைப் பற்றிய விளக்கமாகவும் அமைந்திருக்கிறது இந்த நூல். நான்காம் பாகத்திற்கான முன்னுரையை நான் எழுதும்போது, ''காலம் கருணை காட்டிய காரணத்தால், அந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு விட்டுப் போனவைகளையும் இணைத்து ''ஐந்தாம் பாகம்'' தருவதற்கு முயற்சி எடுப்பேன்'' என்று குறிப்பிட்டிருந்தேன். காலம் இடம் தந்த காரணத்தால், அதை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு ஐந்தாம் பாகத்தையும் முடித்து புத்தகமாக வெளிவந்து, ஆறாவது பாகத்தையும் தற்போது முடித்து புத்தகமாக வெளி வருகிறது.

இந்த ''நெஞ்சுக்கு நீதி'' நூலை மட்டும் எடுத்துக் கொண்டால் ஐந்து பாகங்கள் வரை 3,616 பக்கங்கள் எழுதினேன். தற்போது ஆறாவது பாகம் 552 பக்கங்களைக் கொண்டது. இதையும் சேர்த்தால் இதுவரை 4,168 பக்கங்கள் எனக்கே வியப்பாகவும் பிரமிப்பாகவும் இருக்கின்றது! இவ்வளவு பக்கங்களை எழுதியிருக்கிறோமா? நம்முடைய வாழ்க்கைச் சரித்திரம் இத்தனை நீளமானதா? என்னுடைய சுய சரிதையுடன் இணைத்து, கழகத்தின் முக்கிய சம்பவங்களும், தமிழக அரசியலின் சம்பவங்களும் பின்னிப் பிணைந்து கிடப்பதால் இதன் பக்கங்கள் வளர்ந்து விட்டன. இருந்தாலும் இந்தச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட வேண்டியவை; எதிர்காலத்துக்குப் பயன்படக் கூடியவை என்பதால் தவிர்க்க முடியாதவையாகி விட்டன.


1985ஆம் ஆண்டு ''நெஞ்சுக்கு நீதி'' முதல் பாகத்திற்கு முன்னுரை எழுதிய போது, ''ஓய்வெடுத்துக் கொள்க!'' என்று சில மாற்றுக் கட்சி நண்பர்கள் கேலியாகக் கூறினர். ''ஓய்வெடுக் காமல் உழைத்தவன் இதோ ஓய்வு கொண்டிருக்கிறான்'' என்று என் கல்லறையின் மீது தான் எழுதப்படும் என்று பதில் சொன்னேன். அந்த உணர்வுகளின் தொகுப்புதான் இந்த நூல்.

இது முழுமையானதல்ல, இன்னும் நிறைய இருக்கிறது, எழுத!'' என்று நான் குறிப்பிட்டது இப்போதும் பொருந்தும். எழுதுவதிலும், உழைப்பதிலும் எனக்கு ஏற்படும் மகிழ்ச்சியையும், மனநிறைவையும் வார்த்தைகளால் அளவிட முடியாது.

இந்தப் புத்தகங்களில் அடங்கியுள்ள சம்பவங்கள், தேதி வாரியாக குறிப்பிட்டு எழுதியிருக்கும் நிகழ்ச்சிகள் தங்களுடைய ஆராய்ச்சிக்கு மிகவும் உதவியாக இருப்பதாக என்னிடம் சில ஆராய்ச்சி மாணவர்கள் எடுத்துச் சொன்ன போது எனக்கு மகிழ்ச்சியாகவும் பெருமிதமாகவும் இருந்தது. அதே நேரத்தில் வருங்காலச் சமுதாயத்தினருக்குத் தேவையான விளக்கத்தையும் எழுச்சியையும் வழங்கிட இந்தத் தொடர் நிச்சயம் பயன்படும் என்ற நம்பிக்கையினை எனக்களிக்கிறது. என்னுடைய இந்த முயற்சிக்கு தொடர்ந்து ஆக்கமும் ஊக்கமும் அளித்து வரும் தமிழ் மக்கள் அனைவருக்கும், என் உயிரினும் மேலான கழக உடன்பிறப்புகளுக்கும், இந்த ஆறாம் பாகத்தை நூலாகத் தொகுத்து வெளியிடும் திருமகள் நிலையத்தாருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''நெஞ்சுக்கு நீதி'' எனும் எனது சுயசரிதையை எனை ஈன்ற தாய் - தந்தை; பெரியார் - அண்ணா ஆகியோரைப் பற்றி, நொடிப் பொழுதும் அகலாத நினைவுகளுக்குக் காணிக்கையாக்குகிறேன்!

என்றும் அன்புள்ள



(மு.கருணாநிதி)


சென்னை,
14-9-2013

பொருளடக்கம்

1. வாஜ்பயிடம் வழங்கிய கார்கில் நிதி ரூ.50 கோடி 7
2. ஆருயிர் நண்பர்களை இழந்த துயரம்! 25
3. அ.தி.மு.க. உறவுபற்றி அன்றே சொன்னார், வாஜ்பய்! 41
4. வழக்கும் - வரையற்ற வன்முறையும்! 61
5. வாழ்நாளின் வரலாற்றுச் சாதனை! 77
6. சேலத்தில் தொடர்ந்த கலையுலக நிகழ்வுகள்! 93
7. முல்லைப் பெரியாறும், முரட்டுப் பிடிவாதமும்! 108
8. அன்றே முழங்கிய மாநில சுயாட்சிக் குரல்! 127
9. முந்திக் கொண்டு பெற்ற முதல் இடம்! 145
10. அரசியல் நாகரிகம் தெரிந்த ஜோதிபாசு 162
11. நான் ஆற்றிய பணிகள் - அன்றைய ''தினமணி''யில்! 181
12. தீர்க்கதரிசிபோல மாறன் சொன்னது! 199
13. தமிழே இந்தியாவின் ஆட்சிமொழி என்ற அருமைத் தலைவர்! 219
14. தேர்தலும், ஏமாந்த வாக்காளர்களும்! 238
15. அன்றே ஆரம்பமான பொய் வழக்கு! 256
16. காரிருளில், காட்டாட்சி தர்பார்! 275
17. ''நீ, எங்கிருந்தாலும் வாழ்க!'' என்றார் அண்ணா! 293
18. நட்புக்கு இலக்கணம் - நண்பர் மூப்பனார்! 311
19. அரசியல் சட்டத்தையே மீறிய ஆளுநர் பாத்திமா பீவி! 330
20. கண்ணகிமீது ஏனிந்தக் காழ்ப்பு? 348
21. அய்யோத் - தீ! 365
22. மஞ்சள் சால்வைக்கு மகத்துவம் எதுவும் இல்லை! 384
23. வெற்றியுமல்ல - தோல்வியுமல்ல! 402
24. சேது சமுத்திரத் திட்டம் ஏன்? 418
25. ஜெயா ஆட்சியில் ''தடா, பொடா'' தர்பார்! 436
26. எந்த நாளும் மறவாத அந்த நாள் நினைவுகள் 454
27. என்றும் மறக்க முடியாத மாறன்! 474
28. ''தொல்காப்பிய பூங்கா'' வெளியீட்டு விழாக்கள்! 492
29. நீதியே; நீ இன்னும் இருக்கின்றாயா? 512
30. இயற்கையின் துணையை நம்பி! 531

1. வாஜ்பயிடம் வழங்கிய கார்கில் நிதி ரூ.50 கோடி

என் வாழ்க்கை வரலாற்று நூல் **"நெஞ்சுக்கு நீதி"** என்ற தலைப்பில் எழுதப்பெற்று - என் வாழ்க்கையோடு இணைந்த நம் இயக்கத்தின் வரலாறு - இந்த திராவிட இயக்க வரலாறு இடம் பெற்றுள்ள இந்த நாட்டின் வரலாறு ஒன்றிக் கலந்து - உலகின் பல பகுதிகளில் வாழ்கின்ற தமிழர்கள் எல்லாம், இந்த இயக்கத்தால் தமிழகம் பெற்றுள்ள உணர்வை அவர்களும் பெற்றிட வேண்டும் என்ற அவாவுடன் இந்த ஆறாம் பாகத்தைத் தொடங்குகிறேன்.



நெஞ்சுக்கு நீதி ஐந்தாவது பாகத்தை நான் முடித்த நேரத்தில், 15வது நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திக்க வேண்டிய நேரம்!

ஐந்து பாகங்கள் எழுதி முடிக்கும் வரையில் எனக்குத் துணை புரிந்த இயற்கை, இந்த ஆறாவது பாகத்தை எழுதி நிறைவு செய்திடவும் துணை நிற்கும் என்ற நம்பிக்கையோடு இதைத் தொடங்குகிறேன்.

மூன்று ஆண்டுகளுக்கு முன் அதாவது 12-4-2009 தேதியிட்ட "முரசொலி"யில் "நெஞ்சுக்கு நீதி" என்ற எனது வாழ்க்கை வரலாற்று நூலின் ஐந்தாவது பாகத்தை முடித்திருந்தேன். அந்த ஐந்தாவது பாகத்தை முடித்த போது, அந்தக் கடைசி கட்டுரைக்கு நான் எழுதியிருந்த தலைப்பு **"ஆறாம் பாகம் ஆரம்பம் ஆகும்!"** என்பதாகும்.

மூன்றாவது பாகம் நூலாக வெளி வந்தபோது, அதற்கு நான் எழுதிய முன்னுரையில், நான்காவது பாகத்தை நான் எழுதுவேனா என்ற அய்யத்தை எழுப்பியிருந்தாலும்- நான்காவது பாகத்தையும் நானே எழுதி - அது நூலாகவும் வெளி வந்து - ஐந்தாவது பாகத்தையும் நானே எழுதி முடித்து - மூன்றாண்டு கால இடைவெளிக்குப் பிறகு இதோ ஆறாவது பாகத்தையும் எழுதத் தொடங்கிவிட்டேன்.

ஐந்தாவது பாகத்தை நான் முடித்த நேரத்தில், 15வது நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திக்க வேண்டிய நேரம். தேர்தல் பணிகளை ஆற்றிக் கொண்டே தான் ஐந்தாவது பாகத்தினை எழுதி முடித்தேன். அதிலே 99ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளையும் சுருக்கமாகக் குறிப் பிட்டிருந்தேன். தற்போது ஆறாவது பாகத்தைத் தொடங்கு கின்ற இந்த நேரமோ, அந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிந்து, மத்தியில் நமது கழகமும் இடம்பெற்ற ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் மூன்றாண்டுகள் முடிவடைந் துள்ள நேரம்.

- **"நெஞ்சுக்கு நீதி"**யின் முதல் பாகம் என்பது, நான் பிறந்த 1924ஆம் ஆண்டு முதல் நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற 1969ஆம் ஆண்டுவரையில் என் வாழ்க்கையில் நடைபெற்ற சில முக்கிய சம்பவங்கள் மட்டுமே இடம் பெற்ற தொகுப்பாகும். அதாவது 45 ஆண்டு காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் மட்டுமே அத்தொடரில் இடம் பெற்றன.
- இரண்டாம் பாகம், நான் முதல் அமைச்சராகப் பொறுப் பேற்ற 1969 முதல், கழக ஆட்சி கவிழ்க்கப்பட்ட 1976ஆம்



"நெஞ்சுக்கு நீதி" முதல் பாகம் என்பது, நான் பிறந்த 1924ம் ஆண்டு முதல், நான் முதலமைச்சரான 1969 வரையிலான எனது 45 ஆண்டு கால வரலாறாகும்.

ஆண்டு வரையிலான ஏழாண்டு காலத்தில் நடைபெற்ற சம்பவங்களின் கோவையாகும்.

- 1976க்குப் பிறகு 1989 வரையிலும் முழுமையாகவும், 1991 வரையிலான முக்கிய நிகழ்ச்சிகளின் தொகுப்பாகவும் மூன்றாம் பாகம் நிறைவுற்றது.
- 1989 முதல் 1996ஆம் ஆண்டுவரையிலான நிகழ்வுகள் தொகுக்கப்பட்டதுதான் நான்காம் பாகம்.
- ஆனால், 1996ஆம் ஆண்டில் தொடங்கி 1999ஆம் ஆண்டு வரையிலான மூன்றாண்டு கால வரலாற்றைத்தான் ஐந்தாவது பாகத்தில் எழுத முடிந்தது என்றால், அந்த அளவிற்கு அந்தக் காலக் கட்டத்தில் எழுதிட ஓய்வில்லாமல் உழைத்திருக்கிறேன் என்று தானே பொருளாகும்!

1999ஆம் ஆண்டு மே திங்கள் இறுதியில் பாகிஸ்தான் நமது காஷ்மீரைப் பிடிப்பதற்கான மறைமுகப் போரில் ஈடுபட்டது. காஷ்மீர் எல்லையில் கார்கில் பகுதியில் ஊடுருவிய தீவிரவாதிகளை விரட்டியடிக்கும் ராணுவ நடவடிக்கையில் தமிழகத்தைச் சேர்ந்த மேஜர் **எம். சரவணன்** களத்திலேயே உயிரிழந்தார். அவரது குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்ததோடு, தமிழக அரசின் சார்பில் இரண்டு இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்படுமென்று அறிவித்து, மாவட்ட ஆட்சித் தலைவரே நேரில் சென்று அந்த நிதியை வழங்குவார் என்றும் நான் கூறினேன். அரசின் உதவியைத் தவிர, தி.மு.கழக அறக்கட்டளையிலிருந்து ஐம்பதாயிரம் ரூபாய் அந்தக் குடும்பத்திற்கு நிதியுதவி அளிக்கவும் கட்சித் தலைவர் என்ற முறையில் ஏற்பாடு செய்தேன். என் சார்பில் திருச்சி மாவட்ட ஆட்சியராக அப்போது இருந்த மூர்த்தி, இ.ஆ.ப., மேஜர் சரவணன் இல்லத்துக்குச் சென்று ஆறுதல்

இரண்டாம் பாகம், நான் முதலமைச்சரானதிலிருந்து,
என் ஆட்சி கவிழ்க்கப்பட்ட 1976ம் ஆண்டு
வரையிலான சம்பவங்களின் தொகுப்பு





1976 முதல் 1991 வரையிலான காலக் கட்டத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளின் விவரமே மூன்றாம் பாகம்.

கூறினார். ''காஷ்மீரில் கார்கில் பகுதியிலிருந்து மேலும் முன்னேறிச் செல்வோமே தவிர, வெளியேற மாட்டோம்'' என்று 'ஹர்கத்துல் முஜாஹிதின்' என்ற தீவிரவாத அமைப்பு அறிவித்தது.

கார்கில் பகுதியில் தீவிரவாதி களுடன் நடந்த சண்டையில் வீர மரணம் அடைந்த மற்றொரு தமிழக வீரர் தேவகோட்டை கோட்டூர் கிராமத்தைச் சேர்ந்த **விமானி முகிலன்.** அவரது குடும்பத்தினருக்கு இரங்கலைத் தெரிவித்து, அரசின் சார்பில் இரண்டு இலட்சம் ரூபாய் நிதியையும், கழக அறக்கட்டளை சார்பில் ஐம்பதாயிரம் ரூபாய் நிதியையும் வழங்கச் செய்தேன்.

இவர்கள் தவிர, **நாயக் ஆர்.காமராஜ், சாப்பர் மா.ஜெயவேலு, கன்னர் ந.பழனி, செந்தில்** (தேனி மாவட்டம்), **சபியுல்லா,** காவேரிப்பட்டினம், **சிப்பாய் அப்துல் சத்தார்,** குன்னூர் - ஆகிய தமிழ் நாட்டைச் சேர்ந்தோரும் தங்கள் இன்னுயிரைப் போரில் தியாகம் செய்தனர்.

ஜம்மு காஷ்மீரின் கார்கில், படாலிக், முஷ்கு பனி மலைப் பகுதிகளில் இந்தியப் படைகள் 9.6.1999 அன்று நடத்திய தாக்குதலில் பாகிஸ்தான் ராணுவ வீரர்கள் ஐந்து பேரும், தீவிரவாதிகள் பதின்மூன்று பேரும் கொல்லப்பட்டனர். இந்திய விமானப்படையின் ஜெட் போர் விமானங்களுடன், மிராஜ்-2000 ரக விமானங்களும் தாக்குதலில் பயன் படுத்தப்பட்டன. இந்தப் போரில் இந்திய ராணுவ வீரர் மூவர் மரணமடைந்தனர். மூன்று பேர் காயம் அடைந்தனர். ''தீவிரவாதிகளை விரட்டியடிக்கும்வரை இந்திய வீரர்கள் ஓயமாட்டார்கள்'' என்று அன்றைய பிரதமர் **வாஜ்பய்**

அறைகூவல் விடுத்தார். கார்கில் பகுதியில் ஊடுருவல்காரர் களுடனான மோதலில் காயமுற்று சிகிச்சை பெற்று வந்த ராணுவ வீரர்களைத் திருமதி **சோனியா காந்தி** நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.


13.6.1999 அன்று கார்கில் பகுதியில் இந்திய ராணுவத் தினரை பார்க்கச் சென்ற பிரதமர் வாஜ்பய் பாகிஸ்தான் படையினர் நடத்திய பீரங்கித் தாக்குதலில் உயிர் தப்பினார். அது குறித்து அப்போது காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, பிரதமர் வாஜ்பய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசி நலம் விசாரித்தார். எந்த அளவிற்கு ஆளுங் கட்சியும், எதிர்க்கட்சியும் பெருந்தன்மையோடு பழக வேண்டும் என்பதற்கு உதாரணமாக இது அமைந்தது. இந்தியாவுடன் போர் செய்ய அனைத்து ஏற்பாடுகளையும் பாகிஸ்தான் ராணுவம் செய்யத் தொடங்கிவிட்டது என்று பாகிஸ்தான் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன.

தமிழக அரசின் சார்பில் கார்கில் போராட்ட வீரர்கள் நிவாரண உதவி ஒன்றைத் திரட்டிட முடிவுசெய்து என் பெயரில் ஒரு வேண்டுகோள் விளம்பரமும் ஏடுகளில் விடப்பட்டது. அந்த விளம்பரத்தில் -

"இந்தியத் திருநாட்டின் ஒற்றுமை உணர்வின் மீது மற்ற நாட்டார் மோதிடக் கருதிய போதெல்லாம் நம் மக்கள் அனைவரும் ஓர் உருக் கொண்டு- எதிர்த்து நின்று வெற்றிக் கொடி நாட்டிய வரலாறு நமக்குண்டு. அந்த வரலாற்றை மறந்து விட்ட காரணத்தாலோ என்னவோ, பாகிஸ்தான்



அதன் பிறகு, 1996 வரையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் நான்காம் பாகத்தில் பதிவு செய்யப்பட்டது.



ஐந்தாவது பாகத்தில், எனது மூன்றாண்டு கால வரலாற்றை மட்டுமே எழுத முடிந்ததென்றால், எழுதிடக்கூட நேரமின்றி ஓய்வின்றி உழைத்தேன்.

நமது அன்னை பூமியின் பக்கம் காஷ்மீரப் பகுதியில், கார்கில் எல்லையோரத்தில் வாலாட்டிப் பார்க்கிறது. இந்தியப் பிரதமர்கள் பண்டித நேரு, லால்பகதூர் சாஸ்திரி, இந்திராகாந்தி ஆகியோர் காலங்களில் நாம் எதிர் கொண்ட போர்களில் அரசியல் மாச்சரியங் களையும், கட்சி வேறுபாடுகளையும் ஒதுக்கி வைத்து விட்டு, அனை வரும் ஓர் அணியில் நின்று நமது ஒற்றுமையை நிலை நாட்டினோம். இந்த முக்கியமான நேரத்தில் அவரவர்களும் தங்களால் இயன்ற அளவு களத்தில் நிற்கும் வீரர்களுக்கு உதவிடவும், துணை புரியவும் முன்வர வேண்டும். மத்திய பாதுகாப்பு அமைச்சகம் திரட்டுகிற நிதியில் சேர்க்கிற வகையில் தமிழக அரசின் சார்பிலும், **'கார்கில் போராட்ட வீரர்கள் நிவாரண நிதி'** வழங்கிட முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதனை அரசு அலுவலர் களும், ஆசிரியப் பெருமக்களும், தொழிலாளர்களும், மாணவர்களும், வணிகர்களும், மருத்துவர்களும், வழக் கறிஞர்களும், நீதித்துறையினரும், கலைத் துறையினரும், அனைத்து, தமிழ் மக்களும் ஆதரித்து, காசோலைகளை அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.''

- என வேண்டுகோள் விடுத்தேன். அமைச்சர்கள் அனை வரும் தங்கள் ஒரு மாத ஊதியத்தை கார்கில் போராட்ட வீரர்கள் நிவாரண நிதிக்காக அளித்தனர்.

★ ★ ★

அந்த நேரத்தில், 1999 ஜூன் மாத இறுதியில் விருதுநகர், நெல்லை மாவட்ட சுற்றுப் பயணத்தில் ஈடுபட்டிருந்த நான், 26.6.1999 அன்று விருதுநகர் மாவட்டத்தில் காலையில் அரசு

விழாக்களில் கலந்து கொண்டேன். அன்று மாலையில் நெல்லைக்குப் புறப்பட்டேன்.



1999, மே திங்களில், நமது காஷ்மீரை பிடிப்பதற்கான மறை முகப் போரில் ஈடுபட்டுவிட்டது பாகிஸ்தான்.

வழியில், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவின் சொந்த ஊரான கலிங்கப்பட்டிக்குச் சென்றேன். 21 ஆண்டுகளுக்குப் பிறகு **வைகோ**வின் வீட்டிற்கு - மூன்றாவது முறையாக நான் அப்போது சென்றேன். என்னுடன், **ஆர்க்காடு வீராசாமி, துரை முருகன், ஆலடி அருணா, ஆவுடையப்பன்** ஆகியோர் வந்தனர்.

வீட்டிற்குள் சென்ற என்னை வைகோவும், ம.தி.மு.க. நண்பர்களும் வரவேற்று சால்வை அணிவித்தனர். வைகோவின் தாயார் அன்னை **மாரியம்மாவும்,** வைகோவின் துணைவியார், தம்பி **ரவிச்சந்திரன்** மற்றும் சகோதரிகளும் என்னை அன்புடன் வரவேற்றனர். நான் அப்போது அறிவித்திருந்த கார்கில் போராட்ட வீரர்கள் நிவாரண நிதிக்கு வைகோவும், ம.தி.மு.க. நண்பர்களும் 86 ஆயிரம் ரூபாய் அளித்தனர்.

★ ★ ★

தாம்பரத்தைச் சேர்ந்த **லெப்டினன்ட் கர்னல் நடராஜ்** என்பவர் காஷ்மீரில் தீவிரவாதிகளுடன் நடந்த சண்டையில் வீர மரணம் அடைந்து, அவரது உடல் இங்கே கொண்டு வரப் பட்டது. தமிழக அரசின் சார்பில் அமைச்சர்கள் **நாஞ்சிலார், தமிழ்க்குடிமகன், சற்குணப் பாண்டியன், அந்தியூர் செல்வராஜ்** ஆகியோர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர். நெல்லை மாவட்டச் சுற்றுப் பயணத்தில் நான் அப்போது இருந்ததால், என்னால் நேரில் கலந்து கொள்ள இயலவில்லை.

கார்கில் போரில் வீரமரணம் அடைந்த ராணுவ வீரர்களின் குடும்பத்தினருக்கு தமிழக அரசின் சார்பில் இலவச வீடுகள் வழங்கப்படும் என்று அறிவித்தேன். பாகிஸ்தானில் பணியாற்றி



காஷ்மீருடன் பாகிஸ்தான் துவக்கிய போரை, ''உடனே நிறுத்துங்கள்'' எனப் பல உலக நாடுகள் எச்சரித்தும், பாகிஸ்தான், அதிபர் நவாஸ் செரீப் அதை ஏற்கவில்லை.

வந்த இந்தியத் தூதரக அதிகாரி தமிழகத்தைச் சேர்ந்த **துரைசாமி** என்பவர், அந்நாட்டு உளவு அமைப்பினரால் கடத்திச் செல்லப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டார். அதற்கு இந்திய அரசு தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்தது.

கார்கில் பிரச்சினையில் இந்தியாவுக்கு அமெரிக்கா, சீனா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் எல்லாம் தங்கள் ஆதரவினை அளித்தன. கார்கில் பிரச்சினையில் இந்தியாவிற்குக் கிடைத்த பெரிய வெற்றியாக அது கருதப்பட்டது. எல்லை கட்டுப்பாட்டுக் கோட்டை பாகிஸ்தான் மதித்து நடக்க வேண்டுமென்று அந்த நாடுகள் கண்டிப்பாகத் தெரிவித்தன. கார்கில் பிரச்சினையில் எந்த நாட்டின் ஆதரவும் கிடைக்காமல், சர்வதேச அளவில் பாகிஸ்தான் தனிமைப்படுத்தப்பட்டது.

1999ஆம் ஆண்டு, ஜூலைத் திங்கள், முதல் வாரத்தில், கார்கில் பகுதியில் அதிரடித் தாக்குதல் நடத்தி, திராஸ் பிரிவில் முக்கியத்துவம் வாய்ந்த புலிக் குன்றை இந்திய ராணுவம் மீட்டது. அந்தத் தகவல் கிடைத்ததும் நான் வெளியிட்ட பாராட்டுச் செய்தியில்,

''பாகிஸ்தான் தீவிரவாதிகளால் இந்தியத் திருநாட்டின் மீது திணிக்கப்பட்டுள்ள போரில் கார்கில் களத்தில் இந்திய ராணுவத்தினர் தமது உயிரைப் பணயமாக வைத்து எதிரிகளைப் பந்தாடி வருவதில் ஒரு முக்கியத் திருப்பமாக - புலிக் குன்றில் பெற்றுள்ள வெற்றி நம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறது. வாஜ்பய் தலைமையில் தொடர்ந்து வாகை சூடி வரும் இந்திய வீரர்களையும் - அவர்களின் வீரம் செறிந்த போராட்டத்தையும் பாராட்டுகிறேன்''

- என்று குறிப்பிட்டிருந்தேன்.

5.7.1999 அன்று காஷ்மீரில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டைத் தாண்டி ஊடுருவியவர்களை திரும்ப அழைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப் அமெரிக்க அதிபராக அப்போதிருந்த கிளிண்டனிடம் உறுதி கூறினார்.

கார்கில் பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக பிரதமர் வாஜ்பய் அவர்கள் 7.7.1999 அன்று டெல்லியில் மாநில முதல்வர்களின் மாநாட்டினைக் கூட்டியிருந்தார். அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக டெல்லி சென்ற நான், பிரதமர் வாஜ்பய் அவர்களைச் சந்தித்து, தமிழக மக்களின் சார்பாக, தேசிய பாதுகாப்பு நிதிக்கு பதினைந்து கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினேன்.

மகிழ்ச்சியுடன் அதைப் பெற்றுக் கொண்ட பிரதமர் அதனை, ''முதல் தவணையாகப் பெற்றுக் கொள்கிறேன்'' என்று சிரித்துக் கொண்டே கூறினார். உடனே நானும் சிரித்தவாறே, ''அப்படியே வைத்துக் கொள்ளுங்கள் - எங்கள் தமிழ்நாட்டு மக்கள் நாட்டுரிமை காப்பதிலும் - அதற்காகத் தங்களையே ஒப்படைத்துக் கொள்வதிலும் நிகரற்றவர்கள். மேலும் மேலும் போர் நிதி வழங்குவார்கள்'' என்று கூறினேன்.

கொடுத்த வாக்கினைக் காப்பாற்றும் வகையில், 16.8.1999 அன்று, டெல்லியில் பிரதமர் வாஜ்பய் அவர்களைச் சந்தித்து, மேலும் 25 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினேன்.



காஷ்மீரில், பாகிஸ்தான்
தாக்குதலில் வீர மரணம்
அடைந்த சென்னை -
தாம்பரத்தைச் சேர்ந்த லெப்டினட்
கர்னல் நடராஜ்

❁ 21.8.1999 அன்று சென்னைக்கு வந்த பிரதமர் வாஜ்பய் அவர்களிடம் தமிழகத்தின் சார்பில் மூன்றாவது தவணையாக 10 கோடி ரூபாய் கார்கில் நிதிக்கு வழங்கியதோடு - இந்தியாவிலேயே 50 கோடி ரூபாய் அளவிற்கு அதிக நிதியை கார்கில் நிதியாக வழங்கிய மாநிலம் தமிழ்நாடு என்ற பெயரையும் நாம் பெற்றோம்.

★ ★ ★

7-7-1999 அன்று சரியாக 10 மணிக்கு டெல்லியில் முதலமைச்சர்கள் மாநாடு தொடங்கியது. கார்கில் போரில் உயிர் நீத்த வீரர்களுக்கான இரங்கல் தெரிவிக்கும் பொருட்டு இரண்டு நிமிடம் மௌனம் கடைப்பிடிக்கப்பட்டது. பிரதமர் துவக்க உரையை முடித்ததும், முதலமைச்சர்களின் வரிசையில் முதலாவதாக என்னைத்தான் பேசிட அழைத்தார்கள்.

15.7.1999 அன்று எல்லைப் பாதுகாப்புப் படையில் பணி புரிந்த திருச்சி மாவட்டம், கூத்தூர் கிராமத்தைச் சேர்ந்த



வேறு எந்த மாநிலமும் செய்திராத சாதனையாக, கார்கில் போர் நிதிக்காக மூன்று தவணைகளில் ரூ.50 கோடியை அன்றைய பிரதமர் வாஜ்பயிடம் வழங்கினேன்.


பாஸ்கரன் என்ற ஆய்வாளர், பாகிஸ்தான் தீவிரவாதிகளால் சுடப்பட்டு வீரமரணம் அடைந்தார். அவரது குடும்பத்திற்கு ஐந்து இலட்ச ரூபாய் வழங்கிட ஆணை பிறப்பித்தேன். அதனை நேரடியாக அமைச்சர் தம்பி **கே.என்.நேரு;** அவர்கள் இல்லத்திற்குச் சென்று அளித்தார்.

கார்கில் பகுதியில் இரண்டரை மாதங்கள் நடைபெற்ற போர் முடிந்து ஊடுருவல்காரர்கள் முற்றிலுமாக வெளியேற்றப் பட்டனர்.

இதற்கிடையே 5.5.1999 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் ஓர் அறிக்கையைத் தாக்கல் செய்தேன். அந்த அறிக்கை வருமாறு:-

❁ ‘‘தென் மாவட்டங்களிலுள்ள மக்கள் வாழ்க்கை நிலையை உயர்த்தவும், அவர்களின் கல்வி, பொருளாதார மேம்பாடு, வேலை வாய்ப்பு, தொழில் வளர்ச்சி போன்ற முன்னேற்றங்களை உருவாக்கவும், அரசின் சார்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து அறிந்து, மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை வகுத்தளிக்க உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்படும் என்று 17.3.1999 அன்று சட்டப் பேரவையில் வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருந்தேன். இந்த அறிவிப்பிற்கு செயல் வடிவம் கொடுக்கும் வகையில் புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், மதுரை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியா குமரி மாவட்டங்களில் உள்ள மக்களின் பொருளாதார வளர்ச்சிக்காக ‘தென் மாவட்டங்களுக்கான சமூக, பொருளாதார தொழில் வளர்ச்சிக்கான ஆணையம்’ (High Power Commission for Socio-- economic and Industiral Development of Southern Districts) ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

அதன் தலைவராக உச்ச நீதி மன்ற முன்னாள் நீதிபதி திரு.**இரத்தினவேல் பாண்டியன்** அவர்களும், துணைத்



எனது 76வது பிறந்த நாளில், காங்கிரஸ்தலைவர் மூப்பனார் அவர்கள் எனது இல்லத்திற்கு வந்து வாழ்த்தினார். உடன் முரசொலி மாறன் இருந்தார்.

தலைவராக திரு. ஆர்.ஏ. சீதாராமதாஸ், இ.ஆ.ப. (ஓய்வு) அவர்களும், உறுப்பினராக திரு. ஏ.வெங்கட்ராமன், இ.ஆ.ப. (ஓய்வு) அவர்களும், செயலராக பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர் நலத்துறைச் செயலாளராக இருந்த திரு.முருகன், இ.ஆ.ப., அவர்களும் நியமிக்கப்பட்டார்கள். இவ்வாணையம் ஜனவரி 2000க்குள் தனது அறிக்கையை அளிக்க வேண்டு மென்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

★ ★ ★

1999ஆம் ஆண்டு, மே திங்கள், 8ஆம் தேதி கழகப் பொதுச் செயலாளர் **பேராசிரியர்** அவர்கள் ஏடுகளுக்கு ஒரு அறிக்கை விடுத்திருந்தார். அந்த ஆண்டு என்னுடைய **பவள விழா** என்ற வகையில் அதனைக் கொண்டாடுவதுபற்றி அந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருந்தார். அது குறித்து பல்வேறு குழுக்களையும் பேராசிரியர் அறிவித்திருந்தார். எனது பவள விழாக் குழுவின் தலைவர் பொறுப்பையே பேராசிரியர் அவர்கள் ஏற்றுக் கொண்டு, அதனைச் சிறப்பாகக் கொண்டாடும் சீரிய முயற்சியிலே அவரே ஈடுபட்டார். பேராசிரியர் அவர்கள் என்னைவிட வயதில் மூத்தவர் என்ற முறையில், என் பவளவிழா குறித்து அவர் விடுத்த அறிக்கையினை நான் ஏற்றுக்

கொண்ட போதிலும், மிக ஆடம்பரமாக அந்த விழாவினை கழகத் தோழர்கள் ஏற்பாடு செய்வது எனக்குப் பிடிக்கவில்லை.

குறிப்பாக 21.5.1999 அன்றைய ஏடுகளில் வெளி வந்த ஒரு செய்தி என்னை மிகவும் வேதனையிலே ஆழ்த்தியது. பவள விழாவினையொட்டி வெளி வந்த அந்தச் செய்தியில் - பாரி வள்ளல் தேர் போன்ற மேடை அமைக்கப்படுவதாகவும், அதற்கு பல லட்சம் ரூபாய் செலவு என்றும் - சுட்டிக் காட்டியிருந்தது. அந்தச் செய்தியைப் பார்த்து நான் திடுக்கிட்டு ஓர் அறிக்கையும் உடனடியாக அதனைக் கண்டித்து வெளியிட்டேன். அதில் -

❁ ''ஆளுங்கட்சியாக இருக்கிற நிலையில் தி.மு.கழகம் நடத்துகிற நிகழ்ச்சிகள் எளிமையாகவும், எழுச்சியாகவும் இருக்க வேண்டுமே தவிர, ஆரவாரங்கள், ஆர்ப்பாட்டங்கள் கொண்டதாக இருத்தலாகாது என்பதில் நான் எப்போதுமே கண்டிப்பாக இருந்து வருகிறேன். என் பவள விழா என்ற பெயரால், உரிமை உடையவர்களின் அனுமதி பெறாமல், அவர்கள் இடத்தின் சுவர்களில் எழுதி யுள்ள பவளவிழா விளம்பரங்களையும், பொது இடங்களில் எழுதியுள்ள பவளவிழா விளம்பரங்களையும் அகற்றிவிடுமாறு காவல் துறைக்கும் ஆணை பிறப்பிக்கப்பட்டு அது செயல்படுத்தப்பட்டும் வருகிறது. இத்தகைய விளம்பரங்கள் குறித்த விபரங்கள் அரசின் காவல் துறை சார்பாகவும் ஏடுகளில் அறிவிக்கப் பட்டுள்ளன.



1999 - ஜூனில், கலிங்கப்பட்டியில் வைகோவின் இல்லத்திற்கு - 21 ஆண்டுகளுக்குப் பிறகு சென்ற என்னை மகிழ்ச்சியுடன் வரவேற்றார், வைகோ.

இத்தகைய ஆடம்பரங் களை கைவிடாத பட்சத்தில் பவளவிழா நிகழ்ச்சியில் நான் கலந்து கொள்வதென்பது கேள்விக்குறியாகிவிடும் என்பதை கழக உடன்பிறப்பு களுக்கும், கழக அமைப்புகளுக்கும் கண்டிப்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்'' - என்று எழுதியிருந்தேன்.

இதனைத் தொடர்ந்து நான் விரிவாக ஓர் அறிக்கையை ஏடுகளுக்குக் கொடுத்தேன். அந்த அறிக்கையில்-

❁ ''எழுபத்தி ஐந்தாம் அகவை நிறைவுக்கான என் பவள விழாவை மகத்தான பேரணியொன்றை நடத்தியும், மாபெரும் மக்கள் கடலை சென்னைக் கடற்கரையில் திரட்டிக் காட்டியும், மாநில மாநாட்டுக்கு இணையாக நடத்திட வேண்டுமென்று கழகப் பொதுச் செயலாளர், மற்றும் பொருளாளர், சென்னை மாவட்டக் கழகச் செயலாளர்கள், இளைஞர் அணித் தம்பிமார்கள், இலக்கிய அணியினர் ஆகியோர் மெத்த சிரமம் எடுத்துக் கொண்டு பணியாற்றத் தொடங்கியுள்ளனர். பொதுச் செயலாளர் **பேராசிரியர்** பவள விழாப் பேரணிக்கான அழைப்பு மடல்களை, அருவியெனப் பெருக்கெடுக்கும் அழகுத் தமிழால் தீட்டியுள்ளார். ஆங்காங்குள்ள கழகக் கண்மணிகளாம் இந்த இயக்கத்தின் ஓய்வறியாத் தொண்டர்கள் கார்களிலும், பேருந்துகளிலும், வேன் களிலும் ஆயிரக்கணக்கில் சென்னை நோக்கி வரப் போவதாக அறிவித்துக் கொண்டுள்ளனர். இப்போது இவை அனைத்தும் தேவையில்லை என்று நான் கூறுவது, பேராசிரியர் உள்ளிட்ட கழக உடன்பிறப்புகள் அனை வருக்கும் கவலை அளிக்கக் கூடியது என்பதுடன் - என்மீது கோபத்தைக் காட்டுவதாகக்கூட அமையும் என்பதை நானறிவேன். இருப்பினும் சிலவற்றை விளக்கிடக் கடமைப்பட்டுள்ளேன். செப்டம்பர் திங்களில் நாடாளு மன்றத் தேர்தல் என்கிற போது இடையிலே ஜூன், ஜூலை, ஆகஸ்ட் என மூன்று மாதங்கள் இருக்கின்றன.



வைகோ இல்லத்திற்கு சென்ற என்னை அவரது அன்னையார் மாரியம்மாள் அன்புடன் உபசரித்தார்.

இந்த நிலையில், தமிழக முழுவதுமுள்ள கழகச் செயல்வீரர்கள், ஜூன் இரண்டாம் நாள் சென்னை வருவதற் காகப் பம்பரமெனச் சுழன்று பணியாற்று வதும், போக்குவரத்துக் கான வாகனங்கள் ஏற்பாடு என்ற வகையில் கையிலிருக்கும் காசு பணத்தைச் செலவிடு வதும், தேர்தல் மூன்று மாத இடைவெளியில் வருகிறபோது தேவையற்றதாகவும், வீணான உழைப் பாகவும் ஆகிவிடும் என்பது என் கருத்து மட்டுமல்ல - கணிப்பும்கூட!

❁ ‘‘என்னைப் பொறுத்தவரையில் இவற்றையெல்லாம் பெருமளவில் சிறப்புறச் செய்து என்னை மகிழ்வித்துக் குளிர்வித்தால்தான் மேலும் என் பணியில் ஊக்கத்துடன் செயல்படுவேன் என்று யாரும் கருதமாட்டீர்கள் என்பது எனக்கு நன்றாகவே தெரியும். ஒருநாள் ஓய்வு கிடைத்தது என்று ஓராண்டுக்கு முன்பு உதகை மலர்க் காட்சிக்குத் துணைவி ராஜாத்தியோடு சென்றபோது கூட, தென் மாவட்டத்தில் சாதிக் கலவரம் என்ற சிறு பொறி பறந்தது எனக் கேள்வியுற்றதும், மலர்க் காட்சி நிகழ்ச்சி மேடையில் இருந்தவாறே சென்னைக்கு திரும்பி விட்டவன் நான். வசதிகள், வாய்ப்புகள், உல்லாசம், ஓய்வு என்பதை வாழ்க்கையில் பாலை வனங்களாகக் கண்டு பரவசமடை பவனே தவிர, குளிர் மலர்ச் சோலைகளாகக் கண்டு குதூகலிப்பவன் அல்லன். எனவே, வரவிருக்கும் நாடாளு மன்றத் தேர்தல் இந்திய வரலாற்றில் உருவாக்க இருக்கும் திருப்பு முனைக்கும் - தமிழகத்தின் நிலையான மேம்பாட்டுக்கென எழுப்பப்படும் அசையாத

அரணுக்கும் - கலங்கரை விளக்காக அமைந்திட கழகச் செயல்வீரர்களின் தொய்வில்லாத் தொண்டு இன்று முதலே தொடர வேண்டும். பேரணிகள், பெருந்திரளான மக்கள் குழுமிடும் கூட்டம் இவையனைத்தும் தேர்தலுக்கு முன்பு ஆகஸ்ட் திங்களில் ஏற்றவொரு நாளில் தமிழகத் தலைநகராம் சென்னையில் நடத்திடுவோம். ஜூன் 2ஆம் நாள் பொதுக்குழு மட்டும் நடத்துவோம். இந்த என் விளக்கத்தையும், வேண்டுகோளையும் ஏற்று, ஜூன் 2 சென்னைப் பேரணி, மற்றும் பொதுக் கூட்டங்களை ஆகஸ்டுக்கு ஒத்திவைக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள் கிறேன்'' - என்று எழுதியிருந்தேன்.

இரண்டாம் தேதி நடைபெற்ற பொதுக் குழுவினைத் தொடர்ந்து 3ஆம் தேதியன்று என்னுடைய 76வது பிறந்த நாள் விழா நான் கேட்டுக் கொண்டவாறே மிக எளிமையாக நடைபெற்றது. மேலும், பவள விழா செய்தியொன்றும் விடுத்திருந்தேன். குடியரசுத் தலைவர் **கே.ஆர். நாராயணன்,** குடியரசு துணைத் தலைவர் **கிருஷ்ணகாந்த்,** தமிழக ஆளுநர், மராட்டிய மாநில முன்னாள் ஆளுநர் **சி.சுப்ரமணியம்,** மற்றும் பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், கழக முன்னணியினர் தங்கள் வாழ்த்துகளை எனக்குக் குவித்தனர். த.மா.கா. தலைவர், **மூப்பனார்** நேரில் வீட்டிற்கு வந்து வாழ்த்தினார். பிரதமர் **வாஜ்பய்** தொலைபேசி வாயிலாக தனது வாழ்த்து களைத் தெரிவித்தார்.

என்னுடைய 76வது பிறந்தநாளை யொட்டி அப்போது 90 வயது நிறைந்த பாரத ரத்னா சி.சுப்பிரமணியம் அவர்கள் **'தினமணி'** நாளிதழுக்கு **'கலைஞர் எனும் புதிய மனிதர்'** என்ற தலைப்பில் ஒரு சிறப்புப் பேட்டியினை அளித்திருந்தார். அப்போது அவர் தெரிவித்த சில வாசகங்கள் என் வாழ்க்கை வரலாற்றில் இடம்பெறுவது இன்றியமையாத ஒன்று.

❁ ''முதல்வர் கலைஞர் கருணாநிதியை ஐம்பது ஆண்டு களுக்கும் மேலாக நான் அறிவேன். சட்டப்பேரவைக்குத்


தேர்ந்தெடுக்கப்பட்டு, பேரவை நடவடிக்கைகளில் அவர் கலந்து கொண்டதிலிருந்து நேரடியாக அவரை நான் சந்தித்துப் பழகி உள்ளேன். அப்போது தி.மு.க. தலைவராக அண்ணா இருந்ததுடன், பேரவையின் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்தார். அக்கால கட்டத்தில் இளைஞராக கருணாநிதி இருந்தாலும், பேரவை விவாதங்களில் பெரிதும் கலந்து கொள்வார். நல்ல திறமையான பேச்சாளர் என்ற பெயரை அப்போதே பெற்றிருந்தார். அவரைவிட வயதில் மூத்த தலைவர்கள் கட்சியில் இருந்தாலும், அண்ணாவுக்கு அடுத்தபடியாக கருணாநிதிதான் பேரவை விவாதங்களில் முன்னணியில் இருந்தார். அண்ணா இறந்தபோது, அவரது வாரிசாக முதல்வர் பதவியை 1969இல் கருணாநிதி ஏற்றார். கலைஞர் கருணாநிதியின் வாழ்க்கையில் ஏற்றமும், தாழ்வும் தொடர்ந்து வந்துள்ளன. தோல்வியில் துவண்டு விடாமலும், வெற்றியில் மிதந்து குதிக்காமலும், பணியாற்றிய பெருமை அவருக்கே உரியது. அரசியல்வாதியாக இருப்பது ஒன்று - தலைவராக இருப்பது மற்றொன்று. தலைவராக இருப்பதற்கு சிறந்த ஆற்றல்கள் தேவை. கட்சித் தொண்டர்களை ஆதரித்து, அரவணைத்து, அத்தொண்டர்களின் அன்பைப் பெற்றவர். மேலும், தொண்டர்களும் அவர்மீது வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத ஈடுபாட்டைக் கொண்டுள்ளனர். இது மிகப் பெரிய சாதனை. எனக்கும் அவருக்கும் பல நேரங்களில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டது உண்டு. இருப்பினும், இருவருக்குமிடையே பரஸ்பர மரியாதை, நட்பு தொடர்ந்து இருந்து வருகிறது. சமீப காலத்தில் கலைஞரை ஒரு புதிய மனிதராகக் காண்கிறேன். அவரின் இத்தகைய புதிய பரிமாணம் என்னை மிகவும் கவர்ந்துள்ளது. இந்தியாவிலேயே அதிக அனுபவத்தைப் பெற்ற மூத்த அரசியல் தலைவராக அவர் திகழ்கிறார். இன்று அவரது பணி தமிழகத்துக்கு மட்டுமல்ல - இந்தியா முழுவதற்கும் தேவைப்படுகிறது.

பல்வேறு எதிர்க்கட்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தும், அக்கட்சிகளின் தலைவர்களுக்கு மரியாதை அளித்தும் கலைஞர் செயல்பட்டு வருவதை நானும் வரவேற்கிறேன். ’’ - என்று குறிப்பிட்டிருந்தார், திரு.சி.சுப்பிரமணியம்.

2. ஆருயிர் நண்பர்களை இழந்த துயரம்!

"1999ஆம் ஆண்டு - செப்டம்பர் திங்களில் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடைபெறும்" என்று ஜூலை திங்கள் மத்தியில் அறிவிப்புகள் வந்தன. தலைமைத் தேர்தல் ஆணையம் அதற்கான பணிகளை எல்லாம் தொடங்கியது. தேர்தல் அறிவிப்புகள் வந்ததுமே, நாடாளுமன்றத் தேர்தல் பற்றி சூப்பர் ஸ்டார் **ரஜினிகாந்த்** வெளியிட்ட அறிக்கையில்-

❁ "வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க.வும், த.மா.கா.வும் தனித் தனியாக போட்டியிடப்போகும் இந்தச் சூழ்நிலையில், என்னுடைய ஆதரவு யாருக்கு என்ற கேள்விக்குறி அரசியல் வட்டாரங்களிலும், மக்கள் மத்தியிலும், அன்பு ரசிகர்கள் மத்தியிலும் எழுந்திருக்கிறது. 1996ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில், ஒரு பொது காரணத்திற்காக தி.மு.க.வும், த.மா.கா.வும் ஒன்று சேர்ந்தது. அவர்கள் ஒன்று சேர்வதற்கு நானும் ஒரு காரணமாக இருந்தேன் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அந்தக் கூட்டணி தொடர்ந்து இருந்த நிலையில், என்னுடைய ஆதரவும் தொடர்ந்து இருந்தது. தி.மு.க., த.மா.கா. கூட்டணி இல்லாத இன்றைய சூழ்நிலையில், எந்த ஒரு கட்சிக்கும் நான் ஆதரவு அளிப்பதற்கு என் மனசாட்சி இடம் கொடுக்க வில்லை.



- "கடந்த மூன்றாண்டு காலத்தில், என்மீது அன்பும் பாசமும் வைத்து, நான் சந்தித்த சில சங்கடமான சூழ்நிலைகளில் எனக்காக குரல் கொடுத்த மதிப்பிற்குரிய முதல்வர் டாக்டர் **கலைஞர்** அவர்களையும் -


- "என்மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கும் **திரு.மூப்பனார்** அவர்களையும் நான் என் வாழ்க்கையில் மறக்க முடியாது.

- "எங்கள் நட்பு அரசியல் ரீதியாக இல்லை என்றாலும், தனிப்பட்ட முறையில், பாசத்துடன் என்றென்றும் தொடரும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

24.7.1999 அன்று, கிண்டி ராஜ்பவனத்தில், ஆளுநர் மாளிகையில் தங்கியிருந்த அன்றைய உள்துறை அமைச்சர் **அத்வானி** அவர்களைச் சந்தித்து, நாடாளுமன்றத் தேர்தல் குறித்தும், இரண்டு கட்சிகளைச் சேர்ந்தவர்களும் சந்தித்துப் பேசுவது குறித்தும் கலந்துரையாடினேன். அதே நாளில், காஞ்சிபுரத்தில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், காஞ்சி மாவட்ட முதல் மாநாடு (மாநில சுயாட்சி மாநாடு) நடைபெற்றது. அந்த மாநாட்டில் நானும், அத்வானி அவர்களும், டாக்டர் **ராமதாஸ்** அவர்களும், **வைகோ, வெங்கய்யா நாயுடு, இல. கணேசன்** ஆகியோரும் கலந்து கொண்டோம்.

★ ★ ★

இதற்கிடையே ஒரு நிகழ்ச்சியை குறிப்பிட வேண்டும். முறையாக நடைபெற்று வந்த ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான முயற்சியிலே ஈடுபட்டு - அதற்காக டெல்லியில் ஒரு புகழ் பெற்ற தேநீர் விருந்தும் ஏற்பாடு செய்தார் **சுப்பிரமணியன் சுவாமி.** அந்த விருந்தை ஏற்பாடு செய்து - அதிலே **சோனியா காந்தியை** ஜெயலலிதா சந்திக்க வைத்து, அதன் காரணமாக மத்தியில் ஆட்சிக் கவிழவும், இந்தியாவில் ஒரு பொதுத் தேர்தல் நடைபெறவும் காரணமாக இருந்த ஜெயலலிதாவிற்கு, 15.7.1999 அன்று சுப்பிரமணியன் சுவாமி ஒரு கடிதம் எழுதி, அதனை ஏடுகளிலும் வெளியிட்டிருந்தார். அந்தக் கடித




எங்கள் நட்பு அரசியல் ரீதியாக இல்லாவிட்டாலும், தனிப்பட்ட முறையில் பாசத்துடன் என்றென்றும் தொடரும்!

வாசகங்களைப் படித்தால், ஜெயலலிதா எத்தகையவர்-எந்த அளவிற்கு நன்றி உணர்வற்றவர் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

அந்தக் கடிதத்தில் -

❁ *''வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு உங்களைச் சந்திக்க எனக்கு நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதாக உங்கள் வீட்டிலிருந்து இன்று காலை 11.45க்கு தொலைபேசியில் தெரிவித்தார்கள். ஜனதா கட்சிக்கு இடம் ஒதுக்கப்படாத நிலையில், புதன்கிழமையே உங்களைச் சந்திக்க நேரம் ஒதுக்குமாறு கேட்டிருந்தேன். அ.தி.மு.க. கூட்டணியில் ஜனதா கட்சிக்கு உள்ள அந்தஸ்து என்ன என்பதைத் தெரிந்து கொள்ளவே, நேரம் ஒதுக்குமாறு கேட்டேன். ஆனால் அது நடைபெறாததால், பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் தங்கள் இஷ்டப்படி செய்திகளை வெளியிட்டுள்ளன. மதுரைத் தொகுதியை ஜனதா கட்சிக்கு ஒதுக்க வேண்டும் என்று நீங்கள் ஏற்கனவே முடிவு செய்து வைத்திருந்தால்தான் வெள்ளிக்கிழமை நடைபெறும் சந்திப்பு பயன் உள்ளதாக இருக்கும். மதுரை தொகுதியை ஒதுக்குவது குறித்து ஏற்கனவே பல முறை உங்களுடன் விவாதித்துள்ளேன். தேர்தல் தேதி அறிவிக்கப் பட்டுள்ள நிலையில், நீங்கள் ஏதாவது ஒரு வகையில் முடிவு செய்திருக்க வேண்டும். எங்களுக்கு எதிராக நீங்கள்*




கிண்டி, ஆளுநர் மாளிகையில், அத்வானியைச் சந்தித்து, நாடாளுமன்ற தொகுதிப் பங்கீடு குறித்து, நானும்முரசொலி மாறனும் உரையாடினோம்.

முடிவு செய்திருந்தால் நம் சந்திப்பு, நேரத்தை வீணடிக்கும் வேலையே. நீங்கள் இனிமேல்தான் முடிவு செய்ய வேண்டுமானால், இன்று மாலை 6 மணி அளவில் முடிவு செய்வீர்கள் என்று நம்புகிறேன். உங்களிடம் இருந்து சாதகமான பதில் எனக்கு வரவில்லை என்றால், வெள்ளிக் கிழமை நடைபெறுவதாக இருந்த நம் சந்திப்பு ரத்து செய்யப்படுகிறது என்று நீங்கள் புரிந்து கொள்ளலாம். அத்துடன் அ.தி.மு.க. - ஜனதா கட்சி உறவும் முடிவுக்கு வருகிறது!'' என்று எழுதியிருந்தார்.

தோழமைக் கட்சியாக இருந்தவர்களைப் புறக்கணிக்கும் பண்பு, ஜெயலலிதாவிற்கு இயல்பாகவே இருந்தது என்பதை மெய்ப்பிக்கும் மற்றொரு உதாரணம் இதுவல்லவா?

இந்தக் கடிதத்தை வெளியிட்ட **''தினமணி''** தொடர்ந்து எழுதும்போது, பா.ஜ.க. ஆட்சிக்கு ஜெயலலிதா அளித்து வந்த ஆதரவை வாபஸ் பெற்று, புதிய ஆட்சி அமைக்க ஜெயலலிதா டெல்லியில் 20 நாட்கள் முகாமிட்டதற்கு சுப்பிரமணியன் சுவாமியே முக்கிய காரணம் என்றும், ஆனால் அவருக்குப் போட்டியிட அந்த அணியிலே இடம் தரப்படவில்லை என்றும், அதுபோலவே தனக்குக் கண்டிப்பாக 'சீட்' கிடைக்கும்

என்ற நம்பிக்கையில் போயஸ் கார்டன் சென்ற ஐக்கிய பொதுவுடைமைக் கட்சித் தலைவர் **தா.பாண்டியனுக்கும்** 'சீட்' தரப்படவில்லை - என்றும் எழுதியிருந்தது.



ஜெயலலிதா நம்பிக்கை துரோகம் செய்துவிட்டார்! இன்னும் அவர் மாறவில்லை - அவர் மன்னிப்புக் கேட்டாலும், இனி அ.தி.மு.க.வுடன் கூட்டணி கிடையாது!'' என்றார் சுப்பிரமணியன் சாமி

சுப்பிரமணியன் சுவாமி 16.7.1999 அன்று நிருபர்களைச் சந்தித்துக் கூறும்போது, "ஜெயலலிதா நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டார்! இன்னும் அவர் மாறவில்லை - மன்னார்குடி மாபியா கும்பலின் கட்டுப்பாட்டில் ஜெயலலிதா உள்ளார்! ஜெயலலிதா மன்னிப்புக் கேட்டாலும், இனி அ.தி.மு.க.வுடன் கூட்டணி கிடையாது. அ.தி.மு.க. கூட்டணியிலிருந்து வாழப்பாடி ராமமூர்த்தி, வைகோ போன்றவர்கள் விலகும்போது, நம்பிக்கை துரோகம் செய்து விட்டதாக ஜெயலலிதா கூறினார். ஆனால், இப்போது அவரது கூட்டணியில் தொடர்ந்து இருந்த ஒரே கட்சியான ஜனதா கட்சிக்கு அவர் நம்பிக்கை துரோகம் செய்துவிட்டதாக நாடு முழுவதும் கருதுகின்றனர். டெல்லியில் சோனியா காந்தி - ஜெயலலிதா சந்திக்க, விருந்து ஏற்பாடு செய்யும்படி ஜெயலலிதாதான் கூறினார், நான் ஏற்பாடு செய்யவில்லை. நான் மத்திய அமைச்சராக இருந்தபோது ஜெயலலிதாவிற்கு உதவி செய்தேன். கடந்த 3 ஆண்டுகளாகக் கூட்டணியில் இருந்தேன். எல்லோரும் அவரை விட்டு விட்டுப் போன போதிலும், நான் மட்டும் இருந்தேன். ஆனால் அவர் நம்பிக்கை துரோகம் செய்துவிட்டார்'' என்றெல்லாம் கூறினார்.

இந்த அளவிற்குப் பேட்டி கொடுத்த **சுப்பிரமணியன் சுவாமி** அதற்குப் பிறகாவது படிப்பினை பெற்றாரா என்பதை தமிழகத்தின் பிற்கால சரித்திரம் நமக்குத் தெளிவாக்கி யுள்ளது.

★ ★ ★




அந்த ஆட்சிக் கவிழ்ப்புச் சதிக்குக் காரணகர்த்தாவே ஜெயலலிதா தான்! அவர் என்னையும் பயன்படுத்திக் கொண்டார்! என்று குமுறினார், சுப்பிரமணியன் சுவாமி

1999ஆம் ஆண்டு நாடாளு மன்றத் தேர்தலில் நான் ஈடுபட்டிருந்தபோது நடை பெற்ற மூன்று சோகச் சம்ப வங்கள் மறக்க முடியாதவை! 27.8.1999 அன்று திருச்சியில் பா.ஜ.க. வேட்பாளர் **ரெங்க ராஜன் குமாரமங்கலத்தை** ஆதரித்து நடைபெற்ற பிரமாண்டமான பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினேன். அந்த மேடையில் என்னுடன் சிரித்த முகத்துடன் அமர்ந்திருந் தார் தம்பி **பொய்யாமொழி**. திருச்சி மாவட்டத்தில் என்னோடு இணைந்து கழகம் வளர்த்த தளகர்த்தர் புரவலர் **அன்பில் தர்மலிங்கத்தின்** மூத்த மகன்தான் அன்பில் பொய்யாமொழி. என்னுடைய அன்பிற்கும், பாசத்திற்கும் பெரிதும் பாத்திரமானவர். திருச்சி இரண்டாவது தொகுதியில் அவர் கழகச் சார்பில் வேட்பாளராகப் போட்டியிட்டு, பெரு வெற்றி பெற்றவர். கழக இளைஞரணியின் இணைச் செயலாள ராகவும் தம்பி **மு.க. ஸ்டாலினோடு** அரும்பணியாற்றி வந்தவர். 28ஆம் தேதி விடிவதற்குள் திடீர் மாரடைப்பு காரணமாக மறைந்து விட்டார் என்ற செய்தி என்னைப் பெரிதும் அதிர்ச்சியடையச் செய்தது.

விடியற்காலை 3.30 மணி அளவில் நெஞ்சு வலி ஏற்பட்டு, மருத்துவ மனைக்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டபோது, வழியிலேயே உயிர் பிரிந்து விட்டது. அவர் மறைந்தபோது 48 வயதுதான். உடனடியாக அவர் இல்லத்திற்குச் சென்றேன். எனக்கு நானே ஆறுதல் கூறிக் கொள்ள முடியாத நிலையில், அந்தக் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூற முயன்று தோற்றேன்.

திருச்சி நகரமே சோக வடிவாய் உருமாறிற்று. என்னுடைய தேர்தல் சுற்றுப் பயணம் ரத்து செய்யப்பட்டது. தேனிப்




என்னோடு இணைந்து கழகம் வளர்த்த தளகர்த்தர் அன்பில் தர்மலிங்கத்தின் புதல்வர் பொய்யாமொழி, திடீரென மறைந்த செய்தி என்னைத் தாக்கியது. சோகத்தில் புழுவாகத் துடித்தேன், நான்!

பகுதியில் தேர்தல் பிரச்சாரம் செய்து கொண்டிருந்த தம்பி ஸ்டாலின் திருச்சிக்கு வந்து, தன் நண்பனுக்கு இரங்கல் தெரிவித் தார். என் கைப்பட அன்பில் பொய்யாமொழிக்காக எழுதிய இரங்கல் செய்தி இதோ :-

❁ ‘‘அன்பில் தர்மலிங்கம் என்னிடம் விட்டுச் சென்ற மகனை இழந்து விட்டேன். ஆம் - என் பிள்ளைகளில் ஒருவரை இழந்து விட்டேன். அன்பில் பொய்யாமொழி இளைஞர் அணியின் மாநில இணைச் செயலாளர்! தம்பி ஸ்டாலினுக்கு வலது கரம். எப்போதும் சிரித்த முகம். சிற்றெரும்பு போன்ற சுறுசுறுப்பு. திருச்சியில் இரவு நடை பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்ட மேடையில் என்னுடன் இருந்த அந்தப் பிள்ளை - கூட்டம் முடிந்த பிறகும் நான் தங்கியிருந்த இடத்துக்கு வந்து மகிழ்ச்சியுடன் அளவளாவிச் சென்ற பிள்ளை - விடியற் காலையில் உயிரோடு இல்லை என்றால், இந்தக் கொடுமையை, நான் திருச்சியில் இருந்தே அனுபவித்ததைவிட வேறு ஒரு துயரம் எனக்கு உண்டோ? மாநில இளைஞர் அணியின் மாவீரர்களில் தலைச் சிறந்து விளங்கிய பொய்யாமொழி, சட்டப் பேரவை உறுப்பினர் பதவியைத் தன் தந்தை அன்பில் தர்மலிங்கத்தைப் போலவே மக்களுக்குப் பணியாற்றும் வாய்ப்பு எனக் கருதி செயல்பட்டதையெல்லாம் எப்படி என்னால் மறக்க முடியும்?

‘‘புத்திர சோகத்தால் புழுப்போலத் துடிக்கும் என்னையும், என் குடும்பத்தாரையும் யார்தான் ஆறுதல் சொல்லித் தேற்றமுடியும்? கழக இளைஞர் பட்டாளம் அன்பில் பொய்யா



மொழியின் துடிப்பையும், தூய கொள்கை உறுதியையும் தொடர்ந்து கொண்டிருப்பதே அந்த வீர இளைஞனுக்கு வழங்கும் காணிக்கையாக அமையும்.'' - என்று அந்த இரங்கல் செய்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

மறைந்த தன் நண்பனின் குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்பினை தம்பி மு.க.ஸ்டாலின் எடுத்துக் கொண்டு இன்றுவரை பாதுகாத்து வருகிறார். நானும் அன்பிலும் எப்படி நண்பர்களாக இருந்தோமோ, அது போலவே என் மகன் ஸ்டாலினும் அன்பில் மகன் பொய்யா மொழியும் நல்ல நண்பர்களாக விளங்கி, தற்போது அந்தப் பாசமும் பிணைப்பும் மூன்றாவது தலைமுறைக்கும் படர்ந்து - ஸ்டாலினின் மகன் **உதயநிதியும்,** பொய்யாமொழியின் மகன் **மகேசும்** நல்ல நண்பர்களாக இருந்து வருகிறார்கள். அன்பில் பொய்யாமொழியின் இளவல் அன்பில் **பெரியசாமி** கழகத் தொண்டினை தொடர்ந்து ஆற்றி வருகிறார்.

★ ★ ★

இது போலவே மற்றொரு சோகச் சம்பவம்! இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் தலைவராக இருந்த அருமை நண்பர் **ஏ.கே.ஏ. அப்துஸ் சமத்** அவர்கள் உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையிலே மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும், கவலைக்கிடமான நிலையில் இருப்பதாகவும் தகவல் கிடைத்து மருத்துவமனைக்குச் சென்று உடல் நலம் விசாரித்தேன். அவருடைய அருமை மகள் **பாத்திமா முசாபர்** மருத்துவ மனையில் தந்தையுடன் இருந்தார். சில மணி நேரங்களுக்கு மேல் அவர் வாழமாட்டார் என்ற தகவலை



மருத்துவர்கள் என்னிடம் தெரி வித்தனர். அவ்வாறே அன்று மாலையில் அவர் இயற்கை அடைந்தார். நானும் அமைச்சர் களும் அவரது இல்லம் சென்று அஞ்சலி செலுத்தினோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் மேல் மிகுந்த அன்பும் பாசமும் கொண்டவர் அருமை நண்பர் சமத். அவர் ஒருமுறை அண்ணா விடம், தி.மு.கழகத்திற்கே வந்து விடுவதாகக் கூறியபோது, அண்ணா அவர்கள் வேண்டா மென்றும், அவர் முஸ்லீம் லீக் இயக்கத்திலேயே தொடர்ந்து பணியாற்றுவதே தனக்குப் பெருமை தரும் என்றும் பதிலளித்தார்.

அவர் மறைவதற்குச் சில மாதங்களுக்கு முன்பு என்னை வந்து சந்தித்தார். யூனியன் முஸ்லீம் லீகினுடைய பொன் விழாவைக் கொண்டாட வேண்டுமென்றும், பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு இந்திய யூனியன் முஸ்லீம் லீக் **காயிதே மில்லத்** அவர்களுடைய தலைமையிலே உருவான அந்தக் கால கட்டத்தில், இராஜாஜி மண்டபத்திலேதான் அதன் முதல் கவுன்சில் கூட்டம் நடைபெற்றதால், அந்தக் கட்சியின் பொன் விழாவையும் அதே ராஜாஜி மண்டபத்தில் நடத்த வேண்டு மென்றும், அரசின் சார்பாக அதற்கான வாய்ப்பினை வழங்க வேண்டுமென்றும் என்னிடம் கேட்டுக் கொண்டார்.

காயிதே மில்லத் தலைமையிலே நடைபெற்ற சிறுபான்மை சமுதாயத்தினருக்கான மாபெரும் ஓர் அரசியல் கட்சி, அதனுடைய பொன்விழா என்கிற அளவில் அதனை அங்கேயே நடத்திக் கொள்வதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தேன். அதற்குப் பிறகு அவருக்கு இதயக் கோளாறு ஏற்பட்டு, மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டு, சிகிச்சை

மூன்றாம் தலைமுறையில்...



உதயநிதி ஸ்டாலினுக்கும், மகேஷ் பொய்யாமொழிக்குமாகத் தொடர்கிறது!

முடிந்து இல்லம் திரும்பிய பிறகு நானும் பேராசிரியரும் அவர் இல்லத்திற்குச் சென்று பார்த்தோம்.

மற்றொரு சோகச் சம்பவம் - "துக்கம் துணையோடு வரும்" என்பார்களே -அதைப் போலவே, "அரங்கு" என்று அன்பொழுக என்னால் அழைக்கப்பட்ட **இராம.அரங் கண்ணல்** அவர்கள் தனது இல்லத்தில் இயற்கை எய்தினார் என்ற அதிர்ச்சிமிகு செய்தி அடுத்து என்னை வந்தடைந்தது.


தஞ்சை மாவட்டத்தில் கோமல் என்கிற கிராமத்தில், அரங்கண்ணல் 31-3-1928 அன்று பிறந்தவர். பள்ளி நாட்கள் தொட்டு எனக்கு உற்றத் தோழராகத் திகழ்ந்தவர். கழகத்திலே அவரை நான்தான் அறிமுகப்படுத்தினேன். தந்தை பெரியாரின் **"குடியரசு"** பத்திரிகையிலே பணியாற்றியவர். அண்ணாவின் **"திராவிட நாடு"** பத்திரிகையிலும் அவர் பணியாற்றினார். அதன் பிறகு **"அறப்போர்"** என்ற பெயரில் வார இதழை நடத்தினார். 1962 மற்றும் 1967ஆம் ஆண்டுகளில், மயிலாப்பூர் தொகுதிச் சட்டப் பேரவை உறுப்பினராக இரண்டு முறையும் - 1971இல் எழும்பூர் தொகுதியில் சட்டப் பேரவை உறுப்பின ராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நான் முதலமைச்சராக இருந்தபோது முதன் முதலாக தமிழக அரசின் சார்பில் **குடிசை மாற்று வாரியத்தைத்** தொடங்கிய போது, அரங்கண்ணல் அவர்களைத்தான் அதன் தலைவராக ஆக்கினேன். திறமையாகப் பணியாற்றி, அந்த வாரியத்தின் சார்பில் சென்னையில் ஆயிரக்கணக்கான வீடுகளை எழுப்பிய பெருமை அவருக்கு உண்டு.

கலைத்துறையிலும் அரங்கண்ணல் ஈடுபாடு கொண்டு, **"பூவா தலையா?"** - **"அவள் ஒரு தொடர்கதை"**- **"பச்சை விளக்கு"** - **"மரோசரித்திரா"** போன்ற சிறந்த படங்களைத் தயாரித்த பெருமையும் அவருக்கு உண்டு. அண்ணா அவர்களின் **"தாய் மகளுக்குக் கட்டிய தாலி"** திரைப் படத்திற்கு அரங்கண்ணல் உரையாடல் தீட்டினார். கழகத்தின் செயற்குழு - பொதுக் குழு - தணிக்கைக் குழு - போன்றவற்றில் உறுப்பின ராக இருந்து, தி.மு.கழகத்தின் முன்னோடிகளில் ஒருவராகவும் விளங்கினார்.

அவர் மறைந்த செய்தி அறிந்ததும், நந்தனத்தில் உள்ள அவரது இல்லத்திற்குச் சென்று அஞ்சலி செலுத்தியதோடு மட்டுமல்ல - அவருடைய துணைவியாரான **ஆண்டாள்** அம்மையாருக்கும், அவரது ஐந்து மகன்களுக்கும் ஆறுதல் கூறினேன். நான் விடுத்த இரங்கல் செய்தியில்-

❁ "ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக - பள்ளிப் பருவம் முதல் இணைபிரியாத சகோதரராக - இனிய நண்பராக - இலட்சிய மனிதராக - என்னுடன் பழகி என் உள்ளத்தில் தனித்ததோர் இடம் பெற்றிருந்த அரங்கண்ணலை இழந்து விட்டேன். சட்டமன்ற உறுப்பினராக அவர் ஆற்றிய அரும் பணிகளும் - தமிழக அரசின் குடிசை மாற்று வாரியத் தலை வராக அவர் செய்து காட்டிய சாதனைகளும் - விடுதலை, திராவிடநாடு, காஞ்சி, அறப்போர் ஆகிய ஏடுகளில் அவர் வாரி வழங்கிய எழுத்தோவியங் களும் - அனைத்துக்கும் மேலாக என் குடும்பத்தில் ஒருவராக இருந்து அவர் அள்ளிப் பொழிந்து



அப்துல் சமது



அரங்கண்ணல்

கொண்டிருந்த அன்பும் மறக்கக் கூடியவைகளா? அவரை இழந்து தவிக்கும் என்னைப் போலவே துடித்திடும் என் சகோதரர் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்து கண்ணீர் தும்பிட ஆறுதல் கூறுகிறேன். என்றென்றும் என் அருமைச் சகோதரரின் புகழும் பெயரும் நிலைத்திருக்கும்'' என்று எழுதினேன்.

★★★

1999ஆம் ஆண்டில், செப்டம்பர் திங்கள் 2ஆம் தேதியன்று வேலூர் மாவட்டத்தில் கழக ஆட்சியில் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த தம்பி துரைமுருகன், பெருமுயற்சி எடுத்து சுமார் 100 கோடி ரூபாய் செலவில் அமைத்த **மோர்தானா அணையின்** திறப்பு விழாவில் கலந்து கொள்ளவும், ராணிப் பேட்டையில் கழகச் சட்ட மன்ற உறுப்பினராக இருந்த தம்பி **ஆர்.காந்தியின்** அலுவலகத்தைத் திறந்து வைக்கவும், **திருமுருக கிருபானந்த வாரியார்** மணி மண்டபத்தைத் திறந்து வைக்கவும் ஒருநாள் பயணமாகச் சென்றிருந்தேன். வாரியார் மணி மண்டபத்தை நான் திறந்து வைப்பதைப் பற்றி அப்போது ஒருசில வார ஏடுகள் தங்களுடைய ஆச்சரியத்தை வெளிப் படுத்தி எழுதியிருந்தன. எனவே அந்த மணி மண்டபத்தைத் திறந்து வைத்து, நான் உரையினைத் தொடங்கும்போது, இவ்வாறு ஆரம்பித்தேன் :-

- ''இங்கே மேடையில் வைக்கப்பட்டிருந்த ஒரு குறிப் பேட்டில் குருவை விட உயர்ந்த பரம் பொருள் இல்லை; குருவைவிட உயர்ந்த தத்துவம் இல்லை; குரு வழங்கும் ஞானத்திற்கும் அதிகமான சுகமில்லை; குருபக்தியை விடச் சிறந்த பூசனைகள் இல்லை என நமது வேத மறைகள் எடுத்தோதுகின்றன'' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.




கே.பாலச்சந்தர் இயக்கிய ''அவள் ஒரு தொடர்கதை'' திரைப்படத்தைத் தயாரித்தவர் நண்பர் அரங்கண்ணல்.

☸ ''எனக்குக் குரு தந்தை பெரியார். அந்தக் குருவை விட உயர்ந்த பரம் பொருள் இல்லை என்கிற நினை வோடு இந்த மேடையில் உங்கள் முன்னால் நான் நின்று கொண் டிருக்கிறேன். அந்தப் பெரியாரும், அந்தப் பெரியாரின் தளபதியாக விளங்கிய எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களும் பாராட்டிய பெரியவர் தான் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள். எத்தனையோ கருத்து மாறுபாடுகள், வேறுபாடுகள் இருந்தாலும்கூட, ஒரு தமிழர் - சிறந்த தமிழர் - திறமை யான தமிழர் - தமிழை வாழ வைக்கின்ற எண்ணத்தோடு தமிழகம் எங்கும் உலா வந்த தமிழர் - தமிழக மெங்கும் என்று மாத்திரம் சொல்ல முடியாது, தரணி எங்கும் உலா வந்த தமிழர் என்ற முறையில் அவரைத் தந்தை பெரி யாரும், பேரறிஞர் அண்ணாவும், நாங்களும் போற்றிப் பாராட்டியிருக்கிறோம்'' என்று தொடங்கினேன்.

அந்த விழாவில் வாரியார் மறைந்தபோது நான் எழுதிய இரங்கல் உரை பற்றியும், கழக ஆட்சியில் அவர் காட்டிய பற்று குறித்தும் விரிவாகப் பேசினேன்.

★★★

வேலூர் மாவட்ட நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு, சென்னை திரும்பிய நான், செப்டம்பர் 3ஆம் தேதியன்று காலையில் நடைபெற்ற பத்திரிகையாளர் **ராமதாஸ்** இல்ல



பேரறிஞர் அண்ணா அவர்களின் ''தாய்மகளுக்கு கட்டிய தாலி'' கதைக்கு உரையாடல் தீட்டிய பெருமை அரங்கண்ணலுக்கு உண்டு

மணவிழாவிலும், அன்று மாலையில் நேரு உள் விளையாட்டரங்கில் நடைபெற்ற **''டிட்டோஜாக்'' ஆசிரியர்கள் மாநாட்டிலும்** கலந்து கொண்டேன்.

5ஆம் தேதியன்று ஆசிரியர்கள் தின விழாவில் கலந்து கொண்டு டாக்டர் ராதாகிருஷ்ணன் பெயரிலான விருதுகளை வழங்கி உரையாற்றினேன். அதற்கு முன்பு அந்த விருதுகளுக்குப் பெயர் **''நல்லாசிரியர் விருது''** என்றிருந்தது. கழக ஆட்சியில்தான், நான் முதல் அமைச்சராக இருந்தபோது ''எல்லா ஆசிரியர்களும் நல்லாசிரியர்கள்தானே! அதிலே வேறுபாடு ஏன்?'' என்பதற்காக அந்த விருதின் பெயரை **டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது** என்று மாற்றி வழங்கிடச் செய்தேன்.

அடுத்த நாளான செப்டம்பர் 6ந்தேதியன்று தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த மூவாயிரத்திற்கு மேற்பட்ட அ.தி.மு.க.வினர், முன்னாள் அ.தி.மு.க. எம்.பி., **என்.ராஜேந்திரன்,** முன்னாள் அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர் **ஆறுமுக நாயனார்** ஆகியோர் தலைமையில் தி.மு.கழகத்தில் இணைந்தார்கள்.

★ ★ ★

8-9-2000 அன்று **டாக்டர் எம்.ஜி.ஆர். பல்கலைக் கழகத்தில்** ஒரு கட்டிடத் திறப்பு விழா. அந்த விழாவிலே நான் பேசும்போது -



செப்டம்பர் 9ஆம் தேதியன்று, ஆர்.எம். வீரப்பன் அவர்களின் பவள விழாவில் கலந்துகொண்டு வாழ்த்தினேன்.


❁ ‘‘அ.தி.மு.க. ஆட்சியிலே மருத்துவப் பல்கலைக் கழகம் அறிவிக்கப்பட்டது என்றாலும், அது தி.மு.கழக ஆட்சியில் தான் தொடங்கப்பட்டது என்றும், அந்தப் பல்கலைக் கழகத்தினை டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரிலேயே அமைக்க வேண்டுமென்று உறுதி பூண்டு, அந்தப் பெயரிலேயே பல்கலைக் கழகத்தைத் தொடங்கி, இந்தியக் குடியரசுத் தலைவரை அழைத்து தொடக்க விழா நடத்தினேன் என்றும் குறிப்பிட்டேன்.

ஏன் இதைக் குறிப்பிட்டேன் என்றால், ‘முந்தைய ஆட்சியில் அறிவிக்கப்பட்ட திட்டம் ஆயிற்றே - அதை நாம் தொடங்க வேண்டுமா? தொடங்கினாலும் பெயரை அப்படியே வைக்க வேண்டுமா’ என்றெல் லாம் ‘‘அற்ப புத்தி’’யோடு கழகம் நடந்து கொள்ளவில்லை என்பதற்கு ஓர் உதாரணம் தான் இது.

★★★



வேலூர் மாவட்டத்தில் ரூ.100 கோடியில் அமைந்த மோர்த்தானா அணையைத் திறந்து வைத்தேன்



கிருபானந்த வாரியார்

அதற்கடுத்த நாளான செப்டம்பர் 9ஆம் தேதியன்று கலைவாணர் அரங்கில் நடைபெற்ற **ஆர்.எம். வீரப்பன்** அவர்களின் பவள விழாவிலே கலந்து கொண்டு, ''சமுதாய மக்களுடைய நன்மை பெருகவேண்டும் என்பதற்காகப் பாடுபடும் தொண்டரே! தோழரே! தூயவரே! உங்களை வாழ்த்து கிறேன். பெரியாரின் பேரப் பிள்ளையே! அண்ணாவின் அருமைத் தம்பியே! என்னுடைய ஆருயிர்ச் சகோதரரே! உங்களை வாழ்த்துகிறேன். வாழ்க, வாழ்க பல்லாண்டு!'' என்று வாழ்த்தினேன்.

ஒரு தமிழர் சிறந்த தமிழர் - திறமையான தமிழர் - தமிழை வாழ வைக்க தமிழகமெங்கும்- தரணியெங்கும் உலா வந்த தமிழர் கிருபானந்த வாரியாரின் மணி மண்டபத்தைத் திறந்து வைத்தேன்.


3. அ.தி.மு.க. உறவுபற்றி அன்றே சொன்னார், வாஜ்பய்!

செப்டம்பர் 15, 2000 -

பேரறிஞர் **அண்ணா** அவர்களின் 92வது பிறந்த நாள் விழா! வழக்கம்போல முப்பெரும் விழாவாகக் கொண்டாடினோம்.

காலையில், வள்ளுவர் கோட்டம் எதிரே உள்ள அண்ணா அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தோம். அதற்கு முன்பு தொண்டரணிச் செயலாளர்கள் மாஸ்டர் தமிழ்ப்பித்தன், ரோகிணி நாராயணன் தலைமையில் நடைபெற்ற தொண்டரணியினர் அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டோம்.

தொண்டரணியில் சிறப்பாகப் பணியாற்றிய விருதுநகர் மாவட்ட அமைப்பாளர் அ.உதயசூரியன், நாகை மாவட்ட அமைப்பாளர் அ. முருகேசன், மத்திய சென்னை மாவட்ட துணை அமைப்பாளர் அ.இராஜா ஆகியோருக்கு பதக்கங்களை அணிவித்தேன்.



சென்னை கலைஞர் அரங்கில், அன்று மாலையில் நடை பெற்ற விருது வழங்கும் விழாவில், பெரியார் விருதினை என்னுடைய இளமைக் கால நண்பன் திருவாரூர் **கு.தென்னன்** அவர்களுக்கும், அண்ணா விருதினை முகவை மாவட்டக் கழகச் செயலாளர் **சுப. தங்கவேலன்** அவர்களுக்கும், கலைஞர் விருதினை பெங்களூர்



காமராஜர் மணிமண்டபத் திறப்பு விழா மேடையில்...

திராவிடமணி அவர்களுக்கும், பாவேந்தர் பாரதிதாசன் விருதினை **ச.அமுதன்** அவர்களுக்கும் வழங்கிச் சிறப்பு செய்தேன்.

வழக்கம்போல சிறந்த ஆட்டோ ஓட்டுநர்களுக்கும், மாணவ - மாணவிகளுக்கும் பரிசளிக்கும் நிகழ்ச்சியும் இடம் பெற்றது.

16-9-2000 அன்று, முப்பெரும் விழா வினையொட்டி, இளைஞர் அணியின் சார்பில், தம்பி **மு.க. ஸ்டாலின்** முன் னின்று நடத்திய திருச்சி கலைக் காவேரி நுண்கலைக் கல்லூரி மாணவ மாணவியரின் ''வேர்கள் - விழுதுகள்'' என்ற பல்கலை நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.

17-9-2000 அன்று காலையில், பகுத்தறிவுப் பகலவன் தந்தை **பெரியாரின்** 122வது பிறந்த நாளையொட்டி அண்ணா சாலை, சிம்சன் அருகில் உள்ள பெரியார் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து வணங்கினோம்.

அதே செப்டம்பர் இறுதியில், 27-9-2000 அன்று திருப் பெரும்புதூருக்கு அடுத்துள்ள இருங்காட்டுக் கோட்டையில், 525 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்ட **''செயின்ட் கோபைன்''** கண்ணாடித் தொழிற்சாலையைத் தொடங்கி வைத்தேன்.

★★★

மாபெரும் மக்கள் தலைவரும், முன்னாள் தமிழக முதலமைச்சருமான பெருந்தலைவர் **காமராஜர்** அவர்களுக்கு கன்னியாகுமரி கடற்கரையில் நினைவிடம் ஒன்றை ஏற்படுத்த தமிழக அரசு முடிவு செய்தது.



முப்பெரும் விழாவில், வள்ளுவர் கோட்டம் எதிரே உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினோம்.

நாகர்கோவிலில் 19-4-1998 அன்று நடைபெற்ற பொதுவுடைமை வீரர் **ஜீவானந்தம்** மணிமண்டபத் திறப்பு விழாவிலே நான் பேசும்போது, அது பற்றி நான் அறிவித்திருந்தேன்.

காமராஜரின் அஸ்தி, கடலில் கரைப்பதற்கு முன்னதாக காந்தி மண்டபத்திற்கு அருகில் வைக்கப்பட்டிருந்தது. நினைவிடம் கட்டுவதற்கு அந்த இடத்தைத் தவிர, மற்ற இடம் மன நிறைவளிப்பதாக அமையவில்லை என்பதால், முக்கடல் சங்கமிக்கும் அந்தப் பகுதியிலேயே - 6300 சதுர மீட்டர் பரப்பளவில் அந்த நினைவிடத்தைக் கட்ட அரசு திட்டமிட்டிருந்தது.

நினைவிடம் கட்டத் திட்டமிடப்பட்ட இடம் கடற்கரை ஒழுங்கு முறை விதிகளுக்கு உட்படுத்தப்பட்ட பகுதியில் உள்ளது என்பதால், மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகச் செயலாளருக்கு 1998ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதத் துவக்கத்தில் (7-8-1998) கடிதம் ஒன்று எழுதப்பட்டு, பாதுகாப்புச் சட்ட விதிகளின்கீழ் தேவையான வகையில் விலக்கு அளிக்க வேண்டுமென்று கழக அரசின் சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இந்தக் கடிதத்திற்கு மத்திய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அனுப்பிய 7-10-1998 தேதிய பதில் கடிதத்தில், மேலும் சில விவரங்களைக் கோரியிருந்தார்கள். அந்த விவரங்களும் தமிழக அரசின் சார்பில் 21-1-1999 அன்று



சென்னை அண்ணா சாலையில் உள்ள பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் சிலைக்கு மாலை அணிவித்து வணங்கினோம்

மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. அதற்கு நினைவூட்டும் கடிதம் ஒன்றும் அனுப்பப் பட்டது.

ஆனால், அந்த அமைச்சகத்திடமிருந்து தமிழக அரசுக்கு 22-2-1999 தேதியிட்டு ஒரு கடிதம் வந்தது. அந்தக் கடிதத்தில், கடற்கரையின் ஒழுங்குபடுத்தப்பட்ட பகுதியில் திட்டமிட்டுள்ளவாறு நினைவிடம் கட்ட அனுமதிக்க இயலாது என்றும், அந்தக் கோரிக்கையைப் பரிசீலிக்க இயலாது என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த விவரங்களையெல்லாம் குறிப்பிட்டு, அன்றைய இந்தியப் பிரதமர் வாஜ்பய் அவர்களுக்கு 2-4-1999 அன்று நான் ஒரு கடிதம் எழுதியதோடு, அந்தப் பிரச்சினையில் பிரதமர் தனிப்பட்ட முறையில் தலையிட்டு உதவிட வேண்டுமென்றும், நிர்ணயிக்கப்பட்ட இடத்திலேயே காமராஜர் நினைவிடத்தை அமைக்க சிறப்பு நேர்வாகக் கருதி அனுமதி வழங்கிட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டேன்.


அதற்குப் பதில் வராத காரணத்தால் 19-4-1999 அன்று தமிழக அரசின் சார்பில் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட "பேக்ஸ்" செய்தியில் - குறிப்பிட்ட இடத்திற்கு அருகிலேயே காந்தி மண்டபம் உள்ளது என்றும் - மேலும் பல கட்டிடங்கள் அந்தப் பகுதியிலே கட்டப் பட்டுள்ளன என்றும் - எனவே அந்த இடத்தை கடற்கரை ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட பகுதி 2 என்று எடுத்துக் கொண்டு - அங்கேயே காமராஜர் மணி மண்டபம் கட்ட அனுமதி அளிக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

நமது தொடர் முயற்சியின் விளைவாக 21-4-1999 அன்று மத்திய அரசின் சார்பில், நாம் கேட்ட இடத்திலேயே காமராஜர் மணிமண்டபம் கட்ட அனுமதி அளித்து ஒப்புதல் வழங்கி "பேக்ஸ்" மூலமாகவே தெரிவித்திருந்தார்கள். பேரவை அப்போது நடைபெற்றுக் கொண்டிருந்த காரணத்தால், இந்தத் தகவலை பேரவையிலேயே நான் அறிவித்தேன்.

காமராஜர் மணி மண்டபம் எழுப்பப்பட்டு, 2000ஆம் ஆண்டு அக்டோபர் முதல் வாரத்தில் அதன் திறப்பு விழாவும் என்னால் நடத்தப்பட்டது. அந்த விழாவில் பேசிய நண்பர் **குமாரதாஸ்,** "டெல்லியிலே ஆள்வது வாஜ்பய் அல்ல - கலைஞர்தான் அங்கே ஆட்சியிலே இருக்கிறார்" என்றார்.

அந்த விழாவிலே நான் பேசும்போது, அதே கன்னியாகுமரி மாவட்டத்தில் பெருந்தலைவர் காமராஜர் பாராளு மன்றத்திற்குப் போட்டியிட்ட நேரத்தில், அவரை எதிர்த்து மத்தியாஸ் சுயேச்சையாகப் போட்டியிட்டதையும், அவரை ஆதரித்து நான் பிரச்சாரம் செய்ததையும், அப்படிப் பிரச்சாரம் செய்த நானே பெருந் தலைவர் காமராஜருக்கு மணிமண்டபம் நிறுவியிருப்பதையும் எடுத்துக்காட்டி, "தமிழ்நாட்டு அரசியலிலே நாம் கட்டிக் காப்பாற்ற வேண்டிய பண்பாடு, நாகரிகம் இதுதான்!" என்றும் கூறினேன். மேலும், பெருந்தலைவர் காமராஜரின் வாழ்க்கையிலே நடைபெற்ற முக்கிய சம்பவங்களையெல்லாம் அங்கே நான் தொகுத்துக் கூறினேன்.

★★★





விருது பெற்ற மேதைகளுடன் விழா மேடையில் பேராசிரியரும், நானும்

அரசியல் துறையில் கட்சி சார்பற்ற முறையில் எப்படி எனக்குப் பல நண்பர்கள் உண்டோ - கலைத் துறையிலேயும் எப்படி பல நண்பர்கள் எனக்கு உண்டோ - அதைப்போலவே தான் பத்திரிகைத் துறையிலேயும் ஆளுங்கட்சியாக இருந்த நிலையிலும், எதிர்க்கட்சியாக இருந்த நிலையிலும் எனக்குப் பல நண்பர்கள் உண்டு. குறிப்பாக அவர்கள் என்னை எதிர்த்து எழுதினாலும், ஆதரித்து எழுதினாலும், அவற்றையெல்லாம் கடந்து தவழ்ந்திடும் நட்பினை நான் பெரிதும் மதித்து எப்போதும் நடப்பவன். அவர்களில் பலர் இன்று மறைந்து போயிருக்கலாம். இருந்தாலும், பத்திரிகைத் துறை நண்பர்கள் ஒருசிலரையாவது நான் உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் -

"இந்து" **ராம்,** எழுத்தாளர் **சாவி,** "தினமணி" **ஏ.என்.சிவராமன்,** "தினத் தந்தி"யின் நிறுவனர் **ஆதித்தனார்,** பிறகு **சிவந்தி ஆதித்தன், ராமச்சந்திர ஆதித்தன்,** "தினகரன்" **கே.பி.கந்தசாமி** - பின்னர் அவரது புதல்வர் **கே.பி.கே. குமரன்,** "விடுதலை" **சம்மந்தம், கலி பூங்குன்றன்,** "விடுதலை" **ராதா,** "கல்கி" **ராஜேந்திரன்,** "ஆனந்தவிகடன்" நிறுவனர் **எஸ்.எஸ்.வாசன்,** அதன் பின்னர் அவரது புதல்வர் **பாலசுப்பிர மணியன்,** "இதயம் பேசுகிறது" **மணியன்,** "இந்து" பார்த்தசாரதி, ராதாகிருஷ்ணன், "கல்கண்டு" ஆசிரியர் **தமிழ்வாணன்,** "நவமணி" **கல்யாணம்,** திருச்சியில் **ராமநரசு, கோபால்,** "எக்ஸ்பிரஸ்" **சம்மந்தம்,** "முரசொலி"யில் **சின்னக் குத்தூசி, க.திருநாவுக்கரசு, அடியார், கயல் தினகரன், சொர்ணம்,**



விழா மேடையில் மாணவ, மாணவிகளுக்குப் பரிசளித்தேன்


சக்திவேலு, சேது, சோலை, ''துக்ளக்'' **சோ, பகவன் தாஸ்,** ''நக்கீரன்'' **கோபால், காமராஜ்,** ''எதிரொலி'' **ராமதாஸ்,** பெங்களூர் ''தினச்சுடர்'' **பா.சு.மணி,** கலைஞர் தொலைக் காட்சி ரமேஷ் பிரபா, டாயல், ''குமுதம்'' **எஸ்.ஏ.பி.** அண்ணா மலை, எழுத்தாளர் **கோபண்ணா,** ''தினத்தந்தி'' சுகுமார், திருவேங்கிமலை **சரவணன்,** ''புதிய தலைமுறை'' **குண சேகரன்,** டெல்லி **பாலாஜி, மாலன்** - என்று நீண்ட பட்டியல் எழுதிக் கொண்டே போகலாம்.

இவர்களில் ஒருவரான பெங்களூர் தினச்சுடர் **பா.சு. மணி,** சென்னைக்கு வந்தால் என்னைச் சந்திக்காமல் போக மாட்டார். நான் என் மகள் **செல்வி** வீட்டில் ஒரு சில நாட்கள் கட்டாய ஓய்வெடுக்க பெங்களூருக்கு அழைத்துச் செல்லப் பட்டால், அங்கே ஒவ்வொரு நாளும் என்னைச் சந்தித்து, அளவளாவி மகிழ்ந்திட மணி தவறவே மாட்டார். **பா.சு.மணி** அவர்கள் பத்திரிகை ஆசிரியர் மாத்திரமல்ல - சென்னையிலே மாநிலக் கல்லூரியிலே தமிழ் மொழியிலே பட்ட மேற்படிப்பு படித்தவர். ''தினத்தந்தி''யிலே ஆதித்தனாருடைய வழிகாட்டலில் பிழை திருத்துவபராக பத்திரிகைத் தொழிலைத் தொடங்கி, செய்தியாளராக உயர்ந்து, பிறகு பத்திரிகை ஆசிரியராக இன்றளவும் புகழ்க்கொடி நாட்டி வருபவர். அவர் 99ஆம் ஆண்டு மார்ச் திங்களில் என்னை அணுகி, அவர் எழுதிய


''செய்தி பிறந்த கதை'' என்ற நூலினை நான் வெளியிட வேண்டுமென்று வலியுறுத்தி, அதன் பேரில் 2-4-1999 அன்று கலைவாணர் அரங்கத்தில் அந்த நூலினை நான் வெளியிட்டேன். முதல் பிரதியை பெங்களூர் தமிழ்ச் சங்கத் தலைவர் **சண்முகவேல்** பெற்றுக் கொண்டார். நிகழ்ச்சியில் கர்நாடக மாநில செய்தித் துறை அமைச்சராக இருந்த **எம்.பி. பிரகாஷ்,** கர்நாடக மாநில உயர்நீதி மன்ற நீதிபதியாக இருந்த **வள்ளி நாயகம்,** ''தினமணி'' **ஏ.என். சிவராமன்,** ''மாலை முரசு'' ஆசிரியர் **ராமச்சந்திர ஆதித்தன்,** ''தினமலர்'' **கிருஷ்ணமூர்த்தி,** ''கல்கி'' **ராஜேந்திரன்,** ''தினகரன்'' **குமரன்** ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

அந்த விழாவில் உரையாற்றிய பா.சு. மணி அவர்கள், அந்த விழாவிற்கு முதல் நாள் விடியற்காலையில் நான் கோட்டைக்குச் சென்றது குறித்தும், புழல் ஏரிக்குச் சென்றது குறித்தும், ''விடியற்காலை 4 மணி அளவில் கோட்டைக்குச் சென்ற முதல்வர் கோட்டைச் சாவியையும் அவரே கையில் எடுத்துக் கொண்டு போனாரோ?'' என்று கேட்டார்.

நான் பேசும்போது, ''கோட்டைச் சாவி என்னிடத்திலே இல்லை - அது மக்கள் இடம்தான் இருக்கிறது - அந்த மக்கள்



இருங்காட்டுக் கோட்டையில், 525 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்ட 'செயின்ட் கோபைன்' கண்ணாடி தொழிற்சாலையைத் துவக்கி வைத்தேன்!



நாகர்கோயிலில் ப.ஜீவானந்தம் அவர்களின் மணி மண்டபத்தை திறந்து வைத்து மரியாதை செலுத்தினேன்!

திறந்து விட்டால்தான் கோட்டைக்குள்ளே யாரும் போக முடியும்'' என்று கூறினேன்.

மேலும் அவர் பேசும்போது, பத்திரிகைத் துறையில் சிங்கம் போல பலர் இருக்கும் போது, கொசுபோல் அவர் இருப்பதாகக் குறிப்பிட்டுக் கொண்டார். அதைப்பற்றியும் நான், ''மனிதன் சிங்கத்திற்குக்கூடப் பயப்படுவதில்லை - ஆனால் கொசுவிற்குத் தான் அதிகம் பயப்படுவான்'' என்று சிரிப்பினிடையே கூறினேன். மணி அவர்களின் அந்த நூல் வெளியீட்டு விழாவில் பல பத்திரிகையாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள் என்பதும் நினைவிலே கொள்ளத்தக்கது.

★★★

அந்த நூல் வெளியீட்டு விழாவிற்கு மறுநாள், சென்னை **பகவான் மகாவீர்** அறக்கட்டளை சார்பில், டெல்லியில் நடை பெற்ற விழா ஒன்றிலே கலந்து கொண்டு, அகிம்சை மற்றும் புலால் உண்ணாமைக் கொள்கையில் சீரிய முறையில் தொண் டாற்றிய மத்திய அமைச்சர் திருமதி **மேனகா காந்திக்கு** அறக்கட்டளை சார்பில் விருதினை வழங்கி உரையாற்றினேன். மராட்டிய மாநில முன்னாள் ஆளுநர் பெரியவர் **சி.சுப்ரமணியம்** அவர்களும், மகாவீரர் அறக் கட்டளையின் அறங்காவலர் **சுகல்சந்த் ஜெயின்** அவர்களும் அந்த விழாவிலே கலந்து கொண்டனர்.

★★★

21-8-1999 அன்று சென்னை கடற்கரையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பிரதமர் வாஜ்பய் அவர்களும்,

நானும், டாக்டர் **ராமதாஸ்**, **வைகோ**, **திருநாவுக்கரசர்** போன்றவர்களும் கலந்து கொண்டோம். பிரதமர் வாஜ்பாய் அன்றைய தினமே டெல்லி திரும்ப வேண்டியிருந்ததால், அந்தக் கூட்டத்தில் நான் நீண்ட நேரம் பேசவில்லை.




டெல்லியில் நடைபெற்ற பகவான் மகாவீர் அறக்கட்டளை விழாவில் நிதியமைச்சர் சி.சுப்பிரமணியத்துடன் நான்!

அந்தக் கூட்டத்தில் பிரதமர் வாஜ்பய் பேசும்போது -

❁ "தி.மு.க. ஏற்பாடு செய்த இந்த மாபெரும் கூட்டத்தில் - மேடையிலும், எனக்கு முன்னாலும் ஒரு மகத்தான ஒற்றுமையையும், உறுதிப்பாட்டையும் நான் பார்க்கிறேன். எனக்கு முன்னால் ஒரு மக்கள் கடலைப் பார்க்கிறேன். அந்தக் கடல் மெரினா கடற்கரையிலே மோதும், மாபெரும் கடலைப் போன்று காட்சி அளிக்கிறது. மேடையில் உறுதிப்பாட்டையும், ஒற்றுமையையும் நான் காண்கிறேன். இங்கே தமிழ்நாட்டில், தி.மு.க. தலைமையில் இயங்குகின்ற, கூட்டணியைச் சேர்ந்த பா.ம.க., ம.தி.மு.க., தமிழக ராஜீவ் காங்கிரஸ், எம்.ஜி.ஆர். அ.தி.மு.க., எம்.ஜி.ஆர். கழகம், பா.ஜ.க. - ஆகிய கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகளின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் நான் இங்கே பார்க்கிறேன்.

❁ "மேடையிலும், மேடைக்கு முன்னாலும் இந்த பிரம்மாண்டமான காட்சிக்கு, காரணமானவர் யார் என்றால் - இது யாரால் சாத்தியம் ஆயிற்று என்றால் - தி.மு.கழகத்தின் உயர்ந்த தலைவர், தமிழகத்தினுடைய முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களால்தான்.

❁ "அ.இ.அ.தி.மு.க. எங்களுடைய அரசைக் கவிழ்ப்பதற்கு முயற்சி மேற்கொண்ட நேரத்தில், இதே தமிழ்நாடுதான் எங்களுக்கு உதவிட வந்தது. ஆங்கிலத்திலே ஒரு பழமொழி உண்டு. "உற்ற நேரத்திலே உதவுகிறவன் தான்



அகிம்சைக் கொள்கையில் தீவிரமாகப் பணியாற்றிய மேனகா காந்திக்கு விருது வழங்கியபோது, அவர் என்னைச் சந்தித்தார்!

உண்மையான நண்டன்" என்று. அந்தப் பழமொழியை நான் இன்று நினைவு கூர்கிறேன்.

❁ "என்னுடைய நினைவுகள் ஏப்ரல் மாதம் 17ஆம் தேதி அன்று, நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்குச் செல்கின்றன. மிக முக்கியமான அந்த நேரத்திலே தி.மு.க. தானாகவே முன் வந்து - எந்தவித நிபந்தனையும் இன்றி - தங்களுடைய ஆதரவை எங்களுக்கு அளித்தது. ஏன் அவர்கள் ஆதரித்தார்கள் - ஏன் தி.மு.க. ஆதரித்தது என்றால், நாட்டினுடைய இதர பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் எப்படி கொதித்துப் போனார்களோ, அதைப் போலவே தி.மு.க.வைச் சேர்ந்தவர்களும் கொதித்துப் போனார்கள். ஏனென்றால், அ.தி.மு.க. மக்கள் தந்த வாக்குறுதியை நிலை குலைப்பதற்கு முடிவு எடுத்ததுதான்.

❁ "உங்களுக்கெல்லாம் நன்கு தெரியும், எங்களுடைய ஆட்சி அமைவதற்கு முன்பாகவே அ.தி.மு.க. தலைவர் ஜெயலலிதா எப்படி நடந்து கொண்டார் என்பது! அ.தி.மு.க., பா.ஜ.க.வோடு கூட்டு சேர்ந்து தேர்தலிலே போட்டியிட்டிருந்தாலும், அவர்கள் குடியரசுத் தலைவருக்குக் கடைசி விநாடிவரையிலே தங்கள் ஆதரவுக் கடிதத்தைக் கொடுப்பதற்கு மறுத்து வந்தார்கள். அதற்குப் பிறகும், எங்கள் ஆட்சி டெல்லியிலே உருவான பிறகுகூட, அ.தி.மு.க. தலைவர் முதல் நாளிலிருந்து எங்களுக்குத் தொந்தரவு கொடுக்க ஆரம்பித்தார். ஒவ்வொரு வாரமும் தவறாமல் ஜெயலலிதா ஏதாவது ஒரு அறிக்கையைக் கொடுத்துக் கொண்டே இருப்பார். அந்த அறிக்கை எங்கள்

அரசின், எங்கள் கூட்டணியின் ஒற்றுமையைப் பலகீனப் படுத்தியது.

❁ ‘‘சுதந்திர தினம் என்பது இந்த நாட்டிற்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த புனிதமான நாள் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். அந்த நேரம், அவர் எங்கள் அரசுக்குத் தந்த ஆதரவைத் திரும்பப் பெறுவதாக மிரட்டினார். என்னுடைய அரசியல் வளர்ச்சியிலே மிகவும் கஷ்டமான காலம் அ.தி.மு.க.வோடு நாங்கள் கூட்டாக இருந்த நேரம்தான்!

❁ ‘‘அந்த அம்மையார் இப்படி செய்வதற்குக் காரணம் என்ன? தமிழ்நாட்டு மக்கள் கூடியிருக்கின்ற இந்த முக்கிய மான பொதுக்கூட்டத்தில் அந்த அம்மையாருக்குப் பின்னணியில் இருந்த முக்கியமான இரண்டு காரணங்களைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

❁ ‘‘முதலாவதாக, ஜெயலலிதா தன்மீது போடப் பட்டிருக்கிற - பல்வேறு நீதி மன்றங்களிலே தொடரப் பட்டிருக்கிற ஊழல் வழக்குகளையெல்லாம் வாபஸ் பெற வேண்டும் - என்று கூறினார். அதைப்போலவே, தன்மீது மத்திய அரசினால் தொடங்கப்பட்டிருக்கிற அந்த புலன் விசாரணையையும் நிறுத்த வேண்டும் என்று வற்புறுத் தினார். இரண்டாவதாக, அவர் எங்களை வற்புறுத்திய தெல்லாம் தமிழ்நாட்டில் தி.மு.க. அரசை டிஸ்மிஸ் செய்ய வேண்டும் - என்பதுதான்! ஆனால், நாங்கள் இரண்டையும் செய்ய முடியாது என்று மறுத்துவிட்டோம். அவர் களுடைய அந்த ‘‘பிளாக் மெயிலுக்கு’’ நாங்கள் உடன்பட முடியாது என்று மறுத்து விட்டோம்.’’

- இவ்வாறு வாஜ்பய் அவர்கள் அன்று பேசியது என்றைக்கும் பழைய ஏடுகளில் உள்ள மறைக்க முடியாத - யாராலும் மறுக்க முடியாத செய்தியாகும்.

★★★

அந்தத் தேர்தலில் வெற்றி பெற்று, திராவிட முன்னேற்றக் கழகம் அங்கம் பெற்ற தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி,



'கல்கி' அவர்களின் ''பொன்னியின் செல்வன்'' ஆங்கில நூலைக் கலைவாணர் அரங்கத்தில் வெளியிட்டேன்.

வாஜ்பய் தலைமையில் மத்தியில் பதவிப் பொறுப்பேற்றது. மத்திய அமைச்சரவையில் தி.மு.கழகத்தின் சார்பில் **முரசொலி மாறன், டி.ஆர்.பாலு** ஆகியோர் காபினட் அமைச்சர்களாகவும், **ஆ.இராசா,** இணை அமைச்சராகவும் நியமிக்கப்பட்டனர். பா.ஜ.க. சார்பில் ரெங்க **ராஜன் குமாரமங்கலம்,** ம.தி.மு.க. சார்பில் **மு.கண்ணப்பன், செஞ்சி ராமச்சந்திரன்,** பா.ம.க. சார்பில் **என்.டி. சண்முகம், பொன்னுசாமி** ஆகியோர் அமைச்சர்களாயினர். அந்தத் தேர்தலில் வெற்றி வாய்ப்பினை இழந்த காங்கிரஸ் கட்சியின் தலைவர் திருமதி **சோனியா காந்தி** பெருந்தன்மையோடு,'' நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்ட தோல்விக்கு நான் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன் - அதற்காகக் கட்சி என்மீது என்ன நடவடிக்கை எடுத்தாலும் ஏற்றுக் கொள்வேன்'' என்று கூறியதோடு, அமைச்சர்கள் பதவியேற்ற நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டார். ''மத்திய அமைச்சரவையில் தமிழகத்துக்கு எட்டு அமைச்சர் பதவிகள் கொடுக்கப்பட்டுள்ளன'' என்றும் - அதில் ''தி.மு.க. அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள துறைகள் முழுத் திருப்தி அளிப்பதாக உள்ளன'' என்றும் - என்னிடம் செய்தியாளர்கள் கேட்டதற்கு பதில் கூறினேன்.

★★★

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுற்ற சில நாட்களில், வங்காள விரிகுடாக் கடலில் உருவான பயங்கரப் புயல் ஒன்று ஓரிசா மாநிலத்தைத் தாக்கி, வரலாறு காணாத அளவில் மிகப்பெரிய சேதத்தை ஏற்படுத்தியது. 25 இலட்சம் வீடுகள் இடிந்து நொறுங்கின! சுமார் 5 ஆயிரம் பேருக்கு மேல் மடிந்தார்கள்!

புயல் சேதத்தை நேரில் பார்வையிட மத்திய உள்துறை அமைச்சராக இருந்த **அத்வானி**, ராணுவ அமைச்சராக இருந்த **ஜார்ஜ் பெர்ணாண்டஸ்,** சுரங்க அமைச்சராக இருந்த **நவீன் பட்நாயக்** ஆகியோர் தனி விமானத்தில் ஒரிசா சென்றபோது - புவனேசுவரத்தில் தரை இறங்க முயற்சித்தபோது முடியாமல், மேற்கு வங்கம் சென்று கலைகுண்டா விமானப் படைத் தளத்தில் விமானம் இறக்கப்பட்டு, அங்கிருந்து ஹெலி காப்டரில் அவர்கள் ஒரிசா புறப்பட்டுச் சென்றனர்.

ஒரிசா மாநில புயல் நிவாரண நிதியாக, இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழகத்தின் சார்பாக 50 இலட்சம் ரூபாயை, அப்போது ஒரிசா மாநில முதல்வராக இருந்த **கிரிதர் கோமாங்** அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். தொலை பேசியில் என்னைத் தொடர்பு கொண்டு, அவர் ஒரிசா மாநில மக்கள் சார்பில் நன்றி தெரிவித்தார்.

மேலும், ஒரிசா மாநில புயல் வெள்ள நிவாரண நிதிக்கு தமிழ்நாட்டு மக்கள் நிதி உதவி செய்ய வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்தேன். ஒரிசா புயல் வெள்ள நிவாரணப் பணிக்கு 45 கோடி ரூபாய் மதிப்புக்கு மேற்பட்ட வேட்டி-சேலைகளை அனுப்பியதோடு, தமிழகத்திலிருந்து மருத்துவக் குழு ஒன்றும் சென்றது. நிவாரணப் பொருட்கள் எடுத்துச் செல்லும் வேகன்களை நானே சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு நேரில் சென்று அனுப்பி வைத்தேன்.

★★★

'கல்கி' அவர்கள் எழுதிய **"பொன்னியின் செல்வன்"** நாவலினை **சி.வி. கார்த்திக் நாராயணன்** அவர்கள் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்து - மாக்மில்லன் இந்தியா நிறுவனப் பதிப்பகத்தின் சார்பில் அச்சிடப்பட்டது - அதை நான் 6.11.1999 அன்று கலைவாணர் அரங்கில் வெளி யிட்டேன். அதன் முதல் பிரதியினை 'கல்கி' **ராசேந்திரன்** பெற்றுக் கொண்டார். டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் **லலிதா காமேசுவரனும்,** உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன முன்னாள்

இயக்குநர் டாக்டர் **சிலம்பொலி செல்லப்பனும்** அந்த விழாவிலே கலந்து கொண்டனர்.

★★★

சுதந்திரப் போராட்ட வீரரும், சிறந்த வழக்கறிஞரும், ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறந்த சொற்பொழிவாளரும், பேரறிஞர் அண்ணா அவர்களின் கல்லூரித் தோழரும், என்னிடம் மிகுந்த அன்பு கொண்டிருந்தவருமான தியாகி **செங்கல்வராயன்** அவர்கள் தனது 92வது வயதில், 8-11-1999 அன்று இயற்கை எய்தினார்.

வழக்கறிஞர் பட்டம் பெற்றிருந்தும், இளமைக் காலத்தை சுதந்திரப் போராட்டத்தில் செலவிட்ட செங்கல்வராயன் அவர்கள், நாடு சுதந்திரம் பெற்ற பிறகு தான் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டார். மாவட்டக் காங்கிரஸ் தலைவராக தீரர் சத்தியமூர்த்தி இருந்தபோது, செயலாளராக இருந்த செங்கல்வராயன் பின்னர் தலைவரானார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் செயலாளரானார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர், சென்னை மாநகர மேயர் (1952), மாநிலங்களவை உறுப்பினர் (1964-1972) ஆகிய பதவிகளில் இருந்தார். 1939-40இல் தனி நபர் சத்தியாகிரகம் நடைபெற்றபோது சிறைவாசம் அனுபவித்தார். ''கவிக்குயில்'' சரோஜினி நாயுடு, பண்டித ஜவகர்லால் நேரு ஆகியோரின் பாராட்டையும், காந்தி அடிகளின் அன்பையும் பெற்ற இவர் தீரர் சத்தியமூர்த்தியையும், பெருந்தலைவர் காமராஜரையும் தனது வழிகாட்டியாகக் கொண்டு செயல்பட்டார்.

என்னுடைய ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் அவர் வரத் தவறியதே இல்லை. அவருடைய குடும்பத்தினர் அனைவரும் என்னிடமும், என்னுடைய குடும்பத்தாரிடமும் மிகுந்த அன்போடு பழகக் கூடியவர்கள். அவர் மறைந்தபோது, நான் எழுதிய இரங்கல் செய்தியில் -

''வாழ்வாங்கு வாழ்ந்த தியாகச் சுடர் - விடுதலைப் போராட்ட தளநாயகர்களில் தலைச் சிறந்தவர் - பதவி எதுவும் வேண்டுமென்று விரும்பிடாத பண்பின் பெட்டகம் - காந்தி

அடிகளின் அன்பையும், காமராஜரின் நேசத்தையும் பெற்ற தோடு - அறிஞர் அண்ணாவின் கல்லூரித் தோழராகவும் - அதனைக் கடைசிவரையில் மறவாத தூய நண்பராகவும் விளங்கிய மனித நேயப் பேரறிஞர் - என்னுடைய ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் நேரில் வந்து வாழ்த்துரைத்த அன்பு வள்ளல் - என் குடும்பத்துப் பெரியவராக, பெரும் தலையாக விளங்கிய வித்தகர் - அரசியலில் எவருக்கும் தலைதாழாச் சிங்கமாக உலவியவர் - என் நெஞ்சில் என்றும் நீங்கா இடம் பெற்ற உத்தமத் தியாகி செங்கல்வராயன் அவர்கள் மறைந்து விட்டாராம் - என்னால் நம்ப முடியவில்லை - தன்மானத் தமிழர்கள் உள்ளம் எல்லாம் நீக்கமற நிறைந்து விட்டார் என்பதே உண்மை!'' என்று குறிப்பிட்டதோடு, என்னை நானே தேற்றிக் கொண்டேன்.


★★★

ஜெயலலிதாவின் மீதான டான்சி வழக்கு 3வது தனி நீதி மன்றத்தில் அப்போது விரைவாக நடைபெற்றுக் கொண் டிருந்தது. ஜெயலலிதா ஆட்சியின் போது தமிழகத்தின் தலைமைச் செயலாளராக இருந்த **திரு. டி.வி. வெங்கட்ராமன்** 11-11-1999 அன்று தனி நீதி மன்றத்தில் சாட்சியம் அளித்த போது -

- ''1991 ஜூன் முதல் 1994ஆம் ஆண்டு மே மாதம் முடிய தமிழக அரசின் தலைமைச் செயலாளராகப் பணியாற்றி னேன். ஜெயா பப்ளிகேஷனுக்கு டான்சி நிலத்தை விற்பதற்கான அரசாணை 20-1-1992 அன்று பிறப்பிக்கப் பட்டது. டான்சி எனாமல் யூனிட்டை விற்பதற்கான ஆணை 18-2-1992 அன்று பிறப்பிக்கப்பட்டது. இந்த நிலத்தை விற்பதிலும், வாங்குவதிலும் முதல்வர் ஜெயலலி தாவுக்குத் தொடர்பு இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டேன். அரசு சொத்துக்களை முதல்வரோ - அவருடைய நிறுவனங்களோ வாங்குவது பொருத்தமாக இருக்காது என்றும், அந்த அரசாணைகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறினேன். அதில் ஈடுபடுவது

சரியாக இருக்காது என்பதால், "அந்த இரண்டு ஆணைகளை ரத்து செய்துவிடலாம்" என்றேன்.

❁ "ஆனால் நான் சொன்னதை ஜெயலலிதா ஏற்கவில்லை. "மற்ற முதல்வர்களுக்கு இதைப் போலச் சொல்வீர்களா?" - என்று கோபமாகப் பேசினார். நான் அவரது அறையிலிருந்து வெளியேறி விட்டேன்" என்று கூறியது அனைத்து ஏடுகளிலும் அப்போதே இது செய்தியாக வெளிவந்தது.



வாஜ்பய்

அந்தக் காலக் கட்டத்தில் தொழில் துறை செயலாளராக இருந்த ஐ.ஏ.எஸ். அதிகாரியான **லத்திகா படால்கர்** நீதி மன்றத்தில் சாட்சியம் அளித்தபோது, "ஜெயா பப்ளிகேஷன்ஸ் குறிப்பிட்ட விலை மிகவும் குறைவு. அங்கிருந்த கட்டிடத்தையும் ரூ.19.20 லட்சத்துக்கு வாங்குவதற்காக ஜெயா பப்ளிகேஷன்ஸ் விண்ணப்பித்திருந்தது. பொதுப்பணித்துறை இக்கட்டடத்துக்கு நிர்ணயித்திருந்த விலையைவிட இது மிகவும் குறைவு. ஒரு நாள் ஊரகத் தொழில் துறை அமைச்சர் **முகமது ஆசிப்** என்னைக் கூப்பிட்டு அனுப்பினார். "சொத்தை விற்பது தொடர்பாக முதல்வர் ஜெயலலிதாவுக்கு நான் எழுதியிருப் பதை நீக்க வேண்டும்" - என்று கூறினார். நான் எனது இயலாமையை அவருக்குத் தெரியப்படுத்தினேன். ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் என்பவர்கள் அமைச்சருக்கு நண்பராகவும், குருவாகவும், வழிகாட்டியாகவும் இருக்க வேண்டியவர்கள். அந்த உறவில் சிக்கல் ஏற்பட்ட பிறகு, தொடர்ந்து அமைச் சருடன் பணியாற்றுவதில் பலனில்லை என்பதால் விடுப்பில் சென்றேன். 30 நாட்கள் கழித்து நான் பணியில் சேர்ந்த போது என்னைவிட ஆறு ஆண்டுகள் பணியில் இளையவரான பூரணலிங்கம் பணியாற்றிய மீன் வளத்துறை ஆணையராக நியமிக்கப்பட்டேன்.

☸ ''விடுப்பில் இருந்தபோது என்னுடைய வீட்டின் முன்னால் ஒரு போலீஸ்காரர் நிறுத்தப்பட்டார். பத்திரிகையாளர்களை நான் சந்திக்கிறேனா என்பதைக் கண்காணிக்கத்தான் அவர் நியமிக்கப்பட்டார் என்று அறிந்து கொண்டேன்'' என்று கூறிய சாட்சியம் ஏடுகளில் எல்லாம் இடம் பெற்றது.

9-10-2000 அன்று மூன்றாவது சிறப்பு நீதிமன்ற நீதிபதி பி. அன்பழகன் அளித்த தீர்ப்பில், அரசுக்குச் சொந்தமான டான்சி யின் நிலத்தை ஜெயா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்துக்கு வாங்கிய வழக்கில் 3 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ரூ. 40 ஆயிரம் அபராதமும் - சசி எண்டர் பிரைசஸ் நிறுவனத்துக்கு வாங்கிய வழக்கில் 2 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் ரூ. 20 ஆயிரம் அபராதமும் விதிக்கப்பட்டது. இந்த இரு நிறுவனங்களிலும் ஜெயலலிதாவும், சசிகலாவும் பங்குதாரர்கள்.

இரு வழக்குகளிலும் மொத்தம் 5 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. இருப்பினும், ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் என்பதால், சிறையில் இருக்க வேண்டிய ஆண்டுகள் மூன்று! இருவரும் பத்தாயிரம் ரூபாய் சொந்த ஜாமீனில் உடனடியாக விடுவிக்கப்பட்டனர். உயர் நீதி மன்றத்தில் அப்பீல் செய்வதற்கு வசதியாக, நவம்பர் 7ஆம் தேதிவரை தண்டனையை நிறுத்தி வைப்பதாகவும் நீதிபதி தெரிவித்திருந்தார்.

இந்தத் தீர்ப்பிலேதான் நீதிபதி அன்பழகன் அவர்கள், ''கிரயப் பத்திரத்தில் உள்ளது தனது கையெழுத்து அல்ல - போலியானது என்று முதல் எதிரியான ஜெயலலிதா கூறியிருப்பது பொய்! தன்னுடைய பின் யோசனை காரணமாக இவ்வாறு அவர் கூறியிருப்பது விசாரணையில் தெளிவாகி யுள்ளது'' என்று குறிப்பிட்டிருந்தார். இப்படிப்பட்ட தீர்ப்பு களுக்கும், தண்டனைகளுக்கும் உரியவர்தான், பின்னர் நடை பெற்ற பொதுத் தேர்தல்களில் வெற்றி பெற்று, தமிழகத்தின் முதல் அமைச்சராகவும் வந்ததோடு, மற்றவர் மீதெல்லாம் பொய்ப் புகார்களை சுமத்தி நடவடிக்கை எடுத்து வருகிறார்.

★★★

இந்தத் தீர்ப்புக்குப் பிறகு தமிழக மெங்கும் அ.தி.மு.க.வினர் கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர். ஆங்காங்கு வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றன. 10-10-2000 தேதிய "தினமணி" நாளேடு எழுதிய தலையங்கத்தில் -

- "ஜெயலலிதாவைப் பொறுத்த அளவில் ஊழல்கள் சம்பந்தமான வழக்கில் அவர் தண்டனைக்கு உள்ளாகியிருப்பது இது இரண்டாவது தடவை. ஏற்கனவே கொடைக்கானல் "பிளசண்ட் ஸ்டே" ஓட்டலுக்கு அனுமதி அளித்ததில் முறைகேடாக நடந்து கொண்டதற்காக அவருக்குத் தனி நீதி மன்றம் ஓராண்டு கடுங்காவல் தண்டனை வழங்கியுள்ளது. தற்போதைய வழக்கில் ஜெயலலிதா செய்து கொள்ளக்கூடிய மேல்முறையீட்டு மனு விசாரணையில் - தனி நீதி மன்றத்தின் இத்தீர்ப்பு ரத்து செய்யப்பட்டாலொழிய, ஜெயலலிதா அடுத்த 6 ஆண்டுக் காலத்துக்கு தேர்தலில் போட்டியிட முடியாது.

- "இது ஒருபுறமிருக்க, ஜெயலலிதாவுக்கு எதிராக மேலும் மூன்று ஊழல் வழக்குகள் தற்பொழுது தனி நீதி மன்றங்களில் விசாரணையில் இருந்து வருகின்றன. ஜெயலலிதாவையும், சசிகலாவையும் பங்குதாரர்களாகக் கொண்ட ஜெயா பப்ளிகேஷன்ஸ் என்ற நிறுவனம் - ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த சமயத்தில், 1992ல் டான்சிக்குச் சொந்தமான நிலத்தையும் கட்டிடத்தையும் சட்டத்துக்குப் புறம்பாக மிகக் குறைந்த விலைக்கு வாங்கியதாகத் தொடரப்பட்ட இவ்வழக்கில் விசாரணையை முடக்குவதற்குப் பலப்பல உத்திகள் கையாளப்பட்டன. ஊழல் வழக்குகள் அரசியல் நோக்கத் துடன் தொடரப் பட்டவை என்று ஜெயலலிதா சகட்டு மேனியாகக் குறை கூறுவதில் அர்த்தமில்லை. பொய் வழக்கு என்றால், நீதி மன்ற விசாரணைப் பீடத்தில் நிற்க முடியுமா?

- "எனவே தனி நீதி மன்றம் அளித்துள்ள தீர்ப்பை ஜெயலலிதா அடக்கத்துடன் ஏற்றுக் கொண்டு சட்ட ரீதியாக மேல் நடவடிக்கை எடுப்பதுதான் முறையாகும். எனினும், தீர்ப்பு வெளியான சிறிது நேரத்திற்குள்ளாகவே

தமிழகத்தில் பல இடங்களில் அ.தி.மு.க.வினர் சாலை மறியல் போன்ற கிளர்ச்சிகளில் ஈடுபட்டிருப்பதாகத் தகவல்கள் வந்துள்ளன. இது எந்த விதத்திலும் முறையாகாது. எனவே தனது கழகத்தவரை நெறிப்படுத்துவதில் ஜெயலலிதா முழு முனைப்புக் காட்டுவது அவசியம்'' - என்று எழுதியது; ஆம் - தினமணி!


★★★

அ.தி.மு.க. தலைவர்களில் ஒருவராக அப்போதிருந்த முன்னாள் சட்டப் பேரவைத் தலைவரான **க. ராஜாராம்,** *12-10-2000* அன்று விடுத்த ஓர் அறிக்கையில், ஜெய லலிதா தன் கையெழுத்தையே இல்லை என்று மறுத்ததையும், நீதிபதி அது பொய் என்று தீர்ப்பில் கூறியதையும் எடுத்துக் காட்டி, ''தன் கையெழுத்தையே இல்லை என்று மறுத்தவர் பதவியில் இருந்தபோது, கோப்புகளில் போட்ட கையெழுத்துக்களின் நிலை என்ன'' என்று கேட்டதோடு - ''அ.தி.மு.க.வில் இருந்தே ஜெயலலிதாவை தொண்டர்கள் நீக்கி வைக்க வேண்டும்!'' என்றும் குறிப்பிட்டார்.

4. வழக்கும் - வரையற்ற வன்முறையும்!

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி எவ்வெப்போ தெல்லாம் தமிழகத்தில் நிர்வாகப் பொறுப்பில் இருந்ததோ, அப்போதெல்லாம் விவசாயிகளுக்கு எந்தெந்த வகையில் எல்லாம் உதவிகளைச் செய்ய முடியுமோ, அந்த வகையில் உதவிகளைச் செய்து வருவதை தமிழ்நாட்டு மக்கள் நன்கறி வார்கள்.

விவசாயிகளுக்காக தி.மு.கழக அரசில் தீட்டப்பட்ட திட்டங் களில் ஒன்றுதான் "உழவர் சந்தைகள்". விவசாயிகள் உற்பத்தி செய்யும் காய்கறிகள், பழங்களை, இடைத்தரகர்கள், வணிகர்கள் குறுக்கீடு இல்லாமல், உழவர்களே நேரடியாக நுகர்வோருக்கு விற்பனை செய்ய இந்த உழவர் சந்தைகள் மூலமாக வழி வகை செய்யப்பட்ட திட்டம்தான் உழவர் சந்தைகள் திட்டம். விவசாயிகளிடமிருந்து மொத்த வியாபாரிகள் குறைந்த விலைக்கு காய்கறிகளை வாங்கி, அவற்றை லாபம் வைத்து, சில்லரை வியாபாரிகளுக்கு விற்பனை செய்து - அந்தச் சில்லரை வியாபாரிகள் மேலும் லாபம் வைத்து விற்க, அதனைப் பொது மக்கள் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலைமை முன்பு இருந்தது.



அதனால் காய்கறிகளை உற்பத்தி செய்த விவசாயிகள் குறைந்த விலையே பெறும் அதே நேரத்தில், பொது

மக்களும் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலைமை இருந்து வந்தது. அந்த நிலையைப் போக்க கழக அரசினால் கண்டுபிடிக்கப்பட்ட திட்டம்தான் உழவர் சந்தைகள் திட்டம். இவற்றை அமைத்ததின் காரணமாக இடைத் தரகர்களுக்கு வழியில்லாமல் செய்யப்பட்டது.

உழவர் சந்தைகளுக்குக் காய்கறிளை விற்பதற்காகக் கொண்டுவரும் விவசாயிகளுக்கு அரசின் சார்பில் புகைப் படத்துடன் கூடிய அடையாள அட்டைகள் வழங்கப் பட்டன. விவசாயிகள் அந்த அடையாள அட்டையைக் காட்டி, அரசுப் பேருந்துகளில் இலவசமாகக் காய்கறி மூட்டைகளைக் கொண்டு வரலாம். அதற்குச் சுமைக் கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது.

சந்தைகளில் விற்பனை செய்யும் காய்கறிகளுக்கு முன்கூட்டியே விலை நிர்ணயம் செய்யப்படும். அவ்வாறு விலை நிர்ணயம் செய்வதற்கு ஒரு குழு அமைக்கப்படும். அந்த நிர்ணய விலை விவரம் ஒவ்வொரு கடையின் முன்னும் எழுதிப் போடப்படும். எனவே உழவர்கள் அதிக விலைக்கு விற்க முடியாது. பொது மக்கள் குறைந்த விலைக்குக் காய்கறி களை வாங்கிச் செல்லலாம்.

1999ஆம் ஆண்டு நவம்பர் 14ந் தேதியன்றுதான் தமிழகத்தில் முதலாவது உழவர் சந்தை மதுரை மாநகரில் என்னால் தொடங்கி வைக்கப்பட்டது. தமிழகத்தில் 100 உழவர்



முதல் உழவர் சந்தையை மதுரையில் துவக்கி வைத்த நான்,
100வது சந்தையைப் பல்லவபுரத்தில் துவக்கினேன்!



இடைத் தரகர்களின் குறுக்கீடு இல்லாமல் குவிந்திருக்கும் காய்கறிகள்.

சந்தைகள் தொடங்கப்பட வேண்டுமென்ற குறிக் கோளோடு தொடங்கப்பட்ட அந்த உழவர் சந்தைகள் தற்போது 100க்குமேல் உள்ளன. அந்த உழவர் சந்தைகளை அ.தி.மு.க. ஆட்சியிலே சரியாகப் பராமரிக்கப்படாத நிலை இருந்தபோதிலும், கழக ஆட்சி நடைபெறும் போதெல்லாம் அந்த உழவர் சந்தைகள் சிறப்பாக நடைபெற்று, உழவர்களும், பொது மக்களும் பயன்படுகின்ற அளவிற்கு நடந்து வருகின்றன.

அந்த உழவர் சந்தைகள்பற்றி 16-11-1999 தேதியிட்ட ''தினமணி'' நாளிதழில், ஒரு தலையங்கமே பாராட்டி எழுதியிருந்தது. அதன் முக்கிய பகுதிகள் வருமாறு :-

- ''விவசாய வளத்தில் அகில இந்திய அளவில் பஞ்சாபுக்கு அடுத்தபடியாக நல்ல முன்னேற்றத்தைக் கண்டுள்ள மாநிலம் தமிழகமே. வேளாண்மை வளர்ச்சிக்கு நிதி உதவி புரிவதற்கென்றே தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியாகிய 'நபார்டு' தோன்றிய பிறகு, விவசாயத் துறையில் புதிய சகாப்தமே ஆரம்பித்துள்ளது. பல வகையான கூட்டுறவு வங்கிகள் மூலம், எளிய விவசாயிகளுக்கு வேளாண்மை சார்ந்த பணிகளுக்கு நிதி உதவிகள் வழங்கப்படுகின்றன.

- ''உதாரணமாக காய்கறிச் சாகுபடி, பழச் சாகுபடி, மலர்ச் சாகுபடி, பால் பண்ணை, கோழிப் பண்ணை, ஆடு வளர்ப்பு, பட்டுப் பூச்சி வளர்ப்பு - போன்றவற்றுக்கு உதவிகள் செய்யப்படுகின்றன. ஆயினும் இவற்றை நல்ல விலைக்கு விற்று - ஆதாயமடைவதற்கு ஏற்ற வசதிகள்

அந்த விவசாயிகளுக்கு வாய்க்கவில்லை. அங்காடிகளில் காய்கறிகளும், பழங்களும் நல்ல விலைக்கு விற்கின்றன. ஆனால் அவற்றை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு அதில் ஆதாயம் போய்ச் சேருவதில்லை. விவசாயி களுக்கும், பொது மக்களுக்கும் இடையேயுள்ள மொத்த வியாபாரிகள், சில்லரை வியாபாரிகள், இடைத் தரகர்கள் மூலம் இவை கைமாறி வருகின்றன. அதனால் இடையில் உள்ளவர்களுக்கே கணிசமான ஆதாயம் சென்று விடுகிறது. பொது மக்கள் அதிக விலை தருகிறார்கள். ஆனால் விவசாயிகளுக்குக் கிடைப்பதோ கட்டுப்படியாகாத வருவாயே.

❁ ''இந்த அவலத்தைப் போக்குவதற்குத் தமிழக (தி.மு.க.) அரசு அருமையான திட்டத்தைச் செயற்படுத்தத் தொடங் கியிருப்பது வரவேற்கத்தக்கது. வணிகர்கள் மற்றும் இடைத் தரகர்களின் குறுக்கீட்டுக்கு இடம் இல்லாமல், விவசாயிகள் தங்களுடைய காய்கறிகளையும், பழங் களையும் நுகர்வோருக்கு நேரடியாக விற்பனை செய்து தருவதற்காக உழவர் சந்தைகள் நிறுவப்படுகின்றன. இது எளிய விவசாயிகளுக்கு ஒரு வரப் பிரசாதம்.''

-இவ்வாறு இத்திட்டத்தைப் பற்றி அன்றைய ''தினமணி'' பாராட்டி எழுதியது.

14-11-1999 அன்று மதுரையில் உழவர் சந்தை திறப்பு விழாவில் கலந்து கொண்ட நான், 14-11-2000 அன்று பல்லவபுரத்தில், 100வது உழவர் சந்தையினைத் திறந்து வைத்தேன் என்றால், ஓராண்டு காலத்தில், தமிழகத்தில் 100 உழவர் சந்தைகள் தொடங்கப்பட்டன. அந்த அளவிற்கு ஆர்வத்துடன் அந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

★★★

1999ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில், அமெரிக்காவில் உள்ள சியாட்டல் நகரில் உலக வர்த்தக சபை மாநாடு நடந்தது. அதில் இந்தியாவின் சார்பாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சராக இருந்த தம்பி **முரசொலி மாறன்** கலந்து கொண்டார்.



உலகின் 135 நாடுகளின் சார்பில் பிரதிநிதிகள் பங்கேற்று அந்த மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டினை யொட்டி 2-12-1999 அன்று விருந்து நிகழ்ச்சி நடைபெற்றது. அமெரிக்க அதிபராக அப்போது இருந்த **பில்கிளிண்டனும்,** இந்திய வர்த்தகத் துறை அமைச்சர் முரசொலி மாறனும் அந்த விருந்தின் போது சந்தித்துப் பேசினர். இருவரும் அருகருகே அமர்ந்து, இந்தியாவிற்கு கிளிண்டன் வருகை குறித்தும், இரண்டு நாடுகளின் வர்த்தக உறவுகள் குறித்தும் விவாதித்தனர். பில்கிளிண்டனின் வருகையை இந்தியா வெகு ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக அப்போது முரசொலி மாறன் தெரிவித்தார். அதற்குப் பதிலளிக்கையில், வெகு விரைவில் தாம் இந்தியாவிற்கு வர உள்ளதாக அமெரிக்க அதிபர் தெரிவித்தார்.

அந்த மாநாட்டில் உரையாற்றிய தம்பி மாறன், இந்தியா போன்ற வளரும் நாடுகளின் சாதகமான அம்சங்களை தட்டிப் பறித்துக் கொள்ள வளர்ச்சி அடைந்த நாடுகள் முயற்சிப்பதாகக் கூறினார். சியாட்டல் மாநாட்டின் பிரகடனத்தைத் தயாரிக்க ஐந்து விதமான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த ஐந்து குழுக்களிலும் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் இடம் பெற்றார்.

தொழிலாளர்களின் பிரச்சினைகளை வர்த்தகத்திற்கு நிபந்தனையாக விதிக்க அமெரிக்கா மேற்கொண்ட முயற்சியை இந்தியா உள்ளிட்ட வளரும் நாடுகள் கடுமையாக எதிர்த்தன. ''அதை இறுதிவரை எதிர்த்துப் போராடித் தடுத்து நிறுத்து வோம்'' என்று முரசொலி மாறன் அந்த மாநாட்டிலே உறுதி யாகத் தெரிவித்தார். சீனா, ஜப்பான், சுவீடன், கனடா நாடுகளின் வர்த்தக அமைச்சர்களை முரசொலி மாறன் சந்தித்துப் பேசினார்.

★★★

முதலமைச்சர் ஜெயலலிதா, பெரும்பாலும் அவர் விடுக்கின்ற அறிக்கைகளிலே, தான் ஏதோ புனிதவதி என்பதைப் போலவும், ஊழல் என்றால் என்னவென்றே தெரியாததைப் போலவும் விளம்பரப்படுத்திக் கொள்ளத் தவறுவது இல்லை. எதிர்க் கட்சியினர்மீது வழக்குகளைத் தொடுக்கவும் தவறுவதில்லை. ஆனால் அவரது ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற ஒரு சில வழக்குகளை அவ்வப்போது ஞாபகப்படுத்த வேண்டியது நமது கடமையாகும். அதிலே ஒரு சம்பவத்தை நினைவுபடுத்து கிறேன்.

★★★

சென்னையில் **அமிர்தாஞ்சன்** கம்பெனிக்குச் சொந்தமான வீடும், நிலமும், மைலாப்பூரில் லஸ் அவென்யூவில் இருந்தது. அந்த வீட்டின் உரிமையாளர்களிடமிருந்து அந்த வீட்டையும், நிலத்தையும் ஜெயலலிதாவின் உடன் பிறவா சகோதரி அல்லது தோழி என். சசிகலா, வி.என். சுதாகரன், ஜே. இளவரசி, ஜே.எஸ். ஹவுசிங் டெவலப்மென்ட் லிமிடெட் (அதன் பங்குதாரர் சசிகலா), ஜெயா காண்ட்ராக்டர்ஸ் அண்ட் பில்டர்ஸ் (பங்குதாரர் இளவரசி), ஆஞ்சனேயா பிரிண்டர்ஸ் (தலைவர் வி.என். சுதாகரன்) ஆகிய ஆறு பேருக்கு மார்ச் 1995இல் 54 லட்சம் ரூபாய்க்கு விற்றுள்ளனர்.

அவர்கள் ஆறு பேரும் தலா ஒன்பது இலட்ச ரூபாய் கொடுத்து அந்த வீட்டை வாங்கியதாகக் கணக்குக் காட்டப் பட்டது. வருமான வரிச் சட்டம் 269 யு.சி. பிரிவின்படி, பத்து இலட்சம் ரூபாய்க்கு மேல் சொத்து வாங்கும்போது, வருமான வரித் துறையினரிடம் தடையின்மைச் சான்றிதழ் பெற வேண்டும். இந்தச் சான்றிதழைப் பெறாமல் இருப்பதற்காகத் தான் ஆறு பேர் சேர்ந்து ஒவ்வொருவரும் பத்து இலட்சம் ரூபாய்க்குக் குறைவாக ஒன்பது இலட்சம் ரூபாய் மட்டுமே கொடுத்து சொத்து வாங்கியதாகக் கணக்குக் காட்டப்பட்டது. மேலும், இவர்கள் ஆறு பேரும் ராமாயி அம்மாளுக்கு மொத்தம் ஒரு கோடியே 30 லட்சம் ரூபாய் கொடுத்துள்ள தாகவும் தெரிந்தது. எனவே இவர்கள் 6 பேர்மீதும் வருமான வரி ஏய்ப்பு வழக்கு அப்போது பதிவு செய்யப்பட்டு,



அமெரிக்காவில் நடைபெற்ற உலக வர்த்தக மாநாட்டில் கலந்துகொண்ட மத்திய அமைச்சர் முரசொலி மாறன், சீன வர்த்தக அமைச்சர் ஷிகியான் ஜெங்குடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

விசாரணை நடைபெற்றது. இந்த வழக்கு உயர்நீதி மன்றத்தில், பல ஆண்டுகளாக இன்னமும் நிலுவையிலே உள்ளது.

★★★

இதோ இன்னொரு வழக்கு. திருநெல்வேலி மாவட்டம், வடகரை கிராமத்தைச் சேர்ந்தவர் **நாகூர் மீரான்**. ஜெயலலிதா அமைச்சரவையில் 15-2-1992 முதல் 17-5-1993 வரை ஊரகத் தொழில் துறை அமைச்சராகவும் - 18-5-1993 முதல் 12-5-1996 வரை சுற்றுலாத் துறை அமைச்சராகவும் பணியாற்றியவர். அவரது துணைவியார் டாக்டர் **நூர் ஜமீலா.**

அவர்கள்மீதும் வருமானத்திற்கு அதிகமாகச் சொத்துக் குவித்ததாக முதலாவது தனி நீதிபதி எஸ். சம்பந்தம் முன்னிலையில் விசாரணை நடைபெற்று, 2-12-1999 அன்று நாகூர் மீரானுக்கும், அவரது துணைவியாருக்கும் மூன்றாண்டு காலம் கடுங்காவல் தண்டனை விதித்து தீர்ப்பு கூறப்பட்டது. அத்துடன் அபராதமாக பத்தாயிரம் ரூபாய் செலுத்த வேண்டு

மென்றும், தவறினால் மேலும் மூன்று மாதங்கள் தண்டனை அனுபவிக்க வேண்டுமென்றும் நீதிபதி உத்தரவிட்டார். இருப்பினும் அவர்கள் உயர்நீதி மன்றத்தில்மேல் முறையீடு செய்வதற்காக 27-1-2000 வரை தீர்ப்பை நிறுத்தி வைப்பதாகத் தெரிவித்தார்.

இந்தத் தீர்ப்பைப்பற்றி அன்றைய ''தினமணி'' தலையங்கத்தில் -

❁ ***''இந்த வழக்கு சில அம்சங்களில் விசித்திரமானது. வழக்கு விசாரணையைத் தாமதப்படுத்த நூதன உத்திகள் அரங்கேற்றப்பட்டன. அதைவிட சொத்துக்களை வாங்கியதற்கான வருவாய் எந்தெந்த வழிகளில் கிடைத்தது என்பதைக் காட்டுவதற்கு, அவர் காட்டிய ஜோடனைக் கணக்குகள் ஆச்சரியமானவை. அவற்றில் ஒன்று, அவருடைய திருமணம் நடைபெற்றபோது, மொய்ப் பணமாக மட்டும் பதினோரு லட்சம் ரூபாய் சேர்ந்தது என்ற அசாத்தியக் கணக்கு. அதுபோக, தனது குடும்பத்துக்குச் சொந்தமான நிலங்களிலிருந்து தென்னை, மா, பனை மரங்கள் மூலம் பதிமூன்று இலட்ச ரூபாய் வருவாய் கிடைத்திருப்பதாக மீரான் அளித்துள்ள கற்பனைக் கணக்கு சுவை மிக்கது. அந்த ஓப்பனைக் கணக்குகளின் உண்மையான சொரூபத்தை நீதிபதி சம்பந்தம் விஞ்ஞான ரீதியாகத் தோலுரித்துக் காட்டியுள்ள விமர்சனம் எவரையும் பிரமிக்கச் செய்யக்கூடியது''***

என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்வாறு தனி நீதிமன்றம் தீர்ப்பு அளித்த போதிலும், உயர் நீதிமன்றத்தில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் மேல்முறையீடு செய்து தண்டனையை நிறுத்தி வைத்தார். இந்த வழக்கும் பல ஆண்டுக் காலமாக உயர்நீதி மன்றத்தில் இப்போதும் நிலுவையிலே உள்ளது.

★★★

அந்த வழக்கினைத் தொடர்ந்து, அடுத்து சில அ.தி.மு.க.வின் சட்டமன்ற உறுப்பினராக இருந்த திருமதி **மல்லிகா** என்ற அம்மையாரைப் பற்றியும், அவரது குடும்பத்தினரைப் பற்றியும் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்த வழக்கில், அந்த அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினருக்கு ஏழு ஆண்டு காலக் கடுங்காவல் தண்டனை விதித்து தனி நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளித்தார். வருவாய்க்கு அதிகமாக இரண்டு கோடியே 35 இலட்ச ரூபாய் சொத்து சேர்த்ததாக அந்த வழக்கு நடைபெற்றது. மேலும், தனது தீர்ப்பில், "ஒரு நீதிபதியிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்ற அடிப்படை பண்பாடுகூட இல்லாத ஒரு குற்றவாளிக்கு எந்த விதத்திலும் கருணை காட்ட முடியாது!" என்றும் குறிப்பிட்டிருந்தார்.

★★★

2-2-2000 அன்று இரண்டாவது தனி நீதிமன்ற நீதிபதி, கொடைக்கானல் **பிளசண்ட் ஸ்டே ஓட்டல்** ஊழல் வழக்கில் ஜெயலலிதாவுக்கு ஓராண்டு கடுங்காவல் தண்டனையும், இரண்டாயிரம் ரூபாய் அபராதமும் விதித்துத் தீர்ப்புக் கூறினார். அந்தத் தீர்ப்பை எதிர்த்து உயர் நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்யப் போவதாக ஜெயலலிதா கூறினார்.

கொடைக்கானல் பிளசண்ட் ஸ்டே ஓட்டலுக்கு 1991ஆம் ஆண்டு அனுமதி தரப்பட்டது. தரைத் தளம், முதல் மாடிக் கட்டிடம் ஆகியவற்றுக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டது. மேலும் ஐந்து மாடிகள் கட்டிக் கொள்ள அனுமதி கேட்டபோது, கொடைக்கானல் நகர கமிட்டி அனுமதிக்க மறுத்து விட்டது. ஆனாலும், அதை மீறி கூடுதலாக ஐந்து மாடிகள் கட்டப்பட்டன. அனுமதி மறுக்கப்பட்டதை மீறி, கட்டடம் கட்டப்பட்டதை எதிர்த்து, 1992ஆம் ஆண்டி லிருந்து வழக்கு நடந்தது.



நடமாடும் நகைக் கடையாக ஜெயலலிதாவும், அவரது தோழியும்

விதிகளுக்குப் புறம்பாக ஓட்டல் கட்டப்பட்டதை எதிர்த்து, பழனி மலைகள் பாதுகாப்புக் கவுன்சில் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் சென்னை உயர் நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தனர். இரு மாடிகளுக்கு அதிகமாகக் கட்டப் பட்டபோதே நீதிமன்றம் தடை விதித்தது. ஆனால் தடையை மீறி கட்டடம் எழும்பியது. இதையடுத்து தொடரப்பட்ட நீதி மன்ற அவமதிப்பு வழக்கில், 2000 ரூபாய் அபராதம் கட்ட வேண்டுமென்று மார்ச் 1994இல் உயர்நீதி மன்றம் உத்தர விட்டது.

அந்த நிலையில், ஓட்டல் கட்டடத்துக்கு கட்டுப்பாட்டு விதிகளின்கீழ் விதிவிலக்கு அளித்து தமிழக அரசு 13-5-1994 அன்று ஆணை பிறப்பித்தது. ஆனால், அந்த அரசாணை அரசிதழில் வெளியிடப்படாமல் ரகசியமாக வைக்கப்பட்டது. அரசாணையின் நகலைப் பெறுவதற்கு பழனி மலைகள் பாதுகாப்பு கவுன்சில் உயர் நீதிமன்றத்தை நாட வேண்டிய தாயிற்று. அந்த அரசாணை செல்லுமா என்பது குறித்து 94ஆம் ஆண்டு ஜூலையில் வழக்கு தொடுக்கப்பட்டது.

ஓட்டல் நிர்வாகம் கட்டுமானப் பணிகளைத் தொடர் வதற்கு உயர் நீதி மன்றம் இடைக்காலத் தடை விதித்தது. அந்த வழக்கு உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தபோது, அந்த ஓட்டலுக்கு விதிமுறைகளிலிருந்து விலக்களித்து 6-12-1994



ஜெயலலிதாவின் வீட்டில் குவிந்திருந்த வெள்ளி - தங்கப் பொருட்கள்



வண்ணக் காலணிகளின் அணி வகுப்பு!

அன்று ஓர் உத்தரவை ஜெயலலிதா அரசு வெளியிட்டது. அந்த உத்தரவு 13-5-1994 முதல் அமலுக்கு வருவதாகவும் அரசு கூறியது. தமிழ்நாடு நகரமைப்புத் திட்டச் சட்டத்தின் 113வது பிரிவு வழங்கியுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, விதிவிலக்கு வழங்கப்படுவதாக அந்த ஆணையில் குறிப்பிடப்பட்டிருந்தது.


தமிழக அரசின் அந்த இரண்டு உத்தரவுகளையும் சென்னை உயர் நீதிமன்ற நீதியரசர்கள் எம். சீனிவாசன், எஸ். ஜெகதீசன் ஆகியோர் அடங்கிய டிவிஷன் பெஞ்ச் 10-4-1995 அன்று ரத்து செய்தது.

★★★

1996ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சி ஏற்பட்ட பிறகு சிறப்பு நீதி மன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு, 2-2-2000 அன்று தனி நீதிமன்றத்தில் பிளசண்ட் ஸ்டே ஓட்டல் வழக்கில் தீர்ப்பு கூறப்பட்டது. அந்தத் தீர்ப்பில், ஜெயலலிதா உள்ளிட்ட ஐந்து பேருக்கு ஓராண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

அந்தத் தீர்ப்பைக் கேள்விப்பட்டவுடன் நீதிமன்றம் முன்பு கூடியிருந்த அ.தி.மு.க. வினர் நீதிமன்ற வளாகம் முன்பே வன் முறையில் ஈடுபட்டார்கள். அந்த வழியாக வந்த பேருந்துகளை அடித்து நொறுக்கினர். அங்கிருந்த கடைகள்மீது கல் வீசித் தாக்கிக் கடைகளைச் சூறையாடினர். இதனால் அந்தப் பகுதி மக்கள் பெரும் பீதிக்கு ஆளாயினர்.

அது மட்டுமின்றி, தமிழகத்தில் பல்வேறு இடங்களில் அ.தி.மு.க.வினர் வன்முறையில் ஈடுபட்டனர். அந்த வகையில் தர்மபுரியில், கோவை வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த



விதிமுறை மீறி கட்டியதாக ஜெயலலிதாவுக்கு ஓராண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்ட கொடைக்கானல் பிளசன்ட் ஸ்டே ஓட்டல்

மாணவ, மாணவிகள் - இரண்டு பேருந்துகளில் - கிருஷ்ணகிரி அருகே உள்ள பையூர் வேளாண்மை ஆராய்ச்சி மையத்தில் ஆய்வு செய்து விட்டு கோவைக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர்.

அந்தப் பேருந்தை அ.தி.மு.க.வினர் மறித்துத் தாக்குதலில் ஈடுபட்டு - மாணவிகள் கெஞ்சிக் கேட்டுக் கொண்ட பிறகும் கேளாமல், பேருந்துக்குத் தீ வைத்தனர். அந்த விபத்தில் மூன்று மாணவிகள் - கோகிலவாணி, காயத்ரி, ஹேமலதா ஆகியோர் உயிரோடு எரிக்கப்பட்டனர். மேலும் 17 மாணவிகள் தீக்காயமடைந்தனர். அருமைச் செல்வங்கள் மூவரை இழந்த குடும்பங்களுக்கு அனுதாபத்தையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொண்டதோடு, இறந்தவர்களின் குடும்பத்திற்குத் தலா இரண்டு இலட்சம் ரூபாயை தமிழக அரசின் சார்பில் வழங்கினேன்.

"கண்ணே, மணியே!" என்று கொஞ்சி தலைவாரிப் பூச்சூடி நித்தம் பாடசாலைக்கு அனுப்பி வைத்த பெற்றோர், அந்தச் செல்வங்கள் அரும்பாகி, மலராகி, கல்லூரி வரை சென்று பயின்று, காயத்ரியாக - ஹேமலதாவாக - கோகிலவாணியாகத் திரும்பி வருவார்கள் என்று எதிர்பார்த்திருக்கும்போது, அம்மூவரும் அவரவர் வீடுகளை நோக்கிக் கரிக்கட்டைகளாய்


- சாம்பல் பொடிகளாய் வந்தனர் என்றால், அந்த மகள்களைப் பெற்ற மகராசிகளின் வயிறு எப்படிப் பற்றி எரிந்திருக்கும்?

இந்தச் சம்பவம்பற்றி சுந்தரப் பெருமாள் கோயில் **இராமலிங்கம்** என்ற தோழர் அப்போது எழுதிய கவிதை ஒன்றில் -


"பாரதி புரத்திலா
இந்தப் பாதகச் செயல்?
மாதரை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்தச்
சொன்னவன்
பாரதி!
ஆனால்,
மாதர்களையே கொளுத்தி விட்டார்களே
மாபாவிகள்?"

என்று குறிப்பிட்டிருந்தார்.

அந்த மூன்று மாணவிகள் இறந்த நிகழ்ச்சி குறித்த வழக்கினை புலனாய்வு செய்ய மாநில குற்றப் புலனாய்வுத் துறையிடம் பொறுப்பினை முதலமைச்சர் என்ற முறையில் ஒப்படைத்தேன். இறந்த மூன்று மாணவிகளின் குடும்பத் தினருக்குத் தலா ஒரு இலட்ச ரூபாய் நிதி அளிக்கப்போவதாக ஜெயலலிதா அறிவித்த போதிலும் - அந்த நிதியை வாங்க



ஜெயலலிதாவுக்கு தண்டனை விதிக்கப்பட்டதால், அ.தி.மு.க.வினர் பேருந்துக்கு தீ வைத்து, ஹேமலதா - காயத்ரி - கோகிலவாணி என்ற மூன்று மாணவிகளை உயிரோடு எரித்துக் கொன்றனர்.



டி.என்.சேஷன்

மாட்டோம் என்று அந்த மூன்று மாணவிகளின் பெற்றோர் திட்ட வட்டமாக மறுத்து விட்டனர். இந்த தண்டனையை எதிர்த்து ஜெயலலிதா சென்னை உயர் நீதி மன்றத்தில் அப்பீல் செய்து கொண்டார்.

அரசியல் காரணங்களுக்காக ஜெயலலிதா தண்டிக்கப்படும் போது, இத்தகைய போராட் டங்களை எல்லாம் அ.தி.மு.கவினர் நடத்துவது என்பது வழக்கம்.

★★★

உதாரணமாக, 1993ஆம் ஆண்டு ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது, காவிரிப் பிரச்சினைக்காக உண்ணாவிரதம் இருந்தார். உண்ணாவிரதம் என்றால், திறந்தவெளியில் - பொது இடத்தில் - பொது மேடையில் - பொது மக்கள் முன்னிலையில் என்று எண்ணி ஏமாந்துவிடாதீர்கள். எல்லா வசதிகளும் கொண்ட தன்னுடைய சொந்த வாகனம் ('வேன்') ஒன்றின் உள்ளே - தன் தோழியுடன் - அந்த வாகனத்தின் கதவும் சாத்தப்பட்டிருந்த நிலையில் - யாரும் பார்க்க முடியாத வகையில் - அந்த விசித்திர உண்ணா விரத நிகழ்ச்சி நடைபெற்றது என்றும், உள்ளே என்ன நடக்கிறது என்று யாரும் தெரிந்து கொள்ள முடியவில்லை என்றும், அக்காலத்தில் ஊரே பேசிக்கொண்டது. அந்தப் புது முறை உண்ணாவிரதத்திற்கு ஆதரவு தெரிவிப்பதாகக் கூறி, மதுரை பாண்டியன் எக்ஸ்பிரஸ் ரெயில் புறப்பட இருந்த நேரத்தில் அங்கேயிருந்த ரயில்வே சிக்னல் அடித்து நொறுக்கப்பட்டது.

❁ தலைமைத் தேர்தல் அதிகாரியாக இருந்த **திரு.டி.என். சேஷன்** சென்னைக்கு வந்தபோது, அவர் சென்னை விமான நிலையத்திலிருந்து வெளியே வர முடியாமல்

தடுக்கப்பட்டார். அவர் தங்கியிருந்த ஓட்டல் தாக்கப்பட்டது.

❁ ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி முறைகேடு குறித்து தீர்ப்புக் கூறிய நீதியரசர் **சீனிவாசன்** வீட்டில் கல்வீச்சு நடந்தது. குடிநீர், மின்சார விநியோகம் நிறுத்தப்பட்டது.



ப.சிதம்பரம்

❁ அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருந்த **ஆனந்த கிருஷ்ணன்** வீடு தாக்கப்பட்டது.

❁ மத்திய அமைச்சராக இருந்த **திரு. ப.சிதம்பரம்** திருச்சியிலும், காரைக்குடியிலும் வழிமறித்துத் தாக்கப் பட்டார்.

❁ முன்னாள் அமைச்சர் **ராஜாராம்** வீடு தாக்கப்பட்டது.

❁ உயர் நீதிமன்றத்தின் வாசலில் **சுப்பிரமணியம் சுவாமியைத்** தாக்க முயற்சி நடைபெற்றது.

❁ சட்டப்பேரவை விடுதி வளாகத்தில் **பீட்டர் அல்போன்ஸ்** தாக்கப்பட்டார்.

❁ திண்டிவனம் அருகே ஆளுநர் **சென்னாரெட்டி** கார் தாக்கப்பட்டது.

❁ அ.தி.மு.க. சட்டப் பேரவை உறுப்பினர்கள் **சொக்கலிங்கம், மோகனன், ரமேஷ்** ஆகியோர் தாக்கப்பட்டனர்.

❁ இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சட்டப் பேரவை உறுப்பினர் **சிவபுண்ணியம்** வீடு தாக்கப்பட்டது. **பழனிச் சாமியும்** தாக்கப்பட்டார்.



அ.தி.மு.க.வினரின் இந்தத் தொடர் தாக்குதல் பட்டியல் நீண்டுகொண்டே போகும்போது, ''வன்முறையில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை'' என்றார், ஜெயலலிதா.

- நீதிபதி **ஏ.ஆர்.லெட்சுமணன்** மருமகன் மீது கஞ்சா கடத்தியதாக வழக்கு போடப்பட்டது.
- எம்.ஜி.ஆர். நினைவு இல்ல நிர்வாகி **முத்து** மீது கஞ்சா கடத்தியதாக வழக்கு போட்டார்கள்.
- நமது வழக்கறிஞர் **சண்முக சுந்தரம்,** அவரது உடலில், 80 இடங்களில் கத்தியால் வெட்டப்பட்டுத் தாக்கப்பட்டார்.
- வழக்கறிஞர் **விஜயன்** தாக்கப்பட்டார்.
- இந்தத் தாக்குதல் நிகழ்ச்சிகள் எல்லாம் வெளி உலகத் திற்குத் தெரிந்தவை! இவை தவிர, செய்தி வெளியே வராமல் வேறு தாக்குதல்களும் நடந்திருக்கலாமோ - என்னவோ என்று அன்று பொது மக்களிடம் சந்தேகம் நிலவியது - பல்வேறு வதந்திகள் உலவின! அந்த வதந்திகளை யாரும் மறுக்கவும் இல்லை - மறுத்து வழக்கு மன்றம் எதற்கும் போகவும் இல்லை!
- இந்த வரிசையிலே தான் தர்மபுரியில் மாணவிகளும் உயிரோடு கொளுத்தப்பட்டார்கள். அம்மையாரின் ''அமைதிப் பூங்கா'' ஆட்சியில் இந்த அவலங்கள் தொடர்ந்தன - இன்னும் தொடர்கின்றன.

5. வாழ்நாளின் வரலாற்றுச் சாதனை!

12-11-1999 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், முக்கியமானதொரு முடிவு எடுக்கப்பட்டது.

31-12-1975ஆம் நாள், தமிழக அரசின் அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுத்து அறிவித்தவாறு, வரலாற்றுச் சிறப்பு மிக்கதும், உலகில் வியப்புக்குரியதுமான 133 அடி உயரம் உள்ள திருவள்ளுவர் சிலைத் திறக்கின்ற விழா நிகழ்ச்சியினை கன்னியாகுமரியில், 1999ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 31ஆம் நாள் - மற்றும் 2000ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1ஆம் நாள் ஆகிய இரு நாட்களிலும் தமிழக அரசின் சார்பில் மிகச் சிறப்பாக நடத்துவதென்றும், அந்த விழா நிகழ்ச்சியின்போது பல்வேறு நாடுகளிலே உள்ள தமிழறிஞர்களை எல்லாம் அழைத்துச் சிறப்பு செய்வது என்றும் முடிவெடுத்து அறிவிக்கப்பட்டது.

டிசம்பர் 30ஆம் தேதியன்று தேனியிலும், திண்டுக்கல்லிலும் 'உழவர் சந்தை'கள் திறப்பு விழா - மற்றும் ஆண்டிப்பட்டியில் ''வருமுன் காப்போம்'' திட்டத் துவக்க விழா ஆகியவை களில் கலந்து கொண்டுவிட்டு, அங்கிருந்து கன்னியாகுமரிக்குக் காரிலேயே சென்றேன். இரவு 10 மணிக்குத்தான் கன்னியாகுமரியை அடைந்தேன். சிலை திறப்பு விழா நிகழ்ச்சிகள் குறித்து விழாக் குழுவினரிடம் கேட்டறிந்தேன். பின்னர் விழா மேடைக்குச் சென்று ஏற்பாடு களையெல்லாம் கவனித்தேன்.



★★★

31-12-1999 அன்று காலையில். குமரி முனையில் எனது பெருமுயற்சியால், முக்கடல் சங்கமத்தில், விண்முட்ட எழுந்துள்ள 133 அடி உயரம் கொண்ட திருவள்ளுவர் சிலைத் திறப்பு விழா தொடங்கியது. பேரவைத் தலைவராக இருந்த **பி.டி.ஆர்.பழனிவேல்ராஜன்** அவர்கள் திறந்து வைத்த ஓவியக் கண்காட்சி - மற்றும் நூல்கள் கண்காட்சியை நானும், பேராசிரியரும், அமைச்சர்களும் பார்வையிட்டோம்.

பின்னர் முனைவர் **கு. மோகனராசு** நடத்திய திருக்குறள் முற்றோதல் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட குழந்தைகளைக் கண்டு அவர்களைப் பாராட்டியதோடு, அந்தக் குழந்தை களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் அறிவித்தேன்.


அதைத் தொடர்ந்து, **இரா.கனகசுப்புரத்தினத்தின்** பதினாறு கவன நிகழ்ச்சி நடைபெற்றது. அடுத்து, முனைவர் **தமிழண்ணல்** தலைமையில் குறள் ஆய்வரங்கம் நடைபெற்றது. தமிழ் அறிஞர்கள் பலர் அதிலே கலந்து கொண்டு உரையாற்றினர்.

முதல் நாள் இறுதி நிகழ்ச்சியாக, எனது தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. அதில் உவமைக் கவிஞர் சுரதா, கவிக்கோ அப்துல் ரகுமான், கவிப்பேரரசு வைரமுத்து, கவிஞர் ஈரோடு தமிழன்பன், கவிஞர் மு. மேத்தா, கவிஞர் நிர்மலா சுரேஷ், கவிஞர் கவிதைப்பித்தன், கவிஞர் பொன். செல்வ கணபதி ஆகியோர் கலந்து கொண்டனர்.



அனைவரும் சமம் ஐயன் வள்ளுவனே தெய்வம்'' - என்ற எண்ணம் கொண்ட நான் திருவள்ளுவரின் சிலையைத் தென்குமரியிலே நிறுவியது, நான் பெற்ற வரம் அல்லவா?

2000ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் நாளன்று, திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் தொடங்கின. முதல் நிகழ்ச்சியாக **''குறள் அமுதம்''**, **''கோட்டம் முதல் குமரிவரை''** சிறப்பு மலரினையும் - கனடா இராம் மோகனின்



அன்றொரு நாள் சென்னையிலே வள்ளுவனுக்குக் கோட்டம் அமைத்தேன்.

குறுந்தகடு ஆகியவற்றையும் மத்திய வனத் துறை அமைச்சராக இருந்த தம்பி **டி.ஆர்.பாலு** வெளியிட்டார். சிறப்பு மலர்களை முனைவர் **வ.அய்.சுப்ரமணியம்** அவர்களும், குறுந்தகட்டினை முனைவர் **வா.செ. குழந்தைசாமி** அவர்களும் பெற்றுக் கொண்டனர்.

காலை 10 மணியளவில், குறள் கருத்தரங்கம், முனைவர் **தமிழ்க் குடிமகன்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதில் முனைவர் **க.ப.அறவாணன்,** பேராசிரியர் **பா.நமசிவாயம்,** முனைவர் **திருமதி சக்தி பெருமாள்,** முனைவர் **சிலம்பொலி செல்லப்பன்,** பெருங்கவிக்கோ **வா.மு. சேதுராமன்,** முனைவர் **பா.வளனரசு,** சிகாகோவைச் சேர்ந்த **ரிச்சர்ட் வீஸ்,** புலவர் **இரா. இளங்குமரன், வலம்புரி ஜான்,** ஜப்பானைச் சேர்ந்த **திருமதி யூகோ புக்குராய்,** முனைவர் **சி.நயினார் முகமது,** திருமதி **இளம்பிறை மணிமாறன்** ஆகியோர் உரையாற்றினர்.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியான சிலை திறக்கும் விழா மாலை 4.30 மணி அளவில் தொடங்கியது. அப்போது கல்வி அமைச்சராக இருந்த **பேராசிரியர்** அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார். **சீர்காழி சிவசிதம்பரம், டி.கே.எஸ். கலைவாணன்** ஆகியோர் தங்களது வெண்கலக் குரலில்



பிறிதொரு நாள், என் 25 ஆண்டு காலத் தவம் பலித்தது - தாபம் தணிந்தது!
குமரியிலே வள்ளுவனுக்குச் சிலை அமைத்தேன்!

தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடினர். செய்தித் துறை அமைச்சராக இருந்த **வ. முல்லை வேந்தன்** வரவேற்புரையாற்றினார்.

விண்முட்டும் திருவள்ளுவர் சிலையினை குவிந்திருந்த இலட்சக்கணக்கான தமிழ்ப் பெருங்குடி மக்களின் வாழ்த்துக் களுடன் நான் திறந்து வைத்தேன். விழாவினை நேரில் கண்ணுற்றோர் வாழ்வில் பெரும் பேறு பெற்றோர் எனும் அளவிற்கு எழுச்சிக் கோலம் பூண்டிருந்தது அந்த விழா.

கண்ணொளி கொண்ட தமிழரெல்லாம் கண்டு களித்த காட்சி! செவிப்பறை சிறிதும் பழுதுபடாத தமிழனெல்லாம் கேட்டு இன்புற்ற நிகழ்ச்சி! இதயமுள்ள தமிழனெல்லாம் உணர்ச்சியால் உந்தியெழுந்து குதித்திட்ட எழுச்சி! ஆம்; முக்கடலும் தம் அலை இதழ்களால் முத்தமிட்டு மயங்கும் குமரிக் கடற்கரையில் - முப்பால் யாத்த ஞானத் தமிழ் அய்யன் திருவள்ளுவருக்கு விண் முட்டும் சிலை வடித்து - அதைத் திறந்து வைத்திடும் வாய்ப்பு அமைந்ததே; அந்த வாய்ப்பு என் வாழ்நாளில் என் நினைப்புக்கும் உழைப்புக்கும் கிடைத்த வரமல்லவா?

வழக்கமாகக் கதைகளிலும், புராணங்களிலும் வரம் பெறுவோர் எல்லாம் தம்மை வலுப்படுத்திக் கொண்டு, தமது

ஆதிக்கத்தை அகல விரிப்பதிலேயே அக்கறை செலுத்துவர். ஆனால் எனக்கோ, கிடைத்த வரம், என் அய்யன் திருவள்ளு வனைச் சிலையாகக் கண்டிட - அதுவும் அவன் குறளில் எத்தனை அதிகாரம் இயற்றினானோ - அத்தனை அதிகாரம் - அதாவது 133 அதிகாரங்களைக் குறிக்கும் 133 அடி சிலையை - இந்தியப் பூபாகத்தில் வட இமயத்துக்கு நிகராகத் திகழும் தென் குமரியில் நிறுவிட முடியும் என்னால் என்ற வரமல்லவா?

அந்த வரத்தைத் துஷ்பிரயோகம் செய்யாமல், அதனை நிறைவேற்ற வேண்டுமே என்பதற்காக, 25 ஆண்டு காலம் நித்தமும் தவம் செய்தேன் - அந்தத் தவம் பலித்தது - என் தாபம் தணிந்தது - பிறவியெடுத்த பயனைக் கண்டேன், முழுமையாக!

அந்தச் சிலை திறப்பதற்கான பொத்தானை அழுத்தியபோது, என் விரல் என்னை அறியாமல் அசைவற்றுப் போனது மட்டுமல்ல - என்னையே நான் மறந்துவிட்டேன். நாதஸ்வர இசைவாணர்களும், தவில் வித்வான்களும், அவர்தம் பக்க வாத்தியக்காரர்களுமாக சுமார் முன்னூறுக்கு மேற்பட்டோர்; அய்யனின் சிலை திறக்கப்பட்டபோது இசை முழக்கம் திக்கெட்டும் எட்டிடச் செய்தார்களாம். மறுநாள் காலையில் மற்றவர்கள் சொல்லக் கேட்டுத்தான் 133 நாயன இசை ஒலித்த செய்தியே எனக்குத் தெரியும். அந்த அளவுக்கு மெய்மறந்து போயிருந்திருக்கிறேன். சுமார் முக்கால் மணி நேரம் பேசியிருக் கிறேன்.



விழா மேடையில், தமிழ்ச் சான்றோரும், ஆன்றோரும்



திருவள்ளுவரின் சிலையைப் பேராசிரியர் தலமையில் திறந்து வைத்தேன்.

இளமைப் பருவ முதல் எந்தவொரு தத்துவ வித்தகனை இமைப் பொழுதும் மறவாமல் - எழுத்தில், பேச்சில், இயக்கத்தில் நினைவு படுத்திக் கொண்டே இருந்தேனோ - யாருக்கு வரலாறு போற்றும் வள்ளுவர் கோட்டம் அமைத்தேனோ - யாருக்காக ஆண்டுதோறும் பொங்கல் திருநாளுக்கு மறுநாள் வள்ளுவர் திருநாள் என அறிவித்தேனோ - பேருந்துகளிலும், பயணியர் விடுதிகளிலும், ஒழுக்கம் போதிக்கும் குறளை எந்த ஒளிமிகு ஏந்தலுக்காக எழுதச் செய்து உருவப்படத்துடன் அமைத்தேனோ - யாருடைய குறளுக்கு **குறளோவியம்** தீட்டி - பின்னர் 1330 குறளுக்கும் உரையும் எழுதினேனோ - அந்த அய்யன் திருவள்ளுவருக்கு இருபத்தி ஐந்து ஆண்டு காலப் பெரு மூச்சுக்குப் பிறகு சிலை அமைந்தது - அதைத் திறந்து வைக்க எனக்கு ஆயுளும் இருந்தது என்கிறபோது என் மன நிலையை வர்ணித்திட தமிழ்த்தாய், தன்னிடமும் சொற்களுக்குப் பஞ்ச மென்று சொல்லிவிட்டாளே, நான் என்ன செய்ய!


★★★

1975ஆம் ஆண்டு (31.12.1975) நான் முதல்வராக இருந்த காலக்கட்டத்தில், அமைச்சரவைக் கூட்டத்தில் குமரி முனையில் வள்ளுவர் சிலை அமைத்திட முடிவு எடுத்து அறிவிக்கப்பட்டது. 1975 டிசம்பர் 31ல் அறிவிப்பு - அடுத்த 30 நாட்களுக்குள் கழக ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது.

நான் முன்னின்று கட்டி முடித்த வள்ளுவர் கோட்டத்திலும் என் பெயர் பொறித்த அடிக்கல்லைத் தூக்கி எறிந்துவிட்டு,

ஆட்சி கலைக்கப்பட்டதற்கு அடுத்த சில நாட்களுக்குள் எனக்கு அழைப்புகூடத் தராமல் கோட்டத்தைத் திறந்து முடித்தனர், அன்றைய கோலேந்திகள்!

13 ஆண்டு காலம் அந்த வள்ளுவர் கோட்டத்திற்குள் நானும் காலடி எடுத்து வைக்க வில்லை - என் பெயருக்கும் ஓர் அங்குல இடமளிக்க யார் இதயமும் இடங்கொடுக்க வில்லை.




விழா மேடையில் ''உன்னால் ஜெயிக்க முடியும்'' (You can win) என்ற ஆங்கில நூலைக் கொடுத்து பாராட்டினார், மூப்பனார்.

★★★

1989ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தேர்தலில் வென்று நமது கழக அரசு பதவியேற்றது.

கல்லில் சிலை அமைப்பதே ஏற்புடையது என்பதாலும், காலங்கடந்து நிற்கும் இந்தியக் கற்கோவில்கள்போல் கல்லால் சிலை அமைப்பது, நமது கலாச்சாரத்தை எடுத்துக் காட்டுவதாக அமையும் என்பதாலும், தமிழ்நாடு அரசு சிற்பக் கல்லூரி முதல்வர், **திரு.கணபதி ஸ்தபதி** அவர்களுடன் மக்கள் தொடர் புத்துறை இயக்குநர் பேசி, ஆலோசனை பெற்று, அதன்படி மேல் நடவடிக்கை எடுக்கலாம் என முடிவு செய்யப்பட்டு, 10.11.1989 அன்று திரு.கணபதி ஸ்தபதி அவர்களுடன் நானே விவாதித்து - அந்த விவாதத்தின் தொடர்ச்சியாக திரு.கணபதி ஸ்தபதி 1.3.1990 அன்று வரைபடமும், திட்ட மதிப்பீடும் தந்தார்.

17.3.1990 அன்று நிதி நிலை அறிக்கையைச் சட்டமன்றப் பேரவையில் வைத்தபோது, கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை 133 அடி உயரத்தில் நிறுவப்படும் என்று அறிவித்தேன். அது தொடர்பாக 25.3.1990 அன்று திரு. கணபதி ஸ்தபதி அவர்களுடன் விவாதிக்கப்பட்டு, திருவள்ளுவர் சிலையினைச்



"உன் தாயார் இந்த விழாவினைப் பார்த்திருந்தால், என்ன உணர்ச்சி வயப்படுவாரோ அதே உணர்ச்சியோடு நான் உன்னைப் பாராட்டுகிறேன் என்றார் சிவாஜிகணேசன்.

செம்பால் செய்வதற்குப் பதில், கல்லால் செய்ய முடிவெடுக்கப் பட்டது.


அதன்படி, கன்னியாகுமரியில் திருவள்ளுவருக்கு 133 அடி சிலை அமைக்கும் பணியைத் திரு. கணபதி ஸ்தபதியிடம் ஒப்படைக்க முடிவு செய்து ஆணை வழங்கப்பட்டது. 6.9.1990 அன்று கன்னியாகுமரியில் சிலை வடிக்கும் பணியை நான் தொடங்கி வைத்தேன்.

1991 ஜனவரி 31 அன்று மீண்டும் கழக ஆட்சி கலைக்கப் பட்டுவிட்டது ("விடுதலைப் புலி"களோடு உறவு என்று காரணம் காட்டி!)

13.5.1996ல் நான்காவது முறையாக கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு சிலை அமைப்புப் பணி மீண்டும் தொடங்கியது.

25.6.1997 அன்று - என் தலைமையில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில், சிலை அமைப்புப் பணிகளை உடனடியாக விரைவுபடுத்துவதுபற்றி விவாதிக்கப்பட்டு, இரண்டு ஆண்டு களுக்குள் சிலை அமைப்புப் பணியை முடிக்க வேண்டும் என்று காலக்கெடு நிர்ணயம் செய்யப்பட்டு, அது தொடர்பாக திரு.கணபதி ஸ்தபதி அவர்களுக்கு அரசே நேரிடையாக இனி நிதியை வழங்குவது என்றும் முடிவு செய்யப் பட்டது.

30.7.1997 அன்று சிலை அமைப்புப் பணிக்குரிய திருத்திய மதிப்பீடுகள் ஒப்புதல் அளிக்கப்பட்டு, சிலை அமைப்புப் பணிக்கு திருத்திய மதிப்பீட்டின்படி ரூ. 614 இலட்சம் -



''உங்களது மிகப் பெரிய ஆசையை நீங்கள் நிறைவேற்றி விட்டீர்கள் – எங்களது ஆசை நிறைவேறுவதற்கு, நீங்கள் தொடர்ந்து வாழ வேண்டும்'' என்று வாழ்த்தினார் பேராசிரியர்.


தமிழ்நாடு கட்டுமானக் கழகம் மேற்கொள்ள வேண்டிய பணிகளுக்கு திருத்திய மதிப்பீடாக ரூ. 172 இலட்சம் – என நிதி ஒப்பளிப்புச் செய்து ஆணையிடப்பட்டது.

திரு.கணபதி ஸ்தபதி மேற்கொண்ட பணிகளை, ஒவ்வொரு மாதமும் பொதுப் பணித்துறைப் பொறியாளர்கள் மூலம் ஆய்வு செய்து, செய்த பணியின் அளவிற்கு ஏற்ப நிதி வழங்கப்பட்டு வந்தது.

★★★

6.2.1999 அன்று திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டு, அதற்கு அருகேயுள்ள கப்பலோடையைச் சரி செய்வதற்கு 86 இலட்சம் ரூபாயும், அதற்குத் தேவையான பற்பல பொருட்களை கரையிலிருந்து எடுத்துச் செல்வதற்கு 7 இலட்சம் ரூபாயும், ஆக 93 இலட்சம் ரூபாய் கட்டுமானக் கழகத்திற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

19.10.1999 அன்று சிலை அமைப்புப் பணிகள் அனைத்தும் முற்றுப் பெற்றன. அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு மின்விளக்குகள் அமைக்க 19 இலட்சம் ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டது.



வள்ளுவருக்குச் சிலை எழுப்பியதன் மூலம், இன்னும் ஆயிரமாயிரம் ஆண்டுகள், வரலாற்றில் பொன் எழுத்துக்களில் நீங்கள் நிற்பீர்கள்!'' என்று பாராட்டினார் தம்பி வைகோ

திருவள்ளுவர் சிலை அமைந்துள்ள பாறையில் வெடிப்புகளை நிரப்பிச் சரி செய்வதற்கும், சிலையின் உட்புறத்தில் தேவையான பணிகளுக்கு கட்டுமானப் பொருட்களையும், சாரப் பொருட்களையும் எடுத்துச் செல்வதற்கும் 44.50 இலட்சம் ரூபாய்க்கு 22.12.1999 அன்று ஒப்பளிப்பு வழங்கப் பட்டுள்ளது.

சிலை வரலாறு பற்றிய அனைத்து ஆதாரங்களையும் முறைப்படி எடுத்துரைத்துள்ளேன்.

திருவள்ளுவர் சிலையினை நான் திறந்து வைத்தது கண்டு பல பேருக்கு வயிற்றெரிச்சல்! அதனைத் தீர்த்து அறவே அகற்றும் அருமருந்தாக உள்நாட்டு வெளி நாட்டுச் சான்றோர் ஆன்றோர்களின் இனிய உரைகளும், கருத்துக்களும், வாழ்த்துக் களும் அமைந்துவிட்டன என எண்ணி நான் பூரித்தேன்.

விழுப்புண் பெற்றவனுக்கு அவன் வேல்விழிக் காதலி வேது கொண்டு ஒத்திடும்போது ஏற்படும் ஒருவிதமான சுகமன்றோ தமிழ் ஆர்வலர்களின் ஆறுதல் வார்த்தைகளால் எனக்கு ஏற்பட்டது.

இதோ தமிழ்நாட்டு ஏடுகள் மட்டுமல்ல; வடபுலத்திலிருந்து வரும் ஆங்கில ஏடுகள் எழுதியுள்ள நீண்ட கட்டுரைகளில் இருந்து சில பகுதிகளைத் தருகிறேன்.

★★★


"டைம்ஸ் ஆப் இந்தியா" எனும் பிரபல ஆங்கில நாளேட்டில், 2.1.2000 அன்று **சுவாதிதாஸ்** என்பவர் எழுதியது:-



திருவள்ளுவர் சிலையைச் சிறப்பாக அமைத்ததற்காகச்
சிற்பி கணபதி ஸ்தபதியை கௌரவித்தேன்

❁ *''133 அடி உயரமுள்ள தெய்வப் புலவர் திருவள்ளுவர் சிலையைப் புத்தாண்டு நாளன்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.கருணாநிதி அவர்கள் கன்னியாகுமரியில் திறந்து வைத்துள்ளார். இந்த மிகச் சிறந்த நினைவுச் சின்னம் தமிழ்ச் சமுதாயப் பண்பாட்டினை மட்டும் உணர்த்துவது அல்ல-ஜைன சமயத்தில் நிலைபெற்ற போதனைகளையும் உணர்த்துவதாகும். அவர் தனது நூலில் ஆதிபகவன் என - ஜைன சமயத்தை முதன் முதல் நிறுவிய ஆதிநாதரைக் குறிப்பிடுகிறார். மனித உளவியல் பற்றிய முழுமையான அறிவாற்றலை இவரது அணுகுமுறை மிகச் சிறப்பாக வெளிப்படுத்துகிறது. தீமைக்கு எதிராகப் போராடுவதில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைப் பண்புகளை மக்களுக்கு அளிப்பதே வள்ளுவரின் அணுகுமுறை!''*

வள்ளுவரை பல மதத்தினரும் தமது சமயத்தவர் என்று உரிமை கொண்டாடு வதின் அடிப்படையில் உருவானதுதான் இந்தக் கருத்தும்!



திருக்குறளைப் பிழையின்றஇ ஒப்பித்த மாணவ மாணவிகளுக்குப் பரிசு வழங்கினார், பேராசிரியர்

''ஏசியன் ஏஜ்'' என்ற மற்றொரு ஆங்கில நாளேடும் பாராட்டி எழுதியது. **ஆர்.பகவான் சிங்** அந்த ஏட்டில் எழுதியுள்ள கட்டுரையில் சில பகுதிகளை மட்டும் தருகிறேன்.

❁ ''இச்சிலைத் திறப்பு விழா நிகழ்ச்சி முதலமைச்சர் திரு.கருணாநிதியின் உடல் நலத்திற்கு உகந்ததல்ல என சோதிடர்கள் எச்சரித்திருந்த போதிலும், கன்னியா குமரியில் - முக்கடல்களும் கூடும் தென்முனையில் - 133 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள தமிழ் முனிவர் திருவள்ளுவரின் சிலையினைப் புத்தாண்டின் தொடக்கத்தில் தமிழக முதலமைச்சர் கருணாநிதி திறந்து வைத்துள்ளார்.

❁ ''சுமார் 7000 டன் கருங்கற்களால் உருவாக்கப்பட்டுள்ள இச்சிலையை அமைப்பது குறித்த சிந்தனை, தமிழ் இலக்கியத்திற்குப் பெருந்தொண்டாற்றி வரும் தி.மு.க. தலைவரின் எண்ணத்தில் சுமார் 25 ஆண்டுகளுக்குமுன் (1975ல்) உதித்தது. இது அவரது வாழ்க்கையின் மிகப் பெரிய குறிக்கோளாகும். இச்சிலை திருவள்ளுவருக்குச் செய்யும் மிகப் பெரிய நினைவுச் சின்னமாகும்.

❁ ''1989ஆம் ஆண்டில் சிலைக்கு அடிக்கல் நாட்டியபோது, திரு. கருணாநிதி ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலக் கட்டத்தில், அவர் தனிப்பட்ட முறையிலும், அரசியல் ரீதியாகவும், பல கடுமையான சோதனைகளையும், வீழ்ச்சிகளையும் சந்திக்க நேரிட்டது. ஆனால், திராவிட

இலக்கியப் படைப்பாளி தனக்கு மிகவும் பிடித்தமான இந்தத் திட்டத்தை கைவிட்டு விடவில்லை. 1996ல் மீண்டும் ஆட்சி அமைந்ததும் மேற்கொள்ளப்பட்ட முக்கிய பணிகளில் ஒன்றாக, பத்து கோடி ரூபாய் செலவில் இச்சிலையினை வடித்தெடுக்க உலக அளவில் சிலை வடிப்பில் தேர்ச்சி பெற்றவரும், தேசிய அளவில் பல பரிசுகளைப் பெற்றுள்ளவருமாகிய திரு.கணபதி ஸ்தபதி யிடம் ஒப்படைக்கப்பட்டது. வாஸ்து சாஸ்திர முறைப் படியும் - சிலைகளை வடிவமைப்பதில் கடைப்பிடிக்கப் பட்டு வரும் அண்மைக் காலத் தொழில் நுட்பத்தின் அடிப்படையிலும் - மிகப் பிரம்மாண்டமான இச்சிலை அமைக்கும் பணி மூன்று ஆண்டுகளில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது.'' - என்று குறிப்பிட்டிருந்தது.

★★★

குறளை அவரவர்களும் தமது கோணத்தில் பொருள் கொண்டு பார்ப்பதைப்போலவே; அய்யன் குறளாசானின் கருத்துக்களையும் - அந்த அய்யனின் சிலையை அமைத்திட்ட என்னையும்-என் இலட்சியங்களையும்-அவரவர் கோணத்தில் பார்க்கின்றனர் என்பதற்கு இந்த இரு ஏடுகளின் கட்டுரைகளே தக்க சான்று!

எதுவாயினும், ஜனவரி 1ஆம் நாள் குமரி முனையில் திறக்கப்பட்ட வானுயர வள்ளுவர் சிலையை மறுநாள் காலை அருகில் சென்று பார்த்துவிட்டுத் திரும்பியதிலிருந்து, என் நெஞ்சு ஓயாது உச்சரித்துக் கொண்டிருக்கும் உணர்ச்சி மிக்க சொற்றொடர் ''ஒன்றே குலம் - ஒருவனே தேவன்'' என்பதைப் போல -**''அனைவரும் சமம்! அய்யன் வள்ளுவனே தெய்வம்!''** என்பதுதான்!

★★★

அய்யன் வள்ளுவரின் சிலைத் திறப்பு விழாவில், பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் - அருமை நண்பர் **ஜி.கே. மூப்பனார், இல. கணேசன், என். சங்கரய்யா, தம்பி**

வைகோ, வாழப்பாடி ராமமூர்த்தி, ஆர். நல்லகண்ணு, எஸ். திருநாவுக்கரசு, ஆர்எம். வீரப்பன், குமரி அனந்தன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மற்றும் தமிழறிஞர்கள், மலேசிய அமைச்சராக இருந்த **டத்தோ ஸ்ரீசாமிவேலு,** இலங்கை அமைச்சர் **ஆறுமுகம் தொண்டைமான்,** மொரீசியஸ் அமைச்சர் **இராமசாமி சிதம்பரம் பிள்ளை,** சிங்கப்பூர் **வை. திருநாவுக்கரசு,** ஸ்காட்லாந்து **ஆர்.ஈ.ஆஷர்,** ஜெர்மனியைச் சேர்ந்த முனைவர் தாமஸ் மால்டன், பேராயர் முனைவர் **ஆரோக்கியசாமி, பேரூர் சாந்தலிங்க அடிகளார், குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்,** திருமதி **இராதா தியாகராஜன்,** பேராயர் **எஸ்றா சற்குணம்,** ஆசிரியர் **சாவி** ஆகியோர் உரையாற்றினர்.

சிறப்புமிக்க அந்தத் திருவள்ளுவர் சிலையினை வடித்த சிற்பி கணபதி ஸ்தபதி, மற்றும் திருக்குறளை மொழி பெயர்த்த அறிஞர்கள் ஆகியோர் விழாவிலே சிறப்பிக்கப்பட்டனர். சுற்றுலாத் துறை அமைச்சர் தம்பி என். சுரேஷ் ராஜன் நன்றி கூறினார்.

★★★

அந்த நிகழ்ச்சியில் அருமை நண்பர் **மூப்பனார்** அவர்கள் பேசும்போது, அங்கே திரண்டிருந்த மக்கள் வெள்ளத்தைப் பார்த்து, அவர்கள் அனைவரையும் எழுந்து நிற்கச் சொல்லி, ‘‘கலைஞரைப் பாராட்டுங்கள் - பாராட்டுவதற்கு அடையாள மாக கையொலி செய்யுங்கள்’’ என்று கூறியதும் - அந்த விழா மேடைக்கு வந்ததும் - என் அருகே வந்து அன்பளிப்பாக "You can win" (உன்னால் ஜெயிக்க முடியும்) என்ற ஆங்கிலப் புத்தகத்தை அளித்ததும், அந்த விழாவிலே நான் பேசும்போது அதைக் குறிப்பிட்டு உரையாற்றியதும் மறக்கக் கூடியவைகளா?

நடிகர் திலகம் **சிவாஜி** அவர்கள் அந்த விழாவிலே பேசியபோது என்னுடைய அன்னையை நினைவுபடுத்தி, ‘‘அவர் இருந்து இந்த விழாவினைப் பார்த்தால் என்ன உணர்ச்சி வயப்படுவாரோ, அதே உணர்ச்சியோடு நான் உன்னை வாழ்த்துகிறேன்’’ என்றார்.

THE TIMES OF INDIA

"முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் திறந்து வைத்த திருவள்ளுவர் சிலை மிகச் சிறந்த நினைவுச் சின்னம் – அது, தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாட்டினை மட்டும் உணர்த்துவதல்ல – தீமைக்கு எதிராகப் போராட வேண்டும் என்ற பண்பினையும் விளக்குகிறது" – என்று எழுதியிருந்தது,
'டைம்ஸ் ஆப் இண்டியா'
ஆங்கில ஏடு!

நம்முடைய பேராசிரியரோ திருக்குறளுக்கு தான் ஆற்றியப் பணிகளுக்கு சிகரமாக "திருவள்ளுவர் சிலை அமைத்த கலைஞரின் புகழ் - வள்ளுவரின் சிலைபோல - திருக்குறள்போல நிலைத்து நிற்கும்" என்றார். மேலும் அவர், "கலைஞர் அவர்களே! நீங்கள் உங்களின் மிகப் பெரிய ஆசையை நிறைவேற்றி விட்டதற்காக மகிழ்கிறேன் என்று சொன்னீர்கள். உங்கள் ஆசையை நிறைவேற்றிவிட்டதாகச் சொல்லி நீங்கள் மகிழ்கிறீர்கள், நாங்களும் மகிழ்கிறோம் - எங்கள் ஆசையை நிறைவேற்று வதற்கு நீங்கள் தொடர்ந்து வாழவேண்டுமென்று வாழ்த்து கிறேன்!" என்றார்.

இன்றைக்கு என்னைத் திட்டித் தீர்க்கும் ம.தி.மு.க.வின் பொதுச் செயலாளர் தம்பி **வைகோ,** அன்றைக்கு அந்த விழாவிலே பேசும்போது, "கலைஞர் அவர்களே! நீங்கள் குறளோவியம் தீட்டினீர்கள், வான் புகழ் வள்ளுவனுக்கு கோட்டம் கண்டீர்கள். இன்று சிலையைத் திறந்து வைத்திருக் கின்றீர்கள். இன்னும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் வரும். அப்பொழுதெல்லாம் இந்த நாளை தமிழ்க் குலம் நினைவிலே வைக்கும். இந்த நாளும், நீங்களும் வரலாற்றின் பொன் எழுத்துக்களிலே நிலைத்து நிற்பீர்கள்" என்றார். இப்போது அவர் திட்டுகின்ற வார்த்தைகள் என் மனதிலே நிற்பதில்லை - அன்றைக்கு அவர் வாழ்த்தியது தான் நினைவிலே உள்ளது.


4-1-2000 தேதியிட்ட **"தினமணி"** தனது தலையங்கத்தில், "குமரி முனையில் நடைபெற்ற இவ்விழாவில் உலகெங்கும் வாழ்ந்துவரும் தமிழ்ச் சமூகங்களின் பிரதிநிதிகள் பங்கு கொண்டிருக்கிறார்கள். முதல்வர் கருணாநிதி முன்னின்று எடுத்த இவ்விழா சர்வ கட்சி விழாவாகவே நடைபெற்றிருக் கிறது. சென்னையில் தனித்த வடிவத்தில் வள்ளுவர் கோட்டத்தை எழுப்பிய கருணாநிதியே - திருவள்ளுவர் சிலையையும் திட்ட மிட்டு எடுத்திருக்கிறார். இச்சிலை கணபதி ஸ்தபதியின் கைவண்ணத்துக்கு மட்டுமின்றி, முதல்வர் கருணாநிதியின் தமிழ் உள்ளத்துக்கும் நிலைத்த சான்றாக விளங்கக் கூடியது!" என்று எழுதியிருந்தது.

6. சேலத்தில் தொடர்ந்த கலையுலக நிகழ்வுகள்!

2000ஆம் ஆண்டு, ஜனவரி, 1ந் தேதியன்று அய்யன் வள்ளுவரின் சிலையினைத் திறந்து வைத்த நான், அதற்கடுத்த சில நாட்களில் சென்னையிலே ஒரு சிலையினைத் திறந்து வைக்க அழைக்கப்பட்டேன்.

அந்தச் சிலைக்குரியவர்-சீர்திருத்த எண்ணங்கள்-முற்போக்குக் கருத்துக்கள் - மக்களிடத்திலே பரவ வேண்டுமென்பதில் துடிப்பு மிக்கவராக விளங்கிய-**டி.ஆர்.எஸ்.** என்று கலையுலகத்தினரால் அழைக்கப்பட்ட **டி.ஆர்.சுந்தரம்** அவர்களின் சிலையாகும். தென்னிந்திய திரைப்பட வர்த்தகச் சபை வளாகத்தில் நிறுவப்பட்டிருந்த அவருடைய சிலையினைத் திறக்க நான் அழைக்கப்பட்டிருந்தேன்.

சற்றொப்ப 60 ஆண்டுகளுக்கு முன்பு, நான் டி.ஆர். சுந்தரம் அவர்களைச் சந்தித்தேன். நான் அவரைச் சந்திப்பதற்கு முன்பே, அவர் என்னுடைய எழுத்துக்களைச் சந்தித்தார். எங்கே சந்தித்தார் என்றால், கும்பகோணத்தில் நடைபெற்ற ரத்தினம் கம்பெனியாருடைய **"மந்திரி குமாரி"** நாடகத்தில் சந்தித்தார்.




அப்போது நான் அவர் பக்கத்திலே இல்லை. அவரை அழைத்துச் சென்று, அந்த நாடகத்தை நேரடியாகக் காட்டியது என்னுடைய அருமை நண்பரும், நான் அண்ணன் என்று அன்போடு அழைத்த வருமான

கவி **கா.மு. ஷெரீப்** அவர்களும், **திரு. மருதகாசி** அவர்களும் ஆவார்கள்.

நாடகத்தைப் பார்த்துவிட்டு சேலம் சென்றதும், உடனடியாக என்னை வரும்படித் தந்தி கொடுத்தார்கள். நான் சென்றேன். ''மந்திரி குமாரி நாடகத்தைத் திரைப்படமாக எடுக்க வேண்டும். திரைக்கதை வசனம் தீட்டித் தர வேண்டும்!'' என்று கேட்டார்கள். அது ''பராசக்தி'' படம் வெளிவந்த காலக் கட்டம். அப்பொழுதுதான் மந்திரி குமாரியும் வெளிவந்தது.


மந்திரி குமாரி வெளிவந்ததைக் கண்டு, அதைக் காண சேலத்திற்கே கலைவாணர் என்.எஸ்.கே. அவர்கள் வந்து, சேலம் பேலஸ் தியேட்டரிலே அந்தப் படத்தைப் பார்த்துவிட்டு, சேலத்திலே இருந்த என்னை அவரது **''மணமகள்''** படத்திற்குக் கதை வசனம் எழுத வேண்டுமென்று கேட்டு, அதற்கும் நான் ஒப்புதல் அளித்ததும்; அப்போது தபால் துறையில் பணியாற்றிய எழுத்தாளர் நண்பர் **சேலம் வேங்கடசாமி** யோடு பழகியதும், அதன் பிறகு சென்னை வந்ததும் - இதெல்லாம் என்னுடைய கடந்த கால நினைவுச் சுழல்கள்!

திரையுலக ஜாம்பவான்களில் ஒருவர் தான் டி.ஆர்.சுந்தரம். சேலம் மாடர்ன் தியேட்டரில் அவரை **''முதலாளி''** என்று தான் எல்லோரும் அழைப்பார்கள். டி.ஆர்.எஸ். என்பது எங்களைப் போன்ற சிலர் மட்டுமே உரிமையோடு சொல்கின்ற பெயர். என்னுடைய நெருங்கிய நண்பர்களில் ஒருவரான கவிஞர் கண்ணதாசன் அங்கேயிருந்த காலக் கட்டத்தில்தான் நான் மந்திரி குமாரி படத்திற்காக வசனம் எழுத அங்கே அழைக்கப்பட்டேன்.



டி.ஆர். சுந்தரம்

அதற்குப் பிறகுதான் **''திரும்பிப்பார்''** திரைப் படம். திரும்பிப்பார், **தேவகி,** மந்திரி குமாரி போன்ற படங்களுக்கு முழுமையான திரைக்கதை வசனம் எழுதியவன் என்றபோதிலும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடைய **''எதிர் பாராத முத்தம்''** என்ற கதையை, **''பொன்முடி''** என்ற பெயரில் தயாரித்த போது,




டி.ஆர். சுந்தரம் அவர்களின் சிலை திறக்கப்பட்ட
இந்தத் திரைப்பட வர்த்தக சபை வளாகத்தில்தான்...

ஜலகண்டபுரம் **ப. கண்ணன்** அவர்கள் எழுத, சில காட்சிகளை கண்ணன் மற்றும் டி.ஆர்.எஸ். ஆகியோருடைய விருப்பத்தின் பெயரில் உரையாடல்களை நான் எழுதித் தந்தேன். அதைப் போலவே **''திகம்பர சாமியார்''** படத்தில் சில காட்சி களையும் நான் எழுதித் தந்தேன்.

டி.ஆர். சுந்தரம் அவர்களிடத்தில் கண்டிப்பும் இருக்கும் - கடமை உணர்வும் இருக்கும். அதே நேரத்தில், அவரிடம் வேலை செய்பவர்களுக்கு எந்தவிதமான மனக் கஷ்டமும் இல்லாமல் பழகுவார். அப்படி அவர்களை நடத்துவார். எல்லாவற்றிலும் கறாராக இருப்பார். யாருக்கும் தரப்பட வேண்டிய ஊதியம் - ஒரு படத்திற்காக பேசப்பட்ட சம்பளம் - போன்றவைகளில் ஒரு நயா பைசா பாக்கி இல்லாமல் தருவதில் டி.ஆர். சுந்தரத்திற்கு இணை டி.ஆர். சுந்தரம் அவர்கள்தான் என்று அவரை அந்தக் காலத்திலேயே பாராட்டு வார்கள்.

அவரை ''முதலாளி'' என்று அழைப்பார்கள் என்று சொன்னேனே, அதற்குத் தகுந்தாற்போல்தான் அவர் நடந்து கொள்வார். அவர் ஒரு நாற்காலி போட்டு, ஒரு மரத்தடியிலே உட்கார்ந்திருப்பார். பேச வேண்டுமென்று யாரையாவது அழைப்பார். ஆனால், அவர்களுக்கு இன்னொரு நாற்காலி அங்கே போடப்படமாட்டாது. என்னைப் போன்றவர்கள், புரட்சிக் கவிஞரைப் போன்றவர்கள் வந்தால், கூடுதலாக ஒரு நாற்காலி கொண்டு வந்து போடப்படும். நாங்கள் அங்கே



ஜெமினி அதிபர் திரு.வாசன் மற்றும் ஏ.வி.எம்.நிறுவன அதிபர் திரு.ஏ.வி.மெய்யப்பன் சிலைகளையும் நான் திறந்து வைத்தேன்.

யிருந்து எழுந்து விட்டால், அந்த நாற்காலியும் அந்த இடத்தி லிருந்து உடனடியாக எடுக்கப் பட்டுவிடும். அப்படிப்பட்ட ''முதலாளி'' யாக கடைசிவரை அவர் விளங்கினார்.

திருச்சி சிறைச்சாலையிலே கல்லக்குடி போராட்டம் என்று கருதுகிறேன் - நான் இருந்தேன். டி.ஆர்.எஸ். திருச்சி சிறைச் சாலைக்கு வந்து என்னைப் பார்த்து, ''திரும்பிப்பார்'' படத்தை வெளியிடப் போவதில்லை'' என்றார். காரணம் கேட்டபோது, ''அந்தப் படத்தில் இரண்டாயிரம் அடியை வெட்டினால் தான் வெளியிட அனுமதிப்பேன் என்று ''சென்சார்'' அதிகாரி கூறிவிட்டார் - இரண்டாயிரம் அடியை வெட்டிவிட்டு எதை வெளியிடுவது?'' என்றார்.

''எந்தெந்த வசனங்களை வெட்டச் சொல்கிறார்கள்?'' என்று நான் அவரிடம் கேட்டேன்.

''கொள்கை முழக்கம் செய்வதற்காக கோபுரம் ஏறி நிற்கின்ற தலைவர்களே! அந்தக் கொள்கையிலிருந்து எத்தனை முறை நீங்கள் வழுக்கி விழுந்திருக்கிறீர்கள்? ஒரு முறை திரும்பிப் பாருங்கள்!'' என்ற வசனம் வெட்டப்பட்டுள்ளவற்றில் ஒன்றாகும் - என்றார்.

ஏன் இதை வெட்டச் சொல்கிறார்கள் என்று கேட்டபோது, - ''அந்தக் காலத்தில் திருக்கோஷ்டியூர் கோயில் கோபுரத்தி லிருந்து ராமானுஜர் கீழே குதித்தார். அதைக் கருணாநிதி இந்த

வசனத்தின் மூலம் கிண்டல் செய்திருக்கிறார்- ஆகவே அதை அனுமதிக்க மாட்டோம்'' என்று சொன்னார்களாம்.

இதற்காக டி.ஆர்.எஸ். கோபித்துக் கொண்டு படத்தையே வெளியிடுவதில்லை என்று முடிவெடுத்த போது, **திரு.ஏ.வி.எம்.** அவர்களும், திரு. **எஸ்.எஸ்.வாசன்** அவர்களும்தான் **டி.ஆர். எஸ்.** அவர்களைச் சமாதானம் செய்து படத்தை வெளியிடச் செய்தார்கள்.



நான் கதை வசனம் எழுதிய ''திரும்பிப்பார்'' திரைப்படத்தில் சிவாஜி கணேசன்.

இத்தகைய புகழுக்குரிய டி.ஆர்.எஸ். அவர்களின் சிலையினை நான் திறந்து வைத்து, அவரது அருமை பெருமை களையெல்லாம் அந்த விழாவிலே பேசினேன்.

★★★

''அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஒருவருக்கொருவர் மனிதாபிமானத்தோடு பழக வேண்டும் - வெறுப்புணர் வோடு பேசிக் கொள்ளக்கூடாது - பண்பாடு அரசியல் கட்சி களிடையே வளர வேண்டியது மிகவும் முக்கியம்-இந்தியாவில் மற்ற மாநிலங்களில் - டெல்லியில் இப்படித்தான் அரசியல் மேடைகளில் எதிரெதிர்க் கொள்கைகளை விமர்சிக்கும் தலைவர்கள் தனியாகச் சந்திக்கும்போது எந்த அளவிற்குப் பழகுகிறார்கள்!'' என்பதை யெல்லாம் நான் பல முறை கூறியிருக்கிறேன்.

உதாரணமாக, தி.மு.கழகத்திற்கும், அ.தி.மு.க.விற்கும் இடையே பகை உணர்வு இருந்தபோதிலும், அ.தி.மு.க. வின் அவைத் தலைவராக இருந்த **நாவலருக்கு** 2000ஆம் ஆண்டு, ஜனவரியில் திடீர் மாரடைப்பு ஏற்பட்டு, ''அப்பல்லோ'' மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தபோது, அவர் அ.தி.மு.க.வின் அவைத் தலைவர் என்று எனக்குத் தெரியவில்லை. அவர்



நான் எழுதிய, டி.ஆர்.சுந்தரம் இயக்கிய ''மந்திரி குமாரி''யில் எம்.ஜி.ஆர்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அவைத் தலைவராக - பொதுச் செயலாளராக - இருந்ததுதான் நினைவுக்கு வந்தது.

செய்தி கேள்விப்பட்டதும், உடனடியாக மருத்துவ மனைக்குச் சென்று நாவலரைப் பார்த்தேன். அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்களை அழைத்து, அவரது உடல் நலம் குறித்துக் கேட்டறிந்தேன். மருத்துவமனையில் நாவலருடன் இருந்த அவரது துணைவி யாரையும், புதல்வரையும், இளவலையும் கண்டு நாவலரின் உடல் நலம் குறித்து விசாரித்துவிட்டுத்தான் டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றேன்.

அங்கிருக்கும்போதே நாவலர் மறைந்து விட்டார் என்ற செய்தி எனக்குக் கிடைத்தது. உடனடியாக விமானத்தைப் பிடித்து, சென்னைக்குத் திரும்பினேன். விமான நிலையத்தி லிருந்து நேரடியாக ஆழ்வார்பேட்டையிலே இருந்த நாவலர் இல்லத்திற்குச் சென்று, அவரது உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினேன். என்னுடன் **ஆர்க்காடு வீராசாமி, துரை முருகன், ஆலடி அருணா, தமிழ்க்குடிமகன்,** அப்போது மேயராக இருந்த தம்பி **ஸ்டாலின், சைதை கிட்டு** ஆகியோர் உடன் வந்தனர்.

ஆனால், அந்த நேரத்திலேகூட அவருடைய இல்ல வாசலில் காத்திருந்த அ.தி.மு.க.வினர் சிலர், அநாகரிகமாக நடந்து கொண்டனர். பிறகு என் இல்லம் திரும்பியவுடன், நாவலர் மறைவு குறித்து இரங்கல் செய்தியினை எழுதி, முரசொலி அலுவலகத்திற்கு அனுப்பி விட்டுத்தான் தூங்கச் சென்றேன். அந்த இரங்கல் செய்தியில் -



கலைவாணர் தயாரித்து இயக்கிய ''மணமகள்'' படத்தின்
கதை வசனத்தையும் நான் எழுதினேன்

நாவெல்லாம் தமிழ் மணக்க
செவியெல்லாம் தமிழ் மணக்க
சிந்தையெல்லாம் தமிழ் மணக்க
அன்று மேடையேறிய நாவலர் –
என் நண்பர்– தன்மான இயக்கத்தின்
தூண் சாய்ந்து விட்டதே எனத்
தமிழகம் புலம்பிட மறைந்து விட்டார்!
அவர் புகழ் வாழ்க!
அவர் பரப்பிய பகுத்தறிவு வெல்க!

– என்று குறிப்பிட்டிருந்தேன்.

★★★

21-1-2000 அன்று எனது தலைமையில் தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகளின் கூட்டம் சென்னையில் நடை பெற்றது. அந்தக் கூட்டத்தில் அடுத்து நடைபெறவிருந்த மூன்று சட்ட மன்றத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்களில், திருச்சி இரண்டாவது தொகுதியிலும், நெல்லிக் குப்பத்திலும் தி.மு.கழக வேட்பாளர்களை நிறுத்துவதென்றும்-அறந்தாங்கியில் எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. சார்பில் வேட்பாளரை நிறுத்துவ தென்றும் முடிவெடுக்கப்பட்டது. திருச்சி இரண்டாவது தொகுதியில் அன்பில் பெரியசாமியும், நெல்லிக்குப்பம்



பெரும் பரபரப்பை உண்டாக்கிய - நான் எழுதிய ''பராசக்தி''யில் சிவாஜி கணேசனுடன் எஸ்.எஸ். இராஜேந்திரன்

தொகுதியில் பேராசிரியர் வி.சி.சண்முகமும் கழக வேட்பாளர் களாக நிறுத்தப்பட்டார்கள்.

அந்த இடைத் தேர்தல்களில் தி.மு.கழகத்தை நேரடியாக எதிர்த்த அ.தி.மு.க.வுக்கு ஆதரவளிக்க த.மா.கா. முடிவு எடுத்தது. அதைப்பற்றி அப்போது செய்தியாளர்கள் என்னிடம் கேட்ட போது **''அது ஒரு காலச் சுழல்''** என்று மட்டும் பதிலாகக் கூறினேன்.

அந்த இடைத் தேர்தல்களில் அ.தி.மு.க.வுக்கு ஆதரவு அளிப்பது என்ற த.மா.கா.வின் முடிவில் அதிருப்தி அடைந்த அந்தக் கட்சியின் சட்டப் பேரவை உறுப்பினராக இருந்த திரு. **ஆர். சொக்கர்** தனது பதவியை ராஜினாமா செய்தார்.

அப்போது அவர் சட்டப்பேரவையில் த.மா.கா. கட்சியின் கொறடாவாகச் செயலாற்றி வந்தார். அவர் பேரவைத் தலைவருக்கு எழுதிய கடிதத்தில், ''பொது வாழ்க்கையில் எப்படி வேண்டுமானாலும் நடந்துகொண்டு, பதவியில் இருக்கலாம் என்று எண்ணாமல், இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற எண்ணமே என்னிடம் மேலோங்கி நிற்கிறது. தலைவருடைய தன்மானத்தை அடகு வைத்தால்தான் தங்களுக்கு அரசியலில் எதிர்காலம் இருக்கும் என்று முடிவெடுக்கப்பட்ட இந்தச் சூழ்நிலையில் எனக்கு இந்த எம்.எல்.ஏ. பதவி என்பது சுகமாகத் தெரியவில்லை. தாங்க முடியாத சுமையாகவே

இருக்கின்றது. எனவே தமிழகச் சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்கிறேன்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

மூப்பனாரின் அந்த முடிவுபற்றி ம.தி.மு.க.வின் பொதுச் செயலாளராக இருந்த தம்பி **வைகோ** செய்தியாளர்களிடம் கூறும் போது -



புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் எதிர்பாராத முத்தம் பொன்முடி என்ற பெயரில் தயாரிக்கப்பட்ட போது, அதன் சில காட்சிகளுக்கும்...

''அ.தி.மு.க.வுக்கு ஆதரவு தந்ததற்காகப் பின்னர் மூப்பனார் வருத்தப்படுவார்'' என்று கூறினார்.

ஆனால் அப்போது பேரவைத் தலைவராக இருந்த **பி.டி.ஆர்.பழனிவேல்ராசன்** சொக்கரின் பதவி விலகலை ஏற்கவில்லை. அதைப்பற்றி பேரவைத் தலைவர் எனது கருத்தைக் கேட்டபோது, ''சொக்கர் தனது எதிர்ப்பைக் காட்டி விட்டார் - அதுவே போதும் - பதவியில் தொடரக் கோரலாம்!'' என்று கூறினேன்.

அந்த மூன்று சட்டப் பேரவைத் தொகுதிகளிலும் இடைத் தேர்தல் நடைபெற்று முடிந்தவுடன், திருச்சி 2 சட்டப் பேரவைத் தொகுதியில் அ.தி.மு.க. கொடுத்த புகாரின் அடிப் படையில், இடைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கையை ஒத்தி வைப்பதாகத் தேர்தல் கமிஷன் அறிவித்தது. ''இடைத் தேர்தல் குறித்து சில புகார்கள் வந்திருப்பதாகவும், அவைகளை விசாரிக்கின்றவரையில் வாக்கு எண்ணிக்கை நடைபெறாது'' என்றும் தேர்தல் கமிஷன் கூறியது.

25-2-2000 அன்று, நெல்லிக்குப்பம், அறந்தாங்கி தொகுதி களில் வாக்கு எண்ணிக்கை நடைபெற்றபோது, இரண்டு இடங்களிலும் தி.மு.கழகக் கூட்டணியின் வேட்பாளர்கள்




திகம்பரசாமியார் என்ற படத்தின் சில காட்சிகளுக்கும், திரு.டி.ஆர்.சுந்தரம் கேட்டுக் கொண்டதால், நான் வசனம் எழுதினேன்

வெற்றி பெற்றனர். திருச்சி தொகுதியைப் பொறுத்த வரை, தேர்தல் ஆணைய அதிகாரி ஒருவர் திருச்சிக்கு வருகை தந்து, பொது மக்களிடமும், அரசியல் கட்சித் தலைவர்களிடமும் ''ஏதாவது முறை கேடுகள் வாக்குப் பதிவின் போது நடந்ததா?'' என்று விசாரணை நடத்தினார். அவரது அறிக்கையைப் பெற்றுக் கொண்ட தலைமைத் தேர்தல் ஆணையர் **எம்.எஸ்.கில்** அவர்கள் - ''அ.தி.மு.க.வின் குற்றச்சாட்டு ஆதார மற்றது'' என்று கூறி, ''திருச்சியில் வாக்கு எண்ணிக்கையை நடத்தலாம்'' என்று அறிவித்தார். அதன்படி வாக்கு எண்ணிக்கை நடைபெற்று, தி.மு.கழக வேட்பாளர் தம்பி **அன்பில் பெரியசாமி** வெற்றி பெற்றார்.

★★★

2000ஆம் ஆண்டில், சிங்கப்பூர் பிரதமராக இருந்த திரு. **கோ சோக் டாங்** அவர்கள் இருபது அலுவலர்கள் அடங்கிய உயர்நிலைக் குழுவினருடனும், 23 வர்த்தக நிர்வாகிகளுடனும் சென்னைக்கு வருகை தந்தார்.

நானும், தலைமைச் செயலாளரும் மற்றும் தமிழக அரசின் உயர் அதிகாரிகள் சிலரும், சிங்கப்பூர் பிரதமர் அவர்களையும், அவருடைய குழுவினரையும் சந்தித்து, சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் தமிழகத்தில் முதலீடு செய்வதற்கு - குறிப்பாக தகவல் தொழில்நுட்பத் துறையில் முதலீடு செய்வதற்கு உள்ள வாய்ப்புகள் குறித்து எடுத்துரைத்தோம். இந்தியாவில் தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழகம் முன்னணி மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்ந்து வருவதை நான்



நாவலர். நெடுஞ்செழியன்

எடுத்துக் கூறியதோடு, தமிழகத்தில் மிகவும் குறைந்த, நியாயமான செலவில் கிடைக்கும் மிகச் சிறப்பான கட்டமைப்பு வசதிகள் - மேம்பட்ட மனித வளங்கள் ஆகியவை குறித்தும் விளக்கினேன்.


என்னுடைய வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசிய சிங்கப்பூர் பிரதமர், சிங்கப்பூருக்கும் தமிழ்நாட்டிற்கும் இடையில் ஏற்கனவே உள்ள வலுவான பண்பாட்டு மொழியியல், தொடர்புகளை மேலும் வளர்க்க தமது வருகையும், 1999 ஜனவரியில் நான் சிங்கப்பூர் நாட்டிற்குச் சென்றதும் வழிவகுக்கும் என்று குறிப்பிட்டார். சிங்கப்பூர் பிரதமருக்கு நான் ஒரு விருந்தளித்தேன். திருவள்ளுவர் சிலை ஒன்றினையும் அன்பளிப்பாக அவருக்கு அளித்தேன்.

★★★

1999ஆம் ஆண்டு, டிசம்பர் 24ந்தேதி நேபாளத் தலைநகர் காத்மாண்டிலிருந்து 155 பேருடன் டெல்லிக்குப் புறப்பட்ட இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் நடுவானில் கடத்தப்பட்டது.

1994ஆம் ஆண்டு முதல், இந்தியச் சிறையில் இருந்துவந்த காஷ்மீர் தீவிரவாத அமைப்பின் தலைவர் **மௌலானா மசூத் அசார்** உட்பட 36 தீவிரவாதிகளை விடுவிக்கவேண்டும் - என்பதே அவர்களின் கோரிக்கை.

ஆயுதமேந்திய ஐந்து பயங்கரவாதிகளின் பிடியில் எட்டு நாட்களாக பிணைக் கைதிகளாகி சித்திரவதைக்கு ஆட்பட்ட 155 பயணிகளும், விமானக் குழுவினரும் டிசம்பர் 31ந்தேதி மாலை விடுதலை அடைந்தனர். அனைவரும் அன்றிரவே டெல்லி திரும்பினர். விமானத்தைக் கடத்திய ஐந்து பயங்கர வாதிகளின் நிபந்தனைப்படி - இந்தியச் சிறையிலே இருந்த



தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் கலந்துகொள்ள டெல்லி சென்றிருந்த நான், நாவலரின் மறைவுச் செய்தி கிடைத்தவுடன், சென்னை திரும்பி, அவர் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினேன்.

மூன்று கொடிய தீவிரவாதிகளை விடுதலை செய்து, காந்த ஹாரில் தலிபான்களிடம் ஒப்படைத்த பிறகே, பயணிகள் விடுவிக்கப்பட்டனர்.


மௌலானா மசூத் அசார், முஷ்டாக் அகமது சர்கார் என்கிற லாட்ராம், அகமது உம்மர் சையது ஷேக் என்ற மூன்று கொடிய தீவிரவாதிகளை காஷ்மீரச் சிறையிலிருந்து விடுதலை செய்து - தனி விமானத்தில் டெல்லிக்கு அழைத்து வந்தனர். பிறகு டெல்லியிலிருந்து மற்றொரு தனி விமானத்தில் வெளியுறவுத் துறை அமைச்சர் **ஜஸ்வந்த் சிங்** - ஆப்கானிஸ்தானில் உள்ள காந்தஹார் நகருக்கு அழைத்துச் சென்று, அங்கே தலிபான் ராணுவத்திடம் அவர்களை ஒப்படைத்தார்.

கடத்தப்பட்ட இந்திய விமானம் நிறுத்தப்பட்ட இடத் திலிருந்து, இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் ஜஸ்வந்த் சிங் சென்ற விமானம் இறங்கி நின்றது. அத்தகவல் கிடைத்த பிறகு - ஐந்து தீவிரவாதிகளும் தாங்கள் கடத்திய இந்திய விமானத் திலிருந்து கையில் ஆயுதங்களுடன் கீழே இறங்கி - ஜஸ்வந்த் சிங்கின் விமானம் இருந்த இடத்துக்குக் காரில் சென்றனர். அங்கு மற்றொரு காரில் ஜஸ்வந்த் சிங்கும் மூன்று தீவிர

வாதிகளும் இருப்பதைக் கார் கண்ணாடி வழியாகப் பார்த்து, உறுதி செய்துகொண்ட பிறகு, தலிபான் வீரர்களுடன் விமான நிலையத்தை விட்டு வெளியேறினர்.

கடத்தல்காரர்கள் இறங்கிச் சென்ற பிறகும், இந்திய விமானத்திலிருந்து யாரும் இறங்கி வராததால், சர்வ தேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் மற்றும் இந்திய அதிகாரிகள் கலக்கமடைந்தனர். விமானத்திற்கருகே ஓடிச் சென்று பார்த்தனர். எட்டு நாட்களாக நடமாட முடியாமல் முடங்கி யிருந்த பயணிகள் மெதுவாக எழுந்து வருவதைக் கண்டதும் நிம்மதி அடைந்தனர். பத்து மணி நேரத்திற்குள் ஆப்கானிஸ் தானத்தைவிட்டே வெளியேற வேண்டுமென்று ஐந்து பயங்கர வாதிகளுக்கும் நிபந்தனை விதிக்கப்பட்டதாக நிருபர்களிடம் ஜஸ்வந்த் சிங் தெரிவித்தார். ''விமானப் பயணிகள் மற்றும் அதன் ஊழியர்கள் பாதுகாப்பைக் கருதியும், நாட்டின் ஒட்டு மொத்த நலனைக் கருத்தில் கொண்டும், விமானக் கடத்தல் காரர்களிடம் மூன்று தீவிரவாதிகளை அரசு ஒப்படைத்தது'' என்று பிரதமர் **வாஜ்பய்** தெரிவித்தார்.

கடத்தப்பட்ட விமானத்தில் தமிழகத்தைச் சேர்ந்த எட்டு பயணிகள் இருந்தார்கள். அவர்களும் பத்திரமாக டெல்லியி லிருந்து சென்னை வந்து சேர்ந்தார்கள். தமிழக அரசின் சார்பில்



திருச்சி சிவாவும், கோவை க.ரா.சுப்பையனும் மாநிலங்களவை உறுப்பினர்களாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றனர்.

அப்போது அமைச்சராக இருந்த திருமதி **சற்குணப் பாண்டியனை** விமான நிலையத்திற்கு அனுப்பி, அந்தப் பயணிகளை யெல்லாம் வரவேற்று, அவரவர்கள் தங்கள் இல்லம் திரும்ப அரசின் சார்பிலேயே கார்கள் ஏற்பாடு செய்யப்பட்டு - அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

★★★

2000ஆம் ஆண்டு, ஜனவரித் திங்களில் மாநிலங்களவையில் தமிழகத்தின் சார்பில் இடம் பெற வேண்டிய இரண்டு இடங் களுக்கான தேர்தல் நடைபெற்றது. அப்போது தி.மு.கழகக் கூட்டணியில் இருந்த தமிழக ராஜீவ் காங்கிரஸ் மற்றும் எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. ஆகிய இரண்டு கட்சிகளும், தங்களுக்கு மாநிலங்களவைத் தேர்தலில் இடமளிக்க வேண்டு மென்று கோரிக்கை வைத்தனர்.

குறிப்பாக, மத்திய அமைச்சரவையில் பெட்ரோலியத் துறை அமைச்சராக இருந்த **வாழப்பாடி ராமமூர்த்தி,** மக்களவைத் தேர்தலில் வெற்றி பெறாததால், மீண்டும் அமைச்சராகும் வகையில் மாநிலங்கள் அவை தேர்தலில் தான் போட்டியிட விருப்பம் தெரிவித்தார்.

மேலும் அப்போது தி.மு.க.வுடன் கூட்டணியிலே இருந்த பா.ஜ.க., ம.தி.மு.க., உட்பட மற்ற தோழமைக் கட்சிகளும் தங்களுக்கு ஒரு இடம் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

இதைப்பற்றி விவாதித்து முடிவெடுப்பதற்காக கழகத்தின் நிர்வாகக் குழு கூட்டம் 8-1-2000 அன்று எனது தலைமையில் நடைபெற்றது. நிர்வாகக் குழுவில் ஒருவருக்கு ஓரிடத்தை அளித்தால், மற்றவர்களுக்கு வருத்தம் வரக்கூடுமென்ற நிலையில் இரண்டு இடங்களிலும் தி.மு.கழகமே நிற்ப தென்றும், அந்த இடங்களுக்கு **திருச்சி சிவாவையும்,** கோவை **க.ரா.சுப்பையனையும்** போட்டியிடச் செய்வதென்றும் முடிவெடுக்கப்பட்டது. அவ்வாறே அவர்கள் போட்டியிட்டு வெற்றி பெற்றனர்.

★★★

உலகம் தழுவி வாழும் தமிழ் மக்கள் தமிழ்க் கல்வி பெறவும், தமிழ் இலக்கியம், பண்பாடு, பாரம்பரிய வளம் இவற்றோடு தொடர்பு கொள்ளவும், உதவும் வகையில் தமிழ் இணையப் பல்கலைக் கழகம் நிறுவப்படும் என்று 8-2-1999இல் நடந்த தமிழ்நெட் 99 மாநாட்டில் நான் அறிவித்திருந்தேன்.

அதைத் தொடர்ந்து அரசுக்குப் பரிந்துரைகள் செய்ய டாக்டர் **எம்.ஆனந்தகிருஷ்ணன்** தலைமையிலே ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் - தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தின் நோக்கங்கள், பாடத் திட்டங்கள் குறித்து ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை வழங்க டாக்டர் **வா.செ.குழந்தை சாமியைத்** தலைவராகக் கொண்ட உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் பரிந்துரைகளைப் பெற்று தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தை அமைப்பதற்கான ஆணையினை 10-1-2000 அன்று பிறப்பித்தேன்.


12-1-2000 அன்று தேசிய வளர்ச்சிக் குழுவின் துணைக் குழு கூட்டத்தில் பங்கேற்பதற்காக டெல்லி சென்ற நான், பிரதமராக அப்போதிருந்த **வாஜ்பய்** அவர்களைச் சந்தித்து, ''சமச்சீர் வரியை அமல்படுத்துவது தொடர்பாக மத்திய அரசு காலக் கெடு எதையும் விதிக்கக் கூடாது'' என்று கேட்டுக் கொண்டேன். அது பற்றி பரிசீலிப்பதாகப் பிரதமர் உறுதியளித்தார்.

மேலும் மத்திய நிதி அமைச்சராக இருந்த **யஷ்வந்த் சின்கா,** உள்துறை அமைச்சராக இருந்த **அத்வானி** ஆகியோரையும் சந்தித்தேன். என்னுடன் மத்திய வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சராக இருந்த தம்பி **முரசொலி மாறன்** உடன் வந்தார்.

7. முல்லைப் பெரியாறும், முரட்டுப் பிடிவாதமும்!

8-2-2000 அன்று, மதுரை இரண்டாவது அமர்வு நீதி மன்றத்தில் ஒரு தீர்ப்பு கூறப்பட்டது. அது எந்த வழக்கிலே என்றால், 23-4-1997 அன்று மதுரையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கவுன்சிலராக இருந்த திருமதி **லீலாவதி** கொலை செய்யப்பட்ட வழக்கில் - திராவிட முன்னேற்றக் கழகத்தின் வட்டச் செயலாளராக இருந்த முத்துராமலிங்கம் உட்பட ஆறு பேர் உடனடியாகக் கைது செய்யப்பட்டு - வழக்கு முடிந்து - தீர்ப்பு கூறப்படும்வரை ஜாமீனில்கூட வெளியே வர அனுமதிக்கப்படாமல் வழக்கு நடை பெற்று - அந்த வழக்கிலே குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவருக்கும் ஆயுள் தண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டது.

23-4-1997 அன்று அந்தக் கொலை சம்பவம் நடந்த மறுநாளே சட்டப் பேரவையில் அது குறித்து ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது, அதற்கு நான்தான் பதிலளித்து உரையாற்றினேன். அந்தப் பதிலில் -




❁ "23-4-1997 அன்று காலை சுமார் 8.15 மணியளவில், இந்தியக் கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சேர்ந்த மாமன்ற உறுப்பினர் திருமதி லீலாவதி என்கிற குப்புசாமி அவர்களின் துணைவியார் கொலை செய்யப் பட்டுள்ளார். இந்தச் சம்பவத்தைக்

கண்ட லீலாவதியின் கணவர் குப்புசாமி மதுரை கீரைத் துறை காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்துள்ளார்.

❁ ‘‘அந்தப் புகாரில், தன் மனைவி திருமதி லீலாவதி மதுரை மாநகராட்சிக்கு 59வது வார்டில் போட்டியிட்டு மாமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார் என்றும், அதே வார்டில் அவருக்கெதிராக திருமதி வள்ளி, கருமலையான் என்கின்ற அண்ணாதுரையினுடைய துணைவியார் தோல்வி அடைந்து விட்டார் என்றும், அதற்குப் பிறகு கருமலையான் என்கின்ற அண்ணாதுரையும் - அவரது சகோதரர் முத்துராமலிங்கமும் - திருமதி லீலாவதியின் வீட்டிற்கு வந்து தகராறு செய்து அவரைப் பயமுறுத்திச் சென்றார்கள் என்றும், லீலாவதி வில்லாபுரம் பகுதிகளுக்குக் குடிநீர் விநியோகத்திற்காகத் தீவிர முயற்சி மேற்கொண்டபோது கருமலையான், முத்துராமலிங்கம் இருவரும் அவருக்கு எதிராகச் செயல்பட்டதின் காரணமாக முன் விரோதம் கொண்டு, 23-4-1997 காலை திருமதி லீலாவதி கடைக்குச் சென்றபோது, அவரை மேற்கண்ட இரு நபர்களும் மற்றும் நான்கு பேரும் சேர்ந்து அரிவாள் மற்றும் பயங்கர ஆயுதங்களால் தாக்கியதால், திருமதி லீலாவதி அதே இடத்தில் இறந்துவிட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.



மதுரையில், நான் திறந்து வைத்த பென்னி குயிக்கின் உருவச் சிலை.



முரசொலி மாறன்


❁ ‘‘லீலாவதியின் கணவர் குப்புசாமி கொடுத்த புகாரின் பேரில் கீரைத்துறை காவல் நிலையக் குற்ற எண். 334-97 பிரிவுகள் 147, 148, 324 மற்றும் 302 இந்திய தண்டனைச் சட்டத்தின் படி வழக்குப் பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

❁ ‘‘இந்த வழக்கில் கருமலை யான் என்கின்ற அண்ணா துரை கைது செய்யப்பட்டுள்ளார். மற்ற எதிரிகளையும் கைது செய்ய காவல் குழுக்கள் அமைக்கப்பட்டு, தீவிர புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்வது, இந்தக் கொலையிலே சம்பந்தப்பட்டவர்கள் ஆளும்கட்சியைச் சேர்ந்த தி.மு.க.வினர் என்றாலும்கூட, எந்தவிதமான தயவு தாட்சண்யமும் காட்டாமல், பாரபட்சமின்றி அரசு காவல் துறை நடவடிக் கைகள் எடுத்திருக்கிறது.

❁ ‘‘மறைந்தவர் அல்லது கொல்லப் பட்டவர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். அதே நேரத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு உங்களுடைய நினைவைத் திருப்புவீர்களேயானால், குடவாசலில் **தங்கையன்** என்ற ஒரு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர் கொல்லப் பட்டார். ஆனால், குற்றம் சாட்டப்பட்டவர்கள் அந்த ஆட்சியிலே அமைச்சர்களுடைய காரிலேயே பாதுகாக்கப் பட்டார்கள் என்பதை அனைவரும் அறிவீர்கள். எனவே ஆளும் கட்சியாக இருந்தாலும், எந்தக் கட்சியாக இருந் தாலும், குற்றம் செய்தவர்கள் கண்டிப்பாகத் தண்டிக்கப் படுவார்கள் - நடவடிக்கைக்கு ஆளாக்கப்படுவார்கள் - என்பதற்கு மேலும் ஒரு சான்றாக மதுரை மாநகரத்திலே

நடைபெற்ற இந்தப் படு கொலையை இந்த அரசு வன்மையாகக் கண்டிக் கிறது'' என்று கூறினேன்.

❁ ''இந்த வழக்கு நீதி மன்றத் திலே நடைபெற்ற சமயத்தில் கூட, நாகை தொகுதியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டப் பேரவை உறுப்பினராக இருந்த தோழர் **வீரையன்** அவர்கள் என்னைச் சந்தித்து, இந்த வழக்கிலே அரசு வழக்கறிஞராக வாதாட தங்கள் கட்சி விரும்பும் ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டு, அவரையே நியமிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். குற்றம்சாட்டப்பட்டிருப்பவர் தி.மு.க.வைச் சேர்ந்தவர் என்ற போதிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் விரும்பியவரையே அரசு வழக்கறிஞராக நியமித்து உத்தர விடச் செய்தேன் என்பதை இன்று வீரையன் அவர்களைக் கேட்டாலும் தெரிந்து கொள்ளலாம்''.




சேலம் இரும்பாலை

★★★

மதுரையில் கொலை நடந்த மறுநாள் சட்டமன்றத்திலே நான் இப்படிப் பேசியது எந்த அளவிற்குக் காப்பாற்றப்பட்டது என்பதற்கு உதாரணமாகத்தான், 8-2-2000 அன்று மதுரை நீதி மன்றத்திலே வழங்கப்பட்ட தீர்ப்பாகும். என்னுடைய கட்சிக் காரர்களே குற்றவாளிக் கூண்டிலே நின்றபோதும், இம்மி யளவும் ஆடாமல் அசையாமல் இருந்து, ஜாமீனில்கூட அவர்கள் வெளியே செல்லத் துணையாக இருக்காமல், அவர்கள் இந்த வழக்கிலேயிருந்து தப்பிக்கவும் வழிவகை செய்யாமல் நடந்து கொண்டதற்குச் சத்தியப்பூர்வமான சாட்சியமாக எனது பேச்சும் செயலும் இருந்ததை இதன் மூலம் அறியலாம்.

ஆனால், இந்த உண்மைகள்பற்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏடோ - அதன் தலைவர்களோ - தங்கள் ஏட்டிலே செய்தி



வைதீகத்தின் வைரி - சீர்த்திருத்தச் செம்மல்'' என்று அண்ணா பாராட்டிய பட்டுக்கோட்டை அழகிரியின் திருவுருவப் படத்தை நான் திறந்து வைத்தேன்.

வெளியிட்ட நேரத்திலேகூட, ஒரு வரி பாராட்டு தெரிவிக்க வில்லை. ஆனால் 1994ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியிலே அதே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர் ஒருவர் அன்றைய ஆளுங்கட்சியான அ.தி.மு.க.வினரால் கொல்லப் பட்ட நிகழ்ச்சியிலே குற்றவாளிகளைக் கைது செய்யாமல், அமைச்சர்களே தங்கள் காரிலே பாதுகாத்து அழைத்துச் சென்றனர்.

★★★

2000ஆம் ஆண்டில் சேலம் இரும்பாலையைத் தனியார் மயமாக்குவதற்கான முயற்சியில் வாஜ்பய் அவர்கள் பிரதமராக இருந்தபோது ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அந்தத் தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதைப்பற்றி 19-2-2000 அன்று திருச்சியில் என்னைப் பேட்டி கண்ட செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு நான், ''சேலம் இரும்பு தொழிற்சாலை பற்றி எல்லா தொழிற்சங்கங்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக் கிறார்கள். மத்திய அரசு தனது முடிவினை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன். இந்திரா காந்தி அம்மையார் மத்தியில் ஆட்சியிலே இருந்தபோது, தி.மு.கழக ஆட்சியில் இருந்த நான், சேலம் இரும்பாலையை வாதாடிப் போராடிப் பெற்றவன் என்கின்ற முறையில், பொதுத் துறையில் இயங்கும் அந்த நிறுவனத்தைத் தனியாருக்குத் தருவது சரியல்ல என்பது எனது கருத்து. பிரதமர் அவர்கள் மறு பரிசீலனை



அழகிரியின் வாரிசுகளுக்கு, பேராசிரியர் முன்னிலையில்
தலா ஒரு லட்சம் ரூபாய் நிதியும் வழங்கினேன்.

செய்வார்கள் என்று நம்புகிறேன். மத்திய தொழில் மற்றும் வர்த்தக துறை அமைச்சர் திரு.**முரசொலி மாறன்** தற்போது வெளிநாட்டில் - சீனாவில் இருக்கிறார். அவர் வந்ததும் அவர் மூலமும் இதுபற்றிய கருத்தைப் பிரதமருக்குத் தெரிவிப்பேன்'' என்று கூறினேன்.

மீண்டும் 23-2-2000 அன்று மதுரையில் செய்தியாளர்கள் இதே பிரச்சினை குறித்து கேள்வி கேட்டபோது, ''சேலம் உருக்காலையைப் பொறுத்தவரையில் மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று ஏற்கனவே பிரதமரைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். சீனாவின் தலைநகரான பீகிங்கிலிருந்து என்னிடம் தொலைபேசியில் பேசிய மத்திய அமைச்சர் திரு.முரசொலி மாறனிடமும் இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். அவர் டெல்லி திரும்பியதும், இதைப்பற்றி பிரதமரிடம் பேசுவதாக என்னிடம் கூறியிருக்கிறார். இதனால் தொழிலாளர்கள் யாரும் பாதிக்கப்படமாட்டார்கள் என்பது மத்திய அரசின் விளக்கமாகும். இவைகளை யெல்லாம் கருத்திற் கொண்டு, பிரதமரிடம் விவாதித்து, ஒரு நல்ல முடிவு காண முடியும் என்று நம்புகிறேன்'' என்று கூறினேன்.

இவற்றைத் தொடர்ந்து பிரதமர் வாஜ்பய் அவர்களுக்கு ஒரு விளக்கக் கடிதம் எழுதினேன். அந்தத் தொழிற்சாலையை

தனியார் மயமாக்குவதின் மூலம் அந்த மாவட்டத்திலே உள்ள தொழிலாளர்கள் உட்பட பலரும் பாதிக்கப்படக்கூடும் என்பதால், பிரதமர் அவர்கள் இந்தப் பிரச்சினையிலே தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தி, தொடர்ந்து அந்த நிறுவனம் பொது நிறுவனமாக நடைபெற்றிட உதவிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன்.

சேலம் உருக்காலை தொடர்ந்து பொதுத்துறையிலேயே நடைபெற மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிற தீர்மானம் சட்டப் பேரவையிலே என்னால் முன்மொழியப்பட்டு, 8-3-2000 அன்று ஒருமனதாக நிறைவேறியது.

★★★

3-4-1949 தேதியிட்ட **"திராவிட நாடு"** இதழில் **பேரறிஞர் அண்ணா** அவர்கள் எழுதியதில் ஒரு பகுதி இதோ:-

"சுயமரியாதை இயக்கத்தின் சுடர்! தன்மதிப்பு இயக்கத்தின் தனிப் பெரும் தளபதி! மூடப் பழக்க வழக்கங்களை முறியடிக்கும் தலைவன்! வைதீகத்தின் வைரி! வருணா சிரமத்தின் விரோதி! சீர்திருத்தச் செம்மல்! சொற்செல்வன்! சோர்வற்ற உழைப்பாளி! தன்னலம் மறந்து தன் நாட்டுக்குப் பணியாற்றிய பண்புடை யோன்! அறிவுப் பாதையில் அங்கும் இங்கும் கிடந்த பள்ளம் படுகுழிகளை நிரப்பிய பகுத்தறி

சேடப்பட்டி முத்தையா | ரகுபதி | கருப்பசாமிப் பாண்டியன்


வாளன்! அறியாமையை அகற்ற அஞ்சா நெஞ்சுடன் அவனி சுற்றி வந்த ஆண்மையாளன்! கல்லடியா? கவலைப்படாதே! சொல்லடியா? சோர்வடையாதே! பகைவரின் படையா? பயப்படாதே! எதிர்க் கட்சியினரா? ஏமாந்துவிடாதே! சனாதனமா? சாய்ந்து விடாதே! சதியா? சாகடி! மதமா? அதனை மங்க வை! மாசுகளைத் துடை! மன்பதையின் மாணிக்கமாக விளங்கு! மரியாதையைப் பெறு! சுயமரியாதையைப் பெற்று சுக வாழ்வு வாழ முற்படு! இதுவே உன்னுடிடைய குறிக்கோளாக இருக்க வேண்டும்'' - என்று, எங்கு சென்றாலும் எக்காளமிட்டு, மூலை முடுக் கெல்லாம் முரசொலி கிளப்பி, தன்மான இயக்கத்தின் முன்னணித் தலைவனாக விளங்கி, அஞ்சா நெஞ்சுடன் அறிவுப் பணி புரிந்து வந்தவர் **அழகிரிசாமி''**

- அத்தகைய புகழுக்குரிய பகுத்தறிவுச் சிங்கம், பட்டுக் கோட்டை தளபதி அழகிரி அவர்களின் நூற்றாண்டு விழா தலைமைக் கழகத்தின் சார்பில், 16-3-2000 அன்று கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் தலைமையில் சென்னையில் கலைவாணர் அரங்கில் நடைபெற்றது.

அந்த விழாவில் இறுதியாக நான் உரையாற்றும்போது, ''அண்ணன் வழியிலே வந்து - அந்த அண்ணன் உருவாக்கிய திராவிட முன்னேற்றக் கழகத்தை - உடன்பிறப்புக்களாகிய உங்கள் அனைவருடைய உறுதுணையோடு நடத்திக் கொண்டிருக்கின்ற நாங்கள், எங்களையெல்லாம் ஆளாக்கிய அந்தத் தளபதியின் குடும்பத்திற்கு இந்த நூற்றாண்டு விழாவிலே செய்ய வேண்டிய கடமையைச் செய்தாக வேண்டும். எனவே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், பட்டுக்கோட்டை



மூவரும் 7500 அ.தி.மு.க. தோழர்களுடன் தி.மு.கழகத்தில் இணைந்தனர்.



எம்.ஜி.ஆரின் விசுவாசிகளாகிய எங்கள் உழைப்பை உறிஞ்சி தூக்கி எறிந்துவிட்டார் ஜெயலலிதா என்றார் சேடப்பட்டி முத்தையா

அழகிரி அவர்களின் குடும்பத்திற்கு ஐந்து இலட்ச ரூபாய் நிதி வழங்கப்படும்'' என்று அறிவித்தேன்.

16-3-2000 அன்று நடைபெற்ற நூற்றாண்டு விழாவில் நான் அறிவித்த தற்கேற்ப, 17-4-2000 அன்று அழகிரியின் வாரிசுகளான மகன்கள் **அழகிரி ராமமூர்த்தி, துலிப் அழகிரி,** மகள்கள் **டயானா, பேபி, ராணி** ஆகியோருக்கு தலா ரூபாய் ஒரு இலட்சத்திற்கான காசோலையை வழங்கினேன்.

★★★


அ.தி.மு.க.வைப் பொறுத்தவரையில் யாரை வேண்டுமானாலும், எந்த நேரத்திலும், அவர்கள் எத்தகைய தியாகங்களைச் செய்தவர்களாக இருந்தாலும் - அதைப்பற்றியெல்லாம் சிறிதும் எண்ணிப்பாராமல் - எப்போது வேண்டுமானாலும் கட்சியை விட்டு நீக்குவார்கள், அவர்களையே மீண்டும் நினைத்தால் எப்போதுவேண்டுமானாலும் சேர்த்துக் கொள்வார்கள். ஏன் விலக்கினார்கள், ஏன் சேர்த்துக் கொண்டார்கள் என்பதெல்லாம் அவர்களுக்கே வெளிச்சம். இதற்குப் பல எடுத்துக்காட்டுகள் உண்டு.

அப்படிப்பட்டவர்களில், மத்திய அமைச்சராகவும், பேரவையின் தலைவராகவும் இருந்த **சேடப்பட்டி முத்தையா,** முன்னாள் அமைச்சர் **ரகுபதி,** அ.தி.மு.க.வின் முன்னாள் துணைப் பொதுச் செயலாளர் **கருப்பசாமிப் பாண்டியன்** உட்பட ஐந்து பேரை 14-4-2000 அன்று ஜெயலலிதா திடீரென்று கட்சியிலிருந்து நீக்கினார். கொள்கைக்கும்

குறிக்கோளுக்கும் முரணான வழியில் அவர்கள் செயல்பட்ட தாகவும், கண்ணியத்துக்கு மாசு ஏற்படுத்தியதாகவும், கட்டுப்பாட்டை மீறி கட்சிக்குக் களங்கமும், அவப்பெயரும் ஏற்படுத்தியதாகவும் கூறி, அவர்களைக் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவி உட்பட - அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும் நீக்கப்படுவதாக காரணங்களைக் கூறினார், ஜெயலலிதா.

சேடப்பட்டி முத்தையா அந்தக் கட்சியின் முன்னாள் பொருளாளர் - கருப்பசாமிப் பாண்டியன் முன்னாள் துணைப் பொதுச் செயலாளர் - ரகுபதி முன்னாள் அமைப்புச் செயலாளர்.

தான் நீக்கப்பட்டதுபற்றி செய்தியாளர்களிடம் கூறிய சேடப்பட்டி முத்தையா, "சசிகலா பிடியில் சிக்கிக் கொண்டு கட்சியை ஜெயலலிதா அழித்து வருகிறார்" என்றும், கடந்த 17 ஆண்டுகளாக கட்சிக்காக தன் உழைப்பை, சிந்தனையை செலவழித்து வந்ததாகவும், அப்படிப்பட்ட தன்னை உழைப்பையெல்லாம் உறிஞ்சி, ஓடாக்கி விட்டு, தூக்கி எறிந்து விட்டதாகவும், அ.தி.மு.க.வை அழிக்க மன்னார்குடிக் கும்பல் செய்த சதியை இதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்" என்றும் தாங்கள் போற்றி மதித்த கட்சித் தலைமை தற்போது தன் சுயகட்டுப்பாட்டி லில்லை என்றும், ஒருவரைப் பிடிக்க வில்லை என்றால் அவர்மீது எத்தகைய பழியையும் சுமத்தத் தயங்காதவர் ஜெய லலிதா என்றும், காலம் காலமாக யாரைத் தன் தலை யிலே வைத்துப் போற்றிக் கொண் டாடி ஆடினேனோ



முல்லைப் பெரியாறு அணையை விளக்கும் மாதிரி வரைபடம்



அவர் தன்மீது அபாண்டமாக ஐந்து கோடி ரூபாய் வாங்கிய தாகப் பழி சுமத்துவதாகவும் கூறினார்.

முன்னாள் அமைச்சர் ரகுபதி அவர்களோ, தான் எந்தத் தவறும் செய்ய வில்லை என்றும், தன்மீது குற்றஞ் சாட்டுவது அபாண்டமானதென்றும், ஆண்டவனுக்கே அது பொறுக்காது என்றும், தனது வீட்டுத் திருமணத்திற்கு ஜெயலலிதா புதுக்கோட்டையில் அன்றைய தினம் இருந்தும்கூட வர வில்லை என்றும், ஆனால் தினகரன் இல்ல நிகழ்ச்சிக்காக திருவண்ணாமலைக்கே ஜெயலலிதா சென்றார் என்றும், ஒட்டு மொத்தமாக ஒரே நேரத்தில் ஒன்றிய, மாவட்டச் செயலா ளர்கள், பொதுக்குழு உறுப்பினர்களை விளக்கம்கூடக் கேட்கா மல் நீக்கியது செல்லாது - என்றும் கருத்து தெரிவித்தார்.

இவ்வாறு அ.தி.மு.க.விலிருந்து விரட்டப்பட்ட - அ.தி.மு.க.வின் முன்னாள் துணைப் பொதுச் செயலாளர் கருப்பசாமிப் பாண்டியனும் - முன்னாள் அமைச்சர் ரகுபதியும் 2-5-2000 அன்று சுமார் 7500க்கும் மேற்பட்ட அ.தி.மு.க.வின ருடன் - அந்தக் கட்சியிலிருந்து விலகி - திராவிட முன்னேற்றக் கழகத்திலே இணைந்தனர்.

அவர்களை அன்றைய தினம் இரு கையேந்தி வரவேற்ற தி.மு.கழகம் அவர்களைக் கழகத்திலே இணைத்துக் கொண்ட தோடு அப்படியே விட்டுவிட வில்லை. கருப்பசாமிப் பாண்டியனை மாவட்டக் கழகச் பொறுப்பாளராகவும், சட்டப் பேரவை உறுப்பினராகவும் ஆக்கியது! அது போலவே,

முன்னாள் அமைச்சர் ரகுபதி அவர்களை நாடாளு மன்ற உறுப்பினராக ஆக்கியதோடு மத்திய அமைச்சராகவும் அமர வைத்தது!!

★★★

முல்லைப் பெரியாறு மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் உற்பத்தியாகி - மேற்கு நோக்கி ஓடி - கேரள மாநிலத்தில் இடுக்கி மாவட்டத்தில் நுழைந்து - பின் அரபிக் கடலில் கலக்கின்ற ஒரு நதி. தென் மேற்குப் பருவக் காற்றின் மூலம் அதிகமான மழை நீரைப் பெற்று, பெருத்த வெள்ளத்தைக் கடலுக்குக் கொண்டு செல்லும் ஆறுகளில் அது மிகவும் முக்கியமானது.

இடுக்கி மாவட்டத்தில் அந்த ஆற்றின் நீர் குறைவாகப் பயன்படுவதால், மீதி இருக்கின்ற பெருத்த வெள்ளம் வீணாகக் கடலில் கலந்துவிடுவதைத் தடுத்து நிறுத்தி, தமிழ்நாட்டில் வறட்சியின் பிடியில் ஆண்டாண்டு காலமாகச் சிக்கிக் கொண்டு, விவசாயத்திற்கும் குடிநீருக்கும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் அன்றைய ஒன்றுபட்ட மதுரை மாவட்டம் - இராமநாத புரம் மாவட்ட மக்களுக்குக் கொடுக்க முடியுமா என்று அந்தக் காலத்தில் நம்மை ஆண்டு கொண்டிருந்த ஆங்கிலேய அரசு சிந்தித்தது.

மேற்கு நோக்கி ஓடிக் கொண்டு இருக்கும் முல்லைப் பெரியாறு நீரை அணை கட்டித் தடுத்து நிறுத்தலாம் - அந்த அணையில் தேங்கி நிற்கும் நீரை மலைகளைக் குடைந்து, குகை வழி மூலம் கிழக்கே திருப்பலாம் - அந்த நீரை மதுரை இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு அளிக்கலாம் என்று முடிவெடுத்து - 1895ஆம் ஆண்டு **லார்டு பென்னி குயிக்** என்ற வெள்ளைக்காரப் பொறியாளரால் முல்லைப் பெரியாறு அணை கட்டி முடிக்கப் பட்டது.

முல்லைப் பெரியாறு அணை கட்டி முடிக்கப்பட்ட 1895ஆம் ஆண்டு முதல், எந்தவிதமான பிரச்சினையும் இன்றி, 152 அடிவரை தண்ணீர் அணையில் தேக்கப்பட்டு, விவசாயி களுக்கு நல்ல முறையில் தண்ணீர் வழங்கப்பட்டு வந்தது.

1979ஆம் ஆண்டுதான் முல்லைப் பெரியாறு அணை யைக் குறித்த பிரச்சினையே உருவானது.

கேரளத்தில் சில அரசியல்வாதிகளும் பத்திரிகைக் காரர்களும் சேர்ந்துகொண்டு ஒரு புரளியைக் கிளப்பினார்கள். அதாவது, "முல்லைப் பெரியாறு அணை கட்டி முடித்து 86 ஆண்டுகள் ஆகப் போகின்றது, அணை மிகவும் பழமையாகி விட்டது. உடையும் அபாயம் இருக்கிறது. அப்படிப் பட்ட நிலை உருவாகுமானால், இடுக்கி மாவட்டமே அழிந்து விடும்" என்றெல்லாம் பத்திரிகைகளில் எழுதியும் - பொதுக் கூட்டங்களில் பேசியும் - ஒருவித பீதியை மக்கள் மனதில் கிளப்பிவிட்டார்கள். அதன் விளைவாக இந்தப் பிரச்சினை சட்ட மன்றத்திலும் எதிரொலித்தது. விளைவு?

பிரச்சினை மத்திய நீர்க் குழுமம்வரை சென்றது. அன்றைய தினம் மத்திய நீர்க் குழுமத்தின் தலைவராக இருந்த டாக்டர் **கே.சி. தாமஸ்** அவர்களும், அவர் குழுவினரும் முல்லைப் பெரியாறு அணையைப் பார்வையிட்ட பின் The Dam is safe and there is no need for panic என்று கூறினர்.

அதாவது - "அணை பாதுகாப்பாக இருக்கிறது, எனவே கவலை அடையத் தேவையில்லை!" என்றனர். இருந்தாலும் அணைக்குக் கீழே வாழும் கேரள மக்களின் அச்சத்தைப் போக்கும் வகையில், அணையின் வடிவமைப்பைப் பலப்படுத்தலாம், அப்போது இந்த அணை புத்தம் புதிய அணையைப்போல் வலுவாக நீண்ட காலத்திற்கு இருக்கும் என்று சில யோசனைகளையும் கூறினர்.

இந்த யோசனையைத் தமிழக அரசும் அன்று ஏற்றுக் கொண்டு, அணையைப் பலப்படுத்தும் பணியைச் செய்வதாக ஒப்புக் கொண்டது. அணையைப் பலப்படுத்தும் பணியை மூன்று கட்டமாகப் பிரித்தார்கள். அதாவது அவசரக் கால நடவடிக்கைகள் - இடைக்கால நடவ டிக்கைகள் - நீண்ட கால நடவடிக்கைகள்!

எந்தெந்த வேலைகளை எந்தெந்த காலக் கட்டத்தில் செய்ய வேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிட்டுவிட்டு, இப்பணிகள்

முடியும்வரை முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 136 அடிக்கு மேல் உயர்த்தக்கூடாது என்றும் அந்த ஒப்பந்தத்தில் அறிவுறுத்தப்பட்டது. எனினும் அவசரக் கால நடவடிக்கை மூலம் செய்ய வேண்டிய பணிகளும், இடைக் கால நடவடிக்கையாகச் செய்ய வேண்டிய பணிகளும் முடிவுற்றதும், அணையின் நீர் மட்டத்தை 136 அடியிலிருந்து 145 அடிவரை உயர்த்தலாம் என்றும் ஒப்பந்தத்தில் போடப் பட்டது. மத்திய நீர்க் குழுவின் வழிகாட்டுதலை ஏற்று, ஒப்பந்தத்தில் தமிழ்நாடு அரசு கையெழுத்திட்டு, பின் ஒவ்வொரு பணியை நிறைவேற்றும்போதும், நம்முடைய பொறியாளர்கள், கேரள மாநிலப் பொறியாளர்களின் ஒப்புதலைப் பெற்றே இரண்டு கட்டப் பணிகளையும் வெற்றிகரமாக முடித்திருக்கிறார்கள்.

அவசர, இடைக்கால நடவடிக்கைப் பணிகளை முடித்ததும், அணையின் நீர் மட்டத்தை 136 அடியிலிருந்து 145 அடிவரை உயர்த்தலாம் என்று ஒப்பந்தத்தில் விதி இருந்தும், அப்படி உயர்த்துவதற்கு கேரள அரசு மறுத்தது. ''முல்லைப் பெரியாறு அணை பலவீனமாக இருக்கிறது'' என்று கேரள அரசும், ''இல்லை, இல்லை - பலமாக இருக்கிறது'' என்று தமிழக அரசும் பல ஆண்டுக் காலமாக பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருக் கின்றன.

இங்கே ஒரு கேள்வி எழலாம். இரண்டு அரசுகளுக்கிடையே மத்திய நீர்க் குழுவின் முன்னிலையில் ஏற்பட்ட ஒப்பந்தப்படி தமிழ்நாடு அரசு அவசர - இடைக்கால நடவடிக்கைப் பணிகளை முடித்ததும், ஏன் நீர் மட்டத்தை உயர்த்தக்கூடாது - எதற்காக கேரள அரசிடம் போய்க் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும் - 1886ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி அணை தமிழ்நாடு வசம்தானே இருக்கிறது, பின் ஏன் இந்தப் போராட்டம் - என்று ஒரு கேள்வியைக் கேட்கலாம். இந்தக் கேள்வியில் உண்மையும் இருக்கலாம். ஆனால் பதில் கசப்பானது.

1979க்கு முன் முல்லைப் பெரியாறு அணை நம்மிடம் மட்டுமே இருந்தது. ஆனால், அதன் பின்னர் அணையின் இயக்கம் - அணையின் பாதுகாப்பு - பாதுகாக்கின்ற காவலர் -

படகுத் துறை - தேக்கடி பகுதியில் இருக்கும் நிலப் பகுதி - போன்றவைகள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக 1979ஆம் ஆண்டிற்கும் 1988ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில், கேரள அரசின் கைக்குப் போய் விட்டது. 1979க்குப் பிறகு முல்லைப் பெரியாறு அணையின் உரிமையெல்லாம் கேரளத் திற்கு விட்டுக் கொடுத்தது, அ.தி.மு.க. ஆட்சியின் கைங்கர்யம்!

என்னுடைய தலைமையில், தி.மு.கழக ஆட்சி 1989லும், 1996லும் வராமல் இருந்திருக்குமேயானால், முல்லைப் பெரியாறு அணையில் தமிழ்நாட்டுக்கு இருக்கும் மிச்ச சொச்ச உரிமையைக்கூட அ.தி.மு.க. ஆட்சி அடியோடு கை விட்டிருக்கும்.

காரணம், முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையில் அ.தி.மு.க., தான் ஆண்ட காலத்தில் அத்தகைய மெத்தனப் போக்கைத்தான் கடைப்பிடித்தது. அதற்கு ஒரு எடுத்துக்காட்டு கூற வேண்டுமேயானால், பெரியாறு பிரச்சினை குறித்து கேரள முதல்வருக்கு தமிழக முதல்வராக 1991 முதல் 1996 வரை இருந்த ஜெயலலிதா ஐந்தாண்டுகளில் எழுதிய கடிதம் ஒன்றே ஒன்றுதான்!

ஆனால், நான் முதலமைச்சராக இருந்த 1996 முதல் 2001 வரையிலான காலக் கட்டத்தில் நான் எழுதிய கடிதங்களில் எண்ணிக்கை 17. அதற்கு முன்பு 1989-1991இல் நான் முதல்வராக இருந்தபோது எழுதிய கடிதங்களின் எண்ணிக்கை 2. ஆக மொத்தம் 19.

ஜெயலலிதா அமைச்சரவையில் பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்தவர் இதற்காக எழுதிய கடிதங்களின் எண்ணிக்கை ஒன்று மட்டுமே. ஆனால் எனது அமைச் சரவையில், பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த தம்பி **துரைமுருகன்** எழுதிய கடிதங்களின் எண்ணிக்கை 10.

அமைச்சர் அளவில் கேரளாவுடன் அப்போது நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் என்னுடைய ஆட்சியில் இரண்டு முறை. ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் ஒரு முறைகூட இல்லை. முதலமைச்சர் அளவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் என்று

எடுத்துக்கொண்டால், என்னுடைய ஆட்சிக் காலத்தில் ஒரு முறை. ஜெயலலிதா காலத்தில் ஒரு முறைகூட பேசவில்லை.

இதையெல்லாம் மனதிலே கொண்டு தான் திராவிட முன்னேற்றக் கழகம் கண்டனக் கூட்டங்களை நடத்திட முடிவெடுத்தது.

முல்லைப் பெரியாறு பிரச்சினை தமிழகத்திற்கும் கேரளாவிற்கும் இடையே பல ஆண்டு காலமாக நீடித்து வருகின்ற ஒரு பிரச்சினையாகும். தி.மு.கழகம் எவ்வெப்போதெல்லாம் பதவிப் பொறுப்புக்கு வருகிறதோ அப்போதெல்லாம் அதிலே ஒரு தீர்வு காண்பதற்காக முயற்சி எடுத்துக் கொள்ளும்.

அந்த வகையில், 5-4-2000 அன்று முல்லைப் பெரியாறு பிரச்சினை குறித்து கேரள முதலமைச்சர் **திரு.ஈ.கே.நாயனார்** அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்து வதற்காகத் திருவனந்தபுரம் சென்றேன். என்னுடன் அமைச்சர்களாக இருந்த **ஆர்க்காடு வீராசாமி** அவர்களும், **துரைமுருகன்** அவர்களும் வந்தார்கள். திருவனந்தபுரம் சென்றடைந்த எங்களை விமான நிலையத்தில் கேரள மாநில பாசனத் துறை அமைச்சராக இருந்த **இராமகிருஷ்ண பிள்ளை**, மின்துறை அமைச்சராக இருந்த **சர்மா** ஆகியோர் வரவேற்று, பேச்சுவார்த்தை நடைபெற்ற ராஜீவ் காந்தி மாநாட்டு அரங்கிற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே கேரள முதல்வர் **நாயனார்** அவர்கள் எங்களை வரவேற்றார்.

பேச்சுவார்த்தையின்போது நான் ஆற்றிய உரை வருமாறு:-

- ‘‘பெரியாறு அணை பிரச்சினை தொடர்பாக விவாதித்துத் தீர்வு காண்பதற்காக நீண்ட இடைவெளிக்குப்பின் இன்று இங்கு நாம் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இக்கூட்டம் இப்பிரச்சினையில் தீர்வு காண்பதற்கு வழி வகுக்கும் என்று மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளேன்.

- ‘‘தமிழகமும், கேரளமும் அண்ணனும் தம்பியும்போல உறவுடைய நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ள மாநிலங்கள். 1886இல் முல்லைப் பெரியாறு ஒப்பந்தம் - 1970இல் நீர் மின் திட்ட ஒப்பந்தங்கள் - 1970இல்



முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை சம்மந்தமாக - நானே திருவனந்தபுரம் சென்று கேரள முதல்வர் திரு.ஈ.கே.நாயனாருடன் பேச்சு வார்த்தை நடத்தினேன்.

பரம்பிக்குளம் ஆளியாறு திட்ட ஒப்பந்தம் - கோவை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் சிறுவாணி ஒப்பந்தம் - ஆகியவைகளில் இரண்டு மாநிலங்களும் வழங்கிய ஒத்துழைப்புகள் இதற்கு ஆதாரமாகும்.

❁ ''தற்பொழுது அவசர மற்றும் நடுத்தரமான பணிகள் முடிக்கப்பட்டுள்ள நிலையில், கேரள அரசு அணையினுடைய பாதுகாப்புத் தொடர்பாக எந்த வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை; மத்திய நீர்வள ஆணையம் வழங்கிய அறிவுரைகளின்படி நீர் மட்டத்தினை 145 அடி அளவுக்கு உயர்த்திட உடனடியாக இசைவளித்திட வேண்டும். பேபி அணையை பலப்படுத்துவதும், கைப்பிடிச் சுவரைக் கட்டி முடிப்பதும் அணையினுடைய பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்துவதாகும். அந்த முயற்சிகளுக்கு எந்தவிதத் தடையும் தேவையில்லை. அணை பாதுகாப்பாக இல்லை என்று கூறுவதும், அதே நேரத்தில் அணையைப் பலப்படுத்தும் வேலைகள் மேற்கொள்ளப்படுவதைத் தடுப்பதும் முரண்பாடுகளைப் புலப்படுத்தும்.

❁ ''முதற்கட்டமாக பெரியாறு அணையின் நீரளவை 145 அடிக்கு உயர்த்தவும், தடுப்புச் சுவர் மற்றும் பேபி அணை பலப்படுத்துதல் பணி முடிவடைந்தவுடன் நீரளவை 152 அடிக்கு உயர்த்தவும் தமிழ்நாட்டை அனுமதிக்க வேண்டுமெனவும், தடுப்புச் சுவர் கட்டுவதையும், பேபி அணை

பலப்படுத்தும் பணியையும் விரைந்து முடிக்கும் வகையில் முழு ஒத்துழைப்பு நல்குமாறும் மாண்புமிகு கேரள முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்!'' என்று கூறினேன்.

அதைப்பற்றி சட்டப் பேரவையில் பொதுப் பணித்துறை அமைச்சர் என்ற முறையில் துரைமுருகன் படித்த அறிக்கையில் முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினைக்கு உச்ச நீதி மன்றம் மூலமாகப் பரிகாரம் காண்போம் என்று தெரிவித்தார்.

பெரியாறு அணையின் உயரத்தினை 136 அடியிலிருந்து 152 அடியாக உயர்த்துவதற்கு கேரள அரசு உடன்படாததைத் தொடர்ந்து, தமிழக விவசாயிகள் சங்கத்தினரும், மக்களில் ஒரு பகுதியினரும் போராட்டம் நடத்த முற்பட்டனர். அந்தப் போராட்டத்தை அமைதிப்படுத்துமாறு கேட்டுக் கொண்டு, எனக்குக் கேரள முதலமைச்சர் நாயனார் அவர்கள் 24-4-2000 அன்று ஒரு கடிதம் எழுதினார்.

அந்தக் கடிதத்திற்கு உடனடியாக நான் எழுதிய பதிலில் -

❁ ''பெரியாறு அணையின் உயரத்தை 145 அடியாக உயர்த்து வதற்கு நமது நாட்டிலேயே மிக உயர்ந்த தொழில்நுட்ப அமைப்பாகிய மத்திய நீர்க்குழு வழங்கிய ஆலோசனை களைக் கேரள அரசு எந்தவிதக் காரணமுமின்றி எடுத்த எடுப்பிலேயே பிடிவாதமாக ஏற்க மறுத்ததினால் இப்பிரச்சினையில் நமக்கிடையே ஒருமித்த முடிவு ஏற்படாமல் போனது முற்றிலும் எதிர் பாராததாகும். இந்தப் பிரச்சினையில் கேரள அரசின் பிடிவாத நிலை எனக்கு முற்றிலும் ஏமாற்றத்தையும் வருத்தத்தையும் அளித்துள்ளது. நீண்ட காலமாக இருந்து வரும் இப்பிரச் சினையில் இத்தகைய பிடிவாத நிலைமையுடன் நடை பெறும் பேச்சுவார்த்தை எந்தவொரு முடிவுக்கும் வழி வகுக்காது. எனவே அண்மையில் நடைபெற்றிருக்கிற பேச்சுவார்த்தையின் முடிவினை உச்சநீதி மன்றத்திற்குத் தெரிவித்து, தகுந்த நிவாரணம் கோருவதைத் தவிர வேறு வழியில்லை என தமிழக அரசு கருதுகிறது. தங்களுடைய


கடிதத்தில் குறிப்பிட்டுள்ள தமிழக விவசாயிகள் சங்கம் மற்றும் மக்களின் ஒரு பிரிவினரின் ஆர்ப்பாட்டங்கள், ஒப்பந்தப்படி பெரியாறு அணை மூலம் தங்களுக்கு கிடைக்க வேண்டிய நீதி கிடைக்காததனால் ஏற்பட்ட ஏமாற்றத்தின் விளைவினை எதிரொலிப்பதாக உள்ளது என்று கருதுகிறேன்.

☸ ''இருந்த போதிலும், தமிழகம் மற்றும் கேரள மாநில மக்களுக்கிடையிலே ஆரோக்கியமான உறவுகள் செழித்து வளர்வதையே எப்பொழுதும் விரும்புகிறேன். நமது இரு மாநில மக்களும் தொடர்ந்து இரு தரப்பு ஒத்துழைப்பு களையும் நல்லிணக்கத்தையும் பாதுகாப்பார்கள் என்று உறுதியாக நம்புகிறேன்!'' - என்று தெரிவித்தேன்.

8. அன்றே முழங்கிய மாநில சுயாட்சிக் குரல்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொன் விழா ஆண்டை யொட்டி, கழக அமைப்புகளுக்கான தேர்தல், 1998ஆம் ஆண்டு தொடங்கி, தமிழகம் முழுவதும் நடந்தது. கிளைக் கழகம், பேரூர்க் கழகம், ஒன்றியக் கழகம், நகரக் கழகம், பகுதிக் கழகம், மாநகர் மற்றும் மாவட்டக் கழகங்கள்வரையில் கழக அமைப்புக்களின் தேர்தல்கள் படிப்படியாக நிறைவடைந்தன.

இறுதியாக, தலைமைக் கழகத்திற்கான தேர்தல் - கழகத் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் பதவிகளுக்கான தேர்தல் 8-4-2000 அன்று நடை பெற்றது. அதற்காகக் கழகப் பொதுக்குழு கலைஞர் அரங்கில் நடந்தது. நாடாளு மன்ற மாநிலங்களவை உறுப்பினராக இருந்த மதுரை **அக்கினிராசு** அவர்கள் தேர்தல் ஆணையாளராக இருந்து தலைமைக் கழகத் தேர்தலை நடத்தினார். நானும், பொதுச் செயலாளர் பேராசிரியரும் மேடையின் எதிரே முன் வரிசையிலே அமர்ந்திருந்தோம்.



தேர்தல் ஆணையாளராக இருந்து தேர்தலை அறிவித்த அக்கினிராசு, தலைவர் பதவிக்கும், பொதுச் செயலாளர் பதவிக்கும், பொரு ளாளர் பதவிக்கும் வேட்பு மனுக் களைத் தாக்கல் செய்தவர்கள் பெய ரையும், அவர்களை முன் மொழிந்தும், வழி மொழிந்தும் மனுக்களைக் கொடுத்தவர்களின் பெயர்களையும்

படித்து, போட்டி எதுவும் இல்லாத நிலையில், ஒருமனதாக தலைவர் பதவிக்கு நானும் - பொதுச் செயலாளர் பதவிக்குப் பேராசிரியரும், பொருளாளர் பதவிக்கு ஆர்க்காடு வீராசாமியும் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவித்தார்.

பொதுக்குழுவின் முக்கிய தீர்மானமாக, முல்லைப் பெரியாறு பிரச்சினையில், கேரள இடதுசாரி அரசின் மக்கள் விரோதப் போக்கைக் கண்டித்து, ஏப்ரல் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் தென் மாவட்டங்களில் தி.மு.க. சார்பில் கண்டனக் கூட்டங்களை நடத்துவதென்று முடிவெடுக்கப்பட்டது.

★★★

17-4-2000 அன்று தமிழகச் சட்டப் பேரவையில், எதிர்க் கட்சித் தலைவராக இருந்த திரு. **சோ.பாலகிருஷ்ணன்** அவர்கள், "காங்கிரஸ் தியாகி மறைந்த **கக்கன்** அவர்களுக்கு நினைவுச் சின்னமாக, கக்கன் பிறந்த தும்பைப்பட்டி கிராமத்தில் நினைவுச் சின்னம் அமைக்கப்படுமா?" என்று கேட்டார்.

உடனே நான் எழுந்து, "எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய கருத்தின்படி, கக்கன் அவர்கள் வாழ்ந்த இல்லத்தை நினைவுச் சின்னமாக அமைப்பதற்கு இந்த அரசுக்கு எந்தத் தயக்கமும் இல்லை. ஏனென்றால், தொடர்ந்து தேசத் தியாகிகளைக் கட்சிச் சார்பற்ற முறையில் மதித்துப் போற்றி அவர்களுடைய நினைவை மக்களிடத்திலே பரப்புகின்ற அந்த முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டு வருகிறது.


"காங்கிரஸ் அமைச்சரவையிலே அமைச்சராக இருந்த கக்கன் அவர்களுக்கு மாத்திரமல்ல - அந்த அமைச்சரவையிலே அமைச்சராக இருந்த திரு.**இராமய்யா** அவர்களுடைய துணைவியார், சமீபத்திலே நான் புதுக்கோட்டை சென்றிருந்தபோது, தனக்கு ஒரு வீடு வேண்டும், வீடுகூட தனக்கு இல்லை என்று சொன்னபோது, ராமையா அவர்களுடைய தியாகத்தைப் போற்றிப் பாராட்டி, அவருடைய துணைவியாருக்கு ஒரு இல்லமே இந்த அரசின் சார்பாக வழங்கப்பட்டிருக்கிறது.

"அதைப்போல மறைந்த காங்கிரஸ் கட்சியின் தியாகியும் முன்னாள் அமைச்சருமான கக்கன் அவர்களுடைய குடும்பத் தாருக்கும் இந்த அரசு, அவர்களுடைய தேவைகளை யெல்லாம் கேட்டறிந்து, பல நேரங்களிலே உதவி செய்திருக் கின்றது. எனவே, யாரையும் மறந்து விடுகின்ற அரசு அல்ல இது. "உலகத்திற்கு அறிவிக்கின்ற வகையிலே இந்தத் தி.மு.க. அரசினர் இதைச் செய்வார்களா?" என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே கேட்டார். உலகத்திற்கு அறிவிக் கின்ற வகையிலே கூட அல்ல - எங்களுடைய உள்ளத்திற்கு ஒரு ஆறுதல் தேடிக் கொள்கின்ற வகையில், கக்கன் அவர்கள் வாழ்ந்த - அவர் பிறந்த இல்லத்தை நினைவுச் சின்னமாக ஆக்குவதற்கு இந்த அரசு தயங்காது, நிச்சயமாக ஆக்கப்படும்!" என்று அறிவித்தேன். அறிவித்ததை பின்னர் நடத்தியும் முடித்தேன்.

★★★

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை என்பது நீண்ட பல ஆண்டு காலமாகத் தொடர்ந்து இருந்துவரும் பிரச்சினை யாகும். அதற்காகத் தமிழகத்திலிருந்து எந்தக் கட்சி ஆட்சியிலே





கக்கன்

இருந்தாலும், இலங்கைத் தமிழர்களின் நல்வாழ்வுக்காகக் குரல் கொடுத்து வருகின்றன. அந்தப் பிரச்சினையைப் போலவே, தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் தொடர்ந்து கைது செய்வதும், கொலை செய்வதும் என்ற போக்கும் பல ஆண்டுக் காலமாக நீடித்து வருகின்றது. அதற்காகவும் நாம் பல முறை போராட்டங்களை நடத்தியிருக்கிறோம். மத்திய அரசை வலியுறுத்தி இருக்கிறோம். மத்திய அரசும் பல முறை இலங்கை அரசிடம் அதைப் பற்றிப் பேசியும், தமிழக மீனவர்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகிறார்கள்.

அந்தப் பிரச்சினைபற்றி எப்போது பேசினாலும், அறிக்கை விடுத்தாலும், அ.தி.மு.க.வினராக இருந்தாலும் சரி, அந்தக் கட்சியின் தலைவராக உள்ள ஜெயலலிதாவானாலும் சரி, "திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்த போது கச்சத் தீவை தாரை வார்த்துவிட்டது - அதனால்தான் மீனவர்கள் பாதிக்கப்படும் நிலை!" என்று கழகத்தின்மீது பழி போடுவதையே வாடிக்கையாகக் கொண்டுள்ளார்கள். அந்தக் குற்றச்சாட்டிற்கு தி.மு.கழகத்தின் சார்பில் பலமுறை பதில் அளிக்கப்பட்டபோதும், அவர்கள் அதைக் காதிலேயே போட்டுக் கொள்வதில்லை.

திருமதி **இந்திரா காந்தி** அவர்கள் பிரதமராக இருந்த நேரத்திலேதான், கச்சத் தீவினை இலங்கைக்குத் தர வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. அப்போது அவர்கள் வெளியுறவுத் துறை அமைச்சரையும், அதிகாரிகளையும் என்னிடம் அனுப்பி, விவாதிக்கச் செய்து, அந்த நேரத்தில் தமிழக அரசின் சார்பில் நாங்கள் எங்கள் எதிர்ப்பினைத் தெரிவித்த பிறகும், கச்சத் தீவினை மத்திய அரசு இலங்கைக்கு வழங்கியது.



கக்கன் அவர்கள் வாழ்ந்து வந்த இல்லத்தை நினைவுச் சின்னமாக்கிப் பெருமைப்படுத்தினேன்.

அந்த நேரத்திலே கூட தமிழக அரசின் பிடிவாதம் காரணமாக ஒப்பந்தத்திலே சேர்க்கப்பட்ட ஒரு ஷரத்து - தமிழ்நாட்டு யாத்திரிகர்கள் கச்சத் தீவுக்குச் சென்று வரவும் - தமிழக மீனவர்கள் கச்சத் தீவில் மீன் பிடிக்கவும் தடை விதிக்கக் கூடாது - என்பதாகும். ஆனால் 1976ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சி கலைக்கப்பட்டவுடன், பின்னர் நடைபெற்ற ஆளுநர் ஆட்சியில் கடிதப் போக்குவரத்து பரிவர்த்தனை அடிப்படையில் அந்த ஷரத்துக்கள் என்ன காரணத்தாலோ எடுக்கப்பட்டுவிட்டன. அந்த ஷரத்துக்கள் மீண்டும் இணைக்கப்பட வேண்டுமென்று தமிழக அரசின் சார்பில் வாதாடிக் கொண்டுதான் இருக்கிறோம். இருந்தாலும் அது அமலுக்கு வந்தபாடில்லை.

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவது என்பதை எடுத்துக் கொண்டால் -

- "1992ஆம் ஆண்டு 6சம்பவங்களில், 4பேர் கொல்லப் பட்டு, 11 பேர் காயமடைந்திருக்கிறார்கள்.
- "1993ஆம் ஆண்டு 13 சம்பவங்களில், 8 பேர் கொல்லப் பட்டு, 16 பேர் காயமடைந் திருக்கிறார்கள்.
- "1994ஆம் ஆண்டில் 17 சம்பவங்களில், 8 பேர் கொல்லப் பட்டு, 28 பேர் காயமடைந்திருக்கிறார்கள்.
- "1995ஆம் ஆண்டில் 15 சம்பவங்களில், 14 பேர் கொல்லப் பட்டு 14 பேர் காயமடைந்திருக்கிறார்கள்.

- "1996இல் 37 சம்பவங்களில், 8 பேர் கொல்லப்பட்டு, 39 பேர் காயம் அடைந்திருக்கிறார்கள்.
- "1997ஆம் ஆண்டில் 21 சம்பவங்களில், 22 பேர் கொல்லப்பட்டு, 18 பேர் காயமடைந்திருக்கிறார்கள்.
- "1998ஆம் ஆண்டில் 7 சம்பவங்களில், 6 பேர் கொல்லப்பட்டு, 4 பேர் காயமடைந்திருக்கிறார்கள்.
- "1999ஆம் ஆண்டில் 5 சம்பவங்களில், 2 பேர் கொல்லப்பட்டு, 5 பேர் காயமடைந்திருக்கிறார்கள்.


- எனவே இவ்வாறு தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது என்பது எல்லா ஆட்சிக் காலத்திலும் நடைபெற்று வருகிறது.

இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறுகின்ற நேரத்தில் எல்லாம் தமிழக அரசின் சார்பில் மத்திய அரசுக்கு - குறிப்பாகப் பிரதமருக்குக் கடிதம் எழுதுவதும், அவர்களும் நமது கடிதத்தைக் கண்டவுடன் இலங்கை அரசுக்கு உடனடியாக ஒரு கண்டனக் கடிதம் எழுதுவதும், ஆனாலும் அடுத்த சில நாட்களுக்கெல்லாம் இலங்கை கடற்படை அதே தாக்குதலை நடத்துவதும் - வாடிக்கையாக இருந்து வருகின்ற நடைமுறையாகும்.



தமிழ் நாட்டு மீனவர்கள் பாதிக்கப்படக்கூடாது - என்ற கழக அரசின் நிபந்தனையுடன்தான் கச்சத் தீவை இலங்கைக்குத் தந்தார், இந்திரா காந்தி

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து 4-5-2000 அன்று சட்டப் பேரவையில் சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்று வந்த போது நான் அதற்கு விரிவாகப் பதில் அளித்தேன். மத்திய அரசுக்கு -வெளியுறவுத்துறை அமைச்சருக்கு - நான் எழுதிய கடிதத்தை யெல்லாம் படித்துக் காட்டினேன்.



இலங்கைத் தமிழர் பிரச்சினைப் பற்றிப் பேச, பிரதமர் வாஜ்பய் அழைப்பின்பேரில், டெல்லிக்குச் சென்று விவாதித்தேன்.

யாழ்ப்பாணம் தீபகற்பப் பகுதியில் விடுதலைப் புலிகளுடன் நடந்த சண்டையில் இலங்கை ராணுவம் தடுமாறி வருவதை யொட்டி, இந்தியாவிடம் இலங்கை அரசு உதவி கேட்ட தாகவும், அதற்குப் பதிலாக இந்தியா ஆயுத உதவியைச் செய்ய ஒப்புக் கொண்டுள்ளதாகவும், சில பத்திரிகைகளில் வெளி வந்த செய்தியை அடிப்படையாகக் கொண்டு சட்டப் பேரவையில் பல உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருந்தார்கள்.

அப்போது பிரதமராக இருந்த திரு. **வாஜ்பய்,** அவர்கள் என்னை உடனடியாக டெல்லிக்கு இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக வரச் சொல்லி தகவல் கொடுத்தார். நான் டெல்லி செல்வதற்கு முன்பாக, 5-5-2000 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் கொண்டு வரப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு விரிவாகப் பதில் அளித்தேன்.

அப்போது நான் பேசும்போது, "தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் எந்தத் தீவிரவாத அமைப்பாக இருந்தாலும் அவர்களுடைய வன்முறைகளுக்கோ, தீவிரவாதச் செயல் களுக்கோ இடம் இல்லை, இடம் நிச்சயமாக அளிக்கப்பட

மாட்டாது. அதிலே தமிழக அரசு மிகுந்த கண்காணிப்பாக இருக்கும். அதே சமயத்தில் இலங்கையிலே தமிழர்களைப் பலி வாங்கிட - தமிழர்களைக் கொன்று குவித்திட இந்தியாவோ - இந்திய ராணுவமோ ஆயுதத் தளவாடங்களோ காரணமாக இருக்கக் கூடாது என்பது தான் என்னுடைய பலமான, வலுவான கருத்தாகும்!'' என்று கூறினேன். அன்று மாலையிலே இலங்கைத் தமிழர் பிரச்சினைபற்றி பேசுவதற்காகப் பிரதமரின் அழைப்பின் பேரில் டெல்லி சென்றடைந்தேன்.

பத்திரிகைச் செய்திகளின் பேரில், பிரதமர் அவர்கள் கூட்டணிக் கட்சித் தலைவர்களையெல்லாம் அழைத்து பேச்சு வார்த்தை நடத்தினார். அதிலே அப்போது மத்திய அமைச்சர்களாக இருந்த **எல்.கே. அத்வானி, ஜஸ்வந்த் சிங், ஜார்ஜ் பெர்னாண்டஸ், முரசொலி மாறன், டி.ஆர். பாலு, பி.ஆர்.குமாரமங்கலம், பொன்னுசாமி, செஞ்சி ராமச் சந்திரன்** மற்றும் வைகோ உள்ளிட்ட பலர் கலந்து கொண் டார்கள். இலங்கைத் தமிழர் பிரச்சினைபற்றி நீண்ட நேரம் நான் அங்கே பல கருத்துக்களை எடுத்துத் தெரிவித்த பிறகு, அதற் கெல்லாம் பதிலளித்து வாஜ்பய் அவர்கள் அரசுத் தரப்பிலான பதிலைக் கூறினார்.

★★★

20-5-2000 அன்று டெல்லியில் பிரதமர் வாஜ்பய் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பன் மாநில மன்றக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். பன் மாநில மன்றம், மத்திய அரசும் மாநில அரசுகளும் தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொண்டு - சந்திக்க வேண்டிய சிக்கலான பிரச்சினைகளில் ஒத்தக் கருத்தை எட்டுவதற்கு முயற்சித்து - அதனை அடைவதற்கு உதவுகின்ற அமைப்பாகும். அங்கே பேசும்போது, ''இந்தியாவில் உள்ள ஆறுகள் அனைத்தையும் தேசிய மயமாக்கி - அவற்றை எல்லாம் இணைக்க வேண்டும்'' என்பதை என் பேச்சின்போது வலியுறுத்தினேன்.

பன் மாநில மன்றக் கூட்டத்தில் கலந்து கொள்ள டெல்லி சென்ற நான், 19-5-2000 அன்று மத்திய நீர்வளத்துறை



நான் ஆற்றிய 100 உரைகள் 'முத்துக்குவியல்' என்ற பெயரிலும், நான் இயற்றிய வரலாற்றுப் புதினமான 'பொன்னர் சங்கர்' நான்காவது பதிப்பும் சென்னையில் வெளியிடப்பட்டன.

அமைச்சர் திரு **சி.பி. தாக்கூர்** கூட்டிய முல்லைப் பெரியாறு பற்றிய கூட்டுக் கூட்டத்திலும் கலந்து கொண்டேன். பெரியாறு அணை தொடர்பாக சுமுக முடிவு காணும்படி உச்ச நீதி மன்றம் அளித்த அறிவுரையின்படி மத்திய நீர்வளத் துறை அமைச்சர் இந்தக் கூட்டத்தைக் கூட்டியிருந்தார்.

நான் உரையாற்றும்போது, முல்லைப் பெரியாறு நீர் மட்டத்தை முதல் கட்டமாக 145 அடியாகவும், பேபி அணையை வலுப்படுத்தியபின், 152 அடியாகவும் உயர்த்த வேண்டுமென்றும், தமிழகத்திலே வாழும் ஒரு இலட்சம் விவசாயிகளுக்கு நீதி வழங்கும் வகையில் சுமுகத் தீர்வுக்கு வழி வகுக்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டேன்.

மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் டாக்டர் சி.பி. தாக்கூர் - தமிழக, கேரள முதலமைச்சர்களை அழைத்து நடத்திய



1972ஆம் ஆண்டில் சென்னை, வியாசர்பாடியில் அம்பேத்கர் கலைக் கல்லூரியை அமைத்தேன்.

கூட்டத்தில் நானும், அமைச்சர்கள் **ஆர்க்காடு வீராசாமி, துரைமுருகன்,** தலைமைச் செயலாளராக இருந்த **முத்துசாமி,** இ.ஆ.ப., பொதுப்பணித் துறை செயலாளராக இருந்த குப்தா, இ.ஆ.ப., **மோகனகிருஷ்ணன், ஆதிசேஷய்யா** ஆகியோர் கலந்து கொண்டோம். அந்தக் கூட்டத்தில் பெரியார் அணையில் தற்போது 145 அடியும், அதற்கு மேலும் நீரினைத் தேக்கலாம் என்ற நமது கருத்தையும் - 136 அடிக்குமேல் தண்ணீரைத் தேக்க முடியாது என்ற கேரளாவின் கருத்தையும் பரிசீலிக்க - மத்திய நீர்க் குழுமத் தலைவர் தலைமையில் - இந்தியாவில் உள்ள திறமை வாய்ந்த பொறியாளர்கள் ஐவரையும், தமிழ்நாட்டுப் பொறியாளர் ஒருவரையும், கேரளப் பொறியாளர் ஒருவரையும் கொண்ட குழு அமைத்து, அறிக்கை பெறுவதென முடிவு செய்யப்பட்டது.

★★★

பல்வேறு மேடைகளில் - பல்வேறு விழாக்களில் - பல்வேறு தலைப்புக்களில் நான் ஆற்றிய சுமார் நூறு உரைகள் தேர்ந் தெடுக்கப்பட்டு - பூம்புகார் பதிப்பகத்தாரால் **"முத்துக் குளியல்"** என்ற பெயரோடு இரண்டு பாகங்களாக 29-6-2000 அன்று கலைவாணர் அரங்கில் வெளியிடப்படும் விழா சிறப்பாக நடை பெற்றது. அத்துடன் **"பொன்னர் சங்கர்"** என்ற வரலாற்றுப் புதினத்தின் நான்காம் பதிப்பின் வெளியீட்டு விழாவும் இணைக்கப்பட்டிருந்தது. பூம்புகார் பதிப்பக நிறுவனர் திரு.**பிரதாப் சிங்** வரவேற்புரையாற்றினார். உச்சநீதி மன்ற முன்னாள் நீதிபதியும், இலக்கியங்களில் தலை சிறந்த மேதையுமான நீதியரசர் **திரு. மோகன்** அவர்கள் விழாவிற்கு தலைமையேற்று, இந்த நூல்களையெல்லாம் வெளியிட்டார்.

"முத்துக்குளியல்" நூலின் முதல் பாகத்தை தவத்திரு **குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்** அவர்களும், இரண்டாவது பாகத்தை திரு. **சரத்குமார்** அவர்களும், **"பொன்னர் - சங்கர்"** நான்காம் பதிப்பின் முதல் நூலினை கழகத் துணைப் பொதுச் செயலாளராக இருந்த திருமதி **சுப்புலெட்சுமி ஜெகதீசன்** அவர்களும் பெற்றுக் கொண்டனர்.



பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த துரைமுருகன், கவிப்பேரரசு வைரமுத்து, துணை வேந்தராக இருந்த க.ப. அறவாணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியாக நான் ஏற்புரை ஆற்றினேன்.

★★★

ஆதிக்க சக்திகளின் கொடூரமான வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளிக் கிளம்பிய அரிமாதான் **டாக்டர் அண்ணல் அம்பேத்கர்** அவர்கள். அவர் இந்தியா முழுமைக்கும் சொந்தக் காரர் என்றாலும்கூட, தமிழ்நாட்டிலே கழக ஆட்சியில் அவர் கொண்டாடப்பட்ட அளவிற்கு அம்பேத்கரைப் பாராட்டிய வர்கள் இந்தியாவிலே யாரும் கிடையாது.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், கட்சி மாறுபாடு இல்லாமல், அவர்கள் தி.மு.க.வைச் சேர்ந்த வர்களா - நீதிக் கட்சியைச் சேர்ந்தவர்களா - அல்லது திராவிடக் கழகத்தைச் சேர்ந்தவர்களா - அல்லது வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களா என்றெல்லாம் பகுத்துப் பார்க்காமல், அவர்களால் நாட்டிற்கு - மக்களுக்கு - சமுதாயத்திற்கு என்ன நன்மை கிடைத்தது - அவர்களால் சமுதாயத்திற்குக் கிடைத்த முன்னேற்றம் என்ன என்பவைகளை மாத்திரம் கணக்கிட்டு அவர்களைப் பெருமைப்படுத்துகின்ற பணியிலும் - அவர் களுக்கு நினைவுச் சின்னங்களை எழுப்புகின்ற பணியிலும் ஈடுபட்ட அரசைப்போல இந்தியாவிலே வேறு எந்த அரசும் கிடையாது.

உதாரணமாக, அவற்றில் ஒரு சிலவற்றைக் குறிப்பிட வேண்டுமேயானால், சென்னையிலே வ.உ.சிதம்பரனாருக்குச் சிலை - தூத்துக்குடியிலே சிதம்பரனாருக்குச் சிலை - சென்னையிலே பாரதியாருக்குச் சிலை - மதுரையிலே முத்துராமலிங்கத் தேவருக்குச் சிலை - சென்னையில் ருக்மணி லெட்சுமிபதி என்கிற தேசிய போராட்ட வீராங்கனைக்குச் சிலை - மதுரையிலே கக்கன் அவர்களுக்குச் சிலை - சென்னை கடற்கரையிலே நேதாஜிக்குச் சிலை - சென்னையிலே சிங்கார வேலருக்குச் சிலை - தீரன் சின்னமலைச் சிலை - நெற்கட்டும் செவல் கிராமத்தில் பூலித் தேவனுக்குச் சிலை - புதுக் கோட்டையிலே ராஜகோபால் தொண்டைமானுக்குச் சிலை - மூதறிஞர் ராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, அருமை நண்பர் எம்.ஜி.ஆர். நினைவிடங்களில் அவரவர் மார்பளவுச் சிலைகள் - சென்னையிலே தேசியக் கொடியை ஏற்ற வேண்டுமென்ற முனைப்போடு, வெள்ளையர் ஆட்சிக் காலத்தில், இன்றைக்கு இருக்கின்ற கோட்டை கொத் தளத்தில் கொடிக் கம்பத்திலே ஏறி கொடியேற்றிய ஆர்யா என்ற பாஷ்யம் அவர்களின் சிலை - உண்ணா நோன்பு இருந்து உயிர் விட்ட தியாகி சங்கரலிங்கனாருக்குச் சிலை - தியாகி களுக்கு மணி மண்டபம் - நாகர் கோவிலில் அண்ணன் ஜீவானந்தத்திற்கு மணி மண்டபம் - பட்டுக்கோட்டையில் கவிஞர் கல்யாண சுந்தரத்திற்கு மணி மண்டபம் - குமரியிலே காமராஜருக்கு மணி மண்டபம் - உடுமலையில் பெரும் புலவர் நாராயணக் கவிக்கு மணி மண்டபம் - குன்றக்குடி அடிகளாருக்கு மணி மண்டபம் - திருமங்கலத்திலே தியாகி விசுவநாத தாஸ் நினைவில்லம் - பூலித் தேவன் மாளிகை - சுவர்னகிரியிலே வீரன் சுந்தரலிங்கம் நகர், சென்னையில் ம.பொ.சி.க்குச் சிலை, நடிகர் திலகம் சிவாஜிக்குச் சிலை (நினைவில் உள்ள வரை எழுதியிருக்கிறேன்) என்ற பட்டியல் எழுதிட மாளாது.



அண்ணல் அம்பேத்கருக்கு என்று எடுத்துக் கொண்டால் - 1972ஆம் ஆண்டிலேயே வியாசர்பாடியில் அம்பேத்கர் பெயரால் கலைக் கல்லூரி - சட்டப் பல்கலைக் கழகம் - ஹாமில்டன் பாலத்திற்கு டாக்டர் அம்பேத்கர் பெயர் - 1989இல் மராட்டிய மாநிலத்தில் உள்ள மரத்வாடா பல்கலைக் கழகத்திற்கு அம்பேத்கர் பெயரைச் சூட்டிட கழகம் மேற்கொண்ட முயற்சிகள் - என்று அம்பேத்கர் அவர்களுடைய நினைவோடு - அவருடைய பெருமையைப் பாடுகின்ற அரசாக திராவிட முன்னேற்றக் கழக அரசு இருக்கின்றது.

இத்தகைய புகழுக்குரிய அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு தி.மு.கழக ஆட்சியில் மணி மண்டபம் கட்டி - சென்னையிலே - 10-6-2000 அன்று கல்வி அமைச்சராக இருந்த **பேராசிரியர்** தலைமையில், நான் திறந்து வைத்தேன். மணி மண்டப வாயிலில் அம்பேத்கரின் மார்பளவு சிலையையும் நான் திறந்து வைத்தேன். அந்த மணி மண்டபம் இன்றைக்கும் கழக அரசின் சாதனைகளில் ஒன்றாக எழுந்து நிற்கின்றது.


★★★

27-3-1998 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் நிதி நிலை அறிக்கையினை நான் தாக்கல் செய்தபோது ‘‘சென்னை தரமணியில் 7.5 ஏக்கர் பரப்பில் எல்காட் நிறுவனத்துடன் இணைந்து, மென் பொருள் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றை நிறுவும் முயற்சியில் டிட்கோ முனைந்துள்ளது, இத்திட்டம் மென் பொருள் நிறுவனங்களுக்குத் தேவையான வசதிகளை

உலகத் தரத்திற்கு இணையாக உருவாக்கி வழங்கும்'' என்று அறிவித்தேன். அந்த அறிவிப்பு வெறும் அறிவிப்போடு நின்று விடாமல் தமிழக அரசு 338 கோடி ரூபாய் செலவில் உருவாக்கிய "டைடல்" மென் பொருள் பூங்காவினை அப்போது பிரதமராக இருந்த வாஜ்பய் அவர்களை சென்னைக்கு அழைத்து, என்னுடைய தலைமையில் திறந்து வைக்கச் செய்தேன். 7.5 ஏக்கர் பரப்பில் இந்த மென்பொருள் பூங்கா அமையும் என்று நான் அறிவித்தபோதிலும், 15 ஏக்கர் பரப்பில் எழில் குலுங்கும் பிரமாண்டமான தோற்றத்துடன் இந்தப் பூங்கா உருவானது.

இந்த 'டைடல் பூங்கா'வில் கட்டுமான இடத்தின் மொத்தப் பரப்பு ஏறத்தாழ 12 லட்சம் சதுர அடியாகும். இந்தப் பூங்கா, டிட்கோ மற்றும் எல்காட் நிறுவனங்களால் உருவாக்கப் பட்டது. இது வணிக வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள், முதலீட்டுக் கழகங்கள் ஆகியவற்றையும், ஈ.பி.சி. ஒப்பந்த தாரர்களைப் பங்குதாரர்களாகவும் கொண்டுள்ளது. டைடல் பூங்காவின் கட்டிடம் தரைத்தளத்துடன் 12 மேல் தளங் களையும், கார்களை நிறுத்திட 2 தளங்களையும் கொண்டு அமைந்தது. அலுவலக உபயோகத்திற்கான இடங்கள், சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான அலுவலகங்களின் வசதிக்கேற்ப அமைக்கப்பட்டது. பல்வேறு தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களின் தேவைக்கேற்ப 4000 சதுர அடியிலிருந்து 90000 சதுர அடிவரை ஒரே தளத்தில் இட வசதிகள் அமைந்தன. அகன்ற இட வசதிகளும், சிறந்த தகவல் தொடர்பு வசதிகள், தடையற்ற மின் வசதி (ஜெனரேட்டர்) வசதிகளுடன் நிறுவப் பட்டது.

இந்த மிகப் பெரிய மென்பொருள் பூங்காவின் அனைத்து, தளங்களும் குளிர்ச்சாதன வசதியைக் கொண்ட - உலகின் மிகப் பெரிய பூங்காக்களில் மூன்றாவது இடத்தை வகித்து வருகிறது. நல்லவேளையாக, இந்த டைடல் பூங்கா கழக ஆட்சிக் காலத்திலேயே திறக்கப்பட்டு விட்டது. ஓராண்டு காலம் தாமதமாகியிருக்குமானால், 2001ஆம் ஆண்டு அம்மையார் ஜெயலலிதாவின் ஆட்சி வந்த போது, அதைப்பற்றி யாராவது



15 ஏக்கரில், 12 லட்சம் சதுர அடியில் அமைக்கப்பட்ட அந்த மென் பொருல் பூங்கா, 'டைடல் பார்க்' என்று அழைக்கப்படுகிறது.


நினைவூட்டியிருப்பார்களானால், அந்த டைடல் பூங்கா விற்கும் கழக ஆட்சியில் அமைக்கப்பட்ட தலைமைச் செயலகக் கட்டிடத்திற்கு ஏற்பட்ட கதிதான் ஏற்பட்டிருக்கும்.

★★★

2000ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் நாள் ஈரோட்டில் நடைபெற்ற ம.தி.மு.க.வின் தமிழ் எழுச்சி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினேன். அந்த மாநாட்டில் மத்திய நிதித் துறை அமைச்சராக அப்போதிருந்த **யஷ்வந்த் சின்கா,** ஆந்திர மாநில முதல் அமைச்சராக இருந்த நண்பர் **சந்திரபாபு நாயுடு,** ம.தி.மு.க. பொதுச் செயலாளர் **வைகோ** ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

★★★

கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் எந்தப் புத்தகத்தை எழுதி அல்லது தொகுத்து வெளியிட்டாலும், அதனை என் கையால் வெளியிடவேண்டும் என்பதில் எப்போதும் உறுதியாக இருக்கக்கூடியவர் என்பதை நான் பல முறை சொல்லியிருக் கிறேன் அல்லவா? அவரால் படைக்கப்பட்ட பல்வேறு கவிதைகளைத் தொகுத்து **"வைரமுத்து கவிதைகள்"** என்ற நூலை 12-7-2000 அன்று சென்னையில் என்னைக் கொண்டு வெளியிடச் செய்தார். அந்த நூலின் முதல் படியினை கலை ஞானி **கமல்ஹாசன்** பெற்றுக்கொண்டார். அந்நூல் வெளியிடப்படுவதற்கு முன்பே அதனை என்னிடம் கொடுத்து



கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் இயற்றிய பல்வேறு கவிதைகளைத் தொகுத்து, "வைரமுத்து கவிதைகள்" என்ற பெயரில், ஒரு நூலாகத் தயாரித்தார்

அணிந்துரை ஒன்றினை எழுதித்தர வேண்டு மென்று கேட்டுக்கொண் டார். அந்த நூலை ஆய்வு செய்து நெடிய ஆய்வுரை ஒன்றையே நான் அப்போது எழுதிக் கொடுத்தேன்.

காமராசர் அரங்கில் நடைபெற்ற அந்த விழாவில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத் துணை வேந்தர் **டாக்டர் க.ப.அறவாணன்,** பேராசிரியர் **டாக்டர் கு.ஞான சம்பந்தன்,** மரபின் மைந்தன் **ம. முத்தையா** ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். வைரமுத்து அவர்கள் ஏற்புரை ஆற்றினார்.

★★★

14-7-2000 அன்று பிரதமர் வாஜ்பய் அவர்கள் கூட்டிய காவேரி ஆணையக் கூட்டத்திலும், அதற்கடுத்த நாள் 15-7-2000 அன்று டெல்லியில் நடைபெற்ற தகவல் தொழில் நுட்ப அமைச்சர்கள் மாநாட்டிலும் கலந்து கொண்டேன். காவேரி ஆணையக் கூட்டத்தில் கர்நாடக முதல்வராக இருந்த திரு. **எஸ்.எம். கிருஷ்ணா** அவர்களும், கேரள முதல்வராக இருந்த **ஈ.கே. நாயனார்** அவர்களும், புதுவை முதல்வராக இருந்த **பி. சண்முகம்** அவர்களும் என்னுடன் கலந்து கொண்டார்கள்.

கூட்டத்தையொட்டி வெளியிடப்பட்ட பத்திரிகைச் செய்தியில் - 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் இரண்டாம் தேதி காவேரி நதிப் படுகை மாநிலங்களுக்கு இடையிலான பிரச்சினைக்குத் தீர்வு காண நடுவர் மன்றத்தை மத்திய அரசு அமைத்தது என்றும், நடுவர் மன்றம் இடைக்கால உத்தரவு ஒன்றை 1991ஆம் ஆண்டு ஜூன் 25ஆம் தேதியும், அதன்மீதான



அந்தக் கவிதை நூலை நான் வெளியிட, அதன் முதல் பிரதியை கலைஞானி கமல்ஹாசன் பெற்றுக் கொண்டார்.

விளக்கம் அளிக்கும் உத்தரவுகளை முதலில் 1992ஆம் ஆண்டு ஏப்ரல் 3ஆம் தேதியும், இரண்டாவதாக 1995ஆம் ஆண்டு டிசம்பர் 19ஆம் தேதியும் பிறப்பித்தது என்றும் கூறப் பட்டிருந்தது.

மேலும், பிரதமர் அவர்களைத் தலைவராகவும், தமிழ்நாடு, கேரளா, கர்நாடகம் மற்றும் புதுவை மாநில முதல் அமைச்சர் களை உறுப்பினர்களாகவும் கொண்டு காவேரி நதி நீர் ஆணையம் 1998ஆம் ஆண்டு ஆகஸ்ட் 11ஆம் தேதி அமைக்கப் பட்டது.

17-7-2000 தேதிய **"இந்து"** நாளிதழ் வெளியிட்ட தலையங்கத்தில், காவேரி நதி நீர் ஆணையக் கூட்டம் சுமூகமாக நடந்தது என்றும், அது காவேரிப் பிரச்சினையில் ஏற்பட்டுள்ள நல்ல முன்னேற்றம் என்றே சொல்ல வேண்டுமென்றும் பாராட்டி எழுதியது.

அதற்கடுத்த நாள், பிரதமர் தலைமையில் நடைபெற்ற தகவல் தொழில்நுட்ப அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு நான் உரையாற்றும்போது, தமிழகத்தை தகவல் தொழில் நுட்பத்தில் ஒரு சிறந்த மாநிலமாக உருவாக்கிட மத்திய அரசு உதவிகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன்.

★★★


காஷ்மீர் சிங்கம் என்று புகழப்பட்ட ஷேக் அப்துல்லா அவர்கள் அந்த மாநில முதலமைச்சராகப் பதவியேற்பதற்கு முன்பு 1974ஆம் ஆண்டு சென்னைக்கு வருகை தந்து என்னை இல்லத்தில் சந்தித்து விவாதித்தார். அதற்குப்பின் 26 ஆண்டுகள் கழித்து, 21-7-2000 அன்று **ஷேக் அப்துல்லா** அவர்களின் திருமகன் திரு. **பரூக் அப்துல்லா** அவர்கள் என் வீட்டிற்கு வருகை புரிந்தார். அப்போது மாநில அதிகாரங்களைப்பற்றி தமிழக அரசு நியமித்த நீதியரசர் **ராஜமன்னார்** குழுவின் அறிக்கை, மாநில சுயாட்சி மற்றும் ராஜ மன்னார் குழு அறிக்கையில் மாநில அரசின் கருத்து, 1974ஆம் ஆண்டு தமிழகச் சட்டப் பேரவையில் மாநில சுயாட்சி குறித்து நான் ஆற்றிய உரை - அடங்கிய மூன்று புத்தகங்களை பரூக் அப்துல்லா அவர்களுக்கு வழங்கினேன். அன்று மாலையில் கலைவாணர் அரங்கில் நடைபெற்ற **உருது அகாடமியின்** தொடக்க விழாவிலும் நானும் அவரும் கலந்து கொண்டோம்.

9. முந்திக் கொண்டு பெற்ற முதல் இடம்!


கன்னட "சூப்பர் ஸ்டார்" என்று அழைக்கப்பட்ட நடிகர் **ராஜ்குமார்**, 30-7-2000 அன்று நள்ளிரவில் சந்தன **வீரப்பன்** குழுவினரால் கடத்தப்பட்டார்.

கர்நாடக எல்லையை ஒட்டி தமிழகப் பகுதியில் உள்ள தாளவாடி காஜனூரில் தனது பண்ணை வீட்டில் அவர் தங்கி யிருந்தபோது, இந்தச் சம்பவம் நடை பெற்றது. ராஜ்குமாரின் மருமகன், மற்றோர் உறவினர் **நாகேஷ்**, திரைப்பட துணை இயக்குநர் **நாகப்பா** ஆகியோர் அவருடன் சேர்ந்து கடத்தப் பட்டனர்.

ராஜ்குமாருடன் தங்கியிருந்த அவரது மனைவி **பார்வதம் அம்மாள்** மூலம் கர்நாடக மாநில முதலமைச்சருக்கு ஒரு கேசட்டை வீரப்பன் கொடுத்தனுப்பியிருந்தான். கர்நாடக முதலமைச்சர் உடனடியாகக் காவல் துறை அதிகாரி களுடன் ஆலோசனை நடத்திவிட்டு, எனக்கும், மத்திய உள்துறை அமைச்சராக இருந்த திரு.**அத்வானிக்கும்** தகவல் அனுப்பினார். ராஜ்குமார் உள்ளிட்ட நால்வரையும் மீட்க, தமிழக அரசின் உதவியைக் கர்நாடக அரசு கோரியது.



31-7-2000 அன்று காலையில் தனி விமானம் மூலம் சென்னை வந்த கர்நாடக முதலமைச்சர் அருமை நண்பர் திரு.**எஸ்.எம்.கிருஷ்ணா** அவர்கள் என்னைச் சந்தித்து, தமிழக



ரா.வேங்கடசாமி

பண்புடை நண்பரின் பாராட்டு மடல்:

நன்றி - நன்றி - நன்றி

பேரன்புக்கும் பெருமதிப்பிற்கும் உரிய என் அன்புத் தலைவருக்கு-

வணக்கங்கள் -

எந்த ஆசை நிறைவேறாது என்று நினைத்திருந்தேனோ - அது கடைசியாக நிறைவேறி விட்டது.

காலத்தால் அழியாத கருவூலமாக அமையும் **'நெஞ்சுக்கு நீதி'** காவியத்தில் என் பெயர் பதிந்ததைத்தான் சொல்கிறேன்.

தலைவரே! என் ஆனந்தத்தை அளவிட்டுச் சொல்லவே முடியாது - 85 வயதைத் தொட்டுக் கொண்டு இருக்கும் எனக்கு இதைவிட பேரின்பம் யார் தரப் போகிறார்கள்?

உங்கள் புகழ் காலமெல்லாம் வாழும்போது அதற்கு எழுத்துக்காட்டாக அமையப்போவது இந்தக் கருவூலம் தானே! நன்றி தலைவரே - நன்றி! தாழ் பணிந்து எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்!

சென்னை பக்கம் வந்து இரண்டு வருடத்திற்கு மேலாகிறது- உடல் நிலைதான் காரணம். எப்படியும் இந்த வருட முடிவிற்குள் அங்கு வருவேன் - தங்களை நேரில் சந்தித்து மகிழ்வேன்.

நன்றியுடன்
வணங்கி மகிழ்கிறேன்.

தமிழ் வாகைச் செம்மல்
ரா.வேங்கடசாமி
(தலைவர்: சேலம் தமிழ்ச் சங்கம்)

அரசின் உதவியைக் கோரினார். கர்நாடக முதலமைச்சருடன், ராஜ்குமாரின் மனைவி பார்வதம் அம்மாள், மகன் **ராகவேந்திர ராஜ்குமார்,** கர்நாடக உள்துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், டி.ஜி.பி., ஆகியோரும் வந்திருந்தனர்.

பகல் 12.30 மணி முதல் 2 மணிவரை தலைமைச் செயலகத்தில், கர்நாடக முதல்வருடன் ஆலோசனை நடத்தினேன். பின்னர் என்னைச் சந்தித்த செய்தியாளர்களிடம், ''ராஜ்குமாரை மீட்கும் நடவடிக்கைகளில் இரு மாநில அரசுகளும் இணைந்து ஈடுபடும். இரண்டு மாநில மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, ராஜ்குமாரையும் மற்றவர்களையும் வீரப்பன் விடுதலை செய்வாரென்று எதிர்பார்க்கிறேன்!'' என்றும், ராஜ்குமாரை மீட்க எடுக்கும் முயற்சிகளுக்கு இரண்டு மாநில மக்களும் ஒத்துழைப்பு தரவேண்டுமென்றும், அமைதி காக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டேன்.


ராஜ்குமாரை விடுவிக்கத் தேவையான அனைத்து உதவிகளும் அளிக்கப்படும் என்று நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளிலும் மத்திய அரசு உறுதி கூறியது. 31-7-2000 அன்று மாலையில், சென்னை வந்த மத்திய அமைச்சர் **அனந்தகுமாருடன்** பேச்சுவார்த்தை நடத்திய பிறகு, ''வீரப்பனைச் சந்தித்துப் பேச **நக்கீரன் கோபால்** செல்வார்'' என்று செய்தியாளர்களிடம் கூறினேன்.

அவ்வாறு தூதுவராகச் செல்ல நக்கீரன் கோபாலும் என்னிடம் சம்மதம் தெரிவித்தார். அவ்வாறே 1-8-2000 அன்று வீரப்பனைச் சந்திக்க நக்கீரன் கோபால் புறப்பட்டுச் சென்றார். அவருடன் **சிவசுப்பிரமணியன், பாலமுருகன், சுப்பு** ஆகியோரும் சென்றார்கள்.



ராஜ்குமார்

2-8-2000 அன்று ராஜ்குமார் அவர்களின் மருமகன் **ராம்குமார்,**



வீரப்பன்

மகன் **சிவராஜ்** ஆகியோர் என்னை வந்து சந்தித்தனர். ''நக்கீரன் கோபால், வீரப்பனைச் சந்தித்து கோரிக்கைகளைப்பற்றி அறிந்து சொல்வார் - நல்லதே நடக்கும் - நிறைவேற்றக்கூடிய கோரிக்கையாக இருந்தால், நிச்சயம் நிறைவேற்ற அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் - வீரப்பன் மீது நிறைய குற்றச்சாட்டுகள் இருந்தாலும், சில சூழ்நிலைகளில் இரக்கத்தோடு அவர் நடந்து கொண்டுள்ளார் - ராஜ்குமார் உள்ளிட்ட நால்வரையும் விடுவிக்க வேண்டும் - அவர்களைத் துன்புறுத்தக் கூடாது என்று வீரப்பனுக்கு திரு. கோபால் மூலம் செய்தி அனுப்பியிருக்கிறோம்'' என்று அவர்களிடம் கூறினேன். வீரப்பனின் ஆட்கள் கொடுத்த கோரிக்கைகள் அடங்கிய கேசட்டை **பாலமுருகன்** சென்னைக்குக் கொண்டு வந்து, நக்கீரன் காமராஜ் மூலம் என்னிடம் சேர்த்தார்.

வீரப்பனின் கோரிக்கைகள் குறித்து விவாதிப்பதற்காக கர்நாடக மாநில முதலமைச்சர் கிருஷ்ணா அவர்கள், *6-8-2000* அன்று மீண்டும் சென்னைக்கு வந்தார். அவருடனும் அதிகாரிகளுடனும் வீரப்பனின் கோரிக்கைகள் குறித்து நீண்ட நேரம் விவாதித்தோம். வீரப்பனின் பத்து கோரிக்கைகளுக்கும் பதில்களைத் தயார் செய்து, நக்கீரன் கோபாலின் நண்பர் மூலமாக அனுப்பினோம். பத்திரிகைகளுக்கும் கோரிக்கைகளையும், அதற்கான பதில்களையும் கொடுத்தோம். பெரும்பாலான கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வதாக அறிவித்த பிறகும், ராஜ்குமார் விடுதலையில் சில நாட்கள் தாமதம் ஏற்பட்டது.

9-8-2000 அன்று நடிகர் ராஜ்குமார் கடத்தப்பட்டது தொடர்பாக தமிழக அரசு மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகளுக்குப் பாராட்டு தெரிவித்தும், அவரை



ராஜ்குமாரை மீட்டுத் தரவேண்டுமென்று, அவருடைய மனைவி பார்வதம் அம்மாள் மருமகன் ராம்குமார் - மகன் சிவராஜ் - மூவரும் என்னைச் சந்தித்துப் பேசினார்கள்.

உடனடியாக மீட்பதற்கு ஆவன செய்யுமாறும் கர்நாடக திரைப்பட வர்த்தக சபையினர் என்னைச் சந்தித்துக் கேட்டுக் கொண்டனர். நடிகர் **கமலஹாசன், ஏ.வி.எம். சரவணன், எல் சுரேஷ், கேயார்** மற்றும் நிர்வாகிகள் என்னைச் சந்தித்தனர்.

11-8-2000 அன்று, நக்கீரன் கோபால் வேறு சில கோரிக்கைகளுடன் சென்னை திரும்பினார். *13-8-2000* அன்று, நடிகர் **ரஜினிகாந்த்** அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்தில் என்னை சந்தித்து, நடிகர் ராஜ்குமார் கடத்தப்பட்டது குறித்து தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கெல்லாம் பாராட்டு தெரிவித்ததோடு, விரைவில் அவரை மீட்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்படிக் கேட்டுக் கொண்டார். வீரப்பன் விதித்த நிபந்தனைகளில் ஒன்றான தமிழ்நாடு விடுதலைப் படை, தமிழ்த் தேச மீட்புப் படையைச் சேர்ந்த ஐந்து பேரை விடுதலை செய்ய தமிழக அரசின் சார்பில் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

அரசு இவ்வாறு முயற்சிகளை மேற்கொண்டிருந்த நிலையில், அ.தி.மு.க. வின் பொதுச் செயலாளர் ஜெயலலிதா விடுத்த அறிக்கையில், ''ராணுவத்தை அனுப்புவதுதான் ஒரே தீர்வு'' என்று கூறினார். ''நடிகர் ராஜ்குமார் விடுவிக்கப்படுவார் என்ற நல்ல முடிவை எதிர் நோக்கிக் கொண்டிருக்கின்ற நேரத்தில்,

இதைப்போல யாரும் குறுக்குசால் ஓட்டிக் கெடுத்திட வேண்டாம்'' என்று நான் வேண்டுகோள் விடுத்தேன்.

16-8-2000 அன்று நக்கீரன் கோபால் மீண்டும் ராஜ் குமாரைத் தேடி காட்டிற்குள் சென்றார். இதற்கிடையே மீண்டும் ஜெயலலிதா; வீரப்பன் ராஜ்குமாரை கடத்திய தற்காகத் தமிழக, கர்நாடக மாநில முதலமைச்சர்கள் பதவி விலக வேண்டு மென்று ஓர் அறிக்கை விடுத்தார்.

வீரப்பனைப் பிடிக்கும் நடவடிக்கைகளில் அதிரடிப்படை ஈடுபட்டபோது, பாதிக்கப்பட்ட கிராம மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக தமிழகமும், கர்நாடகமும் ஐந்து கோடி ரூபாய் வழங்குவதென இரண்டு மாநில முதல் அமைச்சர்களும் 25-8-2000 அன்று சென்னையில் சந்தித்தபோது முடிவெடுக்கப் பட்டது.

ராஜ்குமாரை மீட்க நக்கீரன் கோபால் நான்கு முறை காட்டுக்குச் சென்று வந்த போதிலும், வெற்றி பெற முடிய வில்லை. ராஜ்குமார் கடத்தல் தொடர்பாக, கர்நாடகத்தில் உள்ள தமிழர்களுக்கும் ஒரு பாதுகாப்பற்ற நிலை தொடர்ந்தது. 2000ஆம் ஆண்டு, அக்டோபர், பத்தாம் தேதியன்று நக்கீரன் கோபால், பேராசிரியர் பா.கல்யாணி, பழ.நெடுமாறன், கோ. சுகுமாரன், என். சந்திரசேகரன் ஆகியோர் ஒரு தூதுக் குழுவாக வீரப்பனைச் சந்திப்பதற்காகக் காட்டிற்குள் சென்றார்கள்.

ஆனால், அப்போது ஜெயலலிதா விடுத்த அறிக்கையில் -


''தமிழ் ஈழ ஆதரவாளர்களான நெடுமாறன், பேராசிரியர் கல்யாணி, சுகுமாரன் ஆகியோரிடம் ராஜ்குமாரை மீட்டு வரும் பொறுப்பை இரு மாநில அரசுகளும் ஒப்படைத்தது, விஷமச் சக்திகளிடம் அடிபணிந்ததையே எடுத்துக் காட்டு கிறது. இந்தியாவில் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளுக்கு ஆதரவுப் பிரச்சாரம் செய்துவரும் இவர்கள் இந்திய தேசத்தின் ஒற்றுமைக்கு எதிரான சிந்தனையை உடையவர்கள். இம்மூவரையும் அரசின் தூதுவர்களாக அனுப்ப சம்மதித்தது எப்படி என்பதை கருணாநிதி தான் விளக்க வேண்டும். ஆரம்ப காலம் முதலே விடுதலைப் புலிகளின்பால் கருணாநிதி



காட்டும் பரிவுக்கு இந்த மூவரையும் அரசு தூதுவர்களாக அனுப்பியதே போதிய சான்றாகும்'' என்றெல்லாம் கூறியிருந் தார்.

அந்தத் தூதுக் குழுவினர், வீரப்பனால் கடத்திச் செல்லப் பட்ட ராஜ்குமாரின் மருமகன் **கோவிந்த ராஜை** மட்டும் மீட்டு வந்ததோடு, மைசூர் சிறையில் உள்ள 121 தடா கைதிகளையும், தமிழகச் சிறைகளில் உள்ள 5 தமிழ்த் தீவிரவாதிகளையும் விடுவிக்க வேண்டுமென்பதில் வீரப்பன் பிடிவாதமாக இருப்பதால், ராஜ்குமாரை மீட்டு வருவதில் சிக்கல் உள்ளதாக என்னைச் சந்தித்துக் கூறினர். 20-10-2000 அன்று நடிகர் ராஜ்குமாரின் மகன்கள் **சிவராஜ்குமார், ராகவேந்திர ராஜ் குமார், புனித் ராஜ்குமார்** ஆகிய மூவரும் என் இல்லத்தில் என்னைச் சந்தித்து, தமிழக அரசு அவர்களுடைய தந்தையாரை மீட்பதற்காக எடுத்துவரும் நடவடிக்கைகளுக்காக நன்றி தெரிவித்தனர். 11-11-2000 அன்று இரவு பழ. நெடுமாறன் குழுவினர் காட்டுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

வீரப்பனின் பிடியில் 108 நாட்கள் பிணைக் கைதியாக இருந்த கன்னட நடிகர் ராஜ்குமார், இறுதியாக 15-11-2000 அன்று விடுதலை செய்யப்பட்டார். நக்கீரன் கோபால், பழ. நெடுமாறன் தலைமையிலான தூதுக் குழுவினர் வீரப்பனிடம் பேச்சு நடத்தி ராஜ்குமாரையும், மற்றொரு பிணைக் கைதியான நாகேஷையும் மீட்டனர். காட்டுப் பகுதியின் எல்லையில் ராஜ்குமாரை பொன்னாடை போர்த்தி வீரப்பன் வழியனுப்பி வைத்தார். ராஜ்குமாரும் பதிலுக்கு வீரப்பனுக்கு நினைவுப் பரிசளித்தார்.



என்னுடன் ஆலோசனை நடத்திய பிறகு, ராஜ்குமாரை மீட்க நக்கீரன் கோபால் காட்டுக்குப் புறப்பட்டார்.

விடுவிக்கப்பட்ட ராஜ்குமார் ஏற்கனவே திட்டமிட்டபடி, ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஒரு பண்ணை வீட்டில் தங்க வைக்கப்பட்டார். அங்கே ராஜ்குமாரின் குடும்பத்தினரும் இருந்தனர். அங்கேயிருந்து பழ.நெடுமாறன் என்னிடமும், கர்நாடக முதல்வராக இருந்த எஸ்.எம். கிருஷ்ணா அவர்களிடமும், ராஜ்குமார் விடுவிக்கப்பட்ட செய்தியினைத் தெரிவித்தார். ராஜ்குமாரும் தொலைபேசியில் என்னோடு பேசி, அவரை மீட்பதற்காக மேற்கொண்ட நடவடிக்கை களுக்காக நன்றி தெரிவித்துக் கொண்டார். அப்போது மருத்துவமனையிலே இருந்த முரசொலி மாறன் நலம் குறித்தும் ராஜ்குமார் விசாரித்தார்.

ராஜ்குமாரை பெங்களூருக்கு அனுப்பிவிட்டு, சென்னை திரும்பிய நக்கீரன் கோபால், நெடுமாறன் குழுவினர் என்னைச் சந்தித்து நடைபெற்ற விவரங்களையெல்லாம் எடுத்துக் கூறினர். ராஜ்குமார் விடுவிக்கப்பட்டதுபற்றி பலரும் கடிதங்கள் மூலமாகவும், தொலைபேசி வாயிலாகவும் எனக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

குறிப்பாக, நான் பெரிதும் மதிக்கும் இயக்குனர் **கே.பாலசந்தர்** அவர்கள் எழுதிய கடிதத்தில், ‘‘பேரன்புமிக்க கலைஞர் அவர்களுக்கு, முதற்கண் நன்றி! நன்றி! மிகமிகப் பொறுமையுடனும், மிகமிகக் கவனத்துடனும் செயல்பட்டு; டாக்டர் ராஜ்குமார் அவர்களின் விடுதலையைப் பெற்றுக் கொடுத்த தங்களது ராஜதந்திரத்திற்கும், தங்களது விடா




என்னைச் சந்தித்த ரஜினிகாந்த், என் முயற்சிக்கு நன்றி தெரிவித்துப் பாராட்டினார்.

முயற்சிக்கும் திரைப்படத் தொழிலாளர்கள் அனைவரும் தலை வணங்கி, எங்களது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

★★★

இதற்கிடையே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளராகப் பணியாற்றியவரும் - என்னால் ஆருயிர் இளவல் என்று அழைக்கப்பட்டவரும் - கழக உடன்பிறப்புகளால் **''நாஞ்சிலார்''** என்று வாஞ்சையுடனும், பாசத்துடனும் அழைக்கப்பட்டவரும் - வருவாய்த் துறை அமைச்சராக திறம்படப் பணியாற்றி வந்தவருமான நாஞ்சிலார் அவர்கள், 1-8-2000 அன்று அதிகாலையில் மாரடைப்பு காரணமாக இயற்கையெய்தினார். செய்தியினைக் கேட்டதும் அதிர்ச்சியடைந்த நான், உடனடியாக அவரது இல்லம் சென்று, அவரது உடல்மீது மலர் வளையம் வைத்துக் கதறி அழுதேன். அவருடைய குடும்பத்தினருக்கு என்னால் ஆறுதல் எதுவும் சொல்ல முடியாமல் தவித்தேன்.

விடியற்காலை 5 மணி அளவில், அவருக்கு திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டு, உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிகிச்சை அளித்தும், அவரைக் காப்பாற்ற முடியவில்லை. நாடாளுமன்ற உறுப்பினராக - சட்டமன்ற உறுப்பினராக - அமைச்சராக - பல்வேறு பொறுப்புக்களிலே




இயக்குநர் பாலச்சந்தர்

திறம்பட செயல்பட்டவர் நாஞ்சிலார். பேரறிஞர் அண்ணா அவர்களின் கரம் பிடித்து வளர்ந்து - என் இதயத்திலே இடம்பெற்று - பேச்சிலும் சரி, பழகுவதிலும் சரி, ஆடை அணிவதிலும் சரி, தனக்கென ஒரு தனி பாணியை வகுத்துக் கொண்டு, இறுதி வரையில் அந்தப் பாதையில் நடை போட்டவர், அவர். எந்த நேரத்திலும் புன்னகை தவழும் முகத்துடன், இனிய சொற்களால் அளவளாவி, தான் இருக்கும் இடம் கலகலப்பாக இருக்கும் வகையில் நடந்து கொள்வது நாஞ்சிலாருக்குரிய தனிச் சிறப்பு.

அ.தி.மு.க. அரசிலே அவர் நிதியமைச்சராக இருந்தபோது - ஒரு பிரச்சினை குறித்து நான் கேள்வி எழுப்பி, ''அது எப்போது விவாதத்திற்கு எடுக்கப்படும்?'' என்று கேட்டபோது - நாஞ்சிலார் எழுந்து, ''செவ்வாய் அன்று நீ வெல்வாய்''என்று பதிலளிக்க, அவையே கலகலப்பாகியது. உடனே நான் எழுந்து, ''நீ அடிக்கடி இப்படித்தான் சொல்வாய்'' என்று கூறியதும் அவையே சிரிப்பில் மூழ்கியது.

இடையில் கழகத்தைவிட்டுப் பிரிந்திருந்தாலும், 1980ஆம் ஆண்டு மீண்டும் கழகத்திலே என் தலைமையில் தன்னை இணைத்துக் கொண்டபோது, துணைப் பொதுச் செயலாளர் பொறுப்பினைக் கழகம் அவருக்கு அளித்தது. தனது இறுதிக் காலம்வரையில் அந்தப் பொறுப்பினை தன்னிடமே வைத் திருந்தார். மென்மையான சுபாவம் - யாரிடமும் அதிர்ந்து பேசத் தெரியாதவர், அவர்.


பச்சையப்பன் கல்லூரி மாணவராய் இருந்த காலத்திலேயே, பல்வேறு தலைப்புக்களில் அவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் நிகழ்த்திய உரைகள் வரலாற்றுப் புகழ்மிக்கவை. அவரது நேர்கொண்ட பார்வை, நிமிர்ந்த நன்னடை, நாஞ்சில் வளம்



கர்நாடக முதல்வர் எஸ்.எம்.கிருஷ்ணா என்னை சந்தித்து,
ராஜ்குமார் மீட்பு பற்றிப் பேசினார்!

காட்டும் பைந்தமிழ், இனிய குரல் தமிழ் மக்களை அவரிடம் ஈர்த்தன. திராவிட இயக்கத்தில் இளம் வயதிலேயே பெயர் பெற்றவராக விளங்கினார் என்பதற்கு உதாரணம் கூற வேண்டுமேயானால், கல்லூரி மாணவராக அவர் இருந்த போதே, நாகர்கோயிலில் தமிழகம் தழுவிய அளவிற்கு அவர் நடத்திய பெரும் திராவிட இயக்க மாநாட்டினைக் கூறலாம்.

அவரைப்பற்றி அப்போது நான் எழுதிய இரங்கல் செய்தியில் - ''இனிய இளவலே! எப்படித் தீரும் இந்தத் துயரம்? - என வினவிடும் நிலையில் எம் கண் எதிரே வீழ்ந்து பட்டனையே - தாங்க முடியவில்லை - ஏங்கித் தவிக்கிறேன். துடித்தழும் உன் குடும்பத்தினருக்கும் தூய உடன் பிறப்புக்களுக்கும் ஆறுதல் சொல்லும் வகையற்று நிற்கின்றேன். ஒன்றா? இரண்டா? எத்தனை ஆண்டுக் காலம் நம் நட்பு? இடையே எழுந்த வேறுபாடுகள்கூட புகையாய் மறைந்ததே தவிர, பகையாய் நிலைக்கவில்லையே! ஏற்றுக் கொண்ட பெரும் பொறுப்பை எவ்வளவு கச்சிதமாக நிறைவேற்றி என்னை மகிழ்வித்துக் கொண்டிருந்தாய்! எமக்குத் துணையிருக்கத் தானே துணைப் பொதுச் செயலாளராக ஆக்கினோம்; எம் நெஞ்சு புலம்பிடப் பிரிந்து விட்டாயே! ''மாவட்டச் செயலாளர்கள் கூட்டத் திற்குக்கூடச் செல்லாமல் கழகத் தலைவரின் அனுமதிபெற்று இந்தச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளேன்'' என்று நீ



காட்டில், வீரப்பன் பிடியிலிருந்த ராஜ்குமாரைச் சந்தித்தார், நக்கீரன் கோபால்

பேசியதை நேற்றுத்தான் மாலை ஏடுகளில் கண்டேன். போய் வருவதற்குத்தான் அனுமதி அளித்தேன் - வராமலே நீ போவதற்கு அனுமதி அளிக்க வில்லையே! பரவாயில்லை - என் கண்ணீரைக் காண்பதற்கு உனக்கும் ஓர் ஆசை - அதை நிறைவேற்றிக் கொண்டாய் - என் இதயத்தில் என்றென்றும் வீற்றிருப்பாய்'' - என்று குறிப்பிட்டிருந்தேன்.

அவரது இறுதி ஊர்வலம் 2-8-2000 அன்று காலையில் நடைபெற்றது. அரசு மரியாதையுடன் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

தலைமைக் கழகத்தின் சார்பில் சென்னை கலைவாணர் அரங்கில் நாஞ்சிலார் அவர்களின் திருவுருவப் படத் திறப்பு 1-9-2000 அன்று நடைபெற்றது. **பேராசிரியர்** தலைமையில் படத்தினை நான் திறந்து வைத்தேன். நாஞ்சிலார் கடைசியாக எனக்கு எழுதிய மடல் ஒன்றினை இந்தத் தொடரிலே பதிவு செய்ய விரும்புகிறேன். வருவாய்த் துறையின் அமைச்சர் என்ற முறையில் அவர் எனக்கு எழுதிய அந்தக் கடிதம் -

''மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு - அன்புடையீர்! நமது அரசு பதவியேற்ற 13-5-1996 முதல் 2-1-2000 வரை எனது அலுவலகம் பெறப்பட்ட கோப்புகளின் மொத்த எண்ணிக்கை 7,401. அனைத்துக் கோப்புகளிலும் உடனுக்குடன் முடிவுகள் எடுக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப் பட்டது. 2-1-2000 வரை பெறப்பட்ட கோப்புகள் எதுவும் நிலுவையில் இல்லை. (இதைப் போலத்தான் அவர் மறைவதற்கு முதல் நாள் வரையிலேகூட ஒரு கோப்புகூட நிலுவையிலே இல்லாமல், அத்தனை கோப்புகளிலும்



தமிழக அரசின் வேண்டுகோளை ஏற்று,
ராஜ்குமாரை, விடுவிக்க முன்வந்தான், வீரப்பன்

கையெழுத்துப் போட்டு விட்டுச் சென்றார் என்ற செய்தியை பின்பு நான் கேள்விப்பட்டேன்) இதே போல், சட்டமன்றப் பேரவை மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர்கள், பொது மக்கள், கழகத் தினரிடமிருந்து பெறப் பட்ட பல்வேறு கோரிக் கைகள் அடங்கிய 21,000 மனுக்கள் தனிக் கவனம் செலுத்தப்பட்டு, மேல் நடவடிக்கைக்காகச் சம்பந்தப் பட்ட துறைத் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அவைகளில் 80 சதவிகிதம் மனுக்கள்மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு விட்டன. இதர மனுக்கள் சம்பந்தப்பட்ட துறையின் பரிசீலனையில் உள்ளன என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

நாஞ்சில் கி. மனோகரன்.”

கழகத்திற்காக மேலும் பல ஆண்டுகள் அவர் இருந்து பணியாற்ற வேண்டிய நிலையில், இயற்கை அவரை நம்மிட மிருந்து கொத்திக் கொண்டு சென்று விட்டது.

★★★

3-8-2000 அன்று சென்னையிலே ஒரு திரைப்பட விழாவிலே கலந்துகொண்டேன். **“வானத்தைப்போல”** என்ற திரைப்படத்தின் வெற்றி விழா நிகழ்ச்சி அது. அந்த விழாவிலே கலந்துகொண்டு அதன் வெற்றிக்காகப் பாடுபட்ட கலைஞர் களுக்குப் பரிசுகளை வழங்குகின்ற பணியிலே கலந்து கொண்டேன். அந்தப் படத்தில் நடித்த எழுச்சிக் கலைஞர் **விஜயகாந்த்** அவர்களுக்கு நான்தான் கேடயம் வழங்கினேன். அந்த நிகழ்ச்சியிலே என்னுடன் சுப்ரீம் ஸ்டார் **சரத்குமார்**, நடிகர் **விஜய்**, இயக்குனர் **விக்ரமன்** ஆகியோர் கலந்து கொண்டனர்.




என் ஆருயிர் இளவல் நாஞ்சில் மனோகரன் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றேன்.

4-8-2000 அன்று முதலாவது தனி நீதிமன்றத்தில், ஒரு வழக்கில் தீர்ப்பு கூறப்பட்டது. அது, ஜீவா போக்குவரத்துக் கழகத்தில் 2 கோடியே 18 இலட்சம் ரூபாய் அளவுக்கு நடந்த ஊழல் குறித்து முன்னாள் அமைச்சர் **கே.ஏ.செங்கோட்டையன்** மீது விசாரணை நடைபெற்று, நீதிபதி ஆறுமுகப் பெருமாள் தீர்ப்பு கூறினார். ஜீவா போக்கு வரத்துக் கழகப் பேருந்துகளுக்கு உதிரி பாகங்கள் மற்றும் இருக்கைகள் வாங்கியதிலும், பயணச்சீட்டுகளை அச்சடித்ததிலும், பேருந்துக் கூண்டு கட்டும் பணியைத் தனியாருக்கு அளித்ததிலும் முறைகேடுகள் நடந்ததாகப் புகார் கூறப்பட்டது. அந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிப்பதற்கு சிறப்பு தணிக்கை யாளர் செல்வராஜ் நியமிக்கப்பட்டார். அவருடைய அறிக்கையின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

அதில் செங்கோட்டையனுக்கு நான்காண்டு கடுங்காவல் தண்டனையும், ஒரு லட்சத்து 5 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. மேலும் ஜீவா போக்குவரத்துக் கழக முன்னாள் நிர்வாக இயக்குநர் **வீரப்பன்,** கமிஷன் பணத்தைப் பெற்று அமைச்சருக்கும் அதிகாரிகளுக்கும் கொடுத்ததாகக் குற்றம்சாட்டப்பட்ட **கோபி நடராஜன்** என்ற யுனிவர்சல் நடராஜன் ஆகியோருக்கும் நான்காண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

அந்த வழக்குபற்றி நீதிபதி தனது தீர்ப்பில் கூறும்போது, ‘‘ஊழலுடன் தங்களைப் பிணைத்துக் கொண்ட பின்னரே சிலர் பொது வாழ்க்கைக்கு வருகின்றனர். இதனால் தங்களை மட்டுமல்லாமல், நாட்டின் பொருளாதாரத்தையும் இவர்கள் அழிவுக்கு இட்டுச் செல்கின்றனர். இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள இரண்டாவது குற்றவாளியான முன்னாள்



நாஞ்சிலாரின் இறுதி ஊர்வலத்தில் பல்லாயிரக் கணக்கானோர் கலந்து கொண்டனர்

அமைச்சரைப் பார்த்தால், இது நன்கு புரியும். மக்கள் நலனுக் காகப் பணியாற்ற வந்த இவர், சட்டங்களையும் விதிமுறை களையும் மதிக்காமல் செயல் பட்டுள்ளார். அரசுப் போக்கு வரத்துக் கழகப் பேருந்துகளுக்குத் தேவையான பொருட்களை வாங்கு வதில் ரூபாய் இரண்டு கோடி அளவுக்கு மோசடி செய்துள்ளார். இந்த வழக்கில் குற்றம் சாட்டப் பட்டவர்கள் சமூகத்தில் சாமானியர் களைவிட நல்ல நிலையில் இருப்பவர்கள். இருப்பினும் முறைகேடான, குறுக்கு வழிகளைக் கையாண்டு சொத்து சேர்க்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் பொது வாழ்க்கைக்கு வந்துள்ளனர். இவர் களுக்கு இரக்கம் காட்டத் தேவையில்லை. அதற்கு இவர்கள் தகுதியானவர்களும் அல்ல'' என்று வேதனையுடன் குறிப் பிட்டார். நீதிபதி அந்த அளவிற்குக் குற்றம் சாட்டிய போதிலும், பின்னர் அ.தி.மு.க. ஆட்சி அமைந்த பிறகு, மேல் முறையீட்டில் என்ன ஆயிற்று என்பதைப் பின்னர் எழுதுகிறேன்.

★★★



தலைமைக் கழகத்தின் சார்பில், சென்னை கலைவாணர் அரங்கில், நாஞ்சிலார் படத்தைத் திறந்து வைத்தேன்.



வானத்தைப் போல திரைப்படத்தின் வெற்றி விழாவில் விஜய்காந்த் உள்ளிட்ட கலைஞர்களுக்குக் கேடயம் வழங்கினேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதெல்லாம் ஆட்சியிலே இருக்கிறதோ, அப்போதெல்லாம் தமிழகத்தின் தொழில் வளர்ச்சியிலே மிகுந்த அக்கறை காட்டி வருவதை அனைவரும் அறிவார்கள்.

1989-91 கால கட்டத்தில் தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு அப்போதைய கழக அரசு அளித்த ஊக்கத்தின் காரணமாக, தமிழகம் இந்தியாவில் மூன்றாம் இடத்தை அடைந்தது.

1991-96ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் பின் தங்கி ஐந்தாம் இடத்திற்குச் சென்றது.

1996இல் மீண்டும் கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, தமிழகம் தொழில் வளர்ச்சியில் தலை நிமிர்ந்தது.

22-7-2000 அன்றைய நிலையில் "இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம்" (Centre for Monitoring Indian Economy) வெளியிட்ட அறிக்கையின்படி, 1 லட்சத்து 56 ஆயிரத்து 893 கோடி ரூபாய் முதலீடுகளைப் பெற்று, தமிழகம் தொழில் முதலீடுகளில் இந்தியாவிலேயே முதலாவது மாநிலமாக முன்னேற்றம் கண்டது. 21-7-2000 அன்று "இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம்", இந்திய மாநிலங்களில் செய்யப்பட்டுள்ள முதலீடுகளை எல்லாம் தொகுத்து வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, தமிழகம் தொழில் முதலீடுகளில் இந்தியாவில் முதலிடம் பெறும் நிலை மீண்டும் உறுதிப்பட்டது.

ஒரு லட்சத்து 60 ஆயிரத்து 804 கோடியே 40 இலட்ச ரூபாய் முதலீடுகள் பெற்று, தமிழ்நாடு முதல் இடத்திலே உள்ளது. இது ஒப்புதல் அளிக்கப்பட்டு செயலாக்கத்தில் உள்ள இந்தியாவில் மொத்த முதலீட்டில் 12.07 சதவிகிதம் ஆகும்.


8-8-2000 அன்று வெளிவந்த **"தி எகானமிக் டைம்ஸ்"** நாளேட்டில் வெளி வந்த கட்டுரையில், "தொழில் முதலீடு செய்வதில் மாநிலங்களுக்கு இடையே கடும் போட்டி நிலவிவரும் இத்தருணத்தில், மகாராஷ்டிராவை முந்திக் கொண்டு பெரும் இடைவெளியுடன் தமிழகம் முதல் இடத்தைப் பெற்றுள்ளது. மகாராஷ்டிராவைவிட தமிழகம் ரூ.2,394 கோடி அதிக முதலீடு செய்துள்ளது. இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம் முதலீடுகள் குறித்து கடைசியாக ஒரு அட்டவணையினை வெளியிட்டுள்ளது. அதில் இந்த ஆண்டு ஜூலை 31 வரையிலான முதலீடுகள் உள்ளன. அதன்படி தமிழ்நாடு ரூ. 1,60,804 கோடி முதலீட்டுடன் முதல் இடத்தில் உள்ளது. அப்போது தமிழகமும், மராட்டியமும் போட்டி போட்டுக்கொண்டு தங்கள் முதலீடுகளை உயர்த்தத் தொடங்கின. அவைகளுக்கிடையே நடந்த இந்தப் போட்டியில் தமிழகம் வெற்றி பெற்று, ரூ. 2,394 கோடி வித்தியாசத்தில் முன்னணிக்கு முதல் இடத்திற்குச் சென்று விட்டது" என்று எழுதியிருந்தது.

10. அரசியல் நாகரிகம் தெரிந்த ஜோதிபாசு

25-8-2000 அன்று கலைவாணர் அரங்கத்தில், நான் எழுதிய **"சங்கத்தமிழ்"** இசை நாட்டிய நாடகத்தின் 150வது வெற்றி விழா நடைபெற்றது. சங்கத் தமிழ் நூலில், நான் எழுதிய ஒரு சில கவிதைகளைத் தொகுத்து, அவைகளை இசைப் பாடலாக ஆக்கி, ஒரு நாட்டிய நாடகமாகத் தம்பி சொர்ணத்தின் அன்பு மகள் **முத்தரசி** மிகச் சிறப்பாக நடத்தி வந்தார்.

1997 ஜனவரி திங்கள் 14ஆம் நாள் அரங்கேற்றப்பட்டது, அந்த நாடகம். நானே பலமுறை அந்த நாட்டிய நாடகத்தைக் கண்டு பாராட்டியிருக்கிறேன்.

அந்த நாட்டிய நாடகத்தின் 150வது விழாதான் அன்றைக்கு நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியில் அருமை நண்பர் **நடிகர் திலகம் செவாலியே சிவாஜிகணேசன், கவிப் பேரரசு வைரமுத்து, கலைமாமணி இயக்குநர் இராம.நாராயணன்,** டாக்டர் **பத்மா சுப்பிரமணியம்,** சுப்ரீம் ஸ்டார் **சரத்குமார்,** இலக்கியச் செல்வர் **குமரி அனந்தன்** ஆகியோர் கலந்து கொண்டு உரை யாற்றினர். இயல், இசை, நாடக மன்றச் செயலாளராக இருந்த சொர்ணம் வரவேற்புரையாற்றினார்.



திருமதி முத்தரசி பரதத்தின் பெருமை சொல்லும் பாரம்பரிய அடையாளங்களின் கூடமாகத் திகழும் **'கலைக் கோயில்'** எனும்



முத்தரசி ரவி

கலைப்பள்ளி மூலமாக, பரத நாட்டியம் மற்றும் வாய்ப்பாட்டு பயிற்சி யினை அளித்து வருவதோடு, ஆர்வமுள்ள ஏழை எளிய மாணவர்களுக்கு இலவச மாகவும் பயிற்சி அளித்து வருகிறார். முத்தரசி ரவி, திருமதி சந்திரகலா ஜெக நாதன் மற்றும் வழுவூர் சாம்ராஜ் ஆகியோரிடம் முறையாக பரதம் பயின்று, நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார்.

அந்த விழாவில், நான் முத்தரசியை வாழ்த்திப் பேசிவிட்டு, அருமை நண்பர் சிவாஜிக்கும் எனக்கும் உள்ள நட்பைப் பற்றி நீண்ட நேரம் பேசினேன். ஏனென்றால் அவர் பேசும்போது, தமிழகத்திலேயே கலை உலகத்தில் தனக்குத்தான் நான் அதிகமாக வசனம் எழுதியிருக்கிறேன் என்றும், தான்தான் என்னுடைய வசனங்களை அதிகமாகப் பேசியிருக்கிறேன் - என்றும் சொன்னார்.

"அதிகமாகப் பேசியது மாத்திரமல்ல - மிகவும் அழகாக என்னுடைய வசனங்களைப் பேசியதே நீங்கள்தான்!" என்று நான் பேசும்போது குறிப்பிட்டேன்.

"கலைஞர் எனக்குக் காதல் வசனமே எழுதவில்லை!" என்றார். "**அனார்கலியை** மறந்துவிட்டு - **திரும்பிப்பார்** திரைப் படத்தை மறந்துவிட்டு அப்படிச் சொல்லலாமா?" என்று கேட்டதோடு, அந்த வசனங்களையெல்லாம் அந்த விழாவிலே சொல்லிக் காட்டினேன். அந்த விழாவில் அருமை நண்பர் சிவாஜி ஆற்றிய உரையையும், நான் என்னுடைய இந்த வரலாற்றுச் சித்திரத்தில் இடம் பெறச் செய்ய எண்ணுகிறேன். நடிகர் திலகம் சிவாஜி அந்த விழாவில் பேசும்போது -

"விழா அழைப்பிதழிலே சிவாஜி சிறப்புரையாற்றுவார் என்று உள்ளது. அறுபது வருடங்களுக்கும் மேலாக, சிரித்துக் கொண்டே ஒருவர் பக்கத்திலே ஒருவர் உட்கார்ந்திருக்



நாடகத்தை நாட்டியத் தாரகை பத்மா சுப்பிரமணியமும்,
நடிகர் சரத்குமாரும் பார்த்து ரசித்தனர்.

கிறோமே கலைஞரும் நானும், இதைவிடச் சிறப்பிக்க வேறு என்ன வேண்டும்? இது கடைசிவரை நீடிக்கும். 150வது முறையாக இந்த இசை நாடகம் நடந்திருக்கிறது. 300 நாடகம் நான் நடத்த வேண்டும், எப்போது எனக்கு எழுதுவீர்கள்? நான் பெரும் சுயநலக்காரன்! **கலைஞர்** எழுதிய வசனத்திலே அதிக மாகப் பேசியவன் நானாகத்தான் இருக்க முடியும். கடைசி வரை பேசப் போகிறவனும் நானாகத்தான் இருப்பேன். கலைஞர் அவர்களே! எனக்கு எப்போது எழுதப் போகிறீர்கள்? யாருக்கய்யா ''கலைஞர்'' என்று பெயர் இருக்கிறது? நானும் வாழ்நாள் முழுதும் நடித்துக்கொண்டே இருக்கிறேன். பல பேர் நடித்துக் கொண்டிருக்கிறார்கள். உங்கள் ஒருவருக்குத்தான் 'கலைஞர்' என்ற பெயர் இருக்கிறது. அந்தப் பெயர் கடைசி வரை மறையாது. கலைஞர் அவர்கள்மீது எனக்குக் கோபம்! நீளமான வசனத்தை எழுதியிருக்கிறார் - அருமையான வசனத்தை எழுதியிருக்கிறார் - காதல் வசனம் மட்டும் எனக்கு எழுதவே இல்லை. ஒருவேளை என்மீது நம்பிக்கை இல்லையோ? ஒருவேளை என் மனைவி கமலாமீது அனுதாபமோ? ஒரு முறையாவது காதல் வசனம் எழுதுங்க!'' என்றெல்லாம் கூறியது இன்னமும் பசுமையாக என் நினைவிலே பதிந்துள்ளது.

★★★




நாட்டியக் கலைஞர்களுடன், நான்

மறுநாள் - 26ஆம் - தேதி இரவு புகை வண்டியில் புறப்பட்டு நாகப்பட்டினம் சென்று, 27-8-2000 அன்று திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டேன். குறிப்பாக, நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் புதிய கட்டிடத் திறப்பு விழாவினையும், திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகப் புதிய கட்டிடத்தின் திறப்பு விழாவினையும் நடத்தி வைத்தேன்.

★★★

இதற்கிடையில், தமிழகச் சட்டமன்ற முன்னாள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு. **வி.கே.இராமசாமி** அவர்களின் நூற்றாண்டு விழா 28-8-2000 அன்று சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது. எக்ஸ்னோரா இண்டர்நேஷனல் நிறுவனர் நண்பர் **எம்.பி. நிர்மல்** அந்த விழாவிற்குத் தலைமை வகித்தார்.

திரு.மோகன் வரவேற்புரை ஆற்றினார். சட்டப் பேரவைத் தலைவராக இருந்த பண்பாளர் **பி.டி.ஆர்.பழனிவேல்ராஜன்** முன்னிலை வகித்தார். **வி.கே.ராமசாமி** முதலியார் அவர்களின் திருவுருவப் படத்தினை நான் திறந்து வைத்து உரை யாற்றினேன். அந்த விழாவில் **வி.சுபாஷ்சந்திரன்,** நீதியரசர்கள் **எஸ்.நடராசன், மு.இஸ்மாயில்,** நாடாளுமன்ற உறுப்பி னராக அப்போதிருந்த திருமதி **ஜெயந்தி நடராசன்** ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.



27.8.2000 அன்று நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்தேன்.

வி.கே.ஆர். அவர்கள் மேலவையிலும் உறுப்பினராக இருந்து, அவரது பதவிக் காலம் முடிந்து விடைபெறுகின்ற நேரத்தில் நான் அவரைப்பற்றியும், அவரது பணிகள் பற்றியும் மேலவையில் பாராட்டிப் பேசினேன். அந்தப் பாராட்டுரைக் குப்பின் அவர் நன்றி தெரிவித்து ஆங்கிலத்திலே பேசினார். பொதுவாக அவர் எப்போதும் தமிழிலே பேசமாட்டார். அவர் பேசும்போது -

"I would most sincerely and from the bottom of my heart thank the Hon'ble Chief Minister for the encomiums paid to me and also for the words said about me. I am one of those who earnestly feel that this Upper House must continue. It consists of very experienced and able men. However, much people talk outside about its abolition. I know the Hon'ble Chief Minister and his Colleagues are of the opinion that



சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராகப் பணியாற்றிய வி.கே. இராமசாமி அவர்களின் நூற்றாண்டு விழாவில், அவரது படத்தைத் திறந்து வைத்தேன்



வேலூர் மாவட்டத்தில், மோர்தானா அணையைத் திறந்து வைத்தபோது, ஏராளமானோருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினேன்.

this House should continue, and I am sure that it will continue. I must thank the Hon'ble Chief Minister and his Colleagues for their uniform kindness, goodwill and courtesy they have been showing me. I feel the present Chief Minister is one of the best administrators. He takes very quick decisions and passes orders and has won the admiration of the people at large. I wish him well and the best of luck in the discharge of his duties" என்று என்னைப் பலபடப் பாராட்டினார். அவரது நூற்றாண்டு விழாவில், மேலவையில் அவரை நான் பாராட்டியதையும், அவர் ஆற்றிய நன்றியுரை யையும் குறிப்பிட்டுக் காட்டி உரையாற்றினேன்.

★★★

தீவிர அரசியலில் இருந்து ஒதுங்கியிருந்த அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் எல்லாம் இணைந்து, புதிய கட்சியைத் தொடங்கப் போவதாக 27-8-2000 அன்று சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்து முன்னாள் அமைச்சர்கள் **பண்ருட்டி ராமச்சந்திரன், க.ராஜாராம்** ஆகியோர் தெரிவித்தனர். முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர்கள் க.ராஜாராம், பண்ருட்டி ராமச்சந்திரன், **பொன்னையன், நாமக்கல் அருணாசலம், ராஜா முகமது** ஆகியோர் சென்னை, நந்தனத் தில் உள்ள **எஸ்.டி. சோமசுந்தரத்தின்** ''நமது கழகம்'' அலுவலகத்திலே கூடி செய்தியாளர்களிடம் இந்தத் தகவலைத் தெரிவித்தனர்.

★★★



நான் ஏற்கனவே எழுதியவாறு, 2-9-2000 அன்று வேலூர் மாவட்டத்தில் இரண்டு முக்கிய நிகழ்ச்சிகள் - பேரனாம்பட்டு தொகுதியிலே 100 கோடி ரூபாய்ச் செலவிலே கட்டப்பட்ட **மோர்தானா** அணைக்கட்டுத் திறப்பு விழா - அடுத்து மனித நேயத்திற்கு விரோதம் இல்லாமல் ஆன்மீகத்தைக் கடைப் பிடித்த **திருமுருக கிருபானந்த வாரியார்** அவர்களின் மணி மண்டபத் திறப்பு விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டேன்.

பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த **தம்பி துரைமுருகன்** முயற்சியினாலும், வலியுறுத்தலாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டம்தான் மோர்தானா அணைக்கட்டுத் திட்டம். அதன் திறப்பு விழாவிற்கு அவரும் என்னோடு வந்திருந்தார். நான் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளுக்கெல்லாம் என்னுடன் வரும் அவர், சொந்த மாவட்ட நிகழ்ச்சிக்கு வராமல் இருப்பாரா? மோர்தானா அணைக்கட்டின் காரண மாக குடியாத்தம் வட்டத்தில் 15 கிராமங்களும் - காட்பாடி வட்டத்தில் 16 கிராமங்களும் - வேலூர் வட்டத்தில் 19 கிராமங்களும் பயன்பெறும் என்றும் - அந்தக் கிராமங்களில் உள்ள எட்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் என்றும் - அதனால் நான்காயிரம் விவசாயக் குடும்பங்களுக்கும், பத்தாயிரம் விவசாயத் தொழிலாளர்



கன்னியாகுமரியில் உள்ள நான் திறந்து வைத்த பெருந்தலைவர் காமராஜரின் மணிமண்டபம்.

குடும்பங்களுக்கும் பயன் உண்டாகும் என்றும், அந்தத் திறப்பு விழாவில் நான் விளக்கினேன்.

அந்த விழாவில் நண்பர் **ஞானசேகரன்** பேசும்போது, மோர்தானா அணைக்கட்டுத் திட்டம் 1962ஆம் ஆண்டு பெருந்தலைவர் **காமராஜர்** அவர்களால் அடிக்கல் நாட்டப் பட்ட திட்டம் என்று கூறியதுபற்றி - நான் பேசும்போது, ''காமராஜர் ஆட்சியில் தொடங்கப்பட்ட நல்ல திட்டங்களை எல்லாம் இந்தக் ''காமராஜர் ஆட்சி'' தொடர்ந்து நடத்தும் என்பதற்கானச் சான்றுதான் இத்திட்டத்தின் திறப்பு விழா'' என்று குறிப்பிட்டேன்.

★★★

2000ஆம் ஆண்டு அக்டோபர் முதல் வாரத்தில் நெல்லை, குமரி மாவட்டங்களில் பல்வேறு நிகழ்ச்சிகள்! 1-10-2000 அன்று தூத்துக்குடியில் இந்தியத் தொழில் மற்றும் வர்த்தகச் சங்கத்தின் பவள விழா - அன்று மாலையில் தூத்துக்குடி மருத்துவக் கல்லூரியின் தொடக்க விழா மற்றும் கழகப் பணிமனைத் திறப்பு விழா.




நெல்லைச் சுற்றுப் பயணத்தின்போது, ''தினத்தந்தி'' அதிபர் சிவந்தி ஆதித்தன் எனக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

2-10-2000 அன்று காலையில் இரண்டு அணைகள் திறப்பு விழா - **நம்பியாறு அணை** திறப்பு விழா மற்றும் **பொய்கை யாறு அணை** திறப்பு விழா - முறையே வள்ளியூரிலும், ஆரல்வாய்மொழியிலும் நடைபெற்றன.

அன்று மாலையில், குமரியில் பெருந்தலைவர் **காமராஜர் மணி மண்டபம்** திறப்பு விழா. இந்த மணி மண்டபம் அமைவ தற்காக நான் மேற்கொண்ட முயற்சிகள்பற்றி ஏற்கனவே விரிவாக எழுதியிருக்கிறேன்.

3-10-2000 அன்று திருநெல்வேலியில் **உழவர் சந்தை** திறப்பு விழா. அன்று மாலையில் பாளையங்கோட்டையில் **சட்டக் கல்லூரி** கட்டிடத் திறப்பு விழா - தொடர்ந்து திருநெல்வேலியில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் சிலை திறப்பு விழா ஆகிய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டேன்.

காமராஜரின் மணி மண்டபத்தையும், சிலையையும் நான் திறந்து வைத்த செய்தி அனைத்து ஏடுகளிலும் பெரிதாக வந்ததும், ஜெயலலிதா விடுத்த அறிக்கையில், ''ஆண்டிப் பட்டியிலும், திண்டுக்கல்லிலும் **எம்.ஜி.ஆர்.** சிலை வைக்க கருணாநிதி அரசு தாமதம் செய்து வருகிறது. அனுமதி வழங்கா விட்டால், நானே தலைமையேற்று போராட்டம் நடத்துவேன்'' என்று அறிவித்தார்.



ஜோதி பாசு

8-10-2000 அன்று அந்த அறிக்கைக்கு பதிலளித்த நான், "ஆண்டிப்பட்டியிலும், திண்டுக்கல்லிலும் எம்.ஜி.ஆர். சிலை வைப்பது பற்றிய பிரச்சினையிலே எந்தவிதமான கால தாமதமும் இல்லை - உள்ளாட்சி நிறுவனமோ, மாவட்ட ஆட்சியரோ அதற்கு எந்த மறுப்பும் கூறவில்லை - 1997ஆம் ஆண்டே அ.தி.மு.க. ஒன்றியக் கழகத்தின் சார்பில் ஆண்டிப்பட்டி பேரூராட்சி மன்றத்திற்கு விண்ணப்பிக்கப் பட்டு, 30-5-1997 அன்று ஆண்டிப்பட்டி பேரூராட்சி மன்றம் சிலை வைப்பதற்கான தீர்மானத்தை நிறைவேற்றி - ஒன்றிய அ.தி.மு.க.விற்கு எம்.ஜி.ஆர். சிலை வைக்க அனுமதி வழங்கப் பட்டுவிட்டது. ஆனால், மூன்றாண்டு காலமாக ஆண்டிப் பட்டி ஒன்றிய அ.தி.மு.க. தான் எம்.ஜி.ஆர். சிலை வைக்க முயற்சி எடுக்கவில்லை, அதன் பிறகு 4-7-2000இல் மீண்டும் ஒரு மனு எம்.ஜி.ஆர். சிலை வைக்கக் கோரி கொடுத்திருக் கிறார்கள்" என்று விளக்கினேன்.

அதைப்போலவே திண்டுக்கல் நகராட்சி மன்றத்திலும் அனுமதி கொடுக்கப்பட்டதை விளக்கினேன். விளக்கிவிட்டு, ஜெயலலிதா ஆட்சியிலே இருந்தபோது "எம்.ஜி.ஆர். அ.தி.மு.க." சார்பில் ஈரோட்டிலே எம்.ஜி.ஆர். சிலை வைக்க எந்த அளவிற்குச் சிரமப் பட்டார்கள், எப்படியெல்லாம் அந்தச் சிலை அலைக்கழிக்கப்பட்டது - என்பதையெல்லாம் ஆதாரப் பூர்வமாகக் குறிப்பிட்டேன்.

★★★

உலகின் முதல் பெண் பிரதமரான **சிறிமாவோ பண்டாரநாயகா.** 10-10-2000 அன்று நடைபெற்ற இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் தனது வாக்கை அளித்துவிட்டு,

வீட்டுக்கு வரும் வழியில், தனது 84வது வயதில் காரிலேயே மாரடைப்பால் காலமானார். கொழும்புக்கு பக்கத்திலே உள்ள அட்டனகள்ளி தொகுதியில் அந்தத் தேர்தலில் அவருடைய மகன் **அனுரா பண்டார நாயகா** அப்போது வேட்பாளராக நின்றிருந்தார். அந்தத் தொகுதிக்குச் சென்று வாக்களித்து விட்டுத் திரும்பும் போது திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா நெஞ்சு வலி ஏற்பட்டு, மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே இறந்துவிட்டார்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவின் கணவர் **எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயகா** அவர்கள் 1959ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கை சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பை, திருமதி சிறிமாவோ பண்டார நாயகா ஏற்றார். 1960ஆம் ஆண்டு இலங்கையில் பிரதமராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1960, 1970, 1994 ஆகிய மூன்று முறை அவர் பிரதமர் பதவி வகித்துள்ளார். 1977 தேர்தலில் சிறிமாவோவின் கட்சி தோல்வி அடைந்தது. **ஜே.ஆர். ஜயவர்த்தனா** பதவியை அப்போது பிடித்தார்.

சிறிமாவோவின் மகள்தான் **சந்திரிகா குமாரதுங்கா**. அவர் இலங்கையின் அதிபரானார். நாடாளுமன்றத்திற்கு அப்போது நடைபெற்ற தேர்தலில், மொத்தம் உள்ள 225 தொகுதிகளில் அதிபர் சந்திரிகா குமாரதுங்காவின் தலைமையிலான மக்கள் கூட்டணிக்கு 109 தொகுதிகளும், **ரணில் விக்ரமசிங்க** தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சிக்கு 90 இடங்களும் கிடைத்தன. இடதுசாரி அமைப்பான **"ஜனதா விமுக்தி பெருமன"**வுக்கு 10 தொகுதிகளும், இதரக் கட்சி களுக்கு 16 தொகுதிகளும் கிடைத்தன.

★★★

2000ஆம் ஆண்டு அக்டோபர் கடைசியில், மத்திய தொழில் துறை அமைச்சராக இருந்த தம்பி **முரசொலி மாறனின்** ஒற்றைத் தலைவலி கடுமையாகி, **அப்பல்லோ** மருத்துவமனையில் 28-10-2000 அன்று சேர்க்கப்பட்டார். நவம்பர் 7ஆம் தேதி

நள்ளிரவில் சற்றுக் கவலைக்கிடமாயிற்று. நான் உடனடியாக மருத்துவமனைக்குச் சென்றேன்.

மாறனின் இதயத் துடிப்பைச் சீரமைக்க விசேஷ பேஸ் மேக்கர் கருவி மார்புக்கு வெளியே பொருத்தப்பட்டது. அந்தக் கருவியின் செயல்பாடுகள்பற்றி மருத்துவர்களிடம் நான் கேட்டபோது, ''ஆரோக்கியமாக உள்ளவர்களுக்கு நிமிஷத்துக்கு 72 முறை இதயம் துடிக்கும். அந்த அளவு 50க்கு கீழே குறையும்போது இதய அடைப்பு என்று குறிப்பிடப்படும். அந்த இதய அடைப்புக்கும் கொழுப்பு சேருவதால் ஏற்படும் இதய கரோனரி ரத்தக் குழாய் அடைப்புக்கும் தொடர்பு இல்லை. இதயத்தில் நான்கு அறைகள் உள்ளன. இதயத்தில் இரண்டு மேல் அறைகளும், இரண்டு கீழ் அறைகளும் உள்ளன. இதயத்தின் மேல் வலது அறையில் ''எஸ்ஏ நோட்'' எனப்படும் விசேஷ அமைப்பு மின் உற்பத்தி செய்து 72 முறை இதயத்தைத் துடிக்க வைக்கிறது. மேல் அறைக்கும், கீழ் அறைக்கும் நடுவில் ''ஏவி நோட்'' என்ற அமைப்பு உள்ளது. மேல் அறையில் உருவான மின் உற்பத்தி இந்த ஏவி நோட் அமைப்புக்குப் பரவும். பிறகு மின் கற்றைகள் மூலம் இதயத் தசை நாண்களுக்கு மின் ஆற்றல் பரவி இதயம் துடிக்கிறது. இந்த இதயத் துடிப்பின் அளவு குறைந்தவுடன், தற்காலிக பேஸ் மேக்கர் மார்புக்கு வெளியே பொருத்தப்படும். இது பொருத்தப்பட்டவுடன் ஓரிரு நாளில் இதயத்தின் துடிப்பு அதிகரித்து விட்டால், தற்காலிக பேஸ் மேக்கர் கருவி அகற்றப்பட்டு விடும்'' என்றெல்லாம் எனக்கு விளக்கமாக எடுத்துக் கூறினார்கள்.

தம்பி மாறனுக்கும் அந்தக் கருவி பொருத்தப்பட்டதை அடுத்து, உடல் நிலை சீராக உள்ளது என்றும், எனினும் உடல் நிலை நன்கு தேறியவுடன் ஒரு சிறிய அறுவை சிகிச்சை மூலம், கழுத்து எலும்புக்குக் கீழே நிரந்தர பேஸ் மேக்கர் கருவி பொருத்தப்படும் - என்றும் கூறினார்கள்.

மாறனுக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை குறித்து ஆய்வு செய்ய **''லண்டன் ராயல் பிராம்ப்டன்''** மருத்துவமனைத் தலைமை இதய மருத்துவர் **அல்ரிச் சிக்வார்ட்** வரவழைக்கப் பட்டார். அவர் மாறனின் உடல் நிலை மற்றும் ஆஞ்சியோ கிராஃபி பிலிம்களை ஆய்வு செய்தார்.



சென்னையில், திரு.வைகோவின் புதல்வி கண்ணகி - ஜான் புஷ்பராஜ் திருமண விழாவில் கலந்துகொண்டேன்.

மாறனுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை விவரங்களையும் அப்பல்லோ மருத்துவர்கள் அவரிடம் விளக்கினர். அதை யெல்லாம் கேட்டுவிட்டு, அவர், "அப்பல்லோ மருத்துவர்கள் சிறந்த முறையில் சிகிச்சை அளித்துள்ளனர். உடனடி பலனை எதிர்பார்க்காமல் காத்திருப்பது அவசியம். சிகிச்சை பலன் அளிப்பது உறுதியான பிறகே செயற்கை சுவாசக் கருவியை அகற்ற முடியும்" என்றார்.

ஜெர்மனியிலிருந்து இதய மருத்துவ நிபுணர் **ஹோஸ்ட் குன்** அவர்களும் சென்னை வந்து மாறனின் உடல் நிலையைப் பரிசோதித்தார்.

இதற்கிடையில் நவம்பர் 10ஆம் தேதியன்று இரவு மாறன் கண் விழித்துப் பார்த்தார். மாறன் அப்பல்லோ மருத்துவ மனையிலே அனுமதிக்கப்பட்டிருந்தாலும், **ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியின்** முதல்வராக இருந்த டாக்டர் **எஸ்.தணிகாசலம்** காலையிலும் மாலையிலும் அப்பல்லோ மருத்துவமனைக்கு வந்து மாறனைப் பரிசோதனை செய்து வந்தார்.

13-10-2000 அன்று டாக்டர் தணிகாசலம் செய்தியாளர் களிடம் கூறும்போது, "கடந்த பதினாறு நாட்களுக்கு முன்பு மத்திய அமைச்சர் முரசொலி மாறன் மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டார். முதலில், இதயத் துடிப்புக்குத் தேவையான மின் உற்பத்தியில் கோளாறு ஏற்பட்டது. இதையடுத்து வலது

மார்பகத்துக்குள் அவருக்கு பேஸ் மேக்கர் கருவி பொருத்தப் பட்டது. ஒரு வாரம் முன்பு அவருக்குத் திடீரென மூச்சுத் திணறல் ஏற்பட்டது. உடனடியாக ஆஞ்சியோகிராம் செய்ததில், இதயத் தசை தடிமனாகியிருப்பதும், தொடர் விளைவாக உடல் உறுப்புகளுக்கு ரத்தம் செல்லும் இடது வென்ட்ரிக்கிள் அமைப்பு குறுகலாகி இருப்பதும் தெரிய வந்தது. இதனால் நுரையீரலில் நீர் தேங்கும் பிரச்சினையும் ஏற்பட்டது. அதனைச் சரி செய்ய நவீன சிகிச்சையான சிறப்பு ஊசி சிகிச்சை (Alcohol Ablation) அளிக்கப்பட்டது. லண்டனிலிருந்து வந்த டாக்டர் **அல்ரிச் சிக்வார்ட்** இந்தச் சிகிச்சையை அங்கீகரித் தார். இந்தச் சிகிச்சையில் நிபுணரான ஜெர்மனியிலிருந்து வந்த டாக்டர் **ஹோஸ்ட் குன்னும்** இந்தச் சிகிச்சை முறை மிகுந்த பலனை அளிக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார். அவர் முன்னிலையில் மாறனுக்கு சிறப்பு ஊசி சிகிச்சை அளிக்கப் பட்டது. அதற்குப் பிறகு மாறனின் உடல் நிலை முன்னேறத் தொடங்கியது. மாறனின் இதயத் துடிப்பு தற்போது பேஸ் மேக்கரின் உதவியின்றி நிமிஷத்துக்கு 75 என்ற அளவில் உள்ளது. ரத்த அழுத்தம், சிறுநீர் வெளியேறும் அளவு ஆகியவற்றிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது'' என்று விளக்கமாகத் தெரிவித்தார்.

தம்பி மாறன் அப்பல்லோ மருத்துவ மனையில் 32 நாள் சிகிச்சைக்குப் பிறகு, நவம்பர் 30ஆம் தேதியன்று இல்லம் திரும்பினார். நாங்கள் எல்லாம் அவர் பூரண உடல் நலத்தோடு திரும்பிவிட்டார் என்ற மகிழ்ச்சியோடுதான் அப்போதிருந் தோம். ஆனால் அது தற்காலிகமானது என்பது பின்னர்தான் புரிந்தது!

வீடு திரும்புவதற்கு முன்பு, ஒரு நாள் காலையில் நானும், ஆற்காடு வீராசாமியும் அப்பல்லோ மருத்துவமனைக்கு தம்பி மாறனைப் பார்ப்பதற்காகச் சென்றிருந்தோம். நான் தூக்கி வளர்த்து ஆளாக்கிய பிள்ளை அல்லவா தம்பி மாறன்! பால பாடம் கற்றுத் தந்த ஆசிரியன் நான் என்றாலும், மாறன், குருவையும் மிஞ்சிடும் சிஷ்யனாக அரசியல் கலையைக் கற்றறிந்து, அறிஞர் அண்ணாவின் செல்லப்



முரசொலி மாறன்

பிள்ளையாக - அவரது அடியொற்றிய அரசியல் வித்தகனாக - வளர்ந்தவன் அல்லவா?

நாங்கள் அவரைச் சந்திக்கச் சென்ற போது, மேற்கு வங்க முதலமைச் சராக பல ஆண்டுக் காலம் இருந்த தோழர் ஜோதிபாசு பதவி விலகியதைப் பற்றி எங்களிடம் விரிவாகவும், உருக்கமாகவும் பேசத் தொடங்கினார். உடல் நலம் தேறி வருகின்ற நிலையில், அதிகம் பேச வேண்டாமென்று நான் தடுத்தும் கேளாமல், ஜோதிபாசுமீது அவர் கொண்டிருந்த அன்பையும், வைத்திருக்கும் மதிப்பையும் மரியாதையையும் அள்ளிக் கொட்டி மகிழ்ந்தார்.

கம்யூனிஸ்ட் கட்சியின் பெரும் தூண்களில் ஒருவரான தோழர் ஜோதிபாசு அவர்களை **1969** முதல் நான் நன்கறிவேன். குடியரசுத் தலைவர் தேர்தலில் திரு. **வி.வி.கிரியை** ஆதரிப்பது என்ற முடிவு டெல்லி தமிழ்நாடு மாளிகையில் எடுக்கப்பட்ட போது, அந்தக் கலந்துரையாடல் கூட்டத்தில் மேற்கு வங்க முதல்வராக இருந்த திரு. **அஜாய் முகர்ஜி** அவர்களும், அப்போது மேற்குவங்கத் துணை முதல்வராக இருந்த ஜோதி பாசு அவர்களும் பங்கேற்ற நிகழ்ச்சி, இன்னமும் என் நெஞ்சை விட்டகலவில்லை.

★★★

தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டம் (National Develpment Council) டெல்லியில் நடைபெற்றது. அப்போதுதான், அண்ணா அவர் களின் மறைவுக்குப் பின், முதலமைச்சர் பொறுப்பை யேற்றிருந்த நான், அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகச் சென்றிருந்தேன்.

அப்போது எனக்கு வயது 46தான். என்னுடன் அன்றைய நிதியமைச்சர் நண்பர் **மதியழகன்** அவர்களும் வந்திருந்தார். அந்தக் கூட்டத்தில் மேற்கு வங்க முதல்வர் அஜாய் முகர்ஜி அவர்களும், துணை முதல்வர் ஜோதிபாசு அவர்களும் கலந்து கொண்டார்கள்.

அந்தக் கூட்டத்தில்தான் வங்கிகளைத் தேசிய மயமாக்கிட வேண்டுமென்ற கருத்தை நான் முதன் முதலாக வலியுறுத்திப் பேசினேன். அப்போது அன்னை இந்திரா காந்தி அவர்கள்தான் பிரதமர். மொரார்ஜி தேசாய் துணைப் பிரதமர். நான் பேசிய ''வங்கிகளைத் தேசிய மயமாக்க வேண்டு'' மென்ற கருத்தை மொரார்ஜி ஆதரிக்கவில்லை. மறுப்புக் கருத்து வெளியிட்டார்.

அப்போது இந்தச் செய்தி, மறுநாள் டெல்லி ஏடுகளிலே பெரிதாக வெளி வந்தது. நான் பேசிய கருத்தைப் பற்றி பல மாநில முதல் அமைச்சர்கள் தங்கள் கருத்தைத் தெரிவிக்கா விட்டாலும், மேற்கு வங்க துணை முதல் அமைச்சர் ஜோதிபாசு அவர்கள்தான், நான் வெளியிட்ட வங்கிகள் தேசிய மயம் என்ற கருத்துக்கு ஆணித்தரமான ஆதரவாளராக அந்தக் கூட்டத்தில் உரையாற்றினார். என்னால் மறக்க முடியாத நிகழ்ச்சிகளில் இதுவும் ஒன்றாகும்.

★★★

அனைத்திந்தியத் தலைவர்களை யெல்லாம் அழைத்து கொல்கத்தாவில், ஜோதிபாசு முன்னின்று நடத்திய **''மாநில சுயாட்சி''** மாநாட்டுக்கு நானும், தம்பி முரசொலி மாறனும், ஆற்காடு வீராசாமியும் சென்றிருந்தோம். மாநாடு முடிந்ததும், ஒரு பெரிய மாடித்தளத்தில் தலைவர்கள் எல்லாம் ''குரூப் போட்டோ'' எடுக்க ஏற்பாடாகி யிருந்தது. போட்டோவுக்கு எல்லோரும் தயாராக இருந்த நேரத்தில், ஆந்திர முதல்வராக இருந்த நண்பர் **என்.டி. ராமராவ்** அவர்கள் வருவதற்கு சற்றுத் தாமதமாயிற்று. அப்போது ஜோதிபாசு அவர்கள், ''நடிகர் அல்லவா? மேக் அப் போட்டுக் கொண்டு வர நேரமாகத்தான் செய்யும்'' என்று கிண்டல் அடித்ததும் என் நினைவிலே உள்ளது.



டாக்டர் தணிகாசலம்

தி.மு.கழக ஆட்சியை 356வது பிரிவைப் பயன்படுத்தி மத்திய அரசு இரண்டு முறை கலைத்த போதும், உடனடியாகக் கண்டன அறிக்கை வெளியிட்ட முதல் அமைச்சர் தோழர் ஜோதிபாசு அவர்கள்.

அப்படிப்பட்ட ஜோதிபாசு அவர்கள் 23 ஆண்டுக் காலம் முதலமைச்சர் பதவியிலே இருந்துப் பணியாற்றி விட்டு - அந்தப் பதவியிலிருந்து 2000வது ஆண்டில் ஓய்வு பெறுவதாக அறிவித்தபோது - அரசியல் நாகரி கத்தின் அடிப்படையில், அவரது கட்டுப்பாடுமிக்க பொது வாழ்க்கையையும், கண்ணியம் மிக்க அரசியல் நடவடிக்கை களையும், பண்பார்ந்த நட்புறவின் நிலைத்த தன்மையையும் நினைத்து அவரைப் பாராட்டி வாழ்த்தினேன்.

கட்சிகள், கொள்கைகள், திட்டங்கள், கருத்து வேறுபாடுகள் இவைகள் ஒரு புறம் இருப்பினும் - அந்த இயக்கங்களில் முன்னணித் தலைவர்களாக இருந்தோர் - இருப்போர் - தலைமையேற்று வழி நடத்துவோர் - ஆகியோரின் அருமை பெருமைகளை நினைவு கூர்வது என்பது அரசியல் பண்பாடு மட்டுமல்ல; அரசியலுக்கு வரும் இளைஞர்களுக்கு தோன்றாத் துணையெனும் பாடமும் ஆகும். ஜோதிபாசு அவர்களைப் பற்றி அப்போது 4-11-2000 தேதிய **"பிசினஸ் லைன்"** ஆங்கில ஏடு குறிப்பிடும்போது,

"Mr. Basu Can take legitimate pride in the fact that he provided a clean Government and became a role - model at a time when the whole country was stinking with corruption all over" என்று எழுதியிருந்தது.

அதாவது "நாடு முழுவதும் ஊழல் சகதியிலே மூழ்கி நாற்றமெடுத்துக் கொண்டிருக்கின்ற நேரத்தில், நேர்மையான

ஓர் அரசை நடத்தியதற்காக ஜோதிபாசு அவர்கள் பெருமை அடையலாம்'' என்று பாராட்டியிருந்தது.

ஜோதிபாசு அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாடு மிக்க தொண்டராக - சட்டப் பேரவை உறுப்பினராக - நிதி அமைச்சராக - உள் துறை அமைச்சராக - துணை முதல் அமைச்சராக - முதல் அமைச்சராக - ஐம்பதாண்டு காலத்திற்கு மேல் பொதுத் தொண்டாற்றி நிர்வாகப் பொறுப்பிலிருந்து ஓய்வு பெற்றபோதிலும், ''பொது வாழ்விலும், கட்சிப் பணியிலும் தொடர்ந்து பணியாற்றுவேன்'' என்று அப்போது தெரிவித்திருந்தார். அரசியல் ரீதியாகவும், கருத்துப் பரிமாற்ற ரீதியாகவும், நட்பு ரீதியாகவும் நான் பழகிய அந்தப் பண்பாளர் ஜோதிபாசு அவர்கள் பதவியில் இல்லாவிட்டாலும், அவரது மக்கள் பணி தொடர வேண்டுமென்றும், அவர் பல்லாண்டுக் காலம் மேலும் வாழ்ந்து புகழொளி பரப்ப வேண்டுமென்றும் வாழ்த்தி, பாராட்டி, நான் அப்போதே 'முரசொலி'யில் விரிவாக எழுதினேன்.

'முரசொலி'யில் நான் கடிதம் எழுதிய இரண்டொரு நாட்களில் - அதாவது 9-11-2000 தேதிய அவருடைய கடிதத்தில், ''தாங்கள் என்னைப்பற்றி முரசொலியில் எழுதி யுள்ள கட்டுரையை மிகுந்த ஆர்வத்துடன் படித்தேன். அக்கட்டுரையில் என்னைப் பற்றித் தாங்கள் வெளிப்படுத்தி யுள்ள உணர்வுகளைப் பெரிதும் மதித்துப் போற்றுகிறேன். தங்கள் மருமகன் முரசொலி மாறன் அவர்களை நான் நீண்ட காலமாகவே அறிவேன். அவர் அண்மையில் நோய்வாய்ப் பட்டிருப்பது அறிந்து வருந்துகிறேன். அவர் விரைவில் நலம் பெற வாழ்த்துகிறேன்'' என்று எழுதியிருந்தார்.

★★★

15-11-2000 அன்று காலையில் சென்னை வடபழனியில் உள்ள **விஜய சேஷ** மகாலில், ம.தி.மு.க.வின் பொதுச் செயலாளர் **வைகோ** எம்.பி.யின் அன்பு மகள் செல்வி **கண்ணகி**க்கும், கோவை பேராசிரியர் **பெருமாள்சாமி** அவர்களின் மகன் செல்வன் **ஜான் புஷ்பராஜ்**க்கும் நடை

பெற்ற மணவிழாவினை நான் நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினேன்.

வைகோ தனது வரவேற்புரையில், தம்பி மாறன் மருத்துவ மனையில் இருப்பதைச் சுட்டிக்காட்டி, அந்த நிலையிலும் மண விழாவில் கலந்து கொள்ள நான் வந்திருக் கிறேன் - என்று குறிப்பிட்டார்.

அதைப்பற்றி நான் பேசும்போது, "அதுவும் என் குடும்பம் தான் - இதுவும் என் குடும்பம் தான். அந்த நிகழ்ச்சி அங்கே - இந்த நிகழ்ச்சி இங்கே. இந்த இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் நான் பொதுவானவன் - இந்த இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் நான் சொந்தக்காரன் என்ற முறையில் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறேன். வைகோ இல்லத்தில் நடைபெற்ற இரண்டு மூன்று திருமணங்களுக்கு நான் வர இயலவில்லை என்றார்.


"வர எனக்கும் இயலவில்லை - அழைக்க அவருக்கும் இயலவில்லை என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். அரசியல் மாறுபாடுகள் காரணமாக ஐந்தாறு ஆண்டுகள் நாங்கள் பிரிந்திருந்தாலும், அண்ணன் - தம்பி என்கின்ற பாச உணர்வின் காரணமாக இன்றைக்கு ஒன்று சேர்ந்திருக் கிறோம்" என்று குறிப்பிட்டேன்.

ஆனால், அதன் பிறகு அண்ணன், தம்பி என்ற பாச உணர்வு மறைந்து, அரசியல் மாறுபாடுகள்தான் முன்னிலை பெற்றன என்பதைத் தமிழ்நாடு அறியும்.


11. நான் ஆற்றிய பணிகள் - அன்றைய "தினமணி"யில்!

அமெரிக்க அதிபராக இருந்த **பில் கிளிண்டன்** அவர்களின் பதவிக் காலம் 2001ஆம் ஆண்டு ஜனவரியோடு முடிவடைவ தாக இருந்ததையொட்டி, புதிய அதிபரைத் தேர்ந்தெடுப் பதற்கான பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்றன. அமெரிக்காவின் புதிய அதிபராக வரப் போகிறவர் யார் என்று உலகமே எதிர் நோக்கி இருந்தது.

அமெரிக்கத் தேர்தல் முறை 1787ஆம் ஆண்டு உருவாக்கப் பட்ட அரசியல் சட்டத்திலே வகுக்கப்பட்ட ஒன்றாகும். 1787ஆம் ஆண்டு, அந்த நாட்டிற்கான அரசியல் சட்டத்தை உருவாக்கியபோது, அந்தச் சட்டத்தை உருவாக்கக் காரணமாக இருந்தவர்கள், புதிதாக தேசிய அரசியல் கட்சிகள் எதிர்காலத்தில் எப்படியெல்லாம் உருவாகும் என்பதை எதிர்பார்க்கவில்லை. அதனால், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தேர்தலில் பல கட்சிகள் சார்பில் பல வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். ஆனாலும், பெரிய கட்சிகளான ஜனநாயகக் கட்சிக்கும், குடியரசுக் கட்சிக்கும் இடையேதான் உண்மையான போட்டி இருக்கும்.



அந்தத் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக **அல்கோர்** போட்டியிட்டார். அவர் அமெரிக் காவின் துணை அதிபராக இருந்தார். அவருக்கு ஆதரவு தெரிவித்து அதிப



பில் கிளிண்டன்


ராக இருந்த பில் கிளிண்டன் அவர்களே தீவிரமாகத் தேர்தல் பிரச்சாரம் செய்தார்.

அல்கோர் அவர்களை எதிர்த்து, குடியரசுக் கட்சியின் சார்பில், **ஜார்ஜ் டபிள்யூ புஷ்** போட்டியிட்டார். இவர் 1989ஆம் ஆண்டு முதல் 1993ஆம் ஆண்டு வரை அமெரிக்காவின் குடியரசுத் தலைவராக இருந்த ஜார்ஜ் ஹெர்பர்ட் புஷ்ஷின் மகன். இரண்டு வேட்பாளர்களும் தீவிர மான பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். இவர்கள் தவிர, பசுமைக் கட்சி சார்பில் **ராடர்** போட்டியிட்டார் எனினும், அல்கோர் - ஜார்ஜ் புஷ் ஆகியோரிடையேதான் கடும் போட்டி நிலவியது.

அமெரிக்காவில் உள்ள முறைப்படி நியூஹாம் ஷயர் மாநிலத்தில், 7-11-2000 அன்று நள்ளிரவு 12.01 மணிக்கு வாக்குப் பதிவு தொடங்கியது. மற்ற இடங்களில் வாக்குப் பதிவு மறுநாள் காலையில் தொடங்கியது.

அமெரிக்காவில் வாக்கு எண்ணப்படும் முறை சற்று வித்தியாசமானது. அங்கே மொத்தம் 51 மாநிலங்கள் உள்ளன. மக்கள் தொகை அடிப்படையில் மாநிலங்களுக்கு எலெக்ட் ரோல் வாக்குகள் நிர்ணயிக்கப்படுகின்றன. எந்த மாநிலத்தில் யாருக்கு அதிக வாக்குகள் இருக்கிறதோ, அந்த மாநிலத்திற் குரிய எலெக்ட்ரோல் வாக்குகள் அந்த வேட்பாளரின் கணக்கிலே சேரும்.

உதாரணமாக, புளோரிடா மாநிலத்திற்கு 25 எலெக்ட்ரோல் வாக்குகள் உண்டு. அங்கு அதிக வாக்குகள் பெறும் வேட்பாளருக்கு அந்த 25 வாக்குகள் சேரும். 51 மாநிலங்களில் உள்ள மொத்த எலெக்ட்ரோல் வாக்குகள் 538 ஆகும். அதில் 270 எலெக்ட்ரோல் வாக்குகள் யாருக்குக் கிடைக்கிறதோ அவர் வெற்றி பெற்றவர் ஆவார்.



ஜார்ஜ் டபிள்யு புஷ்

அந்தத் தேர்தலில் இரண்டு வேட்பாளர்களும் சேர்ந்து தேர்தல் பிரச்சாரத்திற்காகச் செய்த செலவு மட்டும் சுமார் 14 ஆயிரம் கோடி ரூபாய் என்று சொல்லப்பட்டது. 8-11-2000 அன்று பகல் 12 மணியளவில் கிடைத்த தகவலின் படி, புஷ்ஷுக்கு 246 எலெக்ட்ரோல் வாக்குகளும், அல்கோருக்கு 242 வாக்குகளும் கிடைத்திருந்தன. பிற்பகலில் அல்கோர் சற்று முன்னேறி, 249இல் இருந்தார். இறுதியாக புளோரிடா மாநில வாக்குகள் எண்ணப்பட்டதில், புஷ் மிகச் சிறிய வித்தியாசத்தில் அல்கோரைவிட அதிக வாக்குகள் பெற்றார். இதன் மூலம் 25 எலெக்ட்ரோல் வாக்குகள் கொண்ட புளோரிடா மாநிலத்தில் புஷ் வெற்றி பெற்றார். ஏற்கனவே 246 எலெக்ட்ரோல் வாக்குகள் பெற்றிருந்த புஷ், இந்த 25 எலெக்ட்ரோல் வாக்குகள் மூலம் 271 எலெக்ட்ரோல் வாக்குகளைப் பெற்றார். எனவே 270 எலெக்ட்ரோல் வாக்குகளை விட அவர் ஒரு வாக்குகள் கூடுதலாகப் பெற்றதால் அதிபர் தேர்தலில் புஷ் வென்றார்.


பொது மக்களின் வாக்குகள் அடிப்படையில் பார்த்தால், புஷ் 4 கோடியே 90 லட்சத்து 36 ஆயிரத்து 353 வாக்குகளையும், அல்கோர் 4 கோடியே 92 லட்சத்து 52 ஆயிரத்து 780 வாக்குகளையும் பெற்றனர். பொது மக்களின் 2 லட்சத்து 16 ஆயிரத்து 427 வாக்குகள் குறைந்த நிலையிலும், புஷ் குடியரசுத் தலைவராக வரக் கூடிய வாய்ப்பு அரும்பியது.

குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் முடிவு வெளியானதால், இந்த வெற்றியை அறிவிப்பதில் பெரிய தடங்கல் ஏற்பட்டு, நீதிமன்றத்தின் துணையை நாட வேண்டிய அளவிற்கு நிலைமை முற்றியது. இருந்தாலும், 13-12-2000 அன்று அமெரிக்க உச்சநீதி மன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையில், ஜார்ஜ் புஷ் அமெரிக்காவின் அதிபரானார்.

செனட் உறுப்பினர் பதவிக்கு அதிபர் கிளிண்டனின் மனைவியான **ஹிலாரி** நியூயார்க்கில் போட்டியிட்டார். ஜனநாயகக் கட்சியின் சார்பில் அவர் அங்கு வேட்பாளராக நின்றார். ஹிலாரியை எதிர்த்துக் குடியரசுக் கட்சி சார்பில் **ரிக் வாசியோ** என்பவர் போட்டியிட்டார்.

இருவருக்கும் இடையே கடும் போட்டி நிலவியது. ஹிலாரிக்கு ஆதரவாக அதிபர் கிளிண்டன், அவரது மகள் **செல்சியா** ஆகியோர் தீவிர பிரச்சாரம் செய்தனர். வாக்குப் பதிவு முடிந்து, தேர்தல் முடிவு வெளியானபோது, ஹிலாரி கூடுதல் வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். தனது மனைவி ஹிலாரி வெற்றி பெற்றதை அறிந்த கிளிண்டன் மகிழ்ச்சி அடைந்து, எல்லோருக்கும் இனிப்பு வழங்கினார். வாக்காளர் களுக்கு நன்றி கூறிய ஹிலாரி, ''தேர்தலில்தான் குடியரசுக் கட்சிக்கும் ஜனநாயகக் கட்சிக்கும் இடையே போட்டி நடந்தது. இனிமேல் நாம் அனைவரும் சேர்ந்து நியூயார்க் மக்களின் நலனுக்காகப் பாடுபடுவோம்'' என்று கூறினார். அந்தத் தேர்தலில் தோல்வியடைந்த ரிக் வாசியோ, தொலை பேசியில் ஹிலாரியைத் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்தார்.

அதிபர் தேர்தலுடன் 435 உறுப்பினர்களைக் கொண்ட பிரதிநிதிகள் சபைக்கும், 100 உறுப்பினர்களைக் கொண்ட செனட் சபைக்கு 34 உறுப்பினர் களையும் தேர்ந்தெடுப்பதற் கான வாக்குப் பதிவு நடை பெற்றது. இந்த இரண்டு சபை களிலும் அப்போது குடியரசுக் கட்சிதான் மெஜாரிட்டியுடன் இருந்து வந்தது. நடைபெற்ற அந்தத் தேர்தலிலும் குடியரசுக் கட்சி கணிசமான இடங்களில் வெற்றிபெற்று தனது பெரும் பான்மையைத் தக்க வைத்துக் கொண்டது.



ஹிலாரி கிளிண்டன்

இதற்கிடையே, சென்னை அரசு பொது மருத்துவமனை நரம்பியல் துறையின் பொன் விழா ஆண்டு நிறைவு விழாவில், 31-10-2000 அன்று கலந்துகொண்டு, கல்வெட்டினைத் திறந்து வைத்தேன்.அந்த விழாவில் அமைச்சர் **ஆற்காடு வீராசாமி,** நரம்பியல் துறை நிறுவனர் டாக்டர் **பி. ராமமூர்த்தி,** டாக்டர் **எம்.ஜி.ஆர்.** பல்கலைக் கழகத் துணை வேந்தராக இருந்த டாக்டர் **ஆனந்தக் கண்ணன்,** சட்டமன்ற உறுப்பினராக இருந்த **டி.ராஜேந்தர்** ஆகியோர் கலந்து கொண்டனர்.


அதற்கடுத்த நாள், சென்னை சமூகக் கலாச்சாரக் கழகத்தின் சார்பில் உலகக் கவிஞர் பேரவைத் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்ட நீதியரசர் திரு. **எஸ்.மோகன்** அவர்களுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் கலந்துகொண்டு அவரைப் பாராட்டினேன்.

அடுத்த நாள், மற்றொரு வித்தியாசமான நிகழ்ச்சி! **"தினமலர்"** என்றாலே தி.மு.க.விற்கு எதிரானப் பத்திரிகை என்று சொல்லக்கூடிய அளவிற்குச் செய்திகளை வெளியிடக் கூடிய பத்திரிகை.

அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் திரு. **இரா. கிருஷ்ணமூர்த்தி** ஒரு நாள் என்னைச் சந்தித்து, நாணயங்களைப்பற்றி தான் ஓர் ஆங்கில நூல் "On Roman Ancient Foreign Coins From Karur in India" ***("இந்தியா விலுள்ள கரூரில் ரோமானிய நாணயங்கள் அல்லாத பிற அயல்நாட்டுப் பழைய நாணயங்கள்")*** என்ற தலைப்பில் எழுதியிருப்பதாகவும், அதை நான் வெளியிட வேண்டு மென்றும் கேட்டுக் கொண்டார்.

2-11-2000 அன்று அந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு புத்தகத்தை வெளியிட்டேன். நூலின் முதல் பிரதியை பொள்ளாச்சி திரு.**மகாலிங்கம்** பெற்றுக்கொண்டார். நீதியரசர் **மோகன், டாக்டர் சுப. அறவாணன், டாக்டர் சிலம் பொலி செல்லப்பன்** ஆகியோர் விழாவில் கலந்து கொண்டனர்.

அந்த விழாவில் நான் பேசும் போது, "தினமலர் ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி அவர்களைப் பொறுத்தவரையில், தமிழனு



செல்சியா

டைய வரலாறு, தமிழின் வளர்ச்சி ஆகியவற்றில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். தமிழ் வளர்ச்சியிலே ஈடுபாடு கொண்ட எங்களைப் பற்றி அவருக்கு என்ன நினைப்போ எனக்குத் தெரியாது. ஆனால், எனக்கு அவரிடத்திலே அது குறித்த பெருமதிப்பும், நல்லெண்ணமும் அன்பும் பாசமும் உண்டு. அதனால்தான் அவரைப் பாராட்ட - அல்லது அவருடைய நூலை வெளியிட - அவர் அழைக்கிற நேரத்தில் எல்லாம் தவறாமல் வந்து கொண்டிருக் கிறேன்!'' என்று குறிப்பிட்டேன்.

2000ஆம் ஆண்டில் அந்த விழாவில், நான் இதைக் குறிப்பிட்டது மாத்திரமல்ல; 2010ஆம் ஆண்டில் - கழக ஆட்சியில் - தமிழ்ச் செம்மொழி மாநாட்டினை கோவை யிலே கொண்டாடியபோது, அந்த விழாவில், தினமலர் கிருஷ்ண மூர்த்தி அவர்களும் கலந்து கொள்ள வேண்டுமென்று நானே நினைவுபடுத்தி, அந்த நிகழ்ச்சியிலே அவரும் கலந்து கொண்டார் என்பதும் உண்மையாகும்.

அந்த விழா நடைபெறுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் இரண்டு பேர் கோவையில் அடித்துக் கொண்டதை ''தினமலர்'' நாளிதழில் ''பேனர்'' செய்தியாக வெளியிட்டிருந்தார்கள். அதைச் சுட்டிக் காட்டி, ''அந்த விழாவிலே கலந்து கொள்ள வேண்டுமா?'' என்று என்னிடம் சிலர் கேட்டபோது, அந்த விழாவில்தான் கலந்து கொள்ள வேண்டுமென்று கூறி, அவ்வாறே கலந்து கொண்டேன்.

★★★

அதற்கடுத்த நாளான 3-11-2000 அன்று சென்னைக்கு வந்த ஜப்பான் நாட்டு வர்த்தகக் குழுவினருடன் சந்திப்பு ஏற்பாடு

செய்யப்பட்டிருந்தது. அதிலே கலந்துகொண்டு தமிழகமும், ஜப்பானும் பயன்பெறும் வகையில் **"கூட்டுப் பணி முனைப்புக் குழு"** ஒன்று அமைக்கவேண்டும் என்று கூறினேன்.

அதே திங்கள், 18-11-2000 அன்று நாரத கான சபாவில் இசை மேதை **செம்மங்குடி சீனிவாசய்யர்** தலைமையில் நடைபெற்ற முத்தமிழ்ப் பேரவையின் வெள்ளி விழாவில் கலந்து கொண்டு, திரு. **ஏ.கே.சி. நடராஜன்,** முனைவர் **அ.ச. ஞானசம்பந்தன்,** திருமதி. **சுதா ரகுநாதன்,** திருமதி **வைஜயந்திமாலா பாலி,** திரு. **சிவபுரி பத்மநாபன்,** திருநாகேஸ்வரம் திரு.**டி.ஆர்.சுப்பிர மணியம்,** தஞ்சை திரு. **நடராஜன்,** மாயவரம் திரு. சோமு ஆகியோருக்கு விருதுகளை வழங்கி வாழ்த்தினேன்.

★★★

21-11-2000 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்று, கழக அரசின் சீர்மிகு திட்டங்களான நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம், உழவர் சந்தைகள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், பொது விநியோகத் திட்டம், மகளிர் சிறு வணிகக் கடன் திட்டம், மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைப்பு, கால்நடை பாதுகாப்புத் திட்டம், வருமுன் காப்போம் திட்டம், பட்டா வழங்குவதற்கான சிறப்புத் திட்டம், மினி பஸ் திட்டம், பூமாலைத் திட்டம், கணினி மயமாக்கும் திட்டம், ஊராட்சி மற்றும் நகராட்சிகளில் குடிநீர் வழங்கல் திட்டம், கிராமப்புற இளைஞர்கள் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மேம்பாட்டுத் திட்டம் - போன்றவைகள் சிறப்பாக நடைபெற விவாதிக்கப் பட்டு முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

★★★

24-11-2000 அன்று சென்னையை அடுத்த சிறுசேரியில், உயிரியல் தொழில் நுட்பப் பூங்காவினைத் திறந்து வைக்கும் நிகழ்ச்சியிலே கலந்து கொண்டேன். அதற்கடுத்த நாளான 25-11-2000 அன்று, சென்னை கலைவாணர் அரங்கில், தமிழக



31.10.2000 அன்று, சென்னை - அரசு பொது மருத்துவமனையில், நரம்பியல் துறை பொன்விழாவில் கலந்து கொண்டேன்.

ஆளுநராக அப்போதிருந்த நீதிபதி செல்வி **எம். பாத்திமா பீவீ** அவர்கள் தலைமையில், கலைமாமணி விருது வழங்கும் விழாவிலே கலந்து கொண்டு உரையாற்றினேன்.

★★★

2000ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் இறுதியிலே, ஒவ்வொரு நாளும் 1996ஆம் ஆண்டு முதல் தி.மு.கழக அரசு ஒவ்வொரு துறை வாயிலாக என்னென்ன சாதனைகளைச் செய்தது என்ற விவரங்களை அன்றாடம் தொகுத்து, 'முரசொலி'யிலே கட்டுரையாக எழுதினேன். பின்னர் அந்தத் தொகுப்பு நூல் **"சாதனைச் சரித்திரம்"** என்ற பெயரிலே வெளிவந்தது.

★★★

நாட்டின் பசுமைப் புரட்சிக்கு வித்திட்டவரும், முதுபெரும் அரசியல் தலைவரும், "பாரத ரத்னா" விருது பெற்றவரும், **"சி.எஸ்."** என்று இந்தியா முழுவதும் அழைக்கப்பட்டவருமான **சி. சுப்பிரமணியம்** அவர்கள், 7-11-2000 அன்று பகல் 1 மணி அளவில், தனது 90வது வயதில், மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியிலே காலமானார். அவர் என்னிடம் பல்வேறு அரசியல் சூழ்நிலைகளுக்கு அப்பாற்பட்டு, எத்தகைய அன்பு கொண்டிருந்தார் என்பதற்கு இந்த ஆறாம் பாகத்தின் முதல் அத்தியாயத்திலேயே அவர் என்னுடைய பவள


விழாவிற்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியிலிருந்தே புரிந்து கொள்ளமுடியும். அவரது வாழ்க்கைச் சரித்திரத்தை எடுத்துப் பார்த்தால், அரசியல் நிர்ணய சபை உறுப்பினராக இருந்தார். 1952 முதல் பத்தாண்டுகள் தமிழகத்திலும், 1962 முதல் 1980 வரை 18 ஆண்டுகள் மத்திய அரசிலும், முக்கிய துறைகளின் அமைச்சராகப் பணியாற்றினார். மத்திய அமைச்சரவையில் நீண்ட காலம் இடம் பெற்றிருந்த தமிழர் என்ற சிறப்பு இவருக்கு உண்டு. 1990 முதல் மூன்றாண்டுகள் மகாராஷ்டிர மாநில ஆளுநராகவும் சி.எஸ். பணியாற்றியிருக்கிறார். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராகவும், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராகவும் பதவி வகித்தவர்.

அப்போது நான் விடுத்த இரங்கல் செய்தியில், "தொடக்க காலத்தில் இருந்தே, தனிப்பட்ட முறையில் அவர்மீது நான் கொண்டிருந்த மரியாதையும், பாசமும், அவர் என்மீது கொண்டிருந்த அன்பும், அக்கறையும் என்றைக்கும் குறைந்தது கிடையாது. அந்த வயதிலும் பல முறை என்னைச் சந்தித்து, தமிழகத்தின் முன்னேற்றத்திற்கான பல யோசனைகளை அவர் சொல்லத் தவறியதில்லை. தமிழை ஆட்சி மொழியாக்குவது குறித்து அவர் காட்டிய அக்கறையும், "தமிழால் முடியும்" என்ற ஒரு நூலை அவர் எழுதி வெளியிட்டதும், நினைத்து நினைத்துப் போற்றத் தக்கவையாகும்" என்று குறிப் பிட்டிருந்தேன்.

மேலும் 8-11-2000 அன்று சட்டப் பேரவையில் கொண்டு வரப்பட்ட இரங்கல் தீர்மானத்தின் போதும், சி.எஸ். அவர்களின் புகழ் என்றைக்கும் நிலைத்திருக்கும் என்றும், அவருடைய தியாகம் இளைஞர்களுக்கு வழிகாட்டியாக அமையும் என்றும் பேசினேன். அரசு மரியாதையுடன் சி.எஸ். அவர்களின் உடல் அடக்கம் நடைபெற்றது.

★★★

30-11-2000 அன்று நடிகர் **ஜெமினி கணேசன்** அவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழா, அவர்களுடைய குடும்பத்தினரால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அந்த நிகழ்ச்சிக்கு நான் அவசியம் என் குடும்பத்தினரோடு வர வேண்டுமென்று அவருடைய மகள்கள் வலியுறுத்தி அழைத்



டாக்டர் பி.இராமமூர்த்தி

திருந்தனர். அது மாத்திரமல்ல - கழகம் ஆளுங் கட்சியாக இருந்தாலும், எதிர்க் கட்சியாக இருந்தாலும், அதை யெல்லாம் பார்க்காமல், ஒவ்வொரு ஆண்டும், என்னுடைய பிறந்த நாள் விழாவின்போது, கூட்டம் எவ்வளவு இருந்த போதிலும், அதையெல்லாம் பார்க்காமல், நேரில் என்னைக் கண்டு ஜெமினி கணேசன் வாழ்த்தாமல் இருந்ததே கிடையாது. அந்த அளவிற்கு என்னிடம் நெருங்கிய பாசம் அவருக்கு உண்டு. எனவே அவருடைய எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவிற்கு நான் குடும்பத்தோடு சென்றிருந்தேன். திரை உலகைச் சேர்ந்த பெரும்பாலோர் அந்த நிகழ்ச்சிக்கு வந்து ஜெமினி கணேசன் அவர்களை வாழ்த்தினார்கள்.

★★★

1999ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வாஜ்பய் தலைமையில் மத்திய அரசு அமைந்தபோது, அந்த அரசில் திராவிட முன்னேற்றக் கழகமும் இடம் பெற்றக் காரணத்தால், அ.தி.மு.க.வினரும், குறிப்பாக அதன் தலைவர் ஜெயலலிதாவும் ''பெரியார் தலைமையில் வந்தவர்கள் பண்டாரங்களின் பின்னால் போகலாமா?'' என்றும், ''சிறுபான்மையினருக்கு விரோதமான கட்சி தி.மு.க.'' என்றும் வேகமாகப் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தார்கள். எனவே, உண்மை நிலையை விளக்கி 9-12-2000 அன்று நான் ஓர் அறிக்கைவிடுத்தேன். அந்த அறிக்கையில் -


❁ ''1992ஆம் ஆண்டு பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது, மத்தியிலே ஆட்சியிலே இருந்தவர்கள் - அயோத்திக்கு அருகிலேயே ராணுவத்தை வைத்துக்கொண்டு, இடிக்கும் வரை வேடிக்கை பார்த்தவர்கள் - அப்படி ஒரு பிரச்சினை நடந்ததாகவே கண்டு கொள்ளாதவர்கள் - தேசிய வளர்ச்சி மன்றக் குழு கூட்டத்திலேயே கர சேவைக்கு ஆதரவாகப்

பேசியவர்கள் - கரசேவைக்கு இங்கிருந்து ஆள் அனுப்பிய வர்கள் சில பேர்; இடிக்கப்பட்ட பாபர் மசூதிக்காக இப்போது நீலிக் கண்ணீர் வடிக்கிறார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது அதனைக் கண்டித்து என்ன உணர்வோடு செயல்பட்டதோ, அதே உணர்வோடுதான் என்றைக்கும் இருக்கும்.

❁ ‘‘தேசிய ஜனநாயகக் கூட்டணி என்பது மதச் சார்பற்றது. இந்தத் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பல்வேறு கருத்துடைய கட்சிகள் இருக்கின்றன. பொதுவான பிரச்சினைகளில் ஒருமித்த கருத்து வரவேண்டுமே தவிர, வேறு ஒரு கருத்து திணிக்கப்படுவதை ஏற்க இயலாது.

❁ ‘‘தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஆட்சிக்கான செயல் திட்டத்தில் இந்திய நாட்டு மக்கள் அனைவரது உணர்வுகளுக்கும் மதிப்பளிக்கப்படும். சிறுபான்மை மக்களுக்கு முழுப் பாதுகாப்பு அளிக்கப்படும் என்று தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளன. அரசியல் சட்டத்தில் சிறுபான்மையினருக்கு உண்டான அனைத்து உரிமை களையும் நாங்கள் பாதுகாப்போம். சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த எங்களது அன்பான சகோதரர் களுக்கும் சகோதரிகளுக்கும் எங்களுடைய நேசக் கரத்தை முழு மனதுடன் நீட்டி நாம் கைகோத்துக் கொண்டு புதிய உத்வேகம் நிறைந்த இந்தியாவை உருவாக்க, இணைந்து பீடுநடை போட்டிடுவோம் என்றுதான் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் செயல் திட்டத்தில் கூறியிருக்கிறோம். எனவே புதிதாக எதையும் இப்போது எழுப்புவது ஏற்கத்தக்கதல்ல. தி.மு.கழகத்தைப் பொறுத்தவரையில் என்றைக்கும்போல் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு அரணாகவும், பாசம் உள்ள தோழனாகவும் இருக்கும் என்பதை மீண்டும் ஒரு முறை உறுதிப்படுத்துகிறேன்’’ என்று தெளிவுபடுத்தினேன்.


★★★



நீதியரசர் எஸ்.மோகன்

அதே டிசம்பர் 14ஆம் தேதியன்று சென்னையில் நடை பெற்ற இந்திய நரம்பியல் சங்கத்தின் 49வது மாநாட்டிலும் - 15ஆம் தேதியன்று சென்னை இம்பீரியல் ஓட்டலில் நடை பெற்ற புனித ரமலான் நோன்பு நிகழ்ச்சியிலும் - 16ஆம் தேதியன்று சீரணி அரங்கத்தில் நடைபெற்ற அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களின் துவக்க விழாவிலும் - 17ஆம் தேதியன்று காலையில், அண்ணா அறிவாலயம், கழக அலுவலகத்தில் நடைபெற்ற தஞ்சை தெற்கு மாவட்டக் கழகக் கூட்டத்திலும் - மாலையில், வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதிய நிதி தொடக்க விழாவிலும் - 19ஆம் தேதியன்று நமது பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களின் 79வது பிறந்த நாள் விழா பொதுக் கூட்டத்திலும் - 20ஆம் தேதியன்று காலையில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் - மாலையில் ஆளுநர் இல்லத்தில் நடைபெற்ற புனித ரமலான் நோன்பு நிகழ்ச்சியிலும் - 30ஆம் தேதியன்று சென்னையில் மெரிடியன் ஓட்டல் திறப்பு விழாவிலும் - 31ஆம் தேதியன்று சென்னையில் இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்களின் பொன் விழாவிலும் கலந்து கொண்டேன். 2000ஆம் ஆண்டு துவக்கத்தைக் குமரியில் அய்யன் வள்ளுவர் சிலைத் திறப்பு விழாவில் ஆரம்பித்து, அந்த ஆண்டின் முடிவில், குமரி அனந்தன் பொது வாழ்வுப் பொன்விழாவிலே முடித்தேன்.

அந்த நேரத்தில் அ.தி.மு.க.வும், த. மா.கா.வும் தோழமை யோடு இருந்த நேரம். எனினும் குமரி அனந்தன் அவர்களின் விழாவிற்கு என்னை அழைத்திருந்ததால், நான் கலந்து கொண்டேன். அந்த விழாவில் நான் பேசும்போது, ‘‘கடந்த சில நாட்களுக்கு முன்பு த.மா.கா.வுடன் ஓட்டுமில்லை - உறவுமில்லை என்று பேசியிருந்தாலும், அது கட்சி அளவிலே தான். ஆனால் எனக்கும் மூப்பனாருக்கும் உள்ள உறவும்



தினமலர் ஆசிரியர்
திரு.இரா.கிருஷ்ணமூர்த்தி

நட்பும் எங்கே போய் விடும்? யாரால் அதை அழிக்க முடியும்? மருத்துவ மனையில் முரசொலி மாறன் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த நிலையில், நான் மருத்துவ மனையிலே இருந்த போது, இரவு 10 மணியிலிருந்து நள்ளிரவு 3.45 மணிவரை விழித் திருந்த மூப்பனாரின் அந்த நட்புக்கு யாரால் பங்கம் ஏற்படுத்திவிட முடியும்? அரசியலில் மாறுபாடு இருக்கலாம். ஆனால் பொது நிகழ்ச்சி களில் நாங்கள் ஒன்றாகத்தான் இருக்கிறோம்!'' என்று பேசினேன்.

❁ குமரி அனந்தனைப்பற்றி நான் பேசும்போது, ''குமரி அனந்தனுக்கு பெற்றோர் இட்ட பெயர் அனந்த கிருஷ்ணன். வீட்டில் அப்பாவு என்று அழைப்பார்களாம். அரசியலில் அவர் ஒரு அப்பாவி! நாற்காலியில் உட்கார்ந் திருப்பார். வேறு சில தலைவர்கள் ஒவ்வொருவராக வரவர, அவர் எழுந்து தன் இடத்தைக் கொடுத்துவிட்டு, மாறி மாறி உட்கார்ந்து, கடைசியில் பின்னணியாக நின்று கொண்டிருப்பார். அதனால்தான் அரசியலில் அவர் ஒரு அப்பாவி என்று சொன்னேன். காமராஜரின் செல்லப் பிள்ளை அவர். எங்களைப் போன்றவர்களின் பாசப் பிணைப்பில் கட்டுண்டவர்.

❁ ''கோலாலம்பூரில் நடந்த தமிழ் மாநாட்டுக்கு நான் சென்றிருந்தபோது, நான் முதல்வராக இல்லை. அங்கு என்னைப் பார்த்த குமரி அனந்தன் ஓடோடி வந்து, ''எப்போது வந்தீர்கள்?'' என்று கேட்ட பாங்கு உண்மையான தமிழனுடைய பண்பு. ஆயிரம் கருத்து மாறுபாடு இருந்தாலும் - சட்டப் பேரவையில் எதிரும் புதிருமாக அமர்ந்திருந்தாலும் - இருவரிடையே இனிய பாச உணர்வு இருந்தது. அதற்குக் காரணம் நட்பு! குமரியில் காமராஜர் மணி மண்டபம், தியாகிகள் மணி மண்டபம், விஸ்வநாத தாஸ் நினைவகம் போன்ற பல்வேறு



தினமலர் ஆசிரியர் எழுதிய ''கரூரில் ரோமானிய மற்றும் அயல்நாட்டு நாணயங்கள்'' என்ற ஆங்கில நூலை நான் வெளியிட்டேன்

பணிகளை நான் நிறைவேற்றத் தூண்டுதலாக இருந்தவர் குமரி அனந்தன். அவர் நீண்ட நாள் வாழ வேண்டும். அவர் வாழ்கின்ற ஒவ்வொரு நாளும் தமிழ் வாழ வழி பிறக்கும். தமிழனுடைய உணர்வு செழிக்கப் பயன்படும்'' என்றேன்.

★★★

2001ஆம் ஆண்டு, ஜனவரி 3ஆம் தேதியன்று, கலைவாணர் அரங்கத்தில் மத்திய இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சராக இருந்த **பொன். இராதாகிருஷ்ணன்** தலைமையில் உலகச் சதுரங்கச் சாம்பியன் பட்டத்தைப் பெற்ற **விஸ்வநாதன்** அவர்களுக்குப் பாராட்டு விழா ஒன்றினை தமிழக அரசின் சார்பில் நடத்தினேன். அவர் வெற்றி பெற்ற செய்தி கிடைத்ததும் தொலைபேசியிலே அவரைத் தொடர்பு கொண்டு வாழ்த்தும் தெரிவித்தேன்.

விழாவில் அவரைப் பாராட்டியதோடு மட்டுமல்லாமல், தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்ற நகரிலே ''ஏ'' வகை குடியிருப்பு ஒன்றினை விஸ்வநாதன் ஆனந்த்



18.11.2000 அன்று முத்தமிழ்ப் பேரவையின் வெள்ளி விழாவில் கலந்துகொண்டேன்.

அவர்களுக்கு அன்பளிப்பாகவும் தமிழக அரசின் சார்பில் வழங்கினேன். ஆனந்த் தனது ஏற்புரையில், தமிழக அரசுக்கு நன்றி கூறியதோடு, "நான் வெற்றி பெற்றபோது முதன் முதலில் அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்தது கலைஞர் தான்" - என்று கூறினார். அது தனக்கு மிகவும் பெருமையாக இருந்தது என்றும், தமிழக அரசு இவ்வளவு பெரிய வரவேற்பை தனக்கு வழங்கும் என்று தான் எதிர்பார்க்கவில்லை என்றும் தெரிவித்தார். அந்த விழாவில் **பொள்ளாச்சி மகாலிங்கம், சிவந்தி ஆதித்தன்,** கிரிக்கெட் வீரர் **ஸ்ரீகாந்த்** ஆகியோர் கலந்துகொண்டனர்.

★★★

அதுபோலவே 1990ஆம் ஆண்டு, ஜூலை 22ந்தேதி சென்னை சோழா ஓட்டலில் நடை பெற்ற தமிழ்நாடு சதுரங்கக் கூட்டமைப்பு மற்றும் இந்தியன் வங்கி சார்பில் கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த் அவர்களுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவிலும் நான் கலந்துகொண்டு பாராட்டினேன். அந்த விழாவில் என்னுடன் இந்தியன் வங்கி **கோபால கிருஷ்ணன் அவர்களும், பொள்ளாச்சி மகாலிங்கம்** அவர்களும், **எம்.ஏ.எம். ராமசாமி** அவர்களும், **ஆரோன்** அவர்களும் கலந்து கொண்டார்கள். 2007ஆம் ஆண்டு அவர் மீண்டும் உலகச் சதுரங்கச் சாம்பியன் பட்டத்தை வென்ற போது, தமிழக

அரசின் சார்பில் 25 லட்சம் ரூபாயினை வழங்கிப் பாராட்டினேன். 2012ஆம் ஆண்டு, ஐந்தாவது முறையாக அவர் உலகச் சதுரங்கச் சாம்பியன் பட்டத்தை வென்றபோதும், அவரை வாழ்த்திச் செய்தி ஒன்று வெளியிட்டேன்.



★★★

12-1-2001 அன்று, வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு, விருது பெற்ற கலைஞர்களை யெல்லாம் கௌரவித்தேன். குறள்பீட விருதை அ.ச. ஞானசம்பந்தனுக்கு கழக அரசு வழங்கியதுபற்றி 11-1-2001 தேதிய ''தினமணி'', தனது தலையங்கத்தில் -



❁ ''குறள்பீட விருதை முது பெரும் தமிழறிஞரும், தலைசிறந்த இலக்கிய ஆய்வு விற்பன்னருமாகிய பேராசிரியர் அ.ச. ஞான சம்பந்தனுக்கு வழங்கி யதன் மூலம் தமிழ் உலகையே தமிழக அரசு கௌரவித்துள்ளது. அரசியல் சூழல்களுக்கு அப்பாற்பட்ட நிலையில்



சி.சுப்பிரமணியம்


தமிழ் மொழி, புதிய புதிய துறைகளில் படர்ந்து வளர்வதற்கும் பொலிவைப் பெறுவதற்கும் அருந்தொண்டு ஆற்றியிருப்பவர் அ.ச.ஞா. தமிழில் திறனாய்வுக் கலைக்கு வளம் சேர்த்த மிகச் சில அறிஞர்களில் குறிப்பிடத்தக்கவர்.

❁ ''நாற்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் மற்றும் பல்வேறு தமிழ்ப் படைப்புகள் பற்றிய இவருடைய திறனாய்வு தமிழுக்கு மெருகைக் கூட்டியது. குறள்பீடத்து தலையாய விருது அ.ச.ஞா.வுக்கு வழங்கப்பட்டிருப்பதன் மூலம் - ஒரு தனி மரியாதையைப் பெறுகிறது. இதையடுத்து கவிதை, அறிவியல், நாட்டுப் புறவியல், மொழி பெயர்ப்பு, திறனாய்வு போன்ற துறைகளில் முத்திரை பதித்தவர் களுக்குக் குறள்பீடப் பரிசுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவ்வாறே குறள் பீடப் பாராட்டுதல் பெறுவதற்கு எழுவர் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். ஆக மொத்தத்தில், தக்கவர்களுக்குத் தக்க பெருமையைச் சேர்த்திருப்பதன் மூலம் - குறள் பீடம் தமிழ் மக்களின் நெஞ்சகங்களில் தமிழ்ப் பீடமாக அமர்ந்து கொண்டு விட்டது'' என்று எழுதியிருந்தது.

15-1-2001 அன்று, முனைவர் தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அய்யன் திருவள்ளுவர் திருநாளில், பேராசிரியர் **அ.ச. ஞானசம்பந்தன்** அவர்களுக்கு குறள் பீட விருதும், முனைவர் **வா.மு. சேதுராமன்** அவர்களுக்கு அய்யன் திருவள்ளுவர் விருதும், மற்றும் கவிஞர் ஈரோடு தமிழன்பன், திரு மணவை முஸ்தபா, முனைவர் தே.லூர்து, திரு.**சேஷ நாராயணா,** கவிஞர் **இளவேனில்** ஆகியோருக்கு குறள் பீடப்



30.12.2000 அன்று, ஜெமினி கணேசனின் 80ஆண்ட ஆண்டு நிறைவு விழாவில் அவருக்கு வாழ்த்துக் கூறினேன்.



அ.ச.ஞானசம்மந்தன்

பரிசும் வழங்கப்பட்டது. மதுரை திருமதி **சின்னப் பிள்ளை** அம்மை யாருக்கு பொற்கிழி வழங்கி சிறப்பிக் கப்பட்டது. விழாவில் நானும், பேராசிரியரும் கலந்து கொண்டு உரையாற்றினோம்.



ஆளுநர் பாத்திமா பீவீயின் இல்லத்தில் நடைபெற்ற புனித ரம்லான் நோன்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டேன்.

12. தீர்க்கதரிசிபோல மாறன் சொன்னது!

நான், எழுத்தாளர் **சாவி** அவர்களுக்கும் எனக்கும் உள்ள நட்பினைப்பற்றி ஏற்கனவே விரிவாக இத்தொடரில் எழுதியிருக்கிறேன். **"சாவி-85"** என்ற தலைப்பில் எழுத்தாளர் **ராணி மைந்தன்** எழுதிய நூல் ஒன்றினை நான் வெளியிட வேண்டுமென்று வலியுறுத்தி, அந்த விழா 20-1-2001 அன்று நாரத கான சபாவில் நடைபெற்றது.

நூலினை நான் வெளியிட, அப்போது சென்னை மாநகர மேயராக இருந்த தம்பி **மு.க. ஸ்டாலின்** பெற்றுக் கொண்டார். டாக்டர் **வா.செ. குழந்தைசாமி, கவிப் பேரரசு வைரமுத்து, பொள்ளாச்சி மகாலிங்கம், ஆர்.எம். வீரப்பன், ஏ.வி.எம். சரவணன்** ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.



அந்த விழாவில் கலந்து கொண்ட சாவி அவர்கள் பேசும்போது, மிகுந்த உணர்ச்சி வயப்பட்டதால், தன்னால் தொடர்ந்து பேச இயலவில்லை என்றும், நெஞ்சு வலிக்கிறது என்றும் கூறிக் கொண்டே மயங்கி விழப் போகும்போது நானும் என் அருகே இருந்த எனது பாதுகாப்புப் பிரிவினரும் ஓடிச் சென்று அவரைப் பிடித்துக் கொண்டோம்.

விழாவிற்காக வருகை தந்திருந்த ஆற்காடு வீராசாமியையும், தம்பி ஸ்டாலினையும் அழைத்து, உடனே சாவி அவர்களை மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப் பணித்தேன்.



"சாவி - 85" என்ற நூலினை வெளியிட வந்த எனக்கு, மாலை அணிவித்தார், சாவி.

அவர்களும் அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று, உடனடி சிகிச்சைப் பிரிவில் சேர்த்தனர்.

மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளித்தும், பலன் அளிக்காமல் சாவி அவர்கள், 9-2-2001 அன்று இயற்கை எய்தினார்.

சாவி அவர்கள் பார்ப்பன சமுதாயத்தில் பிறந்தவர் என்ற போதிலும், அவர் என்னிடம் எந்த அளவிற்கு அன்போடும், பாசத்தோடும் பழகினார் என்பதை நான் மட்டுமே அறிவேன். பத்திரிகை உலகின் பிதா மகனாகவே திகழ்ந்தவர் அவர். அவருடைய படைப்பில் வெளிவந்த **"வாஷிங்டனில் திருமணம்"** என்ற நகைச்சுவை நாடகம், தமிழகத்திலே ஒரு வரலாற்றினை உருவாக்கியது. சாவி மறைவு குறித்து, நான் எழுதிய இரங்கல் செய்தியில் -

"எழுத்துலகில் பீடுநடை போட்டவரும், எழுத்தாளர்கள் பலரை உருவாக்கக் காரணமாக இருந்தவருமான என் ஆருயிர் நண்பர் ஆசிரியர் சாவி அவர்கள் இயற்கை எய்திவிட்டார் எனும் செய்தி கேட்டு என் கண்கள் குளமாகின்றன. எத்தனை ஆண்டுக் காலம் எனக்கும் அவருக்கும் நட்பு! ஆம்; பிரிக்க முடியாத நட்பு! அந்த நண்பரை இழந்துவிட்டேன். வயது 85 என்றாலுங்கூட, அவர் மறைந்த விதம் இருக்கிறதே, அது என்றென்றும் என் மனக்கண் முன்னால் நிழலாடிக் கொண்டே யிருக்கும்.

"அவரது 85வது பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்ள என்னை அழைத்தார்கள். ஆன்றோர்களும், சான்றோர்களும் கூடியிருந்த அவையில் அவருக்கு ஒவ்வொருவராக வாழ்த்துத் தெரிவித்துக் கொண்டிருந்தோம்.



மறைந்த நண்பர் சாவி அவர்களின் உடலுக்கு நான் மலரஞ்சலி செலுத்தினேன்.

''என் அருகில் அமர்ந்திருந்த ஆசிரியர் சாவி அவர்கள், ''நெஞ்சு வலித்துக் கொண்டேயிருக்கிறது- ஆனாலும் பேசப் போகிறேன்'' என்றார். ''பேச வேண்டாம்'' என்று தடுத்தேன். என்னையும் மீறி ஒலிபெருக்கியின் முன்னால் சென்று உணர்ச்சி மிகுந்த ஓர் உரையாற்றினார். அந்த உரை, எனக்கும் அவருக்கும் இடையே உள்ள நட்பை விவரிப்பதாக இருந்தது. என்னை அவர் புகழ்ந்து பாராட்டிக் கொண்டிருக்கும் போதே, நிலை குலைந்து மேடையிலேயே விழுந்தார். ஓடிப் போய் தாங்கிப் பிடித்துக் கொண்டோம். மேடையிலிருந்த அனை வரும் ஒரு விநாடி மரங்களாகவே ஆனோம்.

''மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். ஒவ்வொரு நாளும் பிழைத்துக் கொள்வார் என்றே எதிர் பார்த்தோம். ஆனால், இயற்கை அவரைத் தன்னோடு இணைத்துக் கொண்டு விட்டது. என் உயிர் நண்பரை இழந்த துக்கத்தில் அவருடைய அருமைத் துணைவியாருக்கும், அவரது மக்களுக்கும் ஆறுதல் கூறக் கூடச் சக்தியற்றவனாக ஆகிவிட்டேன். சாவி நம்மை விட்டுப் பிரிந்து விட்டார். ஆனால், அவருக்கும் எனக்கும்

இடையிலே உள்ள நட்பு ஆழமானது. அதை யாராலும் பிரிக்க முடியாது. வாழ்க சாவியின் புகழ்!'' என்று எழுதினேன்.



சாவியின் படைப்பில் வெளிவந்த ''வாஷிங்டனில் திருமணம்'' என்ற நகைச்சுவை நாடகம், தமிழகத்திலே ஒரு வரலாற்றினை உருவாக்கியது.

26-1-2001 அன்று நடைபெற்ற குடியரசு நாள் விழாவில் நானும், ஆளுநர் **பாத்திமா பீவி** அவர்களும், அமைச்சர்களும் கலந்து கொண்டோம். மத நல்லிணக் கத்திற்காகப் பாடுபட்ட கோட்டை அமீர் பெயரிலான மத நல்லிணக்கப் பதக்கத்தை குடியரசு தின விழாவில் **தஞ்சை சுல்தான் மொய்தீனுக்கு** நான் வழங்கினேன். கள்ளச் சாராய ஒழிப்புப் பணியில் ஈடுபட்டுப் பாராட்டத்தக்க பணியாற்றிய நான்கு காவலர்களுக்கும் உத்தமர் காந்தி காவல் பதக்கங்களை வழங்கினேன். தொடர்ந்து கல்லூரி, பள்ளி மாணவ, மாணவியரின் ஆடல், பாடல், கலை நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டோம். மாலையில், ஆளுநர் இல்லத்தில், அவரால் தரப்பட்ட தேநீர் விருந்திலும் கலந்து கொண்டேன்.

அதற்கடுத்த நாளான *27-1-2001* அன்று ''முரசொலி'' அறக்கட்டளை சார்பில் நடைபெற்ற கலைஞர் விருது வழங்கும் விழாவிலே கலந்துகொண்டு, **டத்தோ சாமிவேலு, கே.பாலசந்தர், வைரமுத்து** ஆகியோருக்கு கலைஞர் விருதினை வழங்கினேன். விருதுக்கான ஒரு லட்சம் ரூபாய் பொற்கிழியும் அவர்களுக்கு என்னால் வழங்கப்பட்டது.

*2001*ஆம் ஆண்டு, ஜனவரி, இறுதியில் குஜராத் மாநிலத்தில் நில நடுக்கம் ஏற்பட்டு பல மாடிக் கட்டிடங்கள் எல்லாம் இடிந்து விழுந்தன. பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாயினர். நில நடுக்கத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பிரதமர் வாஜ்பய் அவர்களும், உள்துறை அமைச்சர் அத்வானி



26.1.2001 அன்று நடைபெற்ற குடியரசு தின விழாவில், ஆளுநர் பாத்திமா பீவி அவர்களுடன் கலந்து கொண்டேன்!

அவர்களும் நேரில் சென்று பார்வையிட்டு மக்களுக்கு ஆறுதல் கூறினர். குஜராத் மாநிலத்தில் ஏற்பட்ட அந்த நில நடுக்கத்தில் பாதிக்கப்பட்டு மறைந்தவர்களுக்கு நான் இரங்கல் தெரிவித்த தோடு, அங்கே நடைபெற்ற நிவாரணப் பணிகளுக்காகத் தமிழக அரசின் சார்பில் உடனடியாக ஐந்து கோடி ரூபாய் வழங்கிடச் செய்தேன். அமைச்சர்கள் எல்லாம் தங்கள் ஒரு மாத ஊதியத்தை குஜராத் மக்களின் துயர் துடைப்பதற்காக வழங்கினார்கள். தி.மு. கழகத்தின் சார்பில் பத்து லட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டது.

29-1-2001 அன்று 2001-2002ஆம் ஆண்டுக்கான இடைக் கால நிதி நிலை அறிக்கையினைத் தமிழகச் சட்டப் பேரவையில் நான் தாக்கல் செய்தேன்.

2001ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் ஆண்டு என்ற அடிப் படையில், ஜனவரி மாதத்தில் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மாவட்டக் கழக முன்னணியினரை அழைத்து உரை யாடல் நடத்தினோம். தமிழகத்தில் ஏப்ரல், மே திங்களில் பொதுத் தேர்தல் நடைபெற லாம் என்ற சூழ்நிலை இருந்தது.



அன்று... கள்ளச் சாராய ஒழிப்புப் பணியில் பாராட்டத்தக்கப் பணியாற்றிய காவலர்களுக்கு உத்தமர் காந்தி பதக்கங்களையும்...



மதநல்லிணக்கப் பதக்கத்தைத் தஞ்சை சுல்தான் மொய்தீனுக்கும் வழங்கினேன்.

அதற்கு முன்பு நான்காண்டு காலம் அதிகமாக அரசியலில் ஈடுபாடு இல்லாமல் ஓய்வாக இருந்த ஜெயலலிதா தேர்தல், வருகிறது என்றதும் பரபரப்புடன் செயல் படத் தொடங்கினார். ஆளுங் கட்சியாக ஐந்தாண்டுகள் இருந்த நிலையில், தி.மு.கழகத்தின்மீது மக்களுக்கு ஒரு வித அசூயை இருந்தது.

1996ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெற்றபோது, அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி அ.தி.மு.க.வுடன் தோழமை கொள்ள நினைத்த நேரத்தில், அ.தி.மு.க.வின் ஆட்சிக்கு எதிராக திடீரென புதிய கூட்டணி அமைந்தது. நரசிம்மராவின் காங்கிரசிலிருந்து வெளியேறி வந்து, காமராஜரின் ஆதர வாளர்கள் **மூப்பனாரின்** தலைமையின்கீழ் தமிழ் மாநிலக் காங்கிரசைக் கண்டார்கள். அந்தத் தமிழ் மாநிலக் காங்கிரஸ் தி.மு. கழகத்துடன் சேர்ந்து அமைத்த கூட்டணி, 1996 தேர்தலில் அரசியல் பிரளயமாகவே மாறி ஜெயலலிதாவின் ஆட்சியைத் தூக்கி எறிந்துவிட்டது. அதன் பிறகு மத்தியில் அமைந்த ஐக்கிய முன்னணி ஆட்சிகளில் - **தேவகவுடா** அரசிலும், **ஐ.கே. குஜ்ரால்** அமைச்சரவையிலும் - தி.மு.க.வும், த.மா.காவும் பங்கு கொண்டன. எனினும் வேறு சில காரணங் களால் தி.மு.க.வுக்கும் த.மா.கா.வுக்கும் இடையே உறவுகளில் விரிசல் ஏற்பட்டது.

அந்த நிலையில் பா.ஜ.க.வின் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தி.மு.க. இடம் பெற்ற பிறகு, த.மா.கா.வும், தி.மு.க.வும் நேர் எதிர்க்கட்சிகளாக ஆகி விட்டன. த.மா.கா. மாத்திரமல்ல - கம்யூனிஸ்ட் கட்சிகளும், முஸ்லீம் லீக் கட்சியும்கூட தி.மு.க. அணியிலிருந்து விலகிவிட்டது. அ.தி.மு.க.வுடன் நெருங்கிய

அரசியல் உறவை த.மா.கா. மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஏற்படுத்திக் கொண்டன. அந்த உறவு 2001ஆம் ஆண்டு தேர்தலில் கூட்டணியாக மாறுமா என்று தெரியாத நிலை. இந்த நிலையில்தான் தேர்தல் கூட்டணி எவ்வாறு உருவாகுமோ என்ற பேச்சு அரசியலில் பலமாகப் பேசப்பட்டது. ஏடுகள் எல்லாம் தங்கள் கற்பனைக்கேற்ற வண்ணம் மாறி மாறி எழுதின.

★ ★ ★

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய நிர்வாகக் குழு 3-1-2001 அன்று கூடியது. அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் **ஏ.பி.பரதன்,** தேசியச் செயலாளர் **டி.ராஜா,** கேரள மாநில முன்னாள் முதல்வர் **பி.கே. வாசுதேவன் நாயர்,** தமிழ் மாநிலச் செயலாளர் **ஆர். நல்லகண்ணு** உட்பட 32 பேர் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கூட்டம் நடைபெறுவதற்கு முதல் நாளே பரதனும் அந்தக் கட்சியின் முன்னணியினரும் அ.தி.மு.க. தலைவி ஜெயலலி தாவை நேரில் சென்று சந்தித்தனர். அவர்களைத் தொடர்ந்து சென்னை வந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்



குஜராத் மாநிலத்தில் ஏற்பட்ட நிலநடுக்க நிவாரணப் பணிகளுக்காக, ராஜ் தொலைக்காட்சி அளித்த நிதியைப் பெற்றுக் கொண்டேன்.

செயலர், **ஹர்கிஷன் சிங் சுர்ஜித்** அவர்களும் ஜெயலலி தாவை நேரில் சந்தித்துப் பேசினார். தேசிய அளவில் மூன்றாவது அணியை உருவாக் குவதில் தீவிரம் காட்டிய இடது சாரிக் கட்சிகள், தமிழகத்தில் மூன்றாவது அணி உருவா வதைத் தவிர்க்கும் முயற்சியிலே ஈடுபட்டார்கள். தமிழகத்தில் குறிப்பாக பா.ஜ.க. இடம் பெறும் கூட்டணியைத் தோற் கடிக்க வேண்டும் என்பதில் அந்தக் கட்சிகள் தீவிர அக்கறை காட்டின. ஜெயலலிதாமீது ஊழல் குற்றச்சாட்டுகளைக் கூறி, அ.தி.மு.க.வை கடுமை யாக எதிர்த்து வந்த கம்யூனிஸ் டுகள், பா.ஜ.க. அணியைத் தோற்கடிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, அ.தி.மு.கவோடு கை கோர்த்தன.


''தனித்து ஆட்சி அமைப் போம்'' என்ற அ.தி.மு.க.வும், ''ஆட்சியில் பங்கு வேண்டும்'' என்று த.மா.கா.வும் கூறி வந்தனர். கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேசிய பிறகு, கூட்டணி ஆட்சிபற்றி தேர் தலுக்குப் பிறகு முடிவு செய்ய லாம் என்று இருவரும் முடிவுக்கு வந்தனர்.



டத்தோ சாமிவேலு



இயக்குநர் திலகம் கே.பாலச்சந்தர்




கவிப்பேரரசு வைரமுத்து



முரசொலி மாறன் பெருமுயற்சியால் உருவான சென்னை வர்த்தக மையத்திற்கு, தமிழக அரசு சார்பில், 25.48 ஏக்கர் நிலம் வழங்கித் திறந்து வைத்தேன்.

ஆனால் 16-1-2001 அன்று சென்னையில் ஒரு விழாவில் பேசிய ஜெயலலிதா, அ.தி.மு.க. கூட்டணி வென்றால், தானே முதல்வர் என்று அறிவித்துக் கொண்டார். அதன் தொடர்ச்சி யாக அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைப்பதைப் பற்றி ஆலோசிக்க த.மா.கா. குழு ஒன்றை அமைத்தது.

19-1-2001 அன்று எம்.ஆர்.சி. நகரில் உள்ள பத்திரிகையாளர் **சோ** வீட்டிற்குச் சென்று அவரை ஜெயலலிதா சந்தித்தார் என்றும், வாஜ்பய் அரசால் மாநிலங்களவை உறுப்பினராக நியமிக்கப்பட்டவர் சோ என்றும், அரசியலில் பா.ஜ.க.வின் எதிரணியான அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளர் ஜெயலலிதா என்றும் ஏடுகள் செய்தி வெளி யிட்டன.



வர்த்தக மையத் திறப்பு விழாவினை யொட்டி, 'கல்கி' எழுதிய தலையங்கத்தில், ''சர்வதேச முதலீடுகளை ஈர்ப்பதில் பாரதத்திலேயே முதன்மை இடத்தில் இருப்பது தமிழகம்தான்! என்று குறிப்பிட்டிருந்தது

★★★

சென்னை வர்த்தக மையத்தின் திறப்பு விழாவும், மற்றும் 16வது இந்திய பன்னாட்டுத் தோல் பொருள் கண்காட்சியின் தொடக்க விழாவும் 31-1-2001 அன்று நந்தம் பாக்கத்தில் நடைபெற்றது. அந்த வர்த்தக மையத்தினை சென்னையில் அமைப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டு, அதற்குரிய முயற்சிகளை மேற் கொண்டவர் மத்திய அமைச்சராக இருந்த தம்பி

முரசொலி மாறன். அவரும் அன்றைய தினம் அந்த விழாவிலே கலந்து கொண்டார். அந்த வர்த்தக மையம் அங்கே அமைவதற்காக தமிழக அரசு 25.48 ஏக்கர் பரப்புடைய நிலத்தினை வழங்கியது.

அந்த விழாவினையொட்டி, 4-2-2001 தேதிய **"கல்கி"** வார இதழ் ஒரு தலையங்கம் எழுதியிருந்தது. கழக ஆட்சியில் தொழில் வளர்ச்சி எந்த அளவிற்கு இருந்தது என்பதை விளக்கும் வகையில் அந்தத் தலையங்கம் அமைந்திருந்தது. அந்தத் தலையங்கத்தின் குறிப்பிட்ட சில பகுதிகள் வருமாறு :-

- "ஹார்வர்ட் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கைகளின்படி சர்வ தேச முதலீடுகளை ஈர்ப்பதில், பாரதத்திலேயே முதன்மை இடத்தில் இருப்பது தமிழகம் தான். உற்பத்திப் பொருளை நூறு சதவிகிதம் ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களின் எண்ணிக்கையும் தமிழகத்தில் தான் அதிகம். தகவல் தொழில் நுட்பப் புரட்சியிலும் இம்மாநிலமே முந்தி நிற்கிறது. பயோடெக்னாலஜி எனப் படும் உயிரியல் தொழில் நுட்பத்திலும் முன்னணியில் இருக்கிறது. இவ்விரண்டு துறைகளும்தான் எதிர்காலத்தில் உலகையே மாற்றி அமைக்கப் போகின்றன.

- "1914 கோடி ரூபாய் பெறுமானமுள்ள தகவல் தொழில் நுட்பம் தமிழகத்தில் இருந்து கடந்த நிதியாண்டில் ஏற்றுமதியாகியிருக்கிறது. "சமுதாய முன்னேற்றப் பணி களிலும் தமிழகம் சளைத்து விடவில்லை" என்கிறார்




பேரறிஞர் அண்ணா அவர்களின், 32-வது நினைவு நாளில், அவர் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினேன்

ஹார்வர்ட் பிரதிநிதியான பேராசிரியர் ஜெஃப்ரி சாக்ஸ். திட்டக் கமிஷன் உறுப்பினர் மான்டெக் சிங் அலுவாலியா, ''புதிய பொருளாதார கொள்கைக்கு மிகச் சிறப்பாக ஈடு கொடுத்து முன்னேறியுள்ள மாநிலம்'' என்று தமிழகத்தைப் பாராட்டியுள்ளார். அக்கொள்கையானது மாநிலங்களுக்கு அளித்தக் கூடுதல் உரிமைகளையும் செயல்பாட்டுச் சுதந்திரங்களையும் தமிழகம் மிகச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்.

❁ ''நடப்பு தி.மு.க. ஆட்சியில் குறைகள், லஞ்ச ஊழல் இல்லையா என்று கேட்கலாம். இருக்கவே செய்கின்றன. எனினும் அவை கட்டுக்கடங்காத பிரும்மாண்ட குற்றம் குறைகள் அல்ல. ஆனால், ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தில் அ.தி.மு.க.வினர் நடத்திய பகிரங்க சுரண்டலும், சூறையாடலும் வரலாறு காணாதவை. மீண்டும் அக்கட்சியிடத்தில் ஆட்சி அதிகாரத்தைத் தரவல்ல எந்த அரசியல் முடிவும் தமிழகத்தின் பின்னடைவுக்கே வழி செய்யும்'' என்று எழுதியிருந்தது, 'கல்கி'!

★★★

பேரறிஞர் அண்ணா அவர்களின் 32வது நினைவு நாள் அமைதிப் பேரணி என் தலைமையில் வழக்கம்போல பிப்ரவரி 3ஆம் தேதியன்று நடைபெற்றது. அதற்கடுத்த நாளான



காஷ்மீர் மாநில முதல்வர் பரூக் அப்துல்லா தலைமையில், ஆலடி அருணா எழுதிய ''இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் கூட்டாட்சிக்கு மாறான அம்சங்கள்'' என்ற ஆங்கில நூலை வெளியிட்டேன்.

4-2-2011 அன்று கலைவாணர் அரங்கத்தில் சட்ட அமைச்சராக இருந்த ஆலடி அருணா எழுதிய Unfederal Features of Indian Constitution (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கூட்டாட்சிக்கு மாறான அம்சங்கள்) என்ற ஆங்கில நூலின் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டேன். ஜம்மு காஷ்மீர் மாநில முதலமைச்சராக இருந்த டாக்டர் **பரூக் அப்துல்லா** அவர்கள் தலைமையில் அந்த விழா நடைபெற்றது. மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சராக இருந்த தம்பி முரசொலி மாறன் முன்னிலை வகித்தார். நீதியரசர் **மோகன்,** நடிகர் **சரத்குமார்** ஆகியோர் அந்த விழாவில் கலந்து கொண்டனர்.

மத்திய மாநில உறவுகள் - மத்திய சர்க்காரிடத்திலே குவிந்திருக்கின்ற அதிகாரங்கள் மாநிலங்களுக்கு எப்படி பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பது போன்ற பல ஆய்வுகளை நடத்தி, ஆன்றோர்கள் பலர் வழங்கிய ஆழமானக் கருத்துக்களை யெல்லாம் தொகுத்து அந்த நூல் உருவாக்கப் பட்டிருந்தது. மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் அளிப்பதாக அரசியல் சட்ட மறு ஆய்வு அமைய வேண்டும் என்று அந்த விழாவிலேதான் நான் பேசினேன். அந்த விழாவிலே கலந்து கொள்வதற்காக வந்த நண்பர் பரூக் அப்துல்லா அவர்கள் என் வீட்டிற்கு வந்து என்னுடனும், தம்பி மாறனுடனும் நீண்ட நேரம் உரையாடினார். அவருடைய அருமைத் தந்தையார் **ஷேக் அப்துல்லா** அவர்கள் சென்னைக்கு வந்து என்னைச் சந்தித்தது பற்றியெல்லாம் அப்போது அவரிடம் பகிர்ந்து கொண்டேன்.

7-2-2001 அன்று காலையில் பாண்டிச்சேரியில் நடைபெற்ற **"தினகரன்"** (புதுவை பதிப்பு) வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு, மாலையில் திண்டிவனத்தில் இருபது கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட பாலத்தினைத் திறந்து வைத்தேன்.

2001ஆம் ஆண்டு, பிப்ரவரி இரண்டாவது வாரத்தில், **"சோ" ராமசாமி** அவர்கள் ஆங்கில ஏடு ஒன்றுக்கு அளித்த பேட்டியில், தீவிரவாதத்தை நான் ஆதரிப்பதாகவும், விடுதலைப் புலிகளின் தீவிரவாதத்துக்கு நான் துணை போனதாகவும், பத்மநாபாவைக் கொலை செய்த பிறகும்,



21.2.2001 அன்று, சென்னையில் எஸ்.எஸ்.இராமசாமி படையாச்சியாரின் வெண்கலச் சிலையைத் திறந்து வைத்தேன்.

ராஜீவ் காந்தியைக் கொலை செய்த பிறகும் விடுதலைப் புலிகளுக்கு நான் ஆதரவாக இருக்கிறேன் என்றும், அதனால் தான் அவர் தி.மு.கழக ஆட்சியை எதிர்ப்பதாகவும் கூறியிருந்தார். அதைக் குறிப்பிட்டுச் செய்தியாளர்கள் என்னிடம் கருத்து கேட்ட போது - ''பத்மநாபா கொலை செய்யப் பட்ட இரண்டு மாதங்களுக்குப் பிறகு ஆங்கில ஏடுகளுக்கு அளித்த பேட்டியில், "இந்த இரண்டு மாதங்களாக விடுதலைப்புலிகளால் எந்தவிதமான வன்முறையும் இல்லை. அதனால் அவர்களை ஆதரிப்பதில் தவறில்லை. இந்திய அரசு இலங்கையின்மீது படையெடுத்து, இந்திரா காந்தி பாகிஸ்தானில் ஒரு பங்களாதேஷ் உருவாக்கியதுபோல இலங்கையில் தமிழ் ஈழத்தை உருவாக்க வேண்டும். பிரபாகரனுக்கு ஈழத்தில் ஒரு ஆபத்து என்றால், தமிழ்நாடு எரிமலையாகும்! விடுதலைப் புலிகளுக்கு எம்.ஜி.ஆர். உதவி செய்ததில் அணுவளவுகூட கருணாநிதி உதவி செய்யவில்லை. தமிழ் நாட்டு மக்கள் விடுதலைப் புலிகளை ஆதரிக்க வேண்டும்'' என்று கருத்துக் கூறிய ஜெயலலிதாவை வரிந்து கட்டிக் கொண்டு ஆதரிக்கிற சோ இராமசாமி அவர்கள், என்னைப் பற்றி இட்டுக்கட்டி அவதூறு கூறுவதுதான் வேடிக்கையாக இருக்கிறது. ராஜீவ் காந்தி கொலைக்குப் பிறகும் நான் விடுதலைப் புலிகளை ஆதரித்ததாக திரு. சோ. இராமசாமி சொல்வது உண்மையாக இருக்குமானால், பிறகு ஏன் 1996 தேர்தலில் தி.மு. கழகத்தையும், த.மா.கா.வையும் கூட்டணி சேர்க்க இவர் தூதராக வேலை பார்த்தார் என்ற கேள்விக்கு என்ன பதில் சொல்கிறார்?'' என்று வினவினேன்.

★ ★ ★

11-2-2001 அன்று காலையில், சென்னையில் அய்யநாதன் இல்லத் திருமண விழா நிகழ்ச்சியில் பங்கேற்ற நான், அன்று மாலையில் நாங்குனேரியில் நடைபெற்ற உயர் தொழில் நுட்பத் தொழில் பூங்காவின் தொடக்க விழாவில் கலந்து கொண்டேன்.

மறுநாள் 12-2-2001 அன்று திருநெல்வேலியில் கருப்ப சாமிப் பாண்டியன் இல்ல மணவிழாவினை நடத்தி வைத்து விட்டு, மாலையில் உசிலம்பட்டி வந்து பார்வர்ட் பிளாக் நண்பர் பி.என். வல்லரசு நினைவிடத்திலே அஞ்சலி செலுத்தி விட்டு, தேனி சென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத் திறப்பு விழாவில் பங்கேற்றேன்.

அதற்கடுத்த நாளான 13ஆம் தேதி காலையில் மட்டும் மூன்று நிகழ்ச்சிகள்! திருவாதவூரில் நூறாவது சமத்துவபுரத் திறப்பு விழா - தும்பைப்பட்டியில் முன்னாள் அமைச்சர் கக்கன் அவர்களின் மணி மண்டபத் திறப்பு விழா - மதுரையில் கிராம நிர்வாக அலுவலர் மாநாடு - மாலையில் மதுரையிலேயே மகளிர் சுய உதவிக் குழுக்கள் மாநாடு.

இத்தனை நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று விட்டு - மறுநாள் சென்னைக்கு வந்து, அன்று காலையில், சென்னையில் ராணிப் பேட்டை காந்தி இல்ல மண விழாவிலும், மாலையில் ராஜ் தொலைக் காட்சியினர் நடத்திய குஜராத் பூகம்ப நிதியளிப்பு விழாவிலும், அதற்கடுத்து சென்னை தலித் கிறித்தவர்களின் மாநாட்டிலும் கலந்து கொண்டேன்.

★★★

15ஆம் தேதியன்று சென்னையில் நடைபெற்ற அமைச் சரவைக் கூட்டத்தில் கலந்து கொண்டு, ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோருக்கான அரசு அலுவல்களில் பின்னடைவுப் பணி இடங்களை நிறைவு செய்யும் ஆணை குறித்து ஆய்வு செய்திட நீதிபதி **சாமிதுரை** அவர்கள் தலைமையில் குழு ஒன்று அமைப்பதென்ற முடிவினை வேறு சில முடிவுகளோடு எடுத்தேன். 16ஆம்


தேதியன்று சென்னையில் நடைபெற்ற கழகப் பொதுக் குழுவிற்குப் பின், செய்தியாளர்களைச் சந்தித்தபோது, சட்டப் பேரவைத் தேர்தலில் தோழமைக் கட்சிகளுடன் தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தை நடத்திடவும், தொகுதிப் பங்கீடு பற்றிக் கலந்து பேசிடவும் அப்போது கழகப் பொருளாளராக இருந்த ஆர்க்காடு வீராசாமி தலைமையில் கழகத்தின் சார்பில் குழு ஒன்று அமைக்கப்படுமென்று தெரிவித்தேன்.

★ ★ ★

1998இல் நடந்த மக்களவைத் தேர்தலில் அ.தி.மு.க. அணியில் இடம் பெற்ற பா.ம.க., அப்போது அமைந்த பா.ஜ.க. கூட்டணி அரசில் பங்கேற்றது. பா.ஜ.க. கூட்டணி யிலிருந்து அ.தி.மு.க. விலகியபோதும், பா.ம.க. அதே அணியில் நீடித்தது. அதைத் தொடர்ந்து 1999இல் நடந்த மக்களவைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் அந்தக் கட்சி இடம் பெற்றது. 2001ஆம் ஆண்டு தேர்தலுக்குச் சில மாதங்களுக்கு முன்பு, பா.ம.க. தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து விலகிக் கொண்டது.

★ ★ ★

17-2-2001 அன்று கலைவாணர் அரங்கத்தில் மத்திய அமைச்சர் தம்பி முரசொலி மாறன் தலைமையில் நடைபெற்ற **தமிழ் இணையப் பல்கலைக் கழகத்** தொடக்க விழாவில் கலந்து கொண்டேன். பேராசிரியர், முனைவர் **தமிழ்க்குடிமகன்,** முனைவர் **வா.செ. குழந்தைசாமி** - ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் அந்த நிகழ்ச்சியில் இலங்கை உயர்கல்வி மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு.**இண்டிகா குணவர்தனே,** இலங்கை அரச கரும மொழிகள் ஆணைக் குழுத் தலைவர் திரு. **சு. சிவதாசன்,** சிங்கப்பூர் அரசின் தமிழ் இணைய ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் **ஆர்.ரவீந்திரன்,** ஜெர்மனி கொலோன் பல்கலைக் கழகத்தின் இந்தியவியல் மற்றும் தமிழ் ஆய்வுத் துறைப் பேராசிரியர் டாக்டர் **தாமஸ் மால்ட்டன்** ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



13.2.2001 அன்று, மேலூர் - தும்பைப்பட்டியில் முன்னாள் அமைச்சர் கக்கன் அவர்களின் மணிமண்டபத்தைத் திறந்து வைத்தேன்.

நான் பெரிதும் மதிக்கும் வா.செ. குழந்தைசாமி அவர்கள் அந்த விழாவில் வரவேற்புரையாற்றும்போது, ''கலைஞர் விட்டுச் செல்லும் எச்சங்கள் தமிழக வரலாற்றில் துருவ நட்சத்திரமாக விளங்கும்'' என்றும், ''தமிழக முதலமைச்சர் கலைஞர் இந்த விழாவில் ஒரு இளங்கன்றை நட்டிருக்கிறார், அது தென்னையின் கன்று அல்ல - பனையின் கன்று அல்ல - வேம்பின் கன்றுகூட அல்ல - அது ஆலின் கன்று! உலகின் நாற்பது நாடுகளில் எங்கெங்கெல்லாம் தமிழர்கள் இருக்கிறார் களோ, அந்த நாட்டின் மண்ணில் விழுது இறக்கி, விரிவாக வளரக் கூடிய தன்மையை தன்னுள் கொண்ட ஒரு ஆலின் கன்றை இன்று அவர்கள் நட்டிருக்கிறார்கள்!'' என்றெல்லாம் குறிப்பிட்டார்.

விழாவிற்கு தலைமையேற்ற மத்திய அமைச்சர் தம்பி மாறன் பேசும்போது, ''கலைஞர் எத்தனையோ சாதனைகள் செய்திருக்கலாம், ஆனால் இந்தத் தமிழ் இணையப் பல்கலைக் கழகத்திற்கு நிகரான சாதனை எதுவுமே கிடையாது. டாக்டர் குழந்தைசாமி இதை ஆல விழுது என்றார். ஆலவிழுதுகூட

அல்ல - இது ஆயிரங் காலத்துப் பயிர்! இந்தப் பல்கலைக் கழகம் தமிழ் உள்ளளவும் இருக்கும். இன்னும் பத்தாண்டுகளில் ஒவ்வொரு வீட்டிலும் தற்போது டெலிபோன் இருப்பதைப் போலவும், டெலிவிஷன் இருப்பதைப் போலவும், கம்ப்யூட்டரும் வந்துவிடும். கலைஞர் அவர்களின் சாதனை கிரீடத்தில் எத்தனையோ வைரங்கள் இருக்கலாம். ஆனால் இதுபோன்ற வைரம் கிடையாது!'' என்று குறிப்பிட்டார்.

11 ஆண்டுகளுக்கு முன்பே, இன்னும் பத்தாண்டுகளுக்குப் பிறகு ஒவ்வொரு வீட்டிலும் கம்ப்யூட்டர் இருக்குமென்று எவ்வளவு **தீர்க்கதரிசியாக** மாறன் அன்றைக்கு அந்த விழாவிலே பேசியிருக்கிறார் என்பதைத் தற்போது ஒவ்வொரு வீட்டிலும் கம்ப்யூட்டர்களை நமது குழந்தைகள் கையாளுகின்ற நேரத்திலே நாம் உணர்ந்து கொள்ள முடிகிறதல்லவா?

அந்த விழா நடைபெற்ற அதே நாளில், நீதிக் கட்சி நிறுவனர் டாக்டர் **சி. நடேசனார்** அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த 90 வயது நிரம்பிய பெரியவர் **சி.எஸ். மணி** அவர்கள், அந்த நாள் நடேசனார் அவர்களின் 63வது நினைவு நாள் என்ற வகையில் என்னைச் சந்தித்து உரையாடினார். இந்தத் தொடரில் சற்று விரிவாக நான் கலந்து கொண்ட முக்கிய நிகழ்ச்சிகள் எல்லாம் இடம் பெற்று, பிற்காலத்தில் ஆய்வு செய்வோருக்குப் பயன்படும்படியாக இருக்க வேண்டுமென்று நினைப்பதால், பெரும்பாலான நிகழ்ச்சிகளை இடம்பெறச் செய்திருக் கிறேன். அதே நேரத்தில், 2001ஆம் ஆண்டு என்பது என்னுடைய 77ஆம் அகவை - அந்த வயதிலும்கூட நான் எந்த அளவிற்கு உழைத்திருக்கிறேன் என்பதை நானே ஒருமுறை எழுத்திலே பார்க்கும்போது மனநிறைவாகவே உள்ளது.

★ ★ ★

வன்னிய சமுதாயப் பெருமக்களுக்காக தன் வாழ்நாளில் பெரும் பகுதியைச் செலவிட்ட திரு. **எஸ்.எஸ்.ராமசாமி** படையாச்சியாரின் திருவுருவச் சிலையை சென்னையிலே நிறுவ வேண்டும் என்ற கோரிக்கையினை டாக்டர் **ராமதாஸ்**, **திரு. வாழப்பாடி ராமமூர்த்தி**, திரு. வன்னிய அடிகளார்,

திரு. **தீரன்,** எம்.எல்.ஏ., மற்றும் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் நீண்ட நாட்களாக தொடர்ந்து தெரிவித்தார்கள்.

ராமசாமி படையாச்சியார் அவர்களை நானும் 1952ஆம் ஆண்டிலிருந்து - அவரது உழைப்பாளர் கட்சியுடன் தி.மு.க. தேர்தல் உடன்பாடு கொண்டிருந்த காலத்திலிருந்து - நன்கறிவேன். அவருடன் நெருங்கியும் பழகியிருக்கிறேன். எனவே சென்னையில் ராமசாமி படையாச்சியார் சிலை வைப்பதென்று அரசின் சார்பில் முடிவு செய்து அறிவிக்கப்பட்டது. வன்னிய சமுதாய மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்றுக் கொண்டதற்காக நன்றி தெரிவித்து கொண்டார்கள்.

சென்னை மாநகரில் வன்னிய சமுதாயத்தினருக்காகப் பெரிதும் உழைத்த பெரியவர் எஸ்.எஸ். இராமசாமி படையாச்சியார் அவர்களின் திருவுருவச் சிலை வைக்கப்படும் என்று நான் 19-6-2000 அன்று அறிவித்தேன். அறிவித்ததோடு நில்லாமல், அதற்கான ஆணையையும் பிறப்பித்தேன். படையாச்சியாரின் வெண்கலச் சிலை தயாராகி 21-2-2001 அன்று நானே அதனைத் திறந்து வைக்கும் பேற்றினையும் பெற்றேன். அந்த விழாவிற்குச் செல்வதற்கு முன்பாகத் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற, கோடைக் காலத்தில் வழக்கமாக ஏற்படும் குடிநீர் பற்றாக்குறையைச் சமாளித்திட துரித நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றி அரசின் மூத்த அதிகாரிகளோடு கலந்தாலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டேன்.

எஸ்.எஸ். இராமசாமி படையாச்சியாரின் சிலை திறப்பு விழாவில், முன்னாள் மத்திய அமைச்சர் **வாழப்பாடி ராமமூர்த்தி, துரைமுருகன், முல்லைவேந்தன், பேராசிரியர் தீரன், வன்னிய அடிகளார்,** இன்றைய மத்திய துணை அமைச்சர் **ஜெகத்ரட்சகன், எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பரிதி இளம்வழுதி, ஏ.ஜி. சம்பத்** ஆகியோரும் படையாச்சியாரின் குடும்பத்தினரும் கலந்து கொண்டனர்.

படையாச்சியாரின் சிலை வைப்பது பற்றி வாழப்பாடி யாரும், வன்னிய அடிகளாரும் தான் ஒரு முறை என்னைச்

சந்தித்து ராமசாமி படையாச்சியாரின் சிலை வைக்க ஓர் இடம் வேண்டுமென்று கேட்டார்கள். ''இடம் மாத்திர மல்ல- இடத்திலே நிச்சயமாக சிலையும் கழக அரசின் சார்பாகவே நிறுவப்படும்'' என்று பதிலளித்தேன். அதைச் செய்தும் முடித்தேன். அந்த விழாவில் உரையாற்றிய வாழப்பாடியார் அதைப்பற்றி தனது உரையிலே விரிவாக எடுத்துக் கூறினார்.

★ ★ ★

1980ஆம் ஆண்டு இந்திரா காங்கிரசுக்கும் தி.மு.க.விற்கும் தேர்தல் உடன்பாடு ஏற்பட்டு, தமிழ்நாட்டில் இந்திரா காங்கிரஸ் சார்பாக போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலில் ஒரு பிரதியை, அதை வெளியிடுவதற்கு முன்பாக தோழமைக் கட்சியின் தலைவன் என்ற முறையில் எனக்கு அனுப்பி வைத்தார்கள். அதைப் பார்த்த போது தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களில் பெரும்பாலாக வாழ்கின்ற சமுதாயத்தின் சார்பில் ஒரு வேட்பாளர்கூட நிறுத்தப்பட வில்லை என்பதை அறிந்து, உடனே தொலைபேசியில் இந்திரா காந்தி அம்மையாரைத் தொடர்பு கொண்டு, ''தென் ஆற்காடு, வட ஆற்காடு போன்ற மாவட்டங்களில் வாழும் ஒரு பெரும் சமுதாயம் - உழைக்கும் சமுதாயம் - தமிழ்நாட்டில் பெரும்பான்மையாக இடம் பெற்ற சமுதாயம் - ஏழைஎளிய பாட்டாளி மக்கள் இடம் பெற்ற சமுதாயம் - ஒரு அரசு அப்படிப்பட்ட சமுதாயத்திற்கு அதிகமாகச் செய்ய வேண்டும் - ஆனால், தங்கள் பட்டியலில் அந்தச் சமுதாயத்திலிருந்து ஒருவரைக் கூட வேட்பாளராக இடம் பெறச் செய்ய வில்லையே'' என்று சொன்னேன்.

''அதற்கு என்ன செய்யலாம்?'' என்று கேட்டார்கள்.

''நான்கைந்து பாராளுமன்றத் தொகுதிகளை இணைக்கக் கூடிய அளவிற்கு ஒரு வேட்பாளர் இருக்கிறார், அந்த வேட்பாளரை நிறுத்தினால் நான்கைந்து பாராளுமன்றத் தொகுதியிலும் அந்த வகுப்பைச் சேர்ந்தவர்களை நிறுத்தியதாக அர்த்தம். அவ்வளவு மக்களும் திருப்தி அடைவார்கள்'' என்று சொன்னேன். ''பெயரைச் சொல்'' என்றார்கள். நான் ''ராமசாமி படையாச்சியார்'' என்று சொன்னேன்.

உடனடியாக அதை ஏற்றுக் கொண்டு அவ்வாறே அறிவித் தார்கள். அந்தத் தேர்தலில் தான் ராமசாமி படையாச்சியார் நாடாளுமன்றத்திற்குப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இந்தச் சம்பவத்தை அந்தச் சிலை திறப்பு விழாவின் போது, படையாச்சியாரின் மகன் திரு. **ராமதாஸ்** அவர்களே எடுத்துக் கூறினார்.

1989ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் பிரச்சாரத்தில் நான் ஈடுபட்டிருந்தபோது, கடலுடர் கூட்டத்திலே கலந்து கொண்டபோது படையாச்சியார் பற்றி விசாரித்தேன். அவர் உடல் நலம் இல்லாமல் வீட்டிலேயே இருக்கிறார் என்று சொன்னார்கள். நான் கடலூர் கூட்டம் முடிந்து, தொடர்ந்து பல ஊர்களுக்கு பிரச்சாரத்திற்காக செல்ல வேண்டியிருந் தாலும், நேராக ராமசாமி படையாச்சியார் வீட்டிற்குச் சென்றேன். அப்போது நான் எந்தப் பதவியிலும் இல்லை. இருந்தாலும் அவர் தன் வீட்டு வாசலுக்கே வந்து, என்னை வரவேற்று அழைத்துச் சென்றார். அந்தப் பண்பாட்டினை நான் இப்போதும் அடிக்கடி நினைத்துக் கொள்வதுண்டு.


அந்தப் பெருமகனாருக்கு கழக ஆட்சியில் சிலை வைக்கும் அரிய வாய்ப்பு எனக்குக் கிட்டியது - பெரும் பேறுதானே!

13. தமிழே இந்தியாவின் ஆட்சிமொழி என்ற அருமைத் தலைவர்!

நான் கடந்த வாரம் எழுதியதைப்போல, எஸ்.எஸ். ராமசாமி படையாச்சியார் அவர்களின் சிலைத் திறப்பு விழா நடை பெற்றதற்கு மறுநாள் 22ஆம் தேதியன்று, சென்னை, ஓமந்தூரார் அரசினர் வளாகத்தில் கட்டப்பட்ட சுற்றுலா வளாகக் கட்டிடத் திறப்பு விழாவிலும்-

அதற்கடுத்த நாள் - 23ஆம் தேதியன்று காலையில், உடுமலைப்பேட்டையில் **நாராயணக் கவிராயர்** மணி மண்டபத்திறப்பு விழாவிலும் - மாலையில் கோவையில் நடைபெற்ற காவல் துறை ஆணையர் அலுவலகக் கட்டிடத் திறப்பு விழாவிலும், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மாநாட்டிலும் -

அதற்கடுத்த நாள் - 24ஆம் தேதியன்று, சென்னை கலைஞர் அரங்கத்தில் கழகத்தின் கொள்கைப் பரப்புச் செயலாளராக இருந்த தம்பி **டி. ராஜேந்தர்** ஏற்பாடு செய்த கழகச் சொற் பொழிவாளர்கள் கூட்டத்திலும் -



அதற்கடுத்த நாள் - 25ஆம் தேதியன்று, காலையில் கழக வழக் கறிஞர் **ஜின்னா** இல்லத் திருமணத் திலும் - அதே நாள் மாலையில் கலைஞர் அரங்கத்தில் நடைபெற்ற தேசிய ஜனநாயகக் கூட்டணி கூட்டத்திலும் - அதன் பின்னர் காயிதே மில்லத் மணிமண்டபத்தின் கட்டுமானப் பணிகள் தொடக்க விழாவிலும் கலந்துகொண்டேன்.


காயிதே மில்லத் மணிமண்டபக் கட்டு மானப் பணிகள் தொடக்க விழாவின் துவக்கத்தில், நமது இசை முரசு **நாகூர் அனீபா** அவர்கள் காயிதே மில்லத் அவர்களையும், அண்ணா அவர்களையும் இணைத்து ஒரு பாடல் பாடினார். அந்தப் பாடலில் குறிப்பிட்டதைப் போல அந்த இரண்டு தலைவர்களும் என் இதயத்தில் இருக்கிறார்கள் என்பதைச் சொல்லி விட்டுத்தான் என் உரையையே தொடங் கினேன்.



டெல்லியில் 'புத்திரதான்' தினத்தில், ''இந்த நாட்டிற்காக என் மகனையே தானமாகத் தருகிறேன்!'' என்றார், காயிதே மில்லத்!

''தம்பி **திருப்பூர் அல்தாப்** அந்த விழாவிலே பேசும்போது, யாரோ சிலர் அந்த நிகழ்ச்சியை நான் ஆதாயத்திற்காகச் செய்வதாகச் சொன்னதை எடுத்துக்காட்டி வருத்தப்பட்டார். ஆதாயத்திற்காகச் செய்வதாக இருந்தால், தேர்தல் நேரத்தில் மட்டும் மலர் மாலையைத் தூக்கிக் கொண்டு காயிதே மில்லத் அவர்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்திற்கு வந்து மரியாதை செலுத்துவார்கள்-ஆனால் நான் எவ்வாறு அண்ணா அவர்களின் நினைவிடத்திற்கு ஆண்டு தோறும் பிப்ரவரி 3ஆம் தேதியன்று சென்று வணங்குகிறேனோ, அதைப்போலவே தான், காயிதே மில்லத் அவர்களின் நினைவிடத்திற்கும் ஒவ்வொரு ஆண்டும், நானோ அல்லது கழகத்தின் சார்பில் தம்பி ஸ்டாலின் போன்றவர்களோ வருகை தந்து வணங்குகிறோம்'' என்று கூறினேன்.

பேராசிரியர் **காதர் மொய்தீன்** பேசும்போது, ''யார் முதலமைச்சராக வரக்கூடாது என்று ஓட்டு போட்டோமோ, அவரையே பிறகு சந்தித்து காயிதே மில்லத் மணி மண்டபம் எழுப்பித் தாருங்கள்!'' என்று கேட்டதாகச் சொன்னார்.



22.1.2000 அன்று, சென்னை - ஓமந்தூரார் அரசினர் வளாகதில் - 'சுற்றுலா வளாகக் கட்டிடத்தை நான் திறந்து வைத்தேன்.

''அதுதான் என்னுடைய சுபாவம் - ஓட்டுப் போடாதவர் களுக்குத்தான் முதலில் உதவி செய்கிறேன்!'' என்று நான் அவருக்குப் பதில் அளித்தேன்.


தொடர்ந்து அந்த விழாவில் பேசும்போது, சிறுபான்மையி னரான இஸ்லாமியப் பெருமக்களுக்குக் கழக ஆட்சியில் எப்படிப்பட்ட சாதனைகள் எல்லாம் செய்யப்பட்டன என்பதை நினைவுபடுத்தினேன்.


உதாரணமாக, 1974ஆம் ஆண்டு, ஜூன் 5ஆம் தேதி, அரசு பெண்கள் கல்லூரிக்கு காயிதே மில்லத் அரசினர் மகளிர் கல்லூரி என்று பெயர் சூட்டியதையும் - சென்னை மேடவாக்கத்தில் காயிதே மில்லத் பெயரில் முஸ்லீம் கல்வி கலாச்சார அறக்கட்டளை ஆண்கள் கல்லூரி ஒன்றினைத் தொடங்க முன் வந்ததையும் - அதற்கு 40 ஏக்கர் நிலத்தை அரசின் சார்பில் வழங்கியதையும் - வாலாஜா சாலையிலிருந்து டாக்டர் பெசன்ட் ரோடு வரையிலான நெடுஞ்சாலைக்கு 29-1-1976 அன்று ''காயிதே மில்லத் நெடுஞ்சாலை'' என்று பெயரிட் டதையும் - காயிதே மில்லத் அவர்களின் பெயரை ஒரு பாலத்திற்கு வைத்ததையும் - காயிதே மில்லத் அவர்களுடைய பெயரால் சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில், 25 இலட்சம் ரூபாய் மூலதனத்துடன் அறக்கட்டளை ஒன்றை 1997 ஜூன் திங்களில் அமைத்து, காயிதே மில்லத் அவர்களின் பெயரால் ஏழை மாணவர்களுக்கு உதவிகள் வழங்கி

வருவதையும் - காயிதே மில்லத் மணி மண்டபம் கட்டிட 50 லட்சம் ரூபாய் அரசின் சார்பில் ஒதுக்கீடு செய்ததையும் - 1970ஆம் ஆண்டு **நபிகள் நாயகம்** அவர்களின் பிறந்த நாளை இந்தியாவிலேயே முதன் முதலாக சம்பளத்துடன் கூடிய விடுமுறை நாளாக அறிவித்ததையும் - உலமாக்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத்தை உயர்த்தியதையும் - சிறுபான்மைச் சமுதாயத்தின் நலன்களைப் பாதுகாத்திட 1989ஆம் ஆண்டு சிறுபான்மையினர் நல ஆணையத்தை அமைத்ததையும் - உருது பேசும் இஸ்லாமியர்களையும் பிற்படுத்தப்பட்ட சமுதாயமாக அறிவித்ததையும் - 21-7-2000 அன்று "உருது அகாடமி" தொடங்கப்பட்டதையும் - வக்ஃப் வாரிய நிர்வாகச் செலவிற்காக வழங்கப்பட்டு வந்த மானியம் 30 லட்சம் ரூபாய் என்பதை 45 லட்சம் ரூபாயாக உயர்த்தி யதையும் தொகுத்து - அந்த விழாவிலே நான் விளக்கினேன்.

அதன் பின்னர், காயிதே மில்லத் அவர்கள் நம் நாட்டிற் காகவும், மொழிக்காகவும் அவரது வாழ்க்கையில் நடந்து காட்டிய சிலவற்றையும் அந்த விழாவில் ஞாபகப்படுத்த நான் தவறவில்லை. 1962இல் சீன ஆக்கிரமிப்பு நடைபெற்ற போது, நாடாளுமன்றத்தில் காயிதே மில்லத் பேசியது :-

❁ "நமது நாட்டின்மீது ஆக்கிரமிப்பு செய்த சீனாவிற்குப் பாரதப் பிரதமர் கொடுத்த சவாலை நான் வரவேற்கிறேன். யாதொரு நிபந்தனையுமின்றி அதை நான் ஆதரிக்கிறேன்" என்று ஆங்கிலத்தில் காயிதே மில்லத் பேசியபோது, ஒரு உறுப்பினர் குறுக்கிட்டு, "உருதுவில் பேசுங்கள்" என்றார். அப்போது காயிதே மில்லத், "ஆங்கிலத்தில் பேசுபவர்களுக்கெல்லாம் இந்தியிலும் பேசத் தெரியும் என்று நண்பர் நினைத்துக் கொள்கிறார். எனக்கு இந்தியும் அன்னிய மொழி-





உருதுவும் அன்னிய மொழி - தமிழ் தான் என் தாய் மொழி!'' என்றார்.

இந்தியாவின் தேசிய மொழியாக எது இருக்க வேண்டு மென்ற பிரச்சினை அரசியல் நிர்ணய சபையில் எழுந்தபோது, பெரும்பான்மையாக அங்கே இருந்தவர்கள் தேசிய மொழி யாக இந்தியைத்தான் வைக்க வேண்டுமென்றனர். வேறு சிலரோ ஆங்கிலமே இணை மொழியாக இருக்கட்டும் என்றனர். அதைக் கேட்டு ஆத்திரமடைந்த சிலர், ''ஆங்கி லேயர்களை விரட்டிவிட்டோம் - அவர்களது மொழியை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? இந்தி பிடிக்காவிட்டால், இந்தியாவில் உள்ள ஏதாவது ஒரு மொழி தேசிய மொழியாக இருக்கலாம்!'' என்றனர். அப்போது காயிதே மில்லத் எழுந்து, ''ஆங்கில மொழி அந்நிய மொழி - அது இந்நாட்டின் தேசிய மொழியாகக் கூடாது. வேறு எந்த இந்திய மொழியானாலும் பரவாயில்லை - அதைத் தேசிய மொழியாக ஏற்றுக் கொள்ளலாம் என்று பலர் இங்கே பேசினர். இந்நாட்டில் உள்ள மொழிகளில் எல்லாம் தொன்மை வாய்ந்தது - இன்றளவும் பேச்சுவழக்கில் இருக்கக் கூடியது - இலக்கண, இலக்கிய நயங்களில் உலகில் உள்ள எந்த மொழிக்கும் ஈடு கொடுக்கும் சிறப்புடையது எனது தாய் மொழி தமிழே! அதுதான் ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்று திட்டவட்டமாகக் கூறிக் கொள்கிறேன்!'' என்றார்.

★ ★ ★

இந்த நாட்டுக்காகத் தன் மகனையே தானமாகத் தருகிறேன் என்று சொன்னவர் காயிதே மில்லத். டெல்லியில் நடைபெற்ற ''புத்திரதான் தினத்தில்'' (புத்திரனை நாட்டிற்காக தானம்


செய்கின்ற தினம்) காயிதே மில்லத் இவ்வாறு கூறியதாக, 13-11-1962 நாளிட்ட ''மெயில்'' ஆங்கில இதழில் செய்தி வெளிவந்தது.

★ ★ ★

பாகிஸ்தான் பிரிந்தபோது, பாகிஸ்தான் பிரதமர் **லியாகத் அலிகான்,** காயிதே மில்லத் அவர்களிடம், ''இந்தியாவில் வாழும் நாலரைக் கோடி இஸ்லாமியர்களின் நினைவைப் பாகிஸ்தான் என்றென்றும் மறவாது'' என்று இரக்கத்தோடு கூறினார்.

அப்போது காயிதே மில்லத், ''அய்யா! நடந்தவைகளை யெல்லாம் மறந்து விடுங்கள். நாம் அந்நியராகி ஆறு மாதங்களாகிவிட்டன. எங்கள் சர்க்கார் எங்களை நியாயமாக நடத்தும் என்பதில் எங்களுக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது. அவசியப்பட்டால் எங்கள் உரிமைகளைச் சத்தியப் பாதையில் போராடிப் பெற்றுக் கொள்ள எங்களுக்கு உறுதி உண்டு. எங்கள் நிலைக்காக நீங்கள் இரங்க வேண்டாம்'' என்று கூறினார்.

தொடர்ந்து லியாகத் அலிகான், ''உங்களுக்கு என்ன வேண்டும் என்று சொல்லுங்கள் - எது வேண்டுமானாலும் செய்கிறேன்'' என்று கேட்டபோது, ''எங்களுக்கு வேறு ஒன்றும் செய்யவேண்டாம் - ஒன்றை மட்டும் செய்யுங்கள்! எங்கள் நாட்டில் எது நடந்தாலும் எங்களுக்காகக் கவலைப் படாமல், பாகிஸ்தான் நாட்டில் வாழும் சிறுபான்மை இந்து மக்களின் நலனுக்கு ஆவன செய்திட வேண்டும்! எக்காரணம் கொண்டும் அவர்களுக்கு எத்தகைய இடையூறும் இழைக்கக் கூடாது. இது ஒன்றே நீங்கள் எங்களுக்காகச் செய்ய வேண்டிய உதவி'' என்று காயிதே மில்லத் பதிலளித்தாராம். இந்த நிகழ்ச்சிகளை





‘முரசொலி’ புகைப்படக் கலைஞர் ராஜேஷ் - ஜூலியட் நிர்மலா திருமணத்தில், 24.1.2000 அன்று, பேராசிரியர் - மற்றும் மு.க.ஸ்டாலினுடன் கலந்து கொண்டேன்.

யெல்லாம் அந்த விழாவிலே எடுத்துக் கூறி என் உரையை நிறைவு செய்தேன்.

★ ★ ★

“முரசொலி”யில் பதினைந்து ஆண்டு காலத்திற்கு மேலாக புகைப்படக் கலைஞராகப் பணியாற்றி வருபவர் தம்பி **ராஜேஷ்.** நான் ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் - நான் கலந்து கொள்கின்ற நிகழ்ச்சிகள், சுற்றுப் பயணங்கள் ஆகியவற்றில் தவறாமல் பங்கேற்று, புகைப்படங்களை எடுத்து, முரசொலி இதழில் அந்தப் படங்கள் வெளிவரப் பணி செய்து வருகிறார்.

24-1-2000 அன்று அவருக்கும், ஓய்வு பெற்ற வட்டாட்சியர் தஞ்சை லூர்துசாமி அவர்களின் செல்வி **ஜூலியட் நிர்மலா** விற்கும் நடைபெற்ற திருமண வரவேற்பு விழாவில் நானும், பொதுச் செயலாளர் **பேராசிரியரும்,** மேயர் தம்பி **மு.கஸ்டாலினும்** கலந்துகொண்டு வாழ்த்தினோம்.

வாழ்த்தியவர்கள் எல்லாம் தம்பி ராஜேஷ் கட்சியிலே எவ்வாறு பணியாற்றுகிறார் என்பதைப்பற்றிப் பேசியபோது, நான் அவருடைய தந்தையாரைப் பற்றி அந்த விழாவிலே பேசினேன்.



ஆல்பர்ட் தங்கையா

தஞ்சை மாவட்டத்தில் ஒருமுறை பெரும் புயல் அடித்து பெருத்த சேதம் ஏற்பட்டபோது, நானும், பேராசிரியரும் சிறைச் சாலையிலே இருந்தோம். சிறையிலிருந்து விடுதலை பெற்றவுடன், புயலால் சேத மடைந்த பகுதிகளுக்கெல்லாம் சுற்றுப் பயணம் செய்து, நிதி வசூலித்து, கழகத்தின் சார்பிலே நிதி வழங்கி நிவாரணப் பணிகளிலே ஈடுபட்டோம். அந்தச் சுற்றுப் பயணத்திலே ஈடுபட்டு நாங்கள் சென்ற போது, திருத்துறைப்பூண்டி அருகில் போலீஸ் உடை அணிந்த ஒருவர் எங்கள் வேனை நிறுத்தி, எங்களுக்கு வணக்கம் செலுத்திவிட்டு, கையிலே புயல் நிவாரண நிதியும் கொடுத்தார். அந்தப் புகைப்படம் பின்னர் எப்படியோ அ.தி.மு.க. ஆட்சியாளர்களுக்குக் கிடைத்து, ''எப்படி கருணாநிதி கையிலே புயல் நிவாரண நிதியை நீ கொடுக்கலாம்? என்று அவரை அந்த ஆட்சியிலே பணி நீக்கம் செய்தார்கள்.

அதை அவர் தாங்கிக் கொண்டார். அதற்குப் பிறகு விசாரணை நடைபெற்று, ஏழாண்டு காலப் பணி நீக்கத்திற்குப் பிறகு, மீண்டும் பணியிலே சேர்ந்தார். அவருடைய பெயர் **ஆல்பர்ட் தங்கையா.** காவல்துறையிலே பணியாற்றியவர். அவருடைய அருமை மகன் தான் தற்போது முரசொலியில் புகைப்படக் கலைஞராகப் பணியாற்றும் ராஜேஷ். இந்த நிகழ்ச்சியை அந்த விழாவிலே நான் குறிப்பிட்டு, தந்தையையும், மணமக்களையும் வாழ்த்தினேன்.

★ ★ ★

2-3-2001 அன்று **'சன்'** தொலைக்காட்சி நிறுவனத்தின் சார்பில் குஜராத் நிவாரண நிதிக்காக அந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர், என் அருமைப் பேரன், **கலாநிதி மாறன்**



குன்றக்குடியில் நான் திறந்து வைத்த தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபம்.

5 கோடியே 15 லட்சத்து 59 ஆயிரத்து 14 ரூபாய்க்கான காசோலையை என்னிடம் வழங்கினார்.

கலாநிதி மாறனை எங்கள் வீட்டில் "புகழ்" என்றும், தயாநிதி **மாறனை "அன்பு"** என்றும் அழைப்போம். அவர்களின் தந்தை முரசொலி மாறனே நான் தூக்கி வளர்த்த பிள்ளை. அந்தப் பிள்ளையின் பிள்ளை, தான் நடத்தும் நிறுவனத்தின் சார்பில், 5 கோடி ரூபாய்க்கு மேற்பட்டத் தொகையினை நிவாரண நிதிக்காக அளித்தபோது, நான் அடைந்த மகிழ்ச்சியினை நான்தான் அறிவேன்.

குஜராத் நில நடுக்க நிதியாக முதலில் 27-1-2001 அன்று அந்த மாநில முதல்வருக்கு 5 கோடி ரூபாயை நான் அனுப்பி வைத்தேன். அதன் பிறகு 5 கோடியே 64 லட்சம் ரூபாய் மதிப்புள்ள போர்வைகள், ஜமக்காளங்கள், உயிர்காக்கும் மருந்துகள் போன்ற நிவாரணப் பொருட்கள் வாங்கப்பட்டு, குஜராத் மாநிலத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அதன் பிறகு தமிழக அரசின் சார்பில் வசூல் செய்த 30 கோடி ரூபாய்க்கான காசோலையை 6-3-2001 அன்று மத்திய அமைச்சர், தம்பி **முரசொலி மாறன்** மூலமாக மத்திய அரசுக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்பட்டது.

ஆகமொத்தம் தமிழகத்தின் சார்பாக, குஜராத் மாநில நிவாரண நிதிக்காக, 40 கோடியே 64 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. தமிழக அரசின் இந்த நிதியினை முரசொலி மாறன் பிரதமர் வாஜ்பயிடம் அளித்தார்.




"புகழ்" என்று எங்கள் வீட்டார் அழைக்கும் தம்பி கலாநிதி மாறன், 'சன்' தொலைக்காட்சி சார்பில், குஜராத் புயல் நிவாரண நிதிக்காக, ரூபாய் 5 கோடிக்கும் அதிகமான தொகையை என்னிடம் அளித்தார்.

2-3-2001 அன்று பிரதமர் **வாஜ்பய்** அவர்களுக்கும், நிதியமைச்சராக இருந்த **யஷ்வந்த் சின்கா** அவர்களுக்கும் நான் எழுதிய கடிதத்தில், அடுத்து வருகின்ற நாடாளு மன்றக் கூட்டத் தொடரிலேயே சேது சமுத்திரத் திட்டத்திற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு பற்றிய அறிவிப்பினைச் செய்திட வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன்.

3ஆம் தேதியன்று, காலையில் திருச்சியில் நடைபெற்ற கழக **இளைஞர் அணி** அமைப் பாளர்கள் கூட்டத்திலும் - அன்று மாலையில் வணிக வளாகத் திறப்பு விழா விலும் - மகளிர் சுய உதவிக் குழுக்கள் மாநாட்டிலும் - 4ஆம் தேதியன்று, காலையில் சேலத்தில், அரசினர் கலைக் கல்லூரி நூற்றாண்டு விழாக் கட்டிடத்தின் முதல் தளத் திறப்பு விழா - அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நவீன அறுவை சிகிச்சைக் கட்டிடத் திறப்பு விழா - பெரியார் பல்கலைக் கழகக் கட்டிடத் திறப்பு விழா ஆகியவற்றில் கலந்து கொண்டேன்.

11-3-2001 அன்று மதுரையில் தமுக்கம் மைதானத்தில் நடைபெற்ற கிராமக் கோயில் பூசாரிகள் நான்காவது மாநில மாநாட்டிலும் - அன்று மாலையில் அமைப்புசாரா தொழி லாளர் நல வாரியப் பயனாளிகளுக்கு உதவித் தொகை



3.3.2001 அன்று, திருச்சியில் நடைபெற்ற தி.மு.கழக இளைஞர் அணி அமைப்பாளர் கூட்டத்தில் கலந்துகொண்ட எனக்குப் பொன்னாடை அணிவித்தார், மு.க.ஸ்டாலின்.


வழங்கும் விழாவிலும் - இரவு பொதுக் கூட்டத்திலும் கலந்து கொண்டேன்.

மறுநாள் 12ஆம்தேதியன்று, குன்றக்குடியில் நடைபெற்ற தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணி மண்டபத் திறப்பு விழாவிலே கலந்து கொண்டேன்.

★ ★ ★

தமிழக மீனவர்களின்மீது இலங்கை ராணுவத்தினரின் தாக்குதலும், அடிக்கடி தமிழக மீனவர்களைச் சுட்டுக் கொல்வதும் தொடர்ந்து நடைபெற்றே வந்தது. அந்த வகையில் 16-3-2001 அன்று நாகை மாவட்டத்தைச் சேர்ந்த **கோபி, சசிகுமார், குமார்** ஆகிய மூவரும் மீன் பிடிக்கச் சென்றபோது, இலங்கை ராணுவத்தினர் அவர்களை நோக்கிச் சுட்டதில் கோபியின் உடலைக் குண்டு துளைத்து, அங்கேயே பிணமானார். தி.மு.க. இளைஞர் அணியின் சார்பில், மேயர் மு.க. ஸ்டாலின் தலைமையில் அதனை வன்மையாகக் கண்டிக்கும் வகையில், சென்னையில் இலங்கை அரசின் தூதுவரகத்தின் முன்னால் 20-3-2001 அன்று காலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

★ ★ ★



தமிழகத்தின் சார்பில், குஜராத் மாநில நிவாரண நிதியாக, 40 கோடியே 64 இலட்சம் ரூபாயை பிரதமர் வாஜ்பயிடம் அளித்தார், முரசொலி மாறன்.

6-4-2001 அன்று மகாவீரர் 2600-வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னையில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்டு தொடங்கி வைத்தேன்.

19-4-2001 அன்று தர்மபுரியில் உள்ள நெடுஞ்சாலைத் துறை பயணியர் விடுதியில், கழக ஆட்சியில் அமைச்சராக இருந்த **முல்லைவேந்தன்** முன்னிலையில், **அன்புமணி** என்ற அறநிலையத் துறை உதவி ஆணையாளர் தாக்கப்பட்டது குறித்து பத்திரிகைகளில் ஒரு செய்தி வந்தது. அதுபற்றி எதிர்க் கட்சிகள் கடுமையாக விமர்சனம் செய்த நிலையில், உண்மை நிலவரத்தை எனக்குத் தெரிவிக்க வேண்டுமென்று மாநில குற்றப் புலனாய்வு (சி.பி., சி.ஐ.டி.) விசாரணைக்கு உத்தரவிட்டதோடு, அந்த விசாரணையின் முடிவு வந்ததும் பாரபட்சமில்லாமல் உரிய நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் அறிவித்திருந்தேன். அதைப் போலவே விசாரணை செய்து குற்றப் புலனாய்வுத் துறை அளித்த முதல் நிலை அறிக்கையில், அன்புமணிமீது நடைபெற்ற தாக்குதல் அமைச்சர் முல்லைவேந்தன் முன்னிலையில் நடைபெற்றது என்பதை அறிந்து, அதற்குப் பொறுப்பேற்று முல்லை வேந்தனை

அமைச்சர் பதவியில் இருந்து ராஜினாமா செய்யவேண்டு மென்று கேட்டுக் கொண்டேன். அவரும் கழகத் தலைமைக்கு கட்டுப்பட்டு அமைச்சர் பதவியிலிருந்து ராஜினாமா செய்த போதிலும், கழகப் பணிகளிலும், சட்டப் பேரவை உறுப்பினர் பணிகளிலும் முன்னைவிடத் தீவிரமாக ஆர்வத்துடன் பணியாற்றினார்.

★ ★ ★

தமிழகத்தில் பொதுத் தேர்தல் பணிகள் விரைவாக நடந்து கொண்டிருந்த கால கட்டத்தில், அகில இந்திய அளவில் டெஹல்கா என்ற இணைய தளம் மூலம் வெளியான பாது காப்புத் துறை விவகாரங்களுக்காக மத்திய பா.ஜ.க. அரசு உடனடியாகப் பதவி விலக வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியும், அதன் தலைவர் திருமதி **சோனியா காந்தி** அவர்களும் குரல் கொடுத்தனர். பாதுகாப்புத் துறை விவகாரங்கள் குறித்து விரிவான விசாரணை நடத்த உச்ச நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி **கே.வெங்கடசாமியை** வாஜ்பய் அரசு நியமித்தது.

டெஹல்கா வெளியிட்ட தகவல்படி, உத்தேச ஆயுத பேரத்தில் அரசியல்வாதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் இடையே கள்ளப் பணம் கைமாறி உள்ளதா? ஆயுத பேரம் மற்றும் பிற கொள்முதல்களில் ஊழல் நடைபெற்றுள்ளதா? தேசப் பாதுகாப்புச் சட்டத்தின் விதிமுறைகளுக்கு முரணாக பேரங்கள் நடைபெற்றுள்ளனவா? அப்படி யாராவது கையூட்டுப் பெற்றிருந்தால், அவர்கள்மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக் கைகள் என்ன? இது பற்றியெல்லாம் நீதிபதி விசாரித்து நான்கு மாதங்களுக்குள் அரசுக்கு அறிக்கை தரவேண்டும். நீதி விசாரணைக்கு உத்தரவிட்ட பிறகும், வாஜ்பய் அரசு உடனடி யாகப் பதவி விலகக்கோரி, காங்கிரஸ் கட்சி போராட்டம் தொடங்கியது. 2-4-2001 அன்று திருச்சியில் பா.ஜ.க. சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்ட திரு. **அத்வானி** அவர்கள் அரசுமீது எந்தக் குற்றமும் கூற முடியாத தால் டெஹல்காவைப் பிரச்சினையாக எதிர்க்கட்சிகள் எழுப்பியிருக்கிறார்கள் என்று தெரிவித்தார்.

★ ★ ★



சென்னையில், 6.4.2001 அன்று, மகாவீரர் 2600-வது பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற மாநாட்டைத் தொடங்கி வைத்தேன்!

''நெஞ்சுக்கு நீதி''யின் ஐந்தாம் பாக முடிவில் நான் சுருக்கமாகத் தெரிவித்திருப்பதைப்போல, 2001ஆம் ஆண்டு நடை பெற்ற சட்டப் பேரவை பொதுத் தேர்தலில் தி.மு. கழகக் கூட்டணியின் சார்பில் தி.மு.க. 177 இடங்களிலும், பா.ஜ.க. 21 இடங்களிலும், ம.தி.மு.க. 21 இடங்களிலும், புதிய தமிழகம் 10 இடங்களிலும், விடுதலை சிறுத்தைகள் 8 இடங்களிலும், மக்கள் தமிழ் தேசம் 6 இடங்களிலும், தி.மு.க. ஆதரவு நண்பர்கள் 3 இடங்களி லும், தமிழக முஸ்லீம் ஐக்கிய ஜமாத் 3 இடங் களிலும், எம்.ஜி.ஆர். கழகம் 2 இடங்களிலும், முத்தரையர் சங்கம், தொண்டர் காங்கிரஸ், உழவர் உழைப்பாளர் கட்சி, கொங்கு நாடு மக்கள் கட்சி, பார்வர்டு பிளாக் ஆகிய கட்சிகள் தலா ஓர் இடத்திலுமாகப் போட்டி யிடுவதென ஒப்பந்தங்கள் 18-3-2001 அன்று கையெழுத்தாகின. தி.மு.க. வுடன் ம.தி.மு.க. மேலும் அதிக இடங்களைப் பெறவேண்டுமென்று அந்தக் கட்சியின் சார்பில் ஒரு சிலர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஆனால் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட வைகோ செய்தியாளர்களிடம் கூறும்போது, பூரண மகிழ்ச்சி என்றும், ''பேச்சுவார்த்தையின்போது எங்கள் தேவையறிந்து தலைவர் கலைஞர் அதனைப் பூர்த்தி செய்துள்ளார். மகிழ்ச்சி என்றாலே திருப்தி எல்லாம் அதற்குள் அடக்கம்'' என்றும் தெரிவித்தார்.


ஆனால் எந்தெந்த தொகுதிகள் யார் யாருக்கெனப் பிரித்துக் கொள்கின்ற நிலையில் தி.மு.க.விற்கும் ம.தி.மு.க. விற்கும் இடையே ஒப்பந்தம் காண முடியாமல் போயிற்று. ம.தி.மு.க. சார்பில் 43 தொகுதிகளின் பட்டியலைக் கொடுத்து, அதிலே 21

தொகுதிகளை ம.தி.மு.க.விற்கு வழங்கும்படிக் கூறினர். தி.மு.கழகம் அந்த 43 தொகுதிகளில் பெரும்பாலானவை வேறு வேறு தோழமைக் கட்சிகளுக்கு பேச்சுவார்த்தையின் போது தரப்பட்டு விட்டதால், அவர்கள் கொடுத்த 43 பேர் கொண்ட பட்டியலில் 18 தொகுதிகளையும், வேறு மூன்று தொகுதிகள் - அவர்களுடைய பட்டியலில் இடம் பெறாத தொகுதிகளையும் வழங்கிட முன் வந்தோம்.

ஆனால் வைகோ, அவர் கொடுத்த 43 தொகுதிக்குள் நாங்கள் 12 தொகுதிகளைத்தான் ம.தி.மு.க.விற்கு வழங்கிய தாக செய்தியாளர்களிடம் தெரிவித்தார். நான் செய்தியாளர் களை அழைத்து, ம.தி.மு.க. சார்பில் கையெழுத்திட்டுக் கொடுத்த கடிதத்தையே செய்தியாளர்களிடம் காட்டினேன்.

எப்படியோ, அந்தத் தேர்தலில் தி.மு.க.வுக்கும், ம.தி.மு.க.வுக்கும் இடையே - தொகுதிப் பங்கீட்டில் எத்தனை இடங்கள் என்பதில் ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு, எந்தெந்த தொகுதிகள் என்பதில் இழுபறி நிலை ஏற்பட்டு - இறுதியாக உறவே இல்லாத அளவிற்கு ஆகிவிட்டது. அந்தத் தேர்தலில் ம.தி.மு.க. எந்த அணியுடனும் சேராமல், பா.ஜ.க. போட்டியிடும் 21 தொகுதிகள் தவிர, மற்ற 213 தொகுதிகளில் போட்டியிட்டது. ம.தி.மு.க.வில் சிறப்பாகப் பணியாற்றி வந்த அதன் செய்தித் தொடர்பாளர் தம்பி **கே.எஸ்.இராதா கிருஷ்ணன்,** ம.தி.மு.க. அந்தத் தேர்தலில் எடுத்த முடிவு பிடிக்காமல், அங்கிருந்து விலகி கழகத்தில் தன்னை இணைத்துக்கொண்டு, தன்னலம் பாராது திறம்பட இன்றளவும் பணியாற்றி வருகிறார்.

இதைப்போலவே அ.தி.மு.க. அணியிலும் குழப்பமான சூழ்நிலை. அந்த அணியிலே சேரும் என்று உறுதியாக நம்பப் பட்ட த.மா.கா. வும், காங்கிரசும் திரிசங்கு சொர்க்கத்தில் நின்றன. த.மா.கா. சார்பில் நால்வர் குழு ஒன்று ஜெயலலி தாவைச் சந்தித்துப் பேசியும், பலன் விளையவில்லை. அதிலும் அ.தி.மு.க.வில் பா.ம.க. சேர்ந்த பிறகு, அ.தி.மு.க., த.மா.கா.விற்கு அவ்வளவு முக்கியத்துவம் தர முன்வரவில்லை. பா.ம.க. எப்போதும்போல, அ.தி.மு.க.வோடு முதலில் வந்து பேச்சுவார்த்தை நடத்தி 27 இடங்களைப் பெற்றுக்



எஸ்றா சற்குணம்

கொண்டதுடன், புதுவையில் அ.தி.மு.க., பா.ம.க. கூட்டணி வெற்றி பெற்றால், முதல் இரண்டரை ஆண்டுக் காலம் பா.ம.க.வின் ஆட்சியும், அடுத்த இரண்டரை ஆண்டுக் காலம் அ.தி.மு.க. அரசும் அமைவதற்கான உடன்பாடும் ஏற்பட்டது.

7-3-2001 அன்று "சோக உண்மை" என்ற தலைப்பில், த.மா.கா., காங்கிரசை கிண்டல் செய்து ''தினமணி'' தலையங்கம் எழுதியது.

2-4-2001 அன்று த.மா.கா. தலைவர், மூப்பனார் அவர்களின் இல்லத்துக்கு அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா சென்றார். பிறகு அ.தி.மு.க., பா.ம.க. இணைந்த கூட்டணியுடன் த.மா.கா., காங்கிரஸ் இருவரும் இணைந்து கூட்டணி அமைப்ப தென்றும், ஆனால் புதுவையில் அ.தி.மு.க., பா.ம.க., கூட்டணியில் காங்கிரஸ், த.மா.கா., சேராமல் தனித்து நிற்பது என்றும் ஒரு முடிவினை அறிவித்தார்கள். ஆனால் அ.தி.மு.க., த.மா.கா. கூட்டணிக்கு ப.சிதம்பரம் எதிர்ப்பு தெரிவித்தார்.

அ.தி.மு.க.வுடன் த.மா.கா. சேர்ந்த நிலைபற்றி ''பொய்த்தது நம்பிக்கை'' என்ற தலைப்பில் 13-3-2001 அன்று தலையங்கம் எழுதிய தினமணி, ''ஜெயலலிதாவுக்கு யோகம் அடித்திருக் கிறது - இது நம்ப முடியாத ஆச்சர்யம்தான்! ஆயினும் நடந்திருக்கிறது, ஜோதிட சாஸ்திரத்தில் விபரீத ராஜயோகம் என்ற விநோதமான யோகம் உண்டு, அந்த ரகத்தைச் சேர்ந்தது அ.தி.மு.க. வின் இந்த யோகம்!'' என்று குறிப்பிட்டிருந்தது.

த.மா.கா.வும், காங்கிரஸ் கட்சியும் அ.தி.மு.க.வோடு தோழமை கொண்டது, அந்தக் கட்சியிலே ஒரு சாராருக்குப் பிடிக்கவில்லை. குறிப்பாக **ப.சிதம்பரம்** அவர்களுக்கும், அவரது ஆதரவாளர்களுக்கும் அது பிடிக்காததால், காங்கிரஸ்

கட்சியில் இருந்தே பிரிந்து வந்து, **"த.மா.கா. ஜனநாயகப் பேரவை"** என்ற அமைப்பை நிறுவினார். அதில் ப.சிதம்பரம் அவர்களும், சட்டப் பேரவை உறுப்பினர்களாக இருந்த புரசை ரெங்கநாதன், காரைக்குடி சுந்தரம் போன்றவர்களும் முக்கிய மானவர்களாவர்.

சிதம்பரம் அவர்கள் அறிவாலயத்திற்கு வந்து என்னைச் சந்தித்தார். தி.மு.கழக அணிக்கு ஆதரவாக அந்தத் தேர்தலில் பிரச்சாரம் செய்யப் போவதாகவும் சிதம்பரம் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். அவரது முடிவினை வரவேற்று நான் பாராட்டினேன். சிதம்பரம் அவர்களின் முடிவினை இலக்கியச் செல்வர் **குமரி அனந்தன்** அவர்களும் வரவேற்று கருத்து தெரிவித்தார். சிதம்பரம் அவர்களுக்கு முன்பாகவே குமரிஅனந்தன் காங்கிரசிலிருந்து விலகி, "தொண்டர் காங்கிரஸ்" என்ற அமைப்பை உருவாக்கி தி.மு.கழக அணியுடன் இணைந்து அந்தத் தேர்தலில் போட்டி யிட்டார்.

இறுதியாக தி.மு.கழக அணியின் சார்பில் தி.மு.க. 167 இடங்களிலும், பா.ஜ.க. 21 இடங்களிலும், புதிய தமிழகம் 10 இடங்களிலும், விடுதலைச் சிறுத்தைகள் 8 இடங்களிலும், மக்கள் தமிழ் தேசம் 6 இடங்களிலும், புதிய நீதிக் கட்சி 5 இடங்களிலும், தமிழக முஸ்லீம் ஐக்கிய ஜமாத் 3 இடங்களிலும், எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. 3 இடங்களிலும், தி.மு.க. ஆதரவு நண்பர்கள் (ப. சிதம்பரம் அவர்கள் தலைமையிலான தமாகா ஜனநாயகப் பேரவையினர்) 2 இடங்களிலும், எம்.ஜி.ஆர். கழகம் 2 இடங்களிலும், தொண்டர் காங்கிரஸ், உழவர் உழைப்பாளர் கட்சி, கொங்கு நாடு மக்கள் கட்சி, முத்தரையர் சங்கம், தமிழர் பூமி, அகில இந்திய மூவேந்தர் முன்னேற்றக் கழகம், தமிழ் பாட்டாளி மக்கள் கழகம் ஆகிய கட்சிகள் தலா ஒரு இடத்திலும் போட்டியிட்டன. எந்தெந்த தொகுதிகள் யார் யாருக்கு என்றும் பேசி முடிவு காணப்பட்டது.

புதுவை மாநிலத்தைப் பொறுத்தவரையில் மொத்தம் உள்ள 30 தொகுதிகளில், தி.மு.க. 13 இடங்களிலும், புதுவை மக்கள் காங்கிரஸ் 9 இடங்களிலும், பா.ஜ.க. 5 இடங்களிலும், விடுதலை சிறுத்தைகள் 2 இடங்களிலும், ஜனதா தளம்

(முக்கியம்) 1 இடத்திலும் போட்டியிடுவதென முடிவெடுக்கப் பட்டது.

இதிலே அறநிலையத் துறை அமைச்சராக இருந்த முனைவர் தமிழ்க்குடிமகன் அவர்களின் தொகுதியான இளையான்குடி, கூட்டணி அமைத்தபோது, மக்கள் தமிழ் தேசம் கட்சிக்கு ஒதுக்கப்பட்டுவிட்டது. அதனால் ஆத்திரமடைந்த தமிழ்க்குடி மகன், தனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு, 1-4-2001 அன்று ஜெயலலிதாவைச் சந்தித்து, அ.தி.மு.க.வில் தன்னை உறுப்பினராக இணைத்துக் கொண்டார். தொகுதியில் போட்டியிட வாய்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு தமிழ்க்குடிமகன் அ.தி.மு.க.வில் இணைந்தபோதிலும், அவருடைய பெயர் அ.தி.மு.க. பட்டியலிலே இடம் பெறவில்லை.

அ.தி.மு.க. கூட்டணியின் சார்பில் அந்தத் தேர்தலில் அ.தி.மு.க. 141 இடங்களிலும், த.மா.கா. 32 இடங்களிலும், பா.ம.க. 27 இடங்களிலும், காங்கிரஸ் 15 இடங்களிலும், கம்யூனிஸ்ட் 8 இடங்களிலும், மார்க்சிஸ்ட் 8 இடங்களிலும், இந்திய தேசிய லீக், பார்வார்டு பிளாக், த.மு.க., ஆகிய கட்சிகள் தலா ஒரு இடத்திலும் போட்டியிட்டன.

அ.தி.மு.க. அணியிலும் குழப்பமான சூழ்நிலை! இன்னும் சொல்லப்போனால், தோழமைக் கட்சிகளுடன் எந்தெந்த தொகுதிகள் என்று பிரித்துக் கொள்வதற்கு முன்பாகவே அ.தி.மு.க., தான் நிற்கும் தொகுதிகளின் பெயர்களை எல்லாம் தன்னிச்சையாக அறிவித்துவிட்டது. அவ்வாறு அறிவித்தது, த.மா.கா., காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகளை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

குறிப்பாக, பாரம்பரியமாக காங்கிரஸ், த.மா.கா. கோட்டையாகத் திகழும் திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, விருது நகர் பகுதிகளில் அந்தக் கட்சிக்கு உரிய தொகுதிகள் ஒதுக்கப்படவில்லை. காங்கிரஸ் கட்சியின் முக்கிய தொகுதிகளைக்கூட ஜெயலலிதா அறிவித்துவிட்டாரே என்று ஆதங்கப்பட்டனர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நல்லகண்ணு கூறும் போது, ‘‘எங்கள் கட்சி வசமுள்ள திருப்பூர், பெருந்துறை,

நாங்குனேரி தொகுதிகளில்கூட அ.தி.மு.க. போட்டியிடு மென்று அறிவித்தது சரியல்ல'' என்றார்.

த.மா.கா. தலைமையை ஜெயலலிதா அவமானப்படுத்தி யுள்ளதைக் கண்டு **''நெஞ்சில் ரத்தம் கசிகிறது''** என்று த.மா.கா. ஜனநாயகப் பேரவையின் தலைவர் ப. சிதம்பரம் கூறினார்.

தமிழகச் சட்டப் பேரவைக்கான தேர்தல் தேதி 10-5-2001 என்றும், வேட்பு மனு தாக்கல் ஏப்ரல் 16 என்றும், வாக்கு எண்ணிக்கை மே 13இல் நடைபெறும் என்றும் தேர்தல் ஆணையம் அறிவித்தது.

தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தேர்தல் பிரச்சார தொடக்க விழா தி.மு.கழக மாநாடு திருச்சியில் கொட்டப் பட்டு அண்ணாநகரில், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. வளாகத்தில், அன்பில் பொய்யாமொழி அரங்கத்தில் 9-4-2001 அன்று மாலையில் நடைபெற்றது.

என்னுடைய தலைமையில் நடைபெற்ற அந்த மாநாட்டில், பொதுச் செயலாளர் பேராசிரியர், ஆர்க்காடு வீராசாமி, மத்திய அமைச்சராக இருந்த ராதாகிருஷ்ணன் மற்றும் ஆர்.எம். வீரப்பன், எஸ்.திருநாவுக்கரசர், டாக்டர் கிருஷ்ணசாமி, ஆர். திருமாவளவன், எஸ். கண்ணப்பன், கு.ப.கிருஷ்ணன், குமரி அனந்தன், ஜே.எம். ஆரூண், குழ.செல்லையா, கு. செல்லமுத்து, ஏ.எம். ராஜா ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினோம். மாநாட்டு ஏற்பாடுகளை தம்பி கே.என்.நேரு அவருக்கே உரிய தன்மையில் மிகச்சிறப்பாகச் செய்திருந்தார். வழக்கம்போல இசைமுரசு நாகூர் அனீபா இசை நிகழ்ச்சியோடு மாநாடு தொடங்கியது.

11-4-2001 அன்று கிறித்தவ சமுதாய பல்வேறு அமைப்பு களைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் பேராயர் **எஸ்றா சற்குணம்** அவர்கள் தலைமையில் என்னையும், பேராசிரி யரையும் சந்தித்து, கழகக் கூட்டணிக்கு தங்கள் ஆதரவைத் தெரிவித்தார்கள்.

14. தேர்தலும், ஏமாந்த வாக்காளர்களும்!

14-4-2001 அன்று சென்னையில், சேப்பாக்கத்தில் பொதுச் செயலாளர் **பேராசிரியர்** அவர்கள் தலைமையிலும், **ஆற்காடு வீராசாமி, முரசொலி மாறன், ப.சிதம்பரம், மேயர் மு.க.ஸ்டாலின், க.சுந்தரம், சுப்புலட்சுமி ஜெகதீசன்** ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கழக வேட்பாளர்களின் பட்டியலைப் படித்தேன்.

அந்தப் பட்டியல்படி ஏற்கனவே சட்டப் பேரவை உறுப்பினர்களாக இருந்தவர்கள் 93 பேர் - புதியவர்கள் 74 பேர் - 14 பேர் மகளிர் - 81 பேர் பட்டதாரிகள் - அதிலும் 33 பேர் முதுகலைப் பட்டதாரிகள் - வழக்கறிஞர்கள் 26 பேர் - டாக்டர்கள் 5 பேர்.

சென்னையில் சேப்பாக்கம் தொகுதியில் நானும், துறைமுகம் தொகுதியில் பொதுச் செயலாளர் பேராசிரியரும், அண்ணா நகர் தொகுதியில் பொருளாளர் ஆற்காடு வீராசாமியும், ஆயிரம்விளக்கு தொகுதி யில் தம்பி மு.க.ஸ்டாலினும் போட்டியிட்டோம்.

தி.மு.கழகம் வெற்றி பெற்றிருந்த இடங்களில் 26 தொகுதிகளைத் தோழமைக் கட்சிகளுக்கு விட்டுக் கொடுத்துக் கூட்டணி அமைந்தது. அ.தி.மு.க.வோ, த.மா.கா. விடமிருந்து 21 தொகுதிகளையும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியிடமிருந்து 3 தொகுதிகளையும் பறித்துக் கொண்டு கூட்டணி அமைத்தது.

அந்தத் தேர்தலில் தி.மு.கழகத்தின்மீது வேறு எந்தக் குற்றச் சாட்டையும் எதிர் அணியினரால் சொல்ல முடியவில்லை.



சேப்பாக்கம் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் திரண்டிருந்த மக்கள் பெருவெள்ளம்!

திருப்பித் திருப்பி அவர்கள் கூறியது, ''வாஜ்பாய் அவர்கள் தலைமையில் உள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தி.மு. கழகம் எப்படி இடம் பெறலாம்?'' என்பது தான்!

2001ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்பு, டான்சி நில பேர ஊழல் வழக்கில் தனி நீதிமன்றம் 9-10-2000 அன்று ஜெய லலிதாவுக்கு மூன்றாண்டு சிறைத் தண்டனையை விதித்திருந்தது. இதையடுத்து இரண்டாண்டுகளுக்குமேல் சிறைத் தண்டனை பெற்றவர்கள் தேர்தலில் போட்டி யிட முடியாது என்ற விதிமுறைப்படி ''ஜெயலலிதாவும் தேர்தலில் போட்டியிட முடியாது'' என்று சட்ட நிபுணர்கள் கூறினார்கள்.

அந்த நிலையில் ஜெயலலிதா சென்னை உயர் நீதிமன்றத்தில் 3-11-2000 அன்று ஒரு மனுவைத் தாக்கல் செய்தார். அதில் தனி நீதி மன்றம் அளித்தத் தீர்ப்பை நிறுத்தி வைத்து, தன்னைத் தேர்தலிலே போட்டியிட அனுமதிக்குமாறு கோரியிருந்தார்.

அந்த மனுவை விசாரித்த நீதிபதி **மலை சுப்பிரமணியன்,** ஜெயலலிதாவின் மனுவைத் தள்ளுபடி செய்து 11-4-2001 அன்று தீர்ப்பளித்தார். இந்தியத் தண்டனைச் சட்டம் 409வது பிரிவின்கீழ் குற்றவாளி என்று தீர்ப்பு கூறப்பட்டிருந்தால், அதனை தம்மால் நிறுத்திவைக்க முடியும் என்றும், ஆனால் அந்த வழக்கில் ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் தனி நீதி மன்றம் கூறியிருக்கும் தீர்ப்பை தன்னால் நிறுத்தி வைக்க முடியாது



என்றும் நீதிபதி கூறி, ஜெயலலிதாவின் மனுவைத் தள்ளுபடி செய்தார்.

ஏற்கனவே தனி நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பால், ஜெயலலிதா தேர்தலில் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டால், அதனால் ஏற்படும் பிரச்சினைகளை இந்த நீதி மன்றத்தில் தெரிவிக்க வேண்டாம் என்றும், அதனை தேர்தல் ஆணையத்திடம் தெரிவிக்குமாறும் நீதிபதி தனது தீர்ப்பில் கூறியிருந்தார்.

அந்தத் தீர்ப்பு குறித்து தேர்தல் ஆணையம் 16-4-2001 அன்று பரிசீலித்தது. தலைமை தேர்தல் ஆணையராக அப்போதிருந்த திரு. **எம்.எஸ்.கில்** அவர்கள் தலைமையில் நடைபெற்ற அந்த ஆலோசனைக் கூட்டத்தில், தேர்தல் ஆணையர்கள் திரு.**கிருஷ்ண மூர்த்தி, திரு.லிங்டோ** ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அந்தக் கூட்டத்தில் உயர் நீதிமன்ற நீதிபதி மலை சுப்பிர மணியம் அவர்கள் அளித்த தீர்ப்பு விரிவாக ஆராயப்பட்டது. மேலும், அந்தத் தீர்ப்பு குறித்து இந்தியாவில் உள்ள மூத்த வழக்கறிஞர்கள் தெரிவித்த கருத்துக்களையும் பரிசீலித்தனர். இறுதியாக, ஊழல் குற்றவாளி என்ற தீர்ப்புக்கு நீதிமன்றம் தடை விதிக்காத நிலையில், சட்டசபை தேர்தலில் போட்டியிட ஜெயலலிதாவுக்கு தகுதி இல்லை என்று முடிவெடுக்கப்பட்டது.

டான்சி வழக்கில் ஜெயலலிதா அப்போது ஜாமீனில்தான் வெளியே இருந்தார். அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனையை

மட்டும்தான் நீதிமன்றம் நிறுத்தி வைத்திருந்ததே தவிர, அவர் குற்றவாளி என்று அளிக்கப்பட்ட தீர்ப்பை எந்த நீதிமன்றமும் நிறுத்தி வைக்கவில்லை. எனவே, அவர் "தேர்தலில் போட்டியிட முடியாது" என்று தான் டெல்லியில் தேர்தல் ஆணைய வட்டாரங்கள் தெரிவித்தன.


ஆனால் அதைப்பற்றி தேர்தல் ஆணையம் டெல்லியில் கலந்து பேசிக் கொண்டிருந்த அதே நாளில், கிருஷ்ணகிரி தொகுதியில் போட்டியிட ஜெயலலிதா வேட்பு மனுத் தாக்கல் செய்து விட்டார். மேலும் அதற்கடுத்த நாளான 17-4-2001 அன்று ஆண்டிப்பட்டி தொகுதியிலே வேட்பு மனு தாக்கல் செய்தார். வேட்பு மனு தாக்கல் செய்யும் கடைசி நாளன்று ஜெயலலிதா சார்பில் புதுக்கோட்டை தொகுதியிலும், புவனகிரி தொகுதியிலும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

ஏற்கனவே முதலமைச்சராக இருந்த ஜெயலலிதாவுக்கு ஒரு வேட்பாளர் இரண்டு தொகுதிகளுக்குமேல் போட்டியிட முடியாது என்பது நன்கு தெரியும். இருந்தாலும், நான்கு தொகுதிகளிலே அவர் வேட்பு மனுவைத் தாக்கல் செய்யக் காரணம், எப்படியும் தேர்தல் அதிகாரி தனது வேட்பு மனுவினைத் தள்ளுபடி செய்து விடுவார் - மக்களிடம் சென்று தன்னைத் தேர்தலில் போட்டியிடாமல் செய்துவிட்டார்கள் என்று பிரச்சாரம் செய்து, அதன் மூலம் மக்களின் பரிதாபத்தைச் சம்பாதிக்கலாம் என்று எண்ணி செயல்பட்டார். மக்களை ஏமாற்றுகின்ற அந்தத் தந்திரத்தை நம்முடைய பாமர மக்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அம்மன் கண்ணிலே இருந்து ரத்தம் கொட்டுகிறது என்றும், வேரிலே இருந்து பிள்ளையார் உதயமாகியிருக்கிறார் என்றும் செய்யப்படுகின்ற பிரச்சாரத்தை நம்பி ஏமாறுகின்ற நம்முடைய மக்களுக்கு ஜெயலலிதாவின் தந்திரத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை - என்பது ஆச்சரியமான ஒன்றல்லவே!

★ ★ ★

17ஆம் தேதியன்று, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையினை சென்னையில் நான் வெளியிட்டு



கழக வேட்பாளர்களான நெப்போலியனும், இயக்குநர் டி.ராஜேந்தரும்
பொன்னாடை அணிவித்து என்னிடம் வாழ்த்துப் பெற்றனர்


விட்டு, தேர்தல் பிரச்சாரத்தை அதே நாளில் சென்னையி லிருந்து தொடங்கினேன்.

பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களும், தம்பி ஸ்டாலினும், கழகத்திலே இருந்த கலையுலகப் பெருமக்களான சுப்ரீம் ஸ்டார் சரத்குமார், இயக்குநர் டி. ராஜேந்தர் ஆகியோரும் தேர்தல் பிரச்சாரத்தில் தீவிர மாக ஈடுபட்டனர். குறிப்பாக, நண்பர் **ப.சிதம்பரம்** அவர்கள் அந்தத் தேர்தலில் தி.மு.கழக அணிக்காகக் கடுமையானப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுப் பணியாற்றினார்.

ஜெயலலிதாவின் தேர்தல் பிரச்சாரம் எப்படி இருந்தது என்பதைப்பற்றி அப்போதே 20-4-2001 தேதிய **"டைம்ஸ் ஆப் இந்தியா"** ஏட்டில் **சுவாதிதாஸ்** எழுதிய சிறப்புச் செய்தி வருமாறு :-

PRESS SHOOED; ONE LUCKY

Hotel Madurai Ashok, where AIADMK leader Jayalalitha stayed, was virtually sealed to the media. While a select few were allowed inside, unwelcome visitors were unceremoniously escorted out.



கூட்டணிக் கட்சிகளின் தொகுதிகளையும் பறித்து – தன்னிச்சையாக வேட்பாளர் பட்டியலை வெளியிட்டது, அ.தி.மு.க.

When Jayalalitha's campaign began after filing of nomination in Theni Collectorate on Wednesday; press vehicles were pushed to almost the 100th position in the convoy. This left very little chance for the media to watch the interaction between the AIADMK supreme and the people from whom she was seeking votes.

Times of India photographer K. Sunil Prasad and another lensman from a Tamil paper, managed to reach her by hanging on to Periyakulam MP T.V. Dinakaran's Tata Sumo.

As the convoy stopped at a village and Jayalalitha offered money ranging from Rs. 5 to Rs. 1000 to the people, the Times of India photographer asked her why she was giving away money.

Jayalalitha, who rarely opens up to journalists explained: " You must be a north Indian. This is a custom here. It is a gift we offer as part of the Tamil New Year".

❁ ''அ.இ.அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா தங்கியிருந்த மதுரை அசோகா ஓட்டல் பத்திரிகையாளர்களுக்கு முற்றிலும் தடை செய்யப்பட்டிருந்தது. குறிப்பிட்ட சிலர் மட்டுமே உள்ளே அனுமதிக்கப்பட்டனர். வரவேற்கப் படாத பார்வையாளர்கள் மோசமான முறையில் வெளியேற்றப்பட்டனர்.

❁ ''புதன்கிழமை அன்று, தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் வேட்பு மனு தாக்கல் செய்தபிறகு,

ஜெயலலிதா பிரச்சாரத்தைத் தொடங்கியபோது, அவருடைய கார் வரிசையில், பத்திரிகையாளர்களின் வாகனங்கள் ஏறக்குறைய 100வது இடத்திலே இருந்தது. அதனால் அ.தி.மு.க. தலைவிக்கும் அவர் வாக்கு கேட்ட மக்களுக்கும் இடையே என்ன பேச்சுவார்த்தை நடந்தது என்பதை அறிந்து கொள்ளும் வாய்ப்பு பத்திரிகையாளர் களுக்குக் கிடைக்கவில்லை.

- ''இவற்றையும் மீறி ''டைம்ஸ் ஆப் இந்தியா'' புகைப்படக் கலைஞர் **கே. சுனில் பிரசாத்தும்,** தமிழ்ப் பத்திரிகை ஒன்றின் புகைப்படக் கலைஞர் ஒருவரும் பெரியகுளம் தொகுதி எம்.பி.யான டி.வி. தினகரனின் டாடா சுமோ காரில் தொங்கிக் கொண்டே சென்று ஜெயலலிதாவை நெருங்கினர்.

- ''ஜெயலலிதாவின் கார் வரிசை, கிராமம் ஒன்றில் நின்றபோது, ஜெயலலிதா அங்கிருந்த மக்களுக்கு ரூ.5 முதல் ரூ.1000 வரை அன்பளிப்பு வழங்கினார். அப்போது டைம்ஸ் ஆப் இந்தியா புகைப்பட நிபுணர் ஜெயலலி தாவிடம் ''பொது மக்களுக்கு ஏன் பணம் கொடுக் கிறீர்கள்?'' என்று கேட்டார்.

அதற்குப் பதிலளித்த - பத்திரிகையாளரிடம் அபூர்வமாகவே வாய் திறக்கும் ஜெயலலிதா, ''நீங்கள் ஒரு வடநாட்டுக்காரராக இருக்கவேண்டும். இது இங்கே ஒரு வழக்கம். இது தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு நாங்கள் அளிக்கும் பரிசு'' என்று சொன்னார். - என்று எழுதி இருந்தது, ''டைம்ஸ் ஆப் இந்தியா''

★ ★ ★

21-4-2001 அன்று சென்னையில் நான் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தபோது, அந்த வாரக் ''கல்கி'' வார இதழில் ஜெயலலிதா தோழமைக் கட்சிகளோடு எந்த அளவிற்குக் கூட்டணி அமைத்திருக்கிறார் என்பதைப்பற்றி ஒரு தலையங்கம் எழுதியிருப்பதைக் கூட்டத்தில் படித்துக் காட்டி னேன். அந்தத் தலையங்கத்தில் -

- ''கடந்தமுறை ஆட்சியில் இருந்த போது, அதிமுக தலைவி நிகழ்த்திய அதர்மங்கள் பரவலாக அனைவரும் அறிந்

THE TIMES OF INDIA

"பிரச்சாரத்திற்குச் சென்ற ஜெயலலிதா, கிராம மக்களுக்கு ரூ.5 முதல் 1000 வரை பணம் தந்தார்! எமது நிருபர் கேட்டபோது, 'தமிழ்ப்புத்தாண்டுக்குப் பரிசு' என்று சமாளித்தார், ஜெயலலிதா" என்று எழுதியது, "டைம் ஆப் இந்தியா" ஆங்கில ஏடு!

தவையே. அப்படியிருந்தும் அவரோடு கூட்டணிக்கு விழைந்தவர்கள் இன்று அவருடைய கூட்டணி (அ) தர்மத்தையும் ருசித்துக் கொண்டிருக்கிறார்கள். த.மா.கா. வுக்கு நாற்பது தொகுதிகள் ஒதுக்கித் தரத் தயாராக இருந்தார் கலைஞர். வேறு எந்தக் கட்சிக்கும் அவர் இத்தனை தொகுதிகள் அளிக்க முன்வரவில்லை. 96 சட்டமன்றத் தேர்தலில் த.மா.கா. பெற்ற வெற்றியையும், சட்டமன்றத்தில் அக்கட்சி ஆற்றிய ஆரோக்கியமான பணியையும் மதித்து வழங்கப்பட்ட தொகுதிகள் இவை.

❁ "தோழமை நிலையிலிருந்து த.மா.கா. எதிர்ப்பு நிலைக்கு மாறிவிட்டபோதிலும், நேசக்கரம் நீட்டினார், கருணாநிதி. அதைப் புறக்கணித்துவிட்டு, அ.தி.மு.க. தலைமையிடம் போய் ஒவ்வொரு சீட்டுக்காகவும் பேரம் பேசி, ஒருவாறு கூட்டணியைப் படியச் செய்துகொண்டது த.மா.கா. அந்த முயற்சியில் த.மா.கா. வியர்த்துக் களைத்திருந்த நேரத்தில், அதிர்ச்சி அணுகுண்டாக அ.தி.மு.க. போட்டியிடும் தொகுதிப்பட்டியல் வெளியிடப்பட்டுவிட்டது. கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களைக் கருத்துக் கேட்கவோ, கலந்து ஆலோசிக்கவோ முயற்சிகூட மேற்கொள்ளவில்லை.

❁ "ஜெயலலிதா தன்னிச்சையாகப் பட்டியல் தயாரித்து வெற்றி வாய்ப்பு கணிசமாக இருக்கிற தொகுதிகளை யெல்லாம் அ.தி. மு.க.வினருக்கென்று சுருட்டிக் கொண்டு விட்டார். அ.தி.மு.க. அணியில் நீடிக்கும் வரை கூட்டணிக் கட்சிகளுக்கு அவமானங்கள்தான் தொடரும்" - என்று எழுதப்பட்டிருந்தது.

★ ★ ★

ஜெயலலிதா நான்கு தொகுதி களிலே வேட்பு மனு தாக்கல் செய்த காரணத்தால், அனைவரும் எதிர்பார்த்தபடி அவருடைய வேட்பு மனு தேர்தல் அதிகாரி களால் செல்லாது என்று தள்ளுபடி செய்யப்பட்டது.

அதைப்பற்றி 26-4-2001 தேதிய ''இந்து'' இதழின் தலையங்கத்தில் -



''கடந்த முறை ஜெயலலிதா ஆட்சியில் நடத்திய அதர்மங்கள் அனைவரும் அறிந்ததே! அ.தி.மு.க.அணியில் நீடிக்கும்வரை கூட்டணிக் கட்சிகளுக்கு அவமானமே தொடரும்'' என விமர்சித்தது, ''கல்கி'' ஏடு!

❁ ''எதிர்பார்த்தவாறே இந்தத் தேர்தலில் போட்டியிட ஜெயலலிதாவிற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையம், 1997ஆம் ஆண்டு தகுதியின்மை குறித்து பிறப்பித்த உத்தரவை உறுதிப்படுத்திய பிறகு, ஜெயலலி தாவின் தகுதியின்மை என்பது நிச்சயமாகிவிட்டது. அந்த ஆணைப்படி இரண்டு ஆண்டுகளுக்குமேல் தண்டனை பெற்ற ஒருவருக்கு அவரது தண்டனை தள்ளி வைக்கப் பட்டபோதிலும், அவர் தேர்தலிலே போட்டியிட முடியாது'' என்பதாகும்.

❁ ''மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்படி ஒரு வேட்பாளர் இரண்டு இடங்களுக்குமேல் போட்டியிடக்கூடாது என்று தெரிவித்திருந்த போதிலும், அ.தி.மு.க. தலைவி நான்கு இடங்களில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவைத் தாக்கல் செய்து குழப்பமான நிலையை உருவாக்கினார். செல்வி ஜெயலலிதா மூன்று ஊழல் வழக்குகளில் தண்டிக் கப்பட்டவர். இதைவிடச் சிறிய தவறை செய்த பலர் பதவி விலக வேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்தப்பட்டுள் ளார்கள்.

❁ ''தேர்தலில் போட்டியிடத் தகுதியிழந்த பிறகு அ.தி.மு.க. தலைவி, தான் முதல் அமைச்சராக ஆவேன் என்று



"தன்மீதுள்ள ஏராள ஊழல் குற்றச்சாட்டுகளை எல்லாம், சட்ட ரீதியாகத் துடைத்தெறிந்த பிறகே, முதல்வர் பதவியில் ஜெயலலிதா அமர்வது நியாயமாகும்!" என்று எச்சரித்தது ஆனந்தவிகடன்' ஏடு

கூறுவதையும், அரசியல் தூண்டுதல் காரணமாக அதிகாரிகள் தன்னுடைய வேட்பு மனுக்களைத் தள்ளுபடி செய்துவிட்ட தாகக் கூறுவதையும் விட்டு, அவருடைய கூட்டணியின் வெற்றிக்காகப் பாடுபடும் பணியிலே ஈடுபடுவதே சாலச் சிறந்ததாக இருக்கும். அரசியல் காரணமாக, தான் பாதிப்புக்கு ஆளாகிவிட்ட தாகத் தன்னைக் காட்டிக் கொள்வதன் மூலம் தேர்தலில் சில பயன்களைப் பெறலாம் என்றாலும், உண்மை என்ன வென்றால், அவர் போட்டி யிடத் தகுதி இழந்ததற்கு முற்றிலும் அவர்தான் காரணமாகும்!" - என்று எழுதியது.

அந்தத் தேர்தலில் "இந்து" நாளேடு உத்தேசித்தவாறு, தான் பாதிப்புக்கு ஆளாகிவிட்டதாகத் தன்னைக் காட்டிக் கொண்டு, அதன் மூலம் தேர்தலில் சில பயன்களைப் பெறலாம் என்று எழுதியதற் கொப்பத்தான் நடைபெற்றது. "இந்து" மாத்திர மல்ல - எக்ஸ்பிரஸ் நாளேடும் இதே கருத்தினைத் தனது தலையங்கத்தில் எழுதியது. ஆனால் நான்கு தொகுதிகளிலே அந்த வேட்பு மனுக்கள் தள்ளுபடியாகும் என்று தெரிந் திருந்தும், வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துவிட்டு, பிறகு ஜெயலலிதா ஒவ்வொரு ஊராகச் சென்று, தன்னைத் தேர்தலிலே போட்டியிட முடியாமல் செய்து விட்டார்கள் - தி.மு.க. தலைவர்தான் அதற்குக் காரணம் தன்னைப் பழிவாங்கி விட்டார்கள் - என்றெல்லாம் பிரச்சாரம் செய்து, அதன் மூலம் அனுதாபம் தேடிட முற்பட்டார்.




சென்னை, கடற்கரையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் வாஜ்பயுடன், நான்!

ஜெயலலிதா குறிப்பாகத் தனது பிரச்சாரத்தில், "கேரளாவில் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட கொட்டாரக்கரா என்ற தொகுதியில் முன்னாள் அமைச்சர் கே.பாலகிருஷ்ண பிள்ளை வேட்பு மனு தாக்கல் செய்திருந்தார். அவர் ஊழல் வழக்கில் ஐந்தாண்டுக் காலம் சிறைத் தண்டனை பெற்றவர். அவருடைய வேட்பு மனு அதிகாரிகளால் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. ஆனால், தமிழ் நாட்டில் எனது வேட்புமனுக்களை ஏற்றால், விபரீத விளைவுகள் ஏற்படும் என்று கருணாநிதி தேர்தல் அதிகாரிகளை மிரட்டியதால்தான் எனது வேட்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன" என்று ஒவ்வொரு ஊரிலும் சென்று புலம் பினார். தமிழ்நாட்டு மக்களும் குழப்பத்திற்கு ஆளானார்கள். ஆனால் உண்மை என்ன?

தேர்தல் ஆணையத்தின் உத்தரவில், நான்காவது பத்தியில், "தண்டனைக் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்ட எந்த நபரும் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951, பிரிவு 8 - துணைப் பிரிவு 1-ன்படி தண்டனைக் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்ட தேதி முதல் ஆறு ஆண்டுகளுக்குத் தேர்தலில் போட்டியிடும் தகுதியை இழக்கிறார்" என்பதாகும்.

அந்த உத்தரவின் அடிப்படையிலேதான் ஜெயலலிதாவின் வேட்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. அப்படி யென்றால், கேரளாவில் பாலகிருஷ்ண பிள்ளையின் வேட்பு மனு மட்டும் எப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டது தெரியுமா?

தேர்தல் ஆணையத்தின் உத்தரவில், ஆறாவது பத்தியில், "மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951 பிரிவு 8 - துணைப் பிரிவு 4ன்படி தண்டனைக் குற்றவாளி என அறிவிக்கப்படும் நபர், அப்போது நாடாளுமன்றம் அல்லது சட்ட மன்ற உறுப்பினர்



கோபாலபுரம் வாக்குச் சாவடியில் எனது வாக்கை நான் பதிவு செய்தேன்

பதவியிலே இருந்து, தண்டனை விதிக்கப்பட்ட நாளிலிருந்து 90 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்திருந்தால், அந்த வழக்கில் தீர்வு காணப்படும்வரை தேர்தலில் போட்டியிட தகுதி இழப்பு ஏற்படாது" என்பதாகும்.

அதனால்தான், தண்டனை விதிக்கப்பட்டபோது பால கிருஷ்ணபிள்ளை சட்டமன்ற உறுப்பினராக இருந்ததால், அவருடைய வேட்பு மனு ஏற்கப்பட்டது. ஜெயலலிதாவுக்குத் தண்டனை விதிக்கப்பட்டபோது அவர் சட்டமன்ற உறுப்பின ராகவோ, நாடாளுமன்ற உறுப்பினராகவோ பதவியில் இல்லை. இந்த உண்மையைத்தான் அப்படியே மறைத்து விட்டு, ஜெயலலிதா ஊர் ஊராகச் சென்று பிரச்சாரம் செய்தார். அதைத் தமிழ்நாட்டு மக்களும் அப்போது நம்பி ஏமாந்தார்கள்.

இந்திய அரசியல் வரலாற்றில், ஊழல் வழக்கில் தண்டனை பெற்ற காரணத்தால் தேர்தலில் போட்டியிட முடியாது என்று முன்னாள் முதல்வர் ஒருவரின் வேட்பு மனு நிராகரிக்கப் பட்டது அதுவே முதல் முறை.


அரசுக்குச் சொந்தமான டான்சி நிலத்தை ஜெயலலிதா முதலமைச்சராக இருந்து கொண்டே, குறைந்த விலைக்கு வாங்கியவர்! அதற்காகத் தண்டனை விதித்தது நீதிமன்றம்! தண்டனைக்குரிய ஒருவர் தேர்தலில் போட்டியிட முடியாது என்று கூறியது தேர்தல் ஆணையம்! ஒருவர் இரண்டு இடங் களுக்குமேல் போட்டியிடக்கூடாது என்ற விதிக்கு மாறாக நான்கு இடங்களில் போட்டியிட்டவர் ஜெயலலிதா! அந்த வேட்பு மனுக்கள் செல்லாது என்று நிராகரித்தது தேர்தல் அதிகாரிகள்!

ஆனால் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டவுடன், ஜெயலலிதா, நான்தான் பல வழிகளில் சூழ்ச்சி செய்து அவரு

டைய வேட்பு மனுவை நிராகரிக்கச் செய்துவிட்டேன் என்றும், நீதிமன்றத்தை மிரட்டி, பல்வேறு தீர்ப்புகளை அவருக்கு எதிராக மாற்றச் செய்தேன் என்றும் குற்றஞ்சாட்டினார். திட்டமிட்டு, அவரைத் தேர்தலில் நிற்காத அளவிற்கு நான் செய்து விட்டேன் என்று ஒவ்வொரு கூட்டத்திலும் எதிரொலித்து மக்களின் அனுதாபத்தைப் பெற முயற்சித்தார். இறுதியாக அந்தத் தேர்தலில் அனுதாபம்தான் வெற்றி பெற்றது.

ஜெயலலிதாவின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டது குறித்துச் செய்தியாளர்கள் என்னிடம் கேட்டபோது, "மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டதில் எந்த மகிழ்ச்சியும் எனக்கு இல்லை!" என்று கூறினேன்.

ஜெயலலிதா வேட்பு மனு தாக்கல் செய்த நான்கு தொகுதிகளில் உள்ள தேர்தல் அதிகாரிகளை முதலமைச்சர் என்ற முறையில் நான் மிரட்டியதால் தான் அவர்கள் வேட்பு மனுக்களைத் தள்ளுபடி செய்தார்கள் என்று ஜெயலலிதா புகார் கூறினார் அல்லவா? அந்த நேரத்தில் அந்தத் தேர்தல் அதிகாரிகளுக்கெல்லாம் தலைமை அதிகாரியாக இருந்தவரிடம் செய்தியாளர்கள் சந்தித்து, இது பற்றிக் கேட்டதற்கு, தலைமைத் தேர்தல் அதிகாரி, "ஆங்காங்குள்ள தேர்தல் அதிகாரிகள் தங்கள் கடமையினைச் சட்டப்படிச் செய்துள்ளனர்- அவர்கள் பணி எனக்கு



அப்போதை மத்திய அமைச்சர் முரசொலி மாறன் வாக்களித்தார்.

மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது - அவர்கள்மீது எந்தக் குற்றச் சாட்டும் கூற முடியாது!'' என்று பதிலளித்தார்.

★ ★ ★

அந்த நேரத்தில் 26-4-2001 அன்று கழக அணியிலே தீவிரமாகப் பணியாற்றி வந்த சுப்ரீம் ஸ்டார் **சரத்குமார்** ஓர் அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக்கையில், ''அரசியலில் இதுவரை நடந்திராத ஒரு கோழை நாடகத்தை அரங்கேற்றி யிருக்கிறார், செல்வி ஜெயலலிதா. படித்தவர் - ஒரு முன்னாள் முதலமைச்சர் - மத்திய நல்லாட்சியைத் தனது சுயலாபத்திற் காகக் கவிழ்க்கும் அளவிற்கு அரசியல் தெரிந்தவர் - நான்கு தொகுதிகளில் வேட்பு மனு தாக்கல் செய்தார். ஊழல் குற்றம் புரிந்த குற்றவாளி என்ற காரணம் சொல்லி அவரது வேட்பு மனு தள்ளுபடி செய்யப்பட்டது. அரசியல் அரங்கிலே செல்லாக் காசாகி விடுவோம் என்று தெரிந்து கொண்டு அவர் அப்படிச் செய்தார். இரண்டு தொகுதிகளுக்கு மேல் வேட்பு மனு தாக்கல் செய்யவில்லை என்று உறுதிமொழி எடுத்தவர் சட்டத்தை எட்டி உதைத்து விட்டு, மேலும் இரண்டு தொகுதிகளில் எப்படி வேட்பு மனு தாக்கல் செய்தார்? இப்படி சத்திய பிரமாணத்தின் வாக்குறுதிகளையே அவமதிக்கும் செல்வி ஜெயலலிதாவின் தேர்தல் வாக்குறுதிகளை மக்கள் ஒருபோதும் நம்பமாட்டார்கள்'' என்றெல்லாம் அந்த அறிக்கையில் எழுதி இருந்தார்.

★ ★ ★

7-5-2001 அன்று, சென்னை காந்தி சிலை அருகில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் என்னுடைய தலைமையிலே நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் பிரதமர் **வாஜ்பய்** கலந்து கொண்டார். மேலும் தோழமைக் கட்சிகளின் தலைவர்கள் எல்லாம் கலந்து கொண்டனர்.

பிரதமர் வாஜ்பய் உரையாற்றும் போது தேசிய ஜனநாயகக் கூட்டணியின் முக்கியத்துவம் குறித்தும், அறிஞர் அண்ணாவுக்கும் அவருக்கும் மாநிலங்களவையில் தொடங்கிய நட்பு குறித்தும், மத்திய மாநில அரசுகள் எந்த அளவிற்கு ஒற்றுமையோடு



அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற நமது சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், பேராசிரியரும் நானும் உரையாற்றினோம்

பணியாற்றி வருகின்றன என்பது குறித்தும் உரையாற்றினார். நான் என்னுடைய உரையில் கழக அரசு ஐந்தாண்டு காலத்தில் தமிழகத்தின் முன்னேற்றத்திற்காகச் செய்த சாதனைகளை யெல்லாம் பட்டியலிட்டேன்.

★ ★ ★

10-5-2001 அன்று தமிழகத்தில் வாக்குப் பதிவு அமைதியாக எந்த வன்முறைச் சம்பவமுமின்றி நடை பெற்றது. எழும்பூர் தொகுதியில் மட்டும் வெடிகுண்டு வீசி, பயங்கர ஆயுதங்களுடன் கழக வேட்பாளர் பரிதி இளம்வழுதியைத் தாக்கிட சிலர் முயன்ற போதிலும், அவர் உயிர் தப்பினார்.

13-5-2001 அன்று வாக்குகள் எண்ணப்பட்டன. தான் நான்கு இடங்களில் போட்டியிட முயற்சித்தும், தன்னைத் தேர்தலில் போட்டியிட முடியாமல் தி.மு.க. செய்து விட்டது என்று ஜெயலலிதா ஊருக்கு ஊர் செய்த பிரச்சாரம் வெற்றி பெற்று, தி.மு.கழகக் கூட்டணி 37 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. தி.மு.க. 28 இடங்களிலும், பா.ஜ.க. 4 இடங் களிலும், எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. 2 இடங்களிலும், த.மா.கா. ஜனநாயகப் பேரவை 2 இடங்களிலும், விடுதலைச் சிறுத்தைகள் 1 இடத்திலும் வெற்றி பெற்றார்கள்.

அ.தி.மு.க. கூட்டணியின் சார்பில் அ.தி.மு.க. 132 இடங் களிலும், த.மா.கா. 23 இடங்களிலும், பா.ம.க. 20 இடங் களிலும், காங்கிரஸ் 7 இடங்களிலும், மார்க்சிஸ்ட் 6 இடங்

களிலும், இந்தியக் கம்யூனிஸ்ட் 5 இடங்களிலும், மற்றவர்கள் 4 இடங்களிலும் வெற்றி பெற்றார்கள்.

புதுவை மாநிலத்தில் தி.மு.கழக கூட்டணி 12 இடங்களில் வெற்றி பெற்றது. தி.மு.க. 7 இடங்களிலும், புதுச்சேரி மக்கள் காங்கிரஸ் 4 இடங்களிலும், பா.ஜ.க. ஒரு இடத்திலும் வெற்றி பெற்றன. காங்கிரஸ் 11 இடங்களிலும், த.மா.கா. 2 இடங் களிலும், அ.தி.மு.க. 3 இடங்களிலும் சுயேச்சை 2 இடங்களிலும் வெற்றிபெற்றன.

கழகத்தின் சார்பில் சேப்பாக்கம் தொகுதியில் நானும், துறைமுகம் தொகுதியில் பொதுச் செயலாளர் பேராசிரியரும், அண்ணா நகர் தொகுதியில் பொருளாளர் ஆர்க்காடு வீராசாமியும், ஆயிரம்விளக்கு தொகுதியில் தம்பி மு.க. ஸ்டாலினும், காட்பாடியில் தம்பி துரைமுருகனும், கும்ப கோணத்தில் தம்பி கோ.சி. மணியும், விழுப்புரத்தில் தம்பி பொன்முடியும், தண்டராம்பட்டு தொகுதியில் தம்பி எ.வ.வேலுவும், குறிஞ்சிப்பாடியில் தம்பி எம்.ஆர்.கே. பன்னீர்செல்வமும், சாத்தூரில் தம்பி கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரனும், பாளையங்கோட்டையில் தம்பி மைதீன் கானும், வெள்ளக்கோவிலில் தம்பி மு.பெ.சாமிநாதனும் மற்றவர்களும் வெற்றி பெற்றோம்.

மேலும் தமிழகச் சட்டப் பேரவைக்கு **பத்தாவது** முறையாக நான் அந்தத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டேன். இடங் களைப் பொறுத்தவரையில் தி.மு.கழக அணியில் குறைவாக இருந்தபோதிலும், வாக்குகளைக் கணக்கிட்டபோது, அந்தத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணி 1 கோடியே 40 லட்சம் வாக்குகளையும், தி.மு.கழகக் கூட்டணி 1 கோடியே 8 லட்சம் வாக்குகளையும், ம.தி.மு.க. தனியாகப் போட்டியிட்டு, 13 லட்சம் வாக்குகளையும் பெற்றன.

தேர்தல் முடிவு குறித்து என்னிடம் கருத்து கேட்டபோது, ‘‘எங்களின் ஐந்தாண்டு கால அடுக்கடுக்கானச் சாதனை களுக்குத் தமிழ் நாட்டு மக்கள் அளித்துள்ளப் பரிசாக இந்த முடிவைக் கருதுகிறேன். தேர்தல் ஆணையத்தின் விதி முறைகள் மற்றும் சட்டத்தின்படி வேட்பு மனு தள்ளுபடி செய்யப்

பட்டதற்கு நாங்கள்தான் காரணம் என்ற பொய்ப் பிரச்சாரத் தினால் ஏற்பட்ட அனுதாபத்தின் விளைவாகவும் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. **கில்** அவர்களே வேட்பு மனு தள்ளுபடி என்பது சட்டப்படியாக செய்யப்பட்டது என்று அறிவித்த பிறகும் புளுகுப் பிரச்சாரம் தான் வெற்றி பெற்றிருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலும் எங்கள் அணிக்கு வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று கூறினேன்.

★ ★ ★

18-5-2001 அன்று காலையில் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் என்னுடைய தலைமையிலே நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் கழகச் சட்டமன்றக் கட்சித் தலைவராகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களும், துணைத் தலைவராக ஆர்க்காடு வீராசாமியும், கொறடாவாக கடலூர் இள.புகழேந்தியும் நான் முன்மொழியத் தேர்ந் தெடுக்கப்பட்டனர்.

மேலும் அன்றைய கூட்டத்தில், கிரிமினல் வழக்கில் கடுங்காவல் தண்டனைப் பெற்றவரை முதல்வராகப் பதவி ஏற்கச் செய்து அரசமைப்புச் சட்டப் பிரிவுகளுக்கு முற்றிலும் முரணாகவும், எதிராகவும் செயல்பட்டுள்ள ஆளுநரின் நடவடிக்கைக்கு ஆட்சேபணை தெரிவிக்கும் வகையில் ''ஆளுநர் உரையில் தி.மு.கழகம் பங்கேற்காது'' என்று தீர்மானம் நிறைவேற்றினோம்.

★ ★ ★

தேர்தல் முடிவுகள் வெளிவந்து கொண்டிருந்த 14ஆம் தேதி அன்றே அவசர அவசரமாக அ.தி.மு.க. சட்டப் பேரவை உறுப்பினர்களின் கூட்டம் கூட்டப் பெற்றது. ஜெயலலிதா சட்ட மன்றக் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். உடனடியாக 14ஆம் தேதி மாலையிலேயே அவருக்கு கவர்னர் **பாத்திமா பீவி** பதவிப் பிரமாணமும் செய்து வைத்தார். பதவியேற்கத் தடைகோரி யாராவது வழக்கு தொடுத்து விடுவார்களோ என்ற அச்சத்தின் காரணமாகத்தான் அவசர

அவசரமாகப் பதவியேற்ற தாக அப்போது ஏடுகள் எல்லாம் கூறின.

15-5-2001 ''இந்து'' தலையங்கத்தில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து உறுதியாக தடை செய்யப்பட்ட ஒருவர் முதலமைச்சராவது இதுவே முதல் முறை என்றும், சட்டப்படி நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட ஒருவர் இத்தகைய பதவியில் அமர்வதும் இதுவே முதல் முறை என்றும், இரு நிலைகளிலும் அவருடைய செயல் அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படை உணர்வையே மீறுவதோடு, சட்ட ரீதியாகவும், நியாயபூர்வமாகவும் வேதனையளிக்கும் வினாக் களை எழுப்பியுள்ளது என்றும் எழுதியது. மேலும் சில பிரபல ஆங்கில ஏடுகள் ஊழல் குற்றச்சாட்டில் தண்டிக்கப்பட்டவர் முதல்வர் பதவியேற்று தார்மீக நெறியை மீறிவிட்டார் என்று எழுதின. ''ஆனந்தவிகடன்'' தனது தலையங்கத்தில் ''தன் மீதுள்ள களங்கத்தைச் சட்ட ரீதியாகத் துடைத்தெறிந்த பிறகே முதல்வர் பதவியில் ஜெயலலிதா அமர வேண்டும். அதுதான் கண்ணியமும் கவுரவமுமிக்க அந்தப் பதவிக்கும் அழகு - அவருக்கும் அழகு!'' என்று எழுதியது.


ஆனால் இதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் முதலமைச்சராக ஜெயலலிதா பதவியேற்றார். ஆனால் அது நிலைத்ததா?

15. அன்றே ஆரம்பமான பொய் வழக்கு!

2001 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழக அணி பெற்றத் தோல்விக்குப் பிறகு, சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூரைச் சேர்ந்த கழகத் தோழர் **வெ.முத்து,** அந்தத் தேர்தலில் தி.மு. கழகத்தின் தோல்வியைத் தாங்கிக் கொள்ள முடியாமல், *15.5.2001* அன்று தீக்குளித்து உயிர்விட்டார்.

அவர் உயிர் துறப்பதற்கு முன்பு, அந்தத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு தோல்வியடைந்த சிவராமனுக்கு ஒரு கடிதத்தை எழுதி வைத்துவிட்டுத்தான் மறைந்தார். அந்தக் கடிதத்திலே -

"அரசியல் ஆதாயம் பெற்று அரியணை ஏறுகிறது அ.தி.மு.க. அரசு. நல்லவர், பண்பாளர், கலைஞர் அவர்களின் பாசறையில் வளர்ந்த தங்களின் (சிவராமனின்) தோல்வி வெட்கக் கேடானது. இறப்பதைத் தவிர வேறு நன்றி செய்ய முடியாது.



எவ்வளவோ இளைஞர்கள் கழகத்தில் துடிப்புடன் இருக்கிறார்கள். அவர்கள் மனம் தளராமல் கழகத்தைத் தலைவர் கலைஞர், மேயர் மு.க. ஸ்டாலின் தலைமையில் காப்பாற்றுங்கள்... எனது சடலத்தை கறுப்பு சிவப்பு துணியால் போர்த்தவும். நல்லவருக்கு சோதனை வந்தால் நாடு தாங்காது. கழகம் வாழ்க! தலைவர் கலைஞர் வாழ்க! இப்படிக்கு வெ.முத்து,

ஆசாரி தெரு, மதுரை ரோடு, திருப்பத்தூர்'' என்று எழுதியிருந்தார்.

❁ ''முத்துவைப்போலவே, பொள்ளாச்சியில் கழக உடன்பிறப்பு **நாகராசன்** என்பவரும் தேர்தல் தோல்விக்காகத் தீக்குளித்து மாண்டார் என்ற செய்தி வந்தது. உடனடியாக நான் விடுத்த அறிக்கையில் -

❁ ''ஜனநாயகத்தில் வெற்றி தோல்வி இரண்டையும் எதிர்பார்ப்பதுதான் நியாயம். வெற்றி கிடைக்கும்போது வெறி கொண்டலைவதும், தோல்வி வரும்போது துவண்டு விடுவதும் நல்லதல்ல. எனவே, கழக உடன்பிறப்புகள் தேர்தல் முடிவிற்காக வருந்தி, தங்களைத் தாங்களே மாய்த்துக் கொள்வது என்பது என்னைப் பெரிதும் வருத்தும் செயலாகும். கழக உடன்பிறப்பு களை மன்றாடி நான் கேட்டுக் கொள்வது, இப்படிப்பட்ட செயல்கள் இனியும் தொடர வழி வகுக்கக்கூடாது'' என்று கேட்டுக் கொண்டேன்.

தேர்தல் முடிவுகள் வெளிவந்த மறுநாளே, ம.தி.மு.க., தி.மு.கழக அணியிலிருந்து பிரிந்து போனதைக் கண்டித்து, அந்தக் கட்சியிலிருந்து விலகி, கழகத்தில் இணைந்த வழக்கறிஞர் **கே.எஸ். ராதாகிருஷ்ணன்,** 14.5.2001 அன்று இரவு 9 மணி அளவில், தரமணி சாலையில் டைடல் பூங்கா அருகே சென்று கொண்டிருந்த நேரத்தில், இரண்டு ஆட்டோ ரிக்ஷாக்களில் சில குண்டர்கள் வந்து, ராதாகிருஷ்ணனைப் பயங்கரமாகத் தாக்கிவிட்டு ஓடிவிட்டனர். ராதாகிருஷ்ணன் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுப் பிழைத்துக் கொண்டார்.

★ ★ ★

வாக்குப்பதிவு நாளன்று, எழும்பூர் தொகுதி கழக வேட்பாளர் தம்பி **பரிதி இளம்வழுதியைக்** கொலை செய்ய முயன்று, ஓட ஓட விரட்டி, வெடிகுண்டுகளால் தாக்கியபோது, அவர் தப்பியோடி பிழைத்துக் கொண்டார். அவரை எதிர்த்து நின்று, அந்தத் தாக்குதலில் ஈடுபட்ட அ.தி.மு.க. அணியின்

சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் ஆ.நெடுஞ்செழியன் மறைந்தார்

கலைஞர் - பேராசிரியர் கண்ணீர் அஞ்சலி



தம்பி வீரபாண்டி ஆறுமுகத்தின் மகன் ஆ.நெடுஞ்செழியனின் மரணம் என்னைப் பெரிதும் மன வேதனைக்குள்ளாக்கியது


வேட்பாளர் உட்பட சிலரைக் காவல்துறையினர் கைது செய்திருந்தனர்.

ஆனால், தேர்தல் முடிவுகள் மாறி, ஜெயலலிதா முதலமைச்சராகப் பதவியேற்ற காரணத்தால், உடனடியாகப் பழிவாங்கும் படலத்தை ஆரம்பித்து, தாக்குதலுக்கு ஆளான பரிதி இளம் வழுதியையே காவல்துறை கைது செய்து, வேலூர் சிறையிலே கொண்டுபோய் அடைத்தனர். அந்தச் செயலைக் கண்டித்து நான் ஒரு கண்டன அறிக்கை விடுத்தேன்.

★ ★ ★

கவர்னர் இவ்வாறு அவசர அவசரமாக பதவியேற்பு செய்துவைத்ததையொட்டி கவர்னர்மீது வழக்கு தொடரப் படும் என்ற ஒரு கருத்து வெளிவந்தபோது, ஜெயலலிதா, "கவர்னரின் செயல்களை எதிர்த்து கோர்ட்டில் வழக்கு தொடர முடியாது - கவர்னர் முடிவை யாரும் கேள்வி கேட்க முடியாது" என்று கூறினார்.

ஆனால், 1995ஆம் ஆண்டு, டான்சி ஊழல் தொடர்பான வழக்கில் ஜெயலலிதாமீது வழக்கு தொடர அன்றைய ஆளுநர் சென்னா ரெட்டி அனுமதியளித்தபோது, கவர்னருக்கு எதிராக ஜெயலலிதா உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் வழக்கு தொடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அது மாத்திர



பரிதி இளம்வழுதியைத் தாக்கி - அவர்மேல் பொய் வழக்குப் போட்டார். ஜெயலலிதா. ஜாமீனில் வெளிவந்த பரிதி, என்னைச் சந்தித்துச் சால்வை அணிவித்தார்.

மல்ல - கவர்னர் சென்னா ரெட்டி அவர்களை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டுமென்று மத்திய அரசை சட்டப் பேரவைக் கோருகிறது - என்ற தீர்மானத்தையும் பேரவையிலே நிறைவேற்றினார்.


★ ★ ★

15-5-2001 அன்று "இந்து" தலையங்கத்தில் - சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து உறுதியாக தடை செய்யப்பட்ட ஒருவர் முதலமைச்சராவது இதுவே முதல் முறை என்றும், சட்டப்படி நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட ஒருவர் இத்தகைய பதவியில் அமர்வதும் இதுவே முதல் முறை என்றும், "இரு நிலைகளிலும் அவருடைய செயல் அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படை உணர்வையே மீறுவதோடு - சட்ட ரீதியாகவும், நியாயப்பூர்வமாகவும் வேதனையளிக்கும் வினாக்களை எழுப்பியுள்ளது!" என்று எழுதியது.

மேலும் சில பிரபல ஆங்கில ஏடுகள் ஊழல் குற்றச்சாட்டில் தண்டிக்கப்பட்டவர் முதல்வர் பதவியேற்று தார்மீக நெறியை மீறிவிட்டார் என்று எழுதின.

"**ஆனந்தவிகடன்**" தனது தலையங்கத்தில், தன்மீதுள்ள களங்கத்தைச் சட்ட ரீதியாக துடைத்தெறிந்த பிறகே முதல்வர் பதவியில் ஜெயலலிதா அமர வேண்டும். அதுதான் கண்ணியமும்

கௌரவமும் மிக்க அந்தப் பதவிக்கும் அழகு, அவருக்கும் அழகு!'' என்று எழுதியது.



தி.மு.கழகத்தில், தன்னை இணைத்துக் கொண்ட வழக்கறிஞர் ராதாகிருஷ்ணனைக் குண்டர்கள் தாக்க - அவர் பிழைத்துக் கொண்டார்.

ஆனால், அ.தி.மு.க.வில் நண்பர் **சேடப்பட்டி முத்தையா** மத்தியிலே 1998ஆம் ஆண்டு அமைச்சராக இருந்தார். அவர்மீது வருமானத்திற்கு மீறி சொத்து சேர்த்த வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டபோது, அந்த வழக்கிலிருந்து தன்னை விடுவிக்க வேண்டுமென்று சேடப்பட்டி முத்தையா சிறப்பு நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். அவர் மீதான புகாரில் ஆதாரம் உள்ளதாகக் கூறி அவரது மனுவினை நீதிபதி தள்ளுபடி செய்தார். இதற்காக சேடப்பட்டி முத்தையா ''மத்திய அமைச்சர் பதவியை ராஜினாமா செய்யமாட்டேன்'' என்று அறிவித்துவிட்டார்.

ஆனால், ஜெயலலிதா புகைவண்டியில் சென்று கொண்டிருந்த சேடப்பட்டியைத் தொடர்பு கொண்டு பேசிவிட்டு, தான் அவரை அமைச்சர் பதவியிலிருந்து விலகும்படிக் கூறிவிட்ட தாக ஏடுகளுக்குத் தெரிவித்தார்.

பின்னர் செய்தியாளர்கள் அவரை நேரில் சந்தித்து விவரம் கேட்ட நேரத்தில், ''ஊழல் உள்ளிட்டவை தொடர்பாகக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டவர்களோ - அந்நியச் செலாவணி மோசடி வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களோ - அமைச்சரவையில் இடம் பெற்றிருந்தால் அவர்கள் பதவி விலக வேண்டும். இல்லாவிட்டால் அவர்களைப் பிரதமர் அமைச்சரவையிலிருந்து நீக்க வேண்டும்'' என்று கூறினார். 15.4.1998 அன்று சென்னையிலே நடைபெற்ற அ.தி.மு.க. செயற்குழுக்

கூட்டத்திற்குப் பின்னரும் இதையே செய்தியாளர்களிடம் ஜெயலலிதா கூறினார்.


★ ★ ★

இதைத் தொடர்ந்து 20-4-1998 அன்று **"தினமணி"** தனது தலையங்கத்தில், "குற்றச்சாட்டுக்கு ஆளானவர்கள் அமைச்சர் களாக நீடிக்கக்கூடாது என்பதால் சேடப்பட்டியை விலகச் செய்து, அதே கோரிக்கையை மத்திய அமைச்சர்கள் மீதும் வலியுறுத்தும் ஜெயலலிதா, தன்மீது எண்ணற்ற வழக்குகளும், ஒரு வழக்கில் தண்டனையும் விதிக்கப்பட்ட நிலையில் எப்படி முதல்வர் பதவியை ஏற்க முடியும்?" என்று எழுதியது.

ஜெயலலிதாவின் வலியுறுத்தல் காரணமாகப் பிரதமராக இருந்த வாஜ்பய் மத்திய அமைச்சராக இருந்த **பூட்டாசிங்** அவர்களை அமைச்சர் பதவியிலிருந்து விலக்கினார். அந்த அளவிற்குக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டாலே அமைச்சர் பதவியிலே இருக்கக்கூடாது என்று தனது கட்சியைச் சேர்ந்த ஒருவரும், மத்திய அமைச்சர்களாக இருந்தவர்களும் பதவி விலகக் காரணமாக இருந்த ஜெயலலிதாமீது, கொடைக்கானல் ப்ளசண்ட் ஸ்டே ஓட்டலுக்கு அனுமதி வழங்கியது தொடர்பான வழக்கிலே குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு சாட்சியங்கள் எல்லாம் முடிவுற்று, இறுதியாக ஓராண்டு காலம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. அதைப்போலவே டான்சி நில ஊழல் வழக்கிலே மூன்றாண்டு காலம் ஜெயலலிதாவிற்குச் சிறைத் தண்டனை அப்போது விதிக்கப்பட்டிருந்தது. குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தாலே பதவியிலியிருந்து விலக வேண்டும் என்று வாதிட்ட ஜெயலலிதா, இவ்வளவு தண்டனைகளைப் பெற்ற பிறகும், 2001இல் அவசர அவசரமாக ஆளுநர் மூலமாக பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

★ ★ ★

தேர்தல் முடிவுகளும், ஆட்சி மாற்றமும் நடைபெற்றுக் கொண்டிருந்த அதே கால கட்டத்தில், தந்தை பெரியார் அவர்களின் **"குடியரசு"** பத்திரிகை அலுவலகத்தில்



என்னுடன் இருந்த **தவமணி இராசன்** 19-5-2001 அன்று திடீரென மறைந்து விட்டார் என்ற செய்தி கேட்டு மிகவும் வருந்தி, நான் விடுத்த இரங்கல் செய்தியில் -

"பெரியாரின் குடியரசு பத்திரிகை அலுவலகம் எனும் குருகுலத்தில் என்னுடன் சக மாணவராக இருந்தவரும், பெரியாரின் பேரன்பைப் பெற்று இயக்கம் வளர்த்தவரும், சென்னைக்கு வரும்போதெல்லாம் தவறாமல் என்னைச் சந்தித்துப் பழைய நினைவுகளைப் பரிமாறிக் கொண்டவரும், என் நெஞ்சில் நீங்கா இடம் பெற்றவர்களில் ஒருவருமான அருமைத் தோழர் தவமணி இராசன் மறைந்து விட்டார் என்ற செய்தி என் மனத்தை உலுக்கிவிட்டது. தலைதாழா தன்மானச் சிங்கமாக வாழ்ந்து மறைந்த அவரது நினைவு என்றென்றும் என் நெஞ்சில் நிலைத்து நிற்கும். வாழ்க தவமணி இராசனின் புகழ்!" என்று தெரிவித்தேன்.

தவமணி இராசனின் மறைவைத் தொடர்ந்து, சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளராக இருந்த தம்பி **ஆ.நெடுஞ்செழியன்** சில நாட்கள் உடல் நலம் குன்றி மருத்துவமனையில் இருந்தவர், 21.5.2001 அன்று மறைந்து விட்டார் என்ற செய்தி கிடைத்தது. தம்பி வீரபாண்டி ஆறுமுகத்தின் அன்புச் செல்வன்தான் நெடுஞ்செழியன். என்னை நானே தேற்றிக் கொள்ள முடியாத நிலையில் இருந்தவன், எப்படி ஆறுமுகத் திற்கு ஆறுதல் கூறுவேன்? மருத்துவமனைக்கே நேரில் சென்று மறைந்தவருக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினேன்.

★ ★ ★

தேர்தல் முடிவுகளைப் பற்றி விவாதிக்க, 23.5.2001 அன்று கழகத்தின் நிர்வாகக் குழு சென்னையில், அண்ணா அறிவாலயத்தில்,

என் தலைமையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் தேர்தல் முடிவுகள்பற்றி விரிவாக பேசப்பட்டது. கழகப் பணிகள் விரைவாகவும், விறுவிறுப்பாகவும் தொடர்ந்து நடைபெற தலைமைக் கழகத்தின் சார்பில் 17 மண்டலப் பொறுப் பாளர்களை நியமிப்பதென்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.


★ ★ ★

- ''ஜெயலலிதா முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், தொடர்ந்து பழி வாங்கும் நடவடிக்கைகளைத் தொடங்கி விட்டார். பொறுப்பேற்ற இரண்டு நாட்களிலேயே கழகச் சட்டமன்ற உறுப்பினர், பரிதி இளம்வழுதிமீது பொய் வழக்குப் போட்டுச் சிறையிலே அடைத்ததைத் தொடர்ந்து, ஆற்காடு வீராசாமியின் இளவல் **தேவராஜ்,** நாடாளு மன்ற உறுப்பினராக இருந்த திருப்போரூர் **பரசுராமன்,** புரசைவாக்கம் **ரெங்கநாதன்** ஆகியோர்மீதும் பொய் வழக்குகள் போடப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

- ''அதைப்போலவே கழக அரசினால் தொடங்கப்பட்ட உழவர் சந்தைக்கு மூடு விழா நடத்தினார்கள்.

- ''ஜூன் 3ஆம் தேதியன்று என்னுடைய பிறந்த நாளை யொட்டி பனகல் பூங்கா அருகில் பொதுக் கூட்டம் நடத்து வதற்கான அனுமதியைக்கூட வழங்க மறுத்துவிட்டார்கள். சர்க்காரியா கமிஷன் பரிந்துரைகளை மீண்டும் பரிசீலித்து என்மீது நடவடிக்கை எடுக்கப் போகிறேன் என்று அறிவித்தார். எம்.ஜி.ஆர். உயிரோடு இருந்தபோதே, இரண்டு முறை அந்தச் சர்க்காரியா கமிஷன் அறிக்கைமீது நடவடிக்கையெடுக்க முயன்று, அரசு வழக்கறிஞர்களிடம் கருத்து கேட்டபோதே, அதன்மீது எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாதென மறுத்துவிட்டார்கள்.

பொய் வழக்குப் போடப்பட்டு சிறையிலே அடைக்கப் பட்ட பரிதி இளம்வழுதியை உயர் நீதிமன்றம் 30-5-2001 அன்று விடுதலை செய்தது. அதே நாளில், ஜெயலலிதாவின் பழி



வாங்கும் நாடகம்பற்றி **"தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்"** ஆங்கில நாளேடு எழுதிய தலையங்கத்தில் -

❁ ''முதலமைச்சராக ஜெயலலிதா பதவி ஏற்றது அரசியல் சட்ட ரீதியில் சரியானதா என்ற சந்தேகம் இன்னமும் இருக்கும் நிலையில், தமிழகத்தின் அரசியல் வழிகாட்டு முறை யானது சோர்வடைவதாய் உள்ளது. தமிழகத்தில் புதிய தாக அமைந்துள்ள சட்ட மன்றத்தில் ஜெயலலிதா குறுக்கிட்டுப் பேசும்போது, சர்க்காரியா கமிஷன் அறிக்கையின் அடிப்படையில், முன்னாள் முதலமைச்சரும், தி.மு.க. தலைவருமான கருணாநிதிமீதான ஊழல் வழக்கைத் திரும்ப விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்தப் போவதாக அறிவித்துள்ளார். அண்மையில்தான் மூன்று வழக்குகளில் கடுங்காவல் தண்டனை பெற்ற ஜெயலலிதா, சட்ட விதிகளைத் தன் துணைக்கு வேறு வழியின்றி அழைப்பது வெளிப்படையாகத் தெரிகிறது.



❁ ''ஆனால், அது மட்டுமே இங்கு பிரச்சினையில்லை. புதிய முதலமைச்சரின் இந்த அறிவிப்பு மோசமான அரசியலின் துர்நாற்றத்தை கிளப்புகிறது. அவர் முதன் முறையாக முதலமைச்சராக இருந்தபோது எல்லாமே அவர்தான் என்பது போன்றதொரு தோற்றத்தை அவர் ஏற்படுத்தியது கவனிக்கத்தக்கது. தன்னைச் சுற்றியுள்ளவர்களை ஊக்கப் படுத்தித் தன்னிச்சையான ஊழல் நடவடிக்கை களின் மூலம் சகதியை அவர் பூசிக்கொண்டார் என்பதும் தெள்ளத் தெளிவு'' என்று எழுதியது.



3.6.2001 அன்று, எனது பிறந்த நாளை முன்னிட்டு, தியாகராயநகரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கூடிய மக்கள் பெருவெள்ளம்

2.6.2001 அன்று உலகைத் திடுக்கிட வைத்த ஒரு சம்பவம் பற்றிக் குறிப்பிட வேண்டும். ஆமாம் - நேபாள மன்னராக இருந்தவர் **பீரேந்திரபீர் பிக்ரம் ஷா தேவா** என்கிற பீரேந்திரா. அவருடைய வயது 56. அரசி **ஐஸ்வர்யா.** அவருடைய வயது 51. மன்னரையும், அரசியையும், மற்றும் அரச குடும்பத்தைச் சேர்ந்த மன்னரின் இளைய மகன் நிரஞ்சன், மகள் **ஸ்ருதி,** தற்காலிக மன்னராக அறிவிக்கப்பட்டிருந்த ஞானேந்திரரின் மனைவி **ஜெயந்தி,** மன்னரின் சகோதரர்கள் **சாந்தி சிங், சாரதா சிங்,** மைத்துனர் **குமார் கத்காவிக்ரம் சிங்** ஆகியோரை, பீரேந்திரரின் மூத்த மகனான இளவரசர் **திபேந்திரர்** தனது திருமணத் தகராறு காரணமாகத் துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்தார். பெற்றோரையும், குடும்பத் தாரையும் கொன்றுவிட்டு, தானும் சுட்டுக் கொண்ட இளவரசர் திபேந்திரர் முதலில் கோமா நிலையில் இருந்து, பின்னர் அவரும் இறந்தார்.

லண்டனில் படித்தபோது காதலித்த **தேவயானி** என்ற பெண்ணை மணம் செய்யக் குடும்பத்தார் எதிர்ப்பு தெரிவித் தார்களாம்.


"இளவரசர் 35 வயதை எட்டும்முன் அவருக்குத் திருமணம் செய்யக் கூடாது - குழந்தையும் பிறக்கக் கூடாது - அப்படி



நடந்தால் மன்னர் உயிருக்கு ஆபத்து'' என்று ஜோதிடர்கள் எச்சரித்திருந்தார்களாம். அதன் காரணமாக ராணி திருமணத் திற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தாராம். திருமணத்தைத் தள்ளிப் போடுவதில் விருப்பமில்லாத இளவரசர், அந்த முடிவினைத் தேர்ந்தெடுத்தாராம். முதல் தகவல்கள் இவ்வாறு தெரிவித்தபோதிலும், பின்னர் தானியங்கித் துப்பாக்கி, தற்செயலாக வெடித்ததால் ஏற்பட்ட விபத்தினாலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றதாகத் தெரிவித்தார்கள்.

நேபாளம் இந்தியாவிற்கும், திபெத்திற்கும் இடையே உள்ள நாடு. 29 ஆயிரம் அடி உயரம் உள்ள எவரெஸ்ட் சிகரம் நேபாளத்தில்தான் உள்ளது. நேபாளத்தின் தெற்குப் பகுதியில் பாதி காடாகவும், மீதி வேளாண்மை நிலமாகவும், வடக்குப் பகுதி மலைப்பாங்கான குன்றுகளைக் கொண்ட பகுதியாகவும் வியாபித்துள்ளது.

அரச பரம்பரையின் நிறுவனர் **பிருத்வி நாராயண் ஷா** என்பவர் 1768இல் நேபாள பள்ளத்தாக்கில் பரந்து கிடந்த பல குறுகிய கூர்க்க ராஜ்யங்களை ஒன்றிணைத்து ஒரு குடையின் கீழ் கொண்டு வந்தார். உலகத்திலேயே இந்து மத நாடு என்று அழைக்கப்படுகின்ற நாடு நேபாளம் ஒன்று தான். 1 லட்சத்து 40 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவு உள்ளதும், 2 கோடியே 47 லட்சம் மக்கள் தொகை கொண்டதும், காத்மாண்டு நகரைத் தலைநகரமாகக் கொண்டதும், லலித்பூர்,



பிராட் நகர் எனும் இரு நகரங்களை உள்ளடக்கியதும், நேபாளி, நிவாரி, புத்தியா, மைதலி ஆகிய மொழிகள் பேசுவோரைக் கொண்டதுமான நாடு நேபாளம். அங்கே 1972ஆம் ஆண்டு மணிமுடி சூட்டிக் கொண்டவர்தான் அப்போது கொலை செய்யப்பட்ட பீரேந்திரா.

அவ்வப்போது அங்கு தோன்றிய முடியரசுக்கு எதிரான கிளர்ச்சிகள் - குறிப்பாக மாவோயிஸ்டுகள் நடத்திய புரட்சிகள் காரணமாக, 1990ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் மன்னர் பீரேந்திரா ஒரு புதிய அரசியல் அமைப்பை அறிவித்து, அனைத்துக் கட்சி ஜனநாயகத்தை உருவாக்கி, அந்த அமைப்புக்குமேலே மன்னராகப் பதவி வகித்தார்.

ஒருமுறை மன்னர் நேபாளத்தின் கிழக்குப் பிராந்திய பகுதிகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது, அரசு வரித்துறை சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்குள் நுழைந்தார். மேல் அதிகாரியின் இருக்கை காலியாக இருந்தது. மன்னர் அந்த இருக்கையிலே சென்று அமர்ந்தார். அந்த இருக்கையில் அமர வேண்டிய உயர் அதிகாரி தாமதமாக அலுவலகத்திற்கு வந்தார். தனது நாற்காலியில் மன்னரே அமர்ந்திருந்ததைக் கண்டு வெட்கித் தலைகுனிந்தார். மன்னரிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டார்.

மற்றொரு முறை. பீர்கானி என்ற பகுதிக்கு மன்னரும் மகாராணியும் சென்றார்கள். ரிக்ஷா ஒன்றில் செல்ல வேண்டுமென்று விரும்பிய அவர்கள், தாங்கள் யார் என்பதைச்



சொல்லாமலே, அங்கே நின்றிருந்த ரிக்ஷாவில் ஏறிப் பயணம் செய்தார்கள்.

வழியில் ரிக்ஷாக்காரனிடம் அவனுடைய குடும்பத்தைப் பற்றி விசாரிக்க, அவனும் தனது ஏழ்மையைப் பற்றியெல்லாம் விவரித்தான். பின்னர் அந்த வண்டியிலிருந்து இறங்கியவுடன், மன்னர் தம்பதிகள் பெரும் தொகை ஒன்றை ரிக்ஷா ஓட்டு நரிடம் தர, அப்போதுதான் மன்னர் குடும்பத்தினர் தன் ரிக்ஷாவில் பயணம் செய்த செய்தி அறிந்து மகிழ்ச்சிக் கூத்தாடினானாம்.

★ ★ ★



படுகொலை செய்யப்பட்ட நேபாள மன்னர் பீரேந்திராவின் குடும்பம்



மூத்த மகன் திபேந்திரா

நடந்த படுகொலைகளுக்குப் பிறகு, நேபாள நாட்டின் புதிய மன்னராக **ஞானேந்திரர்** பதவியேற்றார். அரச குடும்பத் தினர் படுகொலை மர்மம் குறித்து விசாரணைக்கு உத்தர விடக்கோரி, தலைநகர் காத் மாண்டுவிலும், லலித்பூர் நகரிலும் பொதுமக்கள் கிளர்ச்சியிலே ஈடுபட்டனர். வன்முறையில் ஈடுபட்டவர்களைக் கலைத்து விரட்டப் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர். கண்ணீர்ப் புகை குண்டுகளும் வீசப்பட்டன. நிலைமை கட்டுப் பாட்டை மீறிய தால், வன்முறையாளர் களைக் கண்டதும் சுடுமாறு ராணுவத்தினருக்கும், போலீசாருக் கும் உத்தரவிடப் பட்டது. பல்வேறு இடங் களில் நடந்த வன்முறைச் சம்பவங்களில் ஆறு பேர் உயிரிழந்தனர். போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 36 பேர் காயம் அடைந்தனர். இதற் கிடையில் அரச குடும்பத்தினர் படுகொலை மர்மம் குறித்து விசாரணைக்கு புதிய மன்னர் உத்தரவிட்டார்.

★ ★ ★

3.6.2001 அன்று வழக்கம்போல எனது 78வது பிறந்த நாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. குடியரசுத் தலைவர் **கே.ஆர். நாராயணன்,** பிரதமர் **வாஜ்பாய்,** மக்களவைச் சபாநாயகர் **ஜி.எம்.சி. பாலயோகி,** மத்திய உள்துறை அமைச்சர் **அத்வானி,** ஆளுநர் **பாத்திமா பீவி** ஆகியோர் வாழ்த்துச் செய்தி அனுப்பி யிருந்தனர்.

கழகத்தின் பல்வேறு அணிகள் சார்பில் கவியரங்கம், கருத் தரங்கம், பட்டிமன்றம், பொதுக் கூட்டம் ஆகிய நிகழ்ச்சிகள் சீரும் சிறப்புமாக நடைபெற்றன. பல்வேறு அரசியல் கட்சி களின் தலைவர்கள், தோழமைக் கட்சியினர், கழகத்தின் பல்வேறு மட்டங்களிலே உள்ளவர்கள், திரை உலகத்தினர் என்று ஏராளமானவர்கள் நேரில் வந்து எனக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

அந்த ஆண்டு நடை பெற்ற பொதுத் தேர்தலில் கழகம் தோற்றுவிட்டது என்ற காரணத்தாலோ என்னவோ, எல்லா ஆண்டு களையும்விட கழகத் தோழர் களின் கூட்டம் அதிக மாக இருந்தது. செய்தி யாளர்களே அதைப் பார்த்து விட்டு, ''எந்த ஆண்டும் இல்லாத அளவிற்குக் கூட்டம் நெருக்குகிறதே'' என்று கேட்டபோது -

''தி.மு.கழகத் தொண்டன் எப்பொழுதுமே தோல்வி கண்டு துவண்டு விட மாட்டான் என்பதற்கு அடையாளம்தான் இந்தக் கூட்டம்'' என்று பதிலளித்தேன்.


STATESMAN

23.6.2001 தேதிய 'ஸ்டேட்ஸ்மேன்' ஆங்கில ஏடு, "தெலுலிதாவின் துக்ளக் ஆட்சியில், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் கால் பந்துபோல் பந்தாடப்படுகிறார்கள் – 25.6.2001 ஒரே நாளில் 56 அதிகாரிகள் மாற்றப்பட்டனர்" என்று ஏளனம் செய்தது.

★ ★ ★

4.6.2001 அன்று காலையில் அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் என்னுடைய தலைமையில் கழகப் பொதுக் குழுக் கூட்டம் நடைபெற்று, பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

2001ஆம் ஆண்டு ஜூன் முதல் வாரத்தில் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் தாயகம் என்று புகழப்படும் பிரிட்டனில் நடந்த நாடாளு மன்றத் தேர்தலில், தொழில் கட்சி அமோக வெற்றி பெற்றது. நாடாளுமன்றத்திற்கு மொத்தம் உள்ள 659 தொகுதிகளில், தொழில் கட்சி 413 இடங்களைக் கைப் பற்றியது. செட்ஜ் பீல்டு தொகுதியில் வெற்றிபெற்ற அந்தக் கட்சியின் தலைவரான டோனி பிளேர் மீண்டும் பிரதமரானார். தொழில் கட்சியை எதிர்த்துப் போட்டியிட்ட கன்சர்வேடிவ் கட்சி இரண்டாவது முறை யாகத் தொடர்ந்து

அந்தத் தேர்தலில் படு தோல்வி அடைந்தது. 162 இடங்களில் மட்டும் அந்தக் கட்சி வெற்றி பெற்றது.

நூறாண்டு கால தொழில் கட்சி வரலாற்றில் தொடர்ந்து இரண்டாவது முறையாக, அந்தக் கட்சி ஆட்சியைப் பிடித்தது, அதுவே முதல் முறை. எனவே தொழில் கட்சிக்கு சிறப்புமிக்க வெற்றியாக அது கருதப்பட்டது. பிரிட்டனின் மூன்றாவது பெரிய கட்சியான லிபரல் ஜனநாயகக் கட்சிக்கு 47 இடங்கள் கிடைத்தன. அந்தக் கட்சியின் தலைவரான **சார்லஸ் கென்னடி, டிங்வால்** தொகுதியில் ஐந்தாவது முறையாக வெற்றி பெற்று சாதனை படைத்தார்.

★ ★ ★

ஜெயலலிதா பதவியேற்ற ஒரு மாதத்திற்கெல்லாம் வேகமாக நடைபெற்ற செயல்பாடுகள் என்னவென்றால், கழக ஆட்சியில் நியமிக்கப்பட்ட மக்கள் நலப் பணியாளர்களையும், சாலைப் பணியாளர்களையும் பதவி நீக்கம் செய்து வீட்டிற்கு அனுப்பி வைத்தார்.

- சிறையில் இருந்த புரசைவாக்கம் **ரெங்கநாதன்** அவர்களைப் பார்க்கச் சென்ற **ப.சிதம்பரம்** அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.
- அண்ணா நினைவிடத்திலே இருந்த முகப்புக் கதிர்கள் முதலில் தாள்கள் ஒட்டப்பட்டு மறைக்கப்பட்டன, பின்னர் அதை அப்படியே இடித்து அகற்றினார்கள்.
- விடுதலை சிறுத்தைகள் அமைப்பின் மாநிலப் பொருளாளராக இருந்த **முடக்கத்தான் பாண்டி** மதுரையில் கொலை செய்யப்பட்டார். அந்தக் கொலை குறித்து சி.பி.ஐ. விசாரணை நடத்தப்பட வேண்டு மென்றுகோரி, மாவட்டத் தலைநகரங்களில் ஒரு நாள் அடையாள ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று அறிவித்திருந்த அந்தக் கட்சியின் தலைவர் **திருமாவளவன்** திடீரெனக் கைது செய்யப்பட்டார். அவரை உடனடியாக விடுதலை செய்யவேண்டுமென்று கூறி நான் அறிக்கை விடுத்தேன்.

★ ★ ★



15.6.2001 அன்று, திருவில்லிப் புத்தூர் நகராட்சித் தலைவரும், சட்டமன்ற முன்னாள் அ.தி.மு.க. உறுப்பினராக இருந்தவருமான **இரா.தாமரைக்கனி,** அண்ணா அறிவாலயத்தில் என்னைச் சந்தித்து கழகத்திலே தன்னை உறுப்பினராக இணைத்துக் கொண்டார்.

அதே நாளில் வெளிவந்த **"எகனாமிக் டைம்ஸ்"** ஆங்கில நாளேடு, பெரும் நிறுவனங் களின் முதலீட்டைப் பெறு வதில் தி.மு.கழக ஆட்சியில் தமிழ்நாடு முதல் இடம் வகித்தது என்று இந்திய ரிசர்வ் வங்கியின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்பதாக மிக விரிவாகச் செய்தி வெளியிட்டது.

27.6.2001 தேதிய **"துக்ளக்"** இதழிலே, "கருணாநிதியை எப்படியாவது பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தின் காரணமாகவே ஜெ.அரசு செயல்படுகிறது, மத விரோதங் களைக் கிளப்பிவிடக்கூடிய விஷயத்தில் காட்டப்பட வேண்டிய பொறுப்புணர்வுமிக்க அணுகுமுறையை, இந்த அரசு காட்டவில்லை - இது நல்லதல்ல" என்றெல்லாம் எழுதியது.

★ ★ ★

அமைச்சரவை மாற்றங்களும் அடிக்கடி நடைபெற்றன. 2001 மே மாதம் 14 ஆம் தேதி ஜெயலலிதா பதவியேற்றவுடன், ஐந்து அமைச்சர்கள் அன்றைய தினமே பதவி யேற்றார்கள். மீண்டும் 19ஆம் தேதியன்று மேலும் 19 புதிய அமைச்சர்கள் பதவி யேற்றார்கள். அதற்கடுத்த ஜூன் மாதம் 9ஆம் தேதியன்று அமைச்சர்களாக இருந்த **அய்யாறு வாண்டையார், பொள்ளாச்சி ஜெயராமன், ஆர்.விசுவநாதன்** ஆகியோரை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கம் செய்தார். அன்றைய தினம் மேலும் 7 அமைச்சர்களின் துறைகளை மாற்றினார். அதே

மாதம் 11ஆம் தேதி மூன்று பேர் புதிய அமைச்சர்களாகப் பதவியேற்றனர். 26.6.2001 அன்று **வெங்கடாசலம்** என்ற அமைச்சர் நீக்கப்பட்டு, **வளர்மதி ஜெபராஜ்** என்பவர் புதிய அமைச்சராக்கப்பட்டார். அமைச்சர் பதவியில் வெங்கடாசலம் 39 நாட்கள் மட்டுமே இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுபற்றி புது டெல்லியிலிருந்து வெளி வரும் "**இந்தியன் எக்ஸ்பிரஸ்**" 28.6.2001 அன்று தலையங்கத்தில் எழுதும் போது-

❁ "தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா தனக்குத்தானே அமைத்துக் கொண்ட வினோதமான நடத்தையின் விதிகளின்படி கூட ஒரு மாதத்திற்கு மேற்பட்ட குறுகிய காலத்திற்குள்ளாக நான்கு அமைச்சர்களை நீக்கியிருப்பது, குறைவாக விமர்சிப்பதானால் விளையாட்டுத்தனமாக உள்ளது. மாபெரும் தலைவர்களான **ஈ.வெ.ரா., அண்ணா** போன்றவர்களால் வளர்க்கப்பட்ட திராவிட இயக்கத்தில், பகுத்தறிவு ஒரு கொள்கையாக இருந்து வந்தது. ஆனால் ஜெயலலிதா தலைமையில் உள்ள கட்சி அதை துதிபாடுவ தாக மாற்றிவிட்டது. அதன் விளைவாக தற்போது அ.தி.மு.க. ஒரே பெண்ணின் கட்சியாக காட்சியளிக்கிறது.

❁ "அவரிடமோ, அவருடைய கட்சியிலோ உள்கட்சி ஜனநாயகம் இல்லை. தன்னுடைய சொந்தத் தகுதிகளே சந்தேகத்திற்குரிய நிலையில், தனது அமைச்சர்களிடம் உயர்வான தரம் கொண்ட நடத்தைகளை ஜெயலலிதா எதிர்பார்ப்பது அளவுக்கு மீறிய செயலாகும். ஆனால், அவர் நான்கு அமைச்சர்களை நீக்கிய காட்சிகள் போன்ற இசை நாற்காலி நிகழ்ச்சிகள் தன்னுடைய பிரச்சினை களைத் தீர்த்துவிடும் என்று ஜெயலலிதா நினைப்பதாகவே தோன்றுகிறது" என்று எழுதியது.

ஜெயலலிதாவின் "துக்ளக்"தனமான ஒரு மாத கால ஆட்சியில் தமிழகத்தில் மினி எமர்ஜென்சி நிலை ஏற்பட்டுள்ள தாக "**தி ஸ்டேட்ஸ்மேன்**" ஆங்கில ஏடு 23.6.2001 அன்று


தலையங்கம் தீட்டியது. அந்தத் தலையங்கத்தில், மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் கால் பந்துகள்போலப் பந்தாடப் பட்டு, தர்மசங்கடமான பொறுப்புக்களில் நியமிக்கப்பட்டனர் என்றும், காவல் துறையில் முக்கிய பல பொறுப்புகளை வகித்த கூடுதல் டி.ஜி.பி., ஒருவர் ஒரு வாரத்திற்குள் இரண்டு முறை இடமாற்றம் செய்யப்பட்டார் என்றும், இறுதியாக அவர் இலங்கை அகதிகள் முகாமின் முன் உள்ள புறக்காவல் நிலையத் தில் இதுவரை ரோந்து போலீசாருடன் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் நிர்வகித்து வந்த பொறுப்பில் நியமிக்கப்பட்டார் என்றும், சூப்பர் டைம் ஸ்கேல் நிலையில் இருந்த 20 பேர் உட்பட மூன்று டஜன் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் கட்டாயக் காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிட்டி ருந்தது. 25.6.2001 அன்று ஒரு நாளில் மட்டும் 56 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மாற்றப்பட்டார்கள்!

16. காரிருளில், காட்டாட்சி தர்பார்!

அன்று ... ஒரு நாள் ...

நள்ளிரவு 2.30 மணி. நான் ஆலிவர் சாலையில் இருந்த என் இல்லத்தில் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தேன். இரவு 12 மணி வரை படித்து விட்டுத் தூங்க ஆரம்பித்தேன். என் மகள் கனிமொழி ''தாகம்'' என்ற பத்திரிகையிலே எழுதிய ஒரு கட்டுரையைப் படித்துவிட்டு, அதைப்பற்றி என் மனைவியிடம் பேசிக் கொண்டிருந்துவிட்டு, தூங்கச் சென்றேன்.

ஜெயலலிதாவின் காவல் துறையினர் எந்தவிதமான ''வாரண்ட்''டும் இல்லாமல், வாயிற்கதவை உடைத்துக் கொண்டு, படுக்கை அறைவரை வந்து, என்னை எழுப்பிக் கைது செய்வதாகவும், உடனே கிளம்பும்படியும் கூறினார்கள். பக்கத்தில் இருந்த என் மனைவி ராஜாத்திக்கும் எதுவுமே புரியவில்லை. என்ன நடக்கிறதென்றும் தெரியவில்லை. ''சரி - வருகிறேன்'' என்று கூறிவிட்டு, முகத்தைக் கழுவிக் கொண்டு, புறப்படத் தயாரானேன்.



வெளியே இருந்தவர்கள் யாரோ அதற்குள் கோபாலபுரத்திற்கு தொலை பேசி மூலமாகத் தகவல் தெரிவிக்க, இரண்டு நிமிடங்களுக்கெல்லாம் மத்திய அமைச்சராக அப்போதிருந்த தம்பி **முரசொலி மாறன், கலாநிதி மாறன்,** அவர் மனைவி ஆகியோர் வந்து காவல் துறையினரிடம் விசாரிக்க முற்பட, மத்திய அமைச்சராக இருந்த முரசொலி மாறனுக்குப் பதில்




போலீஸ் அதிகாரிகள், என்னை நடக்கவிடாமல் – என் உடலைப் பிடித்து – முரட்டுத்தனமாகச் சித்திரவதை செய்து இழுத்துச் சென்ற கொடிய காட்சி!

கூறவே, எந்தக் காவல் துறை அதிகாரியும் தயாராக இல்லை. என் கையைப் பிடித்தும், வலுக் கட்டாயமாக என்னைத் தூக்கிச் செல்ல வேண்டும் என்பதிலும் தான் காவல் துறையினர் அக்கறை காட்டினார்கள்.

தம்பி மாறனுக்குக் கோபம் வந்து, போலீசாரைத் தடுக்க முற்பட்டபோது, அவரையும் இழுத்துத் தள்ளிவிட்டு, என்னையும் அப்படியே தூக்கிக் கொண்டு இழுத்துச் செல்ல முற்பட்டனர். அன்றைய தினம் காவல் துறையினர் என்னைக் கைது செய்தபோது கைப்பந்தாக, கால் பந்தாக அடித்து உதைத்து அல்லாடச் செய்து மாடிப்படிகளில் போலீசார் இழுத்துச் சென்ற போது, முரட்டு போலீஸ் அதிகாரி ஒருவர் என் தோளைப் பிடித்தும், வலது கையைப் பிடித்தும், முதுகில் அழுத்தியும் தூக்கிய நேரத்தில் என் வலது கையில் ஏற்பட்ட வலி இன்னமும் முழுமையாக நீங்கியபாடில்லை. வலது கையை அதற்குப் பிறகு முழுவதுமாக என்னால் நீட்ட இயலாமலே போய்விட்டது. எத்தனையோ ஆயிரம் உடன்பிறப்புக் கடிதங்கள் எழுதிய இக்கையால் இப்போது எழுதுவதற்கே கடினமாக இருக்கிறது என்று நான் அப்போதே செய்தியாளர்களிடம் கூறியிருக்கிறேன்.

மாடிப்படிகளிலேகூட காவல் துறையினர் என்னைக் கீழே இறங்கவிடவில்லை. குண்டுக் கட்டாகத் தூக்கி வந்த நிலையிலேதான் கீழே இழுத்து வந்து அங்கே உள்ள ஒரு காவல் துறை வாகனத்தில் போட்டார்கள். எல்லாம் ஒரு சில நிமிடங் களிலே நடைபெற்று முடிந்தன. வாகனத்தில் என்னை ஏற்றியதுதான் தாமதம், "சர்"ரென்று அந்த வாகனம் புறப்பட்டு விட்டது. வீட்டிலிருந்து நேராக வேப்பேரி காவல் நிலையத் துக்குக் கொண்டு சென்றனர். அதற்குள் அங்கே எங்கிருந்தோ


கலைஞரை தரதரவென இழுத்துச் சென்றார்
ஆலிவர் சாலை இல்லத்தை உடைத்து புகுந்தார்
டி.ஜி.ஜி. முகமது அலி முர்க்க குணம் கொண்டவர்
தெரிவித்திட்டபிட்டு தினத்தியபித்து கலைஞரை அவமானப்படுத்தினார்

பத்திரிகையாளர்கள் வந்து விட்டார்கள். ஆனால் காவல் துறையினர் அவர்களையும் அனுமதிக்காமல் லாரியில் அள்ளிச் சென்றனர்.

வேப்பேரி காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை தயார் செய்யப்பட்டது. அதன் பிறகு ராஜாஜி ஹாலுக்கு அருகே உள்ள பழைய சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்குப் பக்கத்தில் இருந்த சி.பி., சி.ஐ.டி., அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றனர். ஆனால் அங்கே என்னைக் காண வந்த என் குடும்பத்தினர், **தயாளு, ராஜாத்தி, செல்வி,** மருமகன் **அரவிந்த், கனிமொழி, தமிழரசு** ஆகியோரையெல்லாம் அந்தப் பகுதிக் குள்ளேயே அனுமதிக்கவில்லை. முரசொலி மாறன் மட்டும் மத்திய அமைச்சர் என்ற முறையில் நான் அமர வைக்கப்பட்டிருந்த அறைக்கு வெளியே நிற்பதற்குப் பெரிய மனது வைத்து அனுமதித்திருந்தார்கள்.

மத்திய அமைச்சர் **டி.ஆர்.பாலு** காவல்துறை அதிகாரிகளிடம் சற்று வேகமாகப் பேசிட முற்பட்டபோது, அவரை மத்திய அமைச்சர் என்றும் பார்க்காமல், காவல் துறையினர் தாக்கினர். எந்தச் சம்பவமும் ஒரு ஜனநாயக நாட்டிலே நடைபெறுவ தாகவே தெரியவில்லை. சி.பி., சி.ஐ.டி., அலுவலகத்தில் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக என்னை வைத்திருந்தார்கள்.

ஆனால், நேரம் ஆக ஆக எப்படியோ செய்தி கேள்விப் பட்டுக் கூட்டம் கூட ஆரம்பித்துவிட்டது. எனவே அவசர அவசரமாக என்னை ஒரு வண்டியிலே ஏற்றினார்கள். அந்த வண்டியில் ஏற வந்த முரசொலி மாறனை வெளியே இழுத்து

எறிந்தார்கள். எனக்கு இரண்டு பக்கத்திலும் இரண்டு காவலர்கள் அமர்ந்து கொண்டார்கள். அதற்கு ஓராண்டிற்கு முன்பு கடுமையாக உடல் நலம் பாதிக்கப்பட்டு, செத்துப் பிழைத்த தம்பி முரசொலி மாறனைக் காவல் துறையினர் அன்றைய தினம் பந்தாடினார்கள். அவர் இடுப்பிலே கட்டியிருந்த "கைலி" அவிழ்ந்த நிலையில், அதை எடுத்து மீண்டும் கட்டிக் கொள்ளக்கூட அவரை விட வில்லை என்றால்; எந்த அளவிற்கு ஒரு சர்வாதிகார ஆட்சி அப்போது தமிழகத்திலே நடைபெற்றது என்பதை விளக்கத்தேவையில்லை.



அடியால் வலி தாங்க முடியாமல் அவஸ்தைப்பட்ட நான், அப்பல்லோ மருத்துவமனையில் - சக்கர நாற்காலியில் - சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்டேன்.

அரசினர் விடுதியிலிருந்து பொழுது விடிவதற்குள்ளாகவே என்னைக் கீழ்ப்பாக்கம் டெய்லர்ஸ் சாலையில் உள்ள பெருநகர முதன்மை நீதிபதி **அசோக்குமார்** இல்லத்திற்கே "ரிமாண்ட்" செய்வதற்காக அழைத்துச் சென்றார்கள்.

என்னை அழைத்துச் சென்ற காவல்துறை அதிகாரிகளைப் பார்த்து நீதிபதி அசோக் குமார், Is your heart made of Muscles or Mud?" (உங்கள் இதயம் என்ன, தசையால் ஆனதா? அல்லது களி மண்ணால் ஆனதா?) என்று அவர் அன்றைய தினம் கேட்டது இன்னமும் என் நினைவிலே நன்றாக இருக்கிறது.

"முதல் தகவல் அறிக்கை எங்கே?" என்று நீதிபதி கேட்டார். அதிலேதான் சென்னையில் மேம்பாலம் கட்டியதிலே நான்கு கோடி ரூபாய் ஊழல் நடைபெற்றுள்ளது. அந்த வழக்கின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளேன் என்று கூறப்பட்டிருந்தது. அதே

வழக்கில் என்னோடு சேர்த்து மேயர் தம்பி மு.க. ஸ்டாலின், முன்னாள் தலைமைச் செயலாளர் கே.ஏ.நம்பியார், ஐ.ஏ.எஸ்., மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் ஏ.கே.ஜெகதீசன், ஆர்.எஸ். ஸ்ரீதர், மாநகராட்சிப் பொறியாளர் சேதுராமன் ஆகியோரும் இணைக்கப் பட்டிருந்தனர்.

நீதிபதி அசோக்குமார் ஜூலை 10ஆம் தேதிவரை ரிமாண்ட் செய்வதாகக் கூறினார். ஜூலை 3ஆம் தேதியன்று ஜாமீன் மனு தாக்கல் செய்யலாம் என்றும் தெரிவித்தார். மேலும் "என்னை சென்னை அரசினர் பொது மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று, மருத்துவர்கள் பரிசோதனை செய்த பிறகே, சென்னைச் சிறைக்கு அழைத்துச் செல்ல வேண்டும்" என்றார்.

ஆனால், மருத்துவமனைக்கே அழைத்துச் செல்லாமல், சென்னை சிறை வாசலில் இருந்தபடியே வேலூர் சிறைக்குக் கொண்டு செல்வதற்கான முயற்சியிலே காவல் துறையினர் ஈடுபட்டார்கள். நான் சிறை வாசலிலே அமர்ந்து காவல் துறையினரின் அந்த அடக்குமுறையைக் கண்டித்துப் போராட்டம் தொடங்குவதாக அறிவித்த பிறகுதான், அவர்கள் வேலூர் கொண்டு செல்லும் முயற்சியைக் கைவிட்டனர்.

என்னைக் கைது செய்ததுபோலவே, தம்பி ஸ்டாலின் வீட்டிற்கும் சென்று, காவல் துறையினர் அநாகரீகமாக நடந்து கொண்டு, தாக்குதல் நடத்தி அவரையும் கைது செய்தார்கள்.

என் கைது பற்றிக் கேள்வி கேட்ட ஒரே குற்றத்திற்காக மத்திய அமைச்சர்களாக இருந்த முரசொலி மாறனை காவல் துறையினர் தாக்கி, **அப்பல்லோ** மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், கைது செய்தார்கள். மாறன் வீட்டில் காவல் துறையினர் உள்ளே நுழைய முயற்சித்தபோது, அதைத் தடுக்க முயற்சித்ததற்காக மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலுவையும் கைது செய்து வேலூர் சிறையில் அடைத்தார்கள்.

★ ★ ★

குடியரசுத் தலைவராக அப்போதிருந்த திரு.**கே.ஆர். நாராயணன்** அவர்கள், ஆளுநராக இருந்த **பாத்திமா பீவியைத்** தொடர்பு கொண்டு, ''தமிழ்நாட்டில் என்னதான் நடக்கிறது?'' என்று விசாரித் ததோடு, விவர அறிக்கை யினையும் அனுப்பிடுமாறு கூறினார். குடியரசுத் தலைவர் பிரதமர் அலுவலகத்தோடும் தொடர்புகொண்டு கேட்டார். பிரதமர் **வாஜ்பய்** அவர்கள் முதலமைச்சரோடு தொடர்பு கொண்டு பேச முயற்சித்து முடியாததால், தலைமைச் செயலாளரிடம் தொடர்புகொண்டு பேசினார்.



30.6.2001 அன்று காலையில், அண்ணா அறிவாலயத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணி கட்சிகளின் கூட்டம் நடைபெற்று, அதிலே நிறைவேற்றிய தீர்மானத்தில், 2.7.2001 அன்று பொது வேலை நிறுத்தம் நடத்துவதென்று முடிவெடுக் கப்பட்டது.


அ.தி.மு.க.வுடன் தோழமைகொண்டு 2001ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்ட த.மா.கா. தலைவர், மக்கள் தலைவர் **மூப்பனார்** அவர்கள், ''இதுபோன்ற முறைகேடான நடவடிக் கைகளை ஜனநாயகம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது. முன்னாள் முதலமைச்சரும், தி.மு.க. தலைவருமான கலைஞர் அவர்களைக் கைது செய்வதற்காக நடு இரவில் அவரது இல்லம் சென்று, காவல் துறையினர் வயது முதிர்ந்த ஒரு அரசியல் தலைவரிடம் நடந்து கொண்ட முறை தவறானது - கண்டிக்கத்தக்கது'' என்று கூறினார்.

பிரதமர் **வாஜ்பய்,** முன்னாள் பிரதமர்கள் **வி.பி. சிங், சந்திரசேகர்,** உள்துறை அமைச்சர் அத்வானி, த.மா.கா. பேரவைத் தலைவர் **ப. சிதம்பரம், சந்திரபாபு நாயுடு,** நவீன்



என்னைச் சித்திரவதை செய்து கைது செய்ததை நேரில் பார்த்த, என் துணைவியார் ராஜாத்தியின் தாயார் சிவபாக்கியம் அம்மையார் அதிர்ச்சியால் மரணமடைய - நான் அவரது திருவுருவப் படத்திற்கு மரியாதை செலுத்தினேன்.

பட்நாய்க், மத்திய அமைச்சர் **அருண் ஜெட்லி,** முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி **வி.ஆர். கிருஷ்ணய்யர்,** ம.தி.மு.க. பொதுச் செயலாளர் **வைகோ,** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலத் தலைவர் **சங்கரய்யா,** பா.ம.க. நிறுவனர் டாக்டர் **ராமதாஸ்,** கவிப்பேரரசு **வைரமுத்து,** எம்.ஜி.ஆர். கழகத் தலைவர் **ஆர்.எம். வீரப்பன்,** விடுதலை சிறுத்தைகள் இயக்கத் தலைவர் **திருமாவளவன்,** புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் **கிருஷ்ணசாமி,** பா.ஜ.க. தலைவர் **ஜனா கிருஷ்ணமூர்த்தி,** சிவசேனைத் தலைவர் **பால் தாக்கரே,** காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் **ஜெய்பால் ரெட்டி,** தமிழ்நாடு மாநில இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் பேராசிரியர் **காதர் மொய்தீன்,** பெருங்கவிக்கோ **வா.மு. சேதுராமன்,** உழவர் உழைப்பாளர் கட்சித் தலைவர் **கு. செல்லமுத்து,** தமிழக பா.ஜ.க.வின் பொதுச் செயலாளர் **இல. கணேசன்,** மத்திய ஊரக வளர்ச்சித்



கே.ஆர்.நாராயணன்

துறை அமைச்சராக இருந்த **வெங்கைய நாயுடு,** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் செய்தித் தொடர்பாளரும், தேசியச் செயலாளருமான **ஷமீம் பைசி,** 'மாலைமுரசு' நிர்வாக ஆசிரியர் **பா.இராமச்சந்திர ஆதித்தன்,** சுப்ரீம் ஸ்டார் **சரத்குமார்,** பேராயர் **எஸ்றா சற்குணம்,** அகில இந்திய மூவேந்தர் முன்னேற்றக் கழகத் தலைவர் டாக்டர் **சேதுராமன்,** இலக்கியச் செல்வர் **குமரி அனந்தன்,** அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளர் **அம்பிகா சோனி,** எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. பொதுச் செயலாளர் **எஸ். திருநாவுக்கரசர்,** தமிழர் தேசிய இயக்கத் தலைவர் **பழ.நெடுமாறன்,** இந்து பத்திரிகையாளர் **என். ராம்,** தமிழ் பா.ம.க. தலைவர் **தீரன்,** சேலம் **அமானுல்லாகான்,** எம்.ஜி.கே. **நிஜாமுதீன், கு.ப. கிருஷ்ணன், ஜே.எம். ஆரூண்,** மக்கள் தமிழ் தேசத் தலைவர் **கண்ணப்பன், பழ. கருப்பையா,** முன்னாள் சி.பி.ஐ. இயக்குனர் **மாதவன்,** ஆசிரியர் சங்கத் தலைவர் **க. மீனாட்சி சுந்தரம், சாம் ஏசுதாஸ்** - ஆகியோர் என் கைதுக்காகத் தமிழக அ.தி.மு.க. அரசைக் கடுமையாகத் தாக்கி அறிக்கைகளை விடுத்திருந்தனர்.

சூப்பர் ஸ்டார் **ரஜினிகாந்த்** விடுத்த அறிக்கையில், "தென்னிந்தியாவின் மூத்த அரசியல் தலைவரை - 78 வயது முதியவரை - 60 ஆண்டுகளுக்கு மேலாகத் தன்னை சமூகப் பணியில் ஈடுபடுத்திக் கொண்டவரை அநாகரீகமான முறையில் கைது செய்திருப்பது வன்மையாகக் கண்டிக்கத் தக்கது. கலைஞர் அவர்கள் கைது செய்யப்பட்டது என்னை மட்டுமல்லாமல், உலகெங்கும் வாழும் ஒவ்வொரு தமிழ் உள்ளத்தையும் கலங்க வைத்துள்ளது" என்று கூறினார்.




ஆளுநர் பாத்திமா பீவி

1.7.2001 அன்று ''இந்து'' நாளிதழ் எழுதிய தலையங்கத்தில், ''முன்னாள் முதல்வரும், தி.மு.க. தலைவருமான மு. கருணாநிதி கைது செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சி அரசியல் அராஜகத்தின் அடையாளமான நெருக்கடி நிலையின் நாட்களின் கருப்பு நினைவுகளை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வந்துள்ளது'' என்று தொடங்கி - மிக விரிவாக ஆட்சியினரைக் கண்டித்து எழுதியது.

அதைப்போலவே **இந்தியன் எக்ஸ்பிரஸ்** ஆங்கில நாளிதழும் கடுமையாகத் தலையங்கம் தீட்டியது.

8.7.2001 தேதியிட்ட **''ஆனந்தவிகடன்''** தனது தலையங்கத்தில், ''நள்ளிரவைத் தாண்டி, கருணாநிதியின் வீட்டைடப் போலீசார் அதிரடியாக முற்றுகையிட்ட காரணம் என்ன? அவருடைய அரசியல் அனுபவத்துக்கும், வயதுக்கும், மதிப்பும் மரியாதையும் கொடுக்காமல், ஏதோ பிக்பாக்கெட் கேடி மாதிரியாக அந்த முதியவரை சுற்றி வளைத்து, நெருக்கிப் பிடித்து, நெட்டித் தள்ளி, நியாய தர்மங்களை மீறி போலீசார் செயல்பட்டது ஏன்? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டிய கடமை காவல் துறைக்கும் அதற்குப் பொறுப்பு வகிக்கும் முதல்வருக்கும் இருக்கிறது. கைவசம் பதவி இருக்கும் ஆணவத்தில் வஞ்சம் தீர்க்கும் வன்மத்தோடு எதிரிகளை வீழ்த்த நினைக்கும் சர்வாதிகாரப் போக்கு என்றுமே, எங்குமே ஜெயித்ததாக வரலாறு இல்லை'' என்று எழுதியது.

நான் கைது செய்யப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டதை தொலைக்காட்சியில் கண்ட உழவர் உழைப்பாளர் கட்சியின் நிறுவனத் தலைவரான **வன்னிய அடிகளார்** அவர்கள், மாரடைப்பு ஏற்பட்டு, 30.6.2001 அன்று இயற்கை எய்தினார். அவரைப்போலவே திருவாரூர் மாவட்டம், அரசவனங்காடு



மத்திய அமைச்சர்கள் முரசொலி மாறனும், டி.ஆர்.பாலுவும், பிரதமர் வாஜ்பயைச் சந்தித்து - தமிழகத்திலே நடைபெற்ற அராஜகச் சம்பவத்தை விளக்கினார்கள்.

கிராமத்தைச் சேர்ந்த **சம்பந்தப் பத்தர்,** கரூர் மாவட்டம் **தனம்மாள்,** கோவையில் **ஞானவேல்,** திருபுவனம் **வரதராசன்,** ராமனாதபுரம் **முகமது அலி ஜின்னா,** கரூர் **ராஜமாணிக்கம்,** கொட்டவாக்கம் **மோகன்,** மயிலாடுதுறை அருகே விவசாயி **கிருஷ்ணமூர்த்தி** ஆகியோர் உயிர் இழந்தார்கள். விருதாசலம் தொலார் கிராமத்தைச் சேர்ந்த **பூமாலை** தீக்குளித்து தன்னை மாய்த்துக் கொண்டார். உடுமலைப் பேட்டை **குமார்** என்பவரும் தீக்குளித்தார். மேலும் விழுப்புரம் **மல்லிகா,** தஞ்சை **சி.தண்டாயுதபாணி,** திருவண்ணாமலை சண்முகம், சிவகங்கை **அரசப்பன்,** ராமேஸ்வரம் **சோமு சேர்வை,** தர்மபுரி **அமிர்தாம்பாள்,** உடையார்பாளையம் **வசந்தி,** விழுப்புரம் **சையத்துனிசா,** திட்டக்குடி **மு. சீனிவாசன்,** புளியங்குடி ராமையா, ஒட்டன்சத்திரம் **மொட்டை நாயக்கர்,** எழும்பூர் **அ.மு. மாசிலாமணி,** பூலாம்பட்டி **குப்புசாமி,** பம்மல் திருமதி **லீலாசாமி,** ஒட்டன்சத்திரம் **ஈஸ்வரி,** ஊட்டி **வி.எல்.கே.அசோக்,** நரசிங்கபுரம் **பொன். ராமன்,** பெரமனூர் **செட்டியப்பன்,** கரூர் பள்ளப்பட்டி **ஏ.என். அப்துல் வகாப்,** காளப்பட்டி **என். ஞானசேகரன்,** கடலூர் **சக்திவேல்,** அரவக்குறிச்சி **காளிமுத்து,** தஞ்சை வடக்கு வாசல் **உஷா,** முள்ளிப் பள்ளம் **புவனேஸ்வரி,** இனாம்புலியூர்




சிறை வாசலில் கட்டாந்தரையில் உட்கார வைக்கப்பட்டிருந்த நானும், என்னைப் பின் தொடர்ந்து வந்த என் மகள் கனிமொழியும்

சின்னதுரை, நாமக்கல் **வரதராசன்,** புதுவை **அரிதாஸ்,** சென்னை **முருகேசன்** உட்பட - நான் கைது செய்யப்பட்ட காரணத்தால், அப்போது 67 பேர் தங்கள் இன்னுயிரைப் பலி கொடுத்தனர். அதுபற்றி உடனடியாகப் பேராசிரியர், "யாரும் அப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடக் கூடாது" என்று அறிக்கை விடுத்தார். என்னை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென்று தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலே கழக முன்னணியினர் **கோ.சி. மணி, வீரபாண்டி ஆறுமுகம், பொன்முடி, கே.என். நேரு, சற்குணப் பாண்டியன், எம்.ஆர்.கே. பன்னீர்ச்செல்வம்,** புலவர் **செங்குட்டுவன்** உள்ளிட்டோர், சாலை மறியல் போன்ற போராட்டங்களில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டார்கள்.

நான் ஆலிவர் சாலை இல்லத்தில் நள்ளிரவில் கைது செய்யப் பட்ட நிகழ்ச்சியை நேரில் கண்ட துணைவியார் ராஜாத்தியின் தாயார், அந்தக் கொடுமையைத் தாங்கிக் கொள்ள முடியாமல், நான் கைது செய்யப்பட்டதற்கு மறுநாள் உயிரிழந்தார். அவர்களின் உடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காகச் செல்லக் கூட காவல் துறையினர் என்னை அனுமதிக்க வில்லை.

தேசிய ஜனநாயகக் கூட்டணியின் சார்பில் அதன் அமைப் பாளர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் தலைமையில் குழு ஒன்று



மூப்பனார்


சென்னைக்கு வந்தது. அந்தக் குழுவினர் சென்னை சிறைக்கு வந்து என்னைச் சந்தித்தது. அவர்கள் என்னைச் சந்திக்க உள்ளே வந்தபோது, அவர்களுடன் வந்த **முரசொலி செல்வத்தையும்,** மாறன் மகள் **அரசியையும்** காவல் துறையினர் என்னைப் பார்க்க அனுமதிக்க மறுத்துவிட்டார்கள்.

பின்னர் மத்தியக் குழுவினர் ஆலிவர் சாலையில் உள்ள என் இல்லத்திற்குச் சென்று, அங்கே காவல் துறையினர் செய்திருந்த கொடுமைகளையெல்லாம் நேரில் கண்டதோடு, அங்கேயிருந்த ராஜாத்தியின் தாயார் உடலுக்கும் அஞ்சலி செலுத்தினார்கள்.

தமிழகத்தில் நடைபெற்ற இத்தகைய கொடுமைகளைப் பற்றி தமிழக **ஆளுநர்** மத்திய அரசுக்கு எந்த அறிக்கையையும் அனுப்பாததால், குடியரசுத் தலைவரும், பிரதமரும் ஆளுநரைத் தொடர்புகொண்டு அறிக்கை கேட்டார்கள். 1.7.2001 அன்று காலையில் பிரதமர் வாஜ்பய் தலைமையில் மத்திய அமைச்சரவைகூடி, மறுநாள் காலை 9 மணிக்குள் ஆளுநர் அறிக்கை அனுப்ப வேண்டுமென்று தெரிவித்ததின் அடிப்படையில், ஆளுநர் அறிக்கை அனுப்பினார். அந்த அறிக்கை குறித்தும் மத்திய அமைச்சரவை விவாதித்தது. தமிழக ஆளுநரை உடனடியாகத் திரும்பப் பெறவேண்டுமென்ற முடிவு எடுக்கப்பட்டது.

மத்திய அமைச்சரவையின் முடிவினைத் தொடர்ந்து, தமிழக ஆளுநராக இருந்த பாத்திமா பீவி 1.7.2001 அன்று பதவி விலகினார். ஆந்திர ஆளுநர் டாக்டர் **சி.ரங்கராஜன்** தமிழக ஆளுநராகக் கூடுதல் பொறுப்பேற்றார்.

என்னை விடுதலை செய்யக் கோரி 2.7.2001 அன்று தமிழகம் முழுவதும் நடத்தப்பட்ட முழு அடைப்பு மிகப்பெரும் வெற்றி




நடிகர் ரஜினிகாந்த்

யடைந்தது. ஒரு கடைகூட அன்று தமிழகத்திலே திறக்கப்படவில்லை. முழு அடைப்பை யொட்டி, பனகல் பூங்கா அருகில் மறியலில் ஈடுபட்ட பா.ஜ.க. தலைவர் **கிருபாநிதி, வி.கே.லெட்சுமணன்** ஆகியோர் கைது செய்யப்பட்டு, சிறையிலே அடைக்கப்பட்டனர்.

பா.ம.க. நிறுவனர் டாக்டர் **ராமதாஸ்** அவர்கள், **ஜி.கே.மணி, ஏ.கே. மூர்த்தி** ஆகியோர் உடன்வர சென்னை சிறைச் சாலைக்கே வந்து என்னைச் சந்தித்தார். மத்திய அமைச்சர்கள் முரசொலி மாறன், டி.ஆர்.பாலு ஆகியோர்மீது தமிழக அரசு தொடுத்த வழக்குகளைத் திரும்பப் பெற்றனர்.


4.7.2001 அன்று மத்திய அரசின் எச்சரிக்கை - நீதிபதி கண்டனம் ஆகியவற்றால் ஜெயலலிதா அரசு பணிந்து, மத்திய சிறையிலிருந்து என்னை விடுதலை செய்தது. சிறையிலிருந்து வெளியான நான், நேராக அண்ணா அறிவாலயம் சென்று, அங்கே காத்திருந்த நூற்றுக்கணக்கான செய்தியாளர்களைச் சந்தித்து, அவர்களின் பல்வேறு கேள்விகளுக்கு விளக்க மளித்தேன்.

இந்த வழக்கில் நீதிமன்றம் என்னை எப்படி விடுவித்தது என்பது பற்றிச் சற்று விரிவாகக் கூற வேண்டும். சென்னை மத்திய சிறையிலே இருந்த என்னைச் சந்திக்க அனுமதிக்க வேண்டுமென்று கோரி சென்னையைச் சேர்ந்த வழக்கறிஞர் **கனகராஜ்,** சென்னை உயர் நீதி மன்றத்திலே ஒரு **ஹேபியஸ் கார்பஸ்** மனுவை தாக்கல் செய்தார். அந்த வழக்கு, டிவிஷன் பெஞ்ச் நீதிபதிகள் நாராயண குரூப், **ஏ. ராமமூர்த்தி** ஆகியோர் முன்பு *3.7.2001* அன்று காலையில் விசாரணைக்கு வந்தது. மனுதாரர் சார்பாக வழக்கறிஞர் சங்கரசுப்பும், அரசு தரப்பில்



என்னைக் கைது செய்ததற்காக, தமிழகம் –
புதுவை மாநிலங்களில் நடைபெற்ற
முழு அடைப்பின் காட்சிகள்!

அரசு வழக்கறிஞர் **நவநீத கிருஷ்ணனும்** ஆஜரானார்கள்.
அப்போது நடந்த வாதம் வருமாறு :-



நீதிபதிகளின் கண்டனம் காரணமாக - அரசு என்னை விடுதலை செய்ய - மத்திய சிறையிலிருந்து வெளிவந்த என்னைப் பல்லாயிரக்கணக்கான கழகத் தோழர்கள் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

சங்கரசுப்பு :- முன்னாள் முதல்வர் கருணாநிதியைக் கைது செய்யும்போது போலீசார் அவரை அடித்து சித்ரவதைப் படுத்தியுள்ளனர். இப்படிக் கொடூரமாகத் தாக்கப்பட்டவரைச் சந்திக்க வழக்கறிஞர் என்ற முறையில், அவருக்கு சட்ட உதவி தர மத்திய சிறைக்குச் சென்றோம். அனுமதி மறுத்துவிட்டனர். அவரைச் சிறையில் சந்திக்க அனுமதிக்க வேண்டும்.

அரசு வழக்கறிஞர் **நவநீதகிருஷ்ணன் :-** இந்த வழக்கு விசாரணைக்கு உகந்தது அல்ல, இதைத் தள்ளுபடி செய்யவேண்டும்.

நீதிபதிகள் :- (அரசு வழக்கறிஞரைப் பார்த்துக் கோபமாக) இது முக்கிய வழக்கு. இதுபற்றிக் கொஞ்சம்கூட கவலைப் படாமல் சர்வ சாதாரணமாகக் கூறுகிறீர்களே? சென்னையில் மக்கள் குடிநீர் இல்லாமல் குடத்தை எடுத்துக் கொண்டு தெருத் தெருவாக அலைகிறார்கள். இந்தக் குடிநீர் பஞ்சம் இருக்கும் போது மாநகராட்சியைக் கலைக்கக் கூறி நோட்டீஸ் தருகிறார்கள். இது நியாயமா? குடிநீர் பிரச்சினையைத் தீர்க்காமல், இப்படிக் கைது செய்து அதை திசை திருப்புவது சரியா? தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது. கிரிமினல் குற்றவாளி என்று தனி நீதிமன்றம் ஜெயலலிதாவைக் கூறி அவருக்கு இரண்டாண்டுக்குமேல் சிறைத் தண்டனை கொடுத் துள்ளது. இப்படிப்பட்டவர் முதல்வராகப் பதவியேற்றுள்ளார்.

இவர் முதல்வராக இருப்பதால் அரசியல் தலைவர்களைக் கைது செய்து சிறையில் தள்ளுகிறார். இது முக்கியப் பிரச்சினை. இந்த வழக்கிற்குத் தெளிவாக உடனே பதில் கூற வேண்டும். கருணாநிதியைச் சந்திக்க அனுமதிக்காதது தவறு இல்லையா? மதியம் 2.15 மணிக்கு வழக்கு விசாரணையைத் தள்ளி வைக்கிறோம். அப்போது அரசு தலைமை வழக்கறிஞர் நீதி மன்றத்தில் ஆஜராகி விளக்கமளிக்க வேண்டும்.

(பிற்பகல் விசாரணையின்போது)

நீதிபதிகள் :- தற்போது ஜெயலலிதாவின் நிலை தடுமாற்றமாக உள்ளது. இந்த நிலையில் ஜெயலலிதா தனது கோபத்தை கட்டுப்படுத்தியிருக்க வேண்டாமா?

அட்வகேட்ஜெனரல் என்.ஆர். சந்திரன் :- தடுமாற்றம் இல்லை - தெளிவாக உள்ளார்.

நீதிபதிகள் :- அரசு சரியாக நடக்கவில்லை. இடைக்கால காபந்து அரசு செயல்படுவதுபோல உள்ளது. இதில் ஜெயலலிதா கொள்கை முடிவு சரியானது அல்ல.

அட்வகேட் ஜெனரல் :- தற்போது கிடைத்த தகவல்படி கலைஞரை அரசு விடுதலை செய்து விட்டதாகக் கருதுகிறேன்.

(நீதி மன்றத்தில் நடைபெற்ற விசாரணை விவரம் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு எட்டியதன்பேரில், அரசு என்னை விடுவிக்க நடவடிக்கை மேற்கொண்டது)

★ ★ ★

5.7.2001 அன்று ஒரு சில நாட்கள் ஓய்வெடுக்கும்படி மருத்துவர்கள் டாக்டர் **பி.ராமமூர்த்தி,** டாக்டர் **தணிகாசலம்,** டாக்டர் **கோபால்** ஆகியோர் வலியுறுத்தியதன்பேரில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன்.

அதே நாளில் **"இந்து"** நாளேடு எழுதிய தலையங்கத்தில், "கடமையை நிறைவேற்றுகிறேன் என்ற பெயரில், சட்டத்தைக் கையில் எடுத்த குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும்" என்று வலியுறுத்தி எழுதியது. 9ஆம் தேதிவரை மருத்துவமனையிலே இருந்துவிட்டு இல்லம் திரும்பினேன்.



சிறையிலிருந்து விடுதலையான என்னை – என் குடும்பத்தாரும் – சுற்றத்தாரும் – இயக்கத் தோழர்களும் – தோழமைக் கட்சியினரும் – மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்

அந்த மாதத்திலேயே மத்திய அரசின் உத்தரவின்படி தேசிய பாதுகாப்பு (இசட் பிரிவு) கறுப்புப் பூனைப் படையினர் பாதுகாப்பு எனக்கு வழங்கப்பட்டது.

நான் கைது செய்யப்பட்டதை அடுத்து, திரையுலகைச் சேர்ந்த **ரஜினிகாந்த், கமலஹாசன், விஜயகாந்த், சத்யராஜ், சரத்குமார், நெப்போலியன், பார்த்திபன்** போன்ற பலரும் கண்டனம் தெரிவித்திருந்தனர்.

அதிலும் சரத்குமார், தனது அறிக்கையில் அரசை வேகமாக எப்போதும்போலத் தாக்கியிருந்தார். அதனால் ஆத்திர மடைந்த அ.தி.மு.க.வினர், 6.7.2001 அன்றிரவு 12 மணி அளவில் ஆட்டோவில் வந்து சரத்குமார் வீட்டைச் சரமாரி யாகத் தாக்கினார்கள்.

தாக்குதல் நடைபெற்றபோது நல்லவேளையாக சரத்குமார் வீட்டில் இல்லை. அவரது துணைவியார் திருமதி **ராதிகாவும்,** மகனும் வீட்டிலே இருந்திருக்கிறார்கள். காவல் துறையினரிடம் புகார் செய்தபோதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை.


★ ★ ★

17. "நீ, எங்கிருந்தாலும் வாழ்க!" என்றார் அண்ணா!

அ.தி.மு.க. அரசின் காவல் துறை என்னை கைது செய்த போது, அவர்கள் எந்த அளவிற்கு என்னை முரட்டுத்தனமாகத் தாக்கி இழுத்துச் சென்றனர் என்பதையெல்லாம், "சன் தொலைக்காட்சி நிறுவனத்தினர்" உடனடியாக அங்கே விரைந்து வந்து, காவலர்களின் மிரட்டலுக்கு அஞ்சாமல் படம் எடுத்தனர்.

போலீஸ் அதிகாரிகள் என்னைத் தாக்கியதைப் பார்த்த தயாநிதி மாறன், "ஐயோ - கொல்றாங்களே! கொல்றாங்களே!" என்று கதறித் துடித்த ஒலியையும்கூட அந்தச் செய்தியிலே கேட்ட தமிழ்நாட்டு மக்கள் எல்லாம் கதறித் துடித்தனர். ஏடுகள் எல்லாம் அந்தக் கைது நிகழ்வைக் கடுமையாகத் தாக்கி எழுதியிருந்தன.

காவல் துறையினர் நடத்திய காட்டு மிராண்டித் தாக்குதல் காரணமாக என் வலது தோள் தசையில் ஏற்பட்ட உள் காயத்தில் இரத்தக் கசிவு இருப்ப தாகவும், அதனால் தான் தொடர்ந்து வலி ஏற்படுகிறது என்றும் மருத்து வர்கள் சொன்னதின்பேரில் 1-8-2001 அன்று மீண்டும் அப்பல்லோ மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டேன். 2-8-2001 அன்று வி.பி. சிங் அவர்கள் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு, கையிலே எனக்கு ஏற்பட்ட வலி குறித்து விளக்கமாக விசாரித்த தோடு, மருத்துவர்களின் ஆலோ






போலீசாரின் காட்டுமிராண்டித்தனத்தால், என் கையில் ஏற்பட்ட வலியின் காரணமாக - நான் மீண்டும் அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டேன்.

சனைப்படி சில நாட்கள் கைக்கு பூரண ஓய்வு கொடுக்க வேண்டுமென்றும் வற்புறுத்தினார்.

அ.தி.மு.க. அரசு என்னைக் கைது செய்ததையொட்டி நாடு முழுதும் எழுந்த எதிர்ப்பின் காரணத்தால், அரசின் சார்பில் நீதிபதி **ஏ.ராமன்** தலைமையில் விசாரணைக் கமிஷன் ஒன்று ஒப்புக்காக நியமிக்கப்பட்டது. அந்த விசாரணைக் கமிஷனை புறக்கணிப்பது என்று தி.மு.கழகம் முடிவெடுத்தது. ஆனால் ஜெயலலிதா அதைக் கிண்டல் செய்து, நீதிபதி ராமன் கமிஷனைச் சந்திக்க நாங்கள் தயங்குவதாகக் குறிப்பிட்டார்.

1998ஆம் ஆண்டு கோவை குண்டு வெடிப்பு சம்பவத்திற் காகத் தி.மு.கழக ஆட்சியில் நீதிபதி **கோகுலகிருஷ்ணன்** தலைமையில் விசாரணைக் கமிஷன் நியமித்தபோது, ஜெயலலிதா 20-6-1998 தேதிய பத்திரிகைகளில் "தமிழக அரசு அமைத்துள்ள நீதிபதி கோகுலகிருஷ்ணன் விசாரணைக் கமிஷன்மீது நம்பிக்கை இல்லை - எனவே அந்த விசாரணையைப் புறக்கணிக்கிறோம்" என்று அறிக்கை கொடுத்திருந்ததை நான் நினைவூட்டினேன்.

"அ.தி.மு.க. அரசில் நியமித்த விசாரணைக் கமிஷன்மீது நம்பிக்கை இல்லையா?" என்று என்னிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, "நீதிபதிமீது எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது, ஆனால் அ.தி.மு.க. அரசின்மீது நம்பிக்கை இல்லை. விசாரணைக் கமிஷன் என்ற ஒன்றை அறிவித்துவிட்டு, விசாரணைக்குப் பிறகு அந்தக் கமிஷன் என்னென்ன முடிவுகளைச் சொல்ல வேண்டுமென்று இந்த அரசு நினைக்கிறதோ, அதை யெல்லாம் முன்கூட்டியே அரசின் சார்பில் தெரிவித்து விட்டார்கள்.



வி.பி.சிங்

அதற்குப் பிறகு அந்தக் கமிஷனிடம் எப்படி நம்பிக்கை வரும்?'' என்று சொன்னேன்.

மேலும் செய்தியாளர்கள், என்னைக் கைது செய்தது பற்றி ''மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை என்றால்?'' என்று கேட்ட போது, ''மத்திய அரசின் இதே நிலை நீடித்தால் எங்கள் நிலை பற்றி யோசிப்போம்'' என்று கூறினேன்.

''அரசியல் சட்டப்படி மாநில அரசை எச்சரிக்கை செய்யக் கூடிய அதிகாரம் மத்திய அரசுக்குக் கிடையாது என்று ஜெயலலிதா கூறுகிறாரே?'' என்று செய்தியாளர்கள் கேட்டபோது -

''1998ஆம் ஆண்டு ஜெயலலிதா தமிழகத்தில் தி.மு.கழக அரசை உடனே அகற்றுவதற்கு முறையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக்கொண்டும், மாநில அரசுகளைக் கலைக்க வகைசெய்யும் அரசியல் சட்டத்தின் 356வது பிரிவு இருக்கும்வரை, அதை மத்திய அரசு பயன்படுத்தலாம் என்றும் பேசியது, 16.4.1998 அன்றே ஏடுகளில் வெளி வந்திருக்கிறது!'' என்று விளக்கினேன்.

★ ★ ★

மாநிலங்களவைக்கு பா.ம.க. விற்கு ஓர் இடம் வழங்குவதாக அ.தி.மு.க. தலைவி அளித்த உறுதிபற்றி ஒரு பிரச்சினை எழுந்தது. அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா தோழமைக் கட்சிகளை எந்த அளவிற்கு மதிக்கக் கூடியவர் - மரியாதை தரக் கூடியவர் என்பதை தமிழ்நாடு - ஏன், அகில இந்தியாவும் நன்கறியும். பாரதப் பிரதமராக இருந்த பா.ஜ.க. தலைவர் வாஜ்பய் அவர்களே, ஜெயலலிதாவின் தோழமைபற்றி

சென்னைக் கூட்டத்தில் பேசியதை நான் ஏற்கனவே எழுதியிருக் கிறேன். அந்த வரிசையில் 6-7-2001 அன்று திண்டிவனத்தில் பா.ம.க. நிறுவனர் டாக்டர் **ராமதாஸ்** அளித்த பேட்டியின் சுருக்கம் வருமாறு :-




பா.ம.க.நிறுவனர் ராமதாஸ்

- ‘‘ஜெயலலிதா தேர்தலுக்கு முன்பு எங்களுக்கு மிகுந்த மரியாதை அளித்தார். ராஜ்ய சபை சீட் தருவதாகக் கூறினார். ஆனால் தேர்தல் முடிந்த பிறகு தலைகீழாக மாறிவிட்டார். இப்போது பல்வேறு காரணங்களைக் காட்டி, எங்களுக்கு சீட் தர மறுக்கிறார். அதைவிட அவர் எங்களை நடத்திய விதம் மிகவும் அவமானகரமாக இருந்தது.

- ‘‘இந்திய நாட்டின் பிரதமரே எனது வசதிக்கேற்ப நேரத்தை ஒதுக்கி சந்திக்க அனுமதி தந்தார். ஆனால், எங்கள் தயவால் தேர்தலில் வெற்றி பெற்ற ஜெயலலி தாவை சந்திக்க நான் அனுமதி கேட்டேன். அதற்கே என்னைப் பல நாட்கள் காக்க வைத்தார். தொலை பேசியில் ஜெயலலிதாவோடு பேச முயற்சி செய்தேன், பேச முடியவில்லை. என்னோடு தொலைபேசியில் பேச ஜெயலலிதா தயாராக இல்லை. பல நாட்களுக்குப் பிறகு சந்திக்க அனுமதி தந்தார். சென்றபோதும் ஒரு மணி நேரம் காக்க வைத்தார். அப்போதும்கூட உரிய மரியாதை தந்து பேசவில்லை.

- ‘‘ஜெயலலிதா இப்போது அமர்ந்திருக்கும் முதல் அமைச்சர் நாற்காலி எங்கள் உழைப்பால் கிடைத்தது. எங்கள் தயவு இல்லாமல் அவர் ஆட்சி அமைத்திருக்க முடியாது. ஆனால், அதையெல்லாம் மறந்துவிட்டு எங்களை அவமரி யாதை செய்கிறார். மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம் என்பதை அறிந்தவன் நான். ராஜ்யசபை




29.7.2001 அன்று சென்னையில் நடைபெற்ற பொதுக் குழுவில், என்னைக் கைது செய்தபோது தற்கொலை செய்து கொண்ட 67 கழகத் தோழர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 50,000 ரூபாய் நிதி அளிக்க முடிவு செய்யப்பட்டது!

சீட்டிற்காக எனது தன்மானத்தை இழக்க நான் தயாராக இல்லை.''

வாஜ்பய் அவர்களின் பேச்சு - டாக்டர் ராமதாஸ் அவர்களின் இந்த பேட்டி - இதையெல்லாம் பார்த்த பிறகாவது தமிழ்நாட்டிலே உள்ள கட்சிகள் ஜெயலலிதாவைப் புரிந்து கொண்டார்களா என்றால் எனக்கு அதுபற்றிச் சந்தேகம்தான்!

டாக்டர் ராமதாசை தான் அவமதிக்கவில்லை என்றும், காக்க வைக்கவும் இல்லை என்றும், தன் சுய லாபத்துக்காக சந்தர்ப்ப சூழ்நிலைக்குத் தக்கவாறு கூட்டணி அமைப்பதும், நினைத்த காரியத்தைச் சாதித்துக் கொண்டபிறகு வெளியேறுவதும் ராமதாசுக்கு வழக்கமாகப் போய்விட்டது என்றும் ஜெயலலிதா பதில் அறிக்கை வெளியிட்டதோடு -

''1998 மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு டெல்லியில் வாஜ்பய் இல்லத்தில் நடைபெற்ற பா.ஜ.க. கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கூட்டத்துக்கு தமிழகத்தில் இருந்து என்னை மட்டும் அழைத்திருந்தார்கள். டெல்லி சென்ற நான் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக வாஜ்பய் இல்லத்துக்குச் சென்றபோது, வாசலில் ராமதாஸ் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தேன். உள்ளே சென்ற நான் உடனடியாக வாஜ்பயிடம் பேசி ராமதாசும் கூட்டணிக் கட்சித் தலைவர்தான்,



அவரையும் உள்ளே அழைத்துக் கூட்டத்தில் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டேன். அதன் பின்னர்தான் கூட்டம் நடந்த இடத்துக்கு ராமதாஸ் அழைக்கப்பட்டார்'' என்றார் ஜெயலலிதா!

❁ ''இதிலிருந்து தோழமைக் கட்சிகளை ஜெயலலிதா எந்த அளவிற்கு மதிக்கக் கூடியவர் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அவருடைய இந்த அறிக்கையைக் கூட நான் வெளியிட விரும்பாவிட்டாலும் சுருக்கமாகக் குறிப்பிட்டுக் காட்டினேன். ஜெயலலிதாவின் நான்கு பக்க அறிக்கைக்கு அடுத்த நாளே அதில் உள்ள செய்திகளை மறுத்து, டாக்டர் ராமதாஸ் ஆறு பக்க அறிக்கை விடுத்து, அதுவும் அனைத்து ஏடுகளிலும் அப்போதே வெளிவந்தது.

★ ★ ★

23.7.2001 அன்று மாநிலங்களவைத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளிவந்ததின் அடிப்படையில், கழகத்தின் சார்பில் ஒருவரை மாநிலங்களவைக்கு அனுப்பமுடியும் என்ற நிலையில், தி.மு.கழகத்தின் சார்பில் வேட்பாளராக சுப்ரீம் ஸ்டார் **ஆர். சரத்குமார்** அவர்கள் வேட்பாளராக நிறுத்தப்படுவார் என்று 10.7.2001 அன்று நான் அறிவித்தேன். எனது ஆணையை ஏற்று, ''மத்திய அரசுக்கும் மக்களுக்கும் இடையே உறுதியான பாலமாகப் பணியாற்றுவேன்'' என்றும், ''மாநிலங்களவை உறுப்பினர் பொறுப்பு அவருடைய பிறந்த நாளுக்காக



நான் கைதான செய்திக் கேட்டு தற்கொலை செய்து கொண்ட கரூர் மாவட்டக் கழக உறுப்பினர் காளிமுத்துவின் குடும்பத்திற்கு அவரது மனைவியாரிடம் நிதி வழங்கினேன்!

கழகம் அளித்த பரிசு'' என்றும் சரத்குமார் அப்போது அறிக்கை விடுத்தார். கழகம் அப்போது அவருக்கு அளித்த மாநிலங் களவை உறுப்பினர் பதவிக்காக அவர் காட்டிய நன்றி?

★ ★ ★

சம்பல் பள்ளத்தாக்கு கொள்ளைக்காரியாக இருந்து, பின்னர் அரசியல்வாதியாக மாறியவர் பூலான் தேவி. 1996ஆம் ஆண்டு சமாஜ்வாதி கட்சியின் சார்பில் மக்களவை உறுப்பினராகவும் வெற்றி பெற்று, அவர் பணியாற்றினார். 1998ஆம் ஆண்டு நடை பெற்ற தேர்தலில் அவர் தோல்வியடைந்து, 1999ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் உத்தரப் பிரதேசம், மிர்சாபுர் தொகுதியில் இரண்டாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

25.7.2001 அன்று நாடாளுமன்றக் கூட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு, மதிய உணவுக்காக நாடாளுமன்ற வளாகத் துக்கு ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அசோகா சாலையில் இருந்த அவருடைய வீட்டிற்குக் காரில் சென்று கொண்டிருந்த போது அவர் வீட்டு வாசலில் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அவருடன் சென்ற அவருடைய பாது காவலர் பல்விந்தர் சிங்கும் காயமடைந்தார். அசோகா சாலையில் முக்கிய பிரமுகர்கள் பலரின் வீடுகள் உள்ளதால்,

எந்த நேரமும் அங்கே பாது காப்பு பலமாகவே இருக்கும். அதையும் மீறி முகமூடி அணிந்த மூன்று பேர் பூலான் தேவியைச் சுட்டனர். உடனடி யாக மருத்துவமனைக்கு அவர் அழைத்துச் செல்லப் பட்ட போதும், அவர் உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துவிட்டனர்.



சிவாஜி என்ற கலையுலக இமயம் சாய்ந்துவிட்டது! நான் இருக்கிறேன் - நான் உள்ளவரை - எங்கள் நட்பின் ஈரம் காயபோவதில்லை

மிகச் சாதாரண குடும்பத்தில் பிறந்த பூலான் தேவி, பின்னர் நாடே நடுங்கும் அளவுக்கு மிகப் பெரிய கொள்ளைக்காரியானார். 11 ஆண்டு சிறை தண்டனைக்குப் பிறகு மக்கள் தொண்டராக மாறினார். 38 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்த பூலான்தேவி, தனது வாழ்நாளில் பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்தவர். மிகச் சிறிய வயதில் அவரைவிட பல வயது மூத்தவரானவருக்கு மனைவியானார். பல்வேறு இன்னல்களை அவர் சந்தித்தார். அதனால் ஆண்களால் தனக்கு நேர்ந்த கொடுமைகளை ஆண்களுக்கு அளிக்க வேண்டுமென்ற வெறியில் சம்பல் பள்ளத்தாக்கு கொள்ளைக்காரர்களிடம் தஞ்சம் புகுந்தார், பூலான் தேவி. 1983ஆம் ஆண்டு மத்தியப் பிரதேச முதலமைச் சராக அப்போதிருந்த என் அன்பு நண்பர் **அர்ஜுன் சிங்** முன்னிலையில் பூலான்தேவி சரணடைந்தார். அந்த நேரத்தில் அவர்மீது 55 கிரிமினல் வழக்குகள் இருந்தன. அதில் 22 கொலை வழக்குகள்.

ஒரு கும்பலால் கற்பழிக்கப்பட்டதற்குப் பழி வாங்கும் நோக்கத்தில் 1981ஆம் ஆண்டில் 20 உயர் சாதியினரைச் சுட்டுக் கொன்றார் பூலான் தேவி. பேமாய் படுகொலை என்றழைக்கப் படும் அந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, பூலான் தேவியின் பெயர் நாடு முழுவதும் தெரிந்தது. அதன் பின்னர்தான் 11



கழகம் ஆட்சியிலிருந்த காலத்தில் என் நட்பின் அடையாளமாக சிவாஜிக்குச் சிலை எழுப்ப எடுத்த முயற்சியினால் - இன்று சென்னையில் - கம்பீரமாக நிற்கும் சிவாஜியின் சிலை

ஆண்டுகள் சிறை தண்டனையை அனுபவித்தார். 1994ஆம் ஆண்டு பிப்ரவரியில் மோசமான உடல் நிலை காரணமாக விசாரணை ஏதுமின்றி விடுதலை செய்யப் பட்டார். அந்த ஆண்டு ஜூலை மாதத்தில், சட்டப் பேரவை உறுப்பினரான உமத் சிங்கைத் திருமணம் செய்து கொண்டார். அதன் பின்னர் முலாயம் சிங் யாதவின் சமாஜ்வாதி கட்சியிலே தன்னை இணைத்துக் கொண்டார். அவர் மறைந்தபோது சோனியா காந்தி, முலாயம் சிங் யாதவ் மற்றும் பல தலைவர்கள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

பூலான்தேவி கொலையின் முக்கிய குற்றவாளியான ஷேர் சிங் ரானா என்கிற **பங்கஜ் சிங்** டேராடூனில் 27.7.2001 அன்று கைது செய்யப்பட்டார். 14.2.1981 அன்று பூலான் தேவி 20 உயர் சாதியினரைச் சுட்டுக் கொன்றார் அல்லவா - அதற்குப் பழி வாங்கும் வகையில் அவரைக் கொலை செய்ததாக பங்கஜ் சிங் ஒப்புக் கொண்டார்.

★ ★ ★

29.7.2001 அன்று கழகத்தின் பொதுக் குழு சென்னையில் அண்ணா அறிவாலயத்தில் என் தலைமையில் கூடியது. ஜெயலலிதா வின் போலீஸ் ராஜ்ய அராஜகங்களைக் கண்டித்து தமிழகத்தில் 6.8.2001 அன்று பேரணியும், பொதுக் கூட்டங் களும் நடத்துவதென்றும், சென்னையில் 12.8.2001 அன்று பேரணியும் பொதுக் கூட்டமும் நடத்துவதென்றும் தீர்மானம்

நிறைவேற்றப்பட்டது. மேலும் நள்ளிரவில் கொடூரமான முறையில் காட்டுமிராண்டித்தனமாக என்னை அடித்து இழுத்துச் சென்று கைது செய்ததை அறிந்து அதிர்ச்சியாலும், தீக்குளித்தும் உயிரிழந்த 67 பேர் குடும்பங்களுக்குத் தலா ஐம்பதாயிரம் ரூபாய் நிதி உதவி அளிப்பதென்றும் முடிவெடுக்கப்பட்டு, அவ்வாறே வழங்கப் பட்டது.

★ ★ ★

31.7.2001 அன்று இரவு கழக அலுவலகத்திலிருந்து இல்லம் திரும்பிய எனக்கு, டெல்லியிலிருந்து ஒரு தகவல் வந்தது. சிவசேனாவின் கருத்துக்களில் அதிருப்தி அடைந்து, பிரதமர் வாஜ்பய் அவர்கள் டெல்லியில் நடைபெற்ற பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் பேசும்போது, ''தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகளை ஒருமித்த கருத்துடனும், ஒழுங்குக் கட்டுப்பாட்டுடனும் செயல்படுமாறு செய்ய என்னால் முடியவில்லை, எனவே பிரதமர் பதவியிலிருந்து விலகிக் கொள்கிறேன்'' என்று சொல்லிவிட்டு கூட்டத்திலிருந்து சென்று விட்டார்.



''சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்'' நாடகத்தில், காகபட்டர் வேடத்தில் பேரறிஞர் அண்ணாவும், சிவாஜியாக சிவாஜி கணேசனும் நடித்த காட்சி!

அந்தச் செய்தி எனக்குக் கிடைத்ததும், வாஜ்பய் அவர்களை இரவு 10.30 மணி அளவில் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு பேசினேன். ''தங்களின் செய்தியை அறிந்து மிகவும் திடுக்கிட்டு போய் இருக்கிறேன்'' என்றும், முடிவினை மாற்றிக் கொள்ள வேண்டும் என்றும், நல்ல செய்தியினை அறிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டேன்.

என்னைப் போலவே தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள பல தலைவர்களும் வாஜ்பயை அவர்களைக் கேட்டுக் கொண்டனர். அதன் காரணமாக 1-8-2011 அன்று டெல்லியில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் கூட்டம் நடைபெற்று, பிரதமர் வாஜ்பய் தலைமையில் அனைவரும் ஒற்றுமையாகச் செயல்படுவோம் என்று ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

மக்களவையிலும் பிரதமர் வாஜ்பய் அவர்கள், தான் ஏன் அப்படியொரு முடிவினை மேற்கொள்ள நேர்ந்தது என்றும், அதன் பிறகு அந்த ராஜினாமாவை விலக்கிக் கொண்டது ஏன் என்றும் விளக்கமளித்தார். மேலும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள கட்சிகளுக்கான நடத்தை நெறிமுறைகளை வகுக்க கூட்டணியின் அமைப்பாளர் ஜார்ஜ் பெர்னாண்டஸ், தம்பி முரசொலி மாறன், அர்ஜுன் சேத்தி, சிக்கந்தர் பக்த் ஆகிய நான்கு உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது.

★ ★ ★

ராமனாதபுரம் மாவட்டம் ஏர்வாடியில் உள்ள ஒரு தனியார் மனநலக் காப்பகத்தில் 6.8.2001 அன்று காலையில் எற்பட்ட திடீர் தீ விபத்தில் மனநோயாளிகள் 27 பேர் உயிரிழந்தனர். அதில் 14 பேர் ஆண்கள், 11 பேர் பெண்கள்.

தமிழகத்தில் முஸ்லீம்களின் புனிதத் தலங்களில் ஒன்றான ஏர்வாடியில் கடந்த பல ஆண்டுகளாக மன நலக் காப்பகங்கள் தனியாரால் நடத்தப்பட்டு வந்தன. அந்தக் காப்பகங்களில் மனநோயாளிகள் தென்னங் கீற்றுத் தட்டியால் வேயப்பட்ட அறைகளில் சங்கிலியால் கட்டப்பட்டுத் தங்க வைக்கப்

பட்டிருப்பார்கள். அந்தக் காப்பகத்தில் ஒன்றில் விடியற் காலையில் தீப்பிடித்தது. மன நோயாளிகள் பனை மரக் கட்டைகளில் இணைக்கப்பட்டிருந்த சங்கிலிகளில் பிணைக்கப் பட்டிருந்ததால், தப்பியோட முடியாமல் தீயில் கருகினர். இது பற்றிய உண்மை விவரங்களை விளக்கி பத்து நாட்களில் அறிக்கை தருமாறு தமிழக அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தர விட்டது.

இந்தக் கொடுமையான சம்பவத்தைத் தொடர்ந்து அதற்கு அடுத்த வாரமே 16.8.2001 அன்று வேலூரை அடுத்த காட்பாடியில் உள்ள தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான வெடிமருந்து தொழிற்சாலையில் ஏற்பட்ட கொடூர வெடி விபத்தில் கட்டடம் இடிந்து மண்ணோடு மண்ணாகப் புதைந்ததில் 22 பேர் பலியானார்கள்.

★ ★ ★

2001 ஜூலை 21 என் வாழ்க்கையில் சோகமான நாள்! என் அருமை நண்பர் நடிகர் திலகம் சிவாஜி மறைந்த நாள். அந்தச் செய்தி என்னிடம் கூறப்பட்டபோது என்னால் நம்பத்தான் முடியவில்லை.

"நானிருக்கிறேன்; எனக்கு இளையவர் போய்விட்டாரே" என்ற துடிப்பும் துயரமும் என்னை வாட்டி வதைத்தன. ஒரு மாபெருங் கலைஞர் இருந்தார்; அவர் மறைந்தார்; என்பதற் கான இரங்கல் செய்தியோடு முடிவதல்ல எங்கள் நட்பின் இறுக்கம்!

சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்பு சுவாமிமலையில் நடைபெற்ற அவரது மண விழாவை முன்னின்று நடத்தி வாழ்த்துரைத்தவன் நான். கணவனை இழந்து கதறித் துடித்து சகோதரி கமலா, மண விழாவினை நினைவூட்டி, அன்று அழுதபோது என் நெஞ்சு நொறுங்கிப் போயிற்று.

"சென்னையில் வந்து என்னை சந்திக்கவும்" என்று நான் தந்தி கொடுத்தால் கூட இரண்டு வார்த்தைகள் அதிகமா கின்றனவே



சிவாஜியின் உயிரற்ற உடலைப் பார்த்த நான் கண்ணீர் விட்டு அழுதேன்.

என எண்ணாமல், Dear Sivaji (''அன்புள்ள சிவாஜி'') என்றே அழைத்து அந்தத் தந்தியை அனுப்புவேன்.

அப்படி ஒரு நட்பு மொட்டவிழ்ந்திருந்த அந்த இளமைக் காலத்தையும் - கல்மேல் எழுத்தாக பதிந்துவிட்ட எங்கள் கலையுலகப் பயணத்தையும் - நினைத்து நினைத்து அவர் மறைந்து 11 ஆண்டுகளுக்குப் பிறகும் ஏங்குகிறேன்.

''நான் பிறந்த வீடும்; புகுந்த வீடும் ஒன்று சேர்ந்தது கண்டு என் உள்ளம் மகிழ்ச்சியால் பொங்குகிறது'' - இப்படிச் சொன்னவர் நடிகர் திலகம் சிவாஜி. சொன்ன இடம் சென்னை கடற்கரைக் கூட்டம். சொன்ன ஆண்டு 1979.

அண்ணா பிறந்தநாள் விழாவுக்கு; ஆம் - தி.மு.கழகத்தின் சார்பில் கொண்டாடப்பட்ட விழாவுக்கு திருமதி இந்திரா காந்தி வந்தபோது சிவாஜி பேசியபோது குறிப்பிட்ட வார்த்தைகள் தான் அவை. பிறந்த வீடான திராவிடர் இயக்கமும், புகுந்த வீடான காங்கிரஸ் கட்சியும் தேர்தல் உறவு கொண்டதைத்தான் சிவாஜி அப்படிச் சுவைபடச் சொன்னார் என்பதுணர்ந்த லட்சோப லட்சம் மக்கள் அடங்கிய அந்தக் கூட்டம் ஆரவாரம் செய்து கையொலி முழங்கியது.

திராவிட முன்னேற்றக் கழகம் 1949-ல் தொடங்கப்படுவதற்கு முன்பே திராவிடர் கழகத்தில் ஈடுபாடு கொண்டவர் சிவாஜி! மராட்டிய மாவீரன் சிவாஜி ஒரு மாபெரும் ராஜ்யத்தைத் தனது வாள் முனையால் உருவாக்கினான் என்றாலும் கூட மன்னனாக மகுடம் புனைய அவனது குலம் இடம் தரவில்லை யென்று பழமைவாதிகளும் அவர்கட்குப் பாதுகாவலரான காகபட்டரும் தடுத்துரைத்து நின்ற வரலாற்றை அண்ணா அவர்கள் **"சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்** அல்லது **சந்திர மோகன்"** என்ற ஒப்பற்ற நாடகமாகத் தீட்டியிருந்தார்.

அந்த நாடகத்தில் அண்ணா அவர்களே காகபட்டர் வேடம் தாங்கி நடித்தார். காவியுடை, கமண்டலம் இவற்றுடன் அண்ணா காகபட்டராகத் தோன்றிப் பேசியதையும், நடித்ததையும் பாராட்டிப் புகழாத நடிகர்களே இல்லை! அந்த நாடகத்தில் சிவாஜியாக "எம்.ஜி. ராம்சந்தர்" நடிப்பார் என்று அண்ணாவின் "திராவிட நாடு" பத்திரிகையில் விளம்பரங்கள் தொடர்ந்து வந்து கொண்டிருந்தன.

எனினும் இடையில் ஏற்பட்ட சில பிரச்சினைகளால் நாடக மேடையில் புகழ் பெற்று விளங்கியவரும், திராவிடர் கழக ஈடுபாடுடையவருமான நண்பர் வி.சி. கணேசனை "சிவாஜி" வேடம் தாங்குமாறு அண்ணா அழைத்தார். அண்ணாவின் அழைப்பையேற்று சிவாஜி வேடத்தில், கணேசன் நடித்தார். அந்த நாடகத்திற்குத் தலைமை தாங்கிய பெரியார் அவர்கள் வி.சி. கணேசனை **"சிவாஜி கணேசன்"** என்று அன்பொழுக அழைத்துத் தட்டிக் கொடுத்தார். அன்று முதல் வி.சி. கணேசன் "சிவாஜி கணேசன்" ஆனார்.

கலைவாணர் **என்.எஸ்.கே.** அவர்கள்; திராவிட முன்னேற்றக் கழக மாநாடுகள் அனைத்திலும் தனது வில்லுப் பாட்டு நிகழ்ச்சியைத் தொடக்க நிகழ்ச்சியாகக் கொண்டு கழகக் கொள்கை பரப்பிடும் பணிபுரிந்தார். நடிப்பிசைப் புலவர் **கே.ஆர். இராமசாமி** அவர்கள், நடிகர் திலகம் **சிவாஜி,** இலட்சிய நடிகர் **இராசேந்திரன்,** நடிகமணி **டி.வி. நாராயண சாமி** ஆகியோர் திராவிடர் கழகத்திலும் பின்னர்

தி.மு.கழகத்திலும் கொள்கை பரப்பும் கலை முரசுகளாகத் திகழ்ந்தார்கள்.


1953-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் தான் அருமை நண்பர் **எம்.ஜி.ஆர்.** அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

1952-ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் வீசிய புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கழகத்தின் சார்பில் நிதி திரட்டி அந்தப் பணத்தைக் கொண்டு கைத்தறி வேட்டி, சேலைகள் வாங்கி ஏழை, எளியோர்க்கு வழங்குவதெனவும், இருபத்து ஐயாயிரம் ரூபாய் நிதி திரட்டுவதென்றும், அந்தப் பணிக்கு என்னைத் தலைவனாக இருக்குமாறும் கழகம் தீர்மானம் நிறைவேற்றியது.

நிதி திரட்டும் முயற்சிக்குப் பல இடங்களில் நான் எழுதிய "தூக்கு மேடை" நாடகம் நடத்தப்பட்டது. அந்த நாடகத்தில் பாண்டியன் என்னும் பள்ளி மாணவன் வேடத்தில் நானும், அபிநயசுந்தரர் என்னும் வேடத்தில் சிவாஜியும், பரமார்த்திகர் வேடத்தில் நண்பர் சி.வி.எம். அண்ணாமலையும் மற்றும் கழக முன்னணியினரும் நடித்தோம். மகாலிங்கம் என்ற இளைஞர் நடிப்பாற்றல் மிக்கவர். அவர்தான் கதாநாயகி வேடத்தில் நடித்தார். ஆடவர்கள் "ஸ்த்ரி பார்ட்" போட்டு நடிக்கும் கால கட்டம் 1952 வரையிலே கூட நீடித்தது எனலாம்!

கோயில்பட்டி வள்ளிமுத்து என்பவர், நெல்லை மாவட்டத்தில் சங்கரன்கோயிலில் எங்களின் நாடகத்தை நடத்தி, நிதியளிப்பதாகக் கூறி வசூலான நாலாயிர ரூபாய் பணத்துடன் காணாமலே போய் விட்டார். நான், சிவாஜி, சி.வி.எம். அண்ணாமலை, அரங்கண்ணல், காஞ்சி சம்பந்தன், காஞ்சி கிருஷ்ணமூர்த்தி, எம்.என். கிருஷ்ணன், நம்பிராஜன், டி.என். கிருஷ்ணன் மற்றும் நாடகத்தில் பங்கேற்ற கழகத்தினர் பட்டினி கிடந்தது மாத்திரமல்ல; ரயிலில் திரும்பி வருவதற்கு வழிச் செலவுக்கான பணமும் இல்லாமல் திண்டாடித் தெருவில் நின்றோம்.

எங்கள் நிலையைக் கண்ட தூத்துக்குடி **கே.வி.கே.சாமியும் தங்கப்பழமும்** எங்களின் வழிச் செலவுக்காக தூத்துக்குடியில்



ஏ.வி.மெய்யப்பன் செட்டியார்

அவசரமாக ஒரே நாள் விளம்பரத்தில் ஒரு நாடகத்தை நடத்தி அதில் கிடைத்த மிச்சப் பணத்தில் என்னையும் சிவாஜியையும் மற்றவர்களையும் வழி அனுப்பி வைத்தார்கள்.

அப்போதுதான் "**பராசக்தி**" படத்தில் நடிக்க சிவாஜிக்கு வாய்ப்பு கிடைத்தது. பகுத்தறிவு இயக்கத்தில் ஈடுபாடு கொண்ட நேஷனல் பிக்சர்ஸ் பெருமாள் அவர்கள் "பராசக்தி" திரைக் கதை வசனம் எழுதும் பொறுப்பை நான் ஏற்க வேண்டுமென்று வலியுறுத்தினார். இயக்குநர்கள் **கிருஷ்ணன் - பஞ்சு** இருவரும் ஒருவராக இருந்து என்னிடம் அன்பு காட்டுகிறவர்கள். அவர்களும் என்னை வலியுறுத்தினர். முதலில் நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமிதான் நடிப்பதாக இருந்தது. அவருக்கு வேறு படங்கள் இருந்த காரணத்தால் "பராசக்தி" யில் "குணசேகரன்" வேடத்தில் நடிக்க சிவாஜியை ஒப்பந்தம் செய்தார்கள்.

அந்தப் படம் ஏ.வி.எம். நேஷனல் பிக்சர்ஸ் கூட்டுத் தயாரிப்பு! சிவாஜி இரண்டொரு காட்சிகளில் நடித்ததைப் போட்டுப் பார்த்து விட்டு, ஏ.வி. மெய்யப்ப செட்டியார் அதிருப்தி தெரிவித்து, நடிகரை மாற்ற வேண்டுமென்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். நேஷனல் பெருமாள் அவர்களும், நானும், இயக்குநர்கள் கிருஷ்ணன் பஞ்சுவும் - ஏ.வி. மெய்யப்ப செட்டியார் கருத்தை ஏற்கவில்லை. "ஒரு அற்புதமான நடிகரை அவசரப்பட்டு இழந்துவிடக் கூடாது!" என்று திட்டவட்டமாகக் கூறினோம்!

'பராசக்தி' படம் வெளிவந்தவுடன் அதை எரிச்சலுடன் விமர்சித்துக் கண்டனம் எழுதிய "தினமணிக் கதிர்" ஏட்டில் "பரப்பிரம்மம்" என்ற தலைப்பில் அந்தப் படத்தை ஏகடியம் செய்து கார்ட்டூனும் வெளியிட்டார்கள். உடனே நான் "பரப்பிரம்மம்" என்ற தலைப்பிலேயே ஒரு நாடகம் எழுதி நாடு முழுதும் நடத்த ஏற்பாடு செய்தேன். அதில் நானும், நடிகர்



கிருஷ்ணனும் - பஞ்சுவும்

திலகம் சிவாஜியும் கழக நண்பர்களும் நடித்தோம். அந்த நாடகத்தில் "சேரன் செங்குட்டுவன்" வேடத்தில் சிவாஜி நடித்தது, இன்னமும் என் கண்முன்னால் நிற்கும் காட்சியாகும்!

கல்லக்குடி போராட்ட நிதி திரட்டுவதற்காக அந்த நாடகத்தைப் பயன்படுத்தினோம். இவ்வாறு கல்லக்குடி போராட்டம் 1953-ஆம் ஆண்டு நடைபெற்று நான் ஆறு மாதக் கடுங்காவல் தண்டனையைப் பெற்று சிறை புகும் வரையில் சிவாஜி கணேசன், கழகத்தின் வளர்ச்சிக்காகத் தனது கலைப் பணியை ஆற்றி வந்தார்!

★ ★ ★

அதற்கிடையே இருபத்து ஏழாயிரம் ரூபாய் புயல் நிதி திரட்டப்பட்டு அதற்குக் கைத்தறி ஆடைகள் வாங்கி வழங்குகிற விழா சென்னையில் நடைபெற்றபோது, அந்த நிகழ்ச்சிக்கு சிவாஜி கணேசன் அழைக்கப்படவில்லை. அவர் வெளியூரில் இருந்தபோது அவருக்குத் தெரியாமலே அந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டது. நிதி திரட்டும் பணியில் என்னுடன் பெரும் பங்கேற்றிருந்த சிவாஜி அந்த நிகழ்ச்சிக்கு வரவேண்டுமென்பதில் நான் கண்ணுங் கருத்துமாக இருந்தேன் என்றாலும் சிவாஜியை வராமல் செய்யவேண்டுமென்பதில் அக்கறை காட்டியவர்கள் வெற்றி பெற்றுவிட்டார்கள்.

கல்லக்குடி போராட்டத்தில் ஈடுபட்டு திருச்சி சிறையில் இருந்த என்னை வந்து சிவாஜி பார்த்துவிட்டுப் போனார். என்னையும் அவரையும் சிறைச்சாலை ஆறுமாத காலம் பிரிந்துவிட்டதைப் பயன்படுத்திக் கொண்டு கழகத்திற்கு உள்ளே இருந்த சிலரும், கழகத்திற்கு வெளியே இருந்த சிலரும் தங்கள் முயற்சிகளை முடுக்கிவிட்டு - அவரைக் கழகத்திலிருந்து பிரித்துவிட்டார்கள்!

அவர் கழகத்திலிருந்து வெளியேற "திருப்பதிக்குச் சென்று சாமி கும்பிட்டார்" என்பதே பெரும் குற்றச்சாட்டாக அப்போது வெடித்தது! அந்தக் குற்றச்சாட்டுக்கு அன்றைய தினம் கனம் ஏற்றிப் பேசியவர்கள் கொள்கைப் பற்றால்கூட அல்ல - சிவாஜியின் மீதிருந்த பொறாமையால் அவரை வெளியேற்ற வெகுண்டெழுந்தனர்!

கட்சியிலிருந்துதான் வெளியேறினாரே தவிர, அண்ணாவின் அன்பு உள்ளத்தி லிருந்தும், என் உள்ளத்திலிருந்தும் யாராலும் வெளியேற்றவும் முடியவில்லை. அதனால் தான் நான் இரண்டாம் பாகத்தில் எழுதி யிருந்ததைப்போல, சிவாஜியை "கணேசா! நீ எங்கிருந்தாலும் வாழ்க!" என்று அண்ணா ஒரு மேடையில் வாழ்த்தினார். எங்களின் பாசம் மிகுந்த நட்பு, அந்த வெளியேற்றத்தால் வெட்டப்படவில்லை! அது தொடர்ந்தது - தொடர்ந்து கொண்டேயிருக்கிறது! இப்போது அவர் இல்லை - அந்தக் கலையுலக இமயம் சாய்ந்துவிட்டது - நானிருக்கிறேன் - நானுள்ளவரையில் அந்த நட்பின் ஈரம் காயப்போவதில்லை. எத்தனையோ நிகழ்ச்சிகள் - எவ்வளவோ சம்பவங்கள் - எதைச் சொல்வது? எதை விடுவது?


அந்த நட்பின் அடையாளமாக, அந்த மாபெரும் கலை மகனுக்கு சென்னை மாநகரிலே ஒரு சிலை எழுப்ப கழகம் ஆட்சியிலே இருந்த காலத்தில் எடுத்த முயற்சிகளையும், அதற்கு இடைஞ்சல் விளைவிக்க என்னென்ன காரியங்கள் நடைபெற்றன என்பதையும் பின்னர் விரிவாக எழுது கின்றேன். இன்றைக்கும் அவருடைய செல்வங்கள் என்னிடம் அதே பற்றோடும், பாசத்தோடும் பழகும்போது அவர்களுடைய உருவத்தில் என் நண்பனைக் கண்டு வருகிறேன்.

★ ★ ★


18. நட்புக்கு இலக்கணம் - நண்பர் மூப்பனார்!

2001ஆம் ஆண்டு, மே திங்களில் மக்கள் தலைவர் **மூப்பனார்** அவர்களுக்கு ஏற்பட்ட சிறிய எலும்பு முறிவு காரணமாக, தற்காலிகமாக சிகிச்சை செய்துகொண்டு வந்தார் என்ற போதிலும், அத்துடன் தேர்தல் பிரச்சாரத்தில் தொடர்ந்து ஈடுபட்டதன் காரணமாக, மேலும் உடல் நலம் கெட்டு *31-7-2001* அன்று போரூர் ராமச்சந்திரா மருத்துவ மனையிலே அனுமதிக்கப்பட்டார்.

மருத்துவமனையில் அவர் இருந்தபோது இரண்டு முறை நான் நேரில் சென்று உடல் நலம் விசாரித்து விட்டு வந்தேன். டாக்டர் தணிகாசலம் அவர்கள் அடிக்கடி தொலைபேசி வாயிலாக மூப்பனார் அவர்களின் உடல் நிலை குறித்துத் தெரிவித்து வந்தார். எனினும் கடைசிவரை அவர் உடல் நிலை தேறவே இல்லை. *30-8-2001* அன்று விடியற்காலையில், அருமை நண்பர் மூப்பனார் அவர்கள் இயற்கை எய்தினார்.



நானும், பேராசிரியர், தம்பிகள் மு.க. ஸ்டாலின், கோ.சி. மணி, துரைமுருகன், எ.வ.வேலு, சைதை கிட்டு, நடிகர் நெப்போலியன் ஆகியோரும் உடனடியாக மூப்பனார் இல்லம் சென்று அஞ்சலி செலுத்தினோம். சோனியா காந்தி, ஆளுநர் ரெங்கராஜன், முதலமைச்சர் ஜெயலலிதா மற்றும் தமிழகத்திலே உள்ள அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும்,



காமராஜருக்குப் பிறகு, காங்கிரஸ் இளைஞர்களின் உள்ளத்தில் நல்லிடம் பெற்ற பெருமையைப் படைத்த மூப்பனார் உடலுக்கு மலரஞ்சலி செலுத்தினேன்!

முன்னணியினரும், கலையுலகைச் சேர்ந்தவர்களும் நேரில் வந்து அந்த மக்கள் தலைவருக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

இந்தியத் துணைக் கண்டத்தில் காமராஜர் மறைவிற்குப் பிறகு, காங்கிரஸ் இளைஞர்களின் உள்ளத்தில் இடம் பெற்ற ஒரே தலைவர் மூப்பனார். காமராஜர் எப்படி பிரதமர்களை உருவாக்கும் ''கிங் மேக்கர்'' என்று அழைக்கப்பட்டாரோ, அதே பெருமை மூப்பனாருக்கும் உண்டு. இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்டபோது, ராஜீவ் காந்தி தான் அடுத்த பிரதமர் என்று முடிசூட்டி, நாட்டின் குழப்பத்திற்கு முற்றுப் புள்ளி வைத்த பெருமையும் மூப்பனாருக்கு உண்டு.

முரசொலி மாறன் சில மாதங்களுக்கு முன்பு அப்பல்லோ மருத்துவமனையில் ஆபத்தான நிலையில் இருந்தபோது, வராந்தா ஒன்றில் நான் அமர்ந்திருந்தேன். என் பக்கத்தில் வந்து அமர்ந்த மூப்பனார், பொழுது விடிகின்றவரையில், மாறன் பிழைத்துக் கொண்டார் என்று மருத்துவர்கள் வந்து சொல்கின்றவரையில் தான் அமர்ந்த இடத்தை விட்டு எழுந்திருக்கவே இல்லை.

★ ★ ★


1996ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது காங்கிரஸ் கட்சி, அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைக்க முற்பட்டபோது,

அந்தக் கட்சியுடன் கூட்டணி வேண்டாம் என்று மூப்பனார் முடிவெடுத்து, தமிழகத்திலே உள்ள அனைத்துக் காங்கிரஸ் கட்சியின் தலைவர்களும் பி.வி. நரசிம்மராவிடம் அதை எடுத்துக் கூறியும், அவர் அதனைக் கேட்காமல் பிடிவாதமாக அ.தி.மு.க.வுடன்தான் காங்கிரஸ் கூட்டணி என்று கூறிய நேரத்தில், மூப்பனார் தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியைத் தொடங்கி, தி.மு.கழகத்துடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டு, தி.மு.கழகத்தை ஆட்சியிலே அமர்த்த பெரும் துணையாக இருந்தார்.

"கட்சி மாறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு, கனிவு காட்டும் நட்பும் - அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு, அன்பு பொழிந்திடப் பழகும் உள்ளமும் - கொள்கை கோட்பாடுகள் எதுவாயிருப்பினும் அவற்றையும் கடந்த மனித நேயமும் கொண்ட என் இனிய நண்பர் மூப்பனார் அவர்களை இழந்துவிட்டேன். என்னிடமும், என் குடும்பத்தாரிடமும் அவர் வைத்திருந்த பாசமும் பரிவும் என்றைக்கும் என் நெஞ்சை விட்டு அகல முடியாதவையாகும். "தாய் மண்ணின் வரலாற்றில் மூப்பனாரின் புகழ் நிலைத்து நிற்கும்" என்று என் இரங்கல் செய்தியிலே தெரிவித்தேன்.

★ ★ ★

அரசியலில் கண்ணியமும் பெருந்தன்மையும் மிக்கவராக உண்மையாகவே வாழ்ந்து காட்டியவர் மூப்பனார். 1979ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். தஞ்சை மக்களவைத் தொகுதிக்கு இடைத் தேர்தல். அப்போது அருமை நண்பர் எம்.ஜி.ஆர். தமிழகத்தின் முதல் அமைச்சர். அதற்கு முன்பு நடைபெற்ற பொதுத் தேர்தலில், தஞ்சை மக்களவைத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தவர், அ.தி.மு.க.வைச்



தம்பி மாறன் மருத்துவமனையில் இருந்தபோது - பொழுது விடியும்வரை - இரவு முழுவதும் என் அருகிலேயே அமர்ந்திருந்தார், பாசமிக்க மூப்பனார்.

சேர்ந்த எஸ்.டி.எஸ். என்று அழைக்கப்பட்ட எஸ்.டி.சோம சுந்தரம். நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது, தமிழகத்தில் எம்.ஜி.ஆர். அமைச்சரவையில் இடம் பெற்று அமைச்சரானார்.

எனவே, அவர் தனது மக்களவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்து, அந்த இடத்திற்குத்தான் இடைத் தேர்தல் நடைபெற்றது. அப்போது மத்திய அரசில் பிரதமராக இருந்தவர் மொரார்ஜி தேசாய். தஞ்சை மக்களவைத் தொகுதி இடைத் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளராக இந்திரா காந்தி போட்டியிடுவார் என்று பெரிதாக ஏடுகளில் எல்லாம் அறிவிக்கப்பட்டிருந்தது. காங்கிரஸ் வேட்பாளரான இந்திரா காந்தியை அ.தி.மு.க. ஆதரிக்கும் என்று எம்.ஜி.ஆர். சொல்லியிருந்தார். இதற்கிடையில் பிரதமர் மொரார்ஜி தேசாயைச் சந்திக்க, முதலமைச்சர் எம்.ஜி.ஆர். டெல்லி சென்றிருந்தார். மொரார்ஜியைச் சந்தித்த பிறகு, இந்திரா காந்தியை ஆதரிப்பதற்கில்லை என்று கடைசி நேரத்தில் எம்.ஜி.ஆர். தெரிவித்துவிட்டார்.

இந்திரா காந்தியை அ.தி.மு.க. ஆதரிப்பதில்லை என்று கடைசி நேரத்தில் எம்.ஜி.ஆர். செய்த அறிவிப்பு காங்கிரஸ் வட்டாரத்தையே அதிர வைத்துவிட்டது. அந்த அறிவிப்பை எம்.ஜி.ஆர். தெரிவித்தார் அல்லவா - அதற்கு அடுத்த நாள்தான் இந்திரா காந்தி டெல்லியிலிருந்து திருச்சிக்கு வந்து, தஞ்சையில் வேட்பு மனு தாக்கல் செய்வார் என்று ஏடுகளில் எல்லாம் செய்தி வந்திருந்தது.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக அப்போது இருந்த ஜி.கே.மூப்பனாருக்கு இது ஒரு பெரிய சோதனையாக அமைந்தது. எனினும், காங்கிரஸ் வேட்பாளராக எஸ். சிங்காரவடிவேலுவை மூப்பனார் அறிவித்தார்.

அவரை எதிர்த்து தி.மு.கழகத்தின் சார்பில் அந்தத் தொகுதியில் அன்பில் தர்மலிங்கத்தை நிறுத்துவதா, எல்.கணேசனை நிறுத்துவதா என்ற பிரச்சினை ஏற்பட்டு, இறுதியாக அன்பில்

அங்கே போட்டியிட்டார். அவரை ஆதரித்துப் பிரச்சாரம் செய்வதற்காக நான் தஞ்சை சென்றிருந்தேன்.

தங்கும் விடுதியில் குளிர்பதன வசதி செய்யப்பட்ட இரண்டு அறைகள் தான் இருந்தன. மூப்பனார் ஒரு அறையிலும், எம்.ஜி.ஆரின் நண்பரான 'இதயம் பேசுகிறது' இதழ் ஆசிரியர் மணியன் ஒரு அறையிலுமாக தங்கியிருந்தார்கள். எனது உடல் நிலையை மருத்துவர்கள் மூலமாக அறிந்தவர்கள், அங்கே என்னை எங்கே தங்க வைப்பது என்று குழம்பிக் கொண்டிருந்த நேரத்தில், அதைப்பற்றிக் கேள்விப் பட்ட மூப்பனார், நேராக வரவேற்பு அறைக்குச் சென்று, தான் தங்கியிருந்த குளிர் பதன வசதியுள்ள அறையை எனக்கு அளிக்குமாறும், தான் பக்கத்திலே உள்ள தன் ஊரிலே உள்ள வீட்டிலே தங்கிக் கொள்கிறேன் என்றும் பரந்த மனப்பான்மையோடு தெரிவித்து விட்டு, என்னிடமும் வந்து தன்னுடைய அறையிலே என்னைத் தங்கிக் கொள்ளுமாறு கூறினார்.

தேர்தல் களத்திலே எதிரும் புதிருமாக போட்டியிட்ட அந்த நேரத்திலேகூட மூப்பனார் அந்த அளவிற்குப் பெருந் தன்மையோடு என்னிடம் நடந்து கொண்டார். அரசியலில் அந்த அளவிற்கு கண்ணியம் காத்த மூப்பனாரின் நினைவுகள் என்றைக்கும் என் நெஞ்சைவிட்டு அகலாத நினைவுகளாகும்!

★ ★ ★

கழகப் பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படி, 6-8-2001 அன்று தமிழகத்திலும் - புதுவையிலும் - 100க்கும் மேற்பட்ட இடங்களில் மாபெரும் பேரணிகளும், பொதுக்கூட்டங்களும், ஜெயலலிதா அரசின் காட்டு மிராண்டிச் செயலைக் கண்டித்து நடைபெற்றன. 12-8-2001

தாய்மார்களே! தோழிகளே!

என்னை அரக்கத்தனமாகக் கைது செய்த ஜெயலலிதா அரசின் அராஜகத்தைக் கண்டித்துப் பேரணியும், பொதுக் கூடடமும் நடத்த - தி.மு.க. பொதுக் குழு தீர்மானித்தது.




அன்று, சென்னையில் பேரணியும் - நானும், பொதுச் செயலாளரும் கலந்து கொள்ளும் பொதுக்கூட்டமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அன்று காலையில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் அமைப் பாளர், அருமை நண்பர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்கள் என்னை இல்லத்தில் சந்தித்தார். அன்று மாலையில் தான் பேரணி! ஆனால் நடந்தது என்ன?

கழகத்தின் மிகப்பிர மாண்டமான பேரணி சைதாப் பேட்டை மறைமலையடிகள் பாலத்தில் இருந்து புறப்பட்டு, அமைதியாக கடற்கரை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. அந்தப் பேரணி டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை வழியாக வந்து காமராஜர் சாலையில் திரும்பியது.

இரவு 7 மணியளவில், போலீஸ் டி.ஜி.பி. அலுவலகத்தில் திட்டமிட்டுக் குவிக்கப்பட்டிருந்த காவல் துறையினர், திடீரென்று விளக்குகளை அணைத்துவிட்டு, பேரணியில் சென்றவர்கள்மீது தடியடி நடத்தினர். அதன் காரணமாக பேரணியில் வந்தவர்கள் அங்குமிங்கும் சிதறி ஓடினர். அப்போது காமராஜர் சாலையில் சென்று கொண்டிருந் தவர்கள்மீதும் போலீசார் கண்மூடித்தன மாகத் தாக்கினர். அதைப்போலவே, டாக்டர் அம்பேத்கர் பாலம் அருகில் பாதுகாப்புக்காக நின்றிருந்த போலீசாரும், பேரணியில் சென்றவர்கள்மீது தடியடி நடத்தினர்.

மூன்று இடங்களிலும் போலீசார் சுற்றி வளைத்துத் தடியடி நடத்தியதால், பேரணியில் சென்றவர்கள் காந்தி சிலையை நோக்கி ஓடினர். போலீசார் அவர்களை விரட்டி, கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர். பிறகு துப்பாக்கியாலும் சுட்டனர்.



பேரணியில் சென்ற ஆண்களும், பெண்களும் கடற் கரைக்குள் இறங்கி ஓடினார்கள். அந்தச் சம்பவத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட கழகத்தினர் படுகாயமடைந்தனர்.




14.8.2001 'இந்து' தலையங்கத்தில், ''தமிழகத்திலே போலீஸ் இராஜ்யம் நடக்கிறது என்பதை- ஞாயிறு கலவரம் நிரூபித்துள்ளது'' என்று குற்றம் சாட்டியது.

போலீஸ் டி.ஜி.பி. அலுவலகம் அருகில், போலீசார் கழகத்தினரை விரட்டிச் சென்று துப்பாக்கிச்சூடு நடத்தியதில், சைதாப்பேட்டையைச் சேர்ந்த சோலை முருகேசன், திண்டுக்கல்லைச் சேர்ந்த அந்தோணி, சீர்காழி நகர முன்னாள் பொருளாளர் செல்வ ரமேஷ், மதுக்கரையைச் சேர்ந்த ரெங்கசாமி என மொத்தம் நான்கு பேர் பலியானார்கள்.

இந்த நான்கு பேரின் குடும்பத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக தலா ஒரு லட்சம் ரூபாய் நிதியாக வழங்கப் பட்டது. மேலும் காயமடைந்து மருத்துவமனையில் இருந்தவர் களுக்கு, அவர்கள் அடைந்துள்ள காயத்தின் தன்மைக்கேற்ப 5000 ரூபாய் முதல் 10000 ரூபாய்வரை நிதி உதவி செய்யப்பட்டது. வேலூர் சகி அவர்களை பலத்தக் காயத்துடன் பொதுக் கூட்ட மேடைக்குத் தூக்கி வந்தனர். போலீசாரின் தாக்குதலில் திண்டுக்கல் ஐ.பெரியசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிச் செல்வன் ஆகியோரும் காயமடைந்தனர்.

காவல் துறையினர் கழகத்தினர்மீது கடுமையாகத் தாக்கி யதைப் புகைப்படம் எடுக்க முயன்ற பத்திரிகையாளர்களை யெல்லாம் போலீசாரே டி.ஜி.பி. அலுவலகத்திற்குள் இழுத்துச் சென்றனர். குறிப்பாக, சன் தொலைக்காட்சியைச் சேர்ந்த கருப்பசாமி, ஆஜ்தக் தொலைக்காட்சியின் பெண் நிருபர் ஜெயஸ்ரீ, இந்து பத்திரிகையின் புகைப்படக்காரர் மூர்த்தி, ஆனந்த விகடன் விவேக், நக்கீரன் பிரகாஷ், தினமலர் சுரேஷ், வளையாபதி போன்றவர்கள் தாக்கப்பட்டனர்.

தினமணி போட்டோகிராபர் ராஜூ, செய்தியாளர் முருகன் ஆகியோரும் பயங்கர மாகத் தாக்கப்பட்டு, மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பத்திரிகை யாளர்கள் தாக்கப்பட்டது குறித்து, சென்னை பத்திரிகையாளர் மன்றத் தலைவர் தனசேகரன், தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கத்



பேரணியில், போலீசார்- அ.தி.மு.க.வினர் கொலை வெறித் தாக்குதலில் படுகாயமுற்ற கழகத் தோழர்கள்.

தலைவர் ரவீந்தரதாஸ், சென்னை நிருபர்கள் சங்கப் பொதுச் செயலாளர் கே.சுப்பிரமணியம், சென்னை பத்திரிகையாளர் சங்கப் பொதுச் செயலாளர் எஸ்.எம். பாலசுப்பிரமணியம் ஆகியோர் அப்போதே கண்டனம் தெரிவித்தனர்.

14-8-2001 தேதிய "இந்து" தலையங்கத்தில் "தமிழகத்திலே போலீஸ் ராஜ்யம் நடக்கிறது என்பதை ஞாயிறு கலவரம் நிரூபித்துள்ளது" என்று எழுதியது.

★ ★ ★

பொதுக்கூட்டத்துக்கு வந்த கழகத்தினரின் வேன்கள், கார்களை மெரினா கடற்கரையில் வரிசையாக நிறுத்தி வைத்திருந்தனர். அந்த வேன்களின் கண்ணாடிகளைக் காவல் துறையினரே இரும்புக் குழாய்களால் அடித்து உடைத்தனர். சில வேன்கள்மீது பெட்ரோலை ஊற்றி தீ வைத்து எரித்தனர். தாக்குதல் தொடர்ந்து கொண்டே இருந்ததால், பொதுக் கூட்டத்தை 9 மணிக்கெல்லாம் முடித்து விட்டோம்.

கூட்டத்தை முடித்துவிட்டு, போலீசாரின் தடியடியில் படுகாயமடைந்து ராயப்பேட்டை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கழகத் தோழர்களை எல்லாம் நள்ளிரவில் சென்று நானும் பேராசிரியரும், மேயராக அப்போது இருந்த தம்பி ஸ்டாலினும், தம்பிகள் கோ.சி. மணியும், துரை முருகனும், வீரபாண்டி ஆறுமுகமும், பொன்முடியும்,

முரசொலி செல்வமும், பொங்கலூர் பழனிசாமியும், பொன். முத்துராமலிங்கமும் பார்த்து ஆறுதல் கூறினோம்.

ராயப்பேட்டை மருத்துவமனையின் மூன்று தளங்களிலும் அனுமதிக்கப்பட்டிருந்த அத்தனைக் கழகத் தோழர்களையும் நடந்து சென்றே நான் பார்த்து ஆறுதல் கூறினேன்.

தமிழக ஆளுநராக அப்போது கூடுதல் பொறுப்பு வகித்த ரங்கராஜன் அவர்களுக்கு ஐதராபாத்திற்கே தொலை பேசியிலே இரவிலே பேசி, நிலைமைகளையெல்லாம் விளக்கி னேன். மறுநாளே சென்னைக்கு வருவதாகவும், தக்க நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதி கூறினார். மறுநாள் காலையில் கிண்டி ராஜ்பவன் சென்று நானும், பேராசிரியரும், வீர பாண்டி ஆறுமுகமும் ஆளுநரைச் சந்தித்து நடைபெற்ற சம்பவங்கள் குறித்து விளக்கினோம்.

பேரணியின் முன் வரிசையில் சைதாப்பேட்டைத் தொகுதி சட்டப்பேரவை கழக உறுப்பினரும், தொ.மு.ச. பொதுச் செயலாளருமான **வை. பெருமாள்,** தொழிலாளர் அணிக்குத் தலைமை தாங்கிச் சென்றார். சீருடை அணிந்து திறந்த ஜீப்பில் கோஷம் போட்டுக் கொண்டு சென்றார். தேவர் சிலை அருகே ஊர்வலம் வந்தபோது, பெருமாளுக்கு மயக்கம் ஏற்பட்டு, ஜீப்பிலேயே உட்கார்ந்தே வந்தார். மியூசிக் அகாடமி அருகில் ஊர்வலம் வந்தபோது, மீண்டும் ஜீப்பில் எழுந்து நின்று கொண்டு கோஷம் போட்டுக்கொண்டே சென்றிருக்கிறார். ஆனால் டி.ஜி.பி. அலுவலகம் அருகே சென்றபோது, காவல் துறை யினரின் தடியடியில், கழகத் தொண்டர்கள் தலைகளில் வழிந்த குருதியைக் கண்டு; வை.பெருமாள் மயங்கி விழுந்து விட்டார்.



போலீசாரின் தடியடியில் படுகாயமுற்று - மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கழகத் தோழர்களை, நள்ளிரவில் பேராசிரியருடன் சந்தித்து ஆறுதல் கூறினேன்!



பேரணியில், அ.தி.மு.க. ரௌடிகளால் படுகொலை செய்யப்பட்ட - கோவை 4வது வார்டு செயலாளர் ரங்கசாமியின் இல்லத்திற்குச் சென்று, மு.க.ஸ்டாலின் ஆறுதல் கூறினார்.

உடனடியாக அங்கேயிருந்தவர்கள் அவரை சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்கு அனுப்பி வைத்திருக் கின்றனர். பின்னர் அங்கிருந்து புரசை வாக்கத்தில் உள்ள தனியார் மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கே யுள்ள மருத்துவர்கள் மேல் சிகிச்சைக் காக அப்பல்லோ மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லுமாறு கூறியதன் பேரில், அங்கே அழைத்துச் சென்று தீவிர கண்காணிப்புப் பிரிவில் அனுமதிக்கப் பட்டு தீவிர சிகிச்சை தரப்பட்டது. எனினும் சிகிச்சை பலனளிக் காமல், அருமைத் தம்பி வை. பெருமாள் மரணமடைந்தார்.

1996ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின் போது, நான் தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது, வை. பெருமாள் என்னுடன் அந்தச் சுற்றுப்பயணத்தில் கலந்து கொண்ட நிகழ்வுகள் எல்லாம் எனக்கு நினைவுக்கு வந்தன.

காலமெல்லாம் தொழிலாளர்களின் நலனுக்காகவே உழைத்து, நீண்ட காலம் அ.தி.மு.க.விலே இருந்து பாடுபட்டு, அதன் பின்னர் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, சட்டப் பேரவை உறுப்பினராகவும் பணியாற்றிய வை. பெருமாள் அவ்வாறு இறந்த பிறகு 16-8-2001 அன்று நடை பெற்ற சட்டப் பேரவைக் கூட்டத்தில் இரங்கல் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. சட்டப் பேரவை மரபுகளின்படி, சட்டப் பேரவை உறுப்பினர் ஒருவர் பதவியிலே இருக்கிற போது இறந்துவிட்டால், அவருக்காக இரங்கல் தீர்மானம் நிறைவேற்றும்போது, அனைத்துக் கட்சிகளின் தலைவர்

களையும் அந்த இரங்கல் தீர்மானத்தின்மீது பேச அனுமதிப்பதுதான் வழக்கமாக இருந்து வந்தது.



வை.பெருமாள்

ஆனால், அ.தி.மு.க.வின் காழ்ப்புணர்ச்சி காரணமாக, வை. பெருமாள், எம்.எல்.ஏ.வாக இருந்த நிலையில் உயிர் விட்டபோதிலும், அவருக்காக இரங்கல் தீர்மானம் நிறை வேற்றிய நாளில் யாரையும் அந்த இரங்கல் தீர்மானத்தின்மீது பேசுவதற்குக்கூட அனுமதிக்கவில்லை. ''அது நியாயமற்ற செயல்'' என்று பின்னர் செய்தியாளர்களிடம் பொதுச் செயலாளர் பேராசிரியர் குறிப்பிட்டார்.

செய்தியாளர்கள் என்னிடமும் அதைப் பற்றிக் கேட்ட போது, ''அது மிகவும் கண்டிக்கத்தக்க செயல்'' என்று குறிப் பிட்டதோடு, 17-8-2001 அன்று, அதுபற்றி நீண்ட அறிக்கையும் வெளியிட்டேன்.

அ.தி.மு.க. அரசின் கொடுங்கோல் ஆட்சிக்கு முடிவு கட்ட வேண்டுமென்று அனைத்துக் கட்சித் தலைவர்களான பா.ஜ.க. தலைவர் டாக்டர் கிருபாநிதி, பா.ம.க. நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ், விடுதலை சிறுத்தைகள் இயக்கத் தலைவர் திருமாவளவன், எம்.ஜி.ஆர். கழகத் தலைவர் ஆர்.எம். வீரப்பன், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி, தொண்டர் காங்கிரஸ் கட்சித் தலைவர் குமரி அனந்தன், மூவேந்தர் முன்னேற்றக் கழகத் தலைவர் டாக்டர் சேதுராமன் - ஆகியோர் அறிக்கை விடுத்தனர்.

15-8-2001 அன்று சென்னையில் பத்திரிகையாளர்கள் சங்கங்களின் சார்பில் ஒரு நாள் உண்ணாவிரதம் நடை பெற்றது. அதில் இந்து மாலினி பார்த்தசாரதி, தினமணி இரா. சம்மந்தம், முரசொலி நிர்வாக இயக்குநராக இருந்த தயாநிதி மாறன், சன் தொலைக்காட்சி சார்பில் மாலன், தினமலர் சார்பில் ஆர். கிருஷ்ணமூர்த்தி, நக்கீரன் கோபால், சின்னக்குத்

தூசி, ஆனந்தவிகடன் சீனிவாசன் உள்ளிட்ட 500க்கு மேற்பட்ட பத்திரிகையாளர்கள் கலந்து கொண்டார்கள்.

★ ★ ★

2001ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில், பேரவையில் முதல் அமைச்சர் ஆகிவிட்ட ஜெயலலிதா பேசும்போது, சர்க்காரியா கமிஷன் சம்மந்தமான கோப்பிலே நடவடிக்கை தேவையில்லை என்று நானே கையெழுத்துப் போட்டதாக ஒரு குற்றச்சாட்டினைத் தெரிவித்தார். செய்தியாளர்கள் உடனே என்னைச் சந்தித்து அது பற்றிய விவரத்தைக் கேட்டபோது, நான் விளக்கமளித்தேன். அந்த விளக்கம் இந்தத் தொடரிலும் இடம் பெற வேண்டுமென்று எண்ணுகிறேன். அது விவரம் வருமாறு :-

4-11-1972இல் - அதாவது நாற்பதாண்டுகளுக்கு முன்பு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிமீது சில பொய்யான குற்றச்சாட்டுகளை அரசியல் காரணங்களுக்காக மத்திய சர்க்காரிடம் தொடுத்தார்கள். அந்தப் புகார்கள் அப்போது சர்க்காரிடம் கொடுத்தார்கள். அந்தப் புகார்கள் அப்போது எனக்கே மத்தியிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டு, அந்தப் புகார்கள் எல்லாம் பொய் என்பதை ஆதாரங்களோடு விளக்கி, 14-12-1972 அன்று பதில் அளிக்கப்பட்டதோடு, அந்தப் பதில்களைப் புத்தகமாகவே அச்சிட்டு தமிழகச் சட்டப் பேரவையிலும் வைக்கப்பட்டது.

அதற்குப் பிறகு, நான்காண்டுகள் கழித்து, நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்ட போது, அதைப் பயன்படுத்திக் கொண்டு, மத்திய அரசு தமிழகத்திலே கழக அரசைக் கலைத்ததோடு, 3-2-1976 அன்று சர்க்காரியா கமிஷனை நியமித்தது. நெருக்கடி காலம் என்பதால், சர்க்காரியா கமிஷன் அந்த விசாரணையில் சாட்சிகளை நாங்கள் யாரும் குறுக்கு விசாரணை செய்யக் கூடாது என்று மறுத்துவிட்டது. திரு. சாந்திபூஷன் தலைமையில் எங்களுக்காக வாதாடிய வழக்கறிஞர்கள் குழு, குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்ளாத சர்க்காரியா கமிஷனை அன்றைக்குப் புறக்கணித்து வெளியேறியது.

அதற்குப் பிறகு சர்க்காரியா கமிஷனுடைய முடிவுகள்மீது நடவடிக்கை எடுப்பது பற்றி முதலமைச்சர் **எம்.ஜி.ஆர்.** அவர்களுடைய அ.தி.மு.க. ஆட்சியிலே யோசிக்கப்பட்டது. வீராணம் போன்ற பெரிய புகார்களை அதிலே பண வரவு செலவு நடைபெற்றதாகக் கூறப்பட்ட புகாரை சர்க்காரியா கமிஷனே ஏற்றுக் கொள்ளாத அந்தச் சூழலில், அந்தப் புகார்கள் குறித்து நடவடிக்கை எடுக்க அன்றைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் அப்போது, அட்வகேட் ஜெனரலாக இருந்த திரு. **வி.பி. ராமன்** அவர்களிடம் எழுத்துப் பூர்வமாக ஆலோசனை கேட்டார்.

15–11–1977 அன்று Thiru V.P.Raman, the then Advocate General had offered opinion that it was neither advisable or possible to launch prosecution successfully on any body for mere impropriety or irregularity (அன்றைய அட்வகேட் ஜெனரல், திரு. வி.பி. ராமன் இது குறித்து சட்ட ஆலோசனை வழங்கும்போது, யார்மீதும் அதிகார ஒழுங்கீனத்திற்காகவோ, அதிகார துஷ்பிரயோகக் குற்றத்திற்காகவோ வழக்கு தொடர்வதற்கு இயலாது என்பதோடு, அதற்குச் சாத்தியக் கூறுகளும் இல்லை என்று தன்னுடைய கருத்தை எம்.ஜி.ஆர். அரசுக்குக் கூறியிருக்கிறார்).

அதற்குப் பிறகு மீண்டும் ஒரு முறை 1979ஆம் ஆண்டு முதலமைச்சர் எம்.ஜி.ஆர்., அட்வகேட் ஜெனரல் அவர்களிடம் அதன் மீது வழக்கு தொடரலாமா என்பதற்கு கருத்துரை வழங்குமாறு மீண்டும் கேட்டபோது, அட்வகேட் ஜெனரல் வி.பி. ராமன், **24-10-1979** தெரிவித்த கருத்துரையில், ""With the exception of llegation No, 11(b) which related to Aerial Spraying none of the other allegations enquired into by the Sarkaria Commission could be successfully pursued further in a criminal prosecution" (ஏரியல் ஸ்ப்ரேயிங் சம்மந்தப்பட்ட 11 (பி) குற்றசாட்டினைத் தவிர, சர்க்காரியா கமிஷனால் விசாரிக்கப்பட்ட வேறு எந்தக் குற்றச்சாட்டு சம்மந்தமாகவும் குற்ற வழக்கு தொடர்ந்து வெற்றி பெற இயலாது) என்று தனது கருத்தை இரண்டாவது முறையாகவும் அரசு வழக்கறிஞர் தெரிவித்துவிட்டார்.



இதிலேகூட ஏரியல் ஸ்ப்ரேயிங் வழக்கைப்பொறுத்த வரையில் மத்திய குற்றப் புலனாய்வுத் துறையினரால் (சி.பி.ஐ.) விசாரிக்கப் பட்டு வந்த ஏரியல் ஸ்ப்ரேயிங் வழக்கு சாட்சியங்கள் இல்லாததால் மத்திய அரசினாலேயே திரும்பப் பெறப்பட்டுவிட்டது. இது தான் சர்க்காரியா கமிஷன்மீதான சூழ்நிலை. இதில் 1988ஆம் ஆண்டுவரை பல ஆண்டுகளாக எம்.ஜி.ஆர். ஆட்சி நடந்த போது சர்க்காரியா கமிஷன் சம்மந்தமான கோப்பிலே எந்த முடிவும் எடுக்கப்படாமல் இருந்தது. அதற்குப் பிறகு 1989இல் தி.மு. கழக ஆட்சி பொறுப்பேற்ற பிறகு தான், "The D.M.K. Ministry, which came to power in the State in January 1989, dropped further action on this subject on 23-11-1989 on the basis of the opinion offered by the then Advocate General on 15-11-1977 and 23-10-1979 and as the previous elected Government had not closed the cases, but kept them pending without a decision for a number of years" (1989 ஜனவரி மாதம் இந்த மாநிலத்தில் ஆட்சிக்கு வந்த தி.மு.க. அமைச்சரவை, அதற்கு முன்பிருந்த தேர்ந்தெடுக்கப் பட்ட அரசால் எந்த முடிவும் எடுக்கப்படாமல், பல ஆண்டு காலத்திற்கு கிடப்பிலே வைத்திருந்த கோப்பில், ஏற்கனவே இருந்த அட்வகேட் ஜெனரல் அவர்கள் 15-11-1977 அன்றும் 23-10-1979 அன்றும் தெரிவித்திருந்த கருத்துக்களை அடிப் படையாக வைத்துத் தொடர் நடவடிக்கை எதுவும் எடுக்கத் தேவையில்லை என்று முடிவெடுத்தது).

செய்தியாளர்களிடம் இதை விவரமாகக் கூறி, "இதுதான் ஜெயலலிதாவின் குற்றச் சாட்டுக்கு என்னுடைய பதில்" என்று தெரிவித்தேன்.

மேலும் செய்தியாளர்களிடம் நான் கூறும் போது, ''தி.மு.கழக ஆட்சியிலே இருந்த அட்வகேட் ஜெனரல் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையிலே அந்த வழக்குகள் வாபஸ் பெறப்படவில்லை. எம்.ஜி.ஆர். ஆட்சியிலே - அதாவது அ.தி.மு.க. ஆட்சியிலே இருந்தபோது இது குறித்து வழக்குப் போட வழி இருக்கிறதா என்று யோசனை கேட்ட நேரத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையிலே தான், 13 ஆண்டுகள் எந்தவிதமான முடிவும் எடுக்கப்படாமல் கிடப்பிலே இருந்த கோப்பிலே, அதற்குப் பிறகும் மூட்டை கட்டி வைத்திருக்கத் தேவையில்லை என்ற எண்ணத்தோடு ஒரு முடிவெடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் எடுக்கப்பட்டது. எம்.ஜி.ஆர். ஆட்சியிலே மட்டுமல்ல - இடையிலே இரண்டு முறை ஆளுநர் ஆட்சிகூட நடைபெற்றது. அந்த ஆட்சியிலே கூட எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இதிலேதான் முதலமைச்சர் ஜெயலலிதா வழக்குப் போடுவ தாகச் சொல்லியிருக்கிறார். வழக்கு போடட்டும்!'' என்று நான் பதிலளித்தேன்.

''சட்டமன்றம் தொடங்கிய நாளிலிருந்து தி.மு.க.மீதும், குறிப்பாக உங்கள்மீதும் வழக்கு போடுவதையே முக்கிய விஷயமாக அ.தி.மு.க. ஆட்சியினர் பேசிக் கொண்டிருக்கிறார் களே?'' என்று தொடர்ந்து செய்தியாளர் கேட்டபோது -

''சட்டமன்றம் நடைபெற்ற 24 நாட்களில் நான் சட்ட மன்றத்திற்குப் போகவில்லையே தவிர, அங்கே என்னுடைய பெயர் உச்சரிக்கப்படாத நாளே கிடையாது - அந்த வகையில் நான் சட்டமன்றத்தில் உயிரோட்டமாக இருந்து வருகிறேன் என்று எடுத்துக் கொள்கிறேன்'' என்று பதிலளித்தேன்.

★ ★ ★

ஒவ்வோர் ஆண்டும் ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் தஞ்சைத் தரணியின் வேளாண்மை ஒரு பெரிய சோதனை யாகவே மாறி வருகிறது. காவிரி நீரை நம்பி சாகுபடி செய்யப் படுகிற குறுவைப் பட்டத்தின் இளம் பயிர்கள் வளரும் பருவம் ஜூலை - ஆகஸ்ட் கால கட்டம். குறுவை மகசூலின் தன்மையை நிர்ணயிக்கக்கூடிய பருவமும் இதுவே.

இந்தச் சமயத்தில் தேவைப்படக் கூடிய நீரை, கர்நாடகம் காவிரியில் விடுவதில்லை. காவிரி நடுவர் மன்றத்தின் இடைக் கால தீர்ப்பிலேயே மாதந்தோறும் எவ்வளவு நீரைக் காவிரியில் கர்நாடகம் விடவேண்டும் என்பதைத் துல்லியமாக நிர்ணயித் துள்ளது. இரு மாநிலங்களின் விவசாய நிலவரங்கள் மற்றும் பாசனத் தேவைகள் உள்ளிட்ட அனைத்து அம்சங் களையும், பாசனத் துறையில் அனுபவம்மிக்க வல்லுநர்கள், தொழில் நுட்ப அடிப்படையில் ஆழ்ந்து பரிசீலனை செய்த பிறகு தயாரித்த அறிக்கையின் அடிப்படையிலேயே, மாதந் தோறும் தமிழகத்துக்கு கர்நாடகம் விட வேண்டிய நீரின் அளவு வரையறுக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்த அறிக்கையை மதித்து நடந்து கொள்ள கர்நாடகம் முன் வருவதே இல்லை. 2001 ஆம் ஆண்டிலும் இந்த நிலை இருந்த காரணத்தினால், அப்போது ஆளுங் கட்சியாக இருந்த ஜெயலலிதா அரசு அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டியது. காவிரியின் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்த கழகம், அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள நமது பேராசிரியர் அவர்களையும், பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த தம்பி துரைமுருகன் அவர்களையும் அனுப்பியது.

எந்தக் கூட்டத்தில் எப்படிப் பேசுவது என்ற நாகரிகத்தைக் கூட அறியாத நிலையில், அந்த அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தில் பேசும்போது, ‘‘1997ஆம் ஆண்டில், கழக ஆட்சியில் போடப்பட்ட வரைவு திட்டத்தை அடியோடு கைவிட்டுவிட்டு, எவ்வித அதிகாரமும் இல்லாத ஒரு புதிய காவிரி நதிநீர் ஆணையத்தை அப்போதைய முதல்வர் கருணாநிதி ஏற்றுக் கொண்டது கடுமையான கண்டனத்திற் குரியது!’’ என்று ஜெயலலிதா பேசினார்.

அதையொட்டி நான் 8-9-2001 அன்று விடுத்த அறிக்கையில், கர்நாடகத்தில் கிருஷ்ணராஜ சாகர் அணையின் கொள்ளளவு 49.45 டி.எம்.சி., ஆனால் தற்போது உள்ள நீர் 40.33 டி.எம்.சி. - கபினி அணையின் கொள்ளளவு 19.5 டி.எம்.சி., நீர் இருப்பு 17.34 டி.எம்.சி. - ஹேரங்கி அணையின் கொள்ளளவு 8.5



பேரணியில், செய்தி சேகரிக்கச் சென்ற பத்திரிகையாளர்கள் மீது தாக்குதல் நடத்திய போலீசாரைக் கண்டித்து நடைபெற்ற உண்ணாவிரதத்தில் நக்கீரன் கோபால் உரையாற்றுகிறார்.

டி.எம்.சி., நீர் இருப்பு 8.4 டி.எம்.சி. - ஹேமாவதி அணையின் கொள்ளளவு 35.7 டி.எம்.சி., நீர் இருப்பு 30.56 டி.எம்.சி. - எனவே நான்கு அணைகளின் மொத்தக் கொள்ளளவு 113.15 டி.எம்.சி., நீர் இருப்பு 96.63 டி.எம்.சி. - இந்த அளவு தண்ணீரை வைத்துக் கொண்டுதான் தமிழகத்துக்கு வழங்க வேண்டிய தண்ணீரை கர்நாடகம் தர மறுக்கின்றது.

ஜூன் மாதத்தில் கர்நாடக அரசு தமிழகத்துக்குத் தர வேண்டிய நீரின் அளவு 10.16 டி.எம்.சி. ஆனால் தந்த நீரின் அளவு 4.17 டி.எம்.சி.தான். உடனடியாக தமிழக அரசு இதுகுறித்து தீவிர நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். பிரதமர் தலைமையில் உள்ள காவிரி ஆணையத்தை கூட்டச் சொல்லி கேட்டிருக்க வேண்டும். ஜூலை மாதத்தில் நமக்கு வர வேண்டிய நீரின் அளவு 42.76 டி.எம்.சி. - ஆனால் வந்ததோ 23.86 டி.எம்.சி.தான். இதற்குப் பிறகாவது மாநில அரசு விழித்துக் கொண்டிருக்க வேண்டும். ஆகஸ்ட் மாதத்தில் வர வேண்டிய நீரின் அளவு 54.72 டி.எம்.சி. ஆனால் வந்ததோ 21.48 டி.எம்.சி.தான். இதற்குப் பிறகும் மாநில அரசு விழித் துக் கொள்ளவில்லை. செப்டம்பரில் வர வேண்டிய நீரின் அளவு 29.36 டி.எம்.சி. ஆனால் 7-9-2001 வரை வந்ததோ 1.6 டி.எம்.சி.தான்.

ஆக, ஜூன் முதல் செப்டம்பர்வரை நமக்கு வந்திருக்க வேண்டிய நீரின் அளவு 137 டி.எம்.சி. ஆனால் வந்த நீரின் அளவு

வெறும் 51.11 டி.எம்.சி. தான். எனவே தமிழக அரசு முன்பே நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது. அந்தப் பழியை மறைப்பதற்காகத்தான் தற்போது அவசர அவசரமாக ஏதேதோ செய்து கொண்டுள்ளனர். ''காவிரிப் பிரச்சினையில் - கழக அரசு இருந்த போது அ.தி.மு.க. ஒத்துழைப்பு தர வில்லை. ஆனால் தி.மு.க. அப்படி இராது. தனது ஒத்துழைப்பை தி.மு.க. அளிக்கும்!'' என்று தெரிவித்திருந்தேன்.

ஆனால் முதலமைச்சர் ஜெயலலிதா அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், தி.மு.கழகத்தையும் உட்கார வைத்துக் கொண்டு, கழக அரசின்மீது குறை கூறினார். அதைப் பற்றி கேட்டபோது, ''பயிருக்கு தண்ணீர் இல்லாமல் தமிழக விவசாயிகள் வேதனைக் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்த நேரத்தில் மாநிலத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளும் தங்கள் வேறுபாடுகளை மறந்து ஒரே அணியில் இருந்து பாடுபட வேண்டும் என்ற நோக்கத்தோடு காவிரிப் பிரச்சினையில் தி.மு.க. தனது ஒத்துழைப்பை வழங்குமென்று கூறினேன். அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவை தி.மு.க. ஏற்றுக் கொள்ளும் என்றும் அறிவித் திருந்தேன். பொது நலப் பிரச்சினையில் எங்கள் செயல்பாடு இந்த அளவுக்கு இருக்க, முதலமைச்சர் தனது பேச்சில் தி.மு.க.மீது சேறு வாரி இறைத்திருக்கிறார்'' என்று பதிலளித்தேன்.

★ ★ ★


19. அரசியல் சட்டத்தையே மீறிய ஆளுநர் பாத்திமா பீவி!

ஜெயலலிதா அவசர அவசரமாக முதல்வராகப் பதவி ஏற்றதை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் பி.ஆர். கபூர், மனோகர்லால் சர்மா, முன்னாள் துணைப் பிரதமர் தேவிலாலின் மகன் பிரதாப் சிங் சௌதாலா, தனஞ்செயன் சவுஹான், பி.எல். வதேரா ஆகியோர் பொதுநல வழக்கு தாக்கல் செய்தனர். அந்த வழக்கை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட உச்ச நீதிமன்றம், அதன்மீது ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் அமைப்புச் சட்ட பெஞ்ச் விசாரணை நடத்த உத்தரவிட்டது.



ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி ஜெயலலிதா முதல் அமைச்சராகப் பதவி வகிப்பதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் "கோ வாரண்டோ ரிட்" மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

அந்த மனுவில், "ஊழல் தடுப்புச் சட்டத்தில் ஜெயலலிதாவுக்கு மூன்று வழக்குகளில் தண்டனை விதிக்கப்பட்டது. டான்சி வழக்கில் மட்டும் 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. எனவே, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 8 (3) படி அவர் தேர்தலில் போட்டியிடத் தகுதி இழந்து விட்டார். அதனால் தேர்தலில் போட்டியிட ஜெயலலிதா தாக்கல் செய்த மனுவைத் தள்ளுபடி செய்து விட்டனர்.




சென்னை மாநகராட்சி மேயர் தேர்தலில் நான் வாக்களிக்கிறேன்.

இந்த நிலையில் தேர்தலில் நிற்க தகுதியில்லாத ஜெயலலிதாவை முதல் அமைச்சராக ஆளுநர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தது தவறு, எனவே அவர் எந்தத் தகுதி அடிப்படையில் முதலமைச்சராகப் பதவி வகிக் கிறார் என்று வினவ வேண்டும். அந்த மனு மீதான விசாரணை முடியும்வரை முதல் அமைச் சராக அவர் பதவி வகிக்க இடைக்காலத்தடை விதிக்க வேண்டும்!'' என்று கூறியிருந் தார்.

உயர் நீதிமன்றத்தில் அந்த மனு விசாரிக்கப்பட கால தாமதம் ஆனதால், உச்ச நீதி மன்றத்தில் உடனடியாக அதை விசாரிக்க வேண்டுமென்று கேட்டு ஒரு மனுவினை 18-6-2001 அன்று அவரே தாக்கல் செய்தார்.

''ஊழல் வழக்கில் தண்டனை அடைந்த ஒருவர்மேல் நீதி மன்றத்தால் குற்றமற்றவர் என்று நிரூபிக்கப்படும்வரை, அரசுப் பதவியில் நீடிக்கக்கூடாது - குற்றவாளி என்று கீழ் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை மேல் நீதிமன்றம் நிறுத்தி வைக்கக்கூடாது - தண்டனையை வேண்டுமானால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம் - ஆனால் ஊழல் குற்றவாளி ஒருவர் குற்றச்சாட்டு களில் இருந்து நீதிமன்றத்தால் விடுவிக்கப்படும் வரை அரசு பதவியில் நீடிக்கக்கூடாது - அப்படி அமர்வதற்கு நீதிமன்றம் துணை போகக்கூடாது'' என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கே.டி. தாமஸ், எஸ்.என். வரியவா ஆகியோர் 2-8-2001 அன்று பரபரப்பான ஒரு தீர்ப்பை வேறொரு ஊழல் வழக்கிலே தெரிவித்தனர்.

அந்தத் தீர்ப்பை மேற்கோள் காட்டி ஊழல் குற்றவாளி ஜெயலலிதா தமிழக முதல்வராக பதவியில் நீடிப்பதற்குத்



தம்பி முரசொலி மாறன் வாக்களிக்கும் காட்சி

தடை விதிக்க வேண்டும் என்று கோரித்தான் பி.ஆர். கபூர் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தார். அந்த வழக்கைத் தொடர்ந்து பல வழக்கறிஞர் களும், ''இந்து'' போன்ற நாளேடுகளின் ஆசிரியர்களும், ஜெயலலிதா முதலமைச்சராகப் பதவியிலே தொடருவதுபற்றி எதிர்ப்புத் தெரிவித்தனர்.

2-8-2001 அன்று உச்ச நீதி மன்றம் ஒரு பரபரப்பான தீர்ப்பை வெளியிட்டதுபோலவே 17-8-2001 அன்றும் ஒரு பரபரப்பான தீர்ப்பை வெளியிட்டது. அதன்படி சட்டப் பேரவை உறுப்பினராக ஆகாமல் ஆறு மாதத்திற்கு மேல் அமைச்சராக ஒருவர் இருக்க முடியாது என்பதுதான் அது.

பஞ்சாப் மாநில முதல் அமைச்சராக இருந்த பியாந்த் சிங் 1995இல் தீவிரவாதிகளின் குண்டு வெடிப்பில் சிக்கி பலியானார். அதையடுத்து, அவரது மகன் தேஜ் பிரகாஷ் சிங் 9-9-1995இல் பஞ்சாப் மாநில அமைச்சராக்கப்பட்டார். அவர், அப்போது சட்டமன்ற உறுப்பினர் இல்லை. ஆறு மாதத்திற்குள் அவர் ஏதோ ஒரு தொகுதியில் போட்டியிட்டு எம்.எல்.ஏ.வாக ஆகியிருக்க வேண்டும். ஆனால் அவர் அப்படி ஆகவில்லை. எனவே 9-3-1996 அன்று அவர் அமைச்சர் பதவியை விட்டு விலகினார். சில மாதங்கள் இடைவெளிக்குப் பிறகு 23-11-1996இல் அவர் மீண்டும் அமைச்சராக நியமிக்கப் பட்டார்.

அப்போதும் அவர் எம்.எல்.ஏ. இல்லை. அதை எதிர்த்து எஸ்.ஆர். சவுத்ரி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. அதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். தலைமை நீதிபதி ஏ.எஸ்.ஆனந்த், நீதிபதிகள் ஆர்.சி. லகோட்டி, கே.ஜி.



பாலகிருஷ்ணன் ஆகியோர் இந்த வழக்கை விசாரித்து, ''தேஜ் பிரகாஷ்சிங் இரண்டாவது முறையாக அமைச்சராகப் பதவியேற்றது செல்லாது'' என்று தீர்ப்பளித்தனர்.

அந்தத் தீர்ப்பைப் பொறுத்தவரையில் தமிழகத்திலே அது அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. காரணம், எம்.எல்.ஏ.வாக இல்லாத ஜெயலலிதா முதல்வர் பொறுப்பேற்றிருந்தார். அவர் ஆறு மாத காலத்திற்குள் எம்.எல்.ஏ.வாக ஏதாவதொரு தொகுதி யில் நின்று வெற்றி பெறவேண்டும். ஆனால் டான்சி நில ஊழல் அப்பீல் வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தில் அப்போது நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்த நிலையில் அவர் எந்தவொரு தொகுதியிலும் வேட்பாளராகப் போட்டியிட இயலாது. இந்தத் தீர்ப்பின்படி அவர் ஆறு மாதத்திற்குமேல் - மீண்டும் சில நாட்கள் இடைவெளிக்குப் பிறகு முதலமைச்சராகவும் பொறுப்பேற்க இயலாது.

அரசியல் சட்டப்படி அளிக்கப்பட்டத் தீர்ப்பு மேலானதா? மக்கள் தீர்ப்பில் பெரும்பான்மை பெற்ற ஜெயலலிதா பதவியில் நீடிப்பதா? என்ற கேள்வி பெரிதாக எழுந்தது. ஜெயலலிதா சார்பில் மூத்த வழக்கறிஞர் கே.கே.வேணுகோபால் அவர்கள் அப்போது வாதாடினார்.

''ஜெயலலிதா சிறைத் தண்டனைப் பெற்ற போதிலும், அவர்தான் முதல்வராக வர வேண்டும் என்று தமிழக மக்கள் தேர்தலில் அவருக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். அவருக்குப் பதிலாக வேறு ஒருவரை முதல்வராக நியமிக்க


ஆளுநர் முயன்றிருந்தால், மக்களின் விருப்பம் தோற்கடிக்கப் பட்டிருக்கும்'' என்றார், வேணுகோபால்.

அப்போது நீதிபதிகள் குறுக்கிட்டு, ''சட்டத்துக்கு உட்பட்டுப் பேசுங்கள். மக்கள் அளித்த தீர்ப்பு அரசமைப்புச் சட்டத்தை விட உயர்ந்ததாக இருக்கமுடியாது. தண்டனை பெற்ற போதிலும், தேர்தலில் ஜெயலலிதா வெற்றி பெற்றுள்ளார். அவருக்கு விதிக்கப் பட்ட தண்டனை இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள்தான். கொலைக் குற்றத்துக்காகத் தண்டனை பெற்ற ஒருவர், நாளை இதேபோல தேர்தலில் வெற்றி பெற்று, அமைச்சராகவோ முதல்வராகவோ வரக்கூடும். இது எங்கு போய் முடியும்? ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் தண்டிக்கப் பட்ட ஒருவருக்கு முதல்வராகப் பதவிப் பிரமாணம் செய்து வைத்த ஆளுநரை இதுவரை நாம் பார்த்ததில்லை. (அப்போது ஜெயலலிதாவுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்த ஆளுநர் பாத்திமா பீவியும் ஒரு நீதிபதிதான்) நமது அரசமைப்புச் சட்டம் இப்படியொரு சூழ்நிலை ஏற்படும் என்று நினைத்த தில்லை. இதுபோன்ற வழக்கை அடிப்படையாகக் கொண்ட நீதிமன்றத் தீர்ப்பையும் நாம் இதுவரைப் பார்த்ததில்லை. எனவே இதைப் புதிய கோணத்தில் நாம் அணுக வேண்டும்!'' என்றார்கள்.

வேணுகோபால்:- அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் தங்கள் தலை வராக ஜெயலலிதாவைத் தேர்ந் தெடுத்துள்ளனர். அதை நாம் மதிக்க வேண்டும்.

நீதிபதி பரூச்சா :- அதே நேரத்தில் அவர்களது செயல் அரசமைப்புச் சட்டத்தை மீறியதாக இருக்கக்கூடாது.

வேணுகோபால் :- ஜெயலலிதாவுக்கு நியாயமற்ற முறையில் தண்டனை வழங்கப்



செ.ராமச்சந்திரன்

பட்டிருப்பதாகத் தமிழக மக்கள் கருதினர். அதனால்தான் அவரை ஆதரித்து தேர்தலில் வாக்களித்துள்ளனர்.

நீதிபதி பரூச்சா :- நாங்கள் உங்கள் வாதத்தைத்தான் கேட்கிறோமே தவிர, தமிழக மக்களின் வாதத்தைக் கேட்க வில்லை. மக்கள் தீர்ப்பளித்துவிட்டார்கள் என்பதற்காக அரசமைப்புச் சட்டத்தைத் தூக்கி வீசிவிடலாமா? இதுபோன்ற வாதத்தை முன்வைப்பது ஆபத்தானது. தனக்கு விதிக்கப்பட்ட தண்டனை ரத்து ஆகும்வரை ஜெயலலிதா காத்திருந்திருக்க வேண்டும்.

- இவ்வாறு நடைபெற்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் 21-9-2001 அன்று தீர்ப்பு அளித்தது. ஐந்து நீதிபதிகளும் ஒருமித்தக் கருத்தைத் தெரிவித்தனர். அதில், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவைத் தமிழக முதல்வராக ஆளுநர் பாத்திமா பீவி நியமனம் செய்தது சட்ட விரோதமானது என்றும், அவர் தொடர்ந்து முதல்வரர்க நீடிக்க முடியாது என்றும் தீர்ப்பளித்தார்கள். அந்தத் தீர்ப்பின்படி ஜெயலலி தாவும், அவரால் நியமிக்கப்பட்ட அமைச்சர்களும் தங்கள் பதவிகளை இழந்தனர். பொறுப்பிலே இருந்த தமிழக ஆளுநர் திரு. ரங்கராஜனைச் சந்தித்து ஜெயலலிதா ஆலோசனை நடத்தினார்.

அன்றைய தினமே அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம், ஜெயலலிதா முன்னிலையில் நடைபெற்று, ஓ. பன்னீர்ச் செல்வம் முதலமைச்சராகத் தேர்வு செய்யப்பட்டு, இரவு 8.15 மணிக்கு புதிய அமைச்சரவையும் பதவியேற்றது.

தமிழக அரசு இவ்வாறு பரபரப்பாகச் செயல்பட்ட அந்தக் காலக் கட்டத்தில், 2001ஆம் ஆண்டு செப்டம்பர் 11 - உலகம் முழுவதையும் மிகப் பெரிய அதிர்ச்சிக்கு ஆளாக்கிய ஒரு சம்பவம் - அன்றுதான் அமெரிக்காவில் பயங்கரவாதிகள் விமானங்களை அடுத்தடுத்து மோதி - அங்கேயிருந்த மிக உயரமான 110 மாடிக் கட்டிடங்களை எல்லாம் தகர்த்தனர். ராணுவத் தலைமையகத்தின்மீதே விமானம் மோதியது. இருபதே நிமிடங்களில் வானுயர எழுந்து நின்ற கட்டிடங்கள்


இடிந்து விழுந்தன. ஆறாயிரத்திற்கும் மேற்பட்டோர் அதிலே பலியாகினர். அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டன், இரண்டாவது பெரிய நகரம் நியூயார்க், மற்றும் பென்சில் வேனியா ஆகியவற்றின் மீது மிகப் பெரிய தாக்குதல் நடந்தது. இந்தத் தாக்குதல்களில் நான்கு விமானங்கள் பயன்படுத்தப் பட்டன. 4 விமானங்களிலும் மொத்தம் 266 பயணிகள் இருந்தனர். பயங்கரவாதிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் அந்த அப்பாவிப் பயணிகள் அனைவரும் பலியாகினர். அந்தத் தாக்குதலை அடுத்து அமெரிக்கா முழுவதும் விமானங்கள் நுழையத் தடை விதிக்கப்பட்டது. அந்தத் தாக்குதல் நடந்தபோது அமெரிக்க அதிபர் **ஜார்ஜ் புஷ்.** அந்தத் தாக்குதலுக்கும் தனக்கும் தொடர்பில்லை என்று சர்வதேச பயங்கரவாத அமைப்பின் தலைவர் **ஒசாமா பின்லேடன்** மறுத்த போதிலும், அந்தத் தாக்குதலைத் தான் ஆதரிப்பதாகத் தெரிவித்தார்.

"அமெரிக்கப் படைகளிடம் இருந்து ஒசாமா பின்லேடன் தப்ப முடியாது, எந்த மூலையில் ஒளிந்திருந்தாலும், அவர்மீது தாக்குதல் தொடுப்போம்" என்று அமெரிக்க அதிபர் புஷ் சபதம் செய்தார். தீவிரவாதிகளின் அந்தச் செயலை இந்தியப் பிரதமர் வாஜ்பய் வன்மையாகக் கண்டித்தார். அமெரிக் காவில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு, பிரதமர் வாஜ்பாயுடன் அமெரிக்க அதிபர் புஷ் தொலைபேசியில் பேசினார்.

★ ★ ★

16-9-2001 அன்று ஆப்கானிஸ்தானத்தில் உள்ள மஸார்-இ-ஷெரீப் நகரின்மீது போர் விமானங்கள் கடுமையான தாக்குதலை நடத்தின. அந்த விமானங்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவை என்று தெரியவில்லை.

அமெரிக்கா மீதான தாக்குதலில் முக்கிய குற்றவாளி எனக் கருதப்படும் ஒசாமா பின்லேடனை ஒப்படைக்க தலிபான் அரசிடம் பாகிஸ்தான் தூதுக்குழு பேச்சுவார்த்தை நடத்தியதில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. போருக்கான ஆயத்த நடவடிக்கைகளை அமெரிக்கா தொடங் கியது. அந்த நிலையில்,



மேயராக வெற்றி பெற்ற தளபதி மு.க.ஸ்டாலின்
சர்.பிட்டி தியாகராயர் சிலைக்கு மாலை அணிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் இருந்து ஒசாமா பின்லேடன் தானாக வெளியேற வேண்டுமென்று அந்த நாட்டைச் சேர்ந்த மதத் தலைவர்கள் கேட்டுக்கொண்டார்கள். ''பின்லேடனை உடனடியாகத் தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் - தவறினால் ஆப்கன்மீது தாக்குதல் நடத்துவோம்!'' என்று அமெரிக்க அதிபர் புஷ் எச்சரித்தார்.

''பின்லேடனை எந்தக் காரணத்தை முன்னிட்டும் அமெரிக்காவிடம் ஒப்படைக்க மாட்டோம்'' என்று தலிபான் அரசு அறிவித்தது.

★ ★ ★

7-10-2001 அன்று ஆப்கான் தலைநகர் காபூல், காந்தகார், ஜலால்பாத் ஆகிய நகரங்களில் உள்ள தீவிரவாதிகள் முகாம், ராணுவ தளங்களைக் குறி வைத்து அரபிக் கடலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அமெரிக்க, இங்கிலாந்து போர்க் கப்பல் களில் இருந்து ஏவுகணைகள் வீசப்பட்டன. அமெரிக்கா

இவ்வாறு தாக்குதலைத் தொடங்கியதும், தலிபான் ராணுவம் ஸ்டிங்கர் ஏவுகணைகள் மூலம் பதில் தாக்குதல் நடத்தினர்.

★ ★ ★

இதற்கிடையே, காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான **மாதவராவ்** சிந்தியா அவர்கள், 30-9-2001 அன்று விமான விபத்தில் சிக்கி உயிரிழந்தார். அவருடன் விமானத்தில் பயணம் செய்த நான்கு பத்திரிகையாளர்கள், விமானி, துணை விமானி, சிந்தியாவின் செயலாளர் ஆகியோரும் அந்த விபத்திலே பலியானார்கள்.

மத்தியப் பிரதேசத்தின் குவாலியர் ராஜ குடும்பத்தைச் சேர்ந்த ராஜமாதா **விஜய ராஜே சிந்தியாவின்** மகன்தான் மாதவராவ் சிந்தியா. முதலில் ஜனசங்கத்திலும், பின்னர் பாரதீய ஜனதா கட்சியிலும் இருந்தவர் விஜயராஜே சிந்தியா. ஜனசங்கத்தின் ஆதரவுடன்தான் மாதவ ராவ் சிந்தியாவும் அரசியலில் நுழைந்தார். கான்பூரில் நடக்கவிருந்த காங்கிரஸ் கட்சிப் பேரணியில் கலந்து கொள்வதற்காகச் சென்று கொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டது.

1971ஆம் ஆண்டு, தமிழகத்தில் கழகம் என் தலைமையில் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு, மிகப் பெரிய வெற்றியை அடைந்த நேரத்தில்தான் மத்தியப் பிரதேசத் தில் ''குணா'' மக்களவைத் தொகுதியில் ஜனசங்க ஆதரவு பெற்ற சுயேச்சையாக மாதவராவ் சிந்தியா போட்டியிட்டு, வெற்றி பெற்று, தன் அரசியல் வாழ்க்கையைத் தொடங்கினார்.



மேயர் தளபதி மு.க.ஸ்டாலினுக்கு சால்வை அணிவித்து வாழ்த்துகிறார், கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர்.

★ ★ ★

2001ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவை பொதுத் தேர்தலில், அ.தி.மு.க. அணியினர் வெற்றி பெற்று ஆளுங்கட்சி யாக அமர்ந்தவுடன், சூட்டோடு சூடாக உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்திட முடிவு செய்தார்கள். அதற்கு முன்பு அ.தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது, பத்தாண்டு காலத்திற்கு மேலாக உள்ளாட்சி மன்றத் தேர்தல்களையே நடத்தவில்லை.

1996ஆம் ஆண்டு தி.மு.கழகம் ஆட்சிக்கு வந்த பிறகுதான் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களையே நடத்தியது. அப்போது அனைத்துப் பதவிகளிலும் உள்ளாட்சி மன்றங்களில் 33 சதவிகிதம் ஒதுக்கீடும் செய்தது. அதன் காரணமாக, மொத்த மிருந்த 1,16,747 நிர்வாகப் பொறுப்புகளில் 44,143 பொறுப்பு களில் முதன் முதலாக மகளிர் இடம் பெற்றார்கள். 2001இல் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில், தி.மு.கழக அணியில் தேர்தலில் வேட்பாளர்களை நிறுத்திப் போட்டியிடும் கட்சிகளாக தி.மு.க.வும், பா.ஜ.க.வும், பா.ம.க.வும், எம்.ஜி.ஆர். அ.தி.மு.க.வும், எம்.ஜி.ஆர். கழகமும், மூவேந்தர் முன்னேற்றக் கழகமும் இருந்தன. தமிழ் மாநில தேசிய லீக் மற்றும் சில கட்சிகள் ஆதரவு தெரிவித்தன.

ஆனால், அந்த உள்ளாட்சி மன்றத் தேர்தலில் ஆளுங் கட்சியான அ.தி.மு.க. வன்முறை வெறியாட்டம் நடத்தியது. காவல் துறையினரின் ஒத்துழைப்போடு அராஜகத்தில் ஈடுபட்டனர். கழகத்தினர் வேட்டையாடப்பட்டார்கள். ''இந்து'' போன்ற ஆங்கில ஏடுகள் எல்லாம், அதிகாரிகள் மிரட்டப் பட்டனர் என்றும், வாக்குச்சாவடிகள் சூறையாடப் பட்டன என்றும், ஆயுதம் தாங்கிய அ.தி.மு.க.வினர் வன்முறை வெறியாட்டம் நடத்தினர் என்றும் எழுதின. பேராசிரியர் தலைமையில் தோழமைக் கட்சியினர் ஆளுநரைச் சந்தித்து முறையிட்டும், எந்தப் பயனும் ஏற்படவில்லை.

ஆளுங்கட்சியின் அராஜகம், அக்கிரமத்தை மீறி அந்த உள்ளாட்சித் தேர்தலில் கழகக் கூட்டணி 43 நகராட்சிகளிலும், 100க்கும் மேற்பட்ட பேரூராட்சிகளிலும் வெற்றிபெற்றது.



சென்னை மேயர் தேர்தலில் கழக வேட்பாளர் தம்பி **மு.க.ஸ்டாலின்** தன்னை அடுத்து வந்த அ.தி.மு.க. வேட்பாளரைக் காட்டிலும், 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்றார். அதிலுங்கூட, வாக்கு எண்ணுமிடத்தில் அ.தி.மு.க.வினர் நுழைந்து அதிகாரிகளின் துணையோடு கழக வெற்றியை மாற்றி அறிவித்திட முயற்சித் தனர்.

அதுபோலவே, மதுரை மாநகராட்சி மன்ற மேயர் தேர்தலிலும் கழக வேட்பாளர் செ. இராமச்சந்திரன், செல்லூர் ராஜுவை விட 27,849 வாக்குகள் கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்றார். 1996ஆம் ஆண்டு தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன், உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்திய போது சென்னை, மதுரை, நெல்லை, சேலம் ஆகிய நான்கு மாநகராட்சிகளில் தி.மு. கழகமும், திருச்சி, கோவை மாநகராட்சிகளில் கழகக் கூட்டணிக் கட்சிகளும் வெற்றி பெற்றன. பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க.விற்கு ஒரு மாநகராட்சிகூடக் கிடைக்கவில்லை.

ஆனால், 2001ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பினையேற்ற அ.தி.மு.க., உடனடி யாக உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்தினால், தி.மு.க.விற்கு ஒரு மாநகராட்சி மன்றம் கூடக் கிடைக்காது என்றெண்ணி, நடத்திய அந்தத் தேர்தலில், சென்னை, மதுரை ஆகிய இரண்டு முக்கிய மாநகராட்சிகளைக் கழகம் கைப்பற்றியது, பெரும் வெற்றியாகக் கருதப்பட்டது.

அதுபோலவே 1996ஆம் ஆண்டு நடத்திய உள்ளாட்சித் தேர்தலில், எதிர்க்கட்சியான அ.தி.மு.க.விற்கு 8 நகராட்சிகள் மட்டுமே கிடைத்ததற்கு மாறாக, 2001ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில், தி.மு. கழகக் கூட்டணிக்கு 43 நகராட்சிகளில் வெற்றி கிடைத்தது.

எந்த அளவிற்கு வாக்கு எண்ணிக்கையின்போது தவறுகள் நடந்தது என்பதற்கு ஒரேயொரு எடுத்துக்காட்டு கூற வேண்டு மேயானால், 1996ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தலில் சென்னை மாநகராட்சியில் செல்லாத வாக்குகள் 13 ஆயிரம்தான்! ஆனால் 2001ஆம் ஆண்டு அ.தி.மு.க. தேர்தலை நடத்தியபோது சென்னை மாநகராட்சியில் செல்லாத வாக்குகளின் எண்ணிக்கை 42,314.

உள்ளாட்சித் தேர்தலில், கழகக் கூட்டணிக்கு வாக்களித்த மக்களுக்கு "அராஜக இருட்டுக்குள் ஜனநாயக அகல் விளக்கு ஏற்றிய தமிழக வாக்காளர்களுக்கு தலை வணங்கி நன்றி செலுத்துகிறேன்" என்று நான் அப்போது எழுதினேன்.


25-10-2001 அன்று சென்னை மாநகர மேயராகத் தம்பி ஸ்டாலின் இரண்டாவது முறையாகப் பதவியேற்றார். அதே நாளில் மதுரை மாநகராட்சி மேயராக செ. ராமச்சந்திரன் பதவியேற்றார். இருவரும், பதவி யேற்ற மறுநாளே, அப்போது முதலமைச்சர் பொறுப்பிலே இருந்த ஓ. பன்னீர்செல்வம் அவர்களை அவரது இல்லத்தில் மரியாதை நிமித்தம் சந்தித்தனர்.

உள்ளாட்சித் தேர்தல்களில் கழகம் பெற்ற வெற்றிச் செய்திகளுக்கிடையே கோவை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த முன்னோடித் தலைவர்களில் ஒருவரும் -

வரலாற்றுச் சான்றுகளுடன் கடல் மடை திறந்தாற்போல் சொற்பொழிவாற்றும் திறன் படைத்தவரும் - நாடாளுமன்ற, சட்ட மன்றங்களில் ஆக்கபூர்வமான அரிய கருத்துக்களை எடுத்துரைத்தவரும் - என்னுடைய அன்பு உடன்பிறப்புகளில் ஒருவருமான தம்பி சி.டி.தண்டபாணி 28-10-2001 அன்று காலையில் மறைந்து விட்ட செய்தி வந்தடைந்தது. கழகத்தின் சார்பில் அவருடைய குடும்பத்தாருக்கு இரங்கலைத் தெரிவித்துக் கொண்டேன்.

அதே நாள் பகல், மதியம் ஒன்றரை மணி அளவில் தொலைக்காட்சி செய்திகளைப் பார்த்தவாறு உணவருந்திக் கொண்டிருந்தேன். அப்போதுதான் என் நெஞ்சைக் கசக்கிப் பிழிந்த மற்றொரு நிகழ்ச்சி தொலைக்காட்சியில் தோன்றி என் விழிகளில் வேல்களைப் பாய்ச்சியது. பாகிஸ்தானில் உள்ள பாவல்பூர் நகரத்துக் கிறித்தவ தேவாலயத்தில் தீவிரவாதிகள் புகுந்தனர் என்றும், அவர்கள் ஏந்தியிருந்த துப்பாக்கிகளால் அந்தத் தேவாலயத்தில் குழுமியிருந்தோர்மீது சுட்டார்கள் என்றும், அந்தக் கோரத்தாக்குதலில் சுருண்டு விழுந்து மாண்டோர் 18 பேர்களின் சவங்கள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன என்றும் தொடர்ந்த அந்தச் செய்தி என் செவிகளுக்கு இடி முழக்கமாயின. அதற்குமேல் ஒரு பிடி உணவுகூட அருந்திட இயலவில்லை. அசைவற்ற நிலையில் சற்று நேரம் இருந்து, பின்னர் எழுந்து கை கழுவினேன்.

அந்தத் தீவிரவாதக் கொடுமை தனது வெறிகொண்ட நகங்களை பாகிஸ்தானின் பாவல்பூர் தேவாலயத்தில் நீட்டியிருப்பது போலத்தான், அக்டோபர் முதல் தேதியன்று இந்தியாவில் காஷ்மீர் மாநிலச் சட்டப் பேரவையைத் தகர்க்க திட்டமிட்டு, ''ஜெய்ஷ்-இ-முகம்மது'' என்ற பயங்கரவாத அமைப்பின் பெயரால், ''டாட்டா சுமோ''வைக் கொண்டு வெடி குண்டுகளால் கட்டிடப் பகுதி களைத் தகர்த்து, 26 பேரைச் சிதற அடித்துக் கொன்று, 40 பேரைப் படுகாயமுறச் செய்து, வன்முறைப் ''பேயாட்டம்'' ஒன்றை நடத்தி முடித்தனர். பாகிஸ்தானின் வட மேற்கு எல்லைப் புற மாகாணத்தைச் சேர்ந்த **வஜாத் உசேன்** என்ற பயங்கர



வாதியின் தலைமையில் இது நடைபெற்ற தாக அப்போது அறிவிக்கப்பட்டது.

★ ★ ★

2001ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள், முதல் வாரத்தில் சென்னை அருகே செங்குன்றத்தில் விஷச் சாராயம் குடித்து 32 பேர் உயிரிழந்தனர். 30க்கும் மேற்பட்டோர் மருத்துவ மனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டனர்.

அதே திருவள்ளூர் மாவட்டத்தில் அதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னால், அம்பத்தூர் அருகே விஷச் சாராயம் குடித்து பதினைந்துக்கும் மேற்பட்டோர் உயிர் இழந்தார்கள்.

செங்குன்றம் அருகே உள்ள கோட்டூர், பள்ளிக்குப்பம், பாலவாயல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கூலித் தொழிலாளர்கள் 5-10-2001 அன்றிரவு கோட்டூரில் கள்ளச் சாராயம் வாங்கிக் குடித்திருக்கிறார்கள். அவ்வாறு குடித்தவர்களுக் கெல்லாம் சிறிது நேரத்தில் வாந்தி, மயக்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, பல்வேறு மருத்துவமனைகளுக்கும் அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையிலே சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களில் மட்டும் 13 பேர் உயிரிழந்தார்கள். ''அ.தி. மு.க. ஆட்சிக்கு வந்ததும், கள்ளச்சாராயமும் வந்து விட்டது - கள்ளச்சாராய பலிகளும் வந்து விட்டன'' என்று மக்கள் அதுபற்றி விமர்சனம் செய்தார்கள்.

கள்ளச் சாராயத்தை விற்றவர்கள் மாதந்தோறும் போலீசாருக்கு ஐம்பதாயிரம் ரூபாய் மாமூல் கொடுப் பதாகத் தெரிவித்தனர். அந்த விஷச் சாவுகளையொட்டி, செங்குன்றம் மற்றும் மாதவரம் மதுவிலக்குப் பிரிவைச் சேர்ந்த 15 போலீசாரும், செங்குன்றம் காவல் நிலையத்தில் வேலை

பார்த்த 32 போலீ சாரும் மற்றும் 3 போலீஸ் அதிகாரி களும் மாற்றப் பட்டார்கள்.

★ ★ ★


மீண்டும் 30-11-2001 அன்று, கடலூர் மாவட்டம் பண்ருட்டி அருகில் விஷச் சாராயத்துக்கு 52 பேர் பலியானார்கள். இவைகள் எல்லாம் அ.தி.மு.க. ஆட்சியில் மதுவிலக்குக் கொள்கை எந்த அளவிற்கு நடைமுறைப் படுத்தப்பட்டது என்பதற் கான சான்றுகளாகும்.


இந்த விஷச் சாராய சாவுகள் குறித்து 1-12-2001 தேதிய "தினமணி" நாளிதழில் ஆர். உமாசங்கர் எழுதிய கட்டுரையின் சில பகுதி களைப் படித்தாலே அப்போது அ.தி. மு.க. ஆட்சி எந்த அளவிற்கு நடை பெற்றது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். அந்தக் கட்டுரை வருமாறு :-




போலீசாருக்கு மாமூல் கொடுத்து - நடமாடவிட்ட கள்ளச் சாராயத்தால் - அ.தி.மு.க. அரசில் ஏராளமானவர்கள் உயிரிழந்தார்கள் - உறவினர்கள் கதறினார்கள்.

❁ "தமிழகத்தில் எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல், தாராளமாகக் கள்ளச் சாராயம் காய்ச்சப்படு கிறது - விற்கப்படுகிறது என்பதை உறுதி செய்யும் வகையில் அமைந்துள்ளது, பண்ருட்டி அருகே விஷச் சாராயத்துக்கு முப்பதுக்கும் மேற்பட்டோர் பலியான










அமெரிக்காவில் – உலக வர்த்தக மையக் கட்டிடங்களில் – தீவிரவாதிகள் நடத்திய திடீர்த் தாக்குதலில் பல்லாயிரவர் பலியாயினர்.

சம்பவம்! மூன்று மாதங்களில் 90 பேர் பலியாகியுள்ளனர். கூடுதல் டி.ஜி.பி. தலைமையில் மதுவிலக்குக்கு என்று தனிப்பிரிவைக் கொண்டுள்ளது தமிழகக் காவல்துறை. அப்படியிருந்தும், தமிழகத்தில் தாராளமாகச் சாராயம் காய்ச்சப்படுகிறது – விற்கப்படுகிறது! கள்ளச் சாராய வியாபாரிகள் – போலீசார் – அரசியல்வாதிகளுக்கு உள்ள நெருக்கத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது இது! மதுக் கடைகளில் ‘‘பார்கள்’’ நடத்த அனுமதி கிடையாது. ஆனாலும், பெரும் பாலும் எல்லா மதுக்கடைகளிலுமே ‘‘பார்கள்’’ நடந்து கொண்டு தான் இருக்கின்றன. மது விலக்குப் போலீசாருக்கு வருமானத்தை அள்ளித் தரும் கற்பகத்தருக்களாக இந்தச் சட்ட விரோத ‘‘பார்கள்’’ உள்ளன. மதுவிலக்குக் கொள்கையில் அரசுக்கு




மாதவராவ் சிந்தியா

ஏன் இந்தத் தள்ளாட்டம்?'' - என்று ''தினமணி'' அப்போது எழுதியது.

★ ★ ★

2001ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள், இரண்டாவது வாரத்தில், கத்தார் நாட்டில் தோகாவில் உலக வர்த்தக அமைப்பு மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் உலகின் 142 நாடுகளைச் சேர்ந்த வர்த்தக அமைச்சர்கள் பங்கேற்றனர்.

இந்தியாவின் சார்பில் மத்திய வர்த்தக தொழில் துறை அமைச்சராக இருந்த தம்பி **முரசொலி மாறன்** கலந்து கொண்டார். வளரும் நாடுகளின் கோரிக்கைகளுக்கு முக்கியத் துவம் தராமல், வளர்ந்த நாடுகளுக்குச் சார்பாக அந்த மாநாட்டில் முடிவெடுக்க இருந்த நிலையில், முரசொலி மாறன் அதற்கு கடும் எதிர்ப்பு தெரி வித்து, ''வளரும் நாடுகளின் எண்ணங்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டு, அது தொடர்பாக இந்தியாவின் நிலையை அங்கே எடுத்து விளக்கினார். முரசொலி மாறனின் அந்தக் கருத்துக்கு அந்த மாநாட்டில் கலந்து கொண்ட பல்வேறு வளரும் நாடுகளைச் சேர்ந்த வர்த்தக அமைச்சர்கள் எல்லாம் ஆதரவு தெரிவித்தனர். அதன் காரணமாக வளரும் நாடுகளின் கோரிக்கைகளுக்கு உலக வர்த்தக அமைப்பு ஒப்புதல் அளித்து, அது குறித்தும் விவாதிக் கப்பட வேண்டு மென்ற முடிவினை எடுத்தது.



சி.டி.தண்டபாணி

தம்பி மாறனின் அந்த நடவடிக்கை காரணமாக, இந்தியாவின் பெருமை உலக அரங்கில் பெரும் பாராட்டுக் குரியதாக அமைந்தது. பிரதமர் **வாஜ்பய்** தலைமையில் கூடிய மத்திய அமைச்சரவை, மாறனின் நடவடிக்கைக்குப் பாராட்டு தெரிவித்தது. இந்திய தொழில் வர்த்தக அமைப்புகளும் தங்களது பாராட்டுகளைத் தெரிவித்தன. இந்தியாவிற்குக் கிடைத்த அந்தப் பெரும் வெற்றியை விளக்கி செய்தியாளர் களிடம் தம்பி மாறன் உரையாற்றினார். ''இந்து'', ''எக்ஸ் பிரஸ்'', ''பிசினஸ் ஸ்டாண்டர்டு'' போன்ற நாளேடுகள் எல்லாம் பாராட்டித் தலையங்கங்கள் எழுதின.


★ ★ ★

20. கண்ணகிமீது ஏனிந்தக் காழ்ப்பு?

பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரில் கட்சி நடத்துவதோடு - ஆட்சியிலும் இருந்த அ.தி.மு.க.வினர், அந்த அண்ணாவின் விருப்பத்திற்கு எப்படிக் கேடு விளைவித்தார்கள் என்பதை விளக்க விரும்புகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக இருந்து, 1968ஆம் ஆண்டு உலகத் தமிழ் மாநாட்டினை சென்னை மாநகரில் சீரும் சிறப்புமாக நடத்தியபோது, பத்து சிலைகளை நிறுவினார். அதில் ஒன்றுதான் கற்புக்கரசி **கண்ணகிக்கு** வைக்கப்பட்ட சிலை. அந்தச் சிலையின்மீது லாரி ஒன்று மோதியதில், சிலையின் பீடம் சேதம் அடைந்தது.

அதைத் தொடர்ந்து சிலையைச் சுற்றிலும் தட்டிகள் கட்டப் பட்டிருந்தன. சிலையின் பீடத்தை சரி செய்து, மீண்டும் சிலையை உரிய இடத்தில் வைத்துவிடுவார்கள் என்று எதிர் பார்த்திருந்த நிலையில், 13-12-2001 அன்று பிற்பகலில் எந்தவிதமான அறிவிப்பும் இல்லாமல், கண்ணகி சிலை அங்கிருந்து அகற்றப்பட்டுவிட்டது.



பொதுப் பணித்துறை அதிகாரிகளே அந்தச் சிலையை லாரி ஒன்றில் ஏற்றி எடுத்துச் சென்றுவிட்டார்கள். அந்தச் சிலை இருந்த பீடத்தை பணியாளர்கள் கடப்பாரையால் இடித்து உடைத்தனர்.

சிலை அகற்றப்பட்டது குறித்து, அப்போது கண்ணகி சிலை வைக்கப் பட்டிருந்த இடம் வாஸ்து முறைப்படி ஆட்சியாளர்களுக்கு சரியாக இல்லை



தமிழருடைய தன்மானத்திற்கு இழுக்கைத் தேடித் தந்த வஞ்சகத்திற்குப் பதிலடியாக மீண்டும் கண்ணகி சிலை திறக்க கடற்கரை மாநாட்டில் நான் உறுதி அளித்தேன்!

என்றும், கோபத்துடன் கண்ணகி விரல் காட்டுவதைப்போல சிலை இருந்ததால், முதல் அமைச்சராக இருந்த ஜெயலலி தாவுக்கு அனைத்து முயற்சிகளிலும் தடைகள் ஏற்பட்டன என்றும், அந்தக் காரணத்தால்தான் அந்தச் சிலை அகற்றப் பட்டுவிட்டது என்றும் கூறப்பட்டது.

கண்ணகி சிலையை அகற்றியது தமிழர்களின் மானத் திற்கும், மரியாதைக்கும் விடப்பட்ட அறைகூவல் என்றும், அந்தச் சிலையை உடனடியாக அதே இடத்தில் வைக்க வேண்டு மென்றும் அறிக்கை ஒன்றினை நான் விடுத்தேன். அகற்றப் பட்ட கண்ணகி சிலையினை வேறு ஏதோ ஓர் இடத்தில் வைக்க அரசு முடிவு செய்திருப்பதாக வந்த தகவலையொட்டி, கண்ணகி சிலையை மீண்டும் அதே இடத்தில் அமைக்க வேண்டுமென்று கோரிய வழக்கில் தலைமை நீதிபதி **சுபாஷன் ரெட்டி** மற்றும் நீதிபதி **சிவசுப்பிரமணியம்** ஆகியோர், கண்ணகி சிலையை வேறு இடத்தில் வைக்கக்கூடாது என்று உத்தரவிட்டனர்.

இதற்கிடையே 22-12-2001 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், பிரதி நிதிகள், தமிழ்ச் சான்றோர்களைக் கொண்ட ஒரு கலந்தாய்வுக் கூட்டம், கண்ணகி சிலையை மீண்டும் அதே இடத்தில் அமைக்க என்ன செய்யலாம் என்பதைப்பற்றி ஆலோசிப்பதற் காக என் தலைமையில் கூடியது. அந்தக் குழுவின் சார்பில்,

5-1-2002 அன்று சென்னை கடற்கரை, சீரணி அரங்கில், என்னுடைய தலைமையில் நடைபெற்ற மாபெரும் மாநாட்டில் அனைத்துக் கட்சியினர், அறிஞர் பெருமக்கள், ஆன்றோர், சான்றோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

இறுதியில் நான் உரையாற்றும்போது, "கண்ணகி சிலையை மீண்டும் அதே இடத்தில் வைக்கின்ற வரையில் தமிழர்களின் போராட்டம் ஓயாது!" என்று தெரிவித்தேன்.

கண்ணகி சிலையை அதே இடத்தில் வைத்திட அ.தி.மு.க. அரசு தொடர்ந்து மறுத்த காரணத்தினால், சென்னை தேனாம்பேட்டை "அன்பகம்" முகப்பில், கழகத்தின் சார்பில் சிலை அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டோம்.

அதுபோலவே, ஜனவரி 12ஆம் தேதி கழக இளைஞரணி அலுவலகமான அன்பகத்தில் கற்பின் கொழுந்து, பொற்பின் செல்வி கண்ணகி சிலை திறப்பு விழா கோலாகலமாக நடைபெற்றது. பொதுச் செயலாளர் **பேராசிரியர்** அவர்கள் தலைமையில், சிலையினை நான் திறந்து வைத்தேன். கழக இளைஞரணிச் செயலாளர் தம்பி **மு.க.ஸ்டாலின்** விழாவிற்குச் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்து, அந்த விழாவினை முன்னின்று நடத்தியதோடு, விழாவில் வரவேற்புரையும் ஆற்றினார்.



அன்பகத்தில், கற்புக் கனல் கண்ணகியின் சிலையை, தம்பி மு.க.ஸ்டாலின் வரவேற்புரையாற்ற - பேராசிரியர் தலைமையில், நான் திறந்து வைத்தேன்!



கடற்கரையில் இருந்த கண்ணகி சிலை, அ.தி.மு.க. ஆட்சியினரால் அகற்றப்பட்டது பற்றியும், மீண்டும் அந்தச் சிலையினை வைக்க அ.தி.மு.க. அரசிடம் வைக்கப்பட்ட கோரிக்கைகள் பலன் தராததுபற்றியும், அதற்குப் பிறகு கழக இளைஞர் அணியின் சார்பில், கழகத்திற்குச் சொந்தமான இடத்தில் அந்தச் சிலை வைக்கப்படுவது பற்றியும் நான் எனது உரையில் சுருக்கமாகக் கூறினேன்.

★ ★ ★

1996ஆம் ஆண்டு முதல் 2001ஆம் ஆண்டு வரை நடை பெற்ற தி.மு.கழக ஆட்சியில் தொழிலாளர்களுக் கெல்லாம் ஆண்டுதோறும் முறைப்படி போனஸ் வழங்கப் பட்டு வந்தது. ஆனால் 2001ஆம் ஆண்டு அ.தி.மு.க. அரசு பதவியேற்றதும், போனஸ் 20 சதவிகிதம் கொடுக்க மறுத்த காரணத்தால், போக்குவரத்துத் தொழிலாளர்கள் கழக ஆட்சியில் வழங்கப் பட்டு வந்த இருபது சதவிகித போனசை வழங்கக்கோரி,



கண்ணகி சிலைத் திறப்புவிழாவில், வெள்ளமெனத் திரண்டிருந்த மக்களிடையே உரையாற்றினேன்.

23-11-2001 அன்று முதல் பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக அறிவிப்புக் கொடுத்திருந்தனர். கழக ஆட்சியில் வழங்கப்பட்ட இருபது சதவிகித போனசைவிட அதிகமாக போனஸ் தரப்பட வேண்டுமென்றுகூட தொழிலாளர்கள் அப்போது கோரிக்கை வைக்கவில்லை. கழக ஆட்சியில் வழங்கப்பட்டு வந்த இருபது சதவிகித போனசையாவது வழங்குங்கள் - என்றுதான் போராடினார்கள்.

ஆனால், அ.தி.மு.க. அரசு இருபது சதவிகித போனஸ் தர முடியாது, 8.33 சதவிகித போனஸ்தான் தர முடியுமென்று அறிவித்தது. அதனை எதிர்த்து, தமிழகம் முழுவதிலும் உள்ள 1.25 இலட்சம் போக்குவரத்துத் தொழிலாளர்கள் 9-11-2001 அன்று முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்தினார்கள். அந்தப் போராட்டத்தில் தொழிலாளர்களின் குடும்பத்தினரும் பங்கேற்றபோது, அ.தி.மு.க. அரசின் காவல்துறை அவர்களையெல்லாம் கைது செய்து சிறையிலே அடைத்தது. 18 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் சிறையிலே அடைக்கப்பட்டனர்.

அப்போது தற்காலிக முதல்வராக இருந்த பன்னீர்ச் செல்வமும், போக்குவரத்துத் துறை அமைச்சரும் தொழிற் சங்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியும் தோல்வி தான் ஏற்பட்டது.

போராட்டத்தின் ஒரு கட்டமாக 23-11-2001 அன்று தமிழகம் தழுவிய பொது வேலை நிறுத்தம் நடத்திட முடிவு செய்தார்கள்.


20-11-2001 அன்று மாலையில் அண்ணா அறிவாலயத்தில் போக்குவரத்துத் தொழிற்சங்கத் தலைவர்கள் என்னைச் சந்தித்து, 23ஆம் தேதிய பொது வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

நான் அவர்களிடம் ''அரசின் நிதி நிலையை உத்தேசித்து இருபது சதவிகித போனசில் பத்து சதவிகிதத்தை உடனடி யாகப் பெற்றுக் கொண்டு, மீதி பத்து சதவிகித போனசைத் தவணையில் பெற்றுக் கொள்ளலாமே!'' என்று கேட்டபோது, தொழிற்சங்கத் தலைவர்கள் அதற்கும் ஒப்புக் கொண்டார்கள்.

எனவே அரசும் இறங்கி வந்து, அவர்களின் பிரச்சினை களைத் தீர்க்க முன்வர வேண்டுமென்று அறிக்கை ஒன்றும் கொடுத்தேன். அதன் பின்னரும், அ.தி.மு.க. அரசு இறங்கி வர முன்வராததால், தொழிலாளர்களின் பொது வேலைநிறுத்தப் போராட்டத்தைத் தி.மு.கழகம் ஆதரிக்குமென்று அறிவித்தேன். 23ஆம் தேதியன்று பொது வேலைநிறுத்தம் வெற்றியோடு நடந்தது. பல்வேறு முக்கிய தொழிற்சாலைகள் எல்லாம் மூடிக்கிடந்தன.

போனஸ்பற்றி ஜெயலலிதா கூறும்போது, ''போனஸைப் பற்றி திரும்பத் திரும்பப் பேசுகிறார்கள். போனஸ் என்பது என்ன? முதன் முதலாக போனஸ் என்பது எப்படி வந்தது? ஒரு நிறுவனம் நல்ல முறையில் இயங்கி லாபம் சம்பாதித்தால், அந்த லாபம் முழுவதுமே உரிமையாளர்களுக்குப் போவது நியாயம் அல்ல என்ற கருத்து இருந்தது. அந்த நிறுவனத்திற்கு அந்த லாபத்தை ஈட்டித் தருபவர்கள் யார்? அந்த நிறுவனத்தில் பணி புரியும் ஊழியர்கள்! ஆகவே, போனஸ் என்பது ஒரு

நல்லெண்ணத்தின் அடையாள மாக அந்த நிறுவனத்தின் உரிமையாளர்களுக்கு - அவ்வளவு லாபத்தை ஈட்டித் தந்த ஊழியர் களுக்கு - அந்த லாபத்தில் பங்கு தருவதுதான் போனஸ்! போனஸ் என்பதே ஒரு நல்லெண்ணத்தின் அடையாளம். ஆனால், அந்த நிறுவனம் நஷ்டத்தில் இயங் கினாலும் பரவாயில்லை - எங்களுக்கு தந்தே ஆக வேண்டும் என்று கேட்டால் அது எப்படி நியாயம் ஆகும்? அப்படித்தான் இன்றைக்கு அரசின் நிலையும் இருக்கிறது'' என்று வாதிட்டார்.



தொழிலாளர்களுக்கு தி.மு.கழக ஆட்சியில் வழங்கப்பட்ட ஏராளமான சலுகைகள் அனைத்தும் அ.தி.மு.க. ஆட்சியில் தூக்கி எறியப்பட்டன!

அ.தி.மு.க. அரசுக்கு - குறிப்பாக ஜெயலலிதாவுக்கு எப்போது ஆட்சிக் கட்டிலிலே அமர்ந்தாலும், மின் கட்டணத்தை உயர்த்துவது - பேருந்துக் கட்டணத்தை உயர்த்துவது - வரிகளை உயர்த்துவது - என்றால் எப்படித்தான் இனிக்குமோ, அதிலே மிகுந்த அக்கறை செலுத்துவார். அது போலவேதான் 2001 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்ததும், 28-11-2001 அன்று மின் கட்டணம், பஸ் கட்டணம் போன்றவைகளைக் கடுமையாக உயர்த்தி அறிவித்தார்.

வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ளவர்களுக்குப் பொது விநியோகத் திட்டம் மூலம் விநியோகிக்கப்படும் அரிசியின் விலை ரூ. 3.50 என்பது ஒன்பது ரூபாயாக உயர்த்தப் பட்டது. பேருந்துக் கட்டணங்கள், பால் விலை போன்றவைகளும் உயர்த்தப்பட்டன. மோட்டார் வாகன வரி அதிகரிக்கப் பட்டது. வீடு, ஆலைகளுக்கான மின் கட்டணமும் உயர்த்தப் பட்டது.

தமிழ்நாட்டில் பல்வேறு படிப்புக் கட்டணங்கள் உயர்த்தப் படும் என்றும் அரசு அறிவித்தது. உயர் கல்வித் துறைக்காக அரசு செய்யும் செலவுகளைக் குறைக்கும் வகையிலும், மாணவர் களுக்கான கட்டணங்களை உயர்த்தும் வகையிலும், பல்வேறு

நடவடிக்கைகளையும் அரசு அறிவித்தது. டீசல், பார்னஸ் ஆயில், லோ சல்பர் ஹெவிஸ்டாக், சிமெண்ட் ஆகியவற்றின்மீது நுழைவு வரி விதிக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்தது. சமையல் எண்ணெய், பருத்தி பின்னலாடை, கணினி மென் பொருள் ஆகிய மூன்றுக்கும் 4 சதவிகித சமச்சீர் தலவரி விதிக்கப்படும் என்றும் - யூரியா உரத்துக்கு சமச்சீர் தலவரி 2 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாக உயர்த்தப்படும் என்றும் - அயல் நாட்டு மதுவகைகள் மீதான விற்பனை வரி உயர்வு 50 சதவிகிதத்திலிருந்து 55 சதவிகிதமாக உயர்த்தப்படும் என்றும் - காஸ்டிக் சோடா, காற்றழுத்த விளக்குகள் போன்ற சில பொருட்களுக்கு 11 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதமாக வரி உயர்த்தப்படும் என்றும் - அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டது.

அடுத்து, அரசுப் பணியாளர்களின் எண்ணிக்கையை, அடுத்த ஐந்தாண்டுகளில் 30 சதவிகிதம் குறைக்க தமிழக அரசு முடிவு செய்தது. அதன்படி, அரசு ஊழியர் எண்ணிக்கையை இரண்டரை லட்சம் பேராகக் குறைத்திட முடிவு செய்தார்கள். அரசு நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், கூட்டுறவு நிறுவனங்கள், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், கூட்டுறவு நூற்பாலைகள் ஆகியவற்றில் உள்ள பணியாளர்களுக்கு விருப்ப ஓய்வுத் திட்டம் அமல்படுத்தப் படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இதைப்பற்றியெல்லாம் செய்தியாளர்கள் என்னிடம் கேட்டபோது, "சட்டப் பேரவை நடக்கும்போதோ, அல்லது பேரவையைக் கூட்டியோ அறிவித்திருக்க வேண்டிய பல்வேறு விஷயங்கள், குறிப்பாக கொள்கை அடிப்படை ஆனவைகூட ஏறத்தாழ ஒரு பட்ஜெட் அறிவிப்புப்போல இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி நான் எதுவும் சொல்வதற்கில்லை. ஆட்சி அமைக்க ஆதரவு தெரிவித்த கட்சிகளுக்கும், இந்த ஆட்சியை அமர்த்திய வாக்காளப் பெருமக்களுக்கும் மகிழ்ச்சி என்றால் எனக்கும் மகிழ்ச்சிதான்" என்று கூறினேன்.



தி.மு.கழக ஆட்சியில் வழங்கப்பட்ட

20% போனஸ் வழங்க அ.தி.மு.க. அரசு மறுப்பு

போக்குவரத்துத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்!

பேரூந்துகள் ஓடவில்லை–தமிழகம் ஸ்தம்பித்தது

சென்னை, நவ. 30– மேற்படி போக்குவரத்துக் கழகங்களில் சுமார் 11,67

போக்குவரத்துத் தொழிலாளர்கள் ... மீண்டும் வலியுறுத்தி ...

30-11-2001 அன்று **"தினமணி"** நாளிதழ் "கூடுகிறது எளிய மக்களின் சுமை" என்ற தலைப்பில் இக்கட்டண உயர்வுகளை யெல்லாம் கண்டித்துத் தலையங்கம் தீட்டியது.

"இந்து" ஆங்கில இதழில், "எகனாமிக் அவுட்லுக்" என்ற பகுதியில், எஸ்.சுவாமி நாதன் ஒரு விமர்சனக் கட்டுரையையும் எழுதியிருந்தார்.

ஆனால் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாத ஜெயலலிதா 30-11-2001 அன்று விடுத்த அறிக்கையில், "தமிழக அரசு அமல் படுத்தியுள்ள கட்டண உயர்வு, விலையேற்றம், நிதி நிர்வாகச் சீர்திருத்த நடவடிக்கைகள் குறித்து, சில அரசியல் கட்சித் தலைவர்கள் குறை கூறியுள்ளனர். தமிழகப் பொருளா தாரத்தை மீண்டும் ஆரோக்கிய நிலைக்குக் கொண்டு வருவதற் காக மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நடவடிக்கைகளுக்குக் காரணங்கள் என்னவென்பதை பிற கட்சித் தலைவர்கள் சிந்திக்க வேண்டும்" என்று சொல்லியிருந்தார்.

எனவே, இவ்வாறு கட்டணங்களை உயர்த்துவது, மக்களை வருத்தி அதிலே இன்பம் காணுவது, கடந்த கால ஆட்சியினர் செய்த நல்ல காரியங்களைத் தூக்கிக் குப்பையிலே போடுவது, எதற்கெடுத்தாலும் "நான் ஆணையிட்டேன்", "எனது தலைமையிலான அரசு" என்றெல்லாம் சொல்லிக் கொள்வது - என்பதெல்லாம் ஜெயலலிதாவுக்கே உரிய "சாடிஸ்ட்" மனப்பான்மையாகும்.

இந்த வரலாறு காணாக் கட்டண உயர்வுகளைக் கண்டித்து, தமிழகத்தில் 7-12-2001 அன்று முழு அடைப்பு நடத்துவதென, 3-12-2001 அன்று கழகத் தலைமைச் செயற்குழு முடிவெடுத்து, அவ்வாறே முழு அடைப்பு நடைபெற்றது. முழு அடைப்பு வெற்றிகரமாக நடைபெற்று, அதன் காரணமாக 14 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டனர்.

★ ★ ★

அ.திமு.க. ஆட்சியிலே இருந்த 1991-1996ஆம் ஆண்டுக் காலத்தில், முதல் அமைச்சராக இருந்த ஜெயலலிதா, தனது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி, அரசுக்குச் சொந்தமான நிலத்தை, அவர் பங்குதாரராக இருந்த ஜெயா பப்ளிகேஷன்ஸ் மற்றும் சசி எண்டர்பிரைசஸ் நிறுவனங் களுக்கு விற்க வழி வகுத்தார், அதனால் அரசுக்கு ரூ. 4.16 கோடி இழப்பு ஏற்பட்டது என்று சி.பி. சி.ஐ.டி. போலீசார் வழக்குத் தொடர்ந்தனர். இந்தியத் தண்டனைச் சட்டம் 120 பி (கூட்டுச் சதி), 409 (நம்பிக்கை மோசடி), 169 (அரசு சொத்தை அரசு ஊழியர் வாங்கக் கூடாது), மற்றும் ஊழல் தடுப்புச் சட்டம் 13 (1) (சி) (டி) ஆகிய பிரிவுகளின்கீழ் குற்றச் சாட்டுக்கு உள்ளான அனைவருக்கும் தண்டனை வழங்கினார், மூன்றாவது தனி நீதிமன்ற நீதிபதி **அன்பழகன்!** ஜெயலலிதாவுக்கு ஒரு வழக்கில் மூன்றாண்டுகளும், மற்றொரு வழக்கில் இரண்டாண்டுகளும் தண்டனை விதிக்கப்பட்டது.

கொடைக்கானலில் விதிமுறைகளை மீறி பிளசன்ட் ஸ்டே ஓட்டலில் ஏழு மாடிகள் கட்டு வதற்கு அனுமதி அளித்ததாக, முதலமைச்ச ராக இருந்த ஜெயலலிதாமீதும், மற்றவர்கள் மீதும் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த இரண்டாவது தனி நீதிமன்றம், ஜெயலலிதாவுக்கு ஓராண்டு கடுங்காவல் தண்டனை விதித்தது. இத்தீர்ப்புகளை எதிர்த்து, சம்பந்தப்பட்டவர்கள் சார்பில், உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

நீதிபதி **பாலசுப்பிரமணியம்** முன்பு மேல் முறையீட்டு மனுக்கள் விசாரணைக்கு வந்தன. 5 நாட்கள் விசாரணை நடை பெற்றது. அந்த நிலையில், வழக்கை சென்னை உயர்



பொது வேலை நிறுத்தத்தை முறியடிக்க, அ.தி.மு.க. அரசு பெரிதும் முயற்சித்தது!

நீதிமன்றத்திலிருந்து வேறு மாநில உயர் நீதிமன்றத்துக்கு மாற்ற வேண்டுமென்று கோரி, மூத்த வழக்கறிஞர் **வெங்கடபதி,** உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். விசாரணை ஆவணங்களை முழுமையாகப் படிக்கத் தனக்கு அவகாசம் அளிக்கவில்லை என்று அவர் புகார் கூறியிருந்தார். அதையடுத்து வழக்கை விசாரிக்க வேறொரு நீதிபதியை நியமிக்குமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதைத் தொடர்ந்து டான்சி, பிளசன்ட் ஸ்டே வழக்குகளை விசாரிக்க நீதிபதி **என்.தினகர்** நியமிக்கப்பட்டார். 1-10-2001இல் விசாரணை தொடங்கியது. மொத்தம் 17 நாட்கள் நடைபெற்ற விசாரணை 1-11-2001இல் முடிவடைந்தது. டான்சி வழக்கு விசாரணை முடிந்த பின்னர், கொடைக்கானல் பிளசன்ட் ஸ்டே ஓட்டல் வழக்கு விசாரணை நடைபெற்று, 21-11-2001இல் முடிவடைந்தது. 4-12-2001இல் வழங்கப்பட்ட தீர்ப்பில், சென்னை உயர் நீதிமன்றம், தனி நீதி மன்றங்கள் விதித்த தண்டனையை ரத்து செய்து, அனைவரையும் விடுவித்தது. குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை என்று நீதிபதி என்.தினகர் கூறினார். இதன் காரணமாகத் தேர்தலில் ஜெயலலிதா போட்டியிடுவதற்கு இருந்த தடை நீங்கியது.

நீதிபதி உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பினைப் படிக்க ஆரம்பிப்பதற்கு முன்பே, உயர் நீதிமன்றம் முழுவதிலும் அ.தி.மு.க. தொண்டர்கள் நிறைந்திருந்தனர் என்றும், நீதிபதியின் அறையினுள் யாரும் நுழைய முடியாத அளவுக்கு நெரிசல் இருந்தது என்றும், தீர்ப்பு படிக்கப்படும்போது பட்டாசுகள்



தொழிலாளர்கள் நடத்தும் போது வேலை நிறுத்தத்திற்கு தி.மு.கழகம் எப்போதும்போல் ஆதரவு அளிக்கும்


கொளுத்தப்பட்டன என்றும் - மறுநாள் ஏடுகளில் செய்திகள் வந்தன. போயஸ் தோட்டம், தலைமைச் செயலகமானது என்று செய்தி வெளியிடுகின்ற அளவிற்கு அமைச்சர்களும், அதிகாரிகளும் போயஸ் தோட்டத்தை முற்றுகையிட்டார்கள்.

5-12-2001 அன்று தலைமைச் செயலகத்தில் செய்தியாளர் களைச் சந்தித்த முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், 1-12-2001 அன்று உயர்த்தப்பட்ட பேருந்து, மின் கட்டணங்களை ஓரளவிற்குக் குறைத்து அறிவித்தார். அதுபோலவே ரேஷன் அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய் விலைகளையும் பழைய விலைகளுக்கே மாற்றினார். இந்தச் செய்திகள் வந்ததுமே, இடைத் தேர்தல் வரப் போகிறது - அதிலே ஜெயலலிதா போட்டியிடப் போகிறார் என்று மக்கள் பரபரப்பாகப் பேசிக்கொண்டனர்.


தீர்ப்புபற்றி செய்தியாளர்கள் என்னிடம் கேட்டபோது, ''நீதியைப் பெற நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டும்'' என்று கூறினேன். ''கடவுளின் கருணையால் வழக்கிலிருந்து விடுதலையாகியுள்ளேன்'' என்று ஜெயலலிதா கூறினார்.

டான்சி வழக்கில், ஜெயலலிதா ஆட்சியிலே இருந்தபோது உயர் நீதிமன்றத்தால் 4-12-2001 அன்று விடுதலை செய்யப் பட்டதை எதிர்த்து, ஜனதா கட்சித் தலைவர் திரு. **சுப்பிர மணியம்** சுவாமி உச்ச நீதி மன்றத்தில் மேல்முறையீட்டு மனு ஒன்றினை 7-1-2002 அன்று தாக்கல் செய்தார்.

கழகத்தின் சார்பில், உச்ச நீதிமன்றத்தில் தம்பி **ஆலந்தூர் பாரதியும்** டான்சி நில பேரம் மற்றும் பிளசண்ட் ஸ்டே ஓட்டல் வழக்குகளில் உயர் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்புகளை எதிர்த்து அப்பீல் மனு தாக்கல் செய்தார்.



அரசின் வீண் பிடிவாதத்தால், நாடே வேலை நிறுத்தத்தால் செயலிழந்தது!



அந்த மனுக்கள்மீதான விசாரணை 18-1-2002இல் உச்ச நீதிமன்றத்தில் தொடங்கியது. ஆர்.எஸ். பாரதியின் மனுவை விசாரணை செய்த நீதிபதிகள், ப்ளசண்ட் ஸ்டே ஓட்டல் வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை

எதிர்த்து, தமிழக அரசின் சார்பில் சிறப்பு அனுமதி மனு ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறியுமாறு நீதிமன்றப் பதிவாளருக்கு உத்தரவிட்டனர்.


மேலும், ஜெயலலிதா முதலமைச்சர் பதவி வகிக்கத் தடை விதித்த உத்தரவை மறு பரிசீலனை செய்யக் கோரி மனு ஒன்று உச்ச நீதி மன்றத்தில் **சுப்பாராவ்** என்பவரால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த மனு 5-2-2002 அன்று விசாரணைக்கு வந்து, நீதிபதிகள் அந்த மனுவினைத் தள்ளுபடி செய்தார்கள்.

★ ★ ★

இந்திய நாட்டின் உயரிய அதிகாரபீடமான டெல்லி நாடாளுமன்றத்தில், பயங்கரவாதிகளின் தற்கொலைப் படையினர் புகுந்து வெடிகுண்டுகளை 13-12-2001 அன்று வீசித் தாக்குதல் நடத்திய சம்பவம் நடைபெற்றது.

பயங்கரவாதிகள் ஆறு பேர் இருந்த டி.எல். 3 சி.ஜே. 1527 என்ற எண்களைக் கொண்ட வெள்ளை நிற அம்பாசிடர் கார் நாடாளுமன்ற வளாகத்துக்குள் காலையில் மிக வேகமாக நுழைந்தது. சைரன் இயக்கப்பட்ட நிலையிலே படுவேகமாக வந்த அந்தக் காரில் நாடாளுமன்றம், உள்துறை அமைச்சகம் என்ற ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டிருந்தன. விஜய் சௌக் எதிரே உள்ள வாயில் வழியே நுழைய முயன்றபோது, எதிரே அப்போது குடியரசு துணைத் தலைவராக இருந்த கிருஷ்ண காந்த் தனது காரில் வந்து கொண்டிருந்தார். அவருடன் வேறு சில கார்களும் வந்தன. அதில் ஒன்றில், பயங்கரவாதிகளின் கார் மோதியது. இதையடுத்து போலீசார் எச்சரிக்கையாயினர். அந்தக் காரை மடக்க முயன்றனர். திடீரென்று காரிலிருந்து இறங்கிய பயங்கரவாதிகள் துப்பாக்கியால் சுட்டனர். பதிலுக்குப் பாதுகாவல் படை ஜவான்களும் திருப்பிச் சுட்டனர். சுமார் ஒரு மணி நேரம் துப்பாக்கிச் சண்டை நடந்தது.

அப்போது பயங்கரவாதிகளில் ஒருவர் உடலில் வெடிகுண்டுகளைக் கட்டியிருந்தார். பிரதான வாயிலில் வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்து இறந்து போனார். இந்தப் பயங்கரச் சம்பவத்தை அடுத்து, நாடாளுமன்ற வளாகத்துக்கு



ஜி.கே.வாசன்

ராணுவம் உடனே வரவழைக்கப்பட்டது. இந்தச் சம்பவம் நடந்து முடிந்தபின் நாடாளுமன்றத்துக்குள் இருந்த அமைச்சர்களும், உறுப்பினர்களும் பின்னர் உரிய இடங்களுக்கு பஸ்களில் பத்திரமாகக் கொண்டு விடப்பட்டனர்.

★ ★ ★

காலையில் 11 மணி அளவில் நாடாளுமன்றம் கூடியவுடன், இரண்டு அவைகளிலும் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சவப் பெட்டிகள் வாங்கியதில் முறைகேடு நடந்துள்ளதாகவும், அதற்காக அப்போது பாதுகாப்புத் துறை அமைச்சராக இருந்த **ஜார்ஜ் பெர்னாண்டஸ்** பதவி விலக வேண்டுமென்றும் கோரிக்கை வைத்து அமளியில் ஈடுபட்டனர். அதைத் தொடர்ந்து மக்களவையும், மாநிலங்களவையும் ஒத்தி வைக்கப்பட்டன. பிரதமர் **வாஜ்பய், சோனியா** இருவரும் நாடாளுமன்றத்தில் இருந்து வெளியேறி வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றனர். அவர்கள் சென்ற சிறிது நேரத்தில்தான் - அதாவது 11.40 மணி அளவில் நாடாளுமன்ற வளாகத்திற்குள் பாகிஸ்தான் ஆதரவு தீவிரவாதிகள் பயங்கரத் தாக்குதல் நடத்திய சம்பவம் நடைபெற்றது.

வாஜ்பய், சோனியா காந்தி, அமைச்சர்கள் எல்லாம் இந்தச் சம்பவத்தில் தப்பினர். சம்பவம் நடைபெற்றபோது, மத்திய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் நாடாளுமன்றத்திற்குள் இருந்தனர். இந்தச் சம்பவத்தில் ஐந்து தீவிரவாதிகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இது தவிர, தீவிரவாத தற்கொலைப் படையினரின் தாக்குதலில் ஆறு காவலர்கள், ஒரு தோட்டக்காரர் உட்பட ஏழு பேர் கொல்லப்பட்டார்கள். செய்தியாளர்கள், காவல் துறையினர் உட்பட தீவிரவாதிகள் அல்லாத மேலும் 25 பேர் காயமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

பிரதமருக்கு நான் உடனடியாக அனுப்பிய தந்தியில், அவரும், அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் தீவிரவாதிகளின் தாக்குதலிலிருந்து தப்பியது பெரும் நிம்மதி அளிக்கிறது - என்று தெரிவித்தேன். பிரதமர் வாஜ்பய் குடியரசுத் தலைவரைச் சந்தித்து உடனடி பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து விளக்கினார்.

நாடாளுமன்றத்தின்மீது தாக்குதல் நடத்தியது, பாகிஸ்தானி லிருந்து செயல்படும் ''லஷ்கர் - இ - தொய்பா'' தீவிரவாத அமைப்புதான் என்று இந்திய வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த **ஜஸ்வந்த் சிங்** நிருபர்களிடம் கூறினார். தாக்குதல் நடத்திய கும்பலைச் சேர்ந்த ஆறாவது பயங்கரவாதி உயிருடன் பிடிபட்டான். ஜெய்ஷ்-இ-முகம்மது இயக்கத்தைச் சேர்ந்த அவன் மிக முக்கியமான தகவல்களைப் போலீசாருக்குத் தெரிவித்தான். ஜெய்ஷ்-இ-முகம்மது என்ற பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த ஐந்து பாகிஸ்தானியர்தான் டெல்லியில் தாக்குதல் நடத்தினார்கள் என்பது பின்னர் கண்டு பிடிக்கப் பட்டது. அவர்களுக்கு லஷ்கர்-இ-தொய்பா என்ற பயங்கர வாத அமைப்பு உதவி செய்தது. அந்தத் தாக்குதல் தொடர் பாகக் கைது செய்யப் பட்ட டெல்லி பேராசிரியர் ஏர். ஜிலானி பயங்கரவாதிகளுக்கு புகலிடம் அளித்திருந்தார்.

★ ★ ★

அ.தி.மு.க.வும், த.மா.காவும் கூட்டணிக் கட்சிகளாக இருந்த நிலையில், மாநிலங்களவை உறுப்பினராக இருந்த மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் மறைவை அடுத்து, அந்த இடம், மூப்பனார் அவர்களின் திருமகனும், த.மா.கா. தலைவருமான தம்பி ஜி.கே. வாசனுக்கு அந்தக் கூட்டணியின் சார்பில் வழங்கப் படும் என்று அனைவரும் எதிர்பார்த்திருந்த நிலையில், அ.தி.மு.க. சார்பில், மாநிலங்களவை வேட்பாளராக டாக்டர் **வா. மைத்ரேயன்** ஜெயலலிதாவினால் 27-12-2001 அன்று அறிவிக்கப்பட்டார். அந்த திடீர் அறிவிப்பு த.மா.கா.வினரை மிகுந்த அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

அதுபோலவே சட்டப்பேரவைக்கு இடைத் தேர்தல் நடைபெறவிருந்த மூன்று தொகுதிகளிலும், அ.தி.மு.க. சார்பில்

வேட்பாளர்கள் நிறுத்தப்படுவார்கள் என்றும், தோழமைக் கட்சிக்கு எந்தத் தொகுதியும் விட்டுத் தரப்படமாட்டாது என்றும் அ.தி.மு.க. முடிவெடுத்தது.

12-1-2002 அன்று சென்னையில் ஜி.கே.வாசன் தலைமையில் அரசியல் விவகாரக் குழு மற்றும் மாநில நிர்வாகிகளின் கூட்டம் நடைபெற்று, இடைத் தேர்தல்களில் அ.தி.மு.க. வேட் பாளர்களை ஆதரிப்பதில்லை என்று முடிவெடுத்து அறிவித் தார்கள்.

அ.தி.மு.க.வின் முக்கியக் கூட்டணியாக அதுவரை இருந்து வந்த த.மா.கா., அந்தக் கட்சியோடு உறவை முறித்துக் கொண்டது.

செய்தியாளர்களிடம் **ஜி.கே.வாசன்** கூறும்போது, ஆண்டிப் பட்டி உள்ளிட்ட மூன்று பேரவைத் தொகுதிகளில் நடை பெறும் இடைத் தேர்தலில், அ.தி.மு.க.வை ஆதரிப்பதில்லை என்று முடிவு செய்துள்ளோம் என்று தெரிவித்தார். செய்தியா ளர்கள் அவரிடம் மாநிலங்களவை உறுப்பினர் பதவி கொடுக் காதது தான் காரணமா என்று கேட்டபோது, ''அதற்காக இல்லை - அ.தி.மு.க.வின் மக்கள் விரோதப் போக்குகள்தான் காரணம்'' என்றார்.


த.மா.கா.வைப்போலவே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் அந்த மூன்று இடைத் தேர்தல்களிலும் அ.தி.மு.க.வை ஆதரிப்பதில்லை என்று முடிவெடுத்தார்கள். தி.மு.க. என்ன செய்தது? அடுத்த வாரம் எழுதுகிறேன்.

★ ★ ★

21. அய்யோத் - தீ!

6-1-2002 அன்று அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் தலைமைக் கழக நிர்வாகக் குழுக் கூட்டம் என் தலைமையில் நடைபெற்று, இடைத்தேர்தல் நடைபெற விருந்த சைதாப்பேட்டை, ஆண்டிப்பட்டி, வாணியம்பாடி ஆகிய மூன்று தொகுதிகளிலும் தி.மு.கழகமே போட்டியிடுவது என்றும், தாங்க முடியாத அளவுக்கு மக்கள்மீது அ.தி.மு.க. அரசு அறிவித்துள்ள கட்டண உயர்வுகளை எல்லாம் கண்டித்து மாநிலம் முழுவதும் விளக்கக் கூட்டங்களை நடத்துவதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஜெயலலிதா போட்டியிட்ட ஆண்டிப்பட்டி தொகுதி இடைத்தேர்தலில் ஏராளமான முறைகேடுகள் அடுத்தடுத்து நடைபெற்றன. தேர்தல் ஆணையத்திற்கு அவைகளை தெரிவித்ததின்பேரில், தேர்தல் ஆணையச் செயலாளர் திரு. கே.ஜெ.ராவ் அவர்கள் தலைமையிலான குழு ஒன்று அந்தத் தொகுதிக்கே வருகை தந்தது. அந்தத் தொகுதியிலே உள்ள கொண்டமநாயக்கன் பட்டியில் விசாரணை செய்தபோது, பல குளறுபடிகள் தென்பட்டன. அப்போது தேர்தல் ஆணையச் செயலாளர் "டென்ஷன்" ஆனார் என்று ஏடுகளில் செய்தி அப்போதே வெளிவந்தன. அந்தக் குழுவுடன் வந்த மாவட்ட ஆட்சித் தலைவரால் புகார்கள் எதையும் மறுக்க முடியவில்லை.



உதாரணமாக, அந்த ஊரில், ஒரு எண்ணில் சரஸ்வதி என்ற பெயர் வாக்காளர் பட்டியலிலே இருந்தது. ஆனால், அந்தப் பெண்ணுக்கு வயது 13தான். அதை தேர்தல் ஆணையச் செயலாளரே கண்டறிந்தார்.

அ.தி.மு.க. பொறுப்பாளர் வீட்டில் மூன்று பேர் மட்டுமே இருக்க, வேறு சில பெயர்கள் எல்லாம் அந்த வீட்டிலே இருப்பதாக, பட்டியலிலே குறிக்கப்பட்டிருந்தது. ஆண்டிப் பட்டி தொகுதியிலே அதிக அளவுக்கு முறைகேடுகள் நடந்தபோதிலும், எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகளையேற்று, சைதாப்பேட்டையிலும், வாணியம்பாடியிலும் இடைத் தேர்தல்களை ஒத்தி வைப்பதாகவும், ஆண்டிப்பட்டியிலே மட்டும் உடனடியாகத் தேர்தல் நடத்துவதாகவும் தேர்தல் ஆணையம் அறிவித்தது.

அது வேண்டுமென்றே செய்கின்ற திட்ட மிட்ட ஏற்பாடு என்றும், அவ்வாறு செய்யக்கூடாது என்றும், தேர்தல் வைத்தால் மூன்று தொகுதிகளிலும் வைக்க வேண்டுமென்றும், ஒத்திவைத்தால் மூன்று தொகுதிகளிலுமே ஒத்திவைக்க வேண்டுமென்றும் பத்திரிகையாளர்களிடம் நான் தெரி வித்தேன்.



அ.தி.மு.க. அரசு அறிவித்த கட்டண உயர்வுகளைக் கண்டித்து, 6.1.2002 அன்று - தி.மு.கழகத் தலைமை நிர்வாகக் குழுக் கூட்டத்தில் - கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தேர்தல் ஆணையம் இந்தக் கருத்தை ஏற்க முன்வராத நிலையில், 16-1-2002 அன்று, தமிழக தேசிய ஜனநாயகக் கூட்டணியின் கூட்டத்தைக் கூட்டி, தேர்தல் ஆணையத்திற்குக் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்தோம். குடியரசுத் தலைவருக்கும் நிலைமைகளை விளக்கி நானே கடிதம் எழுதினேன்.

ஆண்டிப்பட்டி தொகுதியில் கழக வேட்பாளராக ஒன்றியச் செயலாளர் வைகை சேகர் அறிவிக்கப்பட்டார்.

16-1-2002 அன்று தேர்தல் ஆணையம் தமிழக அரசின் தலைமைச் செயலாளருக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தது. அந்தக் கடிதத்தின் முதல் வாசகமே தேர்தல் விதிமுறைகளை மீறி தமிழகத்தைச் சேர்ந்த 16 அதிகாரிகள் செயல்பட்டிருக் கிறார்கள் என்பதுதான். அதில் சென்னை மாநகராட்சி கமிஷனர் **சம்பத்** ஒரு முக்கிய அதிகாரி. அவர் உட்பட 8 அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்படவேண்டும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்தது. தேர்தல் விதிமுறைகளை மீறிய அந்த அதிகாரியை நிச்சயமாக இடமாற்றம் செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்தது. ஆனால் அ.தி.மு.க. அரசு அவரை மாநகராட்சி கமிஷனர் பதவியைவிட உயர்ந்த மாநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலாள ராக நியமித்தது. அதைப்பற்றி **'இந்து'**, **'எக்ஸ்பிரஸ்'** நாளேடுகள் அப்போதே கிண்டல் செய்து எழுதியிருந்தன.

கள்ள ஓட்டுப் போடுவதற்கான அனைத்து முயற்சிகளிலும் ஆளுங்கட்சியான அ.தி.மு.க. திட்டமிட்டபடி நடவடிக்கை களை மேற்கொண்டது. வாக்காளர்கள் மிகவும் தாராளமாகக் கவனிக்கப்பட்டார்கள்.

''ஆனந்த விகடன்'' வார இதழ், **''போயஸ் தோட்டத்தை மிரட்டுது ஒரு குடிசை''** என்று கட்டுரை எழுதியது. அந்தக் கட்டுரையில், ''ஆண்டிபட்டி எம்.எல்.ஏ., தங்கத் தமிழ்ச் செல்வன் ராஜினாமா செய்ததில் இருந்தே, அந்தத் தொகுதிக்கு ஒரு ''ஹீரோயின் இமேஜ்'' கிடைத்துவிட்டது. மொத்த அரசாங்க இயந்திரமும் ஒரு ''ரெட் மார்க்'' செய்து கொண்டு



தி.மு.கழகத் தலைமை நிர்வாகக் குழுக் கூட்டத்தின்
தீர்மானங்களை விளக்கி நான் உரையாற்றினேன்!

ஆண்டிப்பட்டியை ஸ்பெஷலாகக் கவனிக்கத் தொடங்கியது. குண்டும் குழியுமான சாலைகள் சமதளமாயின. திரும்பிய பக்கமெல்லாம் சமுதாயக் கூடங்கள், நிழற் குடைகள், நவீனக் கழிப்பிடங்கள், சத்துணவுக் கூடங்கள் எனப் ''பளிச்'' என்று சுண்ணாம்பில் கான்கிரீட் கட்டிடங்கள் முளைத்தன. ஆண்டிப் பட்டி அருகில் தேனி என்.ஆர்.டி. நகரில், ஜெயலலிதா தங்குவதற்கென ஒரு பங்களா தயார். அமைதிப் பிரச்சாரத்தில் நிற்கிறது தி.மு.க. ''நான் ஒன்றும் பெரிய நிலச் சுவான்தார் அல்ல. நான் ஆண்டிப்பட்டி மண்ணின் மைந்தன்'' என்று பிரச்சாரத்தில் இறங்கியிருக்கிறார் தி.மு.க. வேட்பாளர் வைகை சேகர். போயஸ் தோட்டத்தை எதிர்ப்பது வைகை புதூர் கிராமத்தில் உள்ள ஒரு குடிசை வீடு என்பது ஆச்சரியம்'' என்றெல்லாம் எழுதியிருந்தது.

சைதாப்பேட்டை, வாணியம்பாடியைவிட அதிக முறை கேடுகள் நடந்த ஆண்டிப்பட்டியில் மட்டும் இடைத் தேர்தலை நடத்திட தேர்தல் ஆணையம் முன் வந்ததைப் பற்றி 22-1-2002 தேதியிட்ட **''இந்துஸ்தான் டைம்ஸ்''** ஆங்கில நாளேடு தலையங்கமே எழுதியது.

நிலக்கோட்டை தொகுதியில் உள்ள 50 வாக்காளர்களின் பெயர்கள், ஆண்டிப்பட்டித் தொகுதியின் வாக்காளர் பட்டியலிலே இடம் பெற்றிருந்ததை ஏடுகள் எல்லாம் எடுத்துக் காட்டி எழுதின. கழக முன்னணித் தலைவர்கள் எல்லாம் இடைத் தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டனர்.

விளக்கம்

ஆண்டிப்பட்டி இடைத் தேர்தலில், தி.மு.க. வேட்பாளராக – குடிசைவாசியான வைகை சேகர் போட்டியிடுவது குறித்து – "போயஸ் தோட்டத்தை மிரட்டுது ஒரு குடிசை" என்று தலையங்கமே எழுதியது, "ஆனந்தவிகடன்"

கழகத்தின்மீது அப்போது ஆர்வம் கொண்ட கலை யுலகப் பெருமக்களான டி. ராஜேந்தர், சரத்குமார் போன்றவர்களும் இடைத் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

16-2-2002 அன்று, நான் ஆண்டிப் பட்டியில் தேர்தல் பிரச்சாரம் செய் வதாக விளம்பரப்படுத்தப் பட்டிருந்தது. அதை யொட்டி ஆண்டிப்பட்டி செல்லும் வழியில், திண்டுக்கல் குடகனாறு விருந்தினர் மாளிகையில் தங்குவதற்காக ஒரு அறை ஒதுக்குமாறு அரசிடம் கோரி முறையாக அனுமதி பெறப் பட்டிருந்தது. ஆனால், பிப்ரவரி 8ஆம் தேதியன்று திடீரென்று அந்த அனுமதியை ரத்து செய்துவிட்டனர். ஆனால், அ.தி.மு.க.வைச் சேர்ந்த அமைச்சர்களும், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களும், தேனி, திண்டுக்கல் மாவட்டங் களில் உள்ள அரசினர் விருந்தினர் மாளிகையிலே தான் தங்கியிருந்தார்கள். இருந்தாலும், மணவிழாவில் சீப்பை எடுத்து ஒளித்து வைத்துக் கொள்வதைப்போல அ.தி.மு.க. அரசு செயல்பட்டது. அ.தி.மு.க. அரசின் செயல்பாட்டினைப் பார்த்தபோது எனக்கு ஒரு நினைவு வந்தது.

★ ★ ★

1969-1976 காலக் கட்டத்தில், நான் முதலமைச்சராக இருந்தபோது, பெருந்தலைவர் காமராஜர் தமிழகம் முழுதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அப்போது அவரது உடல்நிலையை உத்தேசித்து, அவர் சுற்றுப் பயணத்தின்போது,

தங்குகிற வழியில் உள்ள அரசு விடுதிகள் அனைத்திலும், அதேபோல் சர்க்கரை ஆலை தங்கும் இடங்களிலும், குளிர்ப்பதன வசதி செய்து கொடுக்கப் பட்டது.



தேர்தல் பிரச்சாரத்திற்காக நான் ஆண்டிப்பட்டி சென்றபோது – வழியில் குடகனாறு அரசினர் விடுதியில் தங்கிட, முன்கூட்டியே அனுமதி அளித்துவிட்டு – ஜெயலலிதாவின் தூண்டுதலால் அதை ரத்து செய்துவிட்டனர்.

மேலவையில் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த திரு. **ராஜாராம் நாயுடு** அவர்கள் ஒரு நாள் மேலவையில் என்னிடம் ஒரு கடிதம் கொடுத்தார். அந்தக் கடிதத்தில், "காம ராஜர் அவர்கள், எம்.பி., என்ற முறையில் உதகை தமிழகம் இல்லத்தில் ஒரு வாரம் தங்க அனுமதி வழங்கவேண்டும்" என்று எழுதியிருந் தார்.

நான் கோபத்துடன் அவரிடம், "பெருந்தலைவர் காமராசர் அவர்கள், எம்.பி., என்ற முறையில்தான் அங்கே தங்க வேண்டுமா என்ன? அவர் இந்த நாட்டுத் தலைவர்களில் ஒருவர் என்ற முறையில், உதகை தமிழகம் இல்லத்தில் ஒரு வாரமல்ல - ஒரு மாதம்கூட அவரது விருப்பம்போலத் தங்கிக் கொள்ளலாம்" என்று கூறினேன். நம்முடைய பண்பாடு இது!

★ ★ ★

இந்த நேரத்தில், அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களின் பண்பாட்டையும் பற்றிச் சொல்ல வேண்டுமல்லவா? **"நீதி கேட்டு நெடிய பயணம்"** ஒன்றை மதுரையிலிருந்து திருச் செந்தூர்வரை அ.தி.மு.க. அரசுக்கு எதிராக நான் நடந்தே மேற் கொண்டேன். அப்போது முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். எனக்கு மதுரைக்கே தொலைபேசியில் தொடர்பு கொண்டு,



அ.தி.மு.க. அரசுக்குக் கண்டனம் தெரிவித்து, மதுரையிலிருந்து திருச்செந்தூர்வரை, நான் "நீதிகேட்டு நெடிய பயணம்" ஒன்றை - கால்நடையாகவே துவங்கியபோது - எனக்கு 'போன்' செய்து, "உங்கள் உடல்நிலை தாங்குமா?" என்று கேட்டார், எம்.ஜி.ஆர்.

"உங்கள் உடல் நிலையில் இந்த நெடிய நடைப் பயணம் தாங்குமா?" என்று கேட்டதுடன், "உடல் நலத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.

ஆனால், ஆண்டிப் பட்டி தேர்தல் பிரச்சாரத் திற்காக நான் செல்ல முற்பட்டபோது, வழியில் அரசினர் விடுதி ஒன்றுக்கு முன் கூட்டியே அனுமதி கொடுத்துவிட்டு, பின்னர் அதனை ரத்து செய்த கொடுமையும் நடைபெற்றது, ஜெயலலிதா தூண்டுதலால்!

16-2-2002 அன்று மாலையில் என்னுடைய பிரச்சாரத்தை ஆரம்பித்து, வடுகப்பட்டி, மேல் மங்கலம், ஜெயமங்கலம், வைகை புதூர், கண்டமனூர் ஆகிய இடங்களில் வேனில் இருந்தவாறே வாக்குக் கேட்டு விட்டு, கடைசியாக கடமலைக் குண்டுவிலும், ஆண்டிப்பட்டியிலும் நடைபெற்ற பொதுக் கூட்டங்களில் உரையாற்றினேன். வைகை சேகருக்கு வாக்களிக்க கோரிக்கை விடுத்தேன்.

இவ்வளவிற்கும் பிறகு, ஆண்டிப்பட்டியில் தேர்தல் என்ற ஒன்று நடந்தது. எதிர்க்கட்சி ஏஜெண்டுகள் எல்லாம் வாக்குச் சாவடியிலிருந்து விரட்டப்பட்டனர். அ.தி.மு.க.வினரே தங்களுக்குத் தாங்களே வாக்குகளைப் பதிவு செய்து கொண்டனர். மொத்தத்தில் அங்கே அராஜகம் கொடி கட்டிப் பறந்தது. தேர்தல் முடிவு எதிர்பார்க்கப்பட்டதைப் போலவே இருந்தது. ஜெயலலிதா வெற்றி பெற்றார்.

★ ★ ★

21ஆம் தேதி சென்னை திரும்பி, 22ஆம் தேதியன்று சென்னையில் பாரதிய வித்யாபவன் அரங்கத்தில் நடைபெற்ற

முத்தமிழ்ப் பேரவையின் 26ஆம் ஆண்டு இசை விழாவில் கலந்து கொண்டேன். ஒவ்வொரு ஆண்டும், முத்தமிழ்ப் பேரவையின் விழாவில் நான்தான் கலந்துகொண்டு விருது களைத் தொடர்ந்து இன்றளவும் வழங்கி வருகிறேன்.

முத்தமிழ்ப் பேரவையின் முதல் இசை விழா, அதே மயிலையில் உள்ள ஆர்.ஆர். சபாவில் என் தலைமையிலே தான் நடை பெற்றது. அந்த விழா தொடங்கியபோது, அந்த விழாவிலே என்னுடன் கலந்து கொண்ட வழுவூர் ராமையா பிள்ளை, மதுரை சேதுராமன் - பொன்னுச்சாமி, குளிக்கரை பிச்சையப்பா, திருவீழிமிழலை சகோதரர்கள், மதுரை சோமு என்ற வயது முதிர்ந்த இசைமேதைகள் எல்லாம் அதிலே கலந்து கொண்டார்கள்.

முத்தமிழ்ப் பேரவையின் 26ஆம் ஆண்டு விழாவில், ராஜரத்னா விருதை ஆண்டாங் கோவில் **ஏ.வி. செல்வரத்** தினம் அவர்களுக்கும், இயல் செல்வம் விருதை எழுத்தாளர் சுஜாதா அவர்களுக்கும், இசைச் செல்வம் விருதை **டி.வி. சங்கர நாராயணன்** அவர்களுக்கும், நாட்டியச் செல்வம் விருதை **ஈ.வி. சரோஜா ராமண்ணா** அவர்களுக்கும், தவில் செல்வம் விருதை **மன்னார்குடி எம்.ஆர். வாசுதேவன்** அவர்களுக்கும் வழங்கினேன். முத்தமிழ்ப் பேரவையின் தலைவர் டாக்டர் இசைப் பேரறிஞர் **என். ரமணி** வரவேற்புரையாற்றினார்.






சங்கீத கலாநிதி தஞ்சாவூர் **டி.கே.மூர்த்தி** விழாவிற்குத் தலைமை வகித்தார்.

★ ★ ★

சென்னை **மணவழகர் மன்றத்தின்** சார்பில் ஆண்டுதோறும் நடைபெறும் விழாக்கள் பலவற்றில் நான் கலந்து கொண்டு உரையாற்றியிருக்கிறேன். முன்னாள் தலைமை நீதிபதி, திரு. **பு.ரா. கோகுல கிருஷ்ணன்** தீவிர சுயமரியாதைக்காரர். என்மீது ஆழ்ந்த பற்று கொண்டவர். அடிக்கடி நேரில் சந்தித்துக் கொள்ளாவிட்டாலும், தொலைபேசியில் அவ்வப்போது தொடர்பு கொண்டு, 'முரசொலி'யில், தான் படித்த என்னுடைய பேச்சுக்களைப் பற்றியோ, கட்டுரைகளைப் பற்றியோ பேசிடுவார். மணவழகர் மன்றத்தின் தலைவராக அவர் இருக்கும்போ தெல்லாம் அடிக்கடி என்னை அழைக்க அவர் தவறியதில்லை.

3-2-2002 அன்று மாலையில், மணவழகர் மன்றத்தின் 45வது ஆண்டு விழா சென்னை அண்ணாமலை மன்றத்தில் நடை பெற்றது. அந்த விழாவிலும் கலந்து கொண்டு உரை யாற்றினேன். நமது கவிக்கோ **அப்துல் ரகுமான்** அவர்கள் "ஆத்திகப் பெரியார்" எனும் தலைப்பிலும், **காவியக் கவிஞர் வாலி** அவர்கள் "மூன்றெழுத்து முனிவர்" என்ற தலைப்பிலும் அங்கே உரையாற்றினர்.

★ ★ ★



ஆன்றோரும் - சான்றோரும் வாழ்த்திட, மு.க.ஸ்டாலினின் புதல்வர் உதயநிதி - கிருத்திகா திருமணம், 25.2.2002 அன்று சிறப்பாக நடைபெற்றது.

பிப்ரவரி 3ஆம் நாள் - நாம் மறக்க முடியாத நாள் அல்லவா? அன்று பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாள். ஒவ்வொரு ஆண்டும், கழகத்தின் சார்பில் என்னுடைய தலைமையில், அண்ணா சாலையில் உள்ள பெரியார் சிலை அருகிலிருந்து அமைதி ஊர்வலமாகப் **பேரறிஞர் அண்ணா** அவர்களின் நினைவிடத்திற்குச் சென்று, மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்துவது வழக்கம்.

ஆனால், 2002ஆம் ஆண்டு அமைதி ஊர்வலத்திற்கு என்ன காரணத்தாலோ அனுமதி மறுக்கப்பட்டுவிட்டது. அதன் காரணமாக 3-2-2002 அன்று காலை 7 மணி அளவில், பேரறிஞர் அண்ணா நினைவிடத்தில் நானும், பொதுச் செயலாளரும் மற்றும் கழகத்தினரும் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்துவார்கள் என்று அறிவிக்கப்பட்டது. அது போதாதா? அதிகாலை ஆறு மணியில் இருந்தே, ஆயிரக் கணக்கான கழகத் தோழர்கள் அங்கே திரண்டு விட்டனர். நானும், பொதுச் செயலாளரும் மற்றும் கழக முன்னணி யினரும் அங்கே சென்று மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினோம்.

★ ★ ★

2002ஆம் ஆண்டில் ஜனவரி மாதத்தில், முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினரும், தி.மு. கழகத்தில் தீவிரமாகப்

குஜராத் மாநிலம் பற்றி எரிகிறது

சுலவரத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 500-ஐ தாண்டியது



"பல உயிர்கள் பலியாகக் காரணமான இராமர் கோயிலைக் கட்ட அனுமதித்தால், தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தி.மு.க. இருக்காது" என்று நான் அறிவித்தேன்!

பணியாற்றி வந்த கழகப் பொதுக்குழு உறுப்பினருமான **எம்.கே.பாலன்** காலையில் நடைப்பயிற்சிக்காகச் சென்றவர், இல்லம் திரும்பவே இல்லை. சைதாப்பேட்டை தொகுதியில் இடைத்தேர்தல் வருகிறது என்றதும், அங்கே போட்டியிடு கின்ற எண்ணத்தோடு ஆயத்தப் பணிகளிலே ஈடுபட்டிருந்தார்.

அன்றைய தினம், அவர் அதிகாலையில் வீட்டிலிருந்து வழக்கம்போல நடைப் பயிற்சிக்காகச் சென்றார். நீண்ட நேரமாகியும் இல்லம் திரும்பாததால், பதற்றமடைந்த குடும்பத்தினர், மகன் மணிமாறன் ஆகியோர் பட்டினப் பாக்கம் காவல் நிலையத்தில் புகாரும் கொடுத்தனர்.

பாலனை சி.பி., சி.ஐ.டி. போலீசார் பிடித்துச் சென்றிருப்ப தாகவும், அண்ணா நகர், திருமங்கலம் காவல் நிலையங்களில் வைத்து அவரிடம் விசாரணை நடத்திக் கொண்டிருப்பதாகவும் வந்த தகவல்களின் அடிப்படையில், அங்கே சென்று பார்த்தும் அவர் கிடைக்கவில்லை. தன் தந்தையை நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தக்கோரி, அவருடைய மகன் மணிமாறன் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். பாலனைத் தேடும் பொறுப்பை சி.பி., சி.ஐ.டி., போலீசார் ஏற்றனர். வழக்கும் சி.பி., சி.ஐ.டி.க்கு மாற்றம் செய்யப்பட்டது.


பாலன் கொடைக்கானலில் வைக்கப்பட்டிருப்பதாகக் காவல் துறைக்கு தகவல் கிடைத்ததின் பேரில், அங்கு சென்றும் தீவிர தேடுதல் வேட்டை நடைபெற்றது. திடீரென்று பாலன் எரித்துக் கொலை செய்யப்பட்டதாக போலீஸ் வட்டாரங்கள்

தெரிவித்தன. அதைப் பற்றி அப்போதே **"பாலா! என்ன நடக்கிறது இந்த நாட்டில்?"** என்று "முரசொலி"யில் உடன்பிறப்பு மடல் ஒன்று எழுதினேன். பாலனின் மறைவினை ஆட்சியாளர்கள் மறைத்தே விட்டார்கள்!

★ ★ ★

என்னுடைய அன்புப் பேரனும், தம்பி **ஸ்டாலினின்** மகனுமான **உதயநிதியின்** மணவிழா அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் நடைபெற்றது. மணமகள் காரைக்குடி சண்முகநாதபுரம் சேவு இராமசாமி அவர்களின் அருமைச் செல்வி **கிருத்திகா.**

மணப்பெண்ணை நானோ, ஸ்டாலினோ கண்டு பிடிக்கவில்லை. மணமகன் உதயநிதியே கண்டுபிடித்து, காதலித்தவர். எங்களிடம் தகவல் தந்தார். நாங்கள் ஏற்றுக் கொண்டோம். முதல் நாள் நடை பெற்ற வரவேற்பு நிகழ்ச்சிக்கு தமிழக ஆளுநராக இருந்த **ராம்மோகன் ராவ்,** மத்திய அமைச்சர் **ஜார்ஜ் பெர்னாண்டஸ், ப. சிதம்பரம்,** உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி **சுபாஷன் ரெட்டி,** இயக்குனர்



2002ஆம் ஆண்டு, அண்ணா நினைவு நாளில், அமைதி ஊர்வலத்திற்கு அரசினால் அனுமதி மறுக்கப்பட்டதால், அண்ணா நினைவிடத்தில் பேராசிரியர் மற்றும் முரசொலி மாறனுடன் மலரஞ்சலி செலுத்தினேன்

கே.பாலச்சந்தர், சூப்பர் ஸ்டார் **ரஜினிகாந்த்,** நடிகர் சங்கத் தலைவர் **விஜயகாந்த்,** சுப்ரீம் ஸ்டார் **சரத்குமார், ராதிகா சரத்குமார், ஏ.வி.எம். சரவணன், ஆர்.எம். வீரப்பன், த.மா.கா.** தலைவர் தம்பி **வாசன்** மற்றும் சான்றோர்கள் கலந்து கொண்டார்கள்.

25-2-2002 அன்று காலையில் மணவிழா இனமானப் **பேராசிரியர்** தலைமையில் நடைபெற்றது. நான் முன்னிலை வகித்தேன். தம்பி **முரசொலி மாறன்** வரவேற்புரையாற்றினார். மணமக்களுக்கு வாழ்த்து தெரிவித்து இந்தியக் குடியரசுத் தலைவர் **கே.ஆர். நாராயணன்,** பிரதமர் **வாஜ்பய்,** குடியரசுத் துணைத் தலைவர் **கிருஷ்ணகாந்த்** ஆகியோர் அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்திகளை மத்திய அமைச்சர் தம்பி **டி.ஆர். பாலு** படித்தார்.

மணமக்களை வாழ்த்தி தமிழக காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் திண்டிவனம் இராமமூர்த்தி, முன்னாள் அமைச்சர்கள் துரைமுருகன், வீரபாண்டி ஆறுமுகம், கலைஞானி கமலஹாசன், ஆந்திர மாநில உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி ஏ.ஆர். லெட்சுமணன், குஜராத் மாநில உயர் நீதி மன்ற முன்னாள் தலைமை நீதிபதி பி.ஆர். கோகுல கிருஷ்ணன், உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி இரத்தினவேல் பாண்டி யன், சுப்ரீம் ஸ்டார் சரத்குமார் எம்.பி., பேராயர் எஸ்றா சற்குணம், ஏ.எஸ். பொன்னம்மாள், சி.ஐ.டி.யு., மாநிலப் பொதுச் செயலாளர் டி.கே. ரெங்கராஜன், முன்னாள் எம்.பி., நடிகை வைஜயந்திமாலா, அண்ணா அவர்களின் புதல்வர் டாக்டர் சி.என்.ஏ. பரிமளம், இயக்குனர் முக்தா சீனிவாசன், த.மா.கா. முன்னாள் எம்.எல்.ஏ. ச. அழகிரி, பா.ஜ.க. முன்னணித் தலைவர் ச. திருநாவுக்கரசர், எம்.பி., விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் இரா. திருமாவளவன், எம்.எல்.ஏ., காவியக் கவிஞர் வாலி, பாடகி எஸ். ஜானகி, மூவேந்தர் முன்னேற்றக் கழகத் தலைவர் டாக்டர் சேதுராமன், நடிகை சௌகார் ஜானகி, நடிகர் ஆனந்தராஜ், நடிகை ராதிகா சரத்குமார், கவிப்பேரரசு வைரமுத்து, கழகப் பொருளாளர் ஆர்க்காடு வீராசாமி, பா.ம.க. நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் ஆகியோர்

உரையாற்றிய பிறகு, இறுதியாக பொதுச் செயலாளர் பேராசிரியர் மணமக்களை வாழ்த்திப் பேசினார். நான் நன்றியுரை ஆற்றினேன்.

மேலும், மணவிழாவில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், ஜி.கே. வாசன், தனுஷ் கோடி ஆதித்தன் மற்றும் அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள், முன்னணியினர் கலந்து கொண்டார்கள்.

★ ★ ★

2002ஆம் ஆண்டு பிப்ரவரி 24ஆம் தேதியன்று, அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதற்கான "பூரணாகுதி" நடந்தது. அதில் பங்கேற்பதற்காக 300க்கும் அதிக மான கரசேவகர்கள் ஆமதாபாத்திலிருந்து சபர்மதி எக்ஸ்பிரஸ் ரயில் மூலம் அயோத்திக் குச் சென்றனர். அயோத்தியில் நிகழ்ச்சிகள் நடந்து முடிந்த பின்னர், சபர்மதி எக்ஸ்பிரஸ் ரயில் மூலம் அவர்கள் ஆமதாபாத்துக்கு திரும்பிக் கொண்டிருந்தனர். 27-2-2002 அன்று காலை 8 மணி அளவில், கோத்ரா ரயில் நிலையத்துக்கு அந்தப் புகைவண்டி வந்தது. அப்போது போராட்டக்காரர்கள் அந்த ரயிலில் ஏறினார்கள். கரசேவகர்கள் பயணம் செய்த இரண்டு ரயில் பெட்டிகள்மீது பெட்ரோல் குண்டுகளையும், அமில குண்டுகளையும் சரமாரியாக அவர்கள் வீசினார்கள். அதில் அந்த இரண்டு பெட்டிகளும் எரிந்து நாசமாயின.

அந்தத் தாக்குதலில் கரசேவகர்கள் 59 பேர் உயிரிழந்தனர். 43 பேர் காயம் அடைந்தனர். இந்தச் சம்பவம் குறித்து மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் அறிக்கை விடுத்தேன்.

அந்த அறிக்கையில் -

- "பத்தாண்டுகளுக்கு முன்பு 1992இல் அயோத்தியில் பற்ற வைக்கப்பட்ட தீ, உருவாகியுள்ள சூழலில் இந்திய பூபாகம் முழுவதும் எரிமலைத் தீயாகப் பீறிட்டுக் கிளம்பி விடுமோ என்ற அச்சம், நாட்டு மக்களை நடுங்க வைத்துக்கொண்டிருக்கிறது. கோத்ரா ரயில் நிலையத்தில்



பு.ரா.கோகுலகிருஷ்ணன்

கரசேவைக்குச் சென்று திரும்பிய பயணிகள், ரயில் வண்டியுடன் வைத்துக் கொளுத்தப்பட்டு, ஏதுமறியா இளங்குழந்தைகள் உட்பட சுமார் 60 பேர் கருகிச் செத்த பரிதாபத்திற்காகக் கண்டனக் குரல்களும், கண்ணீர் அறிக்கைகளும் வெளிவந்து கொண்டிருக்கும்போதே, கோத்ரா கொடுமையின் எதிரொலியாக, குஜராத் மாநிலமே மீண்டும் ஒரு பூகம்பத்தைச் சந்திப்பது போன்ற அதிர்ச்சிக்கு உள்ளாகியிருக்கிறது. முன்னாள் காங்கிரஸ் எம்.பி. ஈஷா ஜாப்ரியும், அவரது உறவினர்கள் 19 பேரும் வீட்டோடு வைத்து எரித்துச் சாம்பலாக்கப்பட்ட சண்டாளத்தனம் ஆமதாபாத்துக்கு அருகில் உள்ள மேகானிநகர் என்ற இடத்தில் நடைபெற்றிருக்கிறது எனச் செய்தி வந்துள்ளது. ரயிலில் கருகிப்போன சுமார் 60 உயிர்களை அன்னியில், குஜராத் மாநிலத்தில் வன்முறைச் செயலுக்குப் பலியானவர்களின் எண்ணிக்கை இதுவரையில் முன்னூறைத் தாண்டியுள்ளது. விசுவ இந்து பரிட்சத் அறிவித்துள்ள பந்த் காரணமாக; இந்தியாவில் எத்தனை இடங்களிலிருந்து எத்தகைய செய்திகள் எல்லாம் வர இருக்கிறதோ என்று தெரியவில்லை.

❁ ''இந்தப் பிரச்சினையில் சிறுபான்மை மக்கள், பெரும் பான்மை மக்கள் என்றெல்லாம் பகுத்துப் பார்ப்பதைவிட - எல்லோரும் இந்திய மக்கள்தான் என்ற அடிப்படையில், எந்தப் பிரிவினரானாலும் அவர்களை மொத்தமாகக் கணக்கிட்டு, அவர்களில் மதவெறிக்காக வன்முறையில் ஈடுபடுவோர் - அரசியல் காழ்ப்புணர்ச்சியுடன் வன் முறையில் ஈடுபடுவோர் - இம்மாதிரியான நெருக் கடியும் குழப்பமும் மிகுந்த சமயங்களில் கைவரிசை காட்டும் சமூக விரோதிகளாக வன்முறையில் ஈடுபடுவோர் - ஆகிய அனைவர்மீதும் பாரபட்சமின்றி சட்ட ரீதியான

நடவடிக்கைகளில் மாநில அரசுகளும், மத்திய அரசும் ஈடுபடவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டேன்.

நான் மாத்திரம் அறிக்கை விடவில்லை. பா.ம.க. நிறுவனர் டாக்டர் **ராமதாஸ்,** ம.தி.மு.க. பொதுச் செயலாளர் **வைகோ** ஆகியோரும் கண்டன அறிக்கை விடுத்திருந்தனர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அந்தச் சம்பவத்தைக் கண்டித்து, தலையங்கமே எழுதியிருந்தது. ஆனால், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா விடுத்த அறிக்கையில், அந்தச் சம்பவத்தைக் கண்டித்ததோடு, தேவையில்லாமல் -

- ''பெரும்பான்மை சமுதாயத்திற்கு எதிராக நடத்தப்பட்ட காட்டுமிராண்டித்தனமான இந்தச் சம்பவம் மிகவும் கண்டிக்கத்தக்கது. இதுபோன்று ஏதாவது ஒரு சம்பவம் சிறுபான்மை இன மக்களுக்கு எதிராக நடத்தப்பட்டால், எல்லா அரசியல் தலைவர்களும் ஓடிச் சென்று கண்டன அறிக்கை வெளியிடுகிறார்கள். ஆனால், அதைவிட வெறித்தனமான முறையில் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு எதிராகக் காட்டுமிராண்டித்தனமாக நடந்த இந்தத் தாக்குதலைக் கண்டித்து எந்த ஒரு அரசியல் தலைவரும் இதுவரை கண்டன அறிக்கை வெளியிட வில்லை. இது விநோதமாகவும், வருத்தம் அளிப்பதாகவும் உள்ளது'' என்று குறிப்பிட்டார்.

அயோத்தி பிரச்சினை குறித்து பிரதமரின் அறிவுறுத்தலுக் கிணங்க காஞ்சிபுரம் **சங்கராச்சாரியார்** முயற்சி எடுத்து, அங்கே சென்று, சுமுகமாகத் தீர்க்கப் போகிறார் என்றொரு செய்தி வந்தது. அதைப் பற்றி எனது கருத்தைக் கேட்டபோது, அவர் அங்கே சென்று எடுத்துள்ள முயற்சிகள் பாராட்டத்தக்கது. அந்த முயற்சியின் காரணமாக, இரு சாராரும் - அதாவது இஸ்லாமிய சமுதாயத் தலைவர்களும், வி.எச்.பி. தொடர்பான தலைவர்களும் பேச்சுவார்த்தையின் மூலம் ஒரு சுமுகமான முடிவுக்கு வருவார்களேயானால், அதை நாங்கள் பாராட்டி வரவேற்போம். எங்களுடைய முக்கியமான பிரச்சினை, அயோத்தி தகராறை வைத்து மக்கள் பலர் பலியாவதைத் தடுக்க



மணவழகர் மன்றத்தின் 45வது ஆண்டு விழாவில்,
உவமைக் கவிஞர் வாலி - கவிக்கோ அப்துல் ரஹமான் -
நீதிபதி பு.ரா.கோகுலகிருஷ்ணன் ஆகியோருடன் நான்.

வேண்டும் என்பதுதான். அதற்கேற்ப இரு சார்புத் தலைவர்களும் கலந்து பேசி, அவர்கள் எந்த முடிவெடுத்தாலும் அது சுமுகமான இரு சாராரும் ஏற்றுக் கொள்வதற்கான முடிவாக இருக்குமானால் அது பாராட்டுக்குரியதும், வரவேற்கத்தக்கதுமாகும். அதில் எங்களுக்கு எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. இவ்வளவு பெரிய பிரச்சினையை தமிழ் நாட்டின் சார்பாக சங்கராச்சாரியார் சென்று தீர்த்து வைப்பதில் எனக்கு மகிழ்ச்சி!'' என்று கூறினேன்.

''சர்ச்சைக்குரிய இடத்தில் ராமர் கோயில் கட்ட அனுமதி அளித்தால். தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தி.மு.க. இருக்காது!'' என்று நான் 4-3-2002 அன்று அறிவித்தேன். குஜராத் கலவரம் காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை 427 ஆனது.

குஜராத் மாநில அரசைக் கலைக்க வேண்டும் என்றும், குஜராத் முதல் அமைச்சராக அப்போதிருந்த நரேந்திர மோடி அவர்களை விலக்க வேண்டுமென்றும் கோரி, நாடாளு மன்றத்தில் எதிர்க்கட்சிகள் எல்லாம் அன்றாடம் பிரச்சினையை எழுப்பி குழப்பம் விளைவித்தார்கள். தொடர்ந்து மூன்று நாட்கள் நாடாளுமன்றம் ஒத்தி வைக்கப்பட்டது.

13-3-2001 அன்று உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பில், அயோத்தியில் பூமி பூஜை நடத்த அனுமதியில்லை என்றும், கையகப்படுத்தப்பட்ட இடத்தில் எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளக்கூடாது என்றும், அப்போது இருந்த நிலையே தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்றும் கூறியது.

23-4-2002 அன்று மக்களவையில், துணைத் தலைவராக இருந்த திரு.**பி.எம்.சய்யீத்** குஜராத்தில் அமைதியை ஏற்படுத்தத் தவறிய அரசைக் கண்டிக்கும் தீர்மானம் அவை விதி எண். 184இன் கீழ் மக்களவையில் 30-4-2002 அன்று விவாதிக்கப்படும் என்றும், அந்த விவாதத்தின்மீது வாக்கெடுப்பு நடைபெறும் என்றும் அறிவித்தார். அந்த அறிவிப்பு ஆளுங்கட்சியான பா.ஜ.க.விற்கு பெருத்த பின்னடைவாகும். அதன் பெரும்பான்மையைச் சோதித்துப் பார்க்கும் வண்ணம் அந்த முடிவு அமைந்தது. எதிர்க்கட்சிகளுக்கு தார்மீக ரீதியில் கிடைத்த வெற்றியாக அது கருதப்பட்டது. பா.ஜ.க.வின் நிலைக்கு எதிராக இம்முடிவு இருந்தாலும், மரபு கருதி அதனை ஏற்கிறோம் என்று உள்துறை அமைச்சராக இருந்த அத்வானி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

29-4-2002 அன்று நிலக்கரித் துறை அமைச்சராக இருந்த **ராம் விலாஸ் பாஸ்வான்** அவர்கள் மத்திய அமைச்சரவையில் இருந்து திடீரென பதவி விலகினார். அவருடைய லோக் ஜனசக்தி கட்சிக்கு மக்களவையில் நான்கு எம்.பி.க்கள் இருந்தனர்.

அதற்கடுத்த நாள், தேசிய மாநாட்டுக் கட்சியைச் சேர்ந்த வரும் மத்திய வெளியுறவுத் துறை இணை அமைச்சருமான **உமர் அப்துல்லா** தனது பதவியை ராஜினாமா செய்தார். ''குஜராத் விவகாரத்தில் மத்திய அரசு சரியான நடவடிக்கை எடுக்கத் தவறி விட்டது'' என்று அவர் கூறினார். பத்து உறுப்பினர்களைக் கொண்ட அ.தி.மு.க. வாக்கெடுப்பில் பங்கேற்பதில்லை என்று அறிவித்தது.

30-4-2002 அன்று குஜராத் விவகாரம் தொடர்பாக, மக்களவையில் எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த கண்டனத்

தீர்மானம்மீது கடும் வாக்குவாதம் நடந்தது. பகலில் தொடங்கிய விவாதம் நள்ளிரவுக்குப் பின்னும் நீடித்தது. ஆனாலும் மக்களவையில் இந்தக் கண்டனத் தீர்மானம் தோல்வியடைந்தது. மாநிலங்களவையில் எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த தீர்மானத்துக்கு அரசே ஆதரவு தெரிவித்தது. கண்டனத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.


பாஜக முன்னாள் அமைச்சர் மாயா கோட்னானி, பஜ்ரங்தளம் அமைப்பின் முக்கிய தலைவர் பாபு பஜ்ரங்கி உட்பட 62 பேர்மீது ஆமதாபாத் சிறப்பு நீதி மன்றத்தில், 2009ஆம் ஆண்டு முதல் வழக்கு விசாரணை நடைபெற்றது. விசாரணையின் போது குற்றம் சாட்டப்பட்டவர்களுள் ஒருவரான விஜய் சேத்தி உயிரிழந்து விட்டார். மொத்தம் 327 பேர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டனர். 29-8-2002 அன்று தீர்ப்பு வெளியானது. பாஜக முன்னாள் அமைச்சர் மாயா கோட்னானி, பஜ்ரங்தளம் அமைப்பின் முக்கிய தலைவர் பாபு பஜ்ரங்கி உட்பட 32 பேர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளித்த சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஜியோத்ஸ்னா யாக்னிக், 29 பேரை குற்றமற்றவர்கள் எனக் கூறி விடுவித்தார்.

★ ★ ★


22. மஞ்சள் சால்வைக்கு மகத்துவம் எதுவும் இல்லை!

ஆண்டிப்பட்டி தொகுதி இடைத்தேர்தலில் வெற்றிபெற்ற ஜெயலலிதா, 2-3-2002 அன்று மீண்டும் முதலமைச்சராகப் பதவியேற்றார். அவருடன் 26 அமைச்சர்களும் பதவியேற்றனர். தி.மு.கழகத்தின் சார்பில், அந்தப் பதவியேற்பு விழாவில், எதிர்க்கட்சித் தலைவராக அப்போதிருந்த நமது இனமானப் பேராசிரியரும், சென்னை மாநகர மேயர் என்ற முறையில் தம்பி மு.க.ஸ்டாலினும் கலந்துகொண்டார்கள்.

ஆனால், அப்போது வெளிவந்த **"தினமலர்"** நாளேட்டில், "ஆரோக்கிய அரசியல் சூழ்நிலை என்பது ஒரு வழிப்பாதை யாக இருக்கமுடியாது. நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவரான சோனியா காந்திக்கு பதவியேற்பு நிகழ்ச்சியின் போது முதல் வரிசையில் இடம் கொடுக்கப்படுவதாகவும், ஆனால் இங்கே அப்படி வழங்கப்படவில்லை" என்றும் எழுதியிருந்தார்கள்.



ஏனென்றால், எதிர்க்கட்சித் தலைவரான பேராசிரியருக்கு ஆறாவது வரிசையில் இடம் ஒதுக்கப்பட்டு, பிறகு யாரோ சொல்லி, நான்காவது வரிசையில் உட்கார வைத்தார்கள். முதல் வரிசையில் யார் யாரோ அமர்ந்திருந்தார்கள். மேயர் ஸ்டாலினுக்கு முதல் வரிசையில் இடம் ஒதுக்கப்பட்டிருந்த




பேராசிரியர் அன்பழகன்

போதிலும், அவர் அங்கே அமராமல், பேராசிரியர் அமர்ந் திருந்த இடத்திற்கு பக்கத்தில் வந்து அவருடன் அமர்ந்து கொண்டார்.

பேராசிரியருக்கு ஆறாவது வரிசையில் இடம் ஒதுக்கப் பட்டதைப்பற்றி நான் கண்டனம் தெரிவித்து எழுதியிருந்தேன். அதற்குப் பதில் அளிக்கும் வகையில், ஜெயலலிதா 7-3-2002 அன்று வெளியிட்ட அறிக்கையில்-

"கடந்த மார்ச் 2ம் தேதியன்று தமிழக அமைச்சரவை பதவி ஏற்பு விழாவின்போது, பேரவை எதிர்க்கட்சித் தலைவருக்கு முன் வரிசையில் இடம் ஒதுக்காமல், வேண்டும் என்றே ஆறாவது வரிசையில் ஒதுக்கப்பட்டது என்று கருணாநிதி குற்றம்சாட்டினார். அதை நான் மறுத்து அவரது குற்றச்சாட்டு என் மீதான காழ்ப்புணர்ச்சியின் அடிப்படையில் எழுப்பப்பட்டது என்று தெரிவித்திருந்தேன். தற்போது பேரவை எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் அன்பழகனும் அந்தக் குற்றச்சாட்டையே எழுப்பியிருப்பதால், உண்மை நிலையை விரிவாக எடுத்துரைக்க விரும்புகிறேன்.

"அமைச்சரவை பதவியேற்பு விழா ஏற்பாடுகள் அனைத்தையும், பொதுவாக அரசு பொதுத்துறையினர்தான் கவனிப்பது வழக்கம். முதலமைச்சராக பதவியேற்பவருக்கு அதில் எவ்விதத் தொடர்பும் இல்லை. (பொதுத் துறை எப்போதுமே முதலமைச்சரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் துறையாகும்) விழா துவங்கிய பின்புதான் எதிர்க்கட்சித் தலைவர் ஆறாவது வரிசையில் அமர்ந்திருப்பதை நான் பார்க்க நேர்ந்ததால் அப்போது என்னால் ஒன்றும் செய்ய இயலவில்லை... எதிர்க்கட்சித் தலைவருக் குப் பின் வரிசையில் இடம் ஒதுக்கப்பட்டதை நான் நியாயப்படுத்துவதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. என்னைப் பொறுத்தவரை இதனை ஒரு




2002 அ.தி.மு.க. அரசு, வரிமேல் வரி போட்டு ஏழைகளை வஞ்சிக்கும் பட்ஜெட்டை சமர்ப்பித்தது!

தவறாகவே கருதுகிறேன். என் கவனத்துக்கு இப்பிரச்சினை உரிய நேரத்தில் கொண்டு வரப்பட்டிருந்தால், எதிர்க்கட்சித் தலைவர் அன்பழகனுக்கு முதல் வரிசையில் இடம் ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று சம்பந்தப்பட்ட அரசு அலுவலர்களுக்குத் தெரிவித்திருப்பேன். இதனால் நடைமுறையில் உள்ள மரபு வரிசைப்பட்டியலை தற்போதைய நிலவரங்களுக்கு ஏற்ப உடனடியாகத் திருத்தியமைக்கும்படி ஆணை இட்டுள்ளேன். பேரவை எதிர்க்கட்சித் தலைவர் அன்பழகனை நான் பெரிதும் மதிக்கிறேன். எதிர்காலத்தில் தவறு நிகழாவண்ணம் கவனமாகவும், முன்னெச்சரிக்கையுடனும் இருக்கும்படி சம்பந்தப்பட்ட அரசு அலுவலர்களுக்கு தக்க அறிவுரை வழங்கியுள்ளேன். எனக்குத் தெரியாமல் நிகழ்ந்த தவறுக்கு வருத்தம் தெரிவித்து பேராசிரியர் அன்பழகனுக்குக் கடிதம் அனுப்பியுள்ளேன்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

★ ★ ★

பதவியேற்பின்போது, எதிர்க்கட்சித் தலைவருக்கான இடம் குறித்து இவ்வாறு அறிக்கைவிட்ட முதலமைச்சர் ஜெயலலிதா, பதவியேற்றவுடன் முதலமைச்சர் என்ற முறையில் அளித்த பேட்டியில், கழக ஆட்சியில் தொழில் வளம் முன்னேற வில்லை என்றும், தமிழகம் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார். தமிழகத்தை முதல் மாநிலமாக ஆக்கப் போவதாக வழக்கம்போல தெரிவித்தார்.

அதன் தொடர்ச்சியாக, கழக ஆட்சியில் தொழில் துறையில் எந்த அளவிற்குத் தமிழகம் முன்னேறியது என்பதுபற்றி



1.4.2002 அன்று செங்கற்பட்டில் நடைபெற்ற மதுராந்தகம் ஆறுமுகத்தின் பவளவிழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டேன்!


இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம் 21-7-2000 அன்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருந்த விவரங்களையெல்லாம் தொகுத்து அறிக்கையாக அளித்தேன். அதனால் கோபமடைந்த ஜெயலலிதா, என்னுடைய குற்றச்சாட்டுகளுக்குத் தான் இனிமேல் பதில் அளிக்கப்போவதில்லை என்றும், அமைச்சர்களும், அ.தி.மு.க.வில் உள்ளவர்களும் பதிலடி கொடுப்பார்கள் என்றும் அறிக்கை விடுத்தார். அதைப் பற்றி செய்தியாளர்கள் என்னிடம் கேட்டபோது, "அவர் ஆட்சியில் இருக்கிறார். அவருக்காக பதிலளிக்க ஆள், அம்பு, ஆனை, சேனையென ஏராளமானோர் இருக்கிறார்கள். நான் பாவம், என்னையே நம்பி 'எடுத்தேன் இந்தப் பேனாவை' என்ற உறுதியை மட்டும் உயிர் மூச்சாகக் கொண்டவன். ஆனால் ஒன்று, தன்னந்தனியனாக அபிமன்யூ போராடிய காட்சியை திரை ஓவியமாகவும், இந்திரஜித்தன் போராடிய காட்சியை கவிதைக் காவியமாகவும் தீட்டியவன் தான் இந்தக் கருணாநிதி - ஜெயலலிதா அவர்களே! உங்கள் படை வரிசை ஏவும் கணைகள் பாயட்டும் - எதையும் தாங்கும் இந்த இதயம்! ஆம்; இது அண்ணாவிடம் நான் பெற்றது - அவரிடமே நான் எழுதவும் கற்றது" என்று பதில் கூறினேன்.

ஆனால், அதற்குப் பிறகு என்னுடைய குற்றச்சாட்டுகளுக்கு அவர் பதில் அளிக்காமல் இருந்தாரா என்பதை தமிழ்நாடே அறியும்.


★ ★ ★

2002ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் கூட்டத் தொடர், 9-3-2002 அன்று தொடங்கியது. ஆளுநர் **ராம்மோகன் ராவ்** பேரவைக் கூட்டத்தில் உரையாற்றினார். ஆளுநர் உரையைப் புறக்கணித்து தி.மு.க. வெளிநடப்பு செய்தது. ஜெயலலிதா அதனைக் கடுமையாகக் கண்டித்து, "ஆளுநர் உரையாற்றும்போது, அவ்வாறு வெளிநடப்பு செய்தது அதுவரை நடை பெறாத ஒன்று" என்று வழக்கம் போலச் சாடியிருந்தார்.

நிருபர்கள் அதைப்பற்றி என்னிடம் கேட்டபோது, 18-1-90ல் தி.மு.க. ஆட்சியின் போது ஆளுநராக திரு.**அலெக்சாண்டர்** இருந்தார். அவர் உரையைப் படிக்கத் தொடங்கியபோது, அ.தி.மு.க., ஐக்கிய கம்யூனிஸ்ட், காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தார்கள் என்றும், 18-1-91 அன்று ஆளுநர் **பர்னாலா** உரையாற்றிய போதும், அதி.மு.க. வெளிநடப்பு செய்தது என்றும், 18-3-98இல் ஆளுநர் **பாத்திமா பீவி**



விவசாயிகள் பாதிப்பு - கட்டண உயர்வுகள் கொண்ட
பட்ஜெட்டைக் கண்டித்து, பேராசிரியர் மற்றும் கழக உறுப்பினர்களுடன்
சட்டமன்றத்திலிருந்து வெளிநடப்பு செய்தோம்.



அ.தி.மு.க.ஆட்சியில் தமிழகத்தின் பரிதாப நிலை!

உரையாற்றியபோது, அ.தி.மு.க. வெளிநடப்பு செய்தது என்றும், எனவே தி.மு.கழக ஆட்சியில் ஆளுநர் உரையின் போது அ.தி.மு.க. வெளிநடப்பு செய்துள்ளது என்றும் விளக்கினேன்.

★ ★ ★

2002ஆம் ஆண்டு மீண்டும் அவர் முதலமைச்சராக ஆன பிறகு, தமிழகம் முழுவதும் இருந்த தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள், கழக முன்னணியினர் இல்லங்களில் எல்லாம் லஞ்ச ஒழிப்புத் துறை மூலமாகச் சோதனை நடத்தத் தொடங்கினார்.

உதாரணமாக, **பொன்முடி, அந்தியூர் செல்வராஜ், சுரேஷ் ராஜன்,** சமையநல்லூர் **செல்வராஜ்,** மதுரை முன்னாள் **மேயர் குழந்தைவேலு,** தூத்துக்குடி முன்னாள் எம்.எல்.ஏ., **என்.பெரியசாமி** உட்பட 32 வீடுகளில் சோதனை நடைபெற்றது.

ஜெயலலிதா எப்போது ஆட்சிக்கு வந்தாலும், தி.மு.கழக ஆட்சியிலே செய்ததை எல்லாம் எதிர்ப்பது - அல்லது நீக்குவது என்பதில் மிகுந்த ஆர்வத்தோடு செயல்படுவார். அதன்படி, கழக ஆட்சியில் அரியலூர் மாவட்டம், பெரம்பலூர் மாவட்டம் என்று தனித்தனியாக பிரிக்கப்பட்டு, சிறப்பாக நடைபெற்று வந்த இரண்டு மாவட்டங்களை மீண்டும் ஒரே மாவட்டமாக ஆக்கப்போவதாக அறிவித்து, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

அந்த இரண்டு மாவட்டங்களையும் 2002ஆம் ஆண்டு மார்ச் திங்களில் அவர் ஒரே மாவட்டமாக செய்தபோதிலும், 2006இல் தி.மு.கழக ஆட்சி வந்த பிறகு, மீண்டும் இரண்டு மாவட்டங்களாக பிரிக்கப்பட்டு, தற்போது இரண்டு

மாவட்டங்களாகவே அது செயல்பட்டு வருகின்றது. ஆனால், இந்த என்னுடைய தகவலுக்குப் பிறகு, ஜெயலலிதா திடீரென்று நினைத்துக் கொண்டு, "மீண்டும் அந்த இரண்டு மாவட்டங்களையும் ஒரே மாவட்டமாக ஆக்கப் போகிறேன்" என்று அறிவிப்பு செய்தாலும் செய்யக்கூடும்.

பொதுவாக புதிய மாவட்டங்களை உருவாக்குவது என்பது, அந்தப் பகுதியின் வளர்ச்சி குறித்தும், அந்தப் பகுதி மக்களின் நன்மையைக் கருதியும் அரசினால் செய்யப்படும் நற்காரிய மாகும்.

தி.மு.கழக ஆட்சியிலேதான் நான் முதல் அமைச்சராக இருந்தபோது, புதுக்கோட்டை மாவட்டம் 14-1-1974 அன்று உருவானது. முதலமைச்சராக இருந்த அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களால் அறிவிக்கப்பட்டிருந்தாலும்கூட, 1989-1991ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சிக் காலத்திலேதான் திருவண்ணாமலை, நாகப்பட்டினம் ஆகிய இரண்டு மாவட்டங்கள் உருவாக்கப்பட்டன. 1996ஆம் ஆண்டிற்குப் பிறகுதான் கழக ஆட்சியிலே நாமக்கல், திருவள்ளூர், தேனி, திருவாரூர், அரியலூர் ஆகிய ஐந்து மாவட்டங்களும் உருவாக் கப்பட்டன. கழக ஆட்சியில் புதிதாக மாவட்டங்களை உருவாக்கியது மாத்திரமல்ல - அதற்கான கட்டிடங்களும் கட்டப்பட்டு திறக்கப்பட்டன.

1991 முதல் 1996 வரை நடைபெற்ற அ.தி.மு.க. ஆட்சியில் வருவாய்த் துறைக்கான சில அலுவலகங்கள் கட்டுவதற்காக செய்யப்பட்ட செலவு 10 கோடியே 12 லட்சம் ரூபாய்.

1996ஆம் ஆண்டிற்குப் பிறகு, தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள் - தூத்துக்குடியில் 4 கோடி ரூபாய் செலவிலும், சென்னையில் 9 கோடி ரூபாய் செலவிலும், விழுப்புரத்தில் 4 கோடி ரூபாய் செலவிலும், திருவண்ணாமலையில் 5 கோடியே 77 லட்சம் ரூபாய் செலவிலும், நாமக்கல்லில் 6 கோடியே 14 லட்சம் ரூபாய் செலவிலும், கரூரில் 6 கோடியே 16 லட்சம் ரூபாய் செலவிலும், திருவாரூரில் 6 கோடியே 93 லட்சம் ரூபாய் செலவிலும், நாகப்பட்டினத்தில் 6 கோடியே 61 லட்சம் ரூபாய் செலவிலும்,



ஜி.எம்.சி.பாலயோகி

திருவள்ளூரில் 5 கோடியே 61லட்சம் ரூபாய் செலவிலும், தேனியில் 5 கோடியே 94 லட்சம் ரூபாய் செலவிலும் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டன.


ஆக, பத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள் சுமார் 60 கோடி ரூபாய் செலவிலும் - அது தவிர, சுமார் 15 கோடி ரூபாய் செலவில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டிடங்களும், வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டிடங்களும் கட்டப் பட்டுள்ளன.

★ ★ ★

1-4-2002 அன்று **மதுராந்தகம் ஆறுமுகம்** அவர்களின் பவள விழா நிகழ்ச்சி - செங்கற்பட்டில்! காலையில் சென்னை யிலிருந்து நானும், தம்பிகள் மேயர் ஸ்டாலின், வீரபாண்டி ஆறுமுகம், துரைமுருகன், க.பொன்முடி, க.சுந்தரம், ஆகியோரும் புறப்பட்டுச் செங்கற்பட்டு சென்றோம். அங்கே மாவட்டக் கழகச் செயலாளர்கள் தம்பிகள் கும்முடிப்பூண்டி வேணு, அன்பரசு, சிவாஜி ஆகியோர் எங்களை வரவேற்றனர்.

பொங்கியெழுந்த பூரிப்பில் பவள விழா நாயகர் மதுராந்தகம் ஆறுமுகமும் அவரது துணைவியார் **கோதையும்** அருவியென ஆனந்தக் கண்ணீர் பொங்க எங்களை வரவேற்றனர். பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கில் கழகத் தோழர்கள் வந்து குழுமியிருந்தனர்.

அங்கும் செய்தியாளர்கள். "என்ன - தொண்டரின் பவள விழாவினைச் சிறப்பிக்க வந்தீர்களா?" என்றனர். "தொண்டரா? அவர் தொண்டர் மட்டுமில்லை அய்யா! கழகத்தை வளர்த்த வர்களில் ஒருவர். அவருக்குப் பவள விழா என்றால், வராமல் இருக்க முடியுமா?" என்றேன்.



கழக முன்னணித் தலைவர்களில் ஒருவரான கோ.சி.மணியின் புதல்வவ் கோ.சி.அன்பழகன் - செயிரா திருமணத்தை 23.3.2002 அன்று நடத்தி வைத்தேன்.

சென்னை திரும்பினோம். வழியில் சிந்தனை. இடையில் அவர் கழகத்தை விட்டு விலகிவிட்டார். என் மீதுள்ள கோபத்தால் அல்ல - உள்ளூர் கோப தாபத்தால்! ஆனால் அங்கேயிருந்த போது கடுமையான வார்த்தைகளால் என்னை வசைபாடியிருக்கிறார். அதனால் என்னைப் பார்த்தவுடன் அவருக்கு வெட்கம் வேறு! இடையில் அவர் என்னை வசைபாடினாலும், அதற்கு முன்பாகக் கழகத்தை வளர்க்க அவர் பட்டபாட்டினை நான் அறிவேனே; அப்போது நடந்த நிகழ்ச்சிகளை எல்லாம் மனதிலே அசை போட்டுக்கொண்டே சென்னை திரும்பினேன்.

மதுராந்தகத்தில், அவர் இயக்கத்தின் செயல் வீரராகச் சுற்றிச் சுழன்று, அந்தக் காலத்தில் கொடும்பகை எதிர்த்துக் கடும் போர் புரிந்து, களவெற்றிகள் கண்டதும், என்னையும் நடிகர் திலகத்தையும் அழைத்து நாடகம் நடத்தி, வசூலில் எஞ்சிய தொகையில் கழகப் பணிமனை திறந்ததும், மாவட்டக் கழகச் செயலாளராக அந்தப் பகுதியில் சுற்றிச் சுழன்றதும், பெரும் புயல் ஒன்றில் நானும், என் குடும்பத்தினரும் சிக்கிக்கொண்டு, அரசினர் விடுதி ஒன்றில் தங்கியிருந்தபோது, அந்தப் புயல் வெள்ளத்தில் தன்னந்தனியனாக எங்களைத் தேடிக் கொண்டு அவர் வந்ததும், என் நினைவிலே பசுமையாகச் சுழன்றன. சென்னை திரும்பியதும், நேராக 'முரசொலி' அலுவலகத்திற்குச் சென்று **"மதுராந்தகத்தின் பவள விழா"** என்ற தலைப்பில் உடன்பிறப்பு மடல் ஒன்று எழுதிவிட்டு, அந்த நிறைவுடன் இல்லம் திரும்பினேன்.

★ ★ ★

3-4-2002 அன்று நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு, தம்பி **மு.க.ஸ்டாலின்** பேசும்போது, அடுக்கடுக்கான பல்வேறு குற்றச்சாட்டுகளையெல்லாம் அ.தி.மு.க. அரசின்மீது சுமத்தினார். சென்னை மாநகராட்சி மன்றத்தினை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு அ.தி.மு.க. அரசு நடத்துவதைப்பற்றி எல்லாம் விளக்கினார். மரபுகள் மீறப்படுவதைப் பற்றியும் ஆதாரத்தோடு எடுத்துக் காட்டினார்.

முதலமைச்சர் ஜெயலலிதாவுக்குப் பொறுத்துக் கொள்ள முடியுமா? உடனே பேரவையில் எழுந்து, ''மரபுகள் மீறப்படு வதைப்பற்றி ஸ்டாலின் பேசினார். சென்னை மேயராக உள்ள ஸ்டாலின் என்னை வந்து சந்திக்கவில்லை. கூடிய விரைவில், அவர் ஒரு முடிவினை எடுக்க வேண்டும். இந்தப் பட்ஜெட் கூட்டத் தொடரில் ஒரு முக்கியமான சட்டத் திருத்தத்தை அறிமுகப்படுத்த உள்ளோம். அதில் ஒருவர்; சட்டமன்ற உறுப்பினராக இருக்கலாம் - அல்லது உள்ளாட்சி அமைப்புகளில் மேயர் போன்ற பொறுப்பை வகிக்கலாம் - இரண்டிலும் இருக்கமுடியாது என்ற சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவோம்'' என்றார். அந்த அம்மையாருக்குத்தான் எவ்வளவு நல்ல எண்ணங்கள் என்று பாருங்கள்!

தம்பி ஸ்டாலின் பேசியதற்காக மட்டுமல்ல - அதற்குச் சில நாட்களுக்கு முன்பு தம்பி பொன்முடி சட்டப் பேரவையில் பேசும்போது, நியாயமான சில கேள்விகளைக் கேட்டார் என்பதற்காக அவையிலேயே மிரட்டப்பட்டதோடு, அன்றிரவே அவரது வீட்டிலும், அவருடைய உறவினர்கள், நண்பர்கள் என்று 18 பேருடைய வீடுகளிலும் சோதனை நடத்தப் பட்டது.

''முதலமைச்சர் ஜெயலலிதா ஒருவர் இரண்டு பதவிகளில் இருக்க முடியாது என்பதற்காக சட்டம் கொண்டு வரப்போவ தாகச் சொல்லியிருக்கிறாரே'' என்று என்னிடம் கேட்ட போதுகூட -

''தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்பே - வேட்பு மனு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பே - அதைப் பற்றி

அறிவித்திருக்க வேண்டும். ஆனால், ஒருவர் தேர்தலில் நின்று மக்களிடம் வாக்குப் பெற்று, தேர்ந்தெடுக்கப்பட்டபின் அவரை நீக்க, சட்டம் கொண்டு வரப்படுமானால், அது கோபத்திலும், ஆத்திரத்திலும், பழி வாங்கும் போக்கிலும் செய்யும் காரியம்!'' என்றேன்.

''எம்.எல்.ஏ.வாக இருப்பவர்கள், மேயராக பதவி வகிக்கக்கூடாது என்ற முடிவு தவறானது'' என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், பா.ஜ.க.வும் முடிவெடுத்தன.

ஜெயலலிதா, பேரவையில் அவ்வாறு கோபத்தில் சவால் விட்டதோடு சும்மா இருக்கவில்லை. யார் எதிர்த்தால் தன்னை என்ன செய்ய முடியும் என்ற எண்ணத்தோடு, 22-4-2002 அன்று ஒருவர் ஒரே சமயம் இரண்டு பதவிகள் வகிப்பதைத் தடை செய்யும் சட்டத்தை அறிமுகம் செய்தார்.

அறிமுக நிலையிலேயே தி.மு.க. உள்ளிட்ட அனைத்து எதிர்க்கட்சிகளும் அதனை ஒட்டுமொத்தமாக எதிர்த்தன. மசோதாவின் முழு குறிக்கோளே தேர்தலில் நின்று, மக்களிடம் வாக்குகளைப் பெற்று, வெற்றியடைந்து, சென்னை மாநகர மேயராகவும், சட்டப் பேரவை உறுப்பினராகவும் இருந்த மு.க.ஸ்டாலினிடமிருந்து ஒரு பதவியை அபகரிக்கவேண்டும் என்பது தான்.



கழக முன்னணித் தலைவர்களில் ஒருவரான கோ.சி.மணியின் புதல்வர் கோ.சி.அன்பழகன் - செயிரா திருமணத்தை 3.3.2002 அன்று நடத்தி வைத்தேன்.

8-5-2002 அன்று அந்த மசோதா விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறப்பட்டது. மசோதா அறிமுகப்படுத் தப்பட்டபோதே, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஜி. **பழனிச்சாமி,** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் **நன்மாறன்,** பா.ஜ.க. சார்பில் **ஜெகவீரபாண்டியன்,** பா.ம.க. சார்பில் **ஜி.கே. மணி,** த.மா.கா. சார்பில் எஸ்.ஆர். **பாலசுப்பிரமணியன்,** காங்கிரஸ் சார்பில் **யசோதா,** தி.மு.க. சார்பில் **பேராசிரியர்** ஆகியோர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

மு.க.ஸ்டாலின் ஐந்தாண்டு காலம் மேயராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்து சிறப்பான நிலையில் பணியாற்றிய பிறகு, நடைபெற்ற மேயர் தேர்தலில் அ.தி.மு.க.வினர் கடுமையாக எதிர்த்து, பல்வேறு முயற்சிகளைச் செய்து பார்த்தும் ஸ்டாலினைத் தோற்கடிக்க முடியாததால், அதிலே ஏற்பட்ட ஆத்திரத்தின் காரணமாகவும், சட்டப் பேரவையில் அ.தி.மு.க.வை எதிர்த்து கடுமையாகப் பேசியதன் காரணமாகவும், அந்த மசோதா கொண்டு வரப்பட்டி ருக்கிறது என்று அப்போது ஊரே பேசியது - ஏடுகள் எல்லாம் எழுதின.

பேரவையில் எஸ்.ஆர்.பாலசுப்ரமணியம் பேசும்போது, ''ஒரு தனி நபரை குறி வைத்துக்கொண்டு, அந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது, அப்படி தனி ஒருவரைக் குறி வைத்து - கொண்டு வரப்படும் சட்டம், நீதி மன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டால் செல்லாது!'' என்று கூறினார்.

''அந்த மசோதாவை எதிர்த்து கழகத்தின் சார்பில் வழக்குப் போடுவதாக இருக்கிறீர்களா?'' என்று செய்தியாளர்கள் என்னிடம் கேட்டபோது -

''நாங்கள் வழக்குப் போடுவதாக இல்லை - அரசாங்கத்தின் முடிவுக்கே விட்டு விட்டோம்'' என்று பதில் கூறினேன்.

மேயர் பொறுப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தப் பதவியில் இருந்த தம்பி ஸ்டாலினைச் செய்தியாளர்கள் கேட்டபோது, ''ஒருவருக்கு ஒரு பதவி என்பதை ஏற்கிறோம். ஆனால் மாநகராட்சித் தேர்தல் முடிந்த பிறகு இந்தச் சட்டம் கொண்டு வந்ததுதான் தவறு - நான் எந்தப் பதவியையும்

நானாக ராஜினாமா செய்யப்போவதில்லை'' என்றும், ''அவர்களாகவே பதவியைப் பறித்துக் கொள்ளட்டும்'' என்றும் கூறினார்.

ஆனாலும் ஒருவருக்கு ஒரு பதவி என்ற அந்தச் சட்டத்தை ரத்து செய்யக்கோரி வழக்கறிஞர் **உதயகுமார்** சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார். அந்த வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் அ.தி.மு.க. அரசின் சட்டத்திற்கு இடைக்காலத் தடை விதித்தபோதிலும், திராவிட முன்னேற்றக் கழகம் அந்தப் பிரச்சினையிலே மேற்கொண்டு தொடர விரும்பவில்லை.

உயர் நீதிமன்றத் தீர்ப்பை செய்தியாளர்கள் என்னிடம் கூறி ''என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று கேட்டபோது, ''எங்களுக்கு அதைப் பற்றிக் கவலையில்லை. உங்களுக்கெல்லாம் இனிப்பு வழங்கலாம் என்று நினைத்தேன். தீர்ப்பைப் பார்க்க வேண்டுமென்று நாங்கள் ஆர்வம் காட்டவில்லை. எப்படியோ, மக்களிடம் வாக்குகளைப் பெற்று, மேயராக இரண்டாவது முறை தேர்ந்தெடுக்கப்பட்ட தம்பி ஸ்டாலினின் மேயர் பதவியை ஜெயலலிதா அரசு பறித்துக் கொண்டது'' என்று கூறினேன்.

★ ★ ★


3-3-2002 காலையில் கும்பகோணம் சென்று, முன்னாள் அமைச்சரும், தஞ்சை மண்டலக் கழகப் பொறுப்பாளரும், கழக முன்னணித் தலைவர்களில் ஒருவருமான தம்பி **கோ.சி. மணி - கிருஷ்ணவேணி** தம்பதியரின் அருமைச் செல்வன் **கோ.சி. அன்பழகன், எஸ்.மௌலானா** - எம். மல்லிகா தம்பதியரின் அருமைச் செல்வி செயிரா ஆகியோரின் மணவிழாவிற்குத் தலைமையேற்று நடத்தி வைத்து வாழ்த்தினேன். சென்னை மாநகர மேயர் தம்பி மு.க. ஸ்டாலின், தம்பி மு.க. அழகிரி ஆகியோர் வரவேற்புரை யாற்றினர்.

அந்த மணவிழாவில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த **சிவபுண்ணியம்** கலந்துகொண்டு பேசும்போது, ''1996ஆம் ஆண்டு தி.மு.கழகத் தோடு இந்தியக் கம்யூனிஸ்ட்

கட்சி கூட்டணி வைத்து, முதல் முறையாக சட்டமன்ற உறுப்பினராக வருவதற்கான வாய்ப்பினைப் பெற்றவன் நான். அப்போது தேர்தல் பிரச்சாரத்திற்காகக் கலைஞர் வந்தபோது, அந்தச் சுற்றுப் பயணத்தில் நான் போட்டியிட்ட மன்னார்குடி தொகுதி இடம் பெறவில்லை என்று தெரிந்ததும், மயிலாடு துறையிலே நான் கலைஞர் அவர்களைச் சந்தித்து, மன்னார் குடிக்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். கலைஞர் அவர்கள் அதனை ஏற்றுக் கொண்டு, மூன்றரை மணி நேர அவகாசத்தில் மன்னார்குடிக்கு வந்து தேர்தல் பிரச்சாரம் செய்தார். அந்த மூன்றரை மணி நேரத்திற்குள்ளாக மன்னார் குடியில் லட்சக்கணக்கான மக்கள் திரண்டு கலைஞர் அவர்களது பேச்சைக் கேட்டார்கள். ''நான் தற்போது அணி மாறி வந்திருக்கிறேன் என்றாலும், கலைஞர் அவர்களிடத்திலே எனக்கு இருக்கிற அன்பும், மரியாதையும் என்றைக்கும், எப்பொழுதும் மாறாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி தெரிவிக்கிற காரணத்தால் - ஏதாவது வருத்தமோ, பகையோ வரும் என்று நான் அச்சப்பட்டது கிடையாது. தமிழகத்திலே இருக்கிற அரசியல் கட்சித் தலைவர்களிலே மூத்த அரசியல் கட்சித் தலைவராக - முதுபெரும் தலைவராக - எல்லோருக்கும் சிறந்த வழிகாட்டியாக - இந்த நாட்டில் விளங்குகிற தலைவராக - கலைஞர் இருக்கிறார் என்பதை யாருமே மறுக்க முடியாது'' என்று அந்த மணவிழாவிலே குறிப்பிட்டார். அன்று பேசிய அதே எண்ணத்தோடுதான் இன்றளவும் சிவபுண்ணியம் அவர்கள் இருக்கிறார் என்பதை நான் நன்றாக அறிவேன்.

★ ★ ★

அதே 3-3-2002 அன்று, ஆந்திர மாநிலம், மேற்குக் கோதாவரி மாவட்டத்தில் உள்ள பீமாவரம் என்னும் இடத்தில் இருந்து ஐதராபாத் செல்வதற்காக அப்போது நாடாளுமன்ற மக்களவைத் தலைவராக இருந்த திரு.**ஜி.எம்.சி. பாலயோகி** அவர்கள் ஹெலிகாப்டர் ஒன்றில் புறப்பட்டார். அவர் சென்ற ஹெலிகாப்டர் கிருஷ்ணா மாவட்டம், கைகாலூர் என்ற இடத்திற்கு அருகே வந்தபோது, தென்னை மரம் ஒன்றில்



தம்பி மு.க.ஸ்டாலினின் பதவியைப் பறிக்கவே ''ஒருவருக்கு ஒரே பதவி'' சட்டத்தை ஜெயலலிதா கொண்டு வந்தார்.

மோதி, நொறுங்கி, ஒரு மீன் வளர்ப்புக் குளத்தில் விழுந்தது. அந்தக் கோர விபத்தில் மக்களவைத் தலைவர் ஜி.எம்.சி. பாலயோகி பரிதாபமாக இறந்தார். ஹெலி காப்டரை ஓட்டி வந்த விமான ஓட்டியும், பாலயோகியின் செயலாளரும், பாதுகாவலரும் இறந்துவிட்டார்கள்.

நாடாளுமன்றத்தில் புயல் வீசுகிற நேரத்திலும், அமைதியின் வடிவமாக விளங்கி, ஆளுங்கட்சி எதிர்க்கட்சி என்ற பாரபட்சம் காட்டாமல், பண்பார்ந்த நெறியினைக் கடைப்பிடித்தவர் பாலயோகி. அவரது மறைவு குறித்து **''இந்திய ஜனநாயக அரங்கில் ஒரு தூண் விழுந்து விட்டது!''** என்று இரங்கல் செய்தி விடுத்தேன்.

பாலயோகி அவர்களின் உடலுக்கு குடியரசுத் தலைவர், பிரதமர் ஆகியோர் மலரஞ்சலி செலுத்தினர். கழகத்தின் சார்பில் மத்திய அமைச்சர் தம்பி **முரசொலி மாறன்** மலர் வளையம் வைத்து மரியாதை செய்தார்.

★ ★ ★

நான் **மஞ்சள் துண்டு** அணிவதைப் பற்றி சிலர், அது ஏதோ தெய்வீக மகத்துவத்திற்காக என்று இன்றுவரை பிரச்சாரம் செய்து வருகிறார்கள். அதைப் பற்றி நான் பலமுறை

விளக்கமளித்திருக்கிறேன். இருந்தாலும் அவர்கள் தங்கள் பிரச்சாரத்தை நிறுத்தவில்லை.

நான் மஞ்சள் துண்டு அணிவது எந்தவித தெய்வீக மகத்துவத்திற்காகவும் அல்ல. 1994ஆம் ஆண்டிற்கு முன்பு, ஒரு நாள் திடீரென்று என் வலது கன்னத்தில் மாம்பிஞ்சு அளவுக்கு ஒரு வீக்கம் ஏற்பட்டு, அது கொஞ்சம் கொஞ்சமாகப் பெரிதாகத் தொடங்கியது.

உடனே நரம்பியல் நிபுணர் பி. ராமமூர்த்தி அவர்களும், டாக்டர் கோபால் அவர்களும் என்னை சென்னை மலர் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று, பல்வேறு சோதனைகளைச் செய்தார்கள். வலது கன்னத்தில் உமிழ் நீர்ச் சுரப்பியுடன் இணைந்துள்ள மெல்லிய நரம்புக் குழாயில் சிறிய அளவு வெடிப்பு ஏற்பட்டு, அதன் காரணமாக உமிழ் நீர்த் தேக்கம் ஏற்பட்டு, அதனால் அந்த வீக்கம் என்று கண்டறியப் பட்டது. வலது புறம் வாய்க்குள் அறுவைச் சிகிச்சை செய்து அந்த மெல்லிய குழாயை ஒட்ட வைக்கலாமென முடிவெடுத்த டாக்டர்கள் என்னை ஆபரேஷன் தியேட்டருக்குள் அழைத்துச் சென்றனர்.

அறுவைச் சிகிச்சைக்குத் தயாராக முன்னேற்பாடுகள் அனைத்தும் நடந்து முடிந்த பிறகு, மீண்டும் டாக்டர்கள் கலந்து பேசிக் கொண்டிருந்தனர். அந்த அறுவைச் சிகிச்சையினால் எதிர் விளைவுகள் எதுவும் ஏற்படுமோ என்ற ஐயப்பாட்டின் அடிப்படையில்தான் டாக்டர்களுக்கிடையே அந்த விவாதம்! டாக்டர்கள் விவாதித்துக் கொண்டிருந்தபோதே என் வலது கன்ன வீக்கமும் சிறிது குறைந்து கொண்டு வந்திருக்கிறது. கடைசியாக, ஒரு வழியாக அறுவைச் சிகிச்சை வேண்டாமென முடிவு செய்யப்பட்டு, சில நாட்கள் சில மாத்திரைகள் மட்டும் நாள்தோறும் சாப்பிட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டு, வீடு வந்து சேர்ந்தேன்.

கழுத்துப் பகுதியும், முகம் உள்ளிட்ட தோள் பகுதியும் எப்போதும் கதகதப்பாக இருக்க வேண்டுமென்றும், நான் வழக்கமாக அணியும் கைத்தறித் துண்டுக்குப் பதிலாகக் கம்பளிச் சால்வையை கழுத்தின்மேல் எப்போதும் இருக்கும்

படியாக அணிவது நல்லது என்றும் டாக்டர்கள் வலியுறுத்திக் கூறினர். அப்படிக் கம்பளிச் சால்வை அணிந்து கொண்டால், கழுத்து வலிக்காமல் இருப்பதற்கும், கன்னத்தில் சிறு வீக்கம் பெரிதாகாமல் இருப்பதற்கும் நல்ல பாதுகாப்பு - என்றும் கூறினர்.

அவர்களின் அறிவுரை கேட்டு அப்போது நான் உடனடியாக அணிந்து கொண்டது மஞ்சள் நிற சால்வையாக இருந்தது. தொடர்ந்து இரண்டொரு நாள் மஞ்சள் சால்வை என் கழுத்தை வளைத்துப் போட்டுக் கொண்டதைக் கண்ட என் வீட்டில் உள்ளவர்களும், நண்பர்களும் ''இது நன்றாக இருக்கிறது, இதையே உங்களுக்குத் தனி அடையாளமாக - இதே வண்ணத்தில எப்போதும் அணிந்திடுங்கள்'' என்று கூறினர். அடையாளமாகச் சிலர் தாடி, தொப்பி, கையில் பிரம்பு வைத்துக் கொண்டிருப்பதைப்போல நமக்கும் இந்த மஞ்சள் சால்வை அடையாளமாக இருக்கட்டுமே என்று எண்ணினேன். தொடர்ந்து அணிந்து வருகிறேன்.

இதைப் பற்றி பல காரணங்களை பலரும் சொல்வதைக் கேட்கும்போது எனக்கு சிரிப்பு தான் ஏற்படுகிறது. இந்த மஞ்சள் ஆடை குறித்து ஏற்கனவே சிறப்புப் பேட்டி ஒன்றில் என்னிடம் கேட்டபோதே, ''நான் பகுத்தறிவாளன் என்ற நிலையில் எள்ளளவும் மாற்றமில்லை. நான் மஞ்சள் துண்டு அணிவது கடவுள் நம்பிக்கையினால் அல்ல என்பதையும்; அதற்கான காரணத்தையும் பலமுறை விளக்கியிருக்கிறேன். ஒரு பகுத்தறிவாளனை அறிவியல் ரீதியான உண்மைகள் மட்டும் ஆட்கொள்ள முடியுமே தவிர; மூட நம்பிக்கைகள் எதுவும் துரத்திக் கொண்டிருக்க முடியாது. என்னைச் சேர்ந்த ஒரு சிலரின் கடவுள் நம்பிக்கை குறித்து நான் கவலைப்படுவது கிடையாது. அவர்கள் தெளிவில்லாத நிலையில் குழப்பத்தில் இருப்பதாகவே கருதிக் கொள்வேன். இதில் எங்கே முரண்பாடு என்பதை நீங்கள்தான் சொல்ல வேண்டும். முதிர்ந்த பண்பாடு முரண்பாடாகிவிடாது! ஓஷோ எழுதிய ''தம்மபதம்'' என்ற நூலில் - மஞ்சளாடை பற்றி புத்தர் என்ன சொன்னார் என்பதை விளக்கியிருக்கிறார். அது வருமாறு :-

"சேறு படிந்த சிந்தனைகளும்
நிறைந்த ஏமாற்றும் துணிவும்கொண்டவன்
மஞ்சளாடை அணிவது பொருந்துமா?
தன்னியல்பை ஆள்பவர் எவரோ -
ஒளியும் தெளிவும் உண்மையுமானவர்
எவரோ - அவரே மஞ்சளாடை
அணியலாம்!"


இதுதான் என்னுடைய மஞ்சள் சால்வையின் மர்மம்! எந்தவொரு காரணத்திற்காகவும் அதை நான் அணியவில்லை. இதில் மகத்துவம் எதுவும் இல்லை - என்பதுதான் உண்மை!

★ ★ ★

23. வெற்றியுமல்ல - தோல்வியுமல்ல!

தி.மு. கழக ஆட்சியில், 234 சட்டமன்றத் தொகுதிகளிலும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அலுவலகம் கட்டப்படும் என்று ஒரு திட்டத்தை நான் அறிவித்திருந்தேன். அத்திட்டத்தின்படி, சட்டமன்ற உறுப்பினர்களுக்கான அலுவலகங்கள் ஆங்காங்கு கட்டப்பட்டுத் திறக்கப்பட்டு வந்தன. அந்தத் திட்டத்தின்கீழ் என்னுடைய சேப்பாக்கம் தொகுதியில் கட்டப்பட்ட சட்டமன்ற உறுப்பினருக்கான அந்த அலுவலகத்தை 7-3-2002 அன்று காலையில் நான் திறந்து வைத்தேன்.

அந்த அலுவலகம் திறக்கப்பட்ட மறுநாளே, அந்தப் பகுதியைச் சேர்ந்த அ.தி.மு.க. கட்சிக் கும்பல் ஒன்று, இரவு நேரத்தில் அந்த அலுவலகத்திற்கு வந்து கண்ணாடிகளை யெல்லாம் அடித்துச் சேதப்படுத்தி, அராஜகச் செயல்களிலே ஈடுபட்டனர்.



அந்த அலுவலகத்திற்குள் யாரும் பொது மக்கள் வந்து தங்கள் முறைகேடுகளைச் செய்யக் கூடாது என்ற பெருந் தன்மையோடு(?) அப்படிப் பட்ட அராஜகச் செயல்களிலே அந்தக் கும்பல் ஈடுபட்டது. அதைப்பற்றி காவல் துறையி னரிடம் புகார் கொடுத்தும், அவர்கள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முன் வரவில்லை.

காவல்துறையினரின் அந்த அலட்சியத்தைக் கண்டிக்கும் வகையில், 10-3-2002 அன்று காலையில், அந்த அலுவலக வாசலிலேயே நான் **உண்ணாவிரதம்** மேற்கொள்வதாக அறிவித்துத் தொடங்கினேன். அந்தத் தொகுதியைச் சேர்ந்த தாய்மார்களும், பொதுமக்களும், கழகத்தைச் சேர்ந்தவர்களும் அந்த உண்ணா நோன்பில் தங்களையும் இணைத்துக் கொண்டனர்.

சென்னையில், நான் உண்ணாவிரதம் இருக்கிறேன் என்ற செய்தி வெளியூர்களுக்கு எட்டியதும், ஆங்காங்கு கழகத் தோழர்கள் தாங்களும் உண்ணாவிரதம் இருப்பதாக அறிவித்துத் தொடங்கிவிட்டார்கள்.

மதுரையில், தென் மண்டல தி.மு.க. செயலாளர் மு.க. அழகிரி, பொன். முத்துராமலிங்கம், முன்னாள் மேயர் குழந்தைவேலு ஆகியோர் தலைமையில் தேவர் சிலைக்கு முன்பாக கண்டன ஆர்ப்பாட்டமும், சாலை மறியலும் நடைபெற்றது. அதற்குப் பிறகு காவல்துறை இணை ஆணையரும், வேறு சில காவல்துறை அதிகாரிகளும் அங்கேயே என்னை வந்து சந்தித்து, உண்மையான குற்றவாளிகளை உடனடியாகக் கைது செய்திட நடவடிக்கை மேற்கொண்டிருப் பதாக அளித்த உறுதி மொழியை ஏற்றுக் கொண்டு, உண்ணா விரதத்தைக் கைவிடுவதாக அறிவித்தேன்.



வழக்கறிஞர் சண்முகசுந்தரம்

★ ★ ★

16-4-2002 அன்று தமிழகச் சட்டப் பேரவையில், முதலமைச்சர் ஜெயலலிதா ஒரு

தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினார். அந்தத் தீர்மானம் வருமாறு :-


"விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனைப் பிடித்து நாடு கடத்த இயலவில்லை என்றால், இலங்கை அரசின் அனுமதியோடு, இந்திய ராணுவத்தை இலங்கை அரசின் உதவிக்கு அனுப்பி, பிரபாகரனைச் சிறை பிடிப்பதற்கு உரிய முயற்சி மேற்கொள்ள வேண்டும்-பிரபாகரனை, அவர் புரிந்த குற்றங்களுக்காக இந்தியாவில் உள்ள நீதிமன்றத்தில் உரிய விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்."

அவையில் அ.தி.மு.க.விற்கு இருந்த பெரும்பான்மை காரணமாக, அன்றைய தினம் ஜெயலலிதா விடுதலைப்புலி களுக்கு எதிராகக் கொண்டு வந்த அந்தத் தீர்மானம் பேரவையிலே நிறைவேறியது.

முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா இந்த அளவிற்கு ஒரு தீர்மானத்தைப் பேரவையில் நிறைவேற்றினார் என்றால், அவருக்கு முன்பு ஓரிரு மாதங்கள் மட்டுமே முதல் அமைச்சராக இருந்த திரு. ஓ. பன்னீர்ச்செல்வம் அவர்கள், அவருடைய பங்குக்கு, 10-1-2002 அன்று, அன்றைய பிரதமர் **வாஜ்பய்** அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தின் சுருக்கம் வருமாறு :-

"1989-1991ஆம் ஆண்டுகளில் தி.மு.க. அரசின் ஆதரவுடன் விடுதலைப்புலிகள் தமிழகத்தில் சுதந்திரமாகத் தங்கள் நடவடிக்கைகளைத் தொடர்ந்தனர். 1991ஆம் ஆண்டு, ஜூன் மாதம், ஜெயலலிதா முதல்வரான பின்தான் தனது உயிரையும் பொருட்படுத்தாது, புலிகளின் நடவடிக்கையை ஒடுக்கினார். புலிகளின் இயக்கம் தடை செய்யப்பட்டதும், ஜெயலலி தாவின் முயற்சியால்தான்.

"தி.மு.க. மீண்டும் 1996-2001ஆம் ஆண்டுகளில் பதவிக்கு வந்தபோது, புலிகள் மீதான கட்டுப்பாட்டைத் தளர்த்தினர். 2001இல் மறுபடியும் அதிமுக பதவிக்கு வந்தபின் தடை செய்யப்பட்ட புலிகள் அமைப்புமீது தீவிர கண்காணிப்பைத் தொடர்ந்தார். உலகில் உள்ள பல தீவிரவாத இயக்கங்களில்




7.3.2002 அன்று அப்போதைய என்னுடைய சேப்பாக்கம் தொகுதியில்,
நான் திறந்து வைத்த சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம்.

மிகக் கொடூரமான அமைப்பாக விடுதலைப்புலிகள் அமைப்பு இருந்து வருகிறது. எனவே, **ஆண்டன் பாலசிங்கம்** உட்பட - புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த எவரையும் தமிழ்நாட்டில் தங்குவதற்கு அனுமதி எதுவும் தரக் கூடாது.''

அது மாத்திரமல்ல - மீண்டும் ஜெயலலிதா முதலமைச்சராகப் பதவியேற்ற பிறகு, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகராக இருந்த அருமை நண்பர் ஆண்டன் பாலசிங்கம் அவர்கள் நோய்வாய்ப்பட்ட நிலையில், அவருக்கு சிகிச்சை அளிப்பதுபற்றி ஒரு பிரச்சினை எழுந்தது.

அப்போது பிரதமர் வாஜ்பய் அவர்களிடம் அதுபற்றிக் கேட்டபோது, மனிதாபிமான அடிப்படையில், பாலசிங்கம் அவர்களுக்கு சிகிச்சை அளிப்பதுபற்றி பரிசீலிக்கப்படும் என்றுதான் கூறினார். ஆனால், அப்போது தமிழக முதல் அமைச்சராக இருந்த ஜெயலலிதா அதைக் கடுமையாக எதிர்த்தார். ''தமிழகம் உள்பட இந்தியாவின் எந்த இடத்திலும் ஆண்டன் பாலசிங்கம் சிகிச்சை பெற, மத்திய அரசு அனுமதி அளிக்கக் கூடாது'' என்றே கூறினார். தமிழகத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவாகச் செயல்படுபவர்கள்மீது புதிய ''பொடா'' சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றும் எச்சரித்தார்.




எனது சட்டமன்றத் தொகுதி அலுவலகத்தில், தங்களது கோரிக்கைகளைத் தெரிவிக்கும் தொகுதிவாழ் மக்கள்

12-4-2002 அன்று முதலமைச்சர் ஜெயலலிதா விடுதலைப் புலிகள் பிரச்சினை தொடர்பாக, இரண்டு முறை விரிவாகப் பேட்டி அளித்தார். அந்தப் பேட்டியின்போது-

"விடுதலைப்புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையிலான சமரசப் பேச்சுவார்த்தையில் இந்தியா பங்கேற்காது எனப் பிரதமர் கூறியுள்ளது வரவேற்கத்தக்கது. ஆனால், அதே சமயம், விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் பாலசிங்கத்துக்கு இந்தியாவில் சிகிச்சை அளிப்பது குறித்து ஒருவித மனிதாபிமான அடிப்படையில் பரிசீலிக்கப்படும் எனப் பிரதமர் தெரிவித்துள்ளதை எதிர்க்கிறேன். தமிழகம் மட்டுமின்றி - இந்தியாவின் எந்த இடத்திலும் ஆண்டன் பாலசிங்கம் சிகிச்சை பெற மத்திய அரசு அனுமதி அளிக்கக்கூடாது என்பது அ.தி.மு.க. அரசின் நிலைப்பாடு. இந்த விஷயத்தில், தமிழகத்தை மத்திய அரசு நிர்ப்பந்திக்காது என்ற நம்பிக்கை உள்ளது. நாட்டின் ஒருமைப்பாடு, இறையாண்மை, பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு விடுதலைப்புலிகள் இந்தியாவில் நுழைய எக்காரணத்தைக் கொண்டும் மத்திய அரசு அனுமதி அளிக்கக் கூடாது" என்று கூறினார்.

இப்படியெல்லாம் 2002ஆம் ஆண்டு பேட்டி கொடுத்தவர் தான், இலங்கைத் தமிழர்களுக்கு உதவி செய்பவர் என்று இப்போது சொல்லிக் கொள்கிறார்.



ஆண்டன் பாலசிங்கம்

ஜெயலலிதா அன்றைய தினம் பேட்டி அளித்தபோது, செய்தியாளர்கள் அவரிடம் வேறொன்றும் கேட்டார்கள். ‘‘விடுதலைப் புலிகள் மீதானத் தடையை நீக்கவேண்டும் என்று ம.தி.மு.க., பா.ம.க., போன்ற சில கட்சிகள் கோரிக்கை விடுத்து வருகிறார்களே?’’ என்று கேட்டபோது -

‘‘விடுதலைப்புலிகள் தடை செய்யப்பட்ட ஒரு மிகப் பயங்கரவாத அமைப்பு. விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு தெரிவிப்பவர்களைத் தேச துரோகக் குற்றம் செய்ததாகக் கருத வேண்டும். எனவே, விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகச் செயல்படுபவர்கள்மீது புதிய ‘‘பொடா’’ சட்டத்தின்கீழ் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க முடியும். இச்சட்டத்தின்கீழ் புலிகளுக்கு ஆதரவாகச் செயல்படுபவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் தமிழக அரசுக்கும் உள்ளது’’ என்று பதிலளித்தார். நானாக இதை இட்டுக்கட்டிக் கூறவில்லை. **‘‘தினமணி’’** நாளிதழ், 13-4-2002இல் முதல் பக்கத்தில் வந்துள்ள செய்தியே இதுதான்!

இன்னும் சொல்லப்போனால், இந்தத் தீர்மானம் நிறை வேற்றப்படுவதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்பு, 31-3-2002 அன்று கேள்வி - பதில் பகுதியில் நான் எழுதும்போது-

‘‘இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நேரடிப் பேச்சுவார்த்தை தாய்லாந்து நாட்டில் நடைபெறு மென அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறதே?’’ என்று கேட்டதற்கு, ‘‘எங்கே நடைபெறுகிறது என்பதுகூடப் பிரச்சினையில்லை. 1956ஆம் ஆண்டு ஈழத் தந்தை செல்வநாயகம் அவர்களால் அமைதி வழியில் ஆரம்பமான தமிழர்களின் உரிமை வேட்கைப் போராட்டம், 1983க்குப் பிறகு ஆயுதமேந்தி நடக்குமளவுக்கு உருவெடுத்து - உயிர்கள், உடைமைகள் எண்ணிப் பார்க்க இயலாத அளவுக்கு



ஈழத் தந்தை செல்வநாயகம்

அழிந்தொழிந்து - பிரச்சினைக்கு அமைதி வழியில் விடை காண இலங்கையின் புதிய பிரதமர் திரு. **ரனில் விக்ரம சிங்கே;** நார்வே நாட்டினுடைய தூதுக் குழுவின் நல்லெண்ணத்துக்கு மதிப்பளித்து, நிலையான அமைதியை நடை முறைக்குக் கொண்டு வருவதற்கு முனைந்திருப்பதும்; அதற்கு விடுதலைப்புலிகள் இணங்கியிருப்பதும் ''சாந்தியால் உலகம் தழைப்பது நன்றாம்!'' எனும் பாவேந்தர் பாடலுக்குப் பெருமை சேர்ப்ப தாகும்.'' என்று எழுதி இருந்தேன்.

அ.தி.மு.க. அரசையும், ஜெயலலிதாவையும் அதுவரை ஆதரித்து வந்த நம்முடைய தாய்க் கழகமான திராவிடர் கழகமும்கூட, ஜெயலலிதா சட்டப் பேரவையில் பிரபாகரனுக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றிய பிறகு அந்த முடிவை ஜெயலலிதா மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டது. தமிழர் தலைவர் **வீரமணி** அவர்கள் விடுத்த அறிக்கையில், ''உலகத் தமிழர்களின் பழியை அ.தி.மு.க. அரசு சுமக்க வேண்டாம்!'' என்று கேட்டுக் கொண்டார்.

★ ★ ★

சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசும் போது, அவர்கள் பேச்சில் அடிக்கடி குறுக்கிட்டு மறுப்புக் கூறுவதில் முதலமைச்சர் ஜெயலலிதாவிற்கு ஒரு தனி விருப்பம்.

ஆனால், பேரவையில் தவறான தகவல்களை யாரும் கூறக் கூடாது. அப்படிக் கூறினால், அவர்கள்மீது எந்த ஒரு உறுப்பினரும் உரிமைப் பிரச்சினை கொண்டு வரலாம். முதல் அமைச்சராக இருப்பவர் கூடுமானவரை தவறான தகவல்களைக் கூறக்கூடாது. தாங்கள் ஆளுங்கட்சி - எதைச் சொன்னாலும் உறுப்பினர்கள் ஆதரவு தெரிவிப்பார்கள் என்ற அடிப்படையில்,

எதை வேண்டுமானாலும் சொல்வது நல்லதல்ல - நாகரிகமும் அல்ல.

ஒருமுறை பேரவையில் முதல் அமைச்சர் ஜெயலலிதா பேசும்போது, நீதிபதிகளைப் பற்றி மிகத் தவறாகச் சொல்லி விட்டார். பத்திரிகைகளில் அது பெரிதாக வந்தது. அதைப் பார்த்துவிட்டு, மறுநாள் பேரவையில் ஜெயலலிதா ஜாக்கிரதையாக- தான் நீதிபதிகளைப் பற்றி தவறாகப் பேசி விட்டதாக ஒப்புதல் வாக்குமூலம் தந்தார்.

அதற்குப் பிறகு ஒரு முறை தி.மு.கழகத்தைப் பற்றி முற்றிலும் ஒரு தவறான கருத்தைக் கூறினார். உடனடியாக, அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு. **எஸ். ஆர். பாலசுப்ரமணியம்** அவர்கள் அது தவறான தகவல் என்பதை விளக்கினார். அதற்குப் பிறகு ஜெயலலிதா ''வாய் தவறிச் சொல்லி விட்டேன் - நானும் மனுஷிதானே!'' என்றும் கூறி சமாளித்தார்.

ஆனால் அந்தப் பிரச்சினைக்காக கழகத்தின் சார்பில் தரப்பட்ட உரிமைப் பிரச்சினைக்கு அப்போது பேரவைத் தலைவராக இருந்தவர் அனுமதி மறுத்து விட்டார்.

★ ★ ★

இதற்கிடையே 17-4-2002 அன்று சென்னை மாவட்டக் கழகத்தின் செயலாளராகச் சிறப்பாக நீண்ட காலம்



சென்னை மாவட்டச் செயலாளராக சிறப்பாகப் பணியாற்றிய ஆர்.டி.சீதாபதியின் மகன் சிவகுமார் - கவிதா திருமணத்தை 17.4.2002 அன்று சென்னையில் நான்நடத்திவைத்தேன்.



மேயர் மு.க.ஸ்டாலின் தலைமையில், கழகத்தினர் மீது பொய் வழக்குப் போடும் காவல்துறையைக் கண்டித்து மாபெரும் உண்ணாவிரதம்.

பணியாற்றிய அருமைத் தம்பி ஆர்.டி.சீத்தாபதியின் அன்பு மகன் **எஸ். சிவக்குமாருக்கும்,** கொரட்டூர் கே.பாலசுப்பிர மணியத்தின் செல்வி **பி. கவிதாவுக்கும்** மணவிழாவினை அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் நான் நடத்தி வைத்தேன். பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியர், மத்திய அமைச்சர் தம்பி முரசொலி மாறன், மேயர் தம்பி மு.க. ஸ்டாலின் ஆகியோர் வரவேற்றுப் பேசினார்கள். கழகப் பொருளாளர் ஆர்க்காடு என். வீராசாமி, துணைப் பொதுச் செயலாளர் கு.சுந்தரம் ஆகியோர் முன்னிலை வகித்துப் பேசினார்கள்.

தம்பி சீதாபதியின் இல்லத்தில், நான் தலைமை வகித்து நடத்திய ஐந்தாவது திருமணம் அது. சீத்தாபதியைப் பொறுத்த வரையில், தி.மு. கழகத்திலே என்னைப் போன்ற தலைவர் களுக்கு, அண்ணா அவர்கள் காலத்திலும் சரி- இப்பொழுது எங்களுடைய காலத்திலும் சரி-எங்களுக் கெல்லாம் இருக்கின்ற மெய்க்காவல் படைத் தளபதிகளிலே ஒருவராகத் திகழ்ந்தவர் சீத்தாபதி என்று சொன்னால் அது மிகையாகாது.


தற்போது அவர் சற்று உடல் நலம் பாதிக்கப்பட்டிருக்கிறார். ஆனால், அவர் மாவட்டக் கழகச் செயலாளராக இருந்தபோது, சென்னை மாநகரில் நான் எந்த நிகழ்ச்சிக்குச் சென்றாலும், தற்போது ''பைலட்'' -- ''எஸ்கார்ட்'' என்றெல்லாம் சொல்லு கிறார்களே, அதைப்போல சீத்தாபதியின் கார் என் காருக்கு முன்னால் செல்லாமல் இருந்ததே கிடையாது. அதைப்போல, ஒவ்வொரு நிகழ்ச்சியும் நடைபெறுவதற்கு முன்பு, நேரில் அங்கே சென்று பார்வையிட்டு, ஏற்பாடுகள் எல்லாம் முறையாகச் செய்யப்பட்டிருக்கிறதா என்பதையெல்லாம் அறிந்த பிறகுதான், எங்களையே கூட்டிச் செல்வார்.

அன்றாடம் என் வீட்டிற்குக் காலையில் வருவதோடு, நான் தலைமைக் கழகத்தில் இருந்தால், அப்போதும் சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் என்ற முறையிலே கழக அலுவலத்திலேதான் அவர் இருப்பார்.

தந்தை பெரியார் அவர்கள் காலத்திலேதான் எடைக்கு எடை வழங்குவது என்ற ஒரு முறை திராவிட இயக்க மேடைகளில் நடைமுறைக்கு வந்தது. அதைப்போல கழகத்தின் சார்பில் என்னுடைய எடைக்கு எடை நாணயங்களை வழங்கும் நிகழ்ச்சி நடைபெறத் தொடங்கியபோது, சென்னை மாநகரில் மாவட்டக் கழகத்தின் சார்பில் எடைக்கு எடை வெள்ளியை வழங்கியவர் தம்பி சீத்தாபதிதான். அவருடைய அருமை மகனுக்கு நடைபெற்ற அந்த மண விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினேன்.

★ ★ ★

27-3-2002 அன்று நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த நாடாளுமன்ற மாநிலங்களவைத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், வேட்பாளராக மூத்த வழக்கறிஞர் **ஆர். சண்முகசுந்தரம்** நிறுத்தப்படுவார் என



பேராசிரியர் அவர்கள், மு.க.ஸ்டாலினுக்குப் பழரசம் கொடுத்து,
உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்.

முறைப்படி அறிவிக்கப்பட்டது. சண்முகசுந்தரம் கழகத்திலே தியாகத் தழும்பேறிய வழக்கறிஞர்களில் ஒருவர். அவருடைய தந்தை எஸ். ராஜகோபால் அவர்களும் கழகத்தின்பால் மிகுந்த ஈடுபாடு கொண்ட மூத்த வழக்கறிஞர்.

அவருடைய பெயரை அறிவித்து விட்டு இல்லம் திரும்பிய நேரத்தில், ஒரு பத்திரிகை அலுவலகத்திலிருந்து, ஒரு நிருபர் என்னைத் தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, ''எந்த சண்முகசுந்தரம் சார்?'' என்று கேட்டார்.

அவருக்கு நான் சொன்ன பதில் என்ன தெரியுமா? ''1995ஆம் ஆண்டு, டான்சி வழக்கிற்காக, இரவு நேரத்தில் ஆவணங்களை ஆய்வு செய்து கொண்டிருந்தபோது, ஏவி விடப்பட்ட குண்டர்களால் 80 இடங்களில் வெட்டப்பட்டு, உயிர் ஊசலாடி, மருத்துவமனை அறை முழுதும் ரத்த வெள்ளமாகக் காட்சியளித்தபோது; அதைக் காண முடியாமல் நான் மூர்ச்சித்துப் போனேனே - அந்த வழக்கறிஞர் சண்முகசுந்தரம் தான் இப்போது மாநிலங்களவைத் தேர்தலில் கழக வேட்பாளர்'' என்றேன்.

நிருபர் தொடர்ந்து, ''அவரைத் தாக்கிய அந்த வழக்கு என்ன சார் ஆயிற்று?'' என்று விவரம் கேட்க ஆரம்பித்து விட்டார்.

நான் சொன்னேன், ''செய்தி பரவியதும் தமிழக முழுவதும் வழக்கறிஞர்கள் அறவழியில் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அன்றிருந்த அ.தி.மு.க. ஆட்சியில் யாரோ சிலரைக் குற்றவாளி களாகக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். உண்மையான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டாக வேண்டுமென வழக் கறிஞர்கள் உயர் நீதிமன்றத்தில் ''ரிட்'' வழக்கு தொடர்ந்ததை யொட்டி, உயர் நீதிமன்றம் சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தர விட்டது. அதை அன்றைய அ.தி.மு.க. அரசு எதிர்த்து, உச்ச நீதிமன்றம் சென்றது. உச்ச நீதிமன்றம் அன்றைய தமிழக அரசின் கோரிக்கையை ஏற்காமல், சி.பி.ஐ. விசாரணையை நடத்துமாறு தீர்ப்பு வழங்கியது. சி.பி.ஐ. விசாரணை நடவடிக்கையைத் தொடர்ந்து, உண்மைக் குற்றவாளிகள் கூண்டில் ஏற்றப்பட்டனர். அந்த வழக்கு நடைபெற்று - அதற்குள் ஆட்சி மாற்றமும் ஏற்பட்டு -சண்முகசுந்தரத்தைக்

கொலை செய்யத் தூண்டி விடப்பட்டு - அதில் ஆறு பேர் ஈடுபட்டதாகக் கூறி - அந்த ஆறு பேருக்கும் ஆயுள் தண்டனை விதித்துத் "தீர்ப்பளிக்கப்பட்டது!" என்று விவரம் தெரிவித்தேன்.



சைதாப்பேட்டை, வாணியம்பாடி,
அச்சரப்பாக்கம் இடைத் தேர்தல்களில்,
அராஜகத்தை நம்பியே
போட்டியிட்டது, அ.தி.மு.க.

அறிவித்தவாறு, கழக வேட்பாளராக வழக்கறிஞர் சண்முக சுந்தரம் வேட்பு மனு, என்னாலும், பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்களாலும் முன்மொழியப்பட்டு, தாக்கல் செய்யப்பட்டது. அந்தத் தேர்தலில் போட்டி இல்லாமலேயே சண்முகசுந்தரம் மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

★ ★ ★

தமிழகத்தில் சைதை, வாணியம்பாடி, அச்சிறுப்பாக்கம்- ஆகிய மூன்று சட்டப் பேரவைத் தொகுதிகளில், 31-5-2002 அன்று இடைத் தேர்தல்கள் நடைபெறுமென்று தேர்தல் ஆணையம் அறிவித்தது. இடைத் தேர்தலில் தி.மு.க., அ.தி.மு.க., அணிகளை எதிர்த்து, மதச் சார்பற்ற கட்சிகள் ஒருங்கிணைந்து போட்டியிடவுள்ளதாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளராக இருந்த **ஆர். நல்லகண்ணு** அவர்களும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்த **ஈ.வி.கே.எஸ். இளங்கோவன்** அவர்களும் கூட்டாகச் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

இடைத்தேர்தல் எப்படி நடைபெற்றது என்பதற்கு ஒரேயொரு உதாரணம் - 2001 மே மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது, சைதைத் தொகுதியின் மொத்த வாக்காளர் எண்ணிக்கை 2 லட்சத்து 79 ஆயிரத்து 263. இடைத் தேர்தலுக்காக வாக்காளர் சரி பார்க்கும் பணி நடைபெற்று, மூன்று மாதங்களுக்குப் பிறகு, தமிழகத் தேர்தல் ஆணையம், 2002 ஏப்ரல் 22ஆம் தேதி வெளியிட்ட வாக்காளர்

பட்டியல்படி, மொத்த வாக்காளர் எண்ணிக்கை 2 லட்சத்து 49 ஆயிரத்து 8 பேர். அதாவது 30 ஆயிரத்து 255 வாக்காளர்களின் பெயர்கள்- அதாவது கழகத்திற்கு யார் யார் வாக்களிக்கக் கூடும் என்று எதிர்பார்த்து, அந்தப் பெயர்கள் பழைய பட்டியலிலிருந்து நீக்கப்பட்டிருந்தன.

இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகு, சைதாப்பேட்டை தொகுதியில் 11 உதவிப் பொறியாளர்கள், வாணியம்பாடி தொகுதியில் நான்கு ஊராட்சி ஆணையர்கள் மாற்றப் பட்டார்கள். அதுவும் இடைத் தேர்தல் அறிவிப்புக்குப் பிறகு, முன்தேதியிட்டு அந்த மாற்றல் உத்தரவுகள் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டன.

அதிகாரிகள் இவ்வாறு மாற்றம் செய்யப்பட்டது குறித்து பேரவையில் 23-4-2002 அன்று கழக உறுப்பினர்கள் **பொன்முடி, பரிதி இளம்வழுதி, எ.வ. வேலு, இள. புகழேந்தி** ஆகியோர் தாங்கள் கொடுத்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள அனுமதி கோரி, அது மறுக்கப்பட்டதால், தரையில் அமர்ந்து தர்ணா செய்தார்கள்.

தி.மு.க., அ.தி.மு.க., உறுப்பினர்களுக்கிடையே கடுமையான வாக்குவாதம் எழுந்த நிலையில், முதலமைச்சர் ஜெயலலிதா எழுந்து, ''பொன்முடியும், பரிதி இளம்வழுதியும் அமங்கல மான- இழிவான-நா கூசக்கூடிய வார்த்தைகளை பேசியதால் அவர்களைக் கூட்டத் தொடர் முழுவதும் நீக்க வேண்டும்!'' என்று கூற, அதையேற்று பேரவைத் தலைவர் அவ்வாறே உத்தரவிட்டு, அவர்களை வெளியேற்றினார்.

சைதாப்பேட்டை, வாணியம்பாடியில் அதிகாரிகளை இடமாற்றம் செய்ததுபற்றி தி.மு.க. மக்களவை உறுப்பினர் செ.குப்புசாமி தேர்தல் ஆணையத்திடம் அளித்த புகாரினை யொட்டி, தமிழக அரசு பிறப்பித்த மாறுதல் உத்தரவுகளுக்கு தேர்தல் ஆணையம் தடை விதித்தது.

அந்த இடைத் தேர்தலில் வாணியம்பாடி தொகுதியில் கழக வேட்பாளராக இசைமுரசு **இ.எம். அனிபா** அவர்களையும், மற்றும் சைதாப்பேட்டை தொகுதியில் **மா.சுப்பிரமணியன்**

அவர்களையும் அறிவித்தோம். அச்சரப்பாக்கம் தொகுதியில், பா.ம.க.வுக்கு தி.மு.க. ஆதரவளிக்கும் என்றும் முடிவு செய்யப்பட்டு, பா.ம.க. வேட்பாளராக **த. பார்வேந்தன்** போட்டியிட்டார்.

10-5-2002 அன்று காலையில், பா.ம.க. நிறுவனர் டாக்டர் **ராமதாஸ்** அவர்களும், அந்தக் கட்சியின் சட்டமன்றத் தலைவராக இருந்த **ஜி.கே. மணி** அவர்களும் என்னை வந்து சந்தித்து, சுமார் ஒரு மணி நேரத்திற்குமேல் பேசிக் கொண்டிருந்தனர்.

★ ★ ★

மே திங்கள் 21 மற்றும் 22 ஆகிய நாட்களில் வாணியம்பாடி தொகுதியிலும், 25ஆம் தேதி அச்சரப்பாக்கம் தொகுதியிலும், 28 மற்றும் 29 ஆகிய நாட்களில் சைதாப்பேட்டை தொகுதியிலும் இடைத் தேர்தல் சுற்றுப் பயணத்தை நான் மேற்கொள்வதென முடிவெடுத்து, அவ்வாறே கலந்து கொண்டேன்.

24-5-2012 அன்று செய்தியாளர்களை யெல்லாம் அழைத்து, வாக்காளர் பட்டியலில் எப்படிப்பட்ட தவறுகள் எல்லாம் நடைபெற்றுள்ளன என்பதை எல்லாம் ஆதாரங்களோடு விளக்கினேன்.

31-5-2002 அன்று வாக்குப் பதிவு நடைபெற்றது. 1-6-2002 தேதிய ''தினமணி'' முதல் பக்கத்தில் வாக்குப் பதிவு பற்றிய செய்தியை வெளியிடும் போது, கொட்டை எழுத்துக்களில் **''கரைபுரண்டது கள்ளவாக்கு''** என்றும் - **சைதாப் பேட்டையில் கைப்பற்றப்பட்டன வாக்குச் சாவடிகள்''** என்றும் - பெரிய தலைப்பிட்டுப் புகைப்படத்தோடு செய்திகளை வெளியிட்டிருந்தன.

அந்தப் புகைப்படத்தில் ஏராளமான வாக்காளர்கள் தங்கள் கைகளில் புகைப்பட அடையாள அட்டை இருந்தும், பட்டியலிலே பெயர் இல்லாததால் வாக்களிக்க முடியவில்லை என்று புகார் செய்கின்ற காட்சியாகும்.


அந்தச் செய்தியில், "தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களை மிரட்டி வெளியேற்றிவிட்டு, ஆயிரக் கணக்கில் கள்ள வாக்குகளை அ.தி.மு.க.வினர் அளித்தனர். வடசென்னை பகுதியில் இருந்தும், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் குவிக்கப்பட்ட அ.தி.மு.க. தொண்டர்கள், கும்பல் கும்பலாகச் சென்று நிதானமாக வாக்குகளைப் போட்டனர். அவர்களுக்கு வசதியாக வாக்குச் சாவடிகளின் அருகேயே காரில் இருந்துகொண்டு தாசில்தார் களின் சாதி, இருப்பிடச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

"நந்தனம் கல்லூரி வாக்குச் சாவடியில் எவ்வித சான்றிதழும் காண்பிக்கப்படாமல்கூட வாக்களிக்க அனுமதிக்கப் பட்டனர். சில இடங்களில் புத்தம் புதிய ரேஷன் கார்டு களுடனும் வாக்களிக்க வந்தனர். துப்பாக்கி ஏந்திய போலீசார் தங்களுக்கும் தேர்தலுக்கும் தொடர்பில்லை என்பது போல ஒதுங்கிக் கொண்டனர்" என்று எழுதியிருந்தார்கள் என்றால், அந்த இடைத் தேர்தல்கள் எப்படி நடை பெற்றன என்பதை சுலபமாக உணர்ந்து கொள்ளலாம்.

சைதைத் தொகுதிக்கு உள்பட்ட கோட்டூர்புரம் டி.டி.டி.ஐ. பள்ளி வாக்குச் சாவடியைப் பார்வையிடச் சென்றபோது, முன்னாள் அமைச்சர் தம்பி பொன்முடி அ.தி.மு.க.வினரால் கடுமையாகத் தாக்கப்பட்டார். நான் விடுத்த அறிக்கையில்-

"ஜனநாயகக் கொலை நடந்துள்ளது! எனவே தேர்தல் நாளைத் துக்க தினமாகக் கருதுவதால், ஜூன் 3ஆம்தேதியன்று பிறந்த நாள் கொண்டாடவில்லை. என் பிறந்த நாள் என்பதற்காக, யாரும் என்னைச் சந்திக்க வர வேண்டாம். ஜூன் 2 அன்று அண்ணா அறிவாலயத்தில் அறிவிக்கப்பட்டப் புத்தக வெளியீட்டு விழா மட்டுமே நடைபெறும். பிறந்த நாளை முன்னிட்டு, ஜூன் 1 முதல் பல்வேறு அணிகள் சார்பில் நடைபெற விருந்த நிகழ்ச்சிகளும் ரத்து செய்யப்படும்" என்று தெரிவித்தேன்.

செய்தியாளர் களைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, பூம்புகார் தொகுதி முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர், **சித்திக்** அங்கே ஓடி வந்து, தான் 139வது



என்னைச் சந்தித்த நிருபர்களிடம், "இடைத் தேர்தல்கள் நேர்மையாக நடக்கவில்லை. அ.தி.மு.க. வினரின் சதி-மோசடி - வஞ்சகம்- இவற்றால், அவர்கள் பெற்றது வெற்றியுமல்ல - எங்களுக்குக் கிடைத்தது தோல்வியுமல்ல!" என்றேன்.

வட்டத்திலே பணியாற்றிக் கொண்டிருந்ததாகவும், அப்போது ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் உள்ளே புகுந்து - கலாட்டா செய்து - அவரை விரட்டி விட்டதாகவும், கத்தியைக் காட்டி தாக்க முற்பட்டார்கள் என்றும் கூறினார்.

சைதைத் தொகுதி முழுமைக்கும் மறு வாக்குப் பதிவு தேவை என்று தேர்தல் ஆணையாளருக்கு ஆதாரங்களை யெல்லாம் இணைத்துக் கடிதம் எழுதினேன். சைதைத் தொகுதியில் மறு வாக்குப் பதிவு கோரி, தலைமை தேர்தல் கமிஷனுக்கு கோரிக்கை வைத்து டெல்லியில் தி.மு.க., மற்றும் பா.ம.க., நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் உண்ணாவிரதம் இருந்தனர்.

தமிழகத்திலே உள்ள அனைத்து எதிர்க்கட்சிகளும், தேர்தல் ஆணையத்திடம் சைதைத் தொகுதியில் மறு தேர்தல் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்ட போதிலும், 58 வாக்குச்சாவடிகளில் மட்டும் மறுவாக்குப் பதிவு என்று தேர்தல் ஆணையம் அறிவித்தது. "அது வெறும் கண் துடைப்பு நடவடிக்கை - அதில் எங்களுக்கு திருப்தியில்லை" என்று நான் செய்தியாளர்கள் அதைப்பற்றி கேட்டபோது கூறினேன்.

இடைத்தேர்தல் நடந்த மூன்று தொகுதிகளிலும், எதிர்பார்த்தவாறே ஆளும் கட்சியான அ.தி.மு.க. வெற்றி பெற்றது. அதைப்பற்றி என்னிடம் கருத்து கேட்டபோது, "**இது தி.மு.க.வுக்குத் தோல்வியும் அல்ல - அ.திமு.க.வுக்கு வெற்றியும் அல்ல**" என்று கூறினேன்.


★ ★ ★

24. சேது சமுத்திரத் திட்டம் ஏன்?

ஜம்மு பகுதியில், ''காலுசக்'' என்ற இடத்தில், பயங்கர வாதிகள் 2002ஆம் ஆண்டு, மே திங்கள் மத்தியில் , நடத்திய திடீர்த் தாக்குதலில் பல கிராமங்கள் தீப்பற்றி எரிந்தன. அதில், மாண்டு மடிந்தோர் 40 பேர். அவர்களில் சின்னஞ்சிறு குழந்தைகளும் உண்டு. சிகிச்சை பெற்றோர் 47 பேர்.

சம்பவம் நடந்தவுடன், மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சராக இருந்த நண்பர் **ஜார்ஜ் பெர்னாண்டஸ்** அந்தப் பகுதிக்குச் சென்று, உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நேரில் ஆறுதலைக் கூறியும், காயம்பட்டோருக்குத் தைரியம் உரைத்தும் திரும்பினார்.

காங்கிரஸ் கட்சியின் தலைவர் திருமதி சோனியா அவர்களும், அந்தப் பகுதிக்கு விரைந்தது மட்டுமல்லாமல், அத்தகைய பயங்கரவாதச் செயல்களை எதிர்த்து வீழ்த்திட, மத்திய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசுக்கு ஒத்துழைப்பு தருவோம் என்றும் கூறினார்.



இந்த மிகக் கொடுமையான நிகழ்ச்சிக்கும், கொத்தாக சுமார் 40 உயிர்கள் போக்கப் பட்டுள்ளதற்கும், ஜம்மு பகுதியில் பாதுகாப்புக் குறை பாடுதான் காரணம் என்று பாகிஸ்தான் கூறியது. அப்போது காஷ்மீர் மாநில முதல்வராக இருந்த நண்பர் பரூக் அப்துல்லா

அவர்கள் பாகிஸ்தான் கூறியதை மறுத்ததோடு, அந்தக் கொடூரமான படுகொலைகளுக்குப் பாகிஸ்தானே காரணம் என்று சுட்டிக் காட்டினார்.

பிரதமர் வாஜ்பாய் அவர்கள் ''தீவிரவாதிகளின் அந்தக் கொடுஞ் செயலுக்கு தக்கப் பதிலடி கொடுப்போம்'' என்றார்.

''இந்திய எல்லைக்குள் புகுந்து தீவிரவாத வன்முறைச் சேட்டைகளில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் ஈடுபடாமல் இருக்க - அமெரிக்கா, பாகிஸ்தான் அரசுக்கு வாய்மையுடன் எச்சரிக்கை விடுக்க வேண்டும். அஃதில்லாமல்; ஆழ்ந்த வருத்தம் - அதிர்ச்சி - இந்த வார்த்தைகளால் நம்மை அமைதிப் படுத்தலாம் என எண்ணினால்; இந்திய நாடு; இமயம் முதல் குமரிவரையில் உள்ள மக்களை ஒரே அணியில் திரட்டுவதன் மூலம் தனது வலிமையை நிலைநாட்டிக் காட்டி, வன்முறைப் பயங்கரவாதத்தைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கும் நாடு எதுவாயினும் அதற்குப் பாடம் புகட்டத் தாமதிக்கக் கூடாது-'' என்று நானும் கேட்டுக் கொண்டேன்.

★ ★ ★

24-3-2002 அன்று கழகத்தின் பொதுக்குழு சென்னையில் அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் என்னுடைய தலைமையில் நடைபெற்றது. 19 தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.



ஜெயலலிதா அரசு, சோதனை என்கிற பெயரில் கழகத்தினர் இல்லங்களில், அதிகாரிகள் புகுந்து அராஜகம் செய்வதையும், பொய் வழக்குகள் போடுவதையும் வன்மையாகக் கண்டித்து - அந்தப் பொதுக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.




பா.ஜ.க.வோடு தி.மு.கழகம் தோழமை கொண்டு மத்திய அரசில் அங்கம் வகித்த நிலையில், தமிழகத்திலே உள்ள ஒரு சில பா.ஜ.க. தலைவர்கள் அப்போது கூட்டணியைக் குலைக்கும் வகையில் தங்கள் பேச்சுக்களை அமைத்துக் கொண்டார்கள்.

அதுபற்றிச் செய்தியாளர்கள் என்னிடம் பொதுக்குழு முடிந்தவுடன் கேட்டபோது, மத்தியில் பா.ஜ.க. தலைமையோடு உறவு காட்டுவோம் என்றும், தமிழக பா.ஜ.க.வுடன் நட்பாக இருப்போம் என்றும் கூறினேன். ஏற்கனவே பா.ஜ.க.வோடு தேர்தல் உடன்பாடு கண்டபோதே, ''குறைந்த பட்சத் திட்டம்'' ஒன்று வகுக்கப்பட்டு, அந்த அணியில் மதச் சார்புக்கு இடம் இல்லை என்ற உறுதி மேற்கொள்ளப்பட்டதை நான் அடிக்கடி சுட்டிக் காட்டியதைப்போலவே, இந்தப் பிரச்சினையிலும் அப்போது சுட்டிக் காட்டினேன்.

★ ★ ★

கழகத்தின் தொடக்கக் காலத்தில் நன்னிலம் வட்டச் செயலாளராகப் பொறுப்பேற்று, தஞ்சை மாவட்டத்தில் கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் ஒருவர்தான் **நன்னிலம் நடராசன்.** சிரிப்பு மழை பொழியக்கூடிய பேச்சாளர்களில் ஒருவர். அவருடைய கால்கள் படாத கிராமங்களே தமிழகத்திலே இருக்க முடியாது. அந்த அளவிற்கு கழகத்தின் பேச்சாளர்களில் ஒருவராக விளங்கியவர். கழகக் கொள்கைப் பரப்பு இணைச் செயலாளர்.

அவர் *12-3-2002* அன்று மறைந்து விட்ட செய்தியினை அவருடைய மருமகனும், கழகத்தின் செயல் வீரர்களில்



ஜார்ஜ் பெர்னாண்டஸ்

ஒருவருமான தஞ்சை ஜெயபால் எனக்குத் தெரிவித்தபோது, நான் அதிர்ந்து போனேன்.

ஏனென்றால், அதற்கு முந்திய வாரம்தான் நன்னிலம் நடராசன் என்னைச் சந்தித்து, தனது உடல் நலம் சரியாக இல்லை என்று கூறிய போது, உடனடியாக அவரைச் சென்னை பொது மருத்துவமனைக்கு அனுப்பி, அங்கே அனுமதிக்கச் செய்து, சிகிச்சை அளிக்கச் சொல்லி யிருந்தேன். ஆனால், அவர் எனக்குத் தெரியாமலேயே மருத்துவமனையிலிருந்து தன்னிச்சையாக ஊருக்குச் சென்றுவிட்டார் என்ற செய்தியினை அறிந்து, ஊருக்கே தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அவரை மருத்துவமனையிலே சிகிச்சை பெறுமாறு வலியுறுத்தினேன்.

''நன்னிலம்'' என்றாலே நன்னிலம் நடராசன் என்ற அளவிற்குப் பெருமை சேர்த்த அந்தக் கொள்கைத் தங்கம் மறைந்து விட்டார். தலைமைக் கழகத்தின் சார்பில், நன்னிலம் நடராசன் குடும்ப நிதியாக ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அன்றே அறிவித்து, அது உடனடியாக வழங்கப்பட்டது. கோ.சி. மணி தலைமையில், கழக முன்னணி யினர் எல்லாம் கலந்துகொண்டு, அவருடைய இறுதி ஊர்வலம் நடைபெற்றது.

''நன்னிலம் நடராசனுக்கு கழகம் அளித்தது நிதியல்ல - கழகம் செலுத்தும் காணிக்கை'' என்று அதைப்பற்றி வெண்ணிப்பறந்தலை **ராஜேந்திரன்** என்பவர் எனக்குத் தெரிவித்து, அதற்கு ஒரு காரணமும் அப்போது எழுதியிருந் தார். ஒருமுறை ஜெயங்கொண்டத்தினிலே நன்னிலம் நடராசன் விடியற்காலை 3 மணி அளவில் கைது செய்யப்பட்டு, அந்தச் செய்தி உடனடியாக எனக்கு அந்நேரத்தில் தெரிவிக்கப்



சோனியா காந்தி

பட்டது என்றும், அப்போது முரசொலி அந்த நேரம்வரை, 5000 பிரதிகள் அச்சடிக்கப்பட்டு விட்ட போதிலும், அதை ஒதுக்கி வைத்துவிட்டு, நன்னிலம் நடராசன் கைதான செய்தியைச் சேர்த்துப் புதிதாக அச்சடிக்கச் சொன்னதாகவும், அப்படிப் பட்ட நடராசனுக்கு கழகம் கொடுத்த காணிக்கைதான் அந்தத் தொகை - என்றும் எழுதியிருந்தார்.


★ ★ ★

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழாவில் பேசிய முதலமைச்சர் ஜெயலலிதா, தனது ஆட்சிக் காலத்தில்தான் அப்பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டதாகக் கூறினார்.

அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத் தொடக்க விழா, தி.மு. கழக ஆட்சிக் காலத்தில், 1997ஆம் ஆண்டு, செப்டம்பர் 20ஆம் தேதி சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடை பெற்றது. குடியரசுத் தலைவராக இருந்த திரு. **கே.ஆர். நாராயணன்** அவர்கள்தான் பல்கலைக் கழகத்தைத் தொடங்கி வைத்து உரையாற்றினார். அன்றைய ஆளுநர் **பாத்திமா பீவி** தலைமை வகித்தார். நான் பல்கலைக் கழகத்துக்கான அடிக்கல்லை நாட்டிப் பேசினேன்.

அப்போது, ‘‘தமிழகத்தில் உள்ள எல்லா சட்டக் கல்லூரி களும் ஒரே பல்கலைக் கழகத்தின்கீழ் இயங்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தியாவிலேயே முதல் முயற்சியாக அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தைத் தொடங்கி யிருக்கிறோம். அம்பேத்கருடைய பெயரை இன்றைக்குத்தான் சட்டப் பல்கலைக் கழகத்துக்கு வைத்தோம் என்று இல்லை. 1990ஆம் ஆண்டு, அம்பேத்கர் நூற்றாண்டு விழா நடைபெற்ற

அந்தக் கால கட்டத்திலேயே சென்னை சட்டக் கல்லூரிக்கு அம்பேத்கர் சட்டக் கல்லூரி என்ற பெயரைச் சூட்டினோம்'' என்று பேசினேன்.



பருக் அப்துல்லா

அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தைத் தொடங்கி வைத்த குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன் அவர்கள் பேசும் போது, ''தமிழகத்தில்தான் சமூகப் புரட்சிக்கான முதல் குரல் கொடுக்கப்பட்டது. சமூகப் புரட்சியின் பாரம்பரியத்தை நடைமுறை அரசியலிலும், அமைப்பு மற்றும் நிர்வாகத் துறைகளிலும்கூடக் கடைப் பிடித்து வருகிறார் கருணாநிதி. அவரும், அவருடைய சகாக்களும், தமிழ்நாடு அரசும் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தைத் தொடங்குவது என்ற தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய முயற்சியை எடுத்ததற்காகப் பாராட்டுகிறேன்'' என்று குறிப்பிட்டார்.

''இவைகளை எல்லாம் மறைத்துவிட்டு ஜெயலலிதா, அவரது ஆட்சிக் காலத்தில்தான் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டது என்று கூறுவது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கும் காரியமல்ல - பூசணிக்காய் தோட்டத்தையே சோற்றிலே மறைக்க முயலும் காரியம்!'' என்று நான் அப்போது பதிலளித்தேன்.

★ ★ ★

அம்பேத்கர் பல்கலைக் கழகம்பற்றி உண்மைக்கு மாறாகப் பேசியதைப் போலவே, 25-4-2002 அன்று, காவல் துறை மானியக் கோரிக்கைமீது பேசிய முதல்வர் ஜெயலலிதா, சென்னை ஓய்.எம்.சி.ஏ., உடற்பயிற்சிக் கல்லூரிக்கு அருகே உள்ள கோல்ஃப் மைதானத்தைக் குத்தகைக்கு விடுவதில், முரசொலி மாறனின் பினாமியான இந்தியா சிமெண்ட் நிர்வாக இயக்குநர் சீனிவாசனுக்கு சாதகமாக நான் நடந்து

கொண்டேன்- என்று குறிப்பிட்டவுடன், கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து எதிர்ப்புத் தெரிவித்தனர்.

எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்த துரைமுருகன், ''மாறனின் பினாமி - என்ற வார்த்தைகளை நீக்க வேண்டும்'' என்றார். உடனே முதல்வர் அவருக்கே உரிய பண்போடு, ''மாறனுக்கு சீனிவாசன் பினாமி இல்லையென்றால், கருணாநிதிக்குப் பினாமி என்று துரைமுருகன் சொல்கிறாரா?'' என்று கேட்டார்.

மத்திய அமைச்சராக இருந்த தம்பி முரசொலி மாறனைப் பற்றி தமிழக முதல்வர் ஜெயலலிதா பேரவையில் சாட்டிய குற்றச்சாட்டிற்கு முரசொலி மாறன் அளித்த பதில் அறிக்கையில்-

''எனக்கு ஒரு பினாமி இருப்பதாக முதல்வர் ஜெயலலிதா கூறியிருப்பது முற்றிலும் அடிப்படையற்றது மட்டுமல்ல - அணுவளவும் உண்மை கலவாத அபத்தமான கற்பனையாகும். ''தான் திருடி, பிறரை நம்பாள்'' என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு. அந்தப் பழமொழிதான் என் நினைவுக்கு வருகிறது. எனக்கு பினாமி உறவுப் பழக்கமும் எந்தவித செயற்கை உறவுப் பழக்கமும் கிடையாது. மனநோய்ப் பிரச்சினைகளில் இருந்து முற்றிலும் விடுபடாதவர்களால் மட்டுமே இத்தகைய அடிப்படையற்ற அதீதக் கற்பனைகளை நினைக்கவும் சொல்லவும் முடியும். பொதுவாக இன்றைய தமிழ்நாடு அரசியல் நிலைபற்றிக் கூறவேண்டுமெனில், அது மிகவும் அழுக்காகவும், கேவலமானதாகவும் ஆகிவிட்ட நிலையை நடுநிலையாளர்களே உணர்வார்கள். எனக்கு அத்தகைய பினாமி இருப்பதாக நிரூபணமானால், நான் பொது வாழ்வை விட்டே விலகிடத் தயாராக இருக்கிறேன். முதல்வர் ஜெயலலிதா தயாரா எனக் கேட்க விரும்புகிறேன். தமிழக ஆக்கப் பணிகளிலும், மக்கள் நல்வாழ்வுப் பணிகளிலும் இனிமேலாவது பொறுப்பில் இருப்பவர்கள் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும். மன நோயாளியைப் போலப் பிதற்றாமல் இருப்பதே நல்லது'' என்றார்.



24.3.2002 அன்று நடைபெற்ற தி.மு.கழகப் பொதுக் குழுவில், அ.தி.மு.க. அரசு சோதனை என்ற பெயரில் - நமது கழகத்தினரின் இல்லங்களில் புகுந்து அராஜகம் செய்வதையும் -பொய் வழக்குகள் போடுவதையும் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

காஸ்மோபாலிட்டன் கிளப்பின் முன்னாள் தலைவரும், மூத்த வழக்கறிஞருமான **ஆர். காந்தி** அவர்கள் 3-5-2002 அன்று அளித்த பேட்டியில், ''கோல்ப் மைதானத்தைக் குத்தகைக்கு விட்டதில் கலைஞர்மீது வழக்கு தொடர முடியாது, கலைஞர் எந்த லாபமும் பெறவில்லை - எந்த உள்நோக்கமும் இல்லை'' என்று விளக்கினார்.

முதலமைச்சர் ஜெயலலிதா பேரவையிலேயே எப்படிப் பட்ட பொய்களையெல்லாம் பேசி - பதிவு செய்திருக்கிறார் என்பதற்கு இது மற்றுமொரு உதாரணமாகும்.

★ ★ ★

அது மாத்திரமல்ல - அவருடைய சொல்லடியும், வல்லடியும் அரசியல் கட்சித் தலைவர்களை மட்டுமல்ல - அரசாங்க அலுவலர்களையும் தாக்கியது.

அரசாங்க அலுவலர்கள் என்றாலே ஜெயலலிதாவுக்கு வேப்பங்காய்தான். அரசு அலுவலர்களுக்கு எதிராக அ.தி.மு.க. ஆட்சியிலே எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்காகத் தனியாகவே ஒரு அத்தியாயம் எழுதலாம். 2002ஆம் ஆண்டில், மே திங்களில்



நன்னிலம் நடராசன்

ஒருநாள், பேரவையில் முதலமைச்சர் ஜெயலலிதா பேசியதைப் பற்றி நாளேடுகளில் எப்படி எழுதியிருந் தார்கள் என்பதைப் பார்த்தாலே, அம்மையாருக்கு அரசு அலுவலர் களிடம் உள்ள அன்பினைத் தெரிந்து கொள்ள முடியும்.

''சர்க்கஸ் ரிங்மாஸ்டர்போல் சாட்டையால் அடித்து அடித்து அவர்களுக்குப் பணி ஆர்வத்தை நான் ஊக்குவித்து வருகிறேன் - அதிகாரிகளுக்குப் பணி ஆர்வம் செத்து விட்டது - வேலை செய்யும் பழக்கமே இல்லாமல் இருக்கின்றனர்'' என்று **''தினமலர்''** ஏடும் -

''சர்க்கஸ் ரிங்மாஸ்டர்போல சாட்டையால் அடித்து அதிகாரி களை வேலை வாங்குகிறேன்'' என்று **''தினமணி''** ஏடும் -

''அதிகாரிகளை ரிங்மாஸ்டர் போல வேலை வாங்கி வருகிறேன்'' என்று **''தினத்தந்தி''** ஏடும் -

"I have to act like a ring master - says Jayalalitha" என்று ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' ஏடும் -

"Bureaucrats lackadaisical : C.M." என்று **''இந்து''** ஏடும் தலைப் பிட்டு அம்மையாரின் அபத்தப் பேச்சினை வெளியிட் டிருந்தன. எடுத்தேன் கவிழ்த்தேன் என்று ஜெயலலிதா பேசியதற்கு இந்த ஏடுகளே சாட்சி!

அரசு அதிகாரிகளை - எந்த அரசு அமைந்தாலும் பணியாற்ற வேண்டிய நிலையில் உள்ளவர்களை - ஆட்சிக்கு வருவோர் நினைத்தவாறு ஏசிடக் கூடாது. "Men may come; Men may go; I will go on for ever" என்ற ஆங்கிலக் கவிஞன் **டென்னிசனின்** வார்த்தைகளின் அடிப்படையில் நாம் பார்த்தால், ''அரசியல் வாதிகள் ஆட்சிப் பொறுப்புக்கு வருவார்கள் - போவார்கள். ஆனால் அரசு அதிகாரிகள் என்போர் நிரந்தரமானவர்கள்'' என்று அண்ணா அவர்களே சொல்லியிருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட அரசு அதிகாரிகளைத் தான் முதலமைச்சர் ஜெயலலிதா பேரவையில் இவ்வாறு பேசினார். நீதிபதிகளைப் பற்றி பேரவையில் முதல் நாள் தன் விருப்பப்படி ஏசுவார் - மறுநாளே அதே பேரவையில் ''நான் நேற்றுவாய் தவறிப் பேசிவிட்டேன் - திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்!'' என்று சொல்வார். ஆனால் அரசு அதிகாரிகளைப்பற்றி பேசியதை ஜெயலலிதா திரும்பப் பெறவே இல்லை.



டாக்டர் அம்பேத்கர்

மேலும், அவருடைய அ.தி.மு.க. ஆட்சியையே பழிக்கக் கூடிய வகையில், அவர் உச்ச நீதிமன்ற உத்தரவின் காரணமாக, முதலமைச்சர் பதவியில் இல்லாத அந்த ஐந்து மாத கால இடைவெளியில், அதிகாரிகளிடம் ஆர்வம் சரிந்துவிட்ட தாகவும், அந்த நேரத்தில் அதிகாரிகள் அலுவலகங்களுக்குக் காலை 11.30 மணிக்குத்தான் வந்தார்கள் என்றும் கூறினார்.

அந்த ஐந்து மாத காலத்தில், அதிகாரிகளிடம் தொய்வு என்றால் அதற்கு யார் பொறுப்பு? அவருடைய கட்சியைச் சேர்ந்தவரான பன்னீர்ச்செல்வம்தானே முதலமைச்சராக இருந்தார்? தன்னைத் தூக்கி வைத்துக் கொள்வதற்காக, அவரையே கிண்டல் செய்கின்ற அளவிற்குப் பழி சுமத்தினார், முதலமைச்சர். பேரவையில் இவ்வாறு ஐ.ஏ.எஸ்., அதிகாரி களைப்பற்றி எல்லாம் தரக்குறைவாகப் பேசியதுபற்றி வருந்திய ஒரு சில அதிகாரிகள் தலைமைச் செயலாளரிடம் முறை யிட்டார்கள் என்று ''இந்து'' இதழிலேயே அப்போது செய்தி வந்தது.

★ ★ ★

2002ஆம் ஆண்டில் ஏப்ரல் திங்கள் இறுதி நாளன்று, பேரவையில் பொதுப்பணித்துறை மான்யக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்தத் துறைக்குப் பொறுப்பேற்றிருந்த அமைச்சர் பன்னீர்ச்செல்வம் தனது பதில்



பாத்திமா பீவி

உரையில் ‘‘காவிரிப் பிரச்சினையில் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி பெரும் துரோகம் செய்துவிட்டார்’’ என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார்.

★ ★ ★

அந்த நேரத்தில் எதிர்க் கட்சித் துணைத் தலைவராக இருந்த தம்பி துரைமுருகன் எழுந்து பதில் கூற முற்பட்டார். ‘‘காவிரிப் பிரச்சினையின் ஒவ்வொரு அங்குல வளர்ச்சிக்காகவும் பாடுபட்டவர் கலைஞர்’’ என்று சொல்லி, அதற்கான விளக்கங்களை அளித்தார்.


★ ★ ★

23-5-2002 அன்று ‘‘தினகரன்’’ நாளிதழின் வெள்ளி விழா நிகழ்ச்சி தேனாம்பேட்டை, காமராஜர் அரங்கில் நடை பெற்றது. நான் தலைமை தாங்கினேன்.

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், பா.ஜ.க. சார்பில் எஸ். திருநாவுக்கரசர் எம்.பி., இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஆர். நல்லகண்ணு, த.மா.கா. சார்பில் சோ. பாலகிருஷ்ணன், மார்க்சிஸ்ட் சார்பில் டி.கே. ரெங்கராஜன், மற்றும் பேராயர் எஸ்றா சற்குணம், திருப்பூர் அல்தாப் ஆகியோர் உரையாற்றினர். தினகரன் நிர்வாக ஆசிரியர் தம்பி க. குமரன் வரவேற்புரையாற்றினார். ஆசிரியர் து. பால்ராஜ் நன்றி தெரிவித்தார்.

அந்த விழா நடப்பதற்கு 25 ஆண்டுகளுக்கு முன்பு, 1977ஆம் ஆண்டு நெருக்கடி நிலை ஓய்ந்த காலக் கட்டத்தில், நான் தொடங்கி வைத்த நாளிதழ் தினகரன்! அதன் வெள்ளி விழாவினை நடத்திக் கொண்ட நேரத்தில் அதிலும் நான் பங்கேற்றிருப்பதைப்பற்றி அங்கே குறிப்பிட்டேன்.

★ ★ ★



கே.ஆர்.நாராயணன்

8-5-2002 அன்று இந்தியப் பிரதமர் அவர்களுக்கு ஒரு நீண்டக் கடிதம் எழுதினேன். அந்தக் கடிதம் இந்தத் தொடரிலும் இடம் பெறலாம் என்று எண்ணுகிறேன். ஏனென்றால், அது தமிழ் மக்களின் பிரச்சினை. இன்றளவும் முழுமையாக நிறை வேறாமல் இருக்கின்ற பிரச்சினை. பிரதமருக்கு நான் எழுதிய அந்தக் கடிதம் வருமாறு :-

"அன்புள்ள பிரதமர் அவர்களுக்கு, வணக்கம்.

"தமிழகத்தின் நீண்ட நாள் கோரிக்கையான சேது சமுத்திரத் திட்டத்தை உடனே நிறைவேற்றக் கோரி இக்கடிதம் தங்களுக்கு எழுதுகின்றேன். இத்திட்டத்தினை நிறைவேற்றிட வேண்டு மென்று, திராவிட முன்னேற்றக் கழகம் கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுக் காலமாக வலியுறுத்தி வருகிறது. நான் பல சமயங்களில், பொறுப்பில் இருந்த பல பிரதமர்களிடம் இதைக் குறித்து வலியுறுத்தி உள்ளேன்.

"23-7-1967இல் சேது சமுத்திரத்தின் ஒரு பிரிவாக உள்ள தூத்துக்குடி துறைமுகத் திட்டம், சேலம் இரும்பாலைத் திட்டம் ஆகிய திட்டங்களை நிறைவேற்றக் கோரி, முதல்வர் அறிஞர் **அண்ணா** அவர்கள் எழுச்சி நாளை அறிவித்தார். அத்திட்டம் உலகளவில் உள்ள சூயஸ் கால்வாய், பனாமா கால்வாய் போன்று சிறப்பைப் பெறும் என்பதை அறிந்து அத்திட்டத்தை ஆராய பல குழுக்கள் அமைக்கப்பட்டும், அத்திட்டம் நீண்ட நாளாகக் கிடப்பில் போடப்பட்டது என்பது கவலைக்குரிய செய்தியாகும். மத்தியில் ஆளும் நமது தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு அத்திட்டத்தை நிறைவேற்றிடவும், அத்திட்டத்தின் சாத்தியக் கூறினை ஆராய்ந்திட பண ஒதுக்கீடு செய்தது குறித்தும் நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால், இந்தச் சேதுக் கால்வாய்த் திட்டம் விரைவாகச் செயல் படுத்தப்பட வேண்டுமென்ற அடிப்படையில் இக்கடிதம் மூலமாகத் தங்களை வலியுறுத்துகிறேன்.

''சேதுக் கால்வாய் பற்றிய விவரங்களையும், அதனால் பொதுவாக இந்தியாவிற்கு - குறிப்பாக தமிழகத்திற்கு ஏற்படும் பயன்களையும் தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன். சேதுக் கால்வாய் திட்டம் என்பது, பாக் ஜலசந்தியையும் மன்னார் வளைகுடாவையும் இணைக்கும் ஆடம்ஸ் பாலத்தின் குறுக்கே வெட்டப்பட வேண்டிய கால்வாயின் பெயராகும். இத்திட்டத்தை ஆங்கில அரசாங்கத்தின் கப்பல் படையைச் சேர்ந்த **கமாண்டர் டெயிலர்** என்பவர் 1860ஆம் ஆண்டு உருவாக்கினார். அன்றைக்கு அதனுடைய மதிப்பீடு ரூபாய் ஐம்பது இலட்சமாகும்.

பின்பு **டவுண்ட்ஸ்டன்** மற்றும் **ஜான் கூடே** என்பவர்கள் இத் திட்டத்தினுடைய முக்கியத்துவத்தை அறிந்து, இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமெனப் பல வழிகள் வகுத்தனர். ஆனால், ஒரு சாரார் இதற்கு எதிர்ப்பு தெரிவித்த தால், இத்திட்டம் கிடப்பில் போடப்பட்டது. மறுபடியும் 1921ஆம் ஆண்டு சென்னை மாநில அரசு இத் திட்டத்தை வகுத்தும், ஆங்கில ஆட்சியாளர்களின் உதவியின்மையால் நிறைவேற்றப்படவில்லை.

1945ஆம் ஆண்டு, மறுபடியும் ஆங்கில அரசாங்கம் இத்திட்டத்தைப்பற்றி அறிய ஒரு குழுவை அமைத்தது. ஆனால், அந்தக் குழுவின் அறிக்கை வெளியிடப்படவில்லை. இந்திய விடுதலைக்குப் பிறகு, 1955ஆம் ஆண்டு டாக்டர் **சர்.ஏ. இராமசாமி முதலியார்** தலைமையில், சேதுக் கால்வாய்த் திட்டத்தைப் பரிசீலிக்க ஒரு குழு இந்திய அரசாங்கத்தால் அமைக்கப்பட்டது. ''சேது சமுத்திரத் திட்டத்தை அரசு நிறைவேற்றினால், இந்தியாவிற்கு அன்னியச் செலாவணியும், கிழக்கு கடற்கரை ஓரமாய்க் கப்பல் போக்குவரத்தும் எளிதாக இருக்கும்'' என அக்குழு தனது அறிக்கையில் கூறியதோடு, உடனே இத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமெனவும் தெளிவாக இந்திய அரசுக்குத் தெரிவித்தது. அதற்கு ரூ. 9.98 கோடி திட்ட மதிப்பையும் அக்குழு வெளியிட்டது. ஆனால், சர்.ஏ. இராமசாமி முதலியார் குழுவின் அறிக்கையின்மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல், இந்திய அரசாங்கம் விட்டுவிட்டது. 1963ஆம் ஆண்டு இந்திய அரசாங்கம்



நான்காவது திட்டக் காலத்தில் இந்தச் சேதுக் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றியே ஆக வேண்டுமென முடிவு செய்தும், இத்திட்டம் செயல்வடிவம் பெறாமல் போய் விட்டது.

அதன் பிறகு, டாக்டர் **நாகேந்திர சிங்** என்பவர் குழுவும் (1963ல்) **சி.வி. வெங்கடேஸ்வரன்** குழுவும் (1965ல்) அமைக்கப்பட்டது.

1965ஆம் ஆண்டு, சி.வி. வெங்கடேஸ்வரன் தலைமையிலான குழு திட்டத்தை நிறைவேற்ற சுமார் 37 கோடி ரூபாய் செலவாகும் என்றும், ஆனால் இத்திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு ஒன்றரைக் கோடி வருவாய் உள்ளதெனவும் கூறியது. அதன் பின்பு இறுதியாக **எச்.ஆர். இலட்சுமி நாராயணன்** தலைமையில் ஐவர் குழு ஒன்றும் மத்திய அரசால் 1981-82ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டது. அக்குழு தமிழகமெங்கும் சென்று இத்திட்டத்திற்கான பல்வேறு தரப்பாளர்களின் கருத்துக்களையும் கேட்டறிந்தது.

இத்திட்டத்தின் பயனைப்பற்றி 1981-82ஆம் ஆண்டு மத்திய அரசின் குழு பின்வருமாறு ஆராய்ந்து மதிப்பிட்டது.

1. இந்தியாவின் கிழக்குக் கடற்கரை யோரத்தில் தொடர்ச்சியான கடல்வழிப் போக்குவரத்திற்குத் தற்போது வழியில்லை. இத்திட்டத்தை செயல்படுத்தினால், இந்து மகா சமுத்திரமும் வங்கக் கடலும் இணைய வாய்ப்

புள்ளது. பாறைகளால் அமைந்த ஆடம்ஸ் பாலத்தை வெட்டி இணைத்தால், கடல் வழிப் போக்குவரத்திற்கு மிகவும் வசதியாக இருக்கும்.

2. சேது கால்வாய்த் திட்டமும், தூத்துக்குடித் துறைமுகத் திட்டமும் ஒருங் கிணைந்தவைகளாகும். சேது சமுத்திரத் திட்டத்தைச் செயல்படுத்தினால், தூத்துக்குடி துறைமுக வளர்ச்சியும் முழு அளவு அதிகரிக்கும். தூத்துக் குடியிலிருந்து பின்வரும் துறைமுகங்களுக்குப் பயணம் செய்யும் நேரமும் குறையும்.

அ. தூத்துக்குடியிலிருந்து சென்னை 434 மைல் (மிச்சப்படும் தூரம்)

ஆ.தூத்துக்குடியிலிருந்து விசாகப்பட்டினம் 376 மைல் (மிச்சப்படும் தூரம்)

இ) தூத்துக்குடியிலிருந்து கல்கத்தா - 340 மைல் (மிச்சப்படும் தூரம்)


3. இக்கால்வாயினால் பயணம் செய்யும் தூரம் குறைவதால் கப்பலின் எரிபொருள் மிச்சப்படும். இதனால் இந்தியாவின் அன்னியச் செலாவணிச் செலவில் சுமார் 130 கோடி ரூபாய் ஒவ்வொரு ஆண்டும் மிச்சப்படும்.

4. இந்தியாவிற்கு அன்னியச் செலாவணி கணிசமான அளவு உயரும். இந்தக் கால்வாயின் மூலம் தமிழகத்தின் குளச்சல், முட்டம், தூத்துக்குடி, இராமேசுவரம், நாகப்பட்டினம், காரைக்கால், கடலூர், பாண்டிச்சேரி, சென்னை மற்றும் விசாகப்பட்டினம், கல்கத்தா வரையுள்ள கிழக்குக் கடற்கரைத் துறைமுகங்கள் வளர்ச்சி அடையும்.

5. இக்கால்வாய் வெட்டப்பட்டால், தூத்துக்குடித் துறை முகத்தில் வளர்ச்சி ஏற்பட்டு, அதன் மூலம் பொருளாதார ரீதியாக நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர், காரைக்குடி, திருப்பத்தூர், மதுரை, நாகர்கோவில் ஆகிய பிற்படுத்தப் பட்ட பகுதிகள் முழுதும் தொழில் ரீதியாக வளர்ச்சி பெறும்.

6. இந்தக் கால்வாய் வெட்டப் பட்டால், இந்தியாவின் தென் பகுதியில் அன்னியச் சக்திகள் ஊடுருவாமல், அது ஓர்அரணாக விளங்கும்.

7. இக்கால்வாயின் மூலம் மீன் பிடித் தொழில் தென்னிந்தியாவில் வளர்ச்சி பெறும். மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு இது ஒரு பாதுகாப்பு வளையமாகத் திகழும்.



சர்.ஏ.ராமசாமி

8. நிலம் வழியாகச் செல்லும் நிலக்கரி, சிமெண்ட், உப்பு, உரங்கள், கடல் உணவு வகைகள், பருப்பு வகைகள், பருத்தி போன்ற பொருட்களைக் கிழக்குக் கடற்கரை மார்க்கமாக இந்தியாவின் பிற பகுதிகளுக்குக் கொண்டு செல்ல இக்கால்வாய் மிகவும் உதவியாக இருக்கும்.

9. சேதுக்கால்வாய் மூலமாக கப்பல்கள் சென்றால், புயல் அபாயம் ஏதும் ஏற்பட வாய்ப்பில்லை.

10. இக்கால்வாய் ஒரு சுற்றுலா மையமாக அமைந்து, உலகின் பல பகுதிகளில் இருந்து பயணிகளை ஈர்க்க வாய்ப் புள்ளது.

11. ஏற்றுமதி, இறக்குமதித் தொழில்கள் இக்கால்வாயினால் பெருகி, அது இந்தியாவின் வளர்ச்சியை அதிகரிக்கும்.

12. இக்கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றினால் ஏற்படும் செலவை சுமார் பத்து அல்லது பனிரெண்டு ஆண்டுகளில் ஈடு செய்துவிடலாம்.

13. இத்திட்டம் பொருளாதார ரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும் சாதகமானதாகும். இந்தியாவின் நலன் கருதி, உடனடியாக இத்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று இந்திய அரசாங்கத்தின் கப்பல் மற்றும் கடல் வழிப் போக்குவரத்து அமைச்சகத்தின் 1981-82ஆம் ஆண்டின் மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை தெளிவாகக் கூறுகிறது.



எனவே, இத்திட்டத் தாமதத்தினால் பொருளாதார ரீதியாக எவ்வாறெல்லாம் இழப்பு ஏற்படுகிறது என்பதை என் கடிதம் மூலம் தாங்கள் அறிவீர்கள். எனவே, பொருளாதார வளர்ச்சியுடன் வேலை வாய்ப்புகள் வழங்கிடும் இத்திட்டத்தை நாட்டு வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு தாங்கள் தலையிட்டு தாமதமில்லாமல் நிறைவேற்றும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.''

- என்று விளக்கமாகவும் விரிவாகவும் எழுதினேன். இக்கடிதத்தை நான் எழுதியபோது தி.மு. கழகம் தமிழகத்திலே ஆளுங்கட்சி அல்ல. இருந்தாலும், தமிழகத்தின் நலன் கருதி இந்தக் கடிதத்தைப் பிரதமருக்கு எழுதினேன். ஆனால், இந்தக் கடிதத்தின் பயன், மத்தியிலே ஆட்சி மாறி ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அமைந்த பிறகுதான் ஏற்பட்டது என்பதையும், அதன் தொடக்க விழா மதுரையில் நடைபெற்றதையும், அதற்கும் பின்னர் எவ்வாறு அத்திட்டம் சுணங்கியது என்பதையும் பின்னர் காண்போம்.

ஆனால் அந்தக் கடிதம்பற்றி 11-5-2002 தேதிய **''தினமணி''** ஒரு தலையங்கத்தை **''தூங்காத கருணாநிதி''** என்ற தலைப்பில் எழுதியிருந்தது. அதன் சுருக்கம் வருமாறு :-

❁ ''கருணாநிதியின் சுறுசுறுப்பு அலாதியானது. அது எத்தகையது என்பதை அவருடைய அரசியல் எதிரிகளும் கூட நன்றாக அறிவார்கள். ஆட்சியைப் பறிகொடுத்து

ஓராண்டு ஆகிறது. ஆயினும் கருணாநிதியின் வேகமான அரசியல் தடைப்பட்டு விடவில்லை. அநேகமாக நாள்தோறும் ஏதாவது ஒரு பிரச்சினைமீது அறிக்கையை அவர் வெளியிடத் தவறுவதில்லை. அதோடு புதிய புதிய பிரச்சினைகளை ஆட்சியாளர்களுக்குக் கிளப்பி விடுவதிலும் அவர் பின்வாங்குவது இல்லை. இதற்கிடையே திடீரென சேது சமுத்திரத் திட்டம் கருணாநிதிக்கு நினைவுக்கு வந்துவிட்டிருக்கிறது. அவ்வளவுதான், உடனடியாக பிரதமருக்கே நேரிடையாகக் கடிதம் எழுதி விட்டார். அத்திட்டம் விரைந்து நிறைவேற்றப்பட்டால் இந்தியாவின் கப்பல் போக்குவரத்து மற்றும் தொழில் வணிக வளர்ச்சிக்குப் பெரிய வாய்ப்பு ஏற்படுவதுடன், தென் தமிழகத்தின் பலமுனை முன்னேற்றத்திற்கும் வரப்பிரசாதமாக அமையும் என்பதையும் நினைவுபடுத்தி யிருக்கிறார்.


❁ ‘‘கருணாநிதி இப்பொழுது ஆட்சிப் பொறுப்பில் இல்லாமல் இருக்கலாம். ஆயினும் பொறுப்புள்ள மூத்த தலைவர்களில் ஒருவர் அல்லவா? அவரால் எப்படித் தமிழக நலன்களை மறக்க முடியும்? அதோடு, இங்கு அதிகாரத்தில் தி.மு.க. இல்லாவிடினும், தில்லியில் வாஜ்பாய் அரசில் அங்கம் வகிக்கிறது அல்லவா? எனவே சேதுத் திட்டம் வேகமாக நிறைவேற்றப்படுவதில் தி.மு.க.வுக்கு அக்கறை இருப்பதை கருணாநிதியால் நியாயப்படுத்த முடியும். தூங்காத கருணாநிதியால் சும்மா இருக்கமுடியாது.

❁ ‘‘ஆட்சியில் இருந்தால் எதிர்க் கட்சிகளைத் தூங்கவிட மாட்டார். எதிர் வரிசையில் இருந்தால் ஆட்சியாளர் - நண்பர்கள் ஆகிய இரு தரப்பையுமே தூங்கவிட மாட்டார். ‘‘தூங்காமை, கல்வி, துணிவுடைமை - ஆகிய மூன்றும் ஆட்சியாளர்களுக்கு அவசியமான பண்புகள் என்று திருவள்ளுவர் இலக்கணம் வகுத்து இருக்கிறார் அல்லவா? எனவேதான் இந்த அபாரச் சுறுசுறுப்பு!’’


★ ★ ★

25. ஜெயா ஆட்சியில் "தடா, பொடா" தர்பார்!

11-11-2012 அன்று வெளிவந்த 23வது அத்தியாயத்தில், சைதைத் தொகுதி இடைத் தேர்தலில், எந்த அளவிற்கு அ.தி.மு.க.வினரின் அராஜகம் தலை விரித்தாடியது என்று எழுதியிருந்தேன் அல்லவா? அந்த இடைத் தேர்தலில், ஆளுங்கட்சியினரால் நடத்தப்பட்ட அராஜகங்களைக் கண்டித்து, 3-6-2002 அன்று நடைபெறவிருந்த என்னுடைய பிறந்த நாள் விழாவினை ரத்து செய்தபோதிலும், நான் எழுதிய "மீசை முளைத்த வயதில்" என்ற நூல் 2-6-2002 அன்று மாலையில் கலைஞர் அரங்கத்தில், நமது பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியர் அவர்களின் தலைமையில் வெளியிடப்பட்டது. முதல் நூலைக் கவிப் **பேரரசு வைரமுத்து** பெற்றுக் கொள்ள, **கவிக்கோ அப்துல் ரகுமான்** அவர்களும், காவியக் **கவிஞர் வாலி** அவர்களும் வாழ்த்துரை வழங்கிட, நான் ஏற்புரையாற்றினேன். தமிழ்க்கனிப் பதிப்பகத்தின் சார்பில் கவிஞர் **கனிமொழி** வரவேற்புரையாற்றிட, **கயல் தினகரன்** நன்றியுரையாற்றினார்.



இதற்கிடையே டான்சி, மற்றும் கொடைக்கானல் ஓட்டல் வழக்குகளில் தனி நீதிமன்ற நீதிபதி ஜெயலலிதாவைக் குற்றவாளி என்று கூறித்



அன்பழகன்

தண்டனை அளித்திருந்த போதிலும் கூட, 2001ஆம் ஆண்டுக்குப் பிறகு - அதாவது அ.தி.மு.க. ஆட்சி வந்த பிறகு - அவர்கள் உயர் நீதி மன்றத்தில் செய்து கொண்ட மேல் முறையீட்டில், உயர் நீதிமன்றம் ஜெயலலிதாவை விடுதலை செய்து, 2001ஆம் ஆண்டு டிசம்பரில் தீர்ப்பளித்தது.

அந்தத் தீர்ப்புபற்றி செய்தியாளர்கள் என்னைக் கேட்டபோது, நான் நீதிபதிகளைவிட நீதியை மதிப்பவன்'' என்று கூறியிருந்தேன்.

அவ்வாறு நான் கூறியது, நீதிமன்றத்தை அவமதிக்கும் செயலாகும் என்று என்மீது அதிமுக அரசு சார்பாக, சென்னை உயர் நீதிமன்ற அட்வகேட் ஜெனரல், **என்.ஆர். சந்திரன்** சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்தார்.

அதில், நான் முரசொலி பத்திரிகையில் நீதிமன்றத்தைப் பற்றியும், நீதிபதிகளைப்பற்றியும் கவிதை, கட்டுரை எழுதியுள்ளதாகவும், கார்ட்டூன் வெளியிட்டுள்ளதாகவும், அவை அனைத்தும் நீதிமன்றத்தை அவமதிக்கும் செயலாகும் - என்றும் கூறியிருந்தார்.


அந்த வழக்கை தலைமை நீதிபதி திரு. **சுபாஷன்** ரெட்டி அவர்களும், நீதிபதி திருமதி **பிரபா ஸ்ரீதேவன்** அவர்களும் அடங்கிய முதல் பெஞ்ச் விசாரித்து, இந்த வழக்கில் கலைஞர் பதில் மனு தாக்கல் செய்ய நோட்டீஸ் அனுப்புகிறோம் - அவர் நேரில் ஆஜராகத் தேவையில்லை - விலக்களிக்கிறோம்!'' என்று உத்தரவிட்டனர்.

அந்த வழக்கில், என் சார்பாக மூத்த வழக்கறிஞர் **திரு.என்.நடராஜன்** அவர்கள் பதில் மனு தாக்கல் செய்து வாதாடினார்.

அப்போது அவர், முரசொலி பத்திரிகையின் இன்றைய ஆசிரியர் கலைஞர் அல்ல - அதில் வந்த எல்லா செய்திக்கும் அவர் பொறுப்பேற்க முடி யாது. அவர் பேட்டி அளித்த போது எந்த அவமதிப்பு செயலும் செய்யவில்லை. எனவே வழக்கைத் தள்ளுபடி செய்ய வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

அட்வகேட் ஜெனரல் என்.ஆர். சந்திரன் அதற்கு பதில் கூறி வாதாடினார். இரண்டு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதியரசர்கள் தங்கள் தீர்ப்பில் -

''முன்னாள் முதல்வர் கலைஞர் சிறந்த அரசியல்வாதி - மூதறிஞர் - மற்றும் சிறந்த இலக்கியவாதி. அனைத்து நற்குணங் களும் படைத்தவர். டான்சி வழக்கில் இருந்து ஜெயலலிதாவை விடுதலை செய்ததுபற்றி கருத்து கூறும்போது, கலைஞர் தனது அதிருப்தியைப் பேட்டியின்போது தெரிவித்தார் என்று கூறப்பட்டுள்ளது. கலைஞர் அளித்த பேட்டியில், நீதிபதிகள் பற்றியும், மற்றும் நீதிமன்றத்தைப்பற்றியும் அவமதிக்கும் வகையில் பேசியிருக்கிறார் - எனவே அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறியதை ஏற்க முடியாது. அவருக்கும் பத்திரிகையில் வெளியான கார்ட்டூனுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. முரசொலி பத்திரிகையின் ஆசிரியர் கருணாநிதி என்று அரசு தலைமை வழக்கறிஞர் தவறாக இந்த வழக்கில் கூறியுள்ளார். அவர் முரசொலி பத்திரிகையின் நிறுவனர்தான். எனவே, இந்த அவமதிப்பு வழக்கை கலைஞர்மீது தாக்கல் செய்ததே தவறானது. இதை ஏற்க முடியாது. எனவே இதற்கு அவர் பொறுப்பேற்க முடியாது என்று கருதி, இதிலிருந்து விடுவிக்கிறோம். கலைஞரின் பேட்டி, யாரையும் அவமதிக்கும் வகையில் இல்லை. இரண்டு பேர் பேசும் கற்பனை உரை யாடலுக்கும், தனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று கலைஞர் கூறியதை ஏற்றுக் கொள்கிறோம். கலைஞர் எழுதிய கட்டுரையில், நீதிபதிகளுக்கு எதிராகவோ - நீதிமன்றத்திற்கு எதிராகவோ அவர் கருத்துக் கூறவில்லை என்று அவரது வழக்கறிஞர் கூறியதை ஏற்கிறோம். கலைஞர் நீதிமன்றத்தை அவமதித்தார் என்பதற்குப் போதிய ஆதாரம் இல்லை. எனவே கலைஞர்மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கைத் தள்ளுபடி



2.6.2002 அன்று, கலைஞர் அரங்கத்தில், நான் எழுதிய ''மீசை முளைத்த வயதில்'' என்ற நூல், நமது இனமானப் பேராசிரியர் தலைமையில் வெளியிடப்பட்டது.

செய்து அந்த வழக்கிலிருந்து அவரை விடுவிக்கிறோம்'' என்று தெரிவித்தார்கள்.

★ ★ ★

2002ஆம் ஆண்டு, ஜூலைத் திங்கள், 15ஆம் நாள் நடைபெற விருந்த குடியரசுத் தலைவர் தேர்தலில், தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வேட்பாளராகத் தமிழகத்தைச் சேர்ந்த பிரபல அணுசக்தி விஞ்ஞானியும், ''பாரத ரத்னா'' உள்ளிட்ட பல்வேறு விருதுகளைப் பெற்றவருமான **ஏ.பி.ஜெ. அப்துல் கலாம்** *அவர்கள் 10-6-2002 அன்று அறிவிக்கப்பட்டார்.*

அந்த அறிவிப்பு வெளியானதுமே, நான் அப்துல் கலாம் அவர்களைத் தொலைபேசியிலே தொடர்புகொண்டு, என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டேன். கலாம் அவர்கள் உளம் நெகிழ்ந்து நன்றி தெரிவித்தார்.

பிரதமர் **வாஜ்பய்** *அவர்களின் இல்லத்தில் நடந்த முக்கிய தலைவர்கள் கூட்டத்தில், குடியரசுத் தலைவர் பதவிக்கு தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வேட்பாளராக அப்துல் கலாம் அவர்களின் பெயரை பிரதமர் அறிவித்ததும், அதனை அனைத்துத் தலைவர்களும் ஒருமனதாக ஏற்றுக் கொண்டார்கள்.*

''மதச்சார்பற்ற ஜனநாயக நெறிமுறைகள் தொடர்ந்து பாதுகாக்கப்படுகிறது என்பதற்கு அப்துல் கலாம் பெயரை



வைரமுத்து

அறிவித்ததே தக்க சான்று!'' என்று தேசிய ஜனநாயகக் கூட்டணித் தலைவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.


அந்த அறிவிப்பு வெளிவந்ததும், அப்துல் கலாம் அவர்களைப்பற்றி **''காலம் வாய்த்தது, அப்துல் கலாம் வாய்த்ததினால்''** என்ற தலைப்பில் என் உணர்ச்சியைக் கொட்டி ஒரு கவிதை எழுதி, அதனை ''முரசொலி'' அலுவலகத் திற்கு அனுப்பினேன். அந்தக் கவிதை வருமாறு :-

இராமேசுவரம் கடற்கரையில் மோதுகின்ற
அலைகள்கூட இன்று மலையளவு உயர்கின்றன!
மகிழ்ந்து கூத்தடிக்கின்றன!
நடுக்கடலில் காற்றழுத்தத்தின் விளைவு என-
நானும் நீயும் கருதினால்; அது தவறு!
நாள்தோறும் கேட்கும் கடல் பாட்டல்ல இது!
அலைகள் நடனம் அனுதினமும் கண்டுள்ளோம்.
அற்புதமாய் இன்று மட்டும் இந்த ஆனந்தக்கூத்து ஏன்?
ஆடியும் ஓடியும் நீரை அள்ளி வீசியும்
அந்தச் சிறுவன், அடிகள் பதித்தது
இந்த இராமேசுவரம் மண்ணில் மட்டுமல்ல-
இனிய இந்திய மண்ணில் - விண்ணில்!
மன்பதை ஆளும் விஞ்ஞானம் - இந்திய
மாநாட்டையும் ஆளப் போகிறதென்ற
மகிழ்ச்சியின் துள்ளலே - இதோ
மணல்மீது அலையின் நடனம்!
நடுத்தரக் குடும்ப வானில் உதயம்
நாளிதழ்க் கட்டுகள் தூக்கி ஊதியம்!
பழைய சம்பிரதாயங்களைத் தூக்கி எறிந்த
பகுத்தறிவுப் பார்ப்பன ஆசிரியர்
ஆரியராயினும் அறிவுச் சுடராய் வளரும் இளைஞன் -

அப்துல் கலாமை அரவணைத்து நின்று
சூரியன்போலச் சுட்டெரித்தார், மதவெறி அன்று!
காரியத்தில் கண்வைத்து விஞ்ஞானத்தில் வென்று -
கடமை தவறா மனிதர் என்று உச்சிக் கலசமாய் உயர்ந்து -
மடமை நீங்கி -
மத நல்லிணக்கம் ஓங்க -
மனித நேயம் நெஞ்சத்தில் தாங்கி -
நாட்டின் மணிவிளக்காய்
ஒளிவிடப் போகிறார் இன்று!
அணு ஆயுதம் அழிவுக்குப் பயன்படாமல்
அமைதி காக்கும் கேடயமாய் ஆவதற்கும்
ஆகாயத்தில் தாவுகின்ற ஏவுகணை
அண்டை நாட்டுத் தூதராக மாறுதற்கும்
மறு பிறப்பை விஞ்ஞானம் எடுப்பதற்கு
மனவலிவு புவி மாந்தர்க்கு மிகவும் வேண்டும்!
அவ்வலிவை உருவாக்க ஏற்றவரே
அறிவியலை ஆக்கப் பணிக்கென நோற்றவரே
அப்துல் கலாமென ஆரவாரம் புரிந்து
அவனியெங்கும் அன்பு முழக்கம் ஒலிக்கும்!
இமயமுதல் குமரிவரை வாழ்கின்ற
இந்தியக் குடிமக்கள் எவராயினும் -
இணைபிரியாத் தோழர்களாய் -
இரத்தக் கலப்புள்ள சோதரர்களாய் வாழ்வதற்கு -
நன்றாகக் ''காலம்'' வாய்த்ததென்போம்
நாட்டின் தலைவராக ''அப்துல் கலாம்'' வாய்த்ததினால்!

''முரசொலி''யில் நான் எழுதிய இந்தக் கவிதையை அப்துல்கலாம் அவர்கள் படித்துவிட்டு, உடனடியாக எனக்கொரு கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கடிதத்தில்-

''மாண்புமிகு டாக்டர் மு.கருணாநிதி அவர்களுக்கு, வணக்கம். தங்களுடைய 10-6-2002 தேதியிட்ட கடிதம் கிடைத்தது. தங்களுடைய நல்லாசிக்கும், ஆதரவுக்கும்



அப்துல் ரகுமான்



கவிஞர் வாலி

என்னுடைய மனமார்ந்த நன்றி. ஜூன் 13ந்தேதியன்று தாங்கள் வார்த்த கவிதை எனது உள்ளத்தை உருக்கியது. ''இராமேசுவரம் கடற் கரையில் மோதுகின்ற அலைகள்கூட இன்று மலையளவு உயர்கின்றன'' என்ற வார்த்தைகளை நான் பல தடவைகள் படித்தேன். என் சுற்றத் தார்கள் படித்தார்கள். என்னுடைய நண்பர்கள் படித்தார்கள். எல்லோருக்கும் மகிழ்ச்சி! ஒரு அறிஞரால் - ஒரு கவிஞரால் வார்க்கப்பட்டக் கவிதையை நினைத்து நினைத்து மகிழ்ச்சி அடைந்தேன். நன்றி''என்று எழுதியிருந்தார்.

16-6-2002 அன்று மாலையில், கிண்டி, அண்ணா பல்கலைக் கழக விருந்தினர் விடுதியில் தங்கியிருந்த அப்துல் கலாம் அவர்களை, என்னுடைய சார்பில் தம்பி **மு.க.ஸ்டாலின்** சந்தித்து - பொன்னாடை அணிவித்து - பூங்கொத்து வழங்கி வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

அப்துல் கலாமுக்கு ஆதரவு இல்லை என்று இடதுசாரிக் கட்சிகள் அறிவித்தன. அவர்களின் வேட்பாளராக நேதாஜி ராணுவ பெண்படைத் தளபதியாக இருந்த **கேப்டன் லட்சுமி** நிறுத்தப்பட்டார்.

ஆனால் காங்கிரஸ் கட்சியும் கலாம் அவர்களையே ஆதரிப்பதாக முடிவெடுத்தது.

அதன் பின்னர் 28-6-2002 அன்று மாலையில் குடியரசுத் தலைவர் வேட்பாளரான டாக்டர் அப்துல் கலாம் அவர்களை அண்ணா பல்கலைக் கழக விடுதியில் நான் மரியாதை நிமித்தமாகச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தேன்.

அவருக்குப் பொன்னாடை அணிவித்து, பூங்கொத்து அளித்து, நான் எழுதிய திருக்குறள் உரை உட்பட பல புத்தகங்களை வழங்கினேன்.

அப்துல் கலாம் அவர்கள், எனக்கு அவர் எழுதிய "இந்தியா 2020" என்ற நூலினை அளித்தார்.

பின்னர் அவருடன் நீண்ட நேரம் அங்கே உரையாடிக் கொண்டிருந்தேன்.


★ ★ ★



கனிமொழி

18-7-2002 அன்று வாக்கு எண்ணிக்கை முடிந்து, இந்தியாவின் பன்னிரண்டாவது குடியரசுத் தலைவராக அணு விஞ்ஞானி ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.


அவருக்கு நான் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில்- "பெருமதிப்புக்குரிய கலாம் அவர்களுக்கு, வணக்கம். தங்களின் வெற்றிக்கு வாழ்த்துக்கள். இந்திய நாடு உலகத்தில் பெரிய ஜனநாயக நாடு என்பது மாத்திரமல்லாமல் -அமைதியான சூழல், அன்பான நேயம், மனித சமுதாயத்தில் பரவிட வழிகாட்டக் கூடியது என்பதைத் தங்களின் தலைமை நிலை நாட்டும் என்று நம்புகிறேன்"
என்று குறிப்பிட்டிருந்தேன்.



கயல் தினகரன்

25-7-2002 அன்று இந்தியாவின் 12வது குடியரசுத் தலைவராக தமிழகத்தைச் சேர்ந்த அப்துல் கலாம் பதவியேற்றார்.

குடியரசுத் தலைவர் பதவியேற்பு விழாநிகழ்ச்சிக்கு, தமிழக முதல் அமைச்சருக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை என்று கூறி, மத்திய அரசைத் தாக்கிக் கடுமையாக ஓர்




அறிக்கையை அன்று ஜெயலலிதா விடுத்திருந் தார். அதற்கு மத்திய அரசு தனது பதிலை அளித்தது.

அந்தப் பதிலில், இது போன்ற விழாக்களுக்கு மாநில அரசின் சார்பில் டெல்லியில் உள்ள அலுவலகங்களிலிருந்து விண்ணப்பங்கள் வருவதையொட்டித்தான் அழைப்பிதழ் அனுப்பப்படுவது வழக்கம் என்றும், இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரை தமிழக ஆளுநருக்கு மட்டும் அழைப்பிதழ் கேட்டதால் அது அனுப்பப்பட்டது என்றும், தமிழக முதலமைச்சருக்கு என்று டெல்லியில் உள்ள தமிழகச் சிறப்பு அதிகாரி விண்ணப்பம் எதையும் கொடுக்கவில்லை என்றும் தெரிவித்திருந்தார்கள்.

அதைப்பற்றி செய்தியாளர்கள் என்னிடம் கருத்துக் கேட்டனர். ‘‘மாநிலங்களின் நியாயமான உரிமைகளைப் பறிப்பதோ, விட்டுக் கொடுப்பதோ கூடாது என்பதில் உறுதியாக இருப்பவன் நான். அதனால்தான் ஆகஸ்ட் 15 விடுதலை நாளன்று, ஒவ்வொரு மாநிலத்திலும் ஆளுநர்கள் மட்டுமே தேசியக் கொடியை ஏற்றிய முறையை மாற்ற மத்திய அரசுடன் வாதாடி, வற்புறுத்தி, மாநில முதல் அமைச்சர்களும் சுதந்திர தினத்தன்று தேசியக் கொடியை ஏற்றும் உரிமையைப் பெற்றுத்தந்தேன். குடியரசுத் தலைவர் பதவியேற்பு விழாவுக்கு மாநில முதல் அமைச்சர்களுக்கு அழைப்பு அனுப்பாமல் இருப்பது



என். நடராஜன்




குடியரசுத் தலைவர் தேர்தலில், பெருவாரியான வாக்குவித்தியாசத்தில் அப்துல்கலாம் வெற்றி பெற்று, இந்தியாவின் 12வது குடியரசுத் தலைவரானார்.

என்பதும், விரும்பி விண்ணப்பித்த முதல் வர்களை மட்டும் அனுமதிப்பது என்பதும் சுதந்திரம் பெற்ற காலத்திலே இருந்து கடைப் பிடிக்கப்படும் முறையாக இருக் கலாம். அதற்காக அதையே நிரந்தரமாக அமைத்துக் கொண்டு, மாநில முதல்வர்களை அலட்சியப்படுத்தக் கூடாது. அழைப்பிதழ் என்பது அனுப்பப்படுவதாக இருக்க வேண்டுமே தவிர, விண்ணப்பித்துப் பெறக் கூடியதற்கு அழைப்பிதழ் என்று பெயரில்லை. இதுவரை இருந்து வந்துள்ள இந்தப் பழக்கத்தை இனிமேலாவது மாற்றி, மாநில முதல் அமைச்சர்களையும் அவர்களிடமிருந்து விண்ணப்பத்தை எதிர்பாராமல் குடியரசுத் தலைவர் பதவியேற்புக்கு அழைப்பு அனுப்பும் பழக்கத்தை மத்திய அரசு ஏற்படுத்த வேண்டும்'' என்று கூறினேன்.

நான் இவ்வாறு கூறியதும் ஒரு செய்தியாளர், ''ஜெயலலி தாவினுடைய கோரிக்கைக்கு முதன் முதலாக நீங்கள் ஒத்துப்போய் இருக்கக் காரணம் என்ன?'' என்று கேட்டார்.

அப்போது நான், ''ஜெயலலிதாவின் கருத்துடன் நான் நெருங்கிப் போகிறேன் என்று அர்த்தமல்ல - மாநில சுயாட்சிக் கொள்கையிலே இருந்து விலகாமல் - உறுதியோடு இருக்கிறேன் என்றுதான் அர்த்தம்'' என்று பதிலளித்தேன்.

குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல் 12-8-2002 அன்று நடைபெற்றது. தேசிய ஜனநாயகக் கூட்டணியின் சார்பில் பா.ஜ.க. பிரமுகர் **பைரோன் சிங் ஷெகாவத்** அவர்களும், எதிர்க் கட்சிகளின் சார்பில் காங்கிரஸ் பிரமுகர் **சுசில் குமார் ஷிண்டே** அவர்களும் வேட்பாளர்களாகப் போட்டியிட்டார்கள். அத்தேர்தலில் மக்களவை - மற்றும் மாநிலங்களவையின்



சுபாஷன் ரெட்டி

உறுப்பினர்கள் வாக்களித்தனர். அதில் ஷெகாவத்துக்கு ஆதரவாக 454 வாக்குகளும், ஷிண்டேவுக்கு ஆதரவாக 305 வாக்குகளும் பதிவாகின. 19-8-2002 அன்று குடியரசுத் துணைத் தலைவராக ஷெகாவத் பதவியேற்றார்.

★ ★ ★

17-6-2002 அன்று த.மா.கா. தலைவர், ஜி.கே. வாசன் தலைமையில், அந்தக் கட்சியைச் சேர்ந்த சில தலைவர்கள் டெல்லி சென்று சோனியா காந்தியைச் சந்தித்துப் பேசினார். அதன் காரணமாக, காங்கிரசுடன் தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சி இணைகின்ற விழாவினை நடத்துவதாக முடிவு செய்து - அறிவித்தார்கள்.


அவ்வாறே 14-8-2002 அன்று மதுரையில், த.மா.கா., காங்கிரஸ் இணையும் விழா நடைபெற்றது. அந்த விழாவில் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியா காந்தி கலந்து கொண்டார்.

★ ★ ★

2-7-2002 அன்று இந்திய நேரம் அதிகாலை 3.13 மணிக்கு, தெற்கு ஜெர்மனியில், சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா நாடுகளின் எல்லைக்கு அருகே உள்ள **ஊபர்லிங்கன்** என்ற ஊருக்கு அருகே, ரஷ்யக் குழந்தைகளை ஏற்றிச் சென்ற விமானமும், ஒரு சரக்கு விமானமும் நடுவானில் நேருக்கு நேர் மோதிக் கொண்டன.



பிரபா ஸ்ரீதேவன்



பைரோன்சிங் ஷெகாவத்

அந்த விபத்தில், ரஷ்யக் குழந்தைகள் 47 பேர் உட்பட, மொத்தம் 71 பேர் பலியானார்கள். ரஷ்யா விலிருந்து ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா அருகே உள்ள கோஸ்டாபிரேவா என்னும் ஊருக்கு 47 குழந்தைகள் சுற்றுலா புறப்பட்டனர். அவர்களுக்குத் துணையாக பெரியவர்கள் 10 பேர் வந்தனர். அவர்கள் வழக்க மான விமானத்தைத் தவற விட்டுவிட்டதால், **பஷ்கிரியன்** என்னும் விமான நிறுவனத் துக்குச் சொந்தமான **துபோலேவ்** வகை விமானத்தில் ஸ்பெயின் புறப்பட்டனர். அந்த விமானத்தில் விமானிகள் உட்பட 12 ஊழியர்கள் இருந்தனர்.

அந்த விமானம் ஜெர்மனியின் மூனிச் நகரில் இறங்கிவிட்டு, பார்சிலோனா நோக்கிச் சென்று கொண்டிருந்தது. அப்போது சரக்கு ஏற்றிக் கொண்டு போயிங் விமானம் பஹ்ரைனிலிருந்து பிரஸ்ஸல்ஸ் நகருக்கு வந்து கொண்டிருந்தது. அதில் இரு விமானிகள் இருந்தனர். இரண்டு விமானங்களும் தெற்கு ஜெர்மனியில் உள்ள கான்ஸ்டான்ஸ் ஏரிக்கு அருகே வரும் போது, முப்பத்தராயிரம் அடி உயரத்தில் பறந்து கொண் டிருந்தன. அந்த விமானங்களின் போக்கை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்த சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த விமானப் போக்கு வரத்துக் கட்டுப்பாட்டு அதிகாரிகள், உடனே ரஷ்யப் பயணிகள் விமானத்துடன் தொடர்பு கொண்டு, எதிரே சரக்கு விமானம் வருவது குறித்து எச்சரித்தனர். அந்த விமானத்தை மேலே கொண்டு செல்லுமாறு அறிவுறுத்தினர். ஆனால், அந்த விமானியிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை.

இதற்கிடையே, ரஷ்ய விமானத்தை நெருங்கி விட்டதை அறிந்த சரக்கு விமானத்தின் விமானி, அதை வேறு திசையில்




அப்துல்கலாம் அவர்களுக்கு மேயர் மு.க.ஸ்டாலின் சால்வை அணிவித்து, வாழ்த்து தெரிவித்தார்.

திருப்ப முயன்றார். அதற்குள் இரண்டும் நேருக்கு நேர் மோதின. அதன் விளைவாக 71 பேர் பலியாயினர். இந்தச் சம்பவம் உலகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

★ ★ ★

17-8-2002 அன்று அ.தி.மு.க. அரசின் மற்றொரு சாதனை(?)யாக முன்னாள் தி.மு.க. அமைச்சர்கள் வீடுகளில் - 29 இடங்களில் ஒரே நேரத்தில் லஞ்ச ஒழிப்புப் போலீசார் அதிரடி சோதனை நடத்தினார். அவர்கள்மீது ஊழல் தடுப்புச் சட்டப்படி 16ந்தேதி வழக்குப் பதிவு செய்யப்பட்டது. மறுநாளே 17ஆம் தேதி பொது ஊழியர்களாக இருந்தபோது அவர்கள் வருமானத்துக்கு மீறிச் சொத்துக்கள் சேர்த்ததற்காக அவர்கள்மீது வழக்கு என்று கூறி, அதற்காக கழக ஆட்சியில் அமைச்சராக இருந்த வீரபாண்டி ஆறுமுகத்திற்குச் சொந்தமான 12 இடங்களிலும், அ.தி.மு.க. ஆட்சியில் வீட்டு வசதித் துறை அமைச்சராக இருந்த புதுக்கோட்டை **ரகுபதிக்குச்** சொந்தமான 8 இடங்களிலும் சோதனை நடத்தப் பட்டது.



வீரபாண்டி ஆறுமுகம்.

காங்கிரஸ் ஜனநாயகப் பேரவையின் சார்பில் சட்டப் பேரவை உறுப்பினராக இருந்த புரசை **பா.ரெங்க நாதனுக்குச்** சொந்தமான


ஆறு இடங்களிலும் அன்றைய தினமே சோதனைகள் நடைபெற்றன.

இந்தச் சோதனைபற்றி நிருபர்கள் என்னைக் கேட்ட போது, ''கட்சிக்கு இன்னும் வேகமும் விறுவிறுப்பும் தருவதற்காக முதலமைச்சர் ஜெயலலிதா சோதனையை மேற்கொண்டுள்ளார். நாம் அனைத்து நடவடிக்கைகளையும் சட்டப்படி சந்திப் போம். சோதனையின்போது போலீசார் பெரிதாக எதையும் எடுத்துச் செல்லவில்லை என்று சொன்னார்கள். எதற்காக இந்தச் சோதனை நடத்தப்பட்டது என்று தெரியவில்லை'' என்று கூறினேன்.

★ ★ ★

அதற்குப் பிறகு சில மாதங்கள் கழித்து 28-11-2002 அன்று, அரசியல் பழிவாங்கும் நோக்கில் அ.தி.மு.க. அரசு, முன்னாள் கல்வி அமைச்சரும், கழகப் பொதுச் செயலாளருமான **பேராசிரியர்** - தி.மு.கழக முன்னாள் அமைச்சர்களான **கே.என்.நேரு** மற்றும் **ஐ. பெரியசாமி** ஆகியோர் வீடுகள் உட்பட 32 இடங்களில் சோதனையிட்டது.

ஆனால், அந்தச் சோதனைகளில் குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரங்கள் எதுவும் சிக்குமா என லஞ்ச ஒழிப்புப் போலீசார் அலசி ஆராய்ந்தனர். இருப்பினும் ஆதாரங்கள் ஏதும் கிட்டாமல் ஏமாந்து திரும்பினார்கள்.



கே.என். நேரு | ரகுபதி | ஐ. பெரியசாமி

அந்தச் சோதனை குறித்து செய்தியாளர்கள் பேராசிரியரைக் கேட்டபோது - ''உண்மை அல்லாத புகார்களை வைத்துக் கொண்டு, எனது வீட்டைச் சோதனை போட்டார்கள். வீட்டில் இருந்த 10, 12 பவுன் நகைகளையும், டி.வி., ரெப்ரிஜிரேட்டர், ஏர் கண்டிஷனர் இவைகள் பற்றிய விவரங்களையும், வீட்டில் உள்ள மேசை, நாற்காலி, பீரோ பற்றிய விபரங்களையும் பட்டியலிட்டு குறித்துக் கொண்டு சென்றிருக்கிறார்கள். அவர்கள் போடக்கூடிய எந்த வழக்கையும் சந்திக்க நான் தயாராக இருக்கிறேன். தி.மு.க. முன்னணித் தோழர்கள் வீடுகளை எல்லாம் சோதனைபோட வேண்டும் என்ற திட்டத்தோடுதான் இப்படி சோதனை போட்டிருக்கிறார்கள். தி.மு.க.வினர் எதையும் சந்திக்கத் தயாராக இருப்பார்கள். அந்த அடிப்படையில் நானும் எதையும் சந்திக்கத் தயாராக இருக்கிறேன்'' என்று கூறினார்.

எனவே அ.தி.மு.க. ஆட்சி எப்போது தமிழகத்தில் ஏற்பட்டாலும், இப்படிப்பட்ட சோதனைகள் என்பது தொடர்கதையாகவே நீடித்து வருகிறது.

★ ★ ★

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக மதுரை திருமங்கலத்தில், 29-6-2012 அன்று வைகோ பேசியதற்காக அவரை ''பொடா'' சட்டத்தில் கைது செய்யப் போவதாக ஜெயலலிதா அரசு மத்திய அரசின் துணைப்பிரதமர் அத்வானிக்குக் கடிதம் எழுதியது.

அதுபற்றி மத்திய உள்துறை இணை அமைச்சர் **ஐ.டி.சுவாமி,** ''மத்திய அரசிடம் மாநில அரசு அனுமதி கேட்டால் நாங்கள் வைகோவிடம் விவரம் கேட்போம். அவர் என்ன பேசினார் - எந்த நோக்கத்தில் பேசினார் - என்ற விவரங்களைக் கேட்போம். அதே நேரத்தில், அனுமதி கேட்பதாக இல்லாமல், வெறும் தகவலுக்காகத் தமிழக அரசு கடிதம் அனுப்பினால் மத்திய அரசு என்ன செய்ய முடியும்? சட்டம், ஒழுங்கு மாநில அரசு தொடர்பான பிரச்சினை. அதைக் கையாளும் அதிகாரம் அவர்களிடம் உள்ளது'' என்று கூறினார்.



ஏதாவது கிடைக்காதா என்று தேடித் தேடி மூக்குடைபட்டு மூளியாகத் திரும்பியது, ஜெயலலிதா அரசு.

3-7-2002 அன்றைய தினம் செய்தியாளர்கள் என்னைச் சந்தித்து, ''வைகோவைப் ''பொடா'' சட்டத்திலே கைது செய்வது குறித்து மத்திய அரசுக்கு ஜெயலலிதா எழுதி யுள்ள கடிதம்பற்றி உங்கள் கருத்து என்ன?'' என்று கேட்ட போது -

''சென்ற ஆண்டு இதே கால கட்டத்தில் அ.தி.மு.க. ஆட்சியில் என்னை சித்திரவதை செய்து கைது செய்தபோது, ம.தி.மு.க.வின் மத்திய அமைச்சர்கள், ''கருணாநிதி, நடிகர் திலகம் சிவாஜி கணேசனைவிட நன்றாக நடிக்கிறார்'' என்று பொதுக் கூட்டங்களில் கேலி பேசினார்கள். அந்தக் கடின மனம் எனக்குக் கிடையாது. இப்போது வைகோவைப்பற்றி ஜெயலலிதா சொல்லியிருப்பதும், பொடா சட்டத்தில் கைது செய்ய வேண்டுமென்று மிரட்டியிருப்பதும், இந்த ஆட்சியைப் பொறுத்த வரையில், அப்படி ஒன்றும் ஆச்சரியமானதல்ல.

''ஏனென்றால், கடந்த முறை ஜெயலலிதா ஆட்சியில் இருந்தபோது தடா சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தி, திருமதி **சுப்புலட்சுமியையும்,** அவரது கணவர் **ஜெகதீசனையும்** ஓராண்டு காலம் சிறையில் அடைத்திருந்த ஆட்சிதான் இந்த ஆட்சி. ஆகவே, தடா சட்டமானாலும், பொடா சட்டமானாலும் அரசியல் நோக்கத்தோடு பயன்படுத்துவதை தி.மு.க. ஏற்காது!'' என்று கூறினேன்.

அந்த நேரத்தில் அமெரிக்காவில் இருந்த வைகோ, அங்கிருந்த படியே விடுத்த அறிக்கையில், அ.தி.மு.க. அரசை எதிர்த்து, தான் செய்யும் விமர்சனத்தை தாங்கிக் கொள்ளும் ஜனநாயகப் பண்பு இல்லாததால், அரசியல் உள்நோக்கோடு பொடா சட்டத்தில் தன்னைக் கைது செய்யத் தமிழக முதலமைச்சர்



திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன்

ஜெயலலிதா நடவடிக்கை எடுத்துள்ளார் என்றும், ஆனால், தமிழக அரசின் அடக்கு முறைக்கு ஒரு போதும் அஞ்சமாட்டோம் - என்றும் தெரிவித்தார்.

11-7-2002 அன்று போலீசார் சென்னை விமான நிலையத்தில் காத்திருந்து - அமெரிக்காவிலிருந்து மும்பை வழியாக வந்த அவரை, சென்னை விமான நிலையத்திலேயே கைது செய்தார்கள்.

29-6-2002 அன்று மதுரை திருமங்கலத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பேசியதையடுத்து, அந்தக் கூட்டத்தில் பங்கேற்ற 9 பேர்மீது ''பொடா'' சட்டத்தில் திருமங்கலம் போலீசார் வழக்குப் பதிவு செய்தனர். வைகோ தவிர, மற்ற எட்டு பேரையும் ஏற்கனவே கைது செய்து சிறையில் அடைத்து விட்டனர்.

கைது செய்தது மாத்திரமல்லாமல், அவரைப் போலீஸ் வேனில் வைத்து இரவோடு இரவாக சென்னைக்கும் மதுரைக்கும், பிறகு மதுரைக்கும் வேலூருக்குமாக அலைக் கழித்தார்கள்.

சிறைக் கொட்டடியில் அவருக்கு மின்விசிறி வசதிகள்கூட முதலில் செய்து தரப்படவில்லை.

12-7-2002 அன்று தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த முதல்வர் ஜெயலலிதா, ''வைகோவைப் பொடா சட்டத்தின்கீழ் கைது செய்ததில் அரசியல் உள் நோக்கம் எதுவுமில்லை. புலிகள் ஆதரவைத் தொடர்ந்து அந்தக் கட்சியைத் தடை செய்வதற்கான நடவடிக்கைகளைத் தமிழக அரசு தொடங்கும்!'' என்றார்.

வைகோ அவர்களைத் தொடர்ந்து, 1-8-2002 அன்று தமிழ்த் தேசிய கட்சித் தலைவர் **பழ. நெடுமாறன்** ''பொடா'' சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டார். அவர் உலகத் தமிழர் அமைப்பு மாநாட்டில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசியதாகத் தமிழக கியூ பிரிவு போலீசார் அவரைக் கைது செய்தனர்.

நீதிபதி, அவரை ஒரு மாத காலம் நீதிமன்றக் காவலில் வைக்க உத்தர விட்டதையடுத்து, பழ. நெடுமாறன் சென்னை மத்திய சிறைச் சாலையில் அடைக்கப்பட்டார். அவருடன் சேர்ந்து பொடா சட்டத்தின்கீழ், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, ம.தி.மு.க.வைச் சேர்ந்த **கணேச மூர்த்தி, சிவந்தியப்பன், இளவரசன், பூமிநாதன், வழக்கறிஞரான அழகுசுந்தரம், பி.எஸ். மணியம், நாகராசன், கணேசன்** ஆகியோரும் ''பொடா'' சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, சேலம், கடலூர், திருச்சி, மதுரை சிறைகளில் அடைக்கப்பட்டனர்.

''வைகோவைத் தொடர்ந்து, பழ.நெடுமாறனும் பொடாவில் கைது செய்யப்பட்டுள்ளாரே?'' என்று என்னிடம் செய்தியாளர்கள் கேட்ட போது -

''உழுது விதைப்பாருக்கு உணவில்லை-
பிணிகள் பலவுண்டு - பொய்யைத்
தொழுதடிமைச் செய்வார்க்குச்
செல்வங்களுண்டு -
உண்மை சொல்வோர்க்கெல்லாம்
எழுதரியப் - பெருங்கொடுமைச் சிறையுண்டு!


- என்று பாரதி பாடியதுதான் நினைவுக்கு வருகிறது!'' என்று கூறினேன்.

★ ★ ★

26. எந்த நாளும் மறவாத அந்த நாள் நினைவுகள்

23-8-2002 அன்று கலைஞானி கமல்ஹாசன் அவர்கள், தனது உடலையே தானமாக அறிவித்துள்ளதாக ஒரு செய்தி ஏடுகளில் வெளிவந்ததை ஒட்டி, ''முரசொலி''யில் வெளி வந்த கேள்வி-பதில் பகுதியில், கீழ்க்கண்டவாறு எழுதியிருந்தேன்;


''தம்பி கலைஞானி கமல்ஹாசனின் அறிவிப்பு எல்லோ ரையும்போல எனது நெஞ்சையும் நெகிழச் செய்த ஒன்று! சமுதாயப் பணியும், மனிதநேயப் பணியும் ஆற்றுகின்ற வகையிலேயே அவர் தனது மன்றத்துப் பிள்ளைகளை ஊக்கப் படுத்தி வருவதும் பாராட்டத்தக்கதாகும். அவர் இன்னும் பல ஆண்டு காலம் வாழ்ந்து - கலைத் தொண்டும், மனிதநேயத் தொண்டும் ஆற்றிட வேண்டுமென நான் விரும்புகிற அதே நேரத்தில், தனது முடிவுக்குப் பிறகு தனது உடலையே தானமாகத் தருவதாக வெளி யிட்டுள்ள அவரது மனப் பாங்கு போற்றத்தக்கதும், புகழத்தக்கதுமாகும்'' என்று தெரிவித்த தோடு, செங்கற் பட்டு மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றிய காஞ்சிபுரம் **கே.டி.எஸ். மணி** அவர்கள், தான் மறைந்த பிறகு, தனது உடலை ராமச் சந்திரா மருத்துவக் கல்லூரி ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வழங்கியதையும், அவ்வாறே அவர் தனது 67வது




வயதில், 28-8-1993 அன்று மறைந்தவுடன், அவரது விருப்பப்படியே அவருடைய உடல் ராமச்சந்திரா மருத்துவ மனைக்குத் தானமாக ஒப்படைக்கப்பட்டதையும் பற்றி விரிவாக எழுதியிருந்தேன்.

என்னுடைய இந்தப் பதிலைப் படித்த கலைஞானி கமல் அவர்கள், 29-8-2002 தேதியிட்டு எனக்கொரு கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கடிதத்தில்-

''அன்புள்ள அய்யா அவர்கட்கு, வணக்கம். நெகிழ்தல், நெகிழ்விக்கத் தெரிந்தோர் மனதில்தானே உடனே நிகழும்? தமிழையும் தமிழர் உள்ளங்களையும் பல மாமாங்கங்களாய் அவ்வப்போது நெகிழ வைக்கும் தங்களைப் போன்ற மூதறிஞர் வாயால் வாழ்த்துப் பெற்றதில் நெகிழ்ந்தது நானும்தான். உடல் தானம் என்கிற சமுதாய நேயமுள்ள செயலை, நானே முன்னோடியாக நின்று செய்துவிடவில்லை என்பதை நான் முற்றும் உணர்கிறேன். இந்திய மக்கள் எனக்குக் கனிவுடன் தந்திருக்கும் சிறிய நட்சத்திர அந்தஸ்தை நற்செயல்களுக்குப் பயன்படச் செய்வதே எனது நோக்கம். உங்களுடைய கழகக் கண்மணிகளைப்போன்ற உன்னதச் சிந்தனையாளர்கள் பலருடைய நற்செயல்களின்பால் கவன ஈர்ப்பு செய்யும் ஒரு கருவியாகவே என்னையும், எனது இச்செயலையும் மக்கள்



தனது முடிவிற்குப் பிறகு, தனது உடலையே தானமாக வழங்கிட, தம்பி கமல்ஹாசனின் அறிவிப்பினை அறிந்து, ''உங்கள் மனப்பாங்கு'' போற்றத்தக்கதும் புகழத்தக்கதுமாகும்!'' என்று நான் கடிதம் எழுதினேன்.



கே.டி.எஸ்.மணி

ஏற்பர் என நம்புகிறேன். பெயர் தெரியாத பல தியாகிகளின் வாரி சாக இருப்பதில் நான் பெருமை கொள்கிறேன். உங்களுடைய அன்பு வார்த்தைகள், தொடர்ந்து நற்செயல் களில் என்னை ஊக்குவிப்பதாக மட்டுமின்றி, எனது பெயரில் இயங்கிவருகிற நற்பணி இயக்கத் தோழர்களுக்குப் பெரும் உற்சாகத்தை யும் ஏற்படுத்தியுள்ளது. நெஞ்சார்ந்த நன்றி. அன்புடன் கமலஹாசன்'' என்று எழுதி இருந்தார். காஞ்சிபுரம் கே.டி.எஸ். மணியின் அன்பு மகன் பொன்னம்பலமும் எனக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதியிருந்தார்.

★ ★ ★

2003ஆம் ஆண்டில் முதலமைச்சர் ஜெயலலிதா தலைமைச் செயலகத்தில் இட நெருக்கடி அதிகமாக உள்ளது என்று கூறி, ராணி மேரி கல்லூரியை இடித்துவிட்டு, அங்கே புதிதாகத் தலைமைச் செயலகத்தைக் கட்டப்போவதாக அறிவித்தார்.

அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ராணி மேரி கல்லூரி மாணவிகள், 5-4-2003 அன்று என்னைச் சந்தித்து முறையிட்ட தோடு, அவர்கள் தொடர்ந்து நடத்தவிருந்த போராட்டத் திற்குத் தி.மு.கழகத்தின் ஆதரவைக் கோரினார்கள்.

''எங்களுடைய ஆதரவு அவர்களின் போராட்டத்திற்கு உண்டு'' என்று நான் தெரிவித்தேன். உடனே அந்த மாணவி களை நான்தான் தூண்டி விடுவதாக என்மீது குற்றம் சாட்டி னார்கள். பண்பாட்டுச் சின்னங்கள் பற்றியோ - வரலாறு பற்றியோ கவலைப்படாமல், ராணி மேரிக் கல்லூரியை இடிப்பது என்பது அ.தி.மு.க. அரசின் விவேகமற்ற செயல்'' என்று 7-4-2003 தேதிய ''இந்து'' நீண்ட தலையங்கம் தீட்டியது.

★ ★ ★


மு.க. ஸ்டாலின், பொன்முடி, எ.வ. வேலு, இள.புகழேந்தி, எஸ்.ஏ.எம்.உசேன், ஜெ.அன்பழகன், திருச்சி பரணிகுமார் ஆகியோர் நான் கூறியதன்பேரில் ராணி மேரி கல்லூரிக்குச் சென்று, அங்கே போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவி களைச் சந்தித்து, ஆதரவினைத் தெரிவித்தார்கள்.

அவ்வளவுதான்! அன்று நள்ளிரவே அ.தி.மு.க. அரசின் காவல் துறை **மு.க.ஸ்டாலின் மற்றும் க.பொன்முடி, எஸ்.ஏ.எம்.உசேன், ஜெ.அன்பழகன்** ஆகியோரை ராணி மேரி கல்லூரிக்குள் அத்து மீறி நுழைந்ததாகப் பல்வேறு பிரிவுகளின்கீழ் பொய் வழக்குப் பதிவு செய்து, கைது செய்தனர். கைது செய்யப்பட்டு சென்னை சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கே இடம் இல்லை என்ற ஒரு காரணம் கூறி, அவர்களைக் கடலூர் அழைத்துச் சென்று, அங்கே சிறையில் அடைத்தனர்.

இந்தச் செய்தியினைக் கேள்விப்பட்ட கழகத் தோழர்கள் பல்லாயிரவர் ஆங்காங்கு மறியலில் ஈடுபட்டுக் கைதாகினர். மு.க. ஸ்டாலினுடன் சென்ற சட்டப்பேரவை உறுப்பினர் களான தம்பிகள் தண்டராம்பட்டு எ.வ. வேலு, இள. புகழேந்தி ஆகியோரையும் கைது செய்து சிறையிலே அடைத்தனர்.

‘‘ஸ்டாலினை நள்ளிரவில் கைது செய்திருக்கிறார்களே - சட்டத்தை மீறி கல்லூரிக்குள் அத்துமீறி சென்றார் என்பதற் காகவா? அல்லது அரசியல் பழிவாங்கும் காரியமா?‘‘ என்று செய்தியாளர்கள் என்னைக் கேட்டபோது -

‘‘சட்டத்தை மீறிய பிரச்சினையே கிடையாது. அத்துமீறிச் சென்றார் என்றால் தனியார் இடமா அது? ராணி மேரி கல்லூரி பொது இடம். 102 வயதான அம்மையார் ஆலிவ் பால், டாக்டர் ராமமூர்த்தி ஆகியோர் எப்படி அங்கே சென்று பார்த்தார்களோ, அதைப்போல சாப்பிடாமல் அங்கே வாடிக்கொண்டிருந்த மாணவிகளுக்கு ஆறுதல் கூறுவதற் காகவும், தி.மு.க. தலைவராகிய நான் அவர்களுடைய போராட்டத்திற்குத் தார்மீக ஆதரவு உண்டு என்று தெரிவித் திருப்பதைப்போல ஆதரவு தரப்படும் என்று சொல்லவும்,



புதிய தலைமைச் செயலகம் கட்ட, ஜெயலலிதா இடிப்பதாக அறிவித்த பழம்பெரும் ராணி மேரி கல்லூரி

அங்கே சென்றிருக்கிறார்கள். அவர்கள் சென்ற போது அவர்களை யாரும் தடுக்கவில்லை. அங்கே சிறிது நேரம் பேசியிருக்கிறார்கள். அப்போதும் தடுக்கவில்லை. மறுநாள் திடீரென்று நினைத்துக்கொண்டு - அதுவும் வழக்கம்போல் இரவு 12 மணிக்குமேல் கைது செய்திருக்கிறார்கள்'' என்று கூறினேன்.

14-4-2003 தேதியிட்ட **''தி ஸ்டேட்ஸ்மேன்''** ஆங்கில நாளிதழில், "Law less in Tamil Nadu" - எனத் தலைப்பிட்டு, "Time ripe for regime change" என்கிற துணைத் தலைப்பில் எழுதிய தலையங்கத்தில்-

''தமிழகச் சட்டமன்ற தி.மு. கழக உறுப்பினர்களில் ஒருவரும், இரண்டு முறை சென்னை மாநகர மேயராக இருந்தவருமான மு.க. ஸ்டாலின் அவர்களை, இட்டுக் கட்டிய குற்றச்சாட்டுகளின்மீது நள்ளிரவிலே கைது செய்த செயலின் மூலம், உச்ச நீதி மன்றம் 1994ஆம் ஆண்டிலும், 1997ஆம் ஆண்டிலும், முறையே ஜோகிந்தர் குமார் வழக்கிலும், டி.கே. பாசு வழக்கிலும், கைது செய்வதற்காக வழங்கிய விதிமுறை களை எல்லாம் எந்த அளவிற்கு மதிக்கவில்லை என்பதை மீண்டும் ஒரு முறை அ.இ.அ.தி.மு.க. அரசாங்கம் செய்து காட்டியிருக்கின்றது.

''மு.க.ஸ்டாலினின் தந்தை மு.கருணாநிதி அவர்கள் இரண்டாண்டுகளுக்கு முன்பு சாதாரண குற்றச்சாட்டுகளின்

பேரில் இதைப் போலவே நள்ளிரவில் கைது செய்யப்பட்ட போது - எதிர் காலத்தில் அரசியல் சட்டக் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் வேண்டுமென்றே பல தகராறு களை உருவாக்கும் இதுபோன்ற எண்ணத்தைத் தவிர்க்க வேண்டுமென்று மத்திய அரசின் உள்துறை, மாநில அரசினை எச்சரித்தது. எந்தக் காரணத்தை முன்னிட்டும் இதுபோன்ற தொரு துரதிருஷ்டமான செயல்களில் மற்றொரு முறை ஈடுபடாத அளவிற்கு மாநில அரசு பார்த்துக் கொள்ள வேண்டும்!'' என்றும் மத்திய அரசு அப்போது தெரிவித் திருந்தது.

''2001ஆம் ஆண்டு மீண்டும் பதவியேற்ற நாள் முதல், ஜெயலலிதாவின் அ.இ.அ.தி.மு.க. அரசின் அரசியல் பழி வாங்கும் நடவடிக்கைகளே அதன் செயல்பாடுகளாகவே இருக்கின்றன'' என்றெல்லாம் எழுதியிருந்தது.

ஆனால் ஜெயா அரசு இந்தத் தலையங்கங்களைப் பற்றி யெல்லாம் கவலைப்படுவதாக இல்லை.

நள்ளிரவின்போது ஸ்டாலினும், மற்றவர்களும் கைது செய்யப்பட்ட பிரச்சினையையும், அரசு அலுவலர் பிரச்சினையையும் சட்டப் பேரவையில் 10-4-2003 அன்று எழுப்பிட அனுமதி மறுக்கப்பட்ட காரணத்தால், அனைத்து எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த சட்டப்பேரவை உறுப்பினர்களும் குண்டுக்கட்டாக வெளியேற்றப்பட்டனர். தங்களது கோரிக்கை ஏற்கப்படாததைக் கண்டித்து, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சாலை மறியலில் ஈடுபட்டு, பின்னர் கைதாகி, வடக்கு கடற்கரைக் காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்று, காவலில் வைக்கப்பட்டார்கள்.

ராணி மேரி கல்லூரியை இடிப்பது ஏற்கக்கூடியதல்ல - மாணவிகள் போராட்டத்திற்கு முழுமை தார்மீக ஆதரவு

தலைவர் கலைஞர் பேட்டி

அப்போது அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களிடம் பேசிக் கொண்டிருந்த எனக்கு, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் கைதாகி, காவல் நிலையத்தில் வைக்கப்பட்ட தகவல் கூறப்பட்டது.

அந்தச் செய்தியினைக் கேள்விப்பட்ட நான், அவர்களைச் சந்திக்கச் செல்வதாகக் கூறிவிட்டு, மதியம் 12.30 மணியளவில் வடக்கு கடற்கரைக் காவல் நிலையத்திற்குச் சென்றேன். அங்கே வைக்கப்பட்டிருந்த சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் **எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம்,** பா.ம.க. தலைவர் **ஜி.கே. மணி,** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த **ஜி.பழனிச்சாமி,** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த **ஹேமச்சந்திரன்** ஆகியோரை நான் சந்தித்துப் பேசினேன். அங்கே வந்திருந்த **சோ.பாலகிருஷ்ணன், ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், ஆர்.நல்லகண்ணு** மற்றும் **பீட்டர் அல்போன்ஸ்** ஆகியோருடன் பேசினேன்.

★ ★ ★

அதைப்பற்றி அப்போது முதலமைச்சர் ஜெயலலிதா எவ்வளவு நாகரீகமாக அவையிலே விமர்சித்தார் தெரியுமா? ‘‘முன்னாள் முதல்வர் கருணாநிதி நான்கைந்து வாகனங்கள் பின்தொடர வடக்கு கடற்கரைக் காவல் நிலையத்துக்குச் சென்று கொண்டிருப்பதாக தகவல் வந்தது. அவர் உறுப்பினர் களைப் பார்த்துவிட்டு, அப்படியே சென்று விட்டால் பரவா யில்லை. சாலையில் உட்கார்ந்தால், அப்படியே பத்திரமாகத் தூக்கிக்கொண்டு போய் விட்டுவிடக் கூறியிருந்தேன். அவர் 43 உறுப்பினர்களுடன் போட்டோ வுக்குப் போஸ் கொடுத்துப் படம் எடுத்துவிட்டு, அண்ணா அறிவாலயம் சென்று விட்டார்’’ என்று கூறினார்.

நான் ‘‘சாகசம்’’ எதுவும் செய்யாமலேயே, ஜெயலலிதா ‘‘போஸ்’’ கொடுத்துவிட்டுத் திரும்பியதாகப் பேசினார். ‘‘சாகசக் கலை’’யில் கைதேர்ந்தவர் யார் என்பதும் நாட்டு மக்களுக்குத் தெரியாதா என்ன?




அராஜக அரசால், தங்கள் கல்லூரி இடிக்கப்படுவதை எதிர்த்து, ராணி மேரி கல்லூரி மாணவிகள் என்னைச் சந்தித்து, ஆதரவு கோரினர்

மு.க.ஸ்டாலின் கைதைத் தொடர்ந்து, தமிழக அரசின் காட்டுமிராண்டித்தனத்தைக் கண்டித்து, தமிழகமே போர்க் கோலம் கொண்டது. ஆனால் ஜெயலலிதா, பேரவையில் எதிர்க் கட்சியினர் பொறுப்புக் கெட்டத்தனமாக நடந்து கொள்வதாகக் கூற அதையும் கண்டித்து எதிர்க் கட்சிகள் வெளிநடப்பு செய்தன.

ஸ்டாலின் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து, பா.ம.க. நிறுவனர் டாக்டர் **ராமதாஸ்** அவர்களும், அகில இந்திய காங்கிரஸ் செயலாளர் **ஜி.கே. வாசனும்** அறிக்கை விடுத்தனர். **ஈ.வி.கே.எஸ். இளங்கோவன்** எப்போதும்போல, "ஜெயலலிதாவின் ஆட்சியை வீட்டிற்கு அனுப்பினால்தான் தமிழ்நாடு உருப்படும்"- என்றே பேட்டி அளித்தார்.

அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக சட்ட விரோதமாகச் சிறையிலே அடைக்கப்பட்ட மு.க.ஸ்டாலினையும், அவரோடு கைது செய்யப்பட்டவர்களையும் உடனே விடுதலை செய்ய வேண்டுமென்று எஸ்.ஏ.எம். உசேன், எம்.எல்.ஏ.வின் மகன் **எஸ்.எம். அப்துல் காதர்,** சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதியரசர்கள் சண்முகம் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர் முன்பாக, ஹேபியஸ் கார்பஸ் ரிட் மனுவினைத் தாக்கல் செய்தார். மனுதாரர் சார்பில் வழக்கறிஞர் **சங்கர சுப்பு** ஆஜராகி வாதாடினார்.

★ ★ ★



நியாயங்களைப்பற்றிக் கவலைப்படாத ''துக்ளக்ராணி''

11-4-2003 அன்று கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடியில் **எம்.ஆர்.கே. பன்னீர்ச் செல்வம்** தலைமையில் நடைபெற்ற அறப் போராட்டத்தில் கழகத்தினர் மீது போலீசார் நடத்திய தடியடிப் பிரயோகம் கொடுமையினும் கொடுமை! தாய் மார்கள் என்றும் பாராது அவர்களைத் தரையில் உருட்டிப் போலீசார் மிதித்த குரூரச் செயல், எத்தகைய ஒரு துரைத் தனத்திலும் பார்த்திருக்க முடியாத காட்சியாகும்.

சட்டமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் குரல்வளை நெரிக்கப் படுவது குறித்தும் - எதிர்க்கட்சித் தலைவர்களை முதலமைச்சர் ஜெயலலிதா தரக் குறைவாக விமர்சனம் செய்வது குறித்தும் - எதிர்க் கட்சி உறுப்பினர்கள்மீது காவல் துறையை ஏவிக் கைது செய்வது குறித்தும் - மற்றும் அ.தி.மு.க. அரசின் அராஜகப் போக்குகள் குறித்தும் - கலந்தாலோசிக்க 24-4-2003 அன்று அனைத்துக் கட்சி கலந்துரையாடல் கூட்டம் ஒன்றை கழகம் ஏற்பாடு செய்தது.

அந்தக் கூட்டத்தில், தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க., எம்.ஜி.ஆர். கழகம், இந்திய தேசிய லீக், தமிழ் மாநில தேசிய லீக், காங்கிரஸ் ஜனநாயகப் பேரவை, அகில இந்திய மூவேந்தர் முன்னேற்றக் கழகம், புதிய தமிழகம், உழவர் உழைப்பாளர் கட்சி, பாரதக் குடியரசுக் கட்சி, அகில இந்திய பார்வார்டு பிளாக் (வல்லரசு) ஆகிய கட்சிகள் கலந்து கொண்டன.

அன்று இரவு சைதாப்பேட்டையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நான் கலந்துகொண்டு உரையாற்றும் போது, பொடா சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துவது



ராணி மேரி கல்லூரி மாணவிகள் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்த தம்பி மு.க.ஸ்டாலினை, நள்ளிரவில் கைது செய்தனர், போலீசார்.

தொடருமானால், அந்தச் சட்டம் திரும்பப் பெறப்படும்வரை போராட்டமும் தொடரும்!'' என்று பேசினேன்.

26-4-2003 அன்று கோவையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, ''சட்டமன்ற ஜனநாயகமும், அ.தி.மு.க. ஆட்சியின் அராஜகமும்'' என்ற தலைப்பில் உரையாற்றினேன்.

★ ★ ★

2001ஆம் ஆண்டு, ஜெயலலிதா ஆட்சியில் என்னைக் கைது செய்தபோது, நீதிபதி **அசோக்குமார்,** என்னை மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லும்படியும், அதன் பிறகு சிறைக்குக் கொண்டு செல்லலாம் என்றும் கூறினார். ஆனால், என்னை மருத்துவமனைக்கே அழைத்துச் செல்லாமல், நேரடியாக சிறைச்சாலைக்குத்தான் அழைத்துச் சென்றார்கள்.

தம்பி **மு.க. ஸ்டாலின்** கைது செய்யப்பட்டபோதுகூட நீதிபதியிடம், தன்னை வெளியூர் சிறைக்கு அனுப்ப வேண்டாம் என்றும், சென்னைச் சிறையிலேயே வைக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டதால், நீதிபதி சென்னைச் சிறையிலேயே வைக்க ஆணையிட்டார். ஆனாலும், அவரை மதுரைக்குக் கொண்டு சென்று அங்கே சிறையில் அடைத்தார்கள்.

அதுபோலவே, பொடா சட்டத்தின்கீழ் அ.தி.மு.க. ஆட்சியில் கைது செய்யப்பட்ட **பழ.நெடுமாறனை** நீதிபதியின் இல்லத்தில் ஆஜர்படுத்தியபோது, நீதிபதி அவரிடம் ''ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?'' என்று கேட்டார்.

அப்போது நெடுமாறன், ''இதய அறுவை சிகிச்சை செய்து கொண்டவன் நான் - எனக்கு உடல் நலம் சரியில்லை - அதனால் என்னைச் சென்னை மத்தியச் சிறையில் அடைக்க உத்தரவிடுங்கள். வெளியூர் வேண்டாம்'' என்று வழக்கறிஞர் மூலம் தெரிவித்தார்.

அவரது இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, சென்னை மத்தியச் சிறையிலேயே அவரை வைக்க நீதிபதி உத்தரவிட்டார். நள்ளிரவில் சென்னை மத்தியச் சிறைக்குக் கொண்டு செல்லப்பட்ட நெடுமாறன் - சிறிது நேரத்தில் கடலூர் மத்தியச் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கே சிறையிலே அடைக்கப்பட்டார். இதெல்லாம் நீதிபதியின் தீர்ப்புக்கு ஜெயலலிதா அரசு தலைவணங்கிய (?) நிகழ்ச்சிகள்.

★ ★ ★

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஆதரவாகச் சென்னை ஆனந்த் திரையரங்கத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசியதாகத் தமிழர் தேசிய இயக்க அமைப்பின் பொதுச் செயலாளர் **சுப.வீரபாண்டியனுக்கு** இரண்டு ஆண்டு கடுங்காவல் - மற்றும் 3 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப் பட்டது. இதற்கான உத்தரவை சைதை 11வது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்ற மாஜிஸ்திரேட் பிறப்பித்தார். மேல் முறையீடு செய்வதற்கு அவகாசம் அளித்து, ஆகஸ்ட் 20ஆம் தேதிவரை தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டது. நீதி மன்றக் காவல் முடிந்து, பூவிருந்தவல்லி பொடா நீதி மன்றத்தில் தம்பி சுப.வீரபாண்டியன் ஆஜர் செய்யப்பட்ட போது, வீரபாண்டியனின் கைகளுக்கு விலங்குமாட்டப் போலீசார் முயல்வதாக நீதிபதியிடம் அவரது வழக்கறிஞர் **கோபி கிருஷ்ணா** தெரிவித்தார். வீரபாண்டியனிடமும் அதுபற்றி நீதிபதி கேட்டறிந்தார்.

''நீதிமன்றத்தின் உத்தரவின்றி யாருடைய கைகளுக்கும் விலங்கிடக்கூடாது என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது - நீதிமன்றத்தின் அனுமதி பெற்ற பின்னரே கை விலங்கிட வேண்டும். மிகக்கொடுமையான குற்றம் சாட்டப்


பட்டவர்களுக்கு மட்டும் நீதிமன்ற அனுமதி பெற்ற பின்பு விலங்கு மாட்டலாம். சட்டம் பாதுகாக்கப்படுவது மிகவும் அவசியம்!'' என சுப.வீரபாண்டியனின் பாது காப்புக்கு வந்திருந்த சென்னை மாநகரப் போக்குவரத்து உதவி ஆணையரிடம் நீதிபதி **ராஜேந் திரன்** கூறி, **சுப. வீரபாண்டி யனுக்கு** கை விலங்கு கூடாது என்று கூறினார்.

வழக்கை 24-9-2002ஆம் தேதிக்கு ஒத்தி வைத்தபோது, அந்த நீதிபதி அவர்களிடம் சுப. வீரபாண்டியன்- ''எனக்கு ஒரு வேண்டுகோள்'' என்றார். என்ன என்று கேட்டபோது, நீதி மன்றத்துக்கு வெளியே தன்னைப் பார்ப்பதற்காக காத்திருக்கும் தன் மனைவியையும், மகனையும் அரை மணி நேரம் சந்தித்துப் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டு மென்று கோரி, நீதிபதியும் அதனை ஏற்றுக்கொண்டு, அவர்களைப் பார்க்க அனுமதித் தார். ஆம் - அந்த அளவிற்குக் கொடுமை அப்போதே கட்ட விழ்க்கப்பட்டிருந்தது.



★ ★ ★

2002ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்களில் பழ.நெடுமாறன் தலைமையிலான தமிழர் தேசிய இயக்கத்துக்குத் தமிழக அரசு



ராமதாஸ் | ஜி.கே. வாசன் | ஈ.வி.கே.எஸ். இளங்கோவன்


தடை விதித்தது. அந்த இயக்கத்தின் தலைவரும், உறுப்பினர் களும் பொது அமைதிக்கு ஊறு விளைவிக்கும் பற்பல குற்றங் களில் ஈடுபட்டுள்ளனர் என்றும், சட்டத்தை நிர்வகிப்பதிலும், சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதிலும் அந்த அமைப்பினர் குறுக்கிடுகின்றனர் என்றும் கூறி, தமிழர் தேசிய இயக்கத்தைத் தடை செய்து அறிக்கை வெளியிடப்பட்டது.

தடை செய்யப்பட்ட அமைப்பான தமிழர் தேசிய இயக்கத்தின் சென்னை அலுவலகத்தைச் சீல் வைப்பதற்கு அரசு ஆணை வெளியிட்டது. அந்த அலுவலகத்தில் ஓர் அறை தவிர, மற்ற அறைகளில் அவருடைய பத்திரிகை அலுவலகம் இயங்கி வந்தது. தமிழர் தேசிய இயக்க அலுவலகம் செயல்படும் ஓர் அறைக்கு மட்டும் சீல் வைக்குமாறு அங்கே உள்ளவர்கள் தெரிவித்தபோதிலும், அதனைக் கேட்காமல், போலீசார் அனைத்து அறைகளுக்கும் சீல் வைத்தனர்.

★ ★ ★

11-7-2002 அன்று "பொடா" சட்டத்தின் கீழ் கைது செய்யப் பட்டு, வேலூர் சிறையிலே இருந்த வைகோவையோ மற்றவர் களையோ அ.தி.மு.க. அரசு விடுதலை செய்யாத நிலையில், அவரைச் சந்திப்பதற்காக 5-11-2002 அன்று வேலூர் சென்றேன்.

அந்தச் செய்தியைக் கேட்டு, நான் புறப்படுவதற்கு முன்பாகவே, என் வீட்டின் முன்னால் செய்தியாளர்கள் திரண்டு அதைப்பற்றிக் கேட்டார்கள்.



அப்போது நான், ‘‘குடும்பப் பாச உணர்வோடு செய்யப் படுகிற காரியம் இது. தம்பி முரசொலி மாறன் மருத்துவ மனையில் இருக்கும் நிலையில், வைகோ சிறையில் இருந்த வாறே, நலம் கேட்டு தந்தி அனுப்பியிருந்தார். நேரில் அவரால் வர முடியாத நிலையில், அவரது குடும்பத் தினர் அனைவரும் - அவரது துணைவியார், அவரது சகோதரர், அவரது மகன் வையாபுரி ஆகியோர் மருத்துவமனைக்கு நேரில் வந்தார்கள். அதேபோல எனக்கும் அந்தக் கடமை இருக் கிறது. அதைப் போலத்தான் நான் பார்க்கச் செல்கிறேன்’’ என்று கூறினேன்.

என்னுடன் வேலூருக்கு **நெப்போலியன் எம்.எல்.ஏ.,** வந்திருந்தார். மாவட்ட எல்லையில் **முகமது சகி** மற்றும் **ஆ.கிருஷ்ணசாமி** எம்.பி., மாவட்டக் கழகச் செயலாளர்கள் **ஆர். காந்தி, எ.வ. வேலு, சிவானந்தம், ஈ.ஏ.பி., சிவாஜி** மற்றும் நூற்றுக்கணக்கான கழகத் தோழர்கள் திரண்டு வரவேற்றனர். சிறை வாயிலில் மதிமுக மாவட்டச் செயலாளர் **நடராசன்,** வேலூர் சுப்பிரமணியம் ஆகியோர் என்னை வரவேற்றனர்.

வேலூர் சிறையில் காலை 11.45 மணியளவில் வைகோவைச் சந்தித்து, சுமார் ஒரு மணி நேரம் பேசிக்கொண்டிருந்தேன். நான் எழுதிய ‘‘திருக்குறள் - கலைஞர் உரை’’ என்ற புத்தகத்தைக் கொடுத்தேன்.

வெளியே வந்த என்னைச் செய்தியாளர்கள் மீண்டும் சந்தித்து, பல்வேறு கேள்விகளைக் கேட்டார்கள் - ‘‘சிறையிலே வைகோ எப்படியிருக்கிறார்?’’ என்று கேட்டதற்கு, ‘‘நலமாக



வேலூர் சிறை வாயிலில் திரண்டிருந்த கழகத் தோழர்கள்

இருக்கிறார் - தெளிவாக இருக்கிறார்- வைராக்கியத்தோடு இருக்கிறார்'' என்றேன்.

''சந்திப்பில் அரசியல் முக்கியத்துவம் உண்டா?'' என்ற கேள்விக்கு - ''இந்தச் சந்திப்புக்கும் அரசியலுக்கும் சம்பந்தம் கிடையாது'' என்று கூறினேன்.

''நான் ''சங்கத் தமிழ்'' எழுதும்போது, அவர் என் அருகே இருந்தார். அதைப் பற்றியெல்லாம் பேசினோம். வெளியிட இருக்கின்ற ''தொல்காப்பியப் பூங்கா'' பற்றி ஆவலோடு கேட்டார். அதைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தோம். பொதுவாக குறளோவியம், சங்கத் தமிழ், தொல்காப்பியப் பூங்கா இவைகளைப்பற்றியே நீண்ட நேரம் எங்களுடைய பேச்சு அமைந்தது.

''பிறகு, அவருடைய உடல் நலம், குடும்ப நலம் இவைகளைப்பற்றிக் கேட்டறிந்தேன். அவரும் என்னுடைய நலத்தைப்பற்றியும் - குறிப்பாக முரசொலி மாறன் அவர்களின் நலத்தையும் அக்கறையோடு கேட்டார். எங்களுக்கிடையே நீண்ட காலமாக அரசியல் உறவைவிட, அதற்கும் அப்பாற்பட்டு, அண்ணன் - தம்பி என்ற குடும்ப உறவும் உண்டு. அந்த அடிப்படையிலேதான் இந்தச் சந்திப்பு நடைபெற்றது'' என்று கூறினேன்.

இறுதியாக - ''தமிழகத்தில் நடைபெறும் அரசுபற்றி மொத்தமாகக் கூறுங்கள்'' என்று கேட்டபோது, ''இப்போது அரசா நடக்கிறது?'' என்று பதில் அளித்தேன்.

★ ★ ★



பத்திரிகை சுதந்திரப் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில், அ.தி.மு.க. அரசின் சர்வாதிகாரத்திற்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றினோம்.

எனது வேலூர் பயணம்பற்றி வார ஏடுகள் எல்லாம் அவையவைகளின் விருப்பம்போல செய்திகள் வெளியிட்டன. இரண்டு குடும்பத்தின் இல்லத் தரசிகளின் சந்திப்பின் அடிப்படையிலேதான் நான் வேலூருக்குச் சென்றதாக எழுதியிருந்தார்கள். வேறு சில ஏடுகள், ''மீண்டும் கூட்டணிக்கு முயற்சி - இணைப்புக்கு முயற்சி - அதற்கான பேச்சு வார்த்தை சிறையில்'' - என்றெல்லாம் எழுதியிருந்தன.

''அந்தச் சந்திப்பில் அரசியல் எதுவும் கிடையாது - அண்ணன் தம்பி உறவு என்ற முறையில் நடந்த சந்திப்புதான்'' - என்று செய்தியாளர்களிடம் கூறிய பிறகும், அந்த ஏடுகள் தங்கள் கற்பனையை நிறுத்தியபாடில்லை.

துக்ளக் ஆசிரியர் **''சோ,** எங்கள் சந்திப்பு பற்றி கிண்டலாகவும், கேலியாகவும் ''வேலூர் சிறையில் வைகோவைச் சந்தித்த கருணாநிதி, தொல்காப்பியப் பூங்காபற்றிப் பேசியதாகச் சொல்லியுள்ளார். நேரம் போதவில்லை போலிருக்கிறது. இல்லா விட்டால், கிரிக்கெட் மேட்ச் பற்றியும், சொந்த ஊரில் மாடு கன்று போட்ட செய்தி எனப் பல பிரச்சினைகள் பற்றிப் பேசியிருப்பார்கள்'' என்று எழுதியிருந்தார்.

அதைப்பற்றி என்னைக் கேட்டபோது, ''உண்மைதான்! நேரமிருந்தால் நாங்கள் அதையும் பேசியிருப்போம்! ஆனால், ''சோ''வுக்குக் குழந்தை பிறந்த செய்தியை எங்களிடம் யாரும் கூறவில்லையே?'' என்று பதிலளித்தேன்.

என்னைச் சந்தித்ததுபற்றி வைகோ செய்தியாளர்களிடம் கூறும்போது, அரசியல் உலகில் அண்ணன் தம்பி பாச உணர்வை உருவாக்கியவர் அண்ணா. அந்த ரீதியில் தி.மு.க.

தலைவர் அண்ணன் கலைஞர் என்னை வேலூர் சிறையில் சந்தித்தார். அவர் என்னைச் சிறையில் சந்தித்தது நெகிழ்ச்சியான சந்திப்பு. அப்போது நாங்கள் அரசியல் பேசவில்லை. அவரது இலக்கியப் படைப்புகள் - வெளிவர இருக்கின்ற தொல்காப்பியப் பூங்கா குறித்துத்தான் நாங்கள் நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தோம்.

எங்கள் சந்திப்பு இலக்கியச் சோலையில் வீசிய பாசத் தென்றலாகத்தான் இருந்தது. இந்தச் சந்திப்பை அரசியல் யூகங்களுடன் சிந்திக்கத் தேவையில்லை. தமிழக வரலாற்றில் ஜெயலலிதாவின் ஆட்சிக் காலம் இருண்ட காலம் என நான் முன்பே கூறியிருந்தேன். தற்போது அ.தி.மு.க. அரசை எதிர்த்து அனைத்துத் தரப்பினரும் போராடி வருகின்றனர்'' என்றெல்லாம் கூறினார்.

★ ★ ★

''பொடா''வில் கைதான பழ.நெடுமாறனும், சுப.வீரபாண்டியனும் தங்களை ஜாமீனில் விடக் கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தில் 2002 நவம்பர் இரண்டாவது வாரத்தில் மனு தாக்கல் செய்தனர்.

வைகோ உள்ளிட்டோரைப் பொடா சட்டத்தின்கீழ் தமிழக அரசு கைது செய்துள்ளதைக் கண்டித்து, ம.தி.மு.க.வினர் திரட்டும் ஒரு கோடி கையெழுத்து இயக்கத்துக்கான படிவத்தில் முதல் கையெழுத்தினை அந்தக் கட்சியின் அவைத் தலைவர் **எல். கணேசன்** என்னைச் சந்தித்துப் பெற்றார். ஒரு கோடி பேர் கையெழுத்திட்டு, அதைக் குடியரசுத் தலைவருக்கும் பிரதமருக்கும் கொடுத்தனர்.

21-2-2003 அன்றைய தினம் மக்களவையில் பேசிய தி.மு. கழக நாடாளுமன்றத் தலைமைக் கொறடாவான **பழனிமாணிக்கம்,** பொடா சட்டம் தவறான முறையில் தமிழக அரசினால் பயன்படுத்தப் படுகிறது என்றும், அந்தச் சட்டத்தின்கீழ் வைகோ கைது செய்யப்பட்டு மாதக்கணக்கில் ஆகியும் அதுபற்றி மத்திய அரசு மவுனம் சாதிப்பதாகவும்,

உடனடியாக அவரை விடுவிப்பதற்கான முயற்சியிலே ஈடுபட வேண்டு மென்றும் கேட்டுக்கொண்டார்.

பின்னர், அதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய சட்ட அமைச்சர் **அருண்ஜேட்லி** அவர்கள், "பொடா சட்டத்தைத் தீவிரவாதிகளுக்கு எதிராக மட்டுமே பயன்படுத்த வேண்டும் - வைகோ கைது தேவையற்றது!" என்றார்.


★ ★ ★

பொடா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட வைகோ, பழ. நெடுமாறன் மற்றும் பலர் ஆறேழு மாதங்களுக்கு மேலாக சிறையில் இருப்பதுபற்றிக் கலந்தாலோசிக்க, 12-3-2003 அன்று, சென்னையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்று; பழிவாங்கும் கொடுஞ்செயலுக்கு பொடாவைப் பயன்படுத்தும் அ.தி.மு.க. அரசுக்குக் கண்டனம் தெரிவித்த தோடு, வைகோ உள்ளிட்ட அனைவரையும் விடுதலை செய்யக் கோரி, 29-3-2003 அன்று மாவட்டத் தலைநகரங் களில் உண்ணாவிரதம் இருப்பது என்றும் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

29ஆம் தேதியன்று சென்னையில் நடைபெற்ற உண்ணா நோன்பினை நான் துவக்கி வைத்தேன்.

வேலூர் சிறையிலிருந்து வைகோ வழக்கறிஞர் மூலமாக எனக்கும், அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் நன்றி தெரிவித்ததோடு - "தி.மு.கழகத்தோடு சேர்ந்து களம் காண்பது ம.தி.மு.க.வின் தலையாயக் கடமையாகும்" என்றும் அறிக்கை விடுத்திருந்தார். 12-4-2003 அன்று பத்திரிகையாளர் **நக்கீரன் கோபால்**மீதும் பொடா சட்டம் பாய்ந்தது.

15-4-2003 அன்று மாலையில், பிரதமர் **வாஜ்பாய்** அவர்களுக்கும், துணைப் பிரதமரான **எல்.கே.அத்வானி** அவர்களுக்கும் நான் எழுதிய கடிதத்தில், தமிழகத்தில் எல்லை மீறிய வகையில் பொடா சட்டப் பிரிவுகள் தவறாகப் பயன்படுத்தும் நிலை உருவாகி இருப்பது பற்றி விரிவாக விளக்கியிருந்தேன். அந்தச் சட்டத்தின்கீழ் 20 அரசியல்வாதிகள்



பத்திரிகை சுதந்திரப் பாதுகாப்புக் குழுவினர் நடத்திய கூட்டத்தில்
திரண்டிருந்த மக்கள் பெருவெள்ளம்

உட்பட 41 பேர் கைதாகியிருப்பதைப் பற்றியும் - ''அந்தச் சட்டத்தை ரத்து செய்வது குறித்து பரிசீலிப்பதுதான் நல்லது'' என்றும் எழுதியிருந்தேன்.

★ ★ ★

பத்திரிகையாளர்கள் மற்றும் பத்திரிகைகள்மீது எடுக்கப் பட்ட ஜனநாயக விரோதமான நடவடிக்கைகளைக் கைவிட வலியுறுத்தியும், தமிழக அரசின் ஜனநாயக விரோத நடவடிக் கைகளை எதிர்த்தும் **''பத்திரிகை சுதந்திரப் பாதுகாப்புக் குழு''** சார்பில், அனைத்துக் கட்சித் தலைவர்கள் பங்கேற்ற கண்டனப் பொதுக் கூட்டம் ஒன்று, 13-5-2003 அன்று சென்னையில் காமராஜர் அரங்கில் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்திற்கு **''ப்ரண்ட் லைன்''** பத்திரிகையின் ஆசிரியர் நண்பர் **என். ராம்** தலைமை வகித்தார். அந்தக் கூட்டத்தில் பேசிய என்னுடன், டாக்டர் **ராமதாஸ், ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், ஆர்.நல்லகண்ணு, என்.வரதராசன், டாக்டர் கிருஷ்ணசாமி, எல்.கணேசன், வாசந்தி** ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

''பொடா சட்டத்தைத் தவறாகப் பயன் படுத்தும் அ.தி.மு.க. அரசின் எதேச்சதிகாரத்தை வீழ்த்த - சர்வாதிகாரத்தைச் சாய்க்க - அனைத்துக் கட்சியினரும் ஒன்று சேர்வோம் - வெல்வோம்!'' என்று நான் பேசினேன்.

★ ★ ★

16-12-2003 அன்று நாடாளுமன்றத்தில் பொடா சட்டத் திருத்த மசோதா மீதான விவாதத்தில் நாடாளுமன்ற உறுப் பினர் என்ற முறையில் வைகோ கலந்துகொள்ள - பொடா நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து, அந்த மனு நிராகரிக்கப் பட்டதை எதிர்த்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தார். அதை விசாரித்த நீதிபதி **ஏ. குலசேகரன்,** வைகோவை நாடாளுமன்ற விவாதத்தில் கலந்து கொள்ள - 15-12-2003 அன்று தீர்ப்பளித்தார்.

அன்றிரவே வேலூரிலிருந்து வைகோவை சென்னைக்கு அழைத்து வந்து, 16ஆம் தேதி காலையில் டெல்லிக்குச் செல்லும் முதல் விமானத்தில் அனுப்பிவைக்க வேண்டு மென்றும் கூறியிருந்தார்.

ஆனால், அந்தத் தீர்ப்பை எதிர்த்து, அ.தி.மு.க. அரசின் சார்பில் அட்வகேட் ஜெனரல் **என்.ஆர். சந்திரன்** அவர்கள், 15ஆம் தேதி இரவே மேல் முறையீட்டு மனுவினை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

அன்றைய தலைமை நீதிபதி **சுபாஷன் ரெட்டி** வெளியூர் சென்றிருந்ததால், மூத்த நீதிபதி **சிர்புர்கர்** அவர்களின் வீட்டிற்கே சென்று மனு தாக்கல் செய்து, நீதிபதிகள் **சிர்புர்கர், கண்ணதாசன்** ஆகியோர் அடங்கிய பெஞ்ச், அந்த வழக்கை இரவு 9.45 மணிக்கு விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, இரவு 11 மணிவரை விசாரணை நடந்தது. அரசு தரப்பில் என்.ஆர். சந்திரனும், வைகோவுக்காக (இன்றைய நீதிபதி) **கே. சந்துரு** அவர்களும் வாதிட்டனர். இறுதியாக இரவு 11.45 மணியளவில் நீதிபதி குலசேகரன் வைகோ டெல்லி செல்லலாம் என்று பிறப்பித்த உத்தரவை ரத்து செய்தனர்.


★ ★ ★

27. என்றும் மறக்க முடியாத மாறன்!

இருதய வால்வு கோளாறு காரணமாக ஏற்கனவே அப்பல்லோ மருத்துவ மனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு, பூரண குணமடைந்த முரசொலி மாறன், தொடர்ந்து தனது மத்திய அமைச்சர் பணியினைச் செவ்வனே பார்த்து வந்தார்.

இதற்கிடையே நள்ளிரவில் என் வீட்டுக் கதவை உடைத்து, உள்ளே நுழைந்து, உறங்கிக் கொண்டிருந்த என்னைக் கைது செய்வது என்ற பெயரால் மிருகத்தனமாகப் போலீசார் இழுத்துச் சென்றபொழுது, விசாரிக்க வந்த முரசொலி மாறனை, அவர் மத்திய அமைச்சர் என்றும் பாராமல், காவல் துறையினர் இழுத்துக் கீழே தள்ளியதின் காரணமாக அவரது உடல் நிலை கடும் பாதிப்புக்கு ஆளானது. அத்தகைய நிலையிலேயும் அவர் தனது பணியைத் தொடர்ந்து வந்தார்.

அவரது உடல் நிலை மீண்டும் டெல்லியிலே பாதிக்கப் பட்டு, 24-7-2002 அன்று அங்குள்ள அகில இந்திய விஞ்ஞான மருத்துவக் கழகத்தில் சேர்க்கப்பட்டு, இருதய வால்வு மாற்று அறுவை சிகிச்சை நடைபெற்றது. அதிலே ஓரளவு குணம் பெற்று, அத்துடன் பணிகளை ஆற்றி வந்த நிலையில், 23-9-2002 அன்று சென்னை அப்பல்லோ மருத்துவ மனையில் பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டார்.



மறுநாள் அங்கே நடத்தப்பட்ட சோதனையில், அவருக்கு டெல்லியில் அறுவை சிகிச்சை செய்த இடத்தில், சிறு பாதிப்பு ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டது. உடனடியாக டெல்லியில் அவருக்கு அறுவை சிகிச்சை செய்த மருத்துவர்கள் சென்னைக்கு வரவழைக்கப்பட்டனர்.

★ ★ ★

25-9-2002 அன்று பிற்பகலில், தம்பி மாறனுக்கு மீண்டும் இருதய வால்வு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. ஏற்கனவே அறுவை சிகிச்சை செய்யப்பட்ட வால்வில் ஏற்பட்ட பாதிப்பு, இந்த அறுவை சிகிச்சையின் மூலம் சரி செய்யப்பட்டது.



முரசொலி மாறன்

அறுவை சிகிச்சை நிபுணர் திரு.கிரிநாத் தலைமையில், இருதய சிகிச்சை நிபுணர் கே. சுப்பிரமணியம் மற்றும் மருத்துவர்கள் அடங்கிய குழு இந்த அறுவை சிகிச்சையை மேற்கொண்டது.

பிரதமர் **வாஜ்பய்** அவர்களும், மத்திய நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்த **சத்ருகன் சின்கா** அவர்களும் தொலை பேசியில் தொடர்பு கொண்டு மாறன் உடல் நிலை குறித்து விசாரித்தனர்.

27-9-2002 அன்று அப்பல்லோ மருத்துவமனையில் நானும், பேராசிரியரும், வீராசாமியும், ஸ்டாலினும், துரைமுருகனும் மற்றவர்களும் அமர்ந்திருந்தோம். அதே மருத்துவமனையில் வேறொரு அறையில்தான் தம்பி மாறன் சிகிச்சை பெற்று வந்தார். அப்போது மாறன் என்னைப் பார்க்க விரும்புவதாக அழைத்தார்கள்.

"அறுவை சிகிச்சை முதல் நாள்தான் முடிந்துள்ள நிலையில், யாரும் அருகே வரக்கூடாது, நான் இங்கேதான் இருக்கிறேன் என்று கூறுங்கள்" என்று சொல்லி அனுப்பினேன். இருந்தாலும் அவர் கேட்காமல், பிடிவாதமாக வற்புறுத்தியதின் பேரில் நான் அங்கே சென்றேன்.



திருக்குவளையில் நான் பிறந்த இந்த வீட்டில்தான், முரசொலி மாறனும் பிறந்தார்.

மாறன் எதுவும் அப்போது பேசவில்லை. என்னைப் பார்த்துக்கொண்டே அவர் படுத்திருந்தார். ஐந்தாறு நிமிடங்கள் கழித்து, மாறனின் மகளும், என் பேத்தியுமான **அன்புக்கரசி,** ''அப்பா! தாத்தா பார்த்துவிட்டார், வெளியே போய் அமர்ந்து கொள்ளலாமா?'' என்று கேட்டார். அதற்கு மாறன், ''இல்லையில்லை- இங்கேயே உட்காரட்டும்'' என்று கை ஜாடையாகத் தெரிவித்தார்.

அப்போதும் எதுவும் பேசவில்லை. பதினைந்து நிமிடம் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தார். மீண்டும் அரசி, ''அப்பா! தாத்தா இப்போது போகலாமா?'' என்றார். உடனே கோபம்கொண்டு, மகள்மீது சீறி விழுந்து, ''இல்லையில்லை- போகக் கூடாது - இருக்கட்டும்'' என்று கூறி பார்த்துக் கொண்டே இருந்தார்.

மேலும் பத்து நிமிடங்கள் அங்கேயே உட்கார்ந்துவிட்டு, நானாக வெளியே வந்து, ''லிப்ட்'' வழியாக இறங்கும்போது, மாறனின் துணைவி மல்லிகா, என் வேதனையைக் குறைக்க எண்ணி, கேலியாக, ''மாமாவை மருமகப் பிள்ளை பார்த்துக் கொண்டே இருந்தார்'' என்றார். அப்போது நான் சொன்னது, என் நினைவிலேயே உள்ளது.

''மல்லிகா! மாறனுக்கு இப்போது 68 வயது ஆகிறது! நீ அவரை மணந்து நாற்பதாண்டுகள்கூட ஆகவில்லை. ஆனால்,

நான் அவனைத் தூக்கி வளர்த்து 68 ஆண்டு காலமாக அவனோடு பழகியவன். அவனை வளர்த்தவன்'' என்று சொன்னேன்.

தொடர்ந்து, அப்பல்லோ மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த முரசொலி மாறனின் உடல் நிலையில், அக்டோபர் மத்தியில் சற்று பின்னடைவு ஏற்பட்டது. அவரது நுரையீரல் மிகவும் பாதிக்கப்பட்டது.


அப்பல்லோ மருத்துவமனையிலே உள்ள மூத்த மருத்துவர்கள் தெரிவித்த யோசனையின்படி பிரதமர் வாஜ்பய் அவர்களிடமும் கருத்தினைப் பெற்று, அமெரிக்காவிற்கு மாறனை அழைத்துச் சென்று சிகிச்சை அளிக்கலாம் என்று ஹூஸ்டன் நகரிலே ''மெத்தாடிஸ்ட்'' மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளிப்பதென்று முடிவெடுக்கப் பட்டது.

13-11-2002 இரவு மாறன் அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவர் சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றதை யொட்டி, பிரதமர் என்னிடம் கலந்து பேசிவிட்டு, மாறன் வகித்து வந்த மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை பொறுப்புக்களை மத்திய அமைச்சர் **அருண்ஷோரி** தற்காலிகமாகக் கவனிப்பார் என்று மத்திய அரசு அறிவித்தது.

★ ★ ★



எனது 60-ஆம் ஆண்டு திருமண விழாவில் அருகே இருந்து ரசிக்கும் மாறன்



என்னுடன் முரசொலி மாறன் - மு.க.ஸ்டாலின்

அமெரிக்காவில் சிகிச்சை பெற்று வந்த மாறனின் உடல்நிலை குறித்து அடிக்கடி பிரதமர் வாஜ்பய் அவர்கள் தொலை பேசியிலே என்னைத் தொடர்பு கொண்டு விசாரித்துக் கொண்டிருந்தார்.

2003ஆம் ஆண்டு ஜனவரி மாதக் கடைசியில், மாறனுக்கு ஏற்கனவே இருதய 'மிட்ரல் வால்வு' மாற்று அறுவை செய்யப் பட்ட இடத்தில், மீண்டும் ஒரு அவசர அறுவை சிகிச்சை செய்ய வேண்டு மென்று அமெரிக்க மருத்து வர்கள் முடிவு செய்து - 29-1-2003 அன்று அந்த அறுவை சிகிச்சை நடை பெற்றது. மாறன் அறுவை சிகிச்சைக்குப் பிறகு நலமோடு இருப்பதாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சகத்தின் செய்திக் குறிப்பு வெளியிடப்பட்டது.


மத்திய அமைச்சர் என்ற முறையில், முரசொலி மாறனின் மருத்துவச் செலவுகளை மத்திய அரசுதான் ஏற்க வேண்டுமென்றாலும், அ.தி.மு.க.வினர் சிலர் அதைப்பற்றி விமர்சனம் செய்த காரணத்தால், தந்தையின் மருத்துவச் செலவுகளைத் தாங்களே ஏற்பதாக என் பேரன் **கலாநிதி** என்னிடம் கூற, அந்தத் தகவலை நான் பிரதமர் வாஜ்பாய் அவர்களுக்குக் கடிதம் மூலமாகத் தெரிவித்தேன்.

அதையொட்டி நான் விடுத்த அறிக்கையில், ''மத்திய அமைச்சர்களின் மருத்துவச் செலவுகளை இதுவரையில் மத்திய


அரசு ஏற்றுக் கொள்வது என்பதுதான் வழக்கத்தில் இருக்கிறது என்பதற்குப் பல முன் மாதிரிகள் இருந்த போதிலும், அதற்கு மாறாக, முரசொலி மாறனின் மொத்த மருத்துவச் செலவுகளை, அவரது மகன் கலாநிதி மாறன் அவர்களே ஏற்றுக் கொள்வதாகக் கூறி, இந்தத் தகவலை பிரதமர் அவர்களுக்குக் கடிதம் மூலம் நான் தெரிவித்துள்ளேன். முரசொலி மாறனுக்குத் துணையாக அவருடன் சென்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் செலவுகளை கலாநிதி மாறன் தான் ஏற்றுக் கொண்டு செய்து வருகிறார் என்பதையும், வேண்டுமென்றே திட்டமிட்டுத் தவறாகச் செய்தி வெளியிடும் பத்திரிகைகளுக்குத் தெரிவித்துக் கொள் கிறேன். ஏற்கனவே சென்னை அப்பல்லோ மருத்துவமனைச் செலவுகளையும் கலாநிதி மாறன்தான் ஏற்றுக் கொண்டு, பணம் கட்டியுள்ளார் என்பதையும் இப்போது நினைவூட்டுகிறேன்'' என்று தெரிவித்தேன்.

★ ★ ★

13-11-2002 அன்று ஹூஸ்டன் நகருக்கு, சிறப்புச் சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்ட தம்பி முரசொலி மாறன், 6-9-2003 அன்று சென்னைக்கு அழைத்து வரப் பட்டார். விமான நிலையத்திலிருந்து, அவரது தொடர் சிகிச்சைக்காக ராமச்சந்திரா மருத்துவ மனையில் அனுமதிக் கலாம் என்று முதலில் திட்டமிட்டு, பின்னர் மனிதாபிமான



முரசொலி மாறனுக்கு இனிப்பு ஊட்டி மகிழும் அவரது தாய் சண்முகசுந்தரத்து அம்மையார் - அதாவது என் சகோதரி



என்னுடன் முரசொலி மாறனும், அவரது சகோதரர் செல்வமும்

மற்ற முறையில் ஆட்சியிலே இருந்தோர், அந்த மருத்துவமனை நிர்வாகிகளுக்குச் செய்த மறைமுகமான மிரட்டல் காரணமாக, அங்கே அனுமதிக்க இயலாமல், சென்னை அப்பல்லோ மருத்துவமனையிலேயே அனுமதிக்கப்பட்டார். மருத்துவ மனைக்குச் சென்று மாறனின் உடல் நலம் குறித்துக் கேட்டறிந்தேன்.

மருத்துவ மனையில் முரசொலி மாறனைப் பார்ப்பதற்காக பிரதமர் வாஜ்பய் அவர்கள், 13-9-2003 அன்று அப்பல்லோ மருத்துவமனைக்கு வருகை தந்து, சிகிச்சை பெற்று வந்த மாறனைப் பார்த்தார். மாறனைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டார். மாறனும் கண் விழித்துப் பார்த்தார். அதன் பிறகு தனி அறையில் என்னையும் சந்தித்து உரையாடினார். மாறன் உடல் நிலை குறித்து நீண்ட நேரம் என்னிடம் பேசினார்.

அவரிடம் நான் தஞ்சை, திருச்சி டெல்டா மாவட்ட விவசாயிகள் தண்ணீர் இல்லாமல், சாகுபடி செய்ய முடியாத நிலையில் இருப்பதைக் குறிப்பிட்டு, உடனடியாகக் காவிரி ஆணையத்தைக் கூட்டி, கலந்து பேசி, டெல்டா மாவட்ட விவசாயிகளைக் காப்பாற்றும்படிப் பிரதமரிடம் கேட்டுக் கொண்டேன்.

"அந்தக் கூட்டத்தைக் கூட்டினால் தமிழக முதலமைச்சரே கலந்து கொள்ளமாட்டாரே, அவருக்குத்தான் காவிரி ஆணையத்தையே பிடிக்காதே!" என்றெல்லாம் வாஜ்பாய் என்னிடம் கூறினார்.



முரசொலி மாறன் மல்லிகா திருமணம் நடைபெற்ற போது.

அகில இந்திய அளவில் உள்ள பல்வேறு கட்சிகளின் தலைவர்களும், முன்னணியினரும் தொடர்ந்து நேரிலும், தொலைபேசி வாயிலாகவும் முரசொலி மாறன் உடல்நிலை குறித்து தொடர்பு கொண்டு கேட்டனர்.

அதற்குப் பிறகு, சுமார் இரண்டரை மாதங்கள்தான் தம்பி மாறன் எங்களோடு இருந்தார். 2003ஆம் ஆண்டு, நவம்பர் 23ஆம் தேதி இரவு 7 மணியளவில், நான் அவர் அருகிலே இருக்கும்போதே உயிர் பிரிந்து விட்டது. ''எனக்கு எல்லாவற்றிலும் ஆறுதல் கூறக்கூடியவர் போய்விட்டாரே!'' என்று கதறினேன். செய்தியறிந்து அனைத்துக் கட்சித் தலைவர்களும், கழகத் தோழர்களும் திரண்டனர்.

17-8-1934 அன்று, திருக்குவளை கிராமத்தில், நான் பத்து வயதுச் சிறுவனாக இருந்தபோது பிறந்த மாறன், திருவாரூர் போர்டு உயர்நிலைப்பள்ளி, கும்பகோணம் அரசுக் கல்லூரி, சேலம் நகராட்சிக் கல்லூரி, சென்னை பச்சையப்பன் கல்லூரி - ஆகியவற்றில் படித்தார்.

மக்களவைக்கு 5 முறையும், மாநிலங்களவை உறுப்பினராக 3முறையும் என்று 35 ஆண்டுகள் நாடாளுமன்ற உறுப்பினராகவும், ஏழாண்டுகள் மத்திய அமைச்சராகவும் பணியாற்றினார்.



அருமை தம்பி மாறன் மறைந்தபோது, எனக்கு ஆறுதல் சொல்கிறார், ரஜினிகாந்த் - அருகே இயக்குனர் அமிர்தம்

பன்முகத் திறன் கொண்டவர். சிறந்த பத்திரிகையாளர். அருமையாகக் கட்டுரைகளைத் தீட்டுவார். திரைப்படக் கதாசிரியரும்கூட. தயாரிப்பாளராகவும் இயக்குனராகவும், உரையாடல் தீட்டுபவராகவும் இருந்துள்ளார். சிறுகதை எழுத்தாளர். பொருளாதார விவகாரங்களில் விற்பன்னர். ''மாநில சுயாட்சி'' பற்றியும், ''திராவிட இயக்க வரலாறு'' பற்றியும் ஆராய்ச்சிக் கட்டுரைபோல நூல் எழுதியிருக்கிறார்.

என்னைப்பற்றி முரசொலி மாறன் குறிப்பிடும்போது, ''எனக்கு அகரம் கற்றுத் தந்த ஆசான்'' என்பார்.

பிரதமர் வாஜ்பய் அவர்கள் தயாநிதி மாறனைத் தொடர்பு கொண்டு, ''முரசொலி மாறனின் மறைவு எனக்கு ஏற்பட்ட தனிப்பட்ட இழப்பு'' என்று கூறியதோடு, நேரிலும் சென்னை வந்து, எனக்கு ஆறுதல் தெரிவித்தார்.

திருமதி சோனியா காந்தி அம்மையார், ''தமிழக மக்களால் மிகவும் நேசிக்கப்பட்டவர் மாறன். மிகச் சிறந்த தலைவர். அவர் மறைவுச் செய்தி கேட்டு நான் மிகவும் கவலை அடைந்தேன்'' என்றார்.

சென்னை கோபாலபுரத்தில் உள்ள என் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த மாறன் உடலுக்கு ஆயிரக்கணக்கான பொதுமக்களும், கழக உடன்பிறப்புகளும், இரவு முழுவதும்



பேராசிரியர் முரசொலி மாறனின் உடலுக்கு
மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துகிறார்

இறுதி அஞ்சலி செலுத்தினர். தம்பி மாறனின் உடல் அரசு மரியாதையுடன் 24-11-2003 அன்று, சென்னை பெசன்ட் நகர் மின் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

பிரதமர் வாஜ்பய், முன்னாள் பிரதமர் ஐ.கே. குஜ்ரால், மத்திய அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ், தமிழக ஆளுநர் ராம் மோகன் ராவ், ஆந்திர மாநில முதல் அமைச்சர் சந்திரபாபு நாயுடு, கர்நாடக முதல் அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா, கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர், தமிழக காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன், பேரவை காங்கிரஸ் தலைவர் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், பா.ஜ.க. தலைவர் ஜனா கிருஷ்ண மூர்த்தி, அகில இந்தியச் செயலாளர் இல. கணேசன், திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி, பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ், தலைவர் ஜி.கே. மணி, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, எல். கணேசன், எம்.ஜி.ஆர். கழகத் தலைவர் ஆர்.எம். வீரப்பன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்



அழகிரி, கலாநிதி மாறனுடன் முரசொலி மாறனுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறார்.

மாநிலச் செயலாளர் ஆர். நல்லகண்ணு, விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் திருமாவளவன், திருநாவுக்கரசர், புதிய தமிழகம் நிறுவனர் டாக்டர் கிருஷ்ணசாமி, மற்றும் கலையுலகைச் சேர்ந்த ரஜினிகாந்த், கமல்ஹாசன், இயக்குநர் கே. பாலசந்தர், மற்றும் தமிழகத் தலைவர்கள் பலர் நேரில் வந்து அஞ்சலி செலுத்தியதோடு, எனக்கு ஆறுதலும் தெரிவித்தனர். கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு போன்றவர்களும், வைகோ போன்றவர் களும் என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கதறினர். அந்த நேரத்தில் சிறையிலே இருந்த வைகோவும், மு.க. அழகிரியும் நீதிமன்ற அனுமதியுடன் நேரில் வந்திருந்து மாறனுக்கு அஞ்சலி செலுத்தினர்.

★ ★ ★

இந்தியப் பிரதமராக குஜ்ரால் இருந்தபோது, அவரது அமைச்சரவையில் தொழில் அமைச்சராக இருந்த முரசொலி மாறன், இங்கிலாந்து பிரதமர் டோனி பிளேரைச் சந்திக்க 21-5-1997 அன்று லண்டன் சென்றிருந்தார். அங்கே இங்கிலாந்து பிரதமரைச் சந்தித்த பிறகு, எனக்கொரு கடிதம் எழுதியிருந்தார். அதை ஐந்தாம் பாகத்திலேயே குறிப்பிட்டிருக் கிறேன்.

அடுத்து 2001ஆம் ஆண்டு, நவம்பர் திங்களில் மாறன் இந்தியாவின் பிரதிநிதியாக தோகாவில் கலந்து கொண்ட உலக வர்த்தக மாநாட்டில் அவரின் செயல்பாடுகள் குறித்து, பிரதமர்

வாஜ்பய் அவர்கள் தலைமையில் மத்திய அமைச்சரவை கூடி, அதில் மத்திய அமைச்சர் மாறன் தோகா மாநாட்டில் ஆற்றிய பணிக்காக பாராட்டு தெரிவிக்கப் பட்டது. இந்தியாவில் உள்ள அனைத்து ஆங்கில நாளிதழ்களும் மாறனுக்கு அப்போது புகழ் மாலைகள் சூட்டின.

★ ★ ★


அப்படிப்பட்ட மாறன் மறைவு குறித்து **"முத்திரை பதித்த வித்தகர்"** என்ற தலைப்பில், **"தினமணி"** *25-11-2003* அன்று எழுதிய தலையங்கத்தில், "நீண்ட போராட்டத்துக்குப் பிறகு முரசொலி மாறனின் உயிர் பிரிந்துவிட்டது. ஆனால், பொது வாழ்க்கையில் அவர் நடத்திய போராட்டத்தில் பெற்றுத் தந்த வெற்றிகள் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கும்.

"தி.மு.க.வின் குரலை மட்டுமின்றி, தமிழகத்தின் குரலையும் டெல்லியில் உரக்க ஒலிக்கச் செய்த பெருமை மாறனுக்கு உண்டு. கட்சித் தலைவர் கருணாநிதியின் "மனசாட்சி"யாகவே திகழ்ந்த அவர், குறுகிய கால ஆதாயத்தை இலக்காகக் கொள்ளாமல், நீண்ட காலக் கண்ணோட்டத்தில் "தி.மு.க. வின் மூளை"யாகவும் செயல்பட்டார்.

"அண்ணா விட்டுத் தந்த இடத்தை மக்களவையில் நிரப்புவதற்காக முதன் முதலாக நாடாளுமன்றத்துக்குள் நுழைந்த மாறன், எதிலும் சோடை போனதில்லை. "மிசா" சட்டத்தின்கீழ் ஓராண்டு சிறைத் தண்டனை அனுபவித்த



மு.க.ஸ்டாலின் முரசொலி மாறனுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறார்.



மாறனின் உடலுக்கு அஞ்சலி செலுத்துகிறார், வாஜ்பய்

அவர், சாதுரியமான அரசியல் முடிவுகளை எடுப்பதில் வல்லவராகத் திகழ்ந்தார். அதற்கு ஓர் உதாரணம், 1980 மக்களவைத் தேர்தலில் மீண்டும் காங்கிரசுடன் தி.மு.க. கூட்டு சேரும் முடிவு! பலரை வியக்க வைத்த இந்த முடிவின் பின்னணியில் செயல்பட்டவர், மாறன்.

"1999ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம், வாஜ்பய் அரசுக்கு ஆதரவாக தி.மு.க. வாக்களிக்க கருணாநிதியைச் சம்மதிக்க வைத்தவரும் அவரே. இதனால் வேறுபட்ட இரு சித்தாந்தங் களைக் கொண்ட தி.மு.க.வும், பா.ஜ.க.வும் கரம் கோர்த்தன. தேசிய ஜனநாயகக் கூட்டணியை உருவாக்குவதில் மிகவும் முக்கிய காரணகர்த்தாவாக விளங்கி, குறைந்தபட்சச் செயல் திட்டம் வகுப்பது உட்பட ஒவ்வொரு கட்டத்திலும் தனது முத்திரையைப் பதித்தார்.

"அவரது மறைவு, கருணாநிதிக்கு மட்டுமோ, தி.மு.க.வுக்கு மட்டுமோ ஏற்பட்ட இழப்பாகக் கருத முடியாது. இந்தியாவின் வளர்ச்சிக்கு ஏற்பட்ட இழப்பாகவே நாம் எடுத்துக் கொள்ளவேண்டும். அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ்ந்தவர் மாறன். அவரது இடத்தை எளிதில் நிரப்ப முடியாது. உலக

அளவில் இந்தியாவுக்கு அவர் பெற்றுத் தந்த வெற்றிகள், தமிழகம் எப்போதும் பெருமைப்படத்தக்கவை''

- என்று எழுதியிருந்தது, ''தினமணி'' ஏடு. மாறன் மறைந்து ஒன்பதாண்டுகளாகின்றன. அவரின் எழுத்துக்களும், அவரைப் பற்றி எழுதிய எழுத்துக்களும் இன்னமும் வாழ்கின்றன - இனியும் வாழும்.

மாறன் மறைந்தபோது 27-11-2003 அன்று நான் முரசொலியில் வடித்த கண்ணீர் அஞ்சலி இதோ :-

''தம்பி,

''புள்ளியாய்த் தோன்றி
பூமியாய் வளர்ந்தவரே!
நீங்கள் மரித்துப் போனதாய்
மனம் நம்பவில்லை!''

- என்று கவிப்பேரரசு இரங்கல் கவிதை எழுதியுள்ளார், உனக்கு!

நீ மரித்துப் போகவில்லைதான் - பூமியாய் வளர்ந்து- வானமாக விரிந்து விட்டவனே! வானத்துக்கு மரணமேது? இன்னொரு கவிஞர் வி.இளங்கோ என்பார்; இன்று எழுதியுள்ள கவிதையில்,

''தாய் மாமன் பலருக்கு உண்டு -
மாமனே தாயானது உனக்கு மட்டுந்தான்''



மாறனின் உடலுக்கு, பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் ராமதாஸ் - திராவிடர் கழகத் தலைவர் கீ.வீரமணி ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

- என்று குறிப்பிட்டிருப்பதை முழுவதும் படிக்க முடிய வில்லை - அதற்குள் அருவித் திரைகள் என் பார்வையை மறைத்து விட்டன. இந்தத் தாயை விட்டுப் பிரியக் கூடாது என்பதற்காக - இந்தத் தாய் தாங்கமாட்டாள் என்பதற்காக - நானூறு நாட்களுக்கு மேலாகக் கடும்போர் நடத்திக் கடைசியாக இயற்கையின் பக்கமே வெற்றியை வழங்கி விட்டுப் போய்விட்டாய்.

அன்று ஒரு நாள் காவல்துறை அதிகாரிகளால்; உன் நெஞ்சுக்குள் ஏற்பட்ட அந்த விழுப்புண் - அதுவே நீ விழுவதற்கும், எம் விழிகளில் நீர் விழுதுகள் இறங்குவதற்கும் காரணமாகி விட்டது என்பதை எண்ணிப் பார்க்கும் போது; போர்க் குணம் படைத்த என் தங்கமே! அநீதியை, அராஜகத்தை எதிர்க்கக் கேடயமாகவும் ஈட்டியாகவும் எங்களுடன் இணைந்து இருந்தவனே! எப்போதும் அப்படியேதானிருப் பாய் எமது உணர்வாக! - என்ற உறுதியையும் நம்பிக்கை யையும் எம்மிடம் விட்டுவிட்டுத் தான் சென்றிருக்கிறாய்!

குவளை மலரில் ஓர் இதழாய்த் தோன்றினாய் - என்னைப் போலவே! அந்தத் திருக்குவளைத் தெருவில்தான் என் மடியில் விளையாடினாய்! அந்தக் கிராமத்தில் படித்த என்னை இரண்டாம் படிவத்தில் சேர்ப்பதாகத் திருவாரூர் உயர்நிலைப் பள்ளிக்கு ஆசிரியர் அழைத்து வந்தார். தேர்வுகள் எழுதினேன் - எழுதினேன் - இறுதியில் வெறும் ஐந்தாம் வகுப்பில்தான் சேர்க்கப்பட்டேன்; அதுவும் - ''தெப்பக் குளத்தில் விழுந்து விடுவேன்'' என்று அந்தக் குளம் நோக்கி ஓடிய பிறகுதான் அந்த வகுப்பும் கிடைத்தது.

ஆனால் நீ என்னிடம் பாடம் கற்றாய் - மூன்றாம் வகுப்பு படித்து முடித்த உன்னை ஐந்தாம் வகுப்புக்கே தகுதியென்று தேர்வு செய்தார்களே - அதை நீ மனத்தில் வைத்துக் கொண்டுதானே - இங்கிலாந்து பிரதமரைச் சந்திக்க மத்திய அமைச்சராக இலண்டன் மாநகர் சென்றபோது, அங்கிருந்து எனக்கு எழுதிய மடலில் ''நான் உங்கள் தயாரிப்பல்லவா?'' என்று நன்றியுணர்வைப் பெருமிதத்துடன் வெளிப்படுத்தி யிருந்தாய்!


மறைந்த
மாமேதை
முரசொலி
மாறனின்
இறுதி
ஊர்வலம்

தொடர்ந்து அந்தக் கடிதத்தில், ''என் சிந்தை - அணு ஒவ்வொன்றிலும் குடியிருந்து - என் இதயத் துடிப்புகளாக இருந்து என்னை ஆட்டுவிக்கும் உங்கள் காலடிகளில் அனைத்தையும் சமர்ப்பிக்கிறேன்! இப்படி நீங்களும் நானும் தான் கண்ணீர்ப் பெருக்கோடு உணர்ச்சிகளைப் பரிமாறிக் கொள்ள முடியும் - ஏனெனில் இது இரத்த பாசம்! நமது திருக்குவளைப் பின்னணி! நமது மாநிலக் கட்சி சூழ்நிலை!'' என்று எழுதியிருந்தாய்.

அண்ணா எனக்கு எழுதிய கடிதங்களைக் கண்களில் ஒத்திக் கொள்வது போலத்தான் தம்பி - நீ இலண்டனிலிருந்து எனக்கு எழுதிய கடிதத்தையும் முத்தங்களால் நனைத்துக் கொண்டிருக் கிறேன். தாயின் முத்தத்தினையொத்த இந்தத் தாய் மாமனின் முத்தம் உனக்கும் இனிக்கும் - எனக்கும் இனித்துக் கொண்டே யிருக்கும்.

என் மருமகன் என்ற தகுதியால் மட்டுமே பெருமை பெறுவதும் - புகழ் பெறுவதும் நிறைவானதல்ல என்பதால் தான்- ஓராண்டு மிசா சிறைவாசமெனும் தியாகக் கிரீடத்தை அணிந்து கொண்டாய்!

அடக்குமுறை வெறிகளை - அராஜகத் தாக்குதல்களைத் தாங்கிக் கொண்டாய்!

அண்ணாவின் அளப்பரிய அன்புக்கும் பாசத்துக்கும் ஆளானாய்!

வாஜ்பய், வி.பி.சிங், குஜ்ரால் ஆகிய பிரதமர்கள் உள்ளிட்ட வடபுலத்துத் தலைவர்கள் பலரின் வாஞ்சைமிகு வாழ்த்துக் களுக்கு உரியவன் ஆனாய்!

உலகின் கவனம் கவர்ந்த ''தோகா'' மாநாட்டில் நீ விரித்த புகழ்த் தோகையும் - கிளிண்டனுடன் விவாதித்த பெரு மிதமும் - இங்கிலாந்தின் டோனி பிளேருடன் சந்திப்பும் - உன் கழுத்தில் ஊஞ்சலாடும் முத்தாரங்கள்!

கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத்தும், மூதறிஞர் இராஜாஜியும், பேரறிஞர் அண்ணாவும் கையெழுத்திட்ட

வேட்பு மனுவல்லவா உன்னை தென் சென்னை நாடாளு மன்ற உறுப்பினராகவும் - வெளிநாட்டுப் புகழாரங்களைத் தோளில் சுமக்கும் வெற்றி வீரனாகவும் - விளங்கிடச் செய்தது!

மாநில சுயாட்சிக்கு 'வேதமே' எழுதி 'முரசொலி'த்தாய்! ஆனாலும் மத்திய அரசுதான் உனக்கு இறுதி இராணுவ மரியாதை செலுத்தியது! குவளையில் பிறந்து குவலயம் போற்றிடப் பணி புரிந்தாய்!

அந்தப் புகழ்ப் பூவின் மணம் சிறிதும் குறையாமல், புயல் அடிக்கும் என் நெஞ்சில் இப்போதும் தென்றலாய் வீசிக் கொண்டிருக்கிறாய்.

நீ போகலாம் - உன் நினைவுகளை என்னை விட்டு எடுத்துச் செல்ல உன்னால் முடியுமா? முடியவே முடியாது!

★ ★ ★

28. "தொல்காப்பிய பூங்கா" வெளியீட்டு விழாக்கள்!

28-7-2002 அன்று நான் விடுத்த அறிக்கையில், "நெசவு செய்த துணிகள் தேங்கிக் கிடக்கிற நிலையிலும், இலவச வேட்டி - சேலைகள் வழங்கும் திட்டத்தை இந்த அரசு நிறுத்திவிட்டதால், அவைகளை உற்பத்தி செய்து, வருவாய் ஈட்ட முடியாத நெருக்கடியிலும் தமிழக நெசவாளர் பெருமக்கள் - குறிப்பாக திருவில்லிப்புத்தூர், அருப்புக் கோட்டை, சங்கரன்கோயில், எட்டயபுரம் ஆகிய பகுதிகளில் உள்ளவர்கள் கஞ்சித் தொட்டிகளை நம்பி வாழ வேண்டிய அளவுக்கு அவதிப்படுகிறார்கள்.



நானும், சிவாஜிகணேசனும்...



இலவச வேட்டி - சேலை வழங்கும் திட்டத்தை ஜெயலலிதா அரசு நிறுத்திவிட்டதால் - நெசவு செய்த துணிகள் தேங்கிக் கிடக்க - நெசவாளர்கள் அவதிப்பட்டார்கள்.

"பசி, பட்டினியுடன் வாடுகிற அந்த மிகப்பரிதாபத்திற்குரிய மக்களுக்கு, அந்தப் பகுதியில் உள்ள நல்ல உள்ளம் கொண்டவர்கள், தங்களால் இயன்ற அளவுக்குக் கஞ்சித் தொட்டிகளை அமைத்து, அவர்களது பசியைத் தீர்த்து வருவதாகச் செய்திகள் கிடைக்கின்றன. எனவே, அத்தகைய வறட்சிப் பகுதிகளில் நமது கழக அமைப்புகளின் நிர்வாகிகள் முயற்சி எடுத்து - கஞ்சித் தொட்டிகள் தொடங்கி - மிகவும் நலிவுற்றுள்ள அந்த மக்களுக்கு உதவிடுமாறும், என் வேண்டுகோளை ஏற்று உடனடியாகச் செயல்படுமாறும் கேட்டுக் கொள்கிறேன்" என்று அறிக்கை விடுத்தேன்.

நல்ல நோக்கத்தோடு விடப்பட்ட அந்த அறிக்கையையும் தாக்கி முதலமைச்சர் ஜெயலலிதா செய்தியாளர்களிடம் தனது பேட்டியில் கூறியிருந்தார். நெசவாளர்களின் துன்பம் கண்டு - நெஞ்சு பதைத்து -அவர்தம் இன்னல் போக்கிடக் குரல் கொடுத்த இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்.


*1953ஆம் ஆண்டு அண்ணா அவர்கள் காலத்திலேயே கைத்தறி நெசவாளர் துயர் துடைத்திடத் தூய பணிகள் ஆற்றியிருக்கிறோம். நான் எழுதி - நானும், நடிகர் திலகம் சிவாஜியும், பட்டிதொட்டி, பட்டினக்கரைகள் எனப் பல இடங்களில் நடித்த **"பரப்பிரம்மம்"** நாடகத்தில் - ஒரு நெசவாளி, வீட்டில் உள்ள பொருட்களை எல்லாம் விற்றுவிட்டுக் கடைசியாகத் தன் மனைவியின் புடவையையும் விற்க வேண்டிய அவலம் ஏற்பட்டபோது, அவன் -*



"அய்யா! சோம்பேறி இல்லை நான் - உழைத்து உழைத்து உலுத்துப் போனவன்! கண் விழித்து - கஷ்டப்பட்டு - துணி நெய்து காலத்தைக் கழித்தேன்! உழைக்கக் கை இல்லாமல் இல்லை! உடலில் சக்தி இல்லாமல் இல்லை! ஆனால் உழைக்க வழி? உற்பத்தி செய்த ஆடைக்கு விலை இல்லை - விற்பனை இல்லை - ஏழை நெசவாளிக்கு! எனக்கு ஏது வேறு கதி? வீட்டில் தறி தூங்குகிறது! பசி, தூங்குமா என்ன? நான் என்ன செய்வேன்? போகாத ஊரில்லை - வேண்டாத கோயில் இல்லை! அய்யா, புண்ணியவான்களே! பொங்கல் திருவிழாவுக்கு வீட்ல சல்லிக்காசு இல்லை! கிழிஞ்ச துணியை இடுப்பிலே சுத்திக்கிட்டு, இந்தப் புடவையை விக்கச் சொல்லிக் கொடுத்தா எங்க வீட்டு மகராசி - இதையும் யாரும் வாங்குவாரில்லையா? அப்படின்னா இந்தச் சேலை நானோ - என் மனைவியோ தூக்கிலே தொங்கத்தான் உதவுமா?"

- என்று தெருவில் நின்று வெதும்பி அழுததை அந்த நாடகத்தில் காட்சியாக்கினேன். நடிப்போடும், நாடக எழுத்தோடும் இருந்து விடவில்லை. தி.மு. கழகச் செயற்குழு எடுத்த முடிவின்படி, கைத்தறித் துணிகளைக் கழகத் தலைவர்களும், முன்னணியினரும் ஊர் ஊராகச் சென்று விற்பதென்று முடிவெடுத்து, 1953ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்கள் திருச்சியிலே வீதி வீதியாகச் சென்று கைத்தறித் துணிகளை விற்றார்.

நான் அதே நாளில், சென்னையிலே கைத்தறித் துணிகளை தெருத் தெருவாகச் சென்று விற்பனை செய்தேன். ஒரே நாளில் தமிழ் நாடு முழுவதிலும் ஒரு லட்சம் ரூபாய்க்கு கைத்தறித் துணிகள் கழகத் தலைவர்களால் விற்கப் பட்டன. நான் சென்னையில் மட்டும் இருபதாயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்தேன். அந்த விற்பனையின்போது தான் அருமை நண்பர் **எம்.ஜி.ஆர்.** அவர்கள், என்னிடம் கைத்தறித் துணிகளை வாங்கியதுடன், அன்று முதல் கதராடையில் இருந்து மாறி, கைத்தறி ஆடையிலும் ஆர்வம் காட்டத் தொடங்கினார்.




நெசவாளருக்கு உதவிட கஞ்சித் தொட்டி திறப்பீர் கழக அமைப்புகளுக்கு தலைவர் கலைஞர் வேண்டுகோள்

"செந்தமிழ் நாட்டுக் கைத்தறி வேட்டி
சேலைகள் வாங்குவீர்!
நம் திராவிட இனத்தவர் ஷேமம் வேண்டிச்
சிங்கார ஆடைகள் வாங்குவீர்!"

– என்ற உடுமலை நாராயணக்கவிராயரின் பாடலை நானும், நண்பர் **செல்லமுத்துவும்,** மற்ற நண்பர்களும் பாடிக் கொண்டே சென்னையில் கைத்தறி வியாபாரம் செய்தோம். அந்த நினைவிலேதான், 2002ஆம் ஆண்டு கைத்தறி நெசவாளர்கள் வாடிய போது கஞ்சித் தொட்டிகளை ஆங்காங்கு வைக்கும் முடிவினைக் கழகம் எடுத்தது.

நெசவாளர்களின் பிரச்சினைகள்பற்றி அக்கறையில்லாமல் இருந்த அ.தி.மு.க. அரசு, கழகத்தின் சார்பில் கஞ்சித் தொட்டி திறப்பு என்று நடத்தத் தொடங்கியதும், அதற்குப் பக்கத் திலேயே "பிரியாணி வழங்கும் நிகழ்ச்சி" என்று ஏற்பாடுகளைச் செய்தனர்.

ஆனால், நெசவா ளர்கள் பிரியாணி வாங்குவதைப் புறக் கணித்து, கஞ்சித் தொட்டி நிகழ்ச்சிகளில் மட்டுமே



பங்கேற்றனர். முதலமைச்சர் ஜெயலலிதா விடுத்த அறிக்கையில், ''கைத்தறி நெசவாளர்களின் துன்பங்களுக்குக் காரணம், தி.மு.கழக ஆட்சியின் தவறான கொள்கைகள் தான்'' என்றும் குற்றஞ் சாட்டியிருந்தார்.

அதற்குப் பதிலாக, தி.மு.கழக ஆட்சியில் நெசவாளர்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக என்னென்ன சலுகைகள் - சாதனைகள் செய்யப்பட்டன என்பதற்கான நீண்ட பட்டியலை 3-8-2002 தேதிய ''முரசொலி''யில் விரிவாக எழுதினேன்.

★ ★ ★

6-8-2002 அன்று திருவள்ளூர் மாவட்டத்தில், நெசவாளர்கள் அதிகமாக வாழும் அம்மையார்குப்பத்தில் நானே கலந்து கொண்டு, வறுமையில் வாடும் நெசவாளர்களுக்குக் கஞ்சி வழங்கும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து ஏடுகளில் அதுபற்றிய செய்தி வந்தது.

அந்தச் செய்தி ஏடுகளில் வெளிவந்ததும், அதிமுக அரசின் அதிகாரிகள் உடனடியாக அம்மையார்குப்பம் பகுதிக்கு விரைந்து சென்று, அங்கே தேங்கிக் கிடந்த கைத்தறிச் சேலைகளை எல்லாம் அவசர அவசரமாகக் கொள்முதல் செய்தார்கள்.

நெசவாளர்களுக்கு நான் கஞ்சி வழங்கும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இடத்திற்குப் பக்கத்திலேயே பிரியாணி அளிக்கின்ற நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்கள். மேலும், அந்த நிகழ்ச்சியிலே கலவரம் செய்து, கழக நிகழ்ச்சியிலே கலந்து கொள்பவர்கள்மீது தாக்குதல் நடத்தவும் ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள் என்ற செய்தி எனக்குக் கிடைத்ததின் பேரில், கழகத்தின் சார்பில் அம்மையார்குப்பத்தில் ஏற்பாடு செய்யப்பட்டக் கஞ்சி வழங்கும் நிகழ்ச்சியை ரத்து செய்து விடும்படிக் கழகத் தோழர்களிடம் கூறினேன்.

★ ★ ★



ஆனால், மதுரை மாவட்டத்தில் - 9-8-2002 அன்று செல்லூரில், கஞ்சித் தொட்டி திறக்கும் நிகழ்ச்சியில், மு.க. ஸ்டாலின் கலந்து கொள்வார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அதே இடத்தில் அதிமுக சார்பில் பிரியாணி வழங்கும் நிகழ்ச்சிக்கும் காவல் துறை அனுமதி அளித்தது. இரு தரப்பினருக்கும் இடையே மிகப் பெரிய கலவரம் ஏற்பட்டது.

காவல் துறையினர் சமாதானம் செய்ய முற்பட்டு, தி.மு.கழகத்தினர் நிகழ்ச்சியை மட்டும் ரத்து செய்யக் கோரினர். முன்னாள் பேரவைத் தலைவர் **பி.டி.ஆர். பழனிவேல் ராஜன், மேயர் செ. ராமச்சந்திரன்** ஆகியோரைக் காவல் துறையினர் கைது செய்வதாகக் கூறி, போலீஸ் வேனில் ஏற்றினர்.

"நெசவாளர்களுக்கு கஞ்சி உறுதியாக வழங்கியே தீருவோம்" என்று கூறி முன்னாள் அமைச்சர் **தா. கிருட்டிணன்,** மாவட்ட தி.மு.க. செயலாளர்கள் **வேலுச்சாமி, தளபதி, மூர்த்தி,** முன்னாள் எம்.பி. **செல்வேந்திரன்** ஆகியோர் கஞ்சி வழங்க முற்பட்டனர்.

அப்போது மேடையிலே இருந்த தா. கிருட்டிணன் கீழே தள்ளிவிடப்பட்டார். தரையில் விழுந்த அவரை போலீசார் தடியடி நடத்தி பூடஸ் காலால் மிதித்தனர். மேடை யில் இருந்த தி.மு.க. பேச்சாளர் சலீம், மாவட்ட அவைத் தலைவர் மு.தர்மலிங்கம் ஆகியோர்மீது போலீசார் நடத்திய தடியடியில்,

அவர்கள் மண்டை உடைந்தது. கழகத்தினரை காட்டு மிராண்டித்தனமாகத் தாக்கிய காவல் துறை முக்கியமான வர்களை எல்லாம் கைது செய்தது.

முன்னாள் பேரவைத் தலைவர் பி.டி.ஆர். பழனிவேல் ராசன், மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் வேலுச்சாமி, சொ. காவேரி மணியம், மதுரை மேயர் செ. ராமச்சந்திரன், மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் மூர்த்தி, கம்பம் செல்வேந்திரன், பி. பாக்கியநாதன், எம். மருதுபாண்டியன், கிரமர் சுரேஷ், செல்வின் பாண்டியன், கருப்பையா, ஆர்.ஏ. வேல்முருகன், குருசாமி உட்பட நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர்.

போலீசார் தாக்குதலில் படுகாயமடைந்த தா. கிருட்டிணன், மு. தர்மலிங்கம், ஓச்சுப்பாலு, ராமமூர்த்தி, சலீம் உள்ளிட்ட பலர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர். சிறையில் உள்ளவர்களைப் பார்க்கச் சென்ற **மு.க. அழகிரி, பொன். முத்துராமலிங்கம்** உள்ளிட்ட கழகத் தோழர்களுக்கு சிறை அதிகாரி அனுமதி மறுத்துவிட்டார்.

இந்தச் சம்பவங்கள் நடைபெற்றபோது, மதுரையில் தங்கியிருந்த மு.க. ஸ்டாலினை வெளியே வரவிடாமல் காவல் துறையினர் தடுத்து வைத்தனர். அவர்கள் தடுத்ததையும் மீறி மு.க. ஸ்டாலின், ரகுமான்கான், பெரிய கருப்பன் ஆகியோர் மருத்துவமனைக்குச் சென்று, காயமடைந்தவர்களை யெல்லாம் சந்தித்து நலம் விசாரித்தார்கள்.

★ ★ ★

"தொல்காப்பியம்" நூலுக்கு கவிதை நடையில் கருத்துரை எழுதவேண்டுமென்று பல நாட்களாகத் திட்டமிட்டு, சென்னையிலே தொடர்ந்து கழகப் பணிகள் இருந்த காரணத் தினால், கோவா சென்று, அங்கே சில நாட்கள் தங்கி எழுதினேன். என்னோடு என் மனைவி தயாளுவும், தம்பி துரைமுருகனும் வந்திருந்தார்கள்.

முதலமைச்சர் ஜெயலலிதா ஆட்சியிலே இருக்கும்போதும் சரி - இல்லாதபோதும் சரி - என்னென்ன பொய்களை





யெல்லாம் கூறி வருகிறார் என்பதை இந்தத் தொடரில் பல இடங்களில் நான் ஆதாரத்தோடு சுட்டிக் காட்டி வருகிறேன். அந்தப் பட்டியலில் இடம் பெறக்கூடிய மற்றொரு பொய் இதோ! என் பயணத்திற்கு உள்நோக்கம் கற்பிக்கும் வகையில், நான் சந்தன வீரப்பனைச் சந்திப்பதற்காகத்தான் கோவா சென்றிருக்கிறேன் என்று தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையைப் பயன்படுத்தி அறிக்கையாக வெளியிட்டிருந்தார்.

என்னுடன் மத்திய அரசின் கறுப்புப் பூனைப் படையினரும், தமிழக அரசின் சார்பில் பாதுகாப்புக்காக அனுப்பப்பட்ட காவல் துறையினரும் வந்திருந்தார்கள்.

6-8-2002 முதல் 10-8-2002 வரை பெங்களூரில் தங்கியிருந்த போதும் தமிழகக் காவல் துறையினரும், மத்திய அரசின் கறுப்புப் பூனைப் படையினரும், கர்நாடக மாநில காவல் துறையினரும் உடனிருந்தனர். மேலும், என்னுடன் தம்பிகள் துரைமுருகன், பொன்முடி, எ.வ. வேலு, ஈ.ஏ.பி. சிவாஜி, ராணிப்பேட்டை காந்தி ஆகியோரும் உடன் வந்திருந்தனர்.

ஆனால், கோவாவில் வீரப்பனைச் சந்தித்தேன் என்று ஜெயலலிதா கூறியதும், அதற்கு மறுப்பு தெரிவித்துப் பேராசிரியர் அறிக்கை விடுத்தார். அதில் -



தேங்கிக் கிடந்த கைத்தறித் துணிகளை - நான்
சென்னை தெருக்களில் ஒரே நாளில் 20,000 ரூபாய்க்கு விற்றேன்.

‘‘திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு திறந்த புத்தகம், சூழ்ச்சிகளுக்கோ - சூதுகளுக்கோ - ஜெயலலிதாவைப்போல திரை மறைவு வேலைகள் செய்வதற்கோ - தி.மு.க.விற்குத் தெரியாது. ஜெயலலிதா தன்னிடமுள்ள காவல் துறையினரை வைத்து எந்த விசாரணை வேண்டுமானாலும் செய்யட்டும். அந்த விசாரணையின் முடிவில், ஜெயலலிதாவின் முகத்திரை தான் கிழிக்கப்படுமே தவிர, கலைஞருக்கோ அல்லது கழகத்திற்கோ எந்தக் களங்கமும் ஏற்படாது. மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காக ஜெயலலிதா அபாண்டமான ஒரு பழியை கழகத் தலைவர்மீது வேண்டு மென்றே திட்டமிட்டு கூறியிருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறேன்!’’ - என்று தெரிவித்திருந்தார்.

பெங்களூரிலிருந்து வெளிவரும் **‘‘தினச்சுடர்’’** ஏடு 31-8-2002 தேதிய இதழில், **‘‘பதவிக்கு அழகல்ல’’** என்ற தலைப்பில், ஒரு தலையங்கமே எழுதியிருந்தது. அந்தத் தலையங்கத்தில் -

‘‘தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கும் வீரப்பனுக்கும் தொடர்பு - வீரப்பனைச் சந்திக்க முன்பு பெங்களூர் சென்றார் - இப்போது கோவா சென்றுள்ளார் என்று ஜெயலலிதா காணும் கனவை, தமிழக அரசு செய்தியாக வெளியிட்டுள்ளது. தனது 78வது வயதில், தமிழகத்தில் நடைபெறும் பல்வேறு அராஜகங்களை தாங்கிக்கொண்டே அரசியல் பணியுடன், தமிழ்ப் பணியையும் மேற்கொண்டுள்ள இந்தத் தமிழ் முனியைப்

போற்றுவதை விட்டு, தூற்ற முனையும் தமிழக அரசை வன்மை யாகக் கண்டிக்கிறோம். கோவா எழில்மிக்க கடற்கரையுள்ள மாநிலம். இங்குதான் முன்பு ஜெயலலிதா ''அடிமைப் பெண்''ணாக நடனம் ஆடினார். அங்குதான் இப்போது கருணாநிதி தமிழ் எழுதுகிறார். இதில் என்ன குற்றம் இருக்கும் என்று புரியவில்லை. தமிழக முதல்வர் (ஜெயலலிதா) அடிக்கடி ஐதராபாத் திராட்சைத் தோட்டத்துக்குச் செல்வது ஓய்வு எடுக்க அல்ல. ஆந்திர நக்சலைட்டுகளைச் சந்திக்கச் செல்கிறார் என்று கூறினால், அது எப்படி அபத்தமோ அதுபோலத்தான் கருணாநிதி கோவாவில் வீரப்பனைச் சந்திக்கிறார் என்று சொல்வதும் ஆகும். அரசியலில் முதிர்ச்சி வேண்டும். சொல் கின்ற கருத்துக்களில் தெளிவு இருக்க வேண்டும். ஏனோ தானோ என்று பேசுவது முதல்வர் பதவிக்கு ஏற்றது அல்ல'' - என்று தினச்சுடரில் **பா.சு.மணி** எழுதியிருந்தார்.

★ ★ ★

கோவாவிலிருந்து நான் திரும்பியதும், என்னைச் சந்தித்த செய்தியாளர்கள் ''நீங்கள் கோவா சென்றிருந்ததைப்பற்றி முதலமைச்சர் ஜெயலலிதா, வீரப்பனைச் சந்திக்கத்தான் - என்று கூறியிருந்தாரே?'' என்று கேட்ட போது -

''அந்தப் பைத்தியக்காரத்தன மான உளறலுக்கெல்லாம் நான் பதில் சொல்ல முடியாது, பெங்களூரில் அப்போதே கேட்டபோது, வீரப்பனைப் பார்க்க வரவில்லை, பின்லேடனைப் பார்ப்பதற் காகத்தான் வந்தேன் என்று கிண்டலாகச் சொன்னேன்'' என்று கூறினேன்.

★ ★ ★





2003ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள், 11 அன்று, **"தொல் காப்பியப்பூங்கா"** நூல் வெளியிடும் நிகழ்ச்சி - அதற்கடுத்த நாள், ஜனவரி 12இல் சிலப்பதிகார நிகழ்ச்சி - அதாவது அன்பகத்தில் **கண்ணகி** சிலை திறப்பு விழா - இரண்டிற்கும் இடையே 12ஆம் தேதி காலையில், கழகச் செயற்குழுக் கூட்டம் நடந்தது.

நான் எழுதிய "தொல்காப்பியப் பூங்கா" இலக்கிய நூலின் வெளியீட்டு விழா - கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் தலைமையில், அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் 11-1-2003 அன்று நடைபெற்றது. சங்கத் தமிழ், குறளோவியம், சிலப்பதிகார நாடகக் காப்பியம், திருக்குறள் கலைஞர் உரை ஆகிய இலக்கிய நூல்கள் வரிசையில் எழுதப்பட்டது தான், "தொல்காப்பியப் பூங்கா" **சிலப்பதிகார நாடகக் காப்பியம்** என்ற நூலுக்கு பேரறிஞர் அண்ணா அவர்களே அணிந்துரை தந்தார்கள்.

"சேரமான் தம்பி தந்த சிலப்பதிகாரத்தை என் தம்பி கருணாநிதி தனது "வளமிகு செழுந்தமிழ்ச் சொல் திறத்தால்" நாடகமாகத் தருவது பொருத்தமானதே! கருணாநிதியின் தமிழ் ஆளுந்திறன் - பாத்திரங்களைப் படைக்கும் உயர்தனி ஆற்றல் - ஊரும் உலகமும் அறிந்தது - அறிந்து மகிழ்ந்தது - மகிழ்ந்து பாராட்டியது! நூல் முழுவதும் கருணாநிதி, ஒரு காவியப் படைப்பிற்குத் தேவையான செழுஞ் சொல்லோட்டத்தைச் சீரிய - அழகு அமைப்பை - உருவாக்கித் தருகிறார். மு.கருணாநிதியின் இந்நாடகமே ஒரு சிலம்பு! இளங்கோவடி களின் தங்கம் அதில் இருக்கிறது! இந்தப் புகழ்மிக்க எழுத் தாளரின் ஆற்றலும் அபரிமிதமான அளவிற்கு இருக்கிறது!"- என்றெல்லாம் அண்ணா அவர்கள் அந்த அணிந்துரையில் குறிப்பிட்டிருந்ததை என்னால் மறக்க முடியுமா?



"தொல்காப்பியப் பூங்கா" வெளியீட்டு விழாவில்...

"குறளோவியம்" குறித்து, எனது ஆசிரியர் **மகாவித்வான் தண்டபாணி தேசிகர்** அவர்கள், "கலைஞர் மிகவும் அழகிய முறையிலே சுவை குன்றாமல் இந்த ஓவியத்தைத் தீட்டிச் செல்கின்ற முறையைப் பார்த்தேன். இந்த நூல் எனக்கே - ஏன் எனக்கே என்றால் - நான் சுவையறிவு உள்ளவன் - எனக்கே ஒரு விம்மிதத்தை உண்டாக்கிற்று. அதைப் பாராட்டக் கூடிய நேரமும் எனக்குக் கிடைத்திருக்கிறது"என்று புகழாரம் சூட்டியதைத்தான் என்னால் மறக்க முடியுமா?

"சங்கத் தமிழ்" குறித்து, மதுரைப் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் முனைவர் **வ.சுப. மாணிக்கம்** அவர்கள், "எவன் ஒருவனுக்குச் சங்கத் தமிழில் நாட்டம் இல்லையோ - அவன் வெறும் பங்கத் தமிழன் என்பது எனது கருத்து. திருக்குறள், தொல்காப்பியம் போன்ற சங்க நூல்கள் நமது தமிழுக்கு மூல வேர்கள் - விழுதுகள். இந்தச் சங்க இலக்கியங் களில் யார் ஊறித் திளைக்கின்றார்களோ, அவர்கள்தான் தமிழினத்தையும், நாகரிகத்தையும், சிறப்பையும் உணர முடியும். அந்த வகையில் இளமைக் காலந்தொட்டே, நல்ல சங்கத் தமிழில் புலமை இருந்த காரணத்தால், அவருடைய குறளோவியத்தில் இருக்கின்ற தமிழ் நடை அவ்வளவு அழுத்தமான - அழகு நிறைந்த - இனியதாக அமைந்திருக் கின்றது. கலைஞரை நான் மட்டுமே பாராட்ட வில்லை. தமிழகமே பாராட்டுகின்றது!" என்று பேசியதை என்னால் மறக்க முடியுமா?

★ ★ ★



இந்த வரிசையில் நான் எழுதிய, ''தொல் காப்பியப் பூங்கா'' நூலினைத் தமிழறிஞர் முனைவர் **தமிழண்ணல்** அவர்கள் வெளியிட, மத்திய அமைச்சர் தம்பி **டி.ஆர். பாலு** அதனைப் பெற்றுக் கொண்டார். தம்பி **துரைமுருகன்** வரவேற்புரை யாற்றினார். முனைவர் **நன்னன்** அணிந்துரை வழங்கினார். விழாவில் முனைவர் **சாலமன் பாப்பையா,** முனைவர் **அவ்வை நடராசன், கவிக்கோ அப்துல் ரகுமான், காவியக் கவிஞர் வாலி, தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல** அடிகளார் ஆகியோர் சிறப்புரை யாற்றினர். கவிஞர் **கனிமொழி** நன்றியுரையாற்றினார். நான் ஏற்புரையாற்றினேன்.

தொல்காப்பியப் பூங்கா வெளிவந்ததை யொட்டி, இலண்டன் பி.பி.சி. செய்தியாளர் என்னிடம் சிறப்புப் பேட்டி ஒன்று வேண்டுமென்று கேட்டு, அவ்வாறே நான் அளித்த பேட்டியில், தொல்காப்பியத்தை எளிய முறையில் - எழிலார்ந்த தமிழில் தீட்டியிருக்கிறேன் என்றும், பழமையை எருவாக்கிக் கொண்டு, புதுமையை மலரச் செய்ய வேண்டும் என்பதே தொல்காப்பியப் பூங்கா மூலம் நான் தருகின்ற செய்தி என்றும் தெரிவித்தேன்.

தமிழகத்தில் ''தொல் காப்பியப் பூங்கா'' நூலின் முதல் பதிப்பு வெளியான நேரத்தில், கவிப்பேரரசு தம்பி வைரமுத்து ஏற்கனவே ஒப்புக் கொண்டபடி ஜப்பான் நாட்டிற்குச் செல்ல வேண்டியிருந்ததால், 8-1-2003 அன்றே என்னைச் சந்தித்து, என் ஒப்புதலைப் பெற்று, சென்னையில் அந்த நூல் வெளியிடப்படும் 11-1-2003 அன்றே, ஜப்பான் நாட்டின் தலைநகரான டோக்கியோவில் அவர் கலந்துகொள்ள விருந்த பொங்கல் விழா மேடையிலே அந்த நூலினை வெளியிட்டார்.


★ ★ ★

வேலூர் மத்திய சிறையில் பொடா சிறைவாசியாக அப்போ திருந்த ம.தி.மு.க. வின் பொதுச் செயலாளர் **வைகோ** ''தொல் காப்பியப் பூங்கா'' நூல் வெளியீட்டு விழாவிற்காக, 9-1-2003 அன்று ஒரு நீண்ட வாழ்த்துச் செய்தியினையும் அனுப்பி வைத்தார். அதில் இறுதியாக -


''நீங்கள் படைத்துள்ள இப்பூங்காவில் மலரும் பூக்கள் என்றுமே வாடாது. வண்ணமும் மாறாது. இப்பூக்களின் தேனலை மொண்டிடும் வண்டுகள் களிக்குமே தவிர மயங்கிச் சாய்ந்திடா. தமிழ் உணர்வு மங்கி வரும் வேளையில், தமிழ்ப் பகைவர் ஓங்காரக் கூச்சலிடும் இன்றையக் காலக் கட்டத்தில் இத்''தொல்காப்பியப் பூங்கா'' காலத்தின் இன்றியமையாத் தேவையாக - தன்மானத் தமிழரின் படைக்கலனாக - வாய்த்துள்ளது. காலத்தை வெல்லும் உயிர்க் காவியங்களைப் படைத்து, தமிழன்னைக்கு நீங்கள் சூட்டிய மணியாரத்தில் இனியும் ஒரு ஒப்பிலா மணியை இணைத்துள்ளீர்கள். வெளியீட்டு விழாவில் நல்லறிஞர்களின் உரை அப்பூங்காவில் தவழும் தென்றலாகும். நேரில் காண இயலாவிடினும் இச்சிறை யிலிருந்தவாறே என் மனக்கண்களால் கண்டு மகிழ்வேன். இத்தகு காவியங்கள் பலவற்றைத் தொடர்ந்து நீங்கள் படைத் திடும் வகையில், கார் காலத்து மழைத்துளிகளினும், காவிரி மணலினும் பன்னெடு நாள் நலமுடன் நீங்கள் வாழ்ந்திடும் அருளைப் பொழிந்திடுக - என்று இயற்கைத் தாயை இறைஞ்சுகிறேன்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

★ ★ ★

தொல்காப்பியத்திற்கு உரை எழுதிட வேண்டு மென்ற ஆவலை அருமைத் தம்பி, **முரசொலிமாறன்**



இது பெரிய முயற்சி - தமிழ் உள்ள வரையில் நிலைத்து நிற்கும் உயரிய சாதனை என்று பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் என்னைச் சந்தித்துப் பாராட்டினார்.



கவிப்பேரரசு வைரமுத்து, பொங்கல் விழாவை முன்னிட்டு, ஜப்பான் சென்றபோது- ''தொல்காப்பியப் பூங்கா''வை - அங்கே டோக்கியோ நகரில் வெளியிட்டார்.

என்னிடம் ஏற்படுத்தி, அதன் காரணமாக 2002ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் நாள், கோவாவில் எழுதத் தொடங்கி, 33 நாட்களுக்குள்ளாக 144 சூத்திரங் களுக்கான 100 மலர்களை எழுதி முடித்து, அது அருமை யான தொரு நூலாக, ஐநூறுக்கு மேற்பட்ட பக்கங்களில் இரண்டே மாதங்களில் அச்சாகி, சென்னை மாநகரில் 2003ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 11ஆம் நாள் அன்று முதல் பதிப்பு வெளியிடப்பட்டது.

அதற்குப் பிரதமர் **வாஜ்பய்** அவர்கள் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில், ''பழம் பெரும் புலவர் தொல்காப்பியர் அவர்களால் தமிழர்தம் வாழ்க்கை நெறிமுறைகள் குறித்து 2500 ஆண்டுகளுக்குமுன், எழுதப்பட்டதும், பழங்கால தமிழ் இலக்கண நூல் என்று கருதப்பட்டதுமான முதன் முதலான இலக்கியம் ஒன்றுக்கு, கலைஞர் டாக்டர் கருணாநிதி அவர்கள் விளக்க உரை எழுதியிருப்பதை அறிந்து நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். உலகின் தொன்மையான - வளமான மொழிகளில் ஒன்று தமிழ் மொழி. பண்டைய மொழியாக இருக்கும் அதே நேரத்தில், நவீன மொழியாகவும் அது விளங்குகிறது. தமிழக மக்களின் உயரிய கலாச்சாரம், மதி நுட்பம், சமூக பழக்க வழக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அம்மொழி விளங்குவதால் தமிழர்கள் மட்டுமின்றி - இந்தியர்கள் அனைவருமே தமிழ் மொழி குறித்துப் பெருமிதம் கொள்ளலாம். டாக்டர் கருணாநிதி அவர்களால் எழுதப்பட்ட ''தொல்காப்பியப் பூங்கா'' என்ற நூலின் வெளியீட்டு விழாவிற்கு எனது இதயமார்ந்த நல்வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

★ ★ ★

நூல் வெளியீட்டு விழாவிற்குத் தலைமையேற்ற நமது பொதுச் செயலாளர் **பேராசிரியர்** அவர்களும், நூலினை வெளியிட்ட **தமிழண்ணல்** அவர்களும், அந்த விழாவில் வாழ்த்துரை வழங்கியோரும் சிறப்பாக உரையாற்றினார்கள். பா.ம.க. நிறுவனர் டாக்டர் **ராமதாஸ்** அவர்கள், **ஜி.கே. மணி, ஏ.கே. மூர்த்தி** ஆகியோருடன் என் வீட்டிற்கே வந்து வாழ்த்து தெரிவித்தார்.

★ ★ ★

ஒரே மாதத்தில் தொல்காப்பியப் பூங்கா முதல் பதிப்பாக அச்சிடப்பட்ட 3000 புத்தகங்களும் விற்றுத் தீர்ந்த நிலையில், இரண்டாம் பதிப்பு வெளியிட முயற்சித்துக் கொண்டிருந்த நேரத்தில், அந்த இரண்டாம் பதிப்புக்கும் வெளியீட்டு விழா ஒன்றினைத் தமிழகத்தின் தென் பகுதியிலே நடத்திட நினைத்து, சங்கம் வளர்த்த மதுரை மூதூரில் பிப்ரவரி 23ஆம் தேதியன்று தம்பி மு.க. அழகிரி மிகுந்த ஆர்வத்தோடு - கழகத் தோழர்களின் ஒத்துழைப்போடு நடத்தினார். அன்று காலையில் மதுரை புகைவண்டி நிலையத்திலேயே மிகப் பெரிய கூட்டம்! எழுச்சிமிகு வரவேற்பினை எனக்களித்தார்கள். இரண்டாம் பதிப்பாக அச்சிடப்பட்ட ஆயிரம் புத்தகங்களும் விழா மேடையிலேயே விற்றுத் தீர்ந்து, அடுத்து மூன்றாம் பதிப்பாக ஆயிரம் புத்தகங்களைப் புதிதாக அச்சேற்றித்தான், மதுரையிலே முன்தொகையாக பணம் கொடுத்திருந்தவர் களுக்கும், அடுத்து சென்னையிலே நேரிலே என்னிடம் கொண்டு வந்து லட்சம் ரூபாய் வீதம் கொடுத்த விருதுநகர் மாவட்டக் கழகச் செயலாளர் **கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச் சந்திரன்** அவர்களுக்கும், மதுரை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி அவர்களுக்கும் வழங்கிட முடிந்தது.

★ ★ ★

இரண்டாம் பதிப்பு நூல் வெளியீட்டு விழாவிற்குப் பேராசிரியர் தமிழண்ணல் தலைமை தாங்கிட, நூலினை கவிப்பேரரசு **வைரமுத்து** வெளியிட, மத்திய இணை அமைச்சர் **ஆ. இராஜா** பெற்றுக் கொண்டார். மத்திய அமைச்சர் டி.ஆர். பாலு, பேராயர் ஆரோக்கியசாமி, மணவை

முஸ்தபா, க.ப. அறவாணன், அவ்வை நடராஜன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

நூலினை வெளியிட்ட கவிப்பேரரசு அந்த விழாவில் எனக்கு நினைவுப் பரிசு வழங்கித் தங்கக் காப்பு அணிவித்தார். நான் ஏற்புரை ஆற்றினேன். தமிழ்க்கனி பதிப்பகம் சார்பாக மு.க. அழகிரியும், மதுரை எழுத்தாளர் மன்றம் சார்பில் அ. கருணைதாசனும் நன்றி கூறினார்கள். மதுரையில் இரண்டாம் பதிப்பு வெளியிட்ட வகையில், மதுரையில் மொத்தம் வசூலான தொகை 29 லட்சம் ரூபாய் என்பதை தமிழ்க்கனி பதிப்பகத்தின் சார்பில் மு.க. அழகிரி தெரிவித்தார்.


இரண்டாம் பதிப்பு வெளியீட்டு விழாவன்று வசூலான 29 லட்சம் ரூபாயில், அச்சகச் செலவு 9 லட்ச ரூபாய் போக, மீதம் 20 லட்ச ரூபாயில் தமிழ்க்கனிப் பதிப்பக வளர்ச்சிக்காக 10 லட்சம் ரூபாய் வைத்துக் கொண்டு, எஞ்சிய பத்து லட்ச ரூபாய் திராவிட முன்னேற்றக் கழக அறக்கட்டளைக்கு வழங்கப்பட்டது.

அந்தத் தொகை கழகத்தின் நீண்ட கால உடன்பிறப்புகள் நலிந்த நிலையில் இருந்தால், அவர்கள் பிள்ளைகளின் மேல்நிலைக் கல்விக்காகவும், உடல் நலிவுற்ற - வசதியற்ற கழகத் தொண்டர்களின் மருத்துவச் செலவிற்காகவும் தி.மு. கழக அறக்கட்டளை மூலம் உரிய முறையில் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

★ ★ ★

அதனைத் தொடர்ந்து, திருச்சி மாநகரில் மண்டலப் பொறுப்பாளர் **கே.என். நேரு** அவர்கள் மிகுந்த பிடிவாதமாக இந்த நூலின் நான்காம் பதிப்பு வெளியீட்டு விழாவினை நடத்துவதாகக் கூறி, 2002ஆம் ஆண்டு மார்ச் 22ந் தேதியன்று அந்த விழாவும் கோலாகலமாக அங்கே நடைபெற்று, அப்போது நான்காம் பதிப்பாக அச்சிடப்பட்ட ஆயிரம் புத்தகங்களும் உடனடியாக விற்றுத் தீர்ந்து, மேலும் இரண்டு பதிப்புகளாக ஐந்தாவது பதிப்பும், ஆறாவது பதிப்புமாக, நூல்களை அச்சடித்து வழங்கினோம்.

ஆக, முதல் பதிப்பு வெளியிடப்பட்ட மூன்று மாத காலத்திற்குள் ஆறு பதிப்புகளாக தொல்காப்பியப் பூங்காவின்



கற்புக்கனல் கண்ணகியின் சிலையை, இளைஞரணி அலுவலகமான அன்பகத்தில், பேராசிரியர் தலைமையில் நான் திறந்து வைத்தேன். அருகே மு.க. ஸ்டாலின் உள்ளார்

8000 புத்தகங்கள் விற்றுத் தீர்ந்தன. திருச்சியில் தொல் காப்பியப் பூங்கா விற்பனையான நிதியில் மிஞ்சிய ஒன்பது இலட்ச ரூபாயும், திராவிட முன்னேற்றக் கழக அறக் கட்டளைக்கு என்னால் வழங்கப்பட்டது.

★ ★ ★

இந்தப் புத்தகத்திற்காக வருகின்ற தொகையில், அதனை அச்சடிப்பதற்கான செலவுத் தொகை போக மீதமுள்ள தொகை யில் பெரும் பகுதியைக் கழகத் தோழர்களுக்காகப் பயன் படுத்திக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம் எனக்கேற்பட்டு, தி.மு.கழக அறக்கட்டளைக்கு, இந்த நிதி வழங்கப்பட்டது.

தொல்காப்பியப் பூங்காவின் ஏழாவது பதிப்பு 20-4-2003 அன்று வேலூரில் வெளியிடப்பட்டது. காலை 10 மணிக்கு ஒரு திருமண மண்டபத்தில், நானே, என் கையால் நூலினை வழங்குவதென்று அறிவித்து, அவ்வாறே நடைபெற்றது. 10 மணிக்கு நூலினை வழங்கத் தொடங்கிய நான், பகல் 12.30 மணிவரையில் வழங்கிக் கொண்டிருந்தும், முடியவில்லை. அரக்கோணம், கந்திலி, நெமிலி, சோளிங்கர், திருப்பத்தூர் உள்ளிட்ட ஒன்றியம், நகரக் கழகத் தோழர்களுக்கும், தமிழறிஞர்களுக்கும் மட்டுமே வழங்க முடிந்தது.

எஞ்சியிருந்த வேலூர், காட்பாடியைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருந்ததால், அவர்களுக்கு மற்றொரு நிகழ்ச்சியில் வழங்கப்படும் என்று துரைமுருகன் அறிவித்தார். அந்த நிகழ்ச்சியில் ஆற்காடு வீராசாமி, துரை முருகன், முகமது சகி, மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஆர். காந்தி, மகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வேலூரில் நடைபெற்ற 7ஆம் பதிப்பு வெளியீட்டு விழா நிகழ்ச்சியிலே கிடைத்த நிதியிலிருந்து மூன்று இலட்ச ரூபாய் தி.மு. கழக அறக்கட்டளைக்கு வழங்கப்பட்டது.

★ ★ ★

தொல்காப்பியப் பூங்கா நூலின் 7ஆம் பதிப்பினை வேலூரில் வெளியிட்ட நான், 26-4-2003 அன்று காலையில், 8ஆம் பதிப்பினை கோவையில், முத்தமிழ் கலை மன்றத்தின் சார்பில் நடைபெற்ற விழாவில் வெளியிட்டேன். அந்தப் பதிப்பினை காவியக் கவிஞர் வாலியிடமிருந்து, மத்திய அமைச்சர் **மு.கண்ணப்பன்** பெற்றுக் கொண்டார்.

அந்த விழாவில் கூட்டம் கட்டுக்கடங்காமல் குவிந்த நிலையில், குளிர்ப்பதன வசதியும் அந்த மண்டபத்தில் இல்லாத காரணத்தால், நீண்ட நேரம் அமர்ந்திருந்ததால், இரத்த அழுத்தம் குறைவாகி, அதிக வியர்வை ஏற்பட்டு, சோர்வடைந்து, மயக்கமடைந்தேன். வியர்வை கொட்டியது. உதடுகள் காய்ந்து விட்டன. நா வரண்டுவிட்டது. பக்கத்தில் இருந்த கண்ணப்பனிடம் நிலையைச் சொன்னேன். அவர் எதிரே அமர்ந்திருந்த துரைமுருகனிடமும், டி.ஆர்.பாலுவிடமும் காட்டிய ஜாடையில் அவர்கள் மேடைக்கு ஓடி வந்தனர்.

என் குடும்ப டாக்டர் மேடையிலேயே என்னைச் சோதித்து விட்டு, நான் பேச வேண்டாமென்று தடுத்தார், நான் அதைக் கேட்காமல், நன்றி உரையாற்ற முற்பட்டேன். இருந்தாலும் ஒரு சில வாக்கியங்களுக்குமேல் பேச முடியவில்லை. அதன் பிறகு ஒரு மணி நேரத்திற்கு எனக்கு என்ன நடந்தது என்று நினைவில்லை.

உடனடியாக, கோவையில் உள்ள கே.ஜி. பக்தவத்சலம் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டேன். அங்கே அனைத்துச் சோதனைகளும் முன் எச்சரிக்கையாக எடுக்கப்பட்டு, விரைவிலேயே - ஒருசில மணி நேரத்திலேயே நலம் பெற்றேன்.

இந்தச் செய்தியினைக் கேள்விப்பட்ட பிரதமர் வாஜ்பய் அவர்கள், இரண்டு முறை தொலைபேசியில் டெல்லியிலிருந்து தொடர்பு கொண்டு என் உடல் நலத்தினைக் கேட்டறிந்தார். மாலையில் சூர்யா ஓட்டலுக்குத் திரும்பினேன்.

பொதுக்கூட்டத்தில் லட்சக்கணக்கில் காத்திருப்பதாகச் சொன்னார்கள். நான் புறப்பட்டேன். சேலத்திலிருந்து தம்பி **வீரபாண்டி ஆறுமுகம்** பொதுக்கூட்டத்திற்குப் போக வேண்டாமென்று கண்ணீரால் கட்டளையிட்டார். டாக்டர்கள் என்னதான் நல்ல நல்ல மருந்து வழங்கி என்னைக் காப்பாற்றினாலும், முழுமையாக என்னைக் குணமடையச் செய்யும் மாமருந்து, உடன் பிறப்புகள் - தமிழ்ப் பெருங்குடி மக்கள் குழுமியிருந்த அந்தக் கூட்டமாக அல்லவா இருந்தது! அந்த மருந்தைத் தேடிச் சென்றேன்! பேசினேன்! ஏராளமான அரசியல் தலைவர்களும், நண்பர்களும் தொலைபேசியில் என் நலம் குறித்து விசாரித்தனர்.

26-4-2003 அன்று கோவையில் "தொல்காப்பியப் பூங்கா" மூலமாக வசூலான நிதியில் தி.மு. கழக அறக் கட்டளைக்காக மேலும் பதினைந்து இலட்ச ரூபாயினை அளித்தேன்.

*1-9-2002*இல் எழுதத் தொடங்கி -

*3-10-2002*க்குள் *532* பக்கங்கள் எழுதி முடித்து-

முதல் பதிப்பு வெளியீட்டு விழா *2003*ஆம் ஆண்டு ஜனவரியில் தொடங்கி -


ஐந்தே மாதங்களில் *11* பதிப்புகள் வெளியிடப்பட்ட - ஒரு நூலினை எழுதியவன் நான் என்ற சிறப்பினை ஏற்படுத்திக் கொடுத்தது, **"தொல்காப்பியப் பூங்கா!"**

★ ★ ★

29. நீதியே; நீ இன்னும் இருக்கின்றாயா?

2002-2003ஆம் ஆண்டுகளில், அ.தி.மு.க. ஆட்சியில், தமிழகத்தில் கடுமையான வறட்சி. மழை இல்லை. இன்னும் சொல்லப்போனால் டெல்டா மாவட்டங்களில் எலிக்கறி சாப்பிடுகின்ற நிலை! அதற்கான புகைப்படங்கள் எல்லாம் அப்போது ஏடுகளில் வெளிவந்தன. குறுவை சாகுபடிக்கே தண்ணீர் வர வில்லை. சம்பா பயிரும் கருகியது.

வறுமை தாங்காமல், மன்னார்குடியில் பாலையக் கோட்டையைச் சேர்ந்த **சண்முகம்** என்ற விவசாயி, அரசைக் குறை கூறிக் கடிதம் ஒன்றை எழுதி வைத்துவிட்டுத் தற்கொலை செய்துகொண்டார். அந்தக் கடிதத்தை எப்படி யாவது கைப்பற்ற வேண்டுமென்று அப்போது இருந்த போலீசார் படாதபாடுபட்டனர்.



மன்னார்குடி தொகுதியில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்த தோழர் **சிவபுண்ணியம்** இல்லத்திற்கு நள்ளிரவில் சென்ற போலீசார், சோதனை என்ற பெயரில், அவரது வீட்டை அடித்து உடைத்து வெறியாட்டம் போட்டனர். மேலும், சட்ட மன்ற உறுப் பினர் சிவபுண்ணியம்மீது தாக்குதல் நடத்திடவும் முயற் சித்தனர்.

அந்தச் செய்தியினைக் கேள்விப்பட்ட அந்தப் பகுதி பொது மக்கள், 10-1-2003 அன்று சாலை மறியலிலே ஈடுபட்டார்கள். திருவாரூர் மாவட்டம் முழுவதும் அன்று கடையடைப்பு நடந்தது.

சம்பா பயிரில் ஏற்பட்ட கடும் பாதிப்பு காரணமாக, தஞ்சை அருகே சாலியமங்கலம் திருபுவனத்தைச் சேர்ந்த **வீரையன்** என்ற விவசாயியும் தற்கொலை செய்துகொண்டு உயிர் விட்டார்.

திருவாரூர் மாவட்டத்தில் வாழக்கரை கிராமத்தைச் சேர்ந்த **பத்மாவதி** என்பவர், போகி அன்று தனது வயலைச் சென்று பார்த்தபோது, வயல் முழுவதும் பாளம் பாளமாக வெடித்துப் பயிர்கள் முழுவதும் கருகி நிற்பதைப் பார்த்து, அங்கேயே மயக்கமுற்றுக் கீழே சாய்ந்தவர், பின்னர் எழுந்திருக்கவே இல்லை.

இவற்றைக் கண்டித்து, எதிர்க் கட்சிகள் எல்லாம் போராட்டம் நடத்தியபோதும் ஆளுங்கட்சி யினர் இந்தக் கொடுமையைப் போக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அதுபோலவே திருத்துறைப் பூண்டி அருகே **தமிழரசன்** என்ற ஒரு விவசாயி, தன்னுடைய



பேராசிரியர் அன்பழகன்



சம்பா பயிர் கருகியதைப் பார்த்து, அதிர்ச்சியடைந்து, வீடு திரும்பும் வழியிலேயே சுருண்டு விழுந்து மரண மடைந்தார். மேலும், திருவாரூர் மாவட்டம் முத்துப் பேட்டை அருகே உள்ள அமலூர் கிராமத்தைச் சேர்ந்த கணேசத் தேவர் என்ற விவசாயியும், நாகை மாவட்டத்தில் சிக்கலை அடுத்துள்ள ஆவனானி, புதுச்சேரி கிராமத்தைச் சேர்ந்த **கணேசன்** என்ற விவசாயியும், சம்பா பயிர் கருகிய காரணத்தால் உயிரிழந்தனர்.

மேலும், ஆதிச்சபுரத்தைச் சேர்ந்த **பிரகாஷ்,** திருத்துறைப் பூண்டி சேகல் ஊராட்சியைச் சேர்ந்த **வேலுச்சாமி,** சாத்தான் குளம் அருகே **பரமசிவம்,** ரிஷிவந்தியம் அருகே **சொர்ண புஷ்பம்,** ராஜகோபாலபுரத்தைச் சேர்ந்த **சம்பந்தம்,** திருப்பனந் தாள் ஒன்றியம் கருப்பூர் கிராமத்தைச் சேர்ந்த **யூனுஸ்,** பைய்யூர் கிராமத்தைச் சேர்ந்த **பன்னீர்ச்செல்வம், சாத்தான், முத்து லட்சுமி, பீமகுட்டித் தேவர்** - என்று இறந்தவர்களின் பட்டியல் நீண்டு கொண்டே போயிற்று.

26-1-2003 தேதிய ''ஜூனியர் விகடன்'' வார இதழில், எலிக்கறிகூடக் கிடைக்காமல், ஜெயலலிதா ஆட்சியில் விவசாயிகள் நத்தைகள் உண்ணும் பரிதாபத்தைப் புகைப்பட மாகவே எடுத்துப் பேட்டிகளையும் பெற்று வெளியிட்டது.

வறட்சி காரணமாக இப்படிப்பட்ட பரிதாபகரமான நிலை நீடித்தது. அந்த ஆண்டு, என்னுடைய 80ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா என்பதால், அதைச் சிறப்பாகக் கொண்டாடு வதற்காகக் கழக அமைப்புகள், ஜனவரி மாதத்திலேயே அதற்கான ஏற்பாடுகளையெல்லாம் மிகப் பெரிய அளவில் செய்யத் தொடங்கி விட்டார்கள் என்ற செய்தி எனக்குக் கிடைத்ததும், *31-1-2003* அன்று நான் விடுத்த அறிக்கையில்,

நாட்டில் நிலவிடும் வறட்சி நிலை கருதி, அந்த ஆண்டு என்னுடைய பிறந்த நாள் விழா கொண்டாட நான் விரும்ப வில்லை என்றும், எனவே அதற்கான ஏற்பாடுகள் எதையும் செய்ய வேண்டா மென்றும் கேட்டுக் கொண்டேன்.



அ.தி.மு.க.ஆட்சியில் எலிக்கறி சாப்பிடும் குழந்தை

★ ★ ★

ஆண்டுதோறும் நடப்பதைப்போல 23-1-2003 அன்று தமிழக ஆளுநரான **பி.எஸ். ராமமோகன்ராவ்** அவர்கள் தனது உரையை ஆங்கிலத்திலே ஆற்றினார். பொதுவாக ஒவ்வொரு ஆண்டும், ஆளுநர் ஆங்கிலத்தில் தனது உரையை ஆற்றி முடித்ததும், சட்டப் பேரவைத் தலைவர், அந்த உரையின் தமிழாக்கத்தைப் பேரவையில் படிப்பார். இதுவே சட்டமன்றத்தில் நீண்ட நெடுங்காலமாகக் கடைப்பிடித்து வரும் மரபு. எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற தாரக மந்திரத்தை மனதிலே கொண்டு, நடைபெற்று வந்த ஆட்சிகளில் இந்த முறைதான் நீடித்து வந்தது.

ஆனால், 2003ஆம் ஆண்டு, ஜெயலலிதா ஆட்சியில், ஆளுநர் உரையைத் தமிழிலே படிக்கும் நடைமுறை கடைப் பிடிக்கப்படவில்லை. பேரவை முடிந்ததும், செய்தியாளர்கள் பேரவைத் தலைவரிடம் - "ஆளுநர் உரையை ஏன் தமிழிலே படிக்கவில்லை?" என்று கேட்டபோது -

"நேரம் கருதி அப்படிச் செய்யப்பட்டது- ஆளுநர் உரையின் தமிழாக்கத்தை என் அறைக்கு டி.வி.க்காரர்கள் வந்து படம் எடுத்தால், நான் தமிழ் உரையைப் படிக்கத் தயாராக இருக்கிறேன்" என்றார்.



அப்போது பேரவைத் தலைவராக இருந்தவர் மொழிப் போர் வீரர்களில் ஒருவரான **தம்பி காளிமுத்து.** அவருக்குக் கிடைக்கும் அந்த வாய்ப்பு, அந்த ஆண்டு இல்லாமல் மறுக்கப்பட்டுவிட்டது.



நல்லகண்ணு

எப்படியோ தமிழுக்கு பேரவையிலே அன்றைக்கு ஒரு தொய்வு ஏற்பட்டது என்பதுதான் உண்மை.

★ ★ ★

பேரவையிலே இதுபோன்ற மரபுகளை மீறும் செயல்கள் நடைபெறுவதாக இருந்தால், எதிர்க்கட்சிகளில் முன் வரிசையிலே உள்ளவர்களை அழைத்து, அவர்களின் கருத்துக்களையும் அறிந்து, அவர்களிடமும் சொல்லிவிட்டுச் செய்வார் கள். அதுவும் இல்லாவிட்டால், எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவரிடமாவது சொல்லி விட்டுச் செய்வதுதான் மரபாக இருந்தது.

ஏன் - எம்.ஜி.ஆர். முதல் அமைச்சராக இருந்துபோதுகூட, நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தேன். முதலிலே முதல் அமைச்சராக இருந்து, பிறகு எதிர்க்கட்சித் தலைவராக இருந்தேன். ஒரு நாகரீகமான முதல் அமைச்சருக்கு முன்னால், ஒரு எதிர்க்கட்சித் தலைவராக அமர்வதிலே நான் அன்றைக்குத் தயக்கம் காட்ட வில்லை.

பேரவைக்குப் பக்கத்திலேயே, முதலமைச்சர்கள் ஓய்வெடுக்க வசந்த மண்டபம்'' என்று ஓர் இடம் உண்டு. ஒரு நாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். என்னிடம், கொஞ்சம் வசந்த மண்டபம் வருகிறீர்களா?'' என்று கேட்டார். நானும் ''வருகிறேன்'' என்றேன்.

அப்போது அவர் என்னிடம் - அவையில் பெருந் தலைவர் காமராஜர் அவர்களுடைய படம் மாட்ட வேண்டும் - அந்தப் படத்திற்குக் கீழே என்ன பொன் மொழி எழுதுவது?'' என்று கேட்டார்.

''உழைப்பே உயர்வு தரும்'' என்று நான் எழுதலாம் என்று சொன்னேன். அப்படியே தான் எழுதப்பட்டது. இவர் என்ன சொல்வது - நாம் என்ன கேட்பது - என்று எம்.ஜி.ஆர். எண்ணவில்லை.




மகராசியின் மகோன்னத ஆட்சியிலே...

மற்றொரு நாள் வசந்த மண்டபத்தில் எம்.ஜி.ஆரிடம் பேசிக் கொண்டிருந்த போது, ''அதென்ன - டெல்லியிலே குடியரசுத் தலைவரின் உரை ஆங்கிலத்திலே படிக்கப்படுகிறது - அதை குடியரசுத் துணைத் தலைவர் இந்தியிலே மீண்டும் படிக்கிறாரே?'' என்றார்.

''ஆமாம் - அது அங்கேயுள்ள பெரும்பான்மையினரின் தாய்மொழி - அதனால்தான் படிக்கிறார்!'' என்றேன். அப்படியானால், நாமும் நம்முடைய தாய் மொழிக்கு மதிப்புத் தர வேண்டாமா?'' என்றார். கொடுக்கத்தான் வேண்டுமென்று சொல்லி, அந்த ஆண்டு முதல் கவர்னர் உரை சட்டமன்றத்தில் ஆற்றப்படும்போது, சபாநாயகர், ஆளுநரின் ஆங்கில உரையைத் தமிழிலே படிப்பது என்பது வாடிக்கையாக இருந்தது.

எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்த போது தொடங்கிய மரபு ஆயிற்றே - அதை தி.மு.க. ஆட்சியிலே தொடருவதா - என்றெல்லாம் நினைக்காமல், கழகம் ஆட்சியிலே இருந்த காலத்திலும் அந்த நடைமுறை தொடர்ந்தது.

ஆனால், எம்.ஜி.ஆர். உருவாக்கிய மரபை 2003ஆம் ஆண்டிலே நிறுத்தினார்கள். வேண்டுமானால், முதலமைச்சர் ஜெயலலிதா - நான் கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது தொடங்கியதை மட்டும் புறக்கணிக்கவில்லை- எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்த பொழுது தொடங்கியதையும் நிறுத்தி இருக்கிறேன் - என்பதற்கு இதுவே தக்கச் சான்று!'' என்று கூறிக் கொள்ளலாம் அல்லவா!



திருவோடு ஏந்திய விவசாயிகள்!

எப்படியோ 2003ஆம் ஆண்டு, தமிழகச் சட்டப் பேரவையில் தமிழிலே படிக்கும் அந்த மரபு நிறுத்தப் பட்டது. அதற்கு நேரம் இல்லை என்று சொன்னதைக் கேட்டு விட்டு, தமிழ்த்தாயே! எங்களையெல்லாம் மன்னித்து விடு!'' என்று கேட்பதைத் தவிர, வேறு வழி எனக்கு அப்போது தெரியவில்லை.

★ ★ ★

ஆளுநர் உரையைத் தமிழகச் சட்டமன்றத்திலே தமிழிலே படிக்க வேண்டுமென்றால், அனைத்து எதிர்க்கட்சிகளும், இனிமேல் ஆளுநர் உரையாற்றும்போது, வெளியேற மாட்டோம் - என்று உறுதியளிக்க வேண்டுமென்று முதலமைச்சர் ஜெயலலிதா ஒரு நிபந்தனையை அறிவித்தார்.

அதைப்பற்றி நான் கூறும்போது, ''தற்போது நிபந்தனை விதிக்கும் ஜெயலலிதா, கடந்த காலம் என்று ஒன்று இருந்ததையே மறந்து விடுகிறார். தி.மு. கழக ஆட்சியில், ஆளுநர்களின் ஆங்கில உரைகள் எல்லாம் தமிழிலே படிக்கப் பட்ட போதிலும், 1990, 1991, 1998 ஆகிய ஆண்டுகளில், அ.தி.மு.க. பேரவையிலேயிருந்து வெளிநடப்பு செய்துள்ளது. ஆளுநர் உரை தமிழிலே படிக்கப்பட்ட போதே, வெளிநடப்பு செய்த அ.தி.மு.க.வின் தலைவிதான், தற்போது தமிழில் படிப்பதற்காக வெளிநடப்பு செய்யக்கூடாது என்று உத்தர வாதம் தரவேண்டும் என்று கோருகிறார். அப்போது அ.தி.மு.க. வெளிநடப்பு செய்தது மாத்திரமல்ல - அவையில் இருந்த வாறே கோஷமிட்டிருக்கிறார்கள். அதிமுக உறுப்பினர்கள்



முதலமைச்சர்கள் ஓய்வு எடுக்கும் ''வசந்த மண்டப''த்திற்கு என்னை அழைத்த எம்.ஜி.ஆருடன், நான் நடத்திய உரையாடல் காரணமாக, ஆளுநர் உரை தமிழிலே படிப்பது உறுதியாயிற்று.

இருவர் தங்கள் கைகளிலே மறைத்து வைத்திருந்த கறுப்புத் துணியை எடுத்து ஆளுநர் உரை நிகழ்த்தும் போது, அவையிலே காட்டினார்கள். ஆளுநர் உரை தமிழிலும் படிக்கப்பட்டபோதே இப்படியெல்லாம் அவையிலே நடந்து கொண்டவர்கள்தான் இப்போது வெளி நடப்பே செய்யக்கூடாது - அப்போதுதான் தமிழிலும் படிப்போம் என்று நிபந்தனை விதிக்கிறார்கள். இதிலிருந்து கழக ஆட்சிக் காலத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஜனநாயக உரிமைகளும் பாதுகாக்கப்பட்டன. அதே நேரத்தில் ஆளுநரின் உரை தமிழிலும் படிக்கப்பட்டது'' என்று விளக்கினேன். அவ்வளவு தான் - ஆளுங்கட்சியினர் அதன் பின்னர் இதைப்பற்றி வாயே திறக்கவில்லை.

★ ★ ★


கழகச் சட்டப் பேரவை உறுப்பினர் பரிதி **இளம்வழுதியைச்** சாதியின் பெயரைச் சொல்லி திட்டியதுடன், தன்னைக் கொலை செய்து விடப்போவதாக பரிதி மிரட்டியதாகப் பேரவைத் தலைவரிடம் **குமாரதாஸ்** என்ற உறுப்பினர் புகார் செய்ததின்பேரில், பட்ஜெட் தொடர் முழுவதற்கும் பரிதி இளம்வழுதி நீக்கம் செய்யப்பட்டார். அந்தச் செயலைக் கண்டித்து, பேரவையிலிருந்து எதிர்க்கட்சிகள் எல்லாம் அவையில் இருந்து வெளியேறிப் புறக்கணிப்பு செய்தன. இந்தச் சம்பவத்திற்காக குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று பேரவையில் தீர்மானம் கொண்டு வந்ததால், 31-1-2003 அன்று, அ.தி.மு.க. அரசுக்கே உரிய நேரமான

நள்ளிரவு 11.45 மணியளவில், பரிதி இளம்வழுதியை இரக்கமின்றிக் காவல் துறையினர் கைது செய்து, பதினைந்து நாள் சிறைக் காவல் விதித்தனர்.

அவரது கைதுபற்றி நிருபர்கள் என்னிடம் கேட்டபோது, சூசூகடுமையான கண்டனத்திற்குரியது - அதைப்பற்றி மற்றக் கட்சிகளோடு கலந்து பேசி உரிய முடிவெடுப்போம்!'' என்று கூறினேன்.

இதற்கிடையே, பேரவையில் முதல்வர் ஜெயலலிதா, தேவையில்லாமல் என்னையும், பேராசிரியரையும், ஏன் எல்லா கட்சித் தலைவர்களையும் தரக்குறைவாகப் பேசினார். அதைப் பற்றியும் செய்தியாளர்கள் என்னிடம் விரிவாகக் கூறி, அதுபற்றி என்னுடைய கருத்தைக் கேட்டபோது, விளக்கமாகவே நான் அப்போது தெரிவித்தேன். அது வருமாறு:-

''ஜெயலலிதாவின் பேச்சு, சாத்தான் வேதம் ஓதுவதைப் போல இருந்தது. நானோ, பேராசிரியரோ சபைக்கு வரவில்லை - அல்லது கலந்து கொள்ளவில்லை என்கின்ற குற்றச்சாட்டு அர்த்தமற்றது. எங்களைப் பொறுத்த வரையில், காமராஜர் முதல் அமைச்சராக இருந்தபோது எதிர்க்கட்சித் தலைவராகப் பணியாற்றியிருக்கிறோம். பக்தவத்சலம் முதலமைச்சராக இருந்தபோதும் பணியாற்றியிருக்கிறோம். எம்.ஜி.ஆர். முதல் அமைச்சராக இருந்தபோதும் பணியாற்றியிருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் எருக்கஞ்சேரி ஊழலைப்பற்றி சட்டசபையில் அரை மணி நேரம் நான் பேசியிருக்கிறேன். காங்கிரஸ் கட்சியோ - அல்லது காங்கிரஸ் உறுப்பினர்களோ யாரும் குறுக்கிடாமல், அந்த அரை மணி நேரக் குற்றச்சாட்டை அமைதியாகக் கேட்டார்கள். கேட்டது மாத்திரமல்ல - அந்தக் குற்றச்சாட்டு குறித்து விசாரணை செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவினர் அந்தக் குற்றச்சாட்டு உண்மைதான் என்பதை அறிவித்தார்கள். அதன் பின்னர், அண்ணா தலைமையில் தி.மு.கழக ஆட்சி வந்தது. அண்ணா அவர்கள் பெருந் தன்மையோடு அந்தக் குற்றச்சாட்டு பற்றிய மேல் நடவடிக்கைகளைக் கைவிட்டுவிட்டார்கள்.



பரிதி இளம்வழுதி

எருக்கஞ்சேரி ஊழல் பற்றி நான் பேசியது, ''இந்த இட ஊழலிலே **ஜானகிராமன்,** முதல் குற்றம் செய்ய ஆரம்பித்தார் - அவருக்குத் துணை யாக **கோசல்ராமன்** இருந்தார் -அந்த இரண்டு பேருக்கும் துணை யாக அமைச்சர் **வெங்கட்ராமன்** இருந்தார்! அட ராமா! இப்படி நடக்கலாமா?'' என்று கேட்டேன். அதைப் பொறுமையாகத்தான் ஆளுங்கட்சியினர் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

★ ★ ★

எம்.ஜி.ஆர். முதல் அமைச்சராக இருந்த போது, பல்கேரியா - பால்டிகா கப்பல் பேர ஊழலைப்பற்றி இருபதுக்கும் மேற்பட்ட ஆதாரங்களை, ஒன்றன் பின் ஒன்றாக அவையிலே எடுத்து வைத்து, ஏறத்தாழ ஒரு மணி நேரம் பேசினேன்.

அதை எம்.ஜி.ஆரும், அவருடைய ஆளுங்கட்சியினரும் அமைதியாகத்தான் கேட்டார்கள். அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு மறுநாள் பதில் சொல்வதாக அன்றைய முதல் அமைச்சர் எம்.ஜி.ஆர். அவையிலே அறிவித்தார்.

மறுநாள் அவையில் எம்.ஜி.ஆர். அவர்கள் ''அந்தக் கப்பல்கள் வாங்குவதாக இல்லை!'' என்று விளக்கம் அளித்தாரே அல்லாமல், என்னுடைய குற்றச்சாட்டுகளை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்க வில்லை. ஆனால், இப்போது, ரஷ்யாவில் சொல்வார்களே, ''இம்'' என்றால் சிறைவாசம் - ''ஏன்'' என்றால் வனவாசம் - என்று, அதைப்போல, ஒரு வார்த்தைகூட ஆளுங்கட்சி யினுடைய குறைகளைச் சொல்லவோ, குற்றங்களைச் சொல்லவோ அனுமதிப்பதில்லை.

எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் பேச ஆரம்பித்தால், முதலமைச்சர் குறுக்கிட்டு விளக்கம் அளிப்பது என்பது

இயற்கைதான். அதற்கும் ஓர் அளவு உண்டு. ஆனால் இந்த முதலமைச்சர் அடக்கத்திற்கே விடை கொடுத்துவிட்டு, எல்லா கட்சித் தலைவர்களையும் சகட்டு மேனிக்குத் தாக்கிப் பேசுகிறார். என்னை அரசியலிலிருந்து விலகிக் கொள்ளலாம் - இலக்கியத்திலே கவனம் செலுத்தலாம்'' - என்றெல்லாம் பேசியிருக்கிறார். நான் அந்த அம்மையாரின் ஆசைப்படி கலைத்துறைக்கும் போகலாம் - இலக்கியத் துறைக்கும் போகலாம் - ஆனால் பாவம், அந்த அம்மாவால் அது முடியாது. திறமை இல்லை என்று சொல்லவில்லை. அதற்குப் பல காரணங்கள் உண்டு'' - என்றெல்லாம் நான் விரிவாகப் பதில் சொன்னேன்.

★ ★ ★

அ.தி.மு.க. ஆட்சியில் சட்டமன்ற மரபுகள் எல்லாம் மீறப்படுவதையும், எதிர்க்கட்சியினர் உரிமைகள் பறிக்கப்படுவதையும், தி.மு.கழக உறுப்பினர் பரிதி இளம்வழுதியைச் சட்டப் பேரவையின் பட்ஜெட் கூட்டத் தொடர் முழுவதும் நீக்கி வைத்ததையும், அவர்மீது கொலை முயற்சி வழக்குப் போட்டிருப்பதையும் கண்டிக்கும் வகையில், 2-2-2003 அன்று மாலை 4 மணிக்கு, தேனாம்பேட்டை ஜி.ஆர்.டி. ஓட்டலில், அனைத்துக் கட்சிக் கூட்டத்தைப் பொதுச் செயலாளர் பேராசிரியர் கூட்டியிருந்தார்.

அந்தக் கூட்டத்தில் தி.மு.க., காங்கிரஸ், சி.பி.எம்., சி.பி.ஐ., பா.ம.க., ம.தி.மு.க., இந்திய தேசிய லீக், தமிழ் மாநில தேசிய லீக், காங்கிரஸ் ஜனநாயகப் பேரவை, விடுதலைச் சிறுத்தைகள், மூவேந்தர் முன்னேற்றக் கழகம், புதிய தமிழகம், எம்.ஜி.ஆர். கழகம் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

அந்தக் கூட்டத்தில் மக்கள் சக்தியைத் திரட்டுவதென்றும், அனைத்துக் கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் கண்டனக் கூட்டத்தை நடத்துவதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

அவ்வாறே 8-2-2003 அன்று ''சட்டப் பேரவையிலே அ.தி.மு.க.வின் சர்வாதிகாரத்தைக் கண்டித்து'' பொதுச்

செயலாளர் பேராசிரியர் தலைமையில் மயிலை மாங் கொல்லைத் திடலில் பிரமாண்டமான பொதுக்கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நானும், அனைத்துக் கட்சித் தலைவர்களும் உரையாற்றினோம்.

ஆனால், இவ்வளவிற்கும் பிறகு, பேரவையில் ஆளுநர் உரையின்மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளித்த முதலமைச்சர் ஜெயலலிதா, எதிர்க்கட்சியினரை எல்லாம் அவருக்கே உரிய பாணியில் இரண்டு மணி நேரம் வசைமாரிப் பொழிந்தார். காங்கிரஸ் கட்சித் தலைவரான நண்பர் **எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம்** அவர்களை **அகம்பாவம் கொண்டவர்** என்று அர்ச்சித்தார். ஏன் - என்னையும் பேராசிரியரையும் மிக மட்டரகமான அளவில் கேலி செய்தார். நான் அதற்குப் பதிலாக ''முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு - ஒரு திறந்த மடல்'' என்று தலைப்பிட்டு நீண்ட கடிதமாக விளக்கமளித்திருந்தேன்.

முதலமைச்சர் ஜெயலலிதா பேரவையில் பேசும்போது எனக்கொரு அறிவுரை வழங்கியிருந்தார். அதாவது, என்னை - இலக்கியத்துடன் இரு - அரசியலை விட்டு விலகிவிடு'' - என்கிற பொருள் கொண்ட பொன்னான அறிவுரை அது. அதற்கு நான் அளித்த பதிலில், ''ஆம் - எனக்கு அரசியல் லாயக்கு இல்லைதான்! அரசியலில் வெற்றிகளைப் பெற்று, அந்த வெற்றியின் விளைவாகக் கிடைக்கும் பதவியைக் கொண்டு, பணமலை குவிக்கவோ, கோடி கோடியாகத் திட்டங்களை அறிவித்து, அதில் கொல்லைப்புற வழியாகத் திரவியம் திரட்டவோ, இதற்குத் தடை, அதற்குத் தடை என சட்டம் இயற்றி, மிரட்டி, இறுதியில் தடைக்கே தடை விதிக்கும் சட்டங்களைச் செய்து, கறுப்புப்பணக் கருவூலத்தை நிரப்பவோ கற்றறியாத - கற்றிட விரும்பாத - ஓர் அப்பாவிக்கு அரசியல் அரங்கில் ஆடவும் தெரியாது - பாடவும் தெரியாது! இதற் கெல்லாம் மேலாக அரசியல் ஜாம்பவான் என்று காட்டிக் கொண்டு, அரசாங்க நிலங்களையும் உடைமைகளையும் சுருட்டிக் கொள்ளவும் தெரியாது! அதில் சிக்கிக் கொண்டால், திரும்ப ஒப்படைத்து விடுகிறேன் என்று சொல்லித் தப்பித்துக்

கொள்ள முயற்சி செய்திடும் பயிற்சி பெற்ற திருடர்களின் தந்திரமும் தெரியாது! இத்தனையும் தெரியாத எனக்கு அரசியல் தகுதி இல்லைதான்!'' - என்றெல்லாம் எழுதியிருந்தேன்.

★ ★ ★

கைது செய்யப்பட்டு சென்னை மத்திய சிறையில் அடைக்கப் பட்டிருந்த மத்திய சென்னை மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டப்பேரவை உறுப்பினருமான பரிதி இளம்வழுதியைப் பார்ப்பதற்காக நான் 6-3-2003 பகல் 12.30 மணியளவில் சென்னை மத்திய சிறைக்குச் சென்றேன்.

என்னுடன் பத்திரிகையாளரான **சின்னக் குத்தூசி** உடன் வந்தார். சிறையில் பரிதியைச் சந்தித்து, அவரது நலம் குறித்துக் கேட்டதோடு, பொடா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு, அந்தச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த தம்பி **சுப.வீரபாண்டி யனையும்** சந்தித்து, நலம் விசாரித்து விட்டுத் திரும்பினேன்.

தமிழகத்தில் ஜெயலலிதா 1991 முதல் 1996 வரை முதலமைச் சராக இருந்தபோது, தனது வருமானத்துக்கு அதிகமாகச் சொத்து சேர்த்ததாக அவர்மீது லஞ்ச ஒழிப்புப் போலீசார் வழக்கு தொடர்ந்து, சென்னை முதலாவது தனி நீதிமன்றத்தில் அந்த விசாரணை நடந்து வந்தது.

2001ஆம் ஆண்டு தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த காரணத்தால், ஜெயலலிதாமீதான சொத்துக் குவிப்பு வழக்கை வேறு மாநில நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டுமென்று உச்ச நீதிமன்றத்தில், 8-2-2003 அன்று கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் மனு தாக்கல் செய்தார். தொடர்ந்து 17-2-2003 அன்று தி.மு.கழகத்தின் சார்பில் பேராசிரியர் அவர்களே உச்ச நீதிமன்றத்தில் மேலும் ஒரு மனுவினை தாக்கல் செய்தார்.

அந்த மனுவில், ''கடந்த 11-2-2003 அன்று தனி நீதிமன்றத்தில் இந்த வழக்கில் சாட்சியமளித்த விசாரணை அதிகாரி, அரசு வழக்கறிஞரும், கண்காணிப்பு மற்றும் லஞ்சத் தடுப்பு இயக்குநரகமும் தனக்கு முழு ஒத்துழைப்பு

அளிக்கவில்லை என்று கூறியதையும், உள்துறையை முதல் அமைச்சர் ஜெயலலிதாவே வைத்திருப்பதால், போலீஸ் அதிகாரிகள் மிரட்டப்பட்டுள்ளனர் என்றும், மீண்டும் விசார ணைக்காக அழைக்கப்பட்ட சாட்சிகள், ஏற்கனவே அவர்கள் கூறியதிலிருந்து அடியோடு மாற்றிக் கூறியிருக்கிறார்கள் என்றும், அந்த மனுவிலே விரிவாக பேராசிரியர் குறிப்பிட்டிருந்தார்.

2000ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதத்திற்கு முன்பாகவே ஏறத்தாழ 80க்கும் மேற்பட்ட சாட்சிகள் விசாரிக்கப்பட்டு விட்டனர். அவர்கள் மீண்டும் விசாரணைக்கு அழைக்கப் பட்டால், ஆட்சி மாறிய நிலையில், அவர்கள் தங்கள் சாட்சியங்களை மாற்றிச் சொல்லக்கூடும் - என்றும் பேராசிரியர் மனுவிலே எழுதப்பட்டிருந்தது. எனவே, அந்தச் சூழ்நிலையில் ஜெயலலிதாமீதான சொத்துக் குவிப்பு வழக்கை வேறு மாநிலத்திற்கு மாற்றப்படுவதுடன், சென்னை மாநகரிலே நடைபெற்றுவரும் விசாரணைக்குத் தடை விதிக்கவேண்டு மென்றும் பேராசிரியர் மனுவிலே கேட்கப் பட்டிருந்தது.

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் **எஸ்.என். வைரவா, பி.என். அகர்வால்** ஆகியோர் பேராசிரியர் தாக்கல் செய்த மனுக்களை ஏற்றுக் கொண்டு, தனி நீதிமன்ற விசாரணைக்குத் தடை வழங்கியதோடு, ஜெயலலிதா தரப்பினருக்கு நோட்டீஸ் அனுப்பவும் உத்தரவிட்டனர். பத்தாண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட இந்த வழக்குதான் இன்னமும் முடிவடை யாமல் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. என்றைக்காவது ஒரு நாள் தங்களுக்கு வேண்டியவர் நீதிபதியாக வரமாட்டாரா? அல்லது அபிலாட்சைகள் கொண்ட எவராவது நீதிபதியாக வரமாட்டாரா? என்ற நம்பிக்கையோடு வழக்கைத் தாமதப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாட்டு மக்கள் அனைவரும் புரிந்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

★ ★ ★

வாணியம்பாடி, சைதாப்பேட்டை இடைத் தேர்தல் களுக்குப் பிறகு, 2003ஆம் ஆண்டு, பிப்ரவரியில் **சாத்தான்**

குளம் இடைத்தேர்தல் நடைபெறுமென்று தேர்தல் ஆணையம் அறிவிக்கை செய்தது. தமிழ்நாட்டில் அ.தி.மு.க. ஆளுங் கட்சியாக இருந்த நிலையில், இடைத்தேர்தல்களில் அதிகார துஷ்பிரயோகம் செய்தும், அமைச்சர்கள் எல்லாம் அந்தத் தொகுதிகளை ஆக்கிரமிப்பு செய்தும், கோடிக்கணக்கில் பணத்தை அள்ளிக் கொட்டி வாக்குகளை விலைக்கு வாங்கிக் குவித்தும், போலி வாக்குகளைத் தயாரித்துப் பயன்படுத்தியும், வாக்காளர் அடையாள அட்டைகளுக்குப் பதிலாக மாற்றுச் சான்றுகளைப் பயன்படுத்தலாம் என்ற ஏற்பாட்டைச் சாதகமாக்கிக் கொண்டும், வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றிக் கொண்டும், இப்படிப்பட்ட மக்கள் விரோத சேட்டைகளுக்குத் துணையாக போலீசாரையும், அடியாட்களையும், அதிகாரிகளையும், அமைச்சர்களையும், தேர்தல் ஆணையத்திலேயே ஓரிரு அலுவலர்களையும் பக்க பலமாக வைத்துக் கொண்டும், எப்படியும் வெற்றிபெற்றே தீருவது என்று நடத்தும் வெறியாட்டத்திலிருந்து ''ஜனநாயகம்'' விடுதலை பெற இயலாது என்பதை அனுபவமாகக் கொண்டு, சாத்தான் குளம் இடைத் தேர்தலைப் புறக்கணிப்பதென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைக் கழக உயர் மட்டச் செயல் திட்டக் குழு தீர்மானித்தது.

சாத்தான்குளம் இடைத்தேர்தலில் முதலமைச்சர் ஜெயலலிதா ஐந்து நாட்கள் அங்கே முகாமிட்டுப் பிரச்சாரம் செய்தார். அ.தி.மு.க.வை வெற்றி பெறச் செய்தால், ''சாத்தான் குளத்தில் சிமெண்ட் ஆலை அமைத்துத் தருகிறேன் - மகளிர் கல்லூரி ஏற்படுத்துகிறேன் - பாலிடெக்னிக், விளையாட்டு வளாகம் இப்படி பலவற்றை உருவாக்கித் தருகிறேன்'' என்றெல்லாம் சரமாரியாக வாக்குறுதிகளை அளித்தார்.

''இப்படி ஒரு முதலமைச்சர் வாக்குறுதிகளை வழங்கி - வாக்குக் கேட்பது தேர்தல் விதிமுறைகளை மீறிய செயல் - எனவே நடவடிக்கை எடுக்க வேண்டும்'' - என்று எதிர்க் கட்சிகள் தேர்தல் ஆணையத்திடம் புகார் செய்தன. முதலமைச்சர் வெளியிட்ட அறிவிப்புகள் ஏடுகளில் வெளி வந்ததையும் அந்தப் புகாரில் இணைத்து அனுப்பினார்கள்.



சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த
பரிதி இளம்வழுதியை நான் சந்தித்தேன்.

டெல்லி தலைமை தேர்தல் கமிஷன் உடனடியாக அதில் தலையிட்டு, தமிழக அரசின் தலைமைச் செயலாளருக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியது. மாலைக்குள் பதிலளிக்க வேண்டுமென்றும் அதிலே கூறப்பட்டிருந்தது. தலைமைச் செயலாளர் அன்று மாலையே அனுப்பிய பதிலில் முதல் அமைச்சர் உறுதியான வாக்குறுதி எதையும் அளிக்க வில்லை - பரிசீலிப்போம் என்றுதான் கூறினார் - விதிமுறைகளை மீறிப் பேசவில்லை''- என்று தெரிவித்தார்.

அதன் பிறகு டெல்லியில் மத்திய தேர்தல் கமிஷன் அவசரக் கூட்டத்தை நடத்தி, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அனுப்பிய கடிதத்தை ஆய்வு செய்தார்கள். அதன் பிறகு தேர்தல் கமிஷன் தமிழக அரசுக்கு ஒரு கண்டனக் கடிதம் அனுப்பியது. அந்தக் கண்டனக் கடிதத்தில் -

''உங்களுடைய விளக்கம் திருப்தி அளிக்கவில்லை என்பதை கமிஷன் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறது. தேர்தலில் வெற்றி பெறுவதற்காக ஆளுங்கட்சி அரசு சார்பிலான முன்னறிவிப்புகளைச் செய்து ஆதாயம் தேடக்கூடாது என்று தேர்தல் விதி உள்ளது. தேர்தலில் எல்லா வேட்பாளர்களும் எங்களுக்கு ஒன்றுதான். ஆட்சி கையில் இருக்கிறது என்பதற்காக ஆளுங்கட்சி எவ்வித சலுகைகளையும் பெற முடியாது. உறுதி மொழி தரவில்லை - பரிசீலிப்பதாகத்தான்

சொன்னார் - என்பதெல்லாம் ஒரு உயர் பதவியில் இருப்பவர் கடைப்பிடிக்கக் கூடிய பாதுகாப்பு முறையல்ல. இப்படி யெல்லாம் பாதுகாப்பு தேடுவதை நாங்கள் எதிர்பார்க்கவும் இல்லை. எனவே தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா சாத்தான் குளம் தேர்தல் பிரச்சாரத்தில் புதிய திட்டங்களை அறிவித்தது சம்பந்தமான அவரது செயல்பாடுகளைத் தேர்தல் கமிஷன் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை வருத்தத்துடன் தெரி வித்துக் கொள்கிறோம். முதலமைச்சர் தனது பிரச்சாரத்தில் புதிய திட்டங்களை அறிவித்தது, தேர்தல் ஆதாயம் பெறுவதற்காகத் தான் என்று தேர்தல் கமிஷன் உறுதியாகக் கருதுகிறது. ஜெயலலிதாவின் பிரச்சார முறை ஏற்கத்தக்கதல்ல என்று நிராகரிக்கிறோம். அவர் உறுதிமொழிகளை அளித்தது தேர்தல் விதிகளை மீறிய குற்றமே என்று தேர்தல் கமிஷன் முடிவுக்கு வருகிறது'' என்று எழுதியிருந்தது.

எனக்குத் தெரிந்தவரையில், மத்திய தேர்தல் ஆணையம் இப்படிப்பட்டதொரு சான்றிதழ்(?) அன்றைய தமிழக முதலமைச்சரைத் தவிர, வேறு எந்த முதல் அமைச்சருக்கும் தெரிவித்ததாகத் தெரியவில்லை.

இதுபோன்றதொரு கடிதம் என்மீது வந்திருந்தால், ஜெயலலிதா என்ன செய்திருப்பார்? எப்படிப்பட்ட அறிக்கை விட்டிருப்பார்? அடுத்த நிமிடமே என்னைப் பதவியிலிருந்து விலகச் சொல்லியிருப்பார். அந்த நேரத்திலேகூட பீட்டர் **அல்போன்ஸ், நல்லகண்ணு** போன்ற அரசியல் தலைவர்கள் ஜெயலலிதா உடனடியாகப் பதவி விலக வேண்டுமென்றுதான் அறிக்கை விடுத்திருந்தார்கள்.

ஆனால் செய்தியாளர்கள் என்னிடம் அதைப்பற்றிக் கேட்டபோது, ''தார்மீக ரீதியில் பதவியில் நீடிக்கலாமா என்பதை முதலமைச்சர் யோசித்துப் பார்த்து முடிவெடுப்பது தான் ஜனநாயகத்திற்கு நல்லது'' என்றுதான் பதிலளித்தேன்.

★ ★ ★

இவ்வளவு நடந்த பிறகுக்கூட, சாத்தான்குளத்தில் இடைத் தேர்தல் முறையாக நடக்கவில்லை. அ.தி.மு.க. அமைச்சர்

களினுடைய அராஜகம் தலைவிரித்தாடியது. போலி வாக்குகள் சரமாரியாக அள்ளிப் போடப்பட்டன. அதிகாரிகளும், போலீசாரும் ஆளுங்கட்சியினரைப்போலவே செயல் பட்டார்கள். அதன் பயனாக சாத்தான்குளம் இடைத் தேர்தலில் அதிமுக வெற்றிபெற்றது. அந்த வெற்றிபற்றி நான் கூறும்போது -

''ஒரு அணியினரை இன்னொரு அணியினர் கிரிக்கெட் மட்டைகளால் மண்டையில் தாக்கி - அடித்துக் காயப்படுத்தி விட்டு, பந்தை அந்த அணியினரே ''பௌலிங்'' செய்து, விக்கெட்டுகளையும் கைகளால் தள்ளி விட்டு, அம்பயர் கேள்வி கேட்டதற்கும், தடுத்ததற்கும் வீண் தகராறு செய்து விட்டு, வெற்றிக் கோப்பையை பிடுங்கிக் கொண்டு ஓடியவருக்கு ''மேன் ஆப் தி மேட்ச்'' என்று பட்டம் கொடுப்பது போன்றது இந்த வெற்றி'' என்று கூறினேன்.

மேலும் நான் செய்தியாளர்களிடம் கூறும்போது, ''கோடிக்கணக்கான ரூபாய் செலவழித்திருக்கிறார்கள். அதிகாரத் துஷ்பிரயோகம் நடைபெற்றிருக்கிறது. தேர்தல் விதிமுறைகள் ஏராளமாக மீறப்பட்டிருக்கின்றன. அதுபற்றித் தேர்தல் கமிஷன் கேட்டதற்குக்கூட பொய்யான ஒரு பதிலை தேர்தல் கமிஷனுக்கு எழுதியிருக்கிறார்கள்.

உதாரணமாக, சிமெண்ட் ஆலை போன்ற பல வாக்குறுதிகளை முதல் அமைச்சர் ஜெயலலிதா அந்தத் தொகுதியிலே அளித்திருக்கிறார். அதுபற்றி காங்கிரஸ் கட்சி சார்பில் புகார் கூறப்பட, அதற்கான விளக்கத்தைத் தேர்தல் கமிஷன் கேட்டபோது - ''பரிசீலிப்பதாகத்தான் முதல் அமைச்சர் பேசினார்'' என்று, அரசின் தலைமைச் செயலாளரே ஒரு வடிகட்டிய பொய்யைத் தேர்தல் கமிஷனுக்குப் பதிலாக அனுப்பியிருக்கிறார். வாக்குறுதிகளாகவே ஜெயலலிதா சாத்தான் குளத்திலே பேசியது அவர்களுடைய கட்சியின் அதிகாரப் பூர்வமான நாளேடான ''நமது எம்.ஜி.ஆர்.'' பத்திரிகையிலேயே வந்திருக்கிறது. அப்படியானால் ''நமது எம்.ஜி.ஆர்.'' பத்திரிகை பொய்யா? தலைமைச் செயலாளர்

தேர்தல் கமிஷனுக்கு எழுதிய கடிதம் பொய்யா? இதில் எது பொய்?- என்பது ஒருவேளை தேர்தல் வழக்கு வந்தால்தான் வெளியாகும்'' என்றேன்.

சாத்தான்குளம் இடைத்தேர்தலில் அ.தி.மு.க. அரசைப் பற்றியும், அ.தி.மு.க.வின் செயல்பாடுகளைப் பற்றியும் தேர்தல் ஆணையமும் இந்த அளவிற்கு விமர்சனம் செய்தது என்றால், தமிழக அரசுக்கு அப்போது உயர் நீதிமன்றம் கொடுத்த சான்றிதழ்பற்றி அடுத்த வாரம் எழுதுகிறேன்.


★ ★ ★


30. இயற்கையின் துணையை நம்பி!

நான் பல முறை சிறை வாசம் அனுபவித்த கால கட்டங்களில், தவறாமல் கையில் எடுத்துச் செல்லும் புத்தகங்களில் ஒன்று **மாக்சிம் கார்க்கியின் ''தாய்''** - எந்தவொரு வார இதழ், நாளிதழ் சிறப்புப் பேட்டியின்போதும், எனக்குப் பிடித்த வெளிநாட்டுப் புதினம் எது என்று கேட்டால், நான் அதற்குச் சொல்லும் ஒரே பதில், மாக்சிம் கார்க்கியின் ''தாய்'' என்ற புதினம் - என்பதுதான்.


கார்க்கியின் ''தாய்'' என்னும் புதினத்தை ரஷ்ய மொழியிலிருந்து நேரடியாகச் சிறப்புற மொழி பெயர்த்த நண்பர் ரகுநாதன் அவர்கள், அவரது முன்னுரையிலே பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

''தாய்'' புதினம் வெளியானதைக் கண்ட ரஷ்யாவின் ஜார் அரசாங்கம் ஆத்திரம் தாங்காமல், கார்க்கியின்மீது நடவடிக்கை எடுக்கத் துணிந்தது. ஆனால், அந்த நடவடிக்கைகளுக்கான அரசாங்கத் தஸ்தாவேஜ்கள் எவற்றிலும் கார்க்கியை ஓர் எழுத்தாளன் என்று குறிப்பிடக்கூட ஜார் அரசாங்கம் விரும்பவில்லை. கார்க்கியின் இயற்பெயரான ''அலெக்ஸி மாக்ஸி மோவிச் பெஷ் கோவ்'' என்பதை மட்டும் குறிப்பிட்டு, அதன் அருகில், ''ஒரு கொல்லுலைத் தொழிலாளி'' என்றும் குறிப்பிட்டு, கார்க்கியின் இலக்கியத் திறமையைத் திரையிட்டு மறைக்க எண்ணியது, ஜார் அரசாங்கம். ஆனால் கார்க்கியோ, ஜார் அரசாங்கத்தின் காவல் நாய்களின் கையிலே சிக்கவே இல்லை.





தீவுத்திடலில் நடந்த முத்தமிழ்
விழாவில் கலந்துகொண்ட பலருக்கும் நினைவுப்
பரிசுகளை வழங்கி முடித்த பின்
"தினம்" அதிபர் திரு.
சிவாஜி பேசுகையில்
தான் கூறிய நினைவுப் பரிசு பற்றி.






தாய் காவியத்தை ரஷ்ய மொழியில் எழுதிய மாக்சிம் கார்க்கி.

காப்ரித் தீவு என்ற இடத்தில் பத்திரமாக வாழ்ந்து வந்தார். பின்னர் கார்க்கி ரஷ்யாவுக்குத் திரும்பி வந்த காலத்தில், ரஷ்ய மக்கள் அவருக்கு அமோக வரவேற்பளித்துக் கௌரவித் தார்கள்.

கார்க்கியின் இலக்கியத்தில் பாட்டாளி மக்கள் மனிதர் களாக உலவுகிறார்கள் - வீரர்களாகத் திரிகிறார்கள். தமது வாழ்க்கைச் சூழ்நிலையிலிருந்தே தவிர்க்க முடியாதவாறு பொங்கியெழும் தொழிலாளி வர்க்கத்தின் தர்மாவேசத் தாகத்தைச் சித்தரித்தார், கார்க்கி.

"நீறு பூத்த நெருப்பாகக் கிடக்கும் அவர்களது போராட்ட சக்தி, எப்படி வர்க்க உணர்ச்சி பெற்று - கனிந்து - சிவந்து - வான் முட்ட ஓங்கும் செந்தழற் பிழம்பாக வளர்கிறது என்பதைச் சித்தரித்தார் கார்க்கி. அடிமைத் தனத்தின் நுகத்தடியில் கழுத்தைக் கொடுத்துத் தடிப்பேறிய மக்களின் மனிதத் தன்மை, எப்படி அந்தத் தளையைத் தகர்த்து விடுபட முடியும் - எப்படி விடுபடுகிறது என்ற சூட்சுமத்தை விளக்கினார், கார்க்கி."

- நண்பர் ரகுநாதன் எழுதிய இந்த முன்னுரையில் குறிப்பிட்டதைப்போலவே, என்னைக் கவர்ந்த எழுத்தாளர் களில் ஒருவர் கார்க்கி. சோவியத் நாட்டில் கார்க்கி பிறந்த இடத்துக்கு அவர் பெயர் சூட்டப்பட்டுள்ளது. அவர் பிறந்த சிறிய இல்லம் இன்று மகத்தான தேசீயச் சின்னமாக மாற்றப்பட்டுள்ளது. மாஸ்கோ நகரத்து மாபெரும் பூங்கா, கார்க்கியின் பெயரால் அழைக்கப்படுகிறது. இலட்சிய வெறியுடன் போராடி, சிறைக்கோட்டம் பல முறை சென்று, இலக்கியச் சிற்பியாகவும் விளங்கிய அந்த மாமேதைக்கு என்னாலியன்ற நினைவுச் சின்னம் ஒன்றை எழுப்புவது



கார்க்கி பிறந்த கிராமத்து வீடு

சிறப்பாக இருக்கு மென்று, 2003ஆம் ஆண்டு தொடக் கத்தில் நான் எண்ணி, மாக்சிம் கார்க்கியின் மகத்தான படைப் பான "தாய்" எனும் புரட்சிப் புதினத்தைக் "கார்க்கியின் தாய் காவியம்" என்ற தலைப்பில், கவிதை நடைத் தொடராக "குங்குமம்" கிழமை இதழிலே 2003ஆம் ஆண்டு, மார்ச் திங்களில் தொடங்கி எழுதினேன். அதைப்பற்றி முரசொலியில் அறிவிப்பினை எழுதியபோது -

"எழுத்து வடிவில் பூத்த புரட்சிப் பூ ஒன்று-
என் நெஞ்சில் எப்போதும் மணம் வீசும் பூ!
மாக்சிம் கார்க்கி எனும் மாபெரும் எழுத்தாளன் -
மன்பதைக்குத் தந்திட்ட சிகப்புப்பூ! செம்பூ!
அன்னை என்றும், தாய் என்றும்
அழைக்கப்படும் அற்புதப் பூ!
பல மொழிகளில் மணம் பரப்பும் அப்பூவை -
கலை வண்ணமுடன் கவிதை நடையில் வழங்குகின்றேன்"

- என்று எழுதியிருந்தேன். அவ்வாறே "தாய்க் காவியம்" தொடர்ந்து எழுதப்பட்டு, புத்தகமாகவும் வெளிவந்தது.

★ ★ ★


சாத்தான்குளம் இடைத் தேர்தலில் அ.தி.மு.க. அரசைப் பற்றியும், அ.தி.மு.க.வின் செயல்பாடுகளைப்பற்றியும் தேர்தல் ஆணையம் எந்த அளவிற்கு விமர்சனம் செய்தது என்று எழுதி முடிக்கின்றபோது, நீதி மன்றம் தெரிவித்த கருத்துபற்றித் தொடர்ந்து எழுதுவதாகச் சென்ற இதழில் குறிப்பிட்டிருந் தேன்.

6-3-2003 அன்று, சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. பி. சுபாஷண் ரெட்டி அவர்கள், ''நமது நீதிமன்றங்களுக்குத் தேவையான நிதி மற்றும் ஊழியர்களைத் தமிழக அரசு நியமிக்காவிட்டால், நீதிமன்றங்களை மூடுவோம்'' என்றே அ.தி.மு.க. அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

''இந்நிலை நீடித்தால், தமிழகத்தில் பொருளாதார நெருக்கடி நிலையைப் பிரகடனப் படுத்தக் கோரி, குடியரசுத் தலைவருக்குப் பரிந்துரை செய்ய நேரிடும்'' என்றும் அவர் குறிப் பிட்டார்.

நீதிமன்றங்களுக்குக் கூடுதல் ஊழியர்கள் நியமிக்க நிதி கோரி, உயர் நீதிமன்றப் பதிவாளர் ஜெனரல் அனுப்பிய கடிதத்தைத் தமிழக அரசு நிராகரித்ததைத் தொடர்ந்து, தலைமை நீதிபதி இவ்வாறு கடுங்கோபத்துடன் எச்சரித்தார்.

மாநிலத்தில் உள்ள நீதிமன்றங்களுக்குக் கூடுதல் நிதியை ஒதுக்க வேண்டும் - கீழ்க் கோர்ட்டுகளுக்கு நீதிபதிகள் உள்பட பணியாளர்களை நியமிக்க வேண்டும் - என்று 3-4-2002இல் தமிழக



தாய் காவியம் நூலில் சில காட்சிகள்...



சுபாஷன் ரெட்டி

அரசுக்குப் பதிவாளர் ஜெனரல் கடிதம் எழுதினார். ''நிதி நெருக்கடியில் இருப்பதால், கூடுதல் நிதியை ஒதுக்க முடியாது - மேலும் 29-11-2001 அன்று பிறப்பித்த அரசாணையின்படி அத்தியாவசியப் பணிகளுக்கு மட்டுமே கூடுதல் பணியிடங்களை அனுமதிக்க முடியும். அதனால் கூடுதல் பணியாளர்களை நியமிக்க முடியாது'' என்று தமிழக அரசு பதிலளித்தது.

அதைத் தொடர்ந்து, பதிவாளர் ஜெனரல் அனுப்பிய கடிதத்தை ரிட் மனுவாக எடுத்துக் கொண்டது உயர் நீதிமன்றம். அதன்மீதான விசாரணை சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி **பி. சுபாஷண் ரெட்டி,** நீதிபதி **கே.ரவிராஜ பாண்டியன்** ஆகியோர் அடங்கிய முதல் டிவிஷன் பெஞ்ச் முன்பு விசாரணைக்கு வந்தது.


அப்போது தலைமை நீதிபதி அரசு வழக்கறிஞரிடம், ''நாங்கள் எப்படிச் செயல்படுவது என்று கூறுங்கள். நாடாளுமன்றம், சட்டப்பேரவைகளில் நீதிமன்றங்களின் செயல்பாடுகள் குறித்து கேள்விகள் எழுப்பப்படுகின்றன. ஆனால், ஊழியர்களை நியமனம் செய்யத் தடை உள்ளதாகக் கூறுகிறீர்கள். நாங்கள் நீதிமன்றத்தை மூடி விடுகிறோம். மாநில அரசின் நிதி நிலைமை சரி இல்லாததால்தான் நீதிமன்றத்தை மூடுவதாகக் கூறுவோம். மேலும், தமிழகத்தில் பொருளாதார நெருக்கடி நிலையைப் பிரகடனப்படுத்துமாறு அரசியலமைப்புச் சட்ட அதிகார அமைப்புகளான குடியரசுத் தலைவர் உள்ளிட்டோருக்குப் பரிந்துரை செய்வோம். அவ்வாறு நீதிமன்றங்களை மூடிவிட்டால், உங்களுக்கு ஓய்வு கிடைக்கும் - எங்களுக்கும் ஓய்வு கிடைக்கும். இது போன்றவற்றால் மிகவும் சோர்ந்து விட்டோம். மூடிவிடுவது அனைவருக்கும் நல்லதுதானே?

"அரசு கஜானா என்பது அரசாங்கத்துக்கு மட்டுமே என்று இந்த அரசாங்கம் நினைக்கிறது. அதுதான் பிரச்சினையே. நீதிமன்றங்களுக்கு நிதி ஒதுக்குவதை தர்மம் செய்வதாகக் கருதிவிடக்கூடாது. உங்களுடைய அரசியலமைப்புச் சட்டக் கடமையையே செய்கிறீர்கள். கடந்த ஒன்றரை ஆண்டாக இங்கு தலைமை நீதிபதியாக உள்ளேன். நான் பார்த்தவரை அரசுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை இந்த அரசாங்கம் உணரவில்லை. அரசின் ஓர் அங்கமே அரசாங்கம். அரசு கஜானாவுக்கு நீங்கள்தான் அனைத்து வகையிலும் பொறுப்பு என்று நினைக்கிறீர்களா?" என்றார், நீதிபதி

இதைவிட ஓர் அரசுக்கு உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி சான்றிதழ் தந்ததாக வரலாறே கிடையாது. அ.தி.மு.க. அரசு ஒன்றுக்குத்தான் இப்படிப்பட்ட பாராட்டு தேர்தல் ஆணையத்திடமிருந்தும், உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியிடமிருந்தும் கிடைத்தது என்றால், அது மிகையல்ல. அரசு விவகாரத்தில் உயர் நீதிமன்றம் இவ்வாறு தீர்ப்பளித்த போதிலும், தனிப்பட்ட முறையில் - அதாவது அரசுக்குச் சொந்தமான "டான்சி" நிலத்தை முதலமைச்சர் பொறுப்பிலே இருந்த ஜெயலலிதா வாங்கியது பற்றிய வழக்கு உச்ச நீதிமன்றம்வரை நடைபெற்று, அதிலே வழங்கப்பட்ட தீர்ப்புபற்றியெல்லாம் "நெஞ்சுக்கு நீதி"யில் அடுத்து தொடர்ந்து எழுதுகிறேன்.

★ ★ ★

ஜெயலலிதா அரசின் மற்றொரு சாதனையாக, 2003ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 15-3-2003 அன்று, தமிழக அரசின் மின்வாரியம் செய்த பரிந்துரைகளை ஏற்று, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் திருத்தி அமைக்கப்பட்ட மின் கட்டண உயர்வுகளை அறிவித்தது. வீடுகளுக்காகப் பயன்படுத்தப்படும் மின்சாரத்தைப் பொறுத்தவரை - 50 யூனிட்டுகள் வரை 85 காசுகள் என்றிருந்ததை 110 காசுகள் என்றும் - 51 முதல் 100 யூனிட்டுகள்வரை 100 காசுகள் என்றிருந்ததை 130 காசுகள் என்றும் - 101 முதல் 200 யூனிட்டுகள்வரை 200 காசுகள் என்பதை 260 காசுகள் என்றும்




கே.ரவிராஜபாண்டியன்

- 201 முதல் 600 யூனிட்டுகள் வரை 300 காசுகள் என்றிருந்ததை 350 காசுகள் என்றும் - 601 முதல் 1000 யூனிட்டுகள் வரை 400 காசுகள் என்பதை 475 காசுகள் என்றும் - 1001 யூனிட்டுகளுக்குமேல் 450 காசுகள் என்பதை 475 காசுகள் என்றும் - மின் கட்டணம் உயர்த்தப்பட்டது.

குடிசை வீடுகளுக்கு அதுவரை மின் கட்டணம் கிடையாது. ஜெயலலிதா ஆட்சி யில், மீட்டர் பொருத்தப்பட்ட குடிசைகளுக்கு யூனிட் ஒன்றுக்கு 50 காசுகள் வீதமும் - மீட்டர் பொருத்தப்படாத குடிசைகளுக்கு மாதக் கட்டணமாக பத்து ரூபாய் மின் கட்டணமாகவும் நிர்ணயிக்கப்பட்டது.

அதைப்போலவே கல்வி நிலையங்கள், தொழிலகங்கள், வணிக நிறுவனங்கள் ஆகியவற்றுக்கான மின் கட்டணங்களும் உயர்த்தப்பட்டு அறிவிக்கப்பட்டன. அனைத்துத் தரப்பு மக்களையும் பாதிக்கும் வகையில் மின் கட்டணங்கள் அதிகம் உயர்த்தப்பட்டதோடு, விவசாயத்திற்கு தி.மு.க. ஆட்சியில் இலவச மின்சாரம் என்றிருந்ததையும் ரத்து செய்தார்கள். விவசாயிகளுக்கான இலவச மின்சாரம் ரத்து செய்யப் பட்டதற்கு, விவசாய சங்கங்கள் எல்லாம் கண்டனம் தெரி வித்தன.

மின் கட்டண உயர்வைக் கண்டித்து, கழகத்தின் சார்பில் பொருளாளர் **ஆர்க்காடு வீராசாமியும்,** இலவச மின்சாரம் ரத்து செய்யப்பட்டதைக் கண்டித்து, கழக விவசாய அணிச் செயலாளர் என்ற முறையில் கே.பி.இராமலிங்கமும் கண்டன அறிக்கைகளை விடுத்தனர்.



குடிசை வீடுகளுக்கு மின் கட்டணம் இல்லை' என்றிருந்த நிலையை மாற்றி, கட்டணம் விதித்த அ.தி.மு.க. அரசை நாடே கண்டித்தது.


ஏனைய எதிர்க் கட்சிகள் சார்பில் **சோ.பாலகிருஷ்ணன், ஈ.வி.கே.எஸ். இளங் கோவன், டாக்டர் ராமதாஸ், என்.வரத ராசன், ஆர்.நல்ல கண்ணு, டாக்டர் கிருஷ்ணசாமி, எல்.கணேசன்,** ஆகியோர் கண்டனங்களைத் தெரிவித்திருந்தார்கள்.

இலவச மின்சாரம் ரத்தானதைக் கண்டித்து, தமிழகத்தில் மூன்று கட்டங்களாகப் போராட்டம் நடத்துவதென்றும் - அதாவது முதலில் கண்டனப் பொதுக்கூட்டம் - அடுத்துப் பேரணி - அதற்கடுத்து முற்றுகைப் போராட்டம் - என்ற முறையில் நடத்துவதென்றும் அனைத்து விவசாயச் சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பில் அறிவிக்கப்பட்டது.

21-3-2003 அன்று பேரவையில் நமது **பேராசிரியர்** அவர்கள் இதுபற்றிக் கடும் கண்டனத்தைத் தெரிவித்ததோடு, தி.மு.க. உள்ளிட்ட அனைத்து எதிர்க்கட்சிகளும் சட்டப் பேரவையிலிருந்து வெளிநடப்பு செய்தன.

அதற்கடுத்த நாளான *22*ஆம் தேதியன்று, திருச்சியில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய நான், மின்கட்டண உயர்வுகளைப்பற்றி விரிவாகப் பேசியதோடு, விவசாயிகள் கொதித்தெழுந்தால் - ஏர் பிடித்தவன் போர் முனைக்கு வந்தால் - அ.தி.மு.க. ஆட்சி தாங்காது'' என்றும் - ஆட்சியினர் உடனே திருந்த வேண்டும் - இல்லாவிடில் தமிழ் மக்களே திருத்துவார்கள்!'' என்றும் பேசினேன்.

இலவச மின்சாரத்தை ரத்து செய்த தமிழக அரசைக் கண்டித்து, மாவட்டத் தலைநகர்களில் *23-4-2003* அன்று கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்துவதென்றும் அனைத்துக்



கட்சிக் கூட்டத்தில் முடிவெடுக்கப் பட்டது. அவ்வாறே 23ஆம் தேதி அன்று தமிழகத்தில் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.


★ ★ ★

அ.தி.மு.க. ஆட்சியில் 2003ஆம் ஆண்டு பத்து அம்சக் கோரிக்கை களை வலியுறுத்தி, மருத்துவக் கல்லூரியில் பயின்ற மாணவர்கள் போராட்டம் ஒன்றை நடத்தினார்கள். அவர்களின் முக்கியமான கோரிக்கை, தமிழகத்தில் தனியார் மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்க அரசு அனுமதி அளிக்கக்கூடாது - என்பதுதான்.

23-4-2003 முதல் போராட்டம் நடந்தது. இது தொடர்பாக மாணவர்களுடன் அரசுத் தரப்பில் பேச்சு வார்த்தை நடந்தது. ஆனால், அந்தப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. அதனைத் தொடர்ந்து, மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு ஆதரவாக, அரசு டாக்டர்கள் போராட்டத்தில் குதித்தனர்.

25-4-2003 அன்று மருத்துவக் கல்லூரி மாணவர்கள் ஒரு நாள் அடையாள உண்ணா விரதம் இருந்தனர். போராட்டத்தின் போதே, மாணவர்கள் மருத்துவமனை முன்பாக புற நோயாளிகள் சிகிச்சை பிரிவைத் தொடங்கி, பொதுமக்களுக்கு சிகிச்சையும் அளித்தார்கள். ரத்த தானம் செய்தார்கள். ஏப்ரல் 29 முதல் தொடர் உண்ணாவிரதம் இருக்கவும் முடிவு செய்தனர்.

போராட்டத்தை அடக்கும் நோக்கத்துடன் அரசு, கல்லூரி விடுதியை மூடுவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டது.



அதற்குத் தடை விதிக்க வேண்டுமென்று மருத்துவக் கல்லூரி மாணவர்கள், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்த போது, நீதிபதி விடுதியை மூட இடைக்காலத் தடை விதித்ததோடு, மாணவர்களை அழைத்து அரசு பேச்சு வார்த்தை நடத்த வேண்டும்" - என்றார். மாணவர்களும் போராட்டத்தைக் கைவிட்டுக் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றும் நீதிபதி தெரிவித்தார்.

★ ★ ★

10-5-2003 அன்று அரசு டாக்டர்கள் முக்கிய அறுவை சிகிச்சைகள் தவிர, அனைத்து சிகிச்சைகளையும் புறக்கணித் தனர். அதனால் நோயாளிகள் கடும் அவதிக்கு ஆளாயினர். போராட்டத்தில் ஈடுபடும் அரசு டாக்டர்கள்மீது "எஸ்மா சட்டம் பாயும்" என்று அரசின் சார்பில் எச்சரிக்கை விடுக்கப் பட்டது. ஆனால், டாக்டர்கள் அதற்காகப் பயப்படவில்லை. மருத்துவ மாணவர்களுடன் இணைந்து அவர்கள் போராட்டத்தைத் தீவிரப்படுத்திவிட்டார்கள்.

அதன் அடுத்த கட்டமாக 14-5-2003 அன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் மேற்கொண்டனர். அதனால் அன்றைய தினம் அரசு மருத்துவமனைகளில் எந்தப் பணியும் நடக்கவில்லை. "அரசு டாக்டர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தினால், ஆஸ்பத்திரிகளில் எந்தவித பாதிப்பும் இல்லை" என்று அ.தி.மு.க. அமைச்சர் அறிவித்தார்.




அரசு தொடர்ந்து கௌரவப் பிரச்சினை பார்த்துக் கொண்டு, பிடிவாதமாக மிரட்டிக் கொண்டிருந்த காரணத்தால், 12-5-2003 அன்று விபத்தில் காயமடைந்த **இளைய ராஜா** என்ற ஒருவரை மதுரை அரசு மருத்து வமனைக்கு அழைத்து வந்தபோது, சிகிச்சை அளிக்க டாக்டர்கள் இல்லாத காரணத் தினால், அவர் இறக்க நேரிட்டது.

அதைப்போலவே, சென்னையில் ஸ்டான்லி மருத்துவ மனையில் **நித்யா** என்ற சிறுமி, முறையான டாக்டர்களின் சிகிச்சை இல்லாத காரணத்தினால் இறக்க நேரிட்டது.

சேலம் மருத்துவமனையில் **விமலா** என்ற பெண்மணி அவசர சிகிச்சைக்காக வந்தபோது, டாக்டர்கள் இல்லாததால் உயிரிழக்க நேரிட்டது.

திருச்சியில் கர்ப்பவதி **மேகலா** என்பவரும் அவரது பிறந்த குழந்தையும் முறையான டாக்டர்கள் சிகிச்சை இல்லாத காரணத்தினால் இறக்க நேரிட்டது.


டாக்டர்கள் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட காரணத்தால், மருத்துவமனைகள் பெரிதும் பாதிக்கப்பட்டு, செய்ய வேண்டிய அறுவை சிகிச்சைகள் எல்லாம் செய்யப்படாமல் தடுக்கப்பட்ட நிலையில், அரசு டாக்டர்களின் சங்கப் பிரதிநிதிகள் நான்கைந்து பேரை அரசு அவசர அவசரமாக மாறுதல் செய்து, ஆணை பிறப்பித்தது. இது அவர்களின் போராட்டத்தைத் தூண்டிவிடுவது போலாயிற்று.



அ.தி.மு.க. அரசின் அலட்சியப்போக்கால், மருத்துவக் கல்லூரி மாணவர்கள் 15-5-2003 அன்றும் உண்ணாவிரதம் - ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர். 16-5-2003 அன்று மருத்துவக் கல்லூரி மாணவர்களுடன் அரசு நடத்திய பேச்சு வார்த்தையின் போது, கோரிக்கைகள் எதையும் ஏற்றுக் கொள்ளமுடியாது என்று அரசு மறுத்துவிட்டக் காரணத்தால் பேச்சு வார்த்தை தோல்வி அடைந்து, பிரச்சினைக்கு தீர்வு ஏற்படும்வரை போராட்டத்தைத் தொடரப் போவதாக மாணவர்கள் அறிவித்தனர். அரசு 5000 மருத்துவக் கல்லூரி மாணவர்களை இடைநீக்கம் செய்துள்ளதாக அறிவித்தது. இவர்களில் 1200 பேர் இறுதித் தேர்வு எழுதுவோராகும்.

★ ★ ★

மருத்துவக் கல்லூரி மாணவர்களின் போராட்டம் குறித்து செய்தியாளர்கள் என்னைக் கேட்டபோது, "அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற சில நாட்களுக்கெல்லாம் ஒரு சில அரசியல் கட்சிகளின் தூண்டுதலோடு மருத்துவ மாணவர்கள் போராட்டம் ஒன்றைத் தொடங்கினார்கள். அப்போது அண்ணா அவர்களே மாணவர்களைச் சந்தித்துப் பேச, அவர்கள் இருக்கும் இடத்திற்கே சென்றார். பேசிக் கொண் டிருந்தபோது, களைப்புற்ற அண்ணா அவர்கள் சிறிது தண்ணீர் கேட்டார். ஒரு மாணவர் குவளையில் தண்ணீர் கொண்டு வந்தபோது, இன்னொரு மாணவர் அதைத் தட்டி விட்டுக் கீழே கொட்டிவிட்டார். அதற்காக முதல் அமைச்சர் அண்ணா வெகுண்டெழவில்லை. அதைக் கண்டு



கொள்ளாமலே பேச்சு வார்த்தையைத் தொடர்ந்து நடத்தினார். அந்த அணுகுமுறைக்கும் இன்றுள்ள ஆட்சியாளர்களின் தவறான அணுகுமுறைக்கும் எத்தனையோ காத தூரம்?'' என்று ஒப்பிட்டுக் காட்டினேன்.

★ ★ ★

அது மாத்திரமல்ல - மருத்துவக் கல்லூரி மாணவர்கள் வைத்துள்ள இதே கோரிக்கைகளை முன்வைத்து, தி.மு.கழக ஆட்சி நடைபெற்றபோது, 2000ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் போராட்டம் நடத்தியபோது, எதிர்க்கட்சிகளின் அறிவுரைப் படி, மாணவர்களை அழைத்துப் பேசி, ''தனியார் மருத்துவக் கல்லூரிகள் புதிதாகத் தொடங்க அனு மதிக்கமாட்டோம் என்பதுதான் கழக அரசின் கொள்கை'' என்று கூறி, ஒரே நாளில் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டு, மாணவர்களும் நன்றி கூறிச் சென்றார்கள். அ.தி.மு.க. அரசும் அதே முறையைப் பின்பற்ற வேண்டுமென்று நான் வலியுறுத்தினேன்.

மருத்துவக் கல்லூரி மாணவர்கள் போராட்டத்தைப் போலவேதான் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் போராட்டமும் அ.தி.மு.க. ஆட்சியில் நடைபெற்றது. அதை அ.தி.மு.க. அரசு எவ்வாறு கையாண்டது என்பதைப் பற்றியும், நீதிமன்றங்கள் வரை அந்தப் பிரச்சினை சென்றது பற்றியும் அடுத்த பாகத்தில் விரிவாக எழுதுகிறேன்.

★ ★ ★

கழக அமைப்புகளுக்கான பன்னிரண்டாவது தேர்தல் தமிழகம் எங்கும் நடைபெற்று, அண்ணா அறிவாலயத்தில் புதிய பொதுக் குழு 2-6-2003 அன்று கூடியது.

12வது தேர்தலில் பேரூர், ஒன்றியம், நகரம், மாநகரம், மாவட்டமென தமிழக மெங்கும் உள்ள 65 ஆயிரம் கிளை அமைப்புகளிலும் பணியாற்றுவதற்கான கிளைக் கழகத் தேர்தல் முடிவுற்று, மாவட்டக் கழகச் செயலாளர்களாக 30 பேர் தேர்வு பெற்றனர்.

மாவட்டக் கழக நிர்வாகிகளாக 180 பேரும் - ஒன்றியக் கழகச் செயலாளர்களாக 393 பேரும் - நகரக் கழகச் செயலாளர்களாகவும், பகுதிக் கழகச் செயலாளர்களாகவும் 159 பேரும் - தலைமைச் செயற்குழு உறுப்பினர்களாக 129 பேரும் - பொதுக் குழு உறுப்பினர்களாக 298 பேரும் - ஆக மொத்தம் 1,186 பேர் தேர்வு செய்யப்பட்டனர்.

அந்தத் தேர்தலின் இறுதிக் கட்டமாக கழகத் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் - பதவிகளுக்குமான தேர்தல் 2-6-2003 அன்று பொதுக் குழுவிலே நடைபெற்றது.

தேர்தலுக்கு ஆணையராக இருந்து தேர்தலை நடத்தித் தருமாறு கழகத்தின் முன்னணித் தலைவரும், மூத்த மாவட்டச் செயலாளருமான **கோ.சி. மணி** அவர்களைத் தலைமைக் கழகத்தின் சார்பில் **எஸ்.ஏ.எம்.** உசேன் முன்மொழிந்தார். தலைமை நிலையச் செயலாளர் **டி.கே.எஸ்.இளங்கோவன்** வழி மொழிந்தார். கோ.சி. மணி ஆணையராகப் பொறுப்பேற்று, தேர்தலை நடத்தினார்.

கழகத் தலைவராக நானும், பொதுச் செயலாளராக **பேராசிரியரும்,** பொருளாளராக **ஆர்க்காடு வீராசாமியும்**



பீட்டர் அல்போன்ஸ் - ஏ.கோபண்ணா இருவரும் எழுதிய நூல்களை நான் வெளியிட, ப.சிதம்பரம் பெற்றுக்கொண்டார்.

ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டோம். தளபதி **மு.க.ஸ்டாலின் எம்.எல்.ஏ., எஸ்.பி. சற்குணபாண்டியன், பரிதி இளம்வழுதி எம்.எல்.ஏ.,** ஆகியோர் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர்களாக நியமனம் செய்யப் பட்டனர். தலைமைக் கழக முதன்மைச் செயலாளராக **துரைமுருகன்** நியமனம் செய்யப்பட்டார். மத்திய அமைச்சர் தம்பி **முரசொலி மாறன்** உள்ளிட்ட 13 பேர் உயர் மட்டச் செயல் திட்டக் குழு உறுப்பினர்களாக நியமனம் செய்யப் பட்டனர்.

தலைமைக் கழகத்தின் நான்கு தணிக்கைக் குழு உறுப்பினர் களாக **ஏ.ஆர்.வி.காசிநாதன், குழந்தை தமிழரசன், பெ.வீ. கல்யாணசுந்தரம், பி.என். சுப்பிர மணியம்** ஆகியோர் போட்டியின்றித் தேர்ந் தெடுக்கப்பட்டனர்.

துணைப் பொதுச் செயலாளர்களில் ஒருவராக தம்பி ஸ்டாலின் நியமிக்கப்பட்டதால், அன்றைய தினம் என்னைச் சந்தித்த செய்தியாளர்கள், ''அடுத்த தலைமை அவர் தான் என்று அடையாளம் காட்டப்பட்டுள்ளதா?'' என்று கேட்டபோது - ''அவரை மாத்திரமல்ல - அவரைப் போன்ற இளைஞர்கள் அனைவரையுமே அடையாளம் காட்டு கிறோம்'' என்று நான் சொன்னேன்.

அதற்குள் பொதுச் செயலாளர் குறுக்கிட்டு, ''இந்தக் கேள்விக்கு நான் பதில் கூறுகிறேன். கலைஞரின் வாரிசு என்பதற்காக இந்த நியமனம் அல்ல. தி.மு. கழகம் வாழையடி வாழையாக, ஆல மரத்தின் விழுதாக வளர்கிற போது, ஒவ்வொரு இயக்கத்திற்குள்ளும் வாரிசுகள் உருவாவார்கள். கலைஞருக்கு மட்டுமல்ல. பெரியாருக்கு வாரிசாக அண்ணா உருவானார் - அண்ணாவிற்கு வாரிசாக கலைஞர் உருவானார். அதைப்போல ஒரு இயக்கத்தின் வளர்ச்சியில் ஸ்டாலின் எல்லோரும் மதிக்கின்ற - வரவேற்கின்ற இடத்தைப் பெற்றிருக்கிறார். கலைஞருக்கு அடுத்தபடியாக மக்களிடம் தொடர்பு கொண்ட ஒருவராக இருப்பதால், அவருக்கு இந்த வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இது ஏதோ தனிப்பட்ட



2.6.2003 அன்று, அண்ணா அறிவாலயத்தில் கழகப் பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது.

முறையிலோ, உறவு அடிப்படையிலோ செய்யப்பட்டதல்ல. வாரிசு என்ற அடிப் படையல்ல. கலைஞரின் வாரிசு என்று யார் வேண்டுமென்றாலும் கருதிக் கொள்ளலாம் - துரைமுருகன் கலைஞருக்கு நான் வாரிசு என்று சொல்லலாம் - டி.ஆர். பாலு சொல்லலாம் - கலைஞருக்கு மகனாக ஸ்டாலின் பிறந்தது அவரது குற்றமல்ல'' என்று பதிலளித்தார்.

பேராசிரியர் அவர்கள் அப்போது அறி வித்தவாறும் துணைப் பொதுச் செயலாளராக இருந்த ஸ்டாலின் ஆற்றிய பணிகளின் காரணமாகவும்தான் அவர் துணைப் பொதுச் செயலாளர் என்ற நிலையிலிருந்து பொருளாளர் என்ற நிலைக்கு உயர்ந்தார். அதைப் பற்றிய விவரங்கள் ''நெஞ்சுக்கு நீதி''யின் ஏழாவது பாகத்தில் விரிவாக வெளிவரும்.

★ ★ ★

13-6-2003 தேதிய ''தி டெலகிராப்'' ஆங்கில நாளேட்டிற் காக அதன் செய்தியாளர் **எம்.ஆர். வெங்கடேஷ்** என்னிடம் ஒரு நீண்ட பேட்டியைக் கேட்டு வெளியிட்டிருந்தார்.

அவருடைய முதல் கேள்வியே, ''வருகிற நாடாளுமன்றத் தேர்தலில், காங்கிரஸ் கட்சியுடன் தி.மு.க. மீண்டும் உறவைப் புதுப்பித்துக்கொள்ள வாய்ப்பு உள்ளதா?'' என்பதுதான்.

அதற்கு, எங்கே கதவு திறந்திருக்கிறது என்று நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. அதேபோல எங்கள் கதவைத் தட்டுகிறவர்களையும் அலட்சியப்படுத்தத் தயாராக இல்லை. நாடாளுமன்றத் தேர்தலின்பொழுது நாட்டு நிலை என்ன -



பொதுக்குழுவில், 9வது முறையாக கழகத் தலைவராக நானும், பொதுச் செயலாளராக பேராசிரியரும், மற்ற நிர்வாகிகளும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டோம்.

எப்படி இருக்கும் என்ற அடிப்படையிலேதான் தி.மு.க. தன் முடிவுகளை எடுக்கும்'' என்று கூறினேன்.

''கொள்கை ரீதியாக இன்றைய அரசியல் சூழலில் மொழிப் பிரச்சினை வலுவிழந்து விட்டது என்று கருதுகிறீர்களா?'' என்று கேட்ட கேள்விக்கு - ''மொழிப் பிரச்சினை வலுவிழந்து விட்டதுபோலத் தோன்றலாம். ஆனால் அது என்றைக்கும் சிரஞ்சீவித் தன்மை வாய்ந்தது. மொழிப் பிரச்சினை எங்கள் ஊனோடும் உயிரோடும் கலந்தது'' என்று பதிலளித்தேன்.

''மத்திய அரசு, புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் தொழிலாளர் கொள்கை பற்றி மறு ஆய்வு செய்ய வேண்டு மென்று தி.மு.க. பொதுக்குழு வாயிலாகக் கேட்டிருக் கிறீர்கள். இது பாரதிய ஜனதா கட்சி யிடமிருந்து தள்ளிப் போகிறீர்கள் என்று தோன்றுகிறதே?'' என்று டெலகிராப் பத்திரிகை சார்பில் கேட்ட கேள்விக்கு -

''நாங்கள் பாரதிய ஜனதா கட்சியில் இருந்தால்தான் தள்ளிப் போவதுபற்றிப் பிரச்சினை. நாங்கள் இருப்பது அந்தக் கட்சியில் அல்ல - தேசிய ஜனநாயகக் கூட்டணியில் நாங்கள் இருக் கிறோம். அந்த அணியில் பாரதிய ஜனதாவும் ஒரு கட்சி - அவ்வளவுதான்'' என்று பதில் அளித்தேன்.

காங்கிரஸ் கட்சியோடு தி.மு.கழகத்திற்கு உறவு இருந்தாலும் இல்லாவிட்டாலும், என்னிடம் தனிப்பட்ட முறையிலே அன்பு கொண்டவர்கள் சிலர் உண்டு. அதில் ஒருவர்தான் **ஏ.கோபண்ணா.** அருமையான எழுத்தாளர். அவர் எழுதிய

நூல்தான் **"காமராஜ் ஒரு சகாப்தம்."** அவரைப் போலவே கருத்தாழமிக்கப் பேச்சுக்களின் மூலம் காங்கிரஸ் கட்சியிலே என்னைக் கவர்ந்த பேச்சாளர்களில் ஒருவர்தான் நண்பர் **பீட்டர் அல்போன்ஸ்.** அவர் எழுதிய நூல்தான் **"நெஞ்சில் விளைந்த நெல்மணிகள்"**

அந்த இரண்டு நூல்களையும் நான்தான் வெளியிட வேண்டு மென்று வலியுறுத்திய தன் பேரில், 28-10-2003 அன்று காமராஜர் அரங்கில் நடைபெற்ற விழாவிலே நான் கலந்து கொண்டு, அந்த நூல்களை வெளியிட்டு உரையாற்றினேன்.

அந்த விழாவிற்கு சோ.பாலகிருஷ்ணன் தலைமை தாங்கினார். நண்பர் கே.எஸ். அழகிரி வரவேற்புரையாற்றி னார். நூல்களை அறிமுகம் செய்து, கீழானூர் ராஜேந்திரன், தாம்பரம் நாராயணன் ஆகியோர் பேசினர்.

இரண்டு நூல்களையும் நான் வெளியிட, மத்திய அமைச்சர் **ப.சிதம்பரம்** அவர்களும், **ஈ.வெ.கி.ச. இளங்கோவன்** அவர்களும் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்கள்.

நூல்களின் சிறப்பியல்புகளை விளக்கி இலக்கியச் செல்வர் **குமரி அனந்தன், தா.பாண்டியன், கவிக்கோ அப்துல் ரகுமான், ஆர்.நல்லகண்ணு, என்.வரதராசன்** ஆகியோர் உரையாற்றினர். நூலாசிரியர்கள் **ஏ. கோபண்ணா** அவர்களும், **பீட்டர் அல்போன்ஸ்** அவர்களும் ஏற்புரையாற்றினர். இறுதி யாக, அந்த நூல்களில் எழுதப்பட்டுள்ள பல முக்கியமான அம்சங்களை எல்லாம் நான் தொகுத்துக் கூறினேன். நிகழ்ச்சிகளை **ஜெ.சி.டி. பிரபாகரன்** தொகுத்து வழங்கினார். **பொன். கிருஷ்ணமூர்த்தி** நன்றி தெரிவித்தார்.

குறிப்பாக இந்த நூல்கள் வெளியீட்டு விழா நிகழ்ச்சியில் நான் பங்கேற்றது தமிழக அரசியல் வட்டாரத்தில் பெரிதும் பேசப்பட்டது. காரணம், 2004ஆம் ஆண்டு வரவிருந்த நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டணி மாறுமோ - பா.ஜ.க.வுடன் பல கருத்து மாறுபாடுகளுடன் இடம் பெற்றிருந்த தி.மு.க., அவர்களைவிட்டு விலகி, காங்கிரஸ் பக்கம் வரக்கூடுமோ - என்றெல்லாம் ஆருடங்கள் பத்திரிகை

களில் வெளிவந்து கொண்டிருந்தது. அந்தக் காலக் கட்டத்தில், காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவர்கள் எல்லாம் பங்கேற்கும் அந்த விழாவிற்கு என்னை அழைத்ததுபற்றி எதிர் பார்ப்புடன் அந்த நிகழ்ச்சியிலே நான் என்ன பேசப் போகிறேன் என்றெல்லாம் கேள்விக் குறியோடு காத்திருந் தார்கள்.

அந்த மேடையிலே நான் என் பேச்சை இப்படித் தொடங் கினேன்-

இது பொது விழா என்ற காரணத்தால் எனக்கு முன்னால் பேசியவர்கள் விளித்ததைப்போல தேசியத் தோழர்களே என்றோ - திராவிட இயக்கத் தோழர்களே என்றோ - தனித்தனியாக விளிக்க விரும்பாமல்தான், உயிரினும் மேலான இனிய உடன்பிறப்புக்களே என்று எல்லோரையும் எனது உடன்பிறப்புக்களாகவே கருதி - உங்களை விளித்திருக்கிறேன். இந்த நாளில் என்னுடைய உரையில் ஏதோ ஒரு செய்தியை நிரம்ப எதிர்பார்ப்பதாகப் பேசியவர்கள் அனைவருமே குறிப்பிட்டிருக்கிறார்கள். நேரடியாக நம்முடைய நண்பர் சிதம்பரம் அவர்கள் அப்படிச் சொல்லாவிட்டாலும், ''நம்பிக்கையோடு இங்கே கூடியிருக்கிறோம்'' என்று குறிப் பிட்டார்கள். யாருடைய நம்பிக்கையையும் கெடுப்பவன் அல்ல நான் - கெடுத்தவனும் அல்ல நான்...'' என்றேன்.

கூட்டத்தில் இருந்தவர்களுக்கு இதுவே விளக்கம் போலாகி விட்டது. நீண்ட நேரம் கைதட்டல் ஓயவில்லை.


வெளியிட்ட இரண்டு புத்தகங்களையும் பற்றி, ''படித்துப் பின்பற்ற வேண்டிய புத்தகம் பெருந்தலைவர் காமராஜர் அவர்களைப்பற்றி கோபண்ணா அவர்கள் எழுதிய புத்தகம். எதிர்காலத்தில் சிந்திக்க வேண்டிய பல செய்திகளைச் சொல்கின்ற புத்தகம் பீட்டர் அல்போன்ஸ் அவர்களின் புத்தகம்'' என்று குறிப்பிட்டேன்.

அந்தப் புத்தக விழாவில் நான் கலந்து கொண்டதும், ஆற்றிய உரையும் கழக வரலாற்றில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியது என்றே சொல்லலாம். ஆம் - 2004ஆம் ஆண்டு

அகில இந்திய அளவில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் பா.ஜ.க.வுடன் கொண்டிருந்த உறவினைத் துண்டித்துக் கொள்ள முன்வந்தது. காரணம், பா.ஜ.க. மத்திய அரசிலே பொறுப்பேற்றிருந்த நிலையில், தான் ஒப்புக் கொண்ட குறைந்த பட்சத் திட்டங்களிலிருந்து திசை மாறி நடந்து கொண்ட காரணத்தால், அந்தக் கூட்டணியில் தி.மு. கழகம் தொடர்ந்து நீடிக்க இயலவில்லை. பா.ஜ.க.விற்கும், தி.மு.க. விற்கும் இடையே ஏராளமான கொள்கை வேறு பாடுகள் இருந்த போதிலும், குறைந்த பட்சத் திட்டங்களி லிருந்து அந்தக் கட்சி விலகிச் செல்லாது என்ற நம்பிக்கையோடு கூட்டணியிலே நீடித்த கழகம் 2003ஆம் ஆண்டிற்குப் பிறகு, அந்த அணியிலே தொடர முடியாது என்ற நிலை ஏற்பட்டது. அதைப் பற்றிய விவரங்களையும், அந்த அணியிலிருந்து தி.மு.க. விலகி வேறு நிலை எடுத்ததைப்பற்றியும் ''நெஞ்சுக்கு நீதி''யின் ஏழாவது பாகத்தில் விரிவாக எழுதுவேன்.

தற்போது, ''நெஞ்சுக்கு நீதி''யின் ஆறாவது பாகத்தினை இந்த முப்பது அத்தியாயங்களோடு முடித்துக் கொண்டு, சற்று இடைவெளிவிட்டு, ஏழாவது பாகத்தினைத் தொடரலாம் என்று எண்ணுகின்றேன். காரணம், என்னுடைய சுய சரிதை என்று ஆரம்பித்து, இது முழுக்க முழுக்க நமது இயக்கத்தின் வரலாறாகவே - இன்னும் சொல்லப்போனால் தமிழக வரலாற்றின் ஒரு பகுதியாகவே நான் இதனை எழுதி வருகிறேன். தமிழக வரலாற்றோடும், நமது இயக்க வரலாற் றோடும் ஒன்றிப் பிணைந்ததுதானே என்னுடைய வாழ்க்கை! எனவே, அவற்றிலிருந்து பிரித்து என்னைத் தனிமைப் படுத்திக் கொள்ள இயலவில்லை. எனவே ஆறாவது பாகத்தினை இந்த முப்பதாவது அத்தியாயத்தோடு முடித்துக் கொண்டு, சிறிது இடைவெளி விட்டு ''நெஞ்சுக்கு நீதி'' தொடரின் ஏழாவது பாகத்தினை தொடங்கி எழுதுகிறேன் - இயற்கையின் துணையை நம்பி!

ஆறாம் பாகம் முற்றிற்று



கலைஞரின் பிற நூல்கள்

1. நெஞ்சுக்கு நீதி பாகம் 1
2. நெஞ்சுக்கு நீதி பாகம் 2
3. நெஞ்சுக்கு நீதி பாகம் 3
4. நெஞ்சுக்கு நீதி பாகம் 4
5. நெஞ்சுக்கு நீதி பாகம் 5
6. நெஞ்சுக்கு நீதி பாகம் 6
7. திருக்குறள் கலைஞர் உரை
8. சங்கத் தமிழ்
9. இளைய சமுதாயம் எழுகவே
10. பொங்கி வரும் புதுவெள்ளம்
11. கையில் அள்ளிய கடல்
12. வழிமேல் விழி வைத்து
13. தென்பாண்டிச் சிங்கம்
14. மீசை முளைத்த வயதில்
15. 16 கதையினிலே (சிறுகதைத் தொகுப்பு)
16. மலரும் நினைவுகள்
17. ஒரு தலைக்காதல்
18. மொழிப்போரில் ஒரு களம்
19. நெருக்கடி நெருப்பாறு
20. கல்லக்குடி களம்
21. பாயும்புலி பண்டாரக வன்னியன்
22. வான்புகழ் கொண்ட வள்ளுவம்

